031m211,N
N02.18
161399

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று
மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

### பதினெட்டாந்தொகுதி.

VOL-XVIII.

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்
பதிப்பு.

1919—1920.

OFFICE OF T... 31 JAN ... MADR...

161399
600 008.

JL
031 m211/N02
N02.18



# செந்தமிழ்ப்
## பதினெட்டாந்தொகுதியின் உள்ளுறை.


| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
| --- | --- | --- |
| அன்பின்நிலை:— | ஸ்ரீமத். V. V. ராஜரத்தினம் அவர்கள் | ௪௧௮ |
| உரைகாரர்களும் அண்மைவிளியும் | ,, S. வையாபுரிப்பிள்ளையவர்கள் | ௪௦௨ |
| உவமைப்போலி:— | ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் | ௯௭ |
| உவமைப்போலி விளக்கம் | பத்திராதிபர் | ௧௬௧, ௧௬௩, ௨௬௬. |
| எதுப்போலி:— | ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் | ௨௦௫ |
| எதுப்போலி விளக்கம்:— | பத்திராதிபர் | ௩௩௩ |
| ஐயவினைத்தொடர்:— | ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமைய ரவர்கள் | ௪௧, ௩௫௦ |
| கம்பராமாயணம்:— | ,, ந. சந்திரசேகரன் அவர்கள் | ௧௧ |
| கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்செய்த முடிவுகள்:— | ,, பா. கலியாணசுந்தரம் அவர்கள் | ௪௧௬ |
| குழந்தைகளின் படிப்புமுறை:— | ,, K. C. வீரராகவையரவர்கள், M.A., L.T. | ௨௮௬ |
| கொலைமறுத்தலும் புலான் மறுத்தலும்:— | ,, சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் | ௪௩௨ |
| சரீரத்தியல்பு:— | ,, சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் | ௧௬௬ |
| சிசுபால சரிதம்:— | ,, அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் | ௨௬௧, ௩௦௫ |

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரத்திலிருந்து இராமாவதாரமுதலிய நூல்களில் வந்துள்ளன | ஸ்ரீமத். ஜி. சதாசிவம்பிள்ளையவர்கள் | |
| சிவஞானசித்தியார்:- | ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் | ௪௨௯ |
| சிவபெருமானும் செந்தமிழும்:— | ,, ஜி. சதாசிவம்பிள்ளையவர்கள் | ௧௩௭ |
| ஞானம்:— | ,, சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் | ௨௫௪ |
| தனிநிலைச்செய்யுட் கோவை:— | ,, S. வைரமுத்து அவர்கள் | ௮௯, ௧௪௧, ௨௭௨, ௨௮௭, ௩௧௮, ௩௫௧, ௩௭௩, ௪௨௩. |
| ஷை பிழைதிருத்தம் | ஷை | ௩௫௬ |
| திருக்கச்சிநெறிக் காரைக்காட்டுச் சிலாசாசனங்கள் | ,, அ. நடேசசெட்டியாரவர்கள் | ௧௨௯, ௩௨௫, ௩௪௦ |
| ஷை சாசனமுகவுரை; | ,, திரு. சுப்பிரமணியதேசிகரவர்கள் | ௧௨௪ |
| திருவாரூ ரிரட்டைமணிமாலை:— | ,, சோமசுந்தர தேசிகரவர்கள் | ௪௪ |
| தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி:— | ,, மு. இராகவையங்காரவர்கள் | ௩௮௧ |
| தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்: | ,, K. S. நவநீதகிருஷ்ண பாரதியவர்கள் | ௩௮, ௪௯, ௧௦௧ |
| தொல்காப்பியரது சமயம்:— | ,, S. வையாபுரிப்பிள்ளையவர்கள் | ௩௩௭ |
| ஷை | பத்திராதிபர் | ௩௯௮ |
| தொல்காப்பியர் சைனராம்:— | ,, K. S. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள் | ௩௯௭ |
| தோத்திரப்பாமாலை:- | ,, K. G. சேஷையரவர்கள் | ௧௩௫ |





| | | |
|---|---|---|
| நன்னூல எனனும் இயைபில் பெயர்ச்சொற்றொடர் மறுப்பு:— | ஸ்ரீமத். R. R. குணரத்தினம் B.A., அவர்கள் | ௧௭. |
| நிலத்துமொழிகளும் நடுத்தரப்பள்ளிக்கூடங்களிற் பயிலும்வடமொழி மாணவர்களும்:— | நிலத்துமொழித்தொண்டர்கள். | ௪௫௦ |
| நூலாசிரியர்:— | ஸ்ரீமத். சிதம்பரநாதனவர்கள் | ௪௨ |
| பக்கப்போலி—: | ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் | ௧௦௦ |
| ஷை | பத்திராதிபர் | ௩௧௫ |
| பதார்த்ததீபிகை:— | ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் | ௧௫, ௮௭ |
| பதின்மூன்றும் புறப்பாட்டும் உரையும் III, IV | ,, S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. | ௨௫, ௮௧ |
| பரீக்ஷை:— | ,, ச. பூபாலபிள்ளையவர்கள் | ௩௪௩ |
| பாரதம் பிழை திருத்தம்:— | ,, சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் | ௪௪௧ |
| பாரததேச பூர்வ ராஜாங்கம்:— | ,, R. S. நாராயணசாமி ஐயரவர்கள் B.A., B.L., | ௪௪௨ |
| பிழைதிருத்தம்:— | ,, K. S. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள் | ௮௮ |
| மங்கள்வாழ்த்து:— | | ௩௯௫ |
| மதிப்புரை:— | பத்திராதிபர் | ௩௭௦, ௪௧௨ |
| மதுரைத் தமிழ்ச் சங்கத் தனித் தமிழ் ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு: | | ௨௯௯ |

| | | |
|---|---|---|
| மதுரைத் தமிழ்ச் சங்கத் தனித் தமிழ்ப்பரீக்ஷை வினா:— | | ௨௦௯, ௨௪௧, ௨௭௩ |
| மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆங்கிலத் தமிழ்ப் பரீக்ஷை வினா:— | | ௧௭௭ |
| மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 18,19 ஆம் வருஷக் கூட்டம். | உதவிப்பத்திராதிபர் | ௩௫௭ |
| மறுபிறப்பு:— | ஸ்ரீமத். ச. உடையார் | ௩௦௪ |
| முச்சங்க வரலாறு:— | ,, மு. தம்மையா அவர்கள் | ௧ |
| முச்சங்கவரலாறு பற்றியவொருநிருபம் | ,, K. G. சங்கரையரவர்கள் | ௮௬ |
| முழவம்:— | ,, சோமசுந்தரதேசிகரவர்கள் | ௧௨௨ |
| வாழ்த்து:— | ,, P. S. இராமஸ்வாமி ஐயரவர்கள் | ௪௮ |
| வீணுரை மறுப்பு:— | ,, K. S. நவநீதகிருஷ்ண பாரதியவர்கள் | ௧௧௨ |


---

## இத்தொகுதியில் வெளிவந்த நூல்:—

(முற்றுப்பெறாதது.)


அகராதிநிகண்டு:— பத்திராதிபர் ௪, ௫, ௬, ௭, ௮, ௯, ௰, ௧௧, ௧௨, பகுதிகள்.


---

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.


தொகுதி-௧௮.] சித்தார்த்தி ஞ கார்த்திகை மீ [பகுதி ௧.

Vol. XVIII. November—December 1919. No. 1.


## முச்சங்கவரலாறு.

செந்தமிழ் தொகுதி ௧௭. பகுதி ௰. ஆகிய சென்ற ஆவணி மாசப் பத்திரிகையில், "தமிழ்ச்சங்ககாலம்" என்னும் தலைப்பின்கீழ் முச்சங்க வரலாறு ஒப்பத்தகுந்ததில்லையென்று, ஸ்ரீமத் கே. ஜி. சங்கரையர் கூறுகின்றார். இதற்குரிய சான்றுகளென அவர் காட்டுமவைகளை ஆராய்ந்து உண்மை நிலையிடலே எமது நோக்கமாகும்.

2. தலை, இடை, கடை என மூன்று சங்கங்கள் இருந்தன என்னுங்கொள்கை வழங்குவது கடைச்சங்கமும் இருந்து முற்றியபின்பேயாம் என்பது யாவரும் ஒப்பத்தகுந்ததொன்றாகும். ஆகலின் கடைச்சங்கமிருந்து ஒழிந்து அணித்தான காலத்தில் வெளிவந்தகளவியலுரைக்குமுன் முச்சங்கவரலாறு கூறப்பட்டிருக்கும் என அவாவுவது நியாயமல்ல. இனி அவ்வுரையோடொத்த காலத்தனவாகிய நூல்களிலும் பிற்காலத்தினவாகிய நூல்களிலும் கூறப்பட்டதோ எனின். அடியார்க்கு நல்லார்க்குமுன்னுள்ள காலத்திற் செய்யப்பட்ட நூல்களெல்லாம் எமது கைக்கெட்டியிருப்பின் அந்நூல்களிற் சொல்லப்படாமையை ஓர் சான்றாக ஒருவாறு கொள்ளலாம். அப்படியன்றி சிதல்வாய்ப்பட்டும், எரிவாய்ப்பட்டும், ஆழிவாய்ப்பட்டும் அழிந்தவைபோக எஞ்சிய சில நூல்களே எமக்குக்கிடைத்திருக்கின்றன. இச்சிலநூல்களிற் சொல்லப்படாமைகொண்டு, சிறந்த சான்றாகிய களவியலுரையிற் காணும் முச்சங்கவரலாற்றில் ஐயுறுதல் அறிஞர் ஆராய்ச்சிக்கழகல்ல.

மேலும், களவியலுரைக்குமுந்திய கடைச்சங்க நூலாகிய மதுரைக் காஞ்சியில்,

தொல்லாணைநல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால்சிறப்பின்
நிலந்தருதிருவினெடியோன். எனக்கூறப்படுதலின்

கடைச்சங்கத்துக்கு முன்னும் ஒரு சங்கங்கூட்டுண்டமை விளங்கக் கிடக்கின்றது. ஆகலின், ஸ்ரீமத். சங்கரையர் சங்கமொன்றேயிருந்தது என்பது பொருந்தாது.

3. முடிநாகராயர். புறநானூற்றைத்தொகுத்தோர் இவர் பாடலையும் அதிற் சேர்த்திருப்பதுபற்றி இவரை கடைச்சங்ககாலத்தார் எனக்கொள்வது சரியன்று. இவருடைய பாடலிற் சொல்லப்பட்டவற்றைக்கொண்டு, இவர்காலத்தை நிச்சயிப்பதே தக்கது. செய்யுளின் இயலையும் நடையையுங்கொண்டு அதன் காலவரையறைசெய்தல் மேலைத்தேசமேதாவிகளும் அவர்களைச் சிறிது பின்பற்றியோரும் கைக்கொள்ளும் முறையாயிருப்பினும், அம்முறை எப்போதும் உண்மையோடு பொருந்தாது. செய்யுளின் இயலும் நடையும், அவரவர்கற்ற கல்வியினளவுக்கும் அதிகமாய்ப்பயின்ற நூல்களினியலுக்கும், சொல்லப்புகும் விஷயத்துக்கும், செய்யுள்வகைக்கும் ஏற்றதாகவே இருக்கும். ஒருவர் பாடுவதிலேயே வெண்பா வெளிதான நடையும் மற்றவை பொருள் அரிதுணர்கடுநடையும் உள்ளனவாகக் காண்கின்றேம். கடைச்சங்கச் செய்யுட்களுக்கும்; அந்நூல்களை ஆசையோடு கற்று அவற்றினியலும் நடையும் கைவரப்பெற்ற சிலர் பிற்காலத்துச் செய்த செய்யுட்களுக்கும் வேற்றுமை மிகச்சிறியதாக இருப்பது காண்கின்றேம். ஆகலின், தலைச்சங்கப்புலவராகிய முடிநாகராயர் செய்த செய்யுள், கடைச்சங்கப்புலவர் செய்த செய்யுட்களோடு இயலும் நடையும் ஒற்றுமைப்படுதல் நூதனமல்ல. அது ஈண்டைக்குச் சான்றுக் உதவாது, இனி,

“ஐவரொடுசினைஇ, நிலந்தலைக்கொண்ட...............
ஈரைம்பதியின்மரும்பொருதுகளத்தொழிய.”

என்பதற்கு புறநானூற்றுரைகாரர் சொல்லும் பழையகருத்தைவிட்டு ஒரு நவீன கருத்துப்படைக்கும் ஸ்ரீமத் சங்கரையர் “நூலியற்றி மிக்ககாலமானபிறகே வகுக்கப்பட்ட உரைதக்க சான்றாகாது” என்று



சொல்லியபடியால், இன்னும் அதிக மிக்ககாலமானபிறகே தாம் வகுக்கும் புதிய உரையும் சான்றாகாது என்று சொல்லாமற் சொல்லிவிட்டார். ஆயினும் இவர் வகுக்கும் உரைபோலியுரையே என்பதைக் காட்டுவோம். செய்யுளில் “ஐவர்” என்பது பன்மையாகலின் மாறுவவேந்தரைவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனாகிய ஒருவனைக்குறிக்காது பாண்டவர் ஐவரையே குறிக்கும். “ஈரைம்பதின்மரும்பொருதுகளத்தொழிய” என்பதனால் நூற்றுவரும் போர்க்களத்தில் இறந்துபட்டார் என்பதேபோதரும். இது தோல்வியடைந்து பிழைத்திருந்து பின்னர் செங்குட்டுவனுக்கு வங்கமுதவிய நூற்றுவர் கன்னரைக் குறிக்காது களத்தில் இறந்தொழிந்த துரியோதனாதியரையேகுறிக்கும் ஆகலின் இப்புறப்பாட்டுக்கு இதுகாறும் தமிழ் அறிஞர் கொண்ட கருத்தே உண்மைக்கருத்தாய், முடிநாகராயர் பாண்டவருக்கும் கௌரவருக்கும் நிகழ்ந்த பாரதப்போரையே குறிப்பிட்டுள்ளாரென்று முடிகின்றது. ஆகலின் ஸ்ரீமத் சங்கரய்யர் நவீனகருத்துப்பிரியராய்ப் படைத்த கருத்து தவறு.

4. அகத்தியனார். நன்னூல்மயிலைநாதருரையையும், Mr. Dubreuil என்பவரையும் நம்பி, அகத்தியனாரை, கி. பி. 200-க்கும் பின் இழுத்துவிடத்துணிந்த ஸ்ரீமத் சங்கரையர், மயிலைநாதருரைக்கு எவ்வளவோ காலத்துக்கு முந்தியும் கடைச்சங்ககாலத்துப்புலவசிகாமணியின் மாணவபரம்பரையில்வந்த கல்வியறிவாற்றலாற் சிறந்தவர் சொல்வதைப் பொருட்படுத்தாதது என்னோ? அகத்தியனார் தலையிடைச்சங்கங்களிலிருந்ததாகக்கூறப்படின், அவ்விரண்டிலொரு சங்கத்திலாவது இருக்கவில்லையென்றது பொருத்தமான முடிபல்ல. இரண்டு சங்கங்களினும் ஒரே அகத்தியனார் தாமிருந்தாரென்னினும், ௭௪௪௰ யாண்டு உயிர் வாழ்தல் தவத்திற் சிறந்த அம்முனிவர்க்குப் பொருத்தமில்லாததுமல்ல. முற்காலத்து மக்கள், இப்போது நம்ப அருமையான நெடுநாட்களுக்கு உயிர் வாழ்ந்தார்களென்பது பலபல சாதியாருள்ளும் பழைய சரித்திரங்கள் ஒத்துச்சொல்லும் ஒன்றாம். இது உண்மைதானோ அல்லது கணிதவேறுபாடோ என்பது தெரியவில்லை. இது எப்படியிருப்பினும், தலைச்சங்கத்தில் ஓரகத்தியனாரும், இடைச்சங்கத்தில் அப்பேர்கொண்ட இன்னொருவரும் இருந்தாரெனக்கொள்வதே யுத்திக்குமிக பொருந்துவதாம். பேரகத்தியம் சிற்றகத்தியம் என்ற வழக்கும் இதை

வலியுறுத்தும். இனி "குட்டபாவிருபுறச்சையத்"திருந்த தமிழ்திரி நிலங்களுள் பல்லவமும் ஒன்றென்றார்" இவ்வகத்தியனாரோ என்ற கூற்றினுண்மையில் ஐயமுடையேம். தலைச்சங்க நூலாகிய அகத்தியஞ்செய்தவரே இப்படிச்சொல்லினாரென்பது நாட்டப்பட்டால் Mr. Dubreuil சொல்லியது பொய்யாகுமேயன்றி, அகத்தியனார் கி. பி. 200-க்குப் பிறகே இருந்தவர் என்பது மெய்யாகாது.

5. தொல்காப்பியனார். இடைச்சங்ககாலம் ௩௭௦௦. யாண்டாதலால் கடைச்சங்க நூல்களினின்றும் அவ்வளவுகாலத்துக்குரிய நடைபொருள்களில் மாறுதல்களொன்றும் தொல்காப்பியத்திற் காணப்படாதது வியப்பே! என்கின்றார் ஸ்ரீமத் சங்கரையர்; இது வியப்பல்லவே யென்கின்றேம்யாம்: ஏனெனில், தொல்காப்பியத்திலும் அதனோடொத்தகாலத்தனவாகிய நூல்களிலும் மிகவுந்தேர்ந்த பயிற்சியுடையராய் இருந்தவர்கள் கடைச்சங்கப்புலவர்கள் என்பதற்கு வேறு சாட்சி வேண்டாம், தொல்காப்பியத்திற் பகுக்கப்பட்டதிணை துறைகளின் பாற்படுத்தே தங்கள் செய்யுட்களையாக்கியிருப்பது போதிய சான்றும் ஆகையாற்றான் இவர்கள் பயிற்சியினியல்பால் தொல்காப்பியத்தின் நடைபொருள்கள் இவர்கள் செய்யுட்களிலும் வந்தேறியனவாம். இவ்வொற்றுமைகொண்டு கடைச்சங்கச்செய்யுட்களையும் தொல்காப்பியத்தையும் ஒரு காலத்தவெனக் கொள்ளுதல் தவறு.

6. முச்சங்கவெண்கள். "களவியலுரைதரும்எண்களும் வியக்கத்தக்கன" என்கின்றார் ஸ்ரீமத் சங்கரையர். ஆம், வியக்கத்தக்கனதாம் மறுக்கத்தக்கனவல்ல, ஏனெனில் இவர்காட்டும் கணக்கின்படியும், தலைஇடைச்சங்ககாலங்களிலே முறையே ௫௦, ௬௨, ௩௮, ஆண்டுகள் ஒவ்வொரு பாண்டியற்கும் ஆளுகைக்காலமாக வருகின்றன. இவை மிகையல்லவே. ஏனெனில், அக்காலம் உலகத்தை ஆளுவோர் அரசியலை தமது போகமாத்திரையாக நினைத்துநடவாது "கொடிது கடிந்து கோல்திருத்தி, படுவதுண்டுபகலாற்றி" "குடிபழிதூற்றுங் கோலி" னராகாது, "அறந்துஞ்சுசெங்கோல"ராய், உயிர்களை "குழவி கொள்பவரினோம்பி" "புலிபுறங்காக்கும்குருளைபோல" அறநீதிகளைப் பாதுகாத்து விருத்திசெய்து வளம்படவாழ்ந்த செழியர்க்கு ஆளுகைக் காலம் ௫௦, ௬௨, ௩௮, எனவருவது நூதனமல்ல; இது மிகமட்டமான கணக்கு. இதிலும் மிகுத்துவரவில்லையே என்பதுதான் நூதனம். அ



நெறியொழுகுவார்க்கு வாழ்நாட்பல்குதலியல்பாம், இதையறியாது முச்சங்கவரலாற்றை தாம் நம்பாமைக்கு இதையும் ஒரு சான்றாகப் பிடித்தாரே இது பரிதாபம்!

பாண்டியர் தொகை ௮௯, ௫௯, ௪௯ எனவருவதில் என்ன குறையோ? ஒன்பதீற்றவாகிய எண்கள் பாண்டியர் தொகையில் வரப்படாதெனும் நியதியுண்டா: புலவர் தொகையில் இவை வரப்படாதெனும் நியதியும் உண்டா? அல்லது பாண்டியர் தொகை, புலவர் தொகை இரண்டினும் இவைவரப்படாதெனும் நியதிஉண்டா? அப்படி ஒரு நியாயமுறையும் இல்லையே. கவியரங்கேறிய பாண்டியர் தொகை ௭, ௫, ௩, என்றிருப்பின் ஒப்பத்தகுந்ததில்லை யென்றால், பின் எப்படியிருப்பின் ஒப்பத்தகும்? ஸ்ரீமத் சங்கரைய்யர் இவ்வெண்களைக்கொண்டு காட்டும் நியாயம் சிறிதேனும் ஒப்பத்தகுந்ததில்லை. சங்ககாலக்கணக்கையும் பிரித்துக்கூட்டி ஒரு வித்தைகாட்டுகின்றார். இவ்வித்தைக்கு இடங்கொடாமற் சங்ககாலக்கணக்கு இருக்கவேண்டுமென ஸ்ரீமத் சங்கரையர் விரும்பின் இப்போது என்செய்யலாம். சங்ககாலங்கழிந்து போய்விட்டதே! ஆயினும் இது ஒரு நியாயமுறையிற் சேர்ந்ததல்ல.

7. பொய்யடிமையில்லாத புலவர் நம்பியாண்டார் நம்பிதலை இடைகடை என்னும் மொழிகளை வழங்காமைபற்றி, அச்சங்கங்கள் இல்லையென்றாவது, அவர் அப்பிரிவுகளையறிந்ததில்லை யென்றாவது கொள்வதும் நியாயமுறையல்ல. நம்பிசங்கங்களைப்பற்றி ஆராயப் புகுந்தாரல்லர், பொய்யடிமையில்லாத புலவரைப்பற்றியே சொல்லப் புகுந்தார். "பொய்யடிமையில்லாத புலவர்" என்றன் மாத்திரையானே, அவர் இன்னார் என்று தம்காலத்தவர் விளக்கிக்கொள்வார் என்றதே திருத்தொண்டத்தொகையுடையார் கருத்து. அவர்க்குப்பின் வந்த நம்பியாண்டார் நம்பியும், அப்புலவர் நன்றாக அறியப்பட்டவராகலின், நக்கீரர், கபிலர், பரணர் முதல் ௪௯ தமிழ்ச்சங்கப்புலவரே என்று சொல்லி, தலையிடைகடை யெனும் பிரிவுணர்ந்தவர்கள் தாமே யுய்த்துணர்ந்துகொள்ளவைத்தமையின், கடைச்சங்கமென்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லாதாயிற்று. அன்றியும் முச்சங்கவரலாற்றை ஒப்புக்கொண்ட இக்காலத்தாரும், சங்கத்தமிழ், சங்கநூல், சங்கப்புலவர் எனப்பொதுவகையாக வழங்குவதே பெருவழக்கு. இது

கொண்டு இவர் தலையிடைகடை என்னும்பிரிவினை அறியார் என்று முடிவுகட்டுதல் பொருந்தாது.

இவ்வாறு பொருத்தமில்லாத போலிக்கொள்கைகளைக்கொண்டு முச்சங்கவரலாற்றினை மறுக்கத்துணிந்த ஐயரவர்களின் முடிபு பிழையுள்ளதெனக் காட்டிவிட்டாம். ஆகவே தலை, இடை, கடை எனப் பிற்காலத்து அறியப்பட்ட மூன்று தமிழ்ச்சங்கங்கள் இருந்தன என்பது; களவியலுரைகாரர், அடியார்க்கு நல்லார் முதலிய பல ஆசிரியராலும் உண்மையெனச் சொல்லப்பட்டதும், உடன்கூறப்படுவதாகிய தமிழ்நாடுகளும் நூல்களும் வெள்ளத்தழிந்தகதை பிறபல அறிஞரால் ஒப்புக்கொள்ளப்பட்டமையாகிய இடைச்சான்றால் வலியுறுத்தப்பட்டதும் ஆகிய ஓர் உண்மையே என்று பெறப்பட்டது.

மு. தம்பையா,
(சீப் அக்கவுண்டிங்கு கிளார்க்கு போர்ட்டு கமிஷன்,
கொழும்பு.)

---

உ

## சிலப்பதிகாரத்திலிருந்து இராமாவதாரம் முதலிய நூல்களில் வந்துள்ளன

# மூன்றாவது அரங்கேற்றுகாதை நிர். 2.

க-எ. தெய்வ மால்வரைத் திருமுனியருள
வெய்திய சாபத்திந்திர சிறுவனொடு
தலைக்கோற்றானத்துச் சாபம் நீங்கிய
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற்குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற்குன்றாப் பொருந்தோண் மடந்தை
தாதவிழ் புரிகுழன் மாதவிதன்னை.

இராமாவ-ஆரணிய-அகத்தியப்படலம்-20.

மூசரவுசூடு முதலோனுரையின் மூவா
மாசிறவ வேகென வடாதுதிசை மேனாள்



நீசமுற வானினெடு மாமலயு நோரா
ஈசனிகரா யுலகுசீர் பெறவிருந்தான்.

சிலப்பதிகாரம்.

க0-கக ஏழாண் டியற்றியோ ரீராறாண்டிற்
சூழ்கழன் மன்னற்குக் காட்டல்வேண்டி.

இராமா-பால-அரசிய-க.

அம்மாணகருக் கரசன் னரசர்க்கரசன்
செம்மாண்டனிக் கோலுலகேழினுஞ் செல்லநின்றான்
இம்மாண்கதைக் கோரிறையாய விராமனென்னும்
மொய்ம் மாண்கழலோற்றரு நல்லற மூர்த்தியன்னான்.

சிலப்பதிகாரம்.

கஉ-உரு. இருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து
பல்வகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினோராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்கவறிந்தாங்
காடலும் பாடலும் பாணியுந்தூக்கும்

இராமா-பால-நகர-கூகூ.

வுடவுங் கூடவு முயிரினின்னிசை
பாடவும் விறலியர் பாடல் கேட்கவும்
ஆடவும் நன்புனலாடி யம்மலர்
சூடவும் பொழுதுபோஞ் சிலர்க்கத் தொன்னகர்.

சிலப்-இசையாசிரியன் அமைதி.

உகூ. யாழுங் குழலுஞ் சீருமிடறுங்.

இராமா-பால-உண்டாட்-கரு.

யாழ்க்கு மின்குழற்கு மின்பமளித்தன விலையாமென்னக்
கேட்டுமென் மழலைச் செல்லோர் கிஞ்சுகங் கிடந்தவாயாள்
தாட்கருங்குவளைதோய்ந்த தண்ணறைச்சாடியுட்டன்
வாட்கணி னிழலைக்கண்டாள் வண்டென வோச்சுகின்றாள்.

சிலப்பதிகாரம்.

சடு-சஎ. ஆடல் பாடலிசையே தமிழே
பண்ணே பாணி தூக்கே முடமே
தேசிகமென்றிவை யாசி னுணர்ந்து

இராமா-ஆரணி-மாரீச-கக.

சேணுயர் நெறிமுறை திறம்பலின்றியே
பாணிகள் பணிசெய்யப் பழுதில் பண்ணிடை
வீணையினரம்பிடை விளைத்ததேமறை
வாணியினாதன் செவியின்வார்க்கவே.

சிலப்பதிகாரம்.

ருடு. அத்தகு தண்ணுமை யருந்தொழின் முதல்வனும்.

இரா-பால-நகர-ருஉ.

பதங்களிற் றண்ணுமை பாணிபண்ணுற
விதங்களின் விதிமுறை சதிமிதிப்பவர்
மதங்கியரச்சதி வகுத்துக் காட்டுவ
சதங்கைகளல்லன புரவித்தார்களே.

சிலப்பதிகாரம்.

எo-எச. ஈரேழ்தொடுத்த செம்முறைக் கேள்வியி
னோரேழ்பாலை நிறுத்தல் வேண்டி
வண்மையிற்கிடந்த தாரபாகமு
மென்மையிற் கிடந்த குரலின் பாகமு
மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளக்

இராமா-அயோத்தி-சித்திர-உஅ.

குழுவுநுண்டொளை வேயினுங் குறிநரம்பெறிவுற்
றெழுவுதண்டமிழ் யாழினுமினிய சொற்கிளியே
முழுவதும்மலர்விரிய நாண்முருக்கிடைமிடைந்த
பழுவம் வெங்கனல் கதுவியதொப்பன பாராய்.

சிலப்பதிகாரம்.

கூரு-கூச. வலிவுமெல்வுஞ்சமனு மெல்லாம்
பொலியக் கோத்த புலமையோனுடன்.



இராமா-கிஷ்கி-நட்பு-எச.

உலகமேழினோ டேழும்வந்தவ னுயிர்க்குதவி
விலகுமென்னினும் வில்லுடைவாளியின் வீட்டித்
தலைமையோடு நின்றாரமு முனக்கின்று தருவேன்
புலமையோயவனுறை விடங்காட் டென்றுபுகன்றான்.

சிலப்பதிகாரம்.

கூடு-கூசு. எண்ணிய நூலோ ரியல்பின் வழாது
மண்ணக மொருவழி வகுத்தனர் கொண்டு.

இராமா-பால-நகர-அ.

நால்வகைச்சதுரம் விதிமுறைநாட்டி நனிதவவுயர்ந்தனபனிதோய்
மால்வரைக்குலத்தில் யாவையுமில்லை யாதலாலுவமை மற்றில்லை
நூல்வரைத்தொடர்ந்து பயத்தொடும் பழகி நுணங்கிய
நுவலருமுணர்வே
போல்வகைத்தல்லால் லுயர்வினோடுயர்ந்த தென்னலாம்
பொன்மதிலையே.

சிலப்பதிகாரம்.

கஉக-கஉஉ. புண்ணிய நன்னீர் பொற்குடத்தேந்தி
மண்ணிய பின்னர் மாலை யணிந்து.

இராமா-அயோத்தி-நகர்நீங்கு-ருசு.

கண்ணுந் நீரா யுயிரும் மொழுகக் கழியா நின்றேன்
எண்ணுந் நீர்நான் மறையோ ரெரிமுன் னின்மேற் சொரிய
மண்ணுந் நீராய் வந்த புனலை மகனே வினையேற்
குண்ணுந் நீரா யுதவி யுயர்கா னடைவா யென்றான்.

சிந்தாமணி-பதுமை-அஎ.

மலரணி மணிக்குட மண்ணு நீரொடு
பலர்நலம் பழிச்சுபு பரவ வேகினா
னலர்கதிர் கரும்பினை மடுப்ப வாய்நக
ருலகளந் தானென வுள்புக் கானரோ.

சிந்தா-பதுமை-௧௮௦.

மழைகளிற் றெருத்திற் றந்த மணிக்குட மண்ணுநீரா
லழகனை மண்ணுப் பெய்தாங் கருங்கடிக் கொத்தகோலந்
தொழுதகத் தோன்றச் செய்தார் தூமணிப் பாவையன்னார்
விழுமணிக் கொடிய னாளும் விண்ணவர் மடந்தை யொத்தான்.

சிலப்பதிகாரம்.

௪௬௫-௧௬௬. வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை
மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திருதரு மறுகிற்
பகர்வனர் போல்வதோர் பான்மையி னிறுத்த

இராமா-பால-உண்டாட்டு-௨௬.

மானமர் நோக்கியோர் மதகை வேந்தன்பால்
ஆனதன் பாங்கிய ராயி னாரெலாம்
போன்வர் போனவர் தொடரப் போக்கினாள்
தானுமங் கவர்பினே தமிய ளேகினாள்.

சிலப்பதிகாரம்.

௧௭௨-௧௭௩. மாதவி தன்னொ, டணைவுறு வைகலி.
னயர்ந்தனன் மயங்கி,
விடுத லறியா விருப்பின னாயினன்.

இராமா-ஆரணி-அகத்தி-௨௧.

வைகும் வைகலின் மாதவன் மைந்தன்பால்
செய்கை யாவையுஞ் செய்திவட் செல்வநீ
எய்த யான்செய்த தெத்தவ மென்றனன்
ஐயனும் மவற் கன்பினன் கூறுவான்.

சி. சதாசிவம் பிள்ளை,
நாகை நீலலோசனிப் பத்திராதிபர்.

---

ஸ்ரீ

# ஸ்ரீமத் கம்பராமாயணம்

௬. யுத்தகாண்டம்

## இயமப்படலம்.

---

கல்வியிற் பெரியரெனக் கவிஞர் புகழும் கம்பநாட்டாழ்வாரால் செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளாற் சீரிய கூரிய தீஞ்சொலான் விருத்தக் கவியாக வருளிச்செய்யப்பட்ட விதிகாசமாய "இராமாயணம்" என்னும் நூல் பலராலும் ஏட்டுப் பிரதிகளினின்றுஞ் சீர்தூக்கி யச்சிடப்பட்டு நிலவிவருகின்றது. அதனுள் அப்புலவர் பெருமானுடன் சமகாலத்தவரான ஒட்டக்கூத்தப் புலவரானருளிச்செய்யப் பட்டதனுடன் கூடியுலவும் உத்தரகாண்டத்து அசுவமேதயாகப் படலத்துள் இ ரா ம ச ரி த கானஞ்செய்யுமிடத்து கும்பகருணன் பொருதழி,

"வியந்து வீடணனைழைத்தலும் வெய்யவன்மறுத்து
வயந்தனைப்பிலைசந் தருக்கன் மாமகனைக்கொண்டகன்றான்
.............................................................
...........................................................அசுவ-௨௨௮.

எனவும்; இலங்கையினின்றும் வினைத்திறமுற்றி மீள்வான்

"ஏறிட விமானந் தன்னி லியாவரு மிறைவி தானும்
மாறின வயந்தன்சேனை நின்றது மலரவன் பாற்
கூறின னனுமன் வாங்கிக் கொண்டபின் ........
................................................" ஷை ௨௫௧

எனவும் வருகின்ற பாடல்களை நோக்குங்கால் வயந்தன் என்னுந் தானைத் தலைவனைக் கும்பகருணன் வதைத்ததாகவும், அவனைப் பின்னர் உயிரளிக்கப்பட்டுக் கொணர்ந்ததாகவும் கருதப்படுகின்றதனை நோக்கிக், கும்பகருணப்படலத்தும் மீட்சிப்படலத்தும் கம்பநாடர் கூறியதாக அன்னோனது வரலாறு குறிக்குங் கவிகள் புலப்படாது போயினமையின், எனதில்லத்துள்ள பழைய ஏட்டுப்பிரதிகளிற்காணப் படுகின்றனவா வெனத்துருவ, அச்சுப் பிரதிகளுக்கும் ஏட்டுப்பிரதிக

ளுக்கும் படல வேறுபாடுகளே பலவுளதாதலன்றிச் செய்யுட்களும் ஆங்காங்கு பிழை குறைகளாகக் காணப்பட்டமையின் அவற்றை நிறுத்தி மீண்டெடுத்துக் காட்டிய சரிதத்துக்கேற்புடைத்தா மிடத்தை நோக்கக், கும்பகருணன் வதைப்படலத்துக்காணாது மீட்சிப்படலத்துக்குமேல் [அச்சுப்புத்தகம்-மீட்சிப்படலம் கசஙஞ செய்யுள் முதல்] இயமப்படலம் ஒன்று காணப்பட்டது. அதனுள் மேற்கண்ட உத்தர காண்டத்துச் செய்யுட்களோடொத்த சரிதந் தெள்ளிதாகப் புலப்பட்டமையின் அதனை இச் செந்தமிழ் வாயிலாக வெளியிடலானேன். ஏட்டுப்பிரதியுட்கண்ட செய்யுட்கள் அதனிலுள்ளபடியே பொறிக்கப் பட்டன.

## மீட்சிப்படலம்

வாங்கி னானது மாநிதி யோடவண் விமானம்
ஏங்கு வெள்ளமோ டெழுபது மேறினு மின்னு
மாங்குளோரெலா மேறுவ ததனைநீயேறிப்
பூங் குலாநகர் புகுதியிப் பொழுதினி லென்றான். கசங

என்று தேரினை வீடண னெய்திய தென்று
ஊன்று தானென நாயக னேறின னவரோ
டூன்று தானிளங் கோவொடு மக்கவி வெள்ள
மொன்று தானென வொருதிசை யிருந்தது மொக்கும். கசச

முற்றும்.

## இயமப்படலம்.

ஏறினன் விமானந்தன்னி லிராமனு மிளையகோவு
மாறிலாச் சனகியோடு வளநக ரிலங்கைவேந்துங்
கூறிய வனுமன் சாம்பன் குமரன்வெங் கவிவந்தேற
மாறிலோர் நிலத்து நின்றார் வயந்தனார் கொத்திலுள்ளார்.

மாறதாய் வெள்ளஞ்சேனை மானத்தின் வராமைநோக்கி
யேறுநீர் தேரிலென்னக் கருணன்வந் தெதிர்த்தபோது
சீறிய நமரி லெங்கோன் றுக்கிட வரக்கன் சீறி
நீறெழப் பிசைந்தேயிட்டா னெற்றியி லென்னச்சொன்னார்.



### வேறு.

என்ற வாசகங் கேட்டலும் வானர ரிறங்கி
நின்ற போதினி லிராகவன் றேரினின் றிழிந்தான்
பொன்று மாவரக் காரண மென்னெனப் புழுங்கா
துன்று தார்ப்புயத் திலக்குவ பொறி யெனச்சொன்னான்.

### வேறு

வரிசிலை யிராமனேலை மறம்புரி மறலிகாண்க
வெரிகொளு மிலங்கைப்போரி லின்னுயிர் துறந்துபோந்த
குரிசிலை வயந்தன் றன்னைத் தேடியே கொணர்வ தன்றே
லுரியதன் குலமும் வாழ்வு மொழிப்பனென் றெழுதிவிட்ட

அக்கணத் தருகுநின்ற வனுமன்கைத் திருமுகத்தைத்
தக்கவ னீட்டவாங்கித் தன்றலை மிசையிற் சூடி
யிக்கணம் வருவன் வாழி யிராமவென் றிருதோள்கொட்டி
மிக்கமா மடங்கல்போல விண்ணிடை விசைத்துப்பாய்ந்தான்.

### வேறு

மண்டிப் புக்கனன் மறலிதன் பெரும்பதி நரகிற்
றண்டிப் புண்டறப் புண்டெரிப் புண்டவர் தன்னைக்
கண்டு மாருதி கண்புதைத் தரியரி யென்ன
மிண்டி யேறினர் நரகிடை வீழ்ந்தவரெல்லாம்.

துளங்கி யந்தகன் வந்தடி தொழுதலுந் தோராள்
வளங்கொள் மாருதி வயந்தனைக் காட்டென வவனு
முளங் கலங்கியுன் னாயக னடியரிங் குறார்கள்
விளங்கு கீர்த்தியாய் தேடுவிண் ணவர் புரத்தென்றார்.

சொன்ன கூற்றுவன் றன்னைத்தன் வாலிடைத்துவக்கிப்
பொன்னின் கற்பகப் பதியிடைக் கொண்டுபோய்ப் புகலும்
முன்னிற் கண்டுவந் திந்திரன் முனிவெனோ வென்ன
மன்ன வேகுவன் வயந்தனைக் காட்டுதி யென்றான்.

வல்லரக்கரை மடித்தெமை யெடுத்த மாருதியே
யில்லை யிங்கய னுலகிடை யறிதியென் றிசைப்பச்

சொல்லு மங்கவன் றன்னையும் வாலிடைத் துவக்கிப்
பல்லுயிர்த்திறம் படைத்தவ னுலகிடைப் பாய்ந்தான்.

சிந்தை தூயநான் முகன்றனை வணங்கவுஞ் சிறி
வந்தகாரிய மேதென வயந்தனைப் பார்த்துச்
சுந்தரத் தடந் தோள்வில்லி நின்றன னவன்று
னுந்த னீள்பதத் துளானெனிற் காட்டென வுணர்ந்தும்.

என்னுடைப்பெரும் பதத்தின்மே லாதிய வெந்தை
தன்னுடைப் பெருஞ் சோதியிற் கீழதாய்த் தழைத்து
மின்னு நீடொளி விண்டுவின் பதத்துளான் விறலோய்
அன்னவன் றனைக் கொணருதி யாங்கணேந்தென்றான்.

என்று நான்முகன் சொல்லவு மியமனிந்திரனை
யொன்ற வால்கொடு துவக்கின னொருகுதி கொண்டான்
மின்றிகழ்ந்தொளி விளங்கிடும் விண்டுவின்பதத்திற்
சென்று கண்டுகொண் டிழிந்தனன் றிசைமுகன் பதியில்.

மலரின் மேலயன் வயந்தற்கு முன்னுரு வழங்கக்
குலவு வாசவன் யமனைவிட் டிருநிலங் குறுகி
யலகில் வீரன்ற னடியிணை யவனொடும் வணங்கிச்
சல முதிர்ந்தவன் படையொடுய்த் தனன் றடந்தோளான். ௧௩

முற்றும்.

இயமப்படலத்துக்குமேல் படலப் பெயர்கள் வேறு காணப்படு[கி]றன. அச்சிட்ட புத்தகத்து மீட்சிப்படலம் ௧௪௩-௪-௫-௬ ஆஞ் [செ]ய்யுட்கள் மிகை.

இங்ஙனம்

சிதம்பரம் —12—19 } ந. சந்திரசேகரன், கலியமலை.

# பதார்த்த தீபிகை.

## முற்றொடர்.

---

### நித்தாநித்த விவரணம்.

உருவமுன் னான்கும் புவியினிற் பாகத்துதிப்பனவாய்
மருவு மநித்தம் பிறவற்றி னித்தமு மாறுதலும்
விரவுமப் பாக விதிதமக் கின்றி விளங்கு நித்தப்
பொருளிடை நித்த மநித்தத் தநித்தம் பொருந்திடுமே.

(இ-ள்.) உருவம் முன் நான்கும் புவியினில் பாகத்து உதிப்பனவாய் அநித்தம் மருவும்—உருவம் முதலிய நான்கு குணங்களும் பிருதிவியின்கண் பாகத்தாலே தோன்றுவனவாய் அநித்தத்தைப் பொருந்தியிருக்கும்—பிறவற்றில் நீர் முதலிய மற்றையவைகளிலே—அப்பாக விதி தமக்கு இன்றி நித்தமும் மாறுதலும் விரவும்—அந்தப் பாகத்தாலே தோன்றும் விதி தமக்கு இல்லாமல் நித்தமும் அநித்தமும் பொருந்தும்—நித்தப் பொருளிடை நித்தம் (பொருந்திடும்) நித்தப் பொருள்களிடத்தே நித்தத்தன்மை பொருந்தி இருக்கும்—அநித்தத்து அநித்தம் பொருந்திடும்—அநித்தப் பொருள்களிடத்தே அநித்தத் தன்மை பொருந்தி யிருக்கும். எ-று.

உருவம் முதலிய நான்குமாவன:—உருவம், இரசம், கந்தம், பரிசம் என்பன. பாகம் நெருப்பு, சூரியன் முதலிய தேயுவின் சையோகம். பாகம் என்பது சமைத்தல் எனவும், உருத்திரிதல் எனவும் பொருள்படும். பாகம் என்பது பச் என்னும் வினைமுதனிலையினின்றுந் தோன்றிய கிருதந்தம். பசீ-சமைத்தல். பாகத்துதிப்பனவற்றைப் பாகஜம் என்பர். அரிசி, காய், பழம் முதலிய பிருதிவிகளிலே முன்னிருந்த உருவமும், இரசமும், கந்தமும், பரிசமும் தேயுசம்பந்தத்தாலே அழிதலும், பின்னர் வேறே உருவமும், இரசமும், கந்தமும்,

பரிசமும் தோன்றுதலும் அநுபவத்திற் காணப்படுகின்றன. இங்ஙனம் அழிதல் பற்றியே அவைகளை "அநித்தம் மருவும்" என்றார். ஈண்டுப் பாகம் பரமாணுக்களுக்கேயாம். துவியணுகம் முதலியவற்றிற்கு அன்று பாகம் பரமாணுக்களின் கண்ணேயாகும் என்று பீலுபாக வாதிகளான வைசேடிகர் கூறுவர். பீலுபாகவாதிகள்-பீலுவின் கட்பாகம் உண்டாகும் என்று வாதிப்போர். பீலு-பரமாணு, துவியணுகம் முதலிய அவயவிகளிலும் பாகம் உண்டாகும் என்று பிடரபாகவாதிகளான நையாயிகர் கூறுவர். பிடரபாகவாதிகள் பிடரத்தின்கட் பாகம் உண்டாகும் என்றுவாதிப்போர் பிடரம்-குடம் முதலியவற்றின் சிற்றவயவம்.

பிற என்றது நீர், தீ, காற்றுக்களை. நீர் முதலியவைகளிலே தேயு சம்பந்தமுளதாயினும் உருவம் முதலியன வேறுபடுவனவல்ல. இக்காரணத்தாலே அவை நித்தியாநித்தியங்களை அடைகின்றன. நித்தப் பொருள்களிடத்திற் காணப்படும் உருவம் முதலியன நித்தம். நித்தப் பொருள்கள் பரமாணுவடிவங்களாயுள்ள நீர், தீ, காற்று என்பன. அநித்தப்பொருள்களிடத்திற் காணப்படும் உருவம் முதலியன அநித்தமாம். அநித்தப் பொருள்கள் துவியணுகம் முதலியவாயுள்ள நீர், தீ, காற்றுக்கள், உருவம் முதலிய உற்பூத அநுற்பூத பேதங்களாற் பின்னும் இருவகையாகின்றன, உற்பூதம்—வெளிப்பட்டது. அநுற்பூதம்—வெளிப்படாதது. இனிச்சங்கியை கூறப்படுகின்றது.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப் பிள்ளை.

## "நன்னூல்" என்னும்
## இயையில் பெயர்ச் சொற்றொடர் மறுப்பு.

யாழ்ப்பாணத்து வண்ணைநகர் வசிப்பவராகிய ஸ்ரீ க. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்களுடைய கைச்சாத்தோடு "நன்னூல்" என்னும் வியாசம் இச்செந்தமிழில் வந்தது. செந்தமிழபிமானிகள் அனைவரும் அறிவர். அவ்வியாசம் செந்தமிழ் (தொகுதி. ௧௭. பகுதி. ௯.) ௪௪௩-ம் பக்கந்தொட்டு எட்டுப்பக்கநிரம்ப எழுதப்பட்டிருக்கிறது. அவற்றுள் ௪௩௩-ம் பக்கமும் ௪௩௪-ம் பக்கத்திற் பத்துவரிகளுமே நன்னூல் விஷயத்தைக் கொண்டிருக்கின்றன. எஞ்சிய ஏழுபக்கங்களுள் அடங்கிய வரிகளெல்லாம் இராமநாதன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதி அவர்களின் கூற்றுக்களை அடக்கியிருக்கின்றன. அவை யாவையோவெனில் ஷை பாரதியாரவர்கள் செந்தமிழில் முற்றுப்பெறாது தொடர்பாக நுணுகியாராய்ந் தெழுதிவரும் "தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்" என்னும் வியாசத்திலே அவர்கள் நன்னூலாரைக் கண்டித்தெழுதியது கூடாது என்றும் எழுத்துப்பிழை சொற்பிழை விரவ எழுதியது குற்றம் என்றும் அப்பாரதியார் மேலெழுந்த கண்டனங்களாம்.

பிள்ளையவர்கள் வியாசம் "நன்னூற்" பெ[illegible]ராடுதோற்றி நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்களைக் கண்டித்தலில், [illegible]ர்ந்து அறிஞர் அங்கீகாரம் பெறவியலாது நின்றாலும் சிறுபான்மை அவ்வியாசத்தால் உலகமலையாமை காரணமாகவும், பெரும்பான்மை அதனைக் கண்டிக்குமுகத்தானே பேர்பெறக் கருதியும் அதனைக் குறித்து ஈண்டுச்சில கூறத் தொடங்கினேன். பாரதியார் முதலியோர் புகழ்பெறுதல் கருதியே முந்துநூல்களையும் உரைகளையும் கண்டித்தார்களென்று பிள்ளையவர்கள் ஏறிட்டுக்கொண்ட கருத்தின் வண்ணம் பாரதியாரைக் கண்டித்துப் பெற்றபுகழைக்கண்ட யானும் அவ்வழியிலிறங்கிப் பிள்ளை அவர்களைக் கண்டித்தால் அப்புகழ் தப்பாதெய்துதல் ஒருதலையாதலின் இத்துறையில் இறங்கினேன் என்க.

ஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள் நூல் உரையாசிரியர்களை மறுத்துத் தங்கொள்கையை நிறுவு மிடங்களிற் செய்த "மனக்கோட்

டை” “மயங்கவைத்தல்” “இடர்ப்படுவர்” என்பனவாதிய சொற்றொடர்கள் கற்போர் மனம்படியாவ்வாக வெழுதற்குரியனவாயினும் அவர்கள் எழுதிச்செல்லும் விஷயம் இலக்கணவாராய்ச்சி செய்வார் அனைவர்க்கும் காலப்பயன் படத்தக்க தொன்றேயாம். நன்னூலார்மேற் குற்ற மேற்றிய பாரதியாரவர்களைத் தம்மனம்போன வாறே கண்டித்து அந் நூலார்மேற் குற்றஞ் சாற்றாது இனியடங்குமாறு அவர்க்காணையிட்டு “இவ்வளவிலமையும்” எனத்தாமே அமைதிகூறியும் யாழ்ப்பாணத்தில் இனி தலைவிவரும் இந்த சாதனத்திலும் அதனைப் பிரசுரஞ்செய்வித் துச் சிங்கநாதஞ் செய்த பிள்ளையவர்கள் எழுதிய அவ்வியாசத்திலே (க) அநியாயம் (உ) அறியாமை (ங) சபைப்பழக்கமின்மை (ச) நடுவு நிலையின்மை (ரு) மற்றொன்று விரித்தல் முதலிய குற்றங்கள் ஆன்றோர் நகையாட்டற் கேதுவாக விளங்கிக்கிடத்தலை ஒரு சிறிது காட்டுவாம். அவையாவன;—

பாரதியாரவர்கள் தொடர்பாக எழுதிவரும் வியாசத்தைப்பூர்த்தி செய்தபின்னரே கண்டித்தல் முறையாம். அவர்கள் முடிக்குமுன்னரே பிள்ளையவர்களை அதனைக் கண்டித்து அமைதிகூறியதனால் அநியாயமும், (உ) பிள்ளையவர்கள் எழுதிய வியாசம் பாரதியார் அவர்கள் நன்னூற்குக் கூறிய குற்றங்களையும் குற்றங் கூறிய பாரதியார் அவர்களையும் கண்டிக்கு நோக்கத்தோடு எழுந்தமைக்கேற்ப “நன்னூலும் நவநீத கிருஷ்ணபாரதியாரும்” என்றாவது தாங்கண்டித்தலைப் புலப்படுத்தும் வேறெவ்வகையிலாவது அதற்குப் பெயரிடவேணுமேயன்றி “நன்னூல்” எனத்தாம் இட்டுக்கொண்ட பெயருக்கேற்றவாறு அந்நூலின் குணகுணங்களைக்கூறி அதனைமுடிக்கவேண்டும். அங்ஙனம் முடிக்க அறியாதிடர்ப்பட்டதனால் அறியாமையும், (ங) துறவி வித்துவான் முதலிய பெரியோரின் திருநாமங்களை வாளா கூறாது அவ்வவர் நிலைக்கும் தகுதிக்கும் தக்கவாறு ஸ்ரீமத் ஸ்ரீ முதலிய மரியாதைக் குறியீடு தந்து கூறலே ஆன்றோர் கொள்கையாம். அங்ஙனங் கூறாது “சிவஞானமுனிவர்” “மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையாவர்கள்” “ரா. ராகவையங்காரவர்கள்” “திருநாராயணையங்காரவர்கள்” எனப் பெரியார் திருநாமங்களை மரியாதைக்குறியீடில்லாது வழங்கிய தால் சபைப்பழக்கமின்மையும், (ச) தந்நாட்டு வித்துவான்களை “ஸ்ரீல ஸ்ரீ—பெருமான்” “வித்துவசிரோமணி புலவர்” என முன்னும் பின்



னும் அடைமொழி புணர்த்தி விசேடித்தும் தமக்கயல் நாட்டாராகிய ஏனைக்கலைஞர்கட்கு அங்ஙனம் விசேடியாதும் விட்டமையின் நடுவு நிலைமையின்மையும், விரிவஞ்சி விடுக்கப்பட்ட பிறகுற்றங்களுமாம்.

வாதமுறையிற் பிள்ளையவர்கள் வல்லுநராதலின், துறவி வித்துவான் முதலிய பெரியார் திருநாமங்களை அடைபுணர்த்தாது தீட்டியது அன்னார் பெருமை கருதியே எனவும் அங்ஙனங் கூறல் ஆன்றோர் கொள்கையாம் எனவும், இதனாலன்றோ அறிவாற் சிவனாகிய மணிவாசகப் பெருந்தகையார் தாம் திருவாய்மலர்ந்தருளிய “திருவளர்தாமரை” என்னுந் திருப்பாட்டில் இழிந்தனவாகிய தாமரை முதலியவற்றிற்கு அடைபுணர்த்தியும் உயர்ந்ததாகிய கோங்கிற் கடைபுணர்த்தாது மொழிந்தனர் எனவும், இதனையு மிவர்நோக்கிலர் எனவும் இதற்குரைகண்ட பெரியார் தீட்டிய விசேடக்குறிப்பையுங் கருதிலரெனவும் தீட்டிவெளியிட முற்படுவார்களாயின், யாமென் செய்வது. பிள்ளையவர்களும் அவர்க்கணைசரும் இந்நூலுரைகளை நுனித்துணர்ந்தறிந்தே ஸ்ரீமத்—நாவலர் முதலிய புலவர்களை உயர்த்த முன்னும் பின்னும் அடைகொடுத்தாரென வறிகின்றேன். தேசாபிமானம் யாவர்க்குமுளதாவதியல்பே அந்தோபாவம் இது கிடக்க மேற்செல்வாம்.

பிள்ளையவர்கள் “கற்போரினிதுணர்ந்து கொள்ளுமாறு தொகைவகை விரியிற் றரப்பட்டது” எனத்தாம் பொறித்த வசனத்திற்கு எழுவாய் முதலியன காட்டுவார்களாயின், பாரதியாரவர்கள் வரைந்த வசனங்களிலும் அவற்றை எளிதிற்கண்டு கொள்வார்கள். “ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற் றீதுண்டோ மன்னுமுயிர்க்கு” என்ற பெருநாவலர் வாக்கையுஞ் சிந்திப்பாராக.

இனி “நன்னூல்” என்பது ...........பவணந்தி என்னு நாமத் திருந்தவத் தோனாலே......செய்யப்பட்டதோரிலக்கண நூல்” “தமிழ்ப் பதங்களைப்........தென்மொழியிலக்கண நூலுணர்ச்சியோடு தமது வடமொழியிலக்கண நூலுணர்ச்சியுங்கொண்டு பவணந்தியார் பதவியற் கண் அமைத்த புதுவிதிகளும் தன்னுள் வாய்ந்தது” என்று பிள்ளையவர்கள் கூறிய இவ்வசனங்கள் இரண்டனுள்ளே முன்னதினால் நன்னூலியற்றியவர் பவணந்தி முனிவர் என்பது பெறப்பட்டது. பின்னதில் பவணந்தியார் பதவியற்கண் அமைத்தனவே புதுவிதிகளாக

ஏனைய பழையனவா? பவணந்தியார் புதுவிதிகளைப் பதவியற்கண் அன்றி வேறிடங்களில் அமைத்திலரா? "நன்னூல் என்பது........ பவணந்தி என்னும் நாமத்திருந்தவத் தோனாலே செய்யப்பட்டதோரிலக் கணநூல்" என்று கூறிப் "பவணந்தியார் பதவியற்கண் அமைத்த புதுவிதிகளும் தன்னுள் வாய்ந்தது" என்று பின்னும் பவணந்தியார் என்றக்கால் அஃது கூறியது கூறலன்றோ? மேற்போந்த வசனங்களுள்ளே மயங்கவைத்தல், வெற்றெனத் தொடுத்தல், நின்றுபயனின்மை முதலிய குற்றங்கள் பொலிந்துகிடக்கின்றனவே.

இனிப்பிள்ளையவர்கள் வடமொழி இலக்கண நூலுணர்ச்சி (பவணந்தியார்) தமதென்கிறார்கள். தென்மொழி இலக்கண நூலுணர்ச்சி எவருணர்ச்சியோவறியோம். நன்று! நன்று!! "பாரதியாரவர்கள் தாமெழுதிய விஷயத்தைப் பிழையற வெழுது மாற்றலில்லாதவர்களாக விருக்கின்றார்கள்" எனச்சிறிதும் கூசாதெழுதிப்போந்த பிள்ளையவர்கள் எழுத்துவன்மை அறிஞர்கள் கண்டு இறும்பூதெய்தற் கேதுவாவதுவேயாம்.

தாம் "நன்னூல் என்பது" என்று தொடங்கிப் பன்னிரண்டு வரிக்குள் நன்னூலைப்பற்றி எழுதிவிட்டு, 'இத்துணை பெருமைவாய்ந்த' எனக்கூறிய பிள்ளையவர்கள், "மெய்யோடியையினு முயிரியறிரியா" என்ற சூத்திரத்திற்குப் பன்னீருயிர்களும் எனத்தொடங்க உக-வரிகள் வரை இயறிரிதலைப்பற்றி எழுதி அதன்பின் இக்காரணங்களால் எனக்கூறிப்புகுந்த பாரதியாரவர்களை "முன்காரணங்களைத் தெரிக்காது இக்காரணங்களால் என்றதும் வழூஉ" எனக்கண்டித்தமை தவப்பெருவியப்பே.

இனி இலக்கண்க் கொத்துநூலாரும் "முன்னோரொழியப் பின்னோர் பலரினுள் நன்னூலாருக் கெந்நூலாருமிணையோவென்னுந் துணிவே மன்னுக" எனப் பவணந்தியாரைப் புகழும் வாயாற் புகழ்ந்தனர் என்றும், "நன்னூலாரைப் புகழ்ந்தாரையன்றியிகழ்ந்தாரை நாம் இற்றைவரை" வாசித்து அறியோம் என்றும் கூறினார்கள். இலக்கணக் கொத்துநூலார் தந்நூல்-எம்-சூத்திரவுரையில் "நன்னூல் சின்னூல் அகப்பொருள் காரிகை அலங்கார முதலிய இலக்கணங்களையும்...... .........ஓர் பொருளாக எண்ணிவாணாள் வீணாள் கழிப்பர்" என நன்னூலை இகழ்ந்து கூறி, கல்விமுதலிய வற்றாற்றம்மி னுயர்ந்துவிட்டனரே



யென்னும் அழுக்காறு காரணமாகக்கொண்ட பழம் பகை கநித்து இலக்கண விளக்கநூலுடையாரைத் தாழ்த்தல் கருதி 8-ம் சூத்திரவுரையில் நன்னூலாரை வஞ்சத்திற்புகழ்ந்தனரேயன்றி வேறில்லை. இதனை அங்ஙனம் இலக்கணக்கொத்து நூலாசிரியர் தாமே தமது நூற்குறையிபற்றியதற்கு மேற்கோளாக" என் கண் காணத் திருவாரூரிற் றிருக்கூட்டத்திற் றமிழ்க்கிலக்காகிய வைத்தியநாதனிலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்" என இலக்கண விளக்க நூலாரைப்பிள்ளையவர்கள் கூறியாங்கும் புகழும் வாயாற் புகழ்ந்திருத்தலால் இனிதறிந்தடங்குவாராக. இலக்கணக்கொத்து நூலார் நன்னூலார் என்றதன்றி அந்நூலாசிரியரைப் பவணந்தி என மறந்தும் கூறாமையான் அப்புகழ் காரணங்கருதிய வஞ்சம் மலிபுகழேயன்றி நெஞ்சமகிழ் புகழன்றென்பது நடுவுடையார் பலர்க்கும் வெள்ளிடைமலைபோல் விளங்குமென்பதிலையமின்றாம். இலக்கணக்கொத்து நூலார் நன்னூலாரை இகழ்ந்ததும் இலக்கண விளக்கநூலாரைப் புகழ்ந்ததும் முன்னதாகிய 7-ம் சூத்திரவுரைக் கண்ணும், பின்னதாகிய 8-ம் சூத்திரவுரைக்கண்ணும் காணப்படலால் பின்னதின் முன்னது வலியுடைத்தென்னு நியாயம் பற்றி நன்னூல் இலக்கணக்கொத்து நூலாரால் இகழ்ந்தொதுக்கப்பட்டதோர் நூலாமென்பது அதனை நுனித்துணர்ந்து கற்றவறிஞர் பலர்க்கும் பொள்ளெனப் புலனாம். இனி அவ்விலக்கணக்கொத்து நூலார் அந்நூல் 8-ம் சூத்திரவுரையில் "அ இ உம் முதற்றனிவரிற் சுட்டே" என்புழி எனத்தொடங்கி........நன்னூலார்க்குப் பின்னூலார் இச்சூத்திரத்திற்கு அளவிறந்த குற்றம் கூறினரென்று நன்னூலையிகழ்ந்தாரிவரென வெள்ளிடை விலங்கல்போல விளக்கியருளினார். இஃதன்றி, ஆசிரியர் சிவஞானயோகிகள் "போலியெழுத்தென வொன்றில்லை" யெனவும், ஐகாரம் மொழிமுதற் கட்குறுகாதெனவும், ஔகாரக் குறுக்கமென் றொன்றில்லை யெனவுங் "கூறி" அம்முன்னிகரம் "என்னும், நன்னூற் சூத்திரத்தைக் கண்டிக்கவெழுந்து பலகலைக் குரிசில் பவணந்தியென" முன்னர்ப்புகழ்ந்தமையை முன்னி, அச்சூத்திரத்தில் இறுதியிற் சில சொற் பெய்து முடித்த இலக்கணவிளக்க நூலாசிரியர் தலையில் தம்மாதீனத்தார்க்குரிய பழம் பகைகாரணமாக அவ்வழுவை யேற்றினார்கள். இதனை இலகுவாகப்பிள்ளையவர்களும் அவர் கணேசரும் ஆராய்ந்து அறிந்துகொள்ளலாம், இது தேரும் மதுகையின்றி நன்னூலார் மேற்குற்றமேற்றியது பாரதியவர்களின் ஆராய்ச்சி

யின்மையே எனக்கூறிப்போந்த பிள்ளையவர்கள் நூல்களிற் கூர்த்து அஃகியகன்றி செல்லும் ஆராய்ச்சிவன்மை யாவராலும் போற்றற்பால தேயாம். இனி ஆராய்ச்சி வல்லுநரான பிள்ளையவர்கள் இலக்கணக் கொத்து 7-ம் சூத்திரவுரையில் அந்நூலார் நன்னூலை யிகழ்ந்ததும் 8ம் சூத்திரவுரையின் முற்பகுதியில் நன்னூலாரைக் கண்டித்தாரைக் காட்டியதும் பிற்பகுதியில் நன்னூலாரைப் புகழ்ந்ததும் பிறவும் உளவாகப் பின்னதாகிய புகழ்ச்சியைக் கண்ணுற்று முன்னையவாகிய இகழ்ச்சியையுங் கண்டனத்தையும் கண்ணுறாது "நன்னூலாரை யிகழ்ந்தாரை நாமிற்றைவரை படித்தறியோம் எனக்கூறியது அவர்கள் ஆராய்ச்சி வன்மையை இனிது விளக்கிக்காட்டுகின்றது. இம்மட்டோ!! தொல்காப்பியர்க்கும் நன்னூலார்க்கும் அது கருத்தன்மையின்" என்றும் "இளம்பூரணரும்........என்றதூ உம் இக்கருத்து நோக்கியே" என்றும் கூறிப்போதலின், பிள்ளையவர்கள் ஆசிரியர் கருத்தினை யறியுமாற்றல் பெரிதுடையார் போலும். அது பற்றியன்றே இலக்கண விளக்கநூலாரும் இதனையங்கீகரித்து இதன்கணுள்ள சூத்திரங்களையே தந்நூலிற் பெரும்பாலும் பொருத்தி யாத்தனர் என இலக்கண விளக்கநூலார் கருத்தும் இற்றென மொழிந்தனர். இலக்கண விளக்கப்பதிப்புரையைப் பிள்ளையவர்கள் வாசித்திருப்பின் இங்ஙனந் தீட்டியிரார். இலக்கண விளக்கப்பதிப்பாசிரியராகிய ராவ்பகதூர் ஸ்ரீசி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் அந்நூற் பதிப்புரையிலே அந்நூலாசிரியரைப்பற்றிக் கூறுமிடத்து முதலில் இவர் நன்னூற்குச் சைன முனிவருரை தக்கவுரையல்லவென்று கண்டு தாமோருரை யெழுதுவாராயினர். பின்னர் அதிற் பலஇடங்களில் நன்னூலாரோடு தம்மதம் மாறுபட்டமையால் இந்நூல் இயற்றத் தொடங்கினர் என, நூலியற்றற் கிருந்த காரணத்தையும், "சூத்திரங்களைப் பாடம்பண்ணுவோர் ஒருபொருளிற் பலசூத்திரங்களைப் பாடஞ்செய்தல் வீண்காலக்கழிவென்று கருதி இலக்கணாசிரியர்கள் பழஞ்சூத்திரங்களையே தமக்கு வேண்டிய விகற்பத்தோடு எடுத்தாளுதல் பெருவழக்காதலின் இந்நூலாரும் பெரும்பாலும் கற்போர்க்கு உபகாரமாக நன்னூல் முதலிய நூல்களின் சூத்திரமுதலியவற்றைத் தழுவித் தெடுத்தும் சிலவற்றை முற்றுங்கொண்டும் தொல்காப்பியச் சூத்திரம் பலகொண்டும் சூத்திரஞ் செய்யாமைக்குற்ற காரணத்தையும் கூறினர்களாதலின் பிள்ளையவர்கள் கூறியாங்கு இதன்பெருமை கருதி யாத்தனரல்ல வென்பது அறிஞர் பலர்க்கும் விளங்குமென்பதிலொரு



சிறிதுமுட்டின்றும். இலக்கண விளக்கநூலிலே அந்நூலைப் பெரும்பான்மையாகக் கண்டித்துச் சென்றதானும், இலக்கணக்கொத்து நூலாரும் ஸ்ரீ சிவஞான சுவாமிகளும் இலக்கண விளக்க நூலார் நனி கண்டித்தாரென்னும் கருத்தமைய எழுதியவசனங்கள் ஆண்டாண்டு நின்றுசான்று பகர்தலானும், நன்னூலார் கொள்கையை இலக்கண விளக்கநூலார்பெரிதுங்கண்டித்துச் சென்றனரென்பதைப் பிள்ளையவர்கள் நுனித்துணர்ந்தறிவாராக. பாரதியவர்களெழுதிய வசனங்களில் வந்த எச்சங்கள் முற்றுக்கள் தொகை நிலைகள் அவாய் நிலைகள்முதலிய வற்றைக்கண்டு பொருளறிதற்குரிய அத்துணை இலக்கண ஞானமில்லாமையினாலே தமக்கு விளங்காதன வெல்லாம் வழூஉ வெனக் கொண்டோ இலக்கணவிஷயமாகிய சாரத்தை நழுவவிட்டு எழுத்துப்பிழைக் குப்பையைப்பற்றிகொண்டபிள்ளையவர்கள் தந்நாட்டுப் புலவர்களுள் தலைசிறந்து விளங்கிய ஸ்ரீமத் ஆறுமுகநாவலரவர்கள் பலவாறு திருத்திப் புதுக்கிச் செப்பஞ் செய்து பதிப்பித்த நன்னூற் காண்டிகையுரை 155-ம் பக்கத்து "ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற அன்று, இன்று முதலிய மென்றொடர்க் குற்றியலுகரவீற்று மொழிகளின் முன் வரும் வல்லினம் அன்று கண்டபின்" என இயல்பாய் முடியும் எனவும், காலஞ்சென்ற வித்வான் ஸ்ரீமத் விசாகப்பெருமாளையரவர்கள் அரிய பெரிய ஆராய்ச்சி செய்தெழுதிய இலக்கணச் சுருக்கத்தை விரித்துச் சுருக்கிப் புதுக்கி ஐயரவர்கள் இட்ட பெயரோடு பதிப்பித்த இலக்கணச் சுருக்கம் 55-ம் பக்கத்து "ஏழாம்வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற அன்று, இன்று முதலிய இடைச் சொற்களின் முன் வரும் வல்லினம் மிகா" எனவும் வரைந்திருத்தலான் அன்று, இன்று முதலிய சொற்கள் காலப்பொருளுணர நிற்பன சிற்றிலக்கணங்கற்ற சிறு மகாரும் எளிதிலுணர்வரே. இதனை இந்நாவலரெனப் பெயர் புனைந்த இவரறிய மதுகையிலராயினரே ஆதலால் இவர்க்கு இலக்கண ஞானஞ்சிறிதுமிலலையென வொருகண்டனந்தீட்டிப் பிள்ளையவர்களைசரும், பிள்ளையவர்களும் வெளியிடாதது அந்நாவலரும், அந்நாட்டுப் புலவர்களுஞ் செய்த தவப்பயனேயாம். இக்காலத்து யாழ்ப்பாணத்துப் புலவரெனப் பெயர் படைத்து விளங்கும் ஸ்ரீ கணேசையர் முதலியோர்க்கு இயற்றமிழாசிரியாகிய சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசாமிப்புலவரவர்கள் தாம் குறிப்புரை வரைந்து பதிப்பித்த கலைசைச்சிலேடை வெண்பாவில் மறதியானேர்ந்த வழூஉக்கள் பலவுள்ளன அவற்றுளொன்றை யீண்டுத் தருகின்றேன். "இருதாட் செங்கழுநீர்ப்போதகம் =

இரண்டு தாள்களாகிய செங்கழுநீர்ப்பூவையுமுடைய யானையாகிய விநாயகர்" எனவுரைத்துள்ளார்கள். "செங்கழுநீர்ப்போதகம்" செங்கழுநீர்விநாயகர் எனப்பொருள் கொள்ளல் வேண்டும். அக்கலைசையிற் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் மூத்தபிள்ளையார்க்கு இது திருப்பெயராதலின் இங்ஙனமாய வழூஉக்களெல்லாம் எழுத்துக்களைக் கோவை செய்பவராலும்; எழுதுவோராலும் நேர்ந்தனவென்பது அறிஞர் பலரும் அறிவர். பிள்ளையவர்களும் அவர்நேணைசரும், இவ்விருவர் பதிப்பித்த புத்தகங்களை யெல்லாம் வாசியாரென வறிகின்றேன். வாசிப்பின் இங்ஙனமாய வழூஉக்கள் பலதெற்றென விளங்கும் அவையெல்லாந்திரட்டி யொருகண்டனந்தீட்டின் எழுத்தில் பெரும்புகழ் பெறலாமே. ஸ்ரீ நவநீத கிருஷ்ண பாரதியாரவர்கள் இலக்கணவாராய்ச்சிப் பிரியர் பலர்க்கும் நனிபயனளிக்கவல்ல அரிய விஷயங்களை நுணுகியறியவல்ல ஆற்றலுடையவரெனினும் அவற்றை யெழுதுவதிற் சோம்பலும் பெரிதுடையரென்பது அவர்களெழுதிய வியாசத்தில் வந்த எழுத்துப்பிழைகளால் அறியலாம். அன்றியும் தமது வியாசத்திற் றோன்றிய பிழைகளைத் திருத்திச் செந்தமிழ் வாயிலாகப் பிரசுரித்ததுவும் தக்கசான்று பகரும். பெரும் வியாசங்களெழுதும்பொழுது இவ்விதப் பிழைகள் யார்க்கும் வருதலுண்டு. அறிஞர் அப்பிழையை மதியார் எனினும் அப்பிழைதானும் வாராவண்ணம் எழுதலே நன்று. எழுத்தாளரால் எழுதப்படுவவேயாயினும் அவ்வியாசங்களைத் தாம் பரிசோதித்துப் பிரசுரத்திற் கனுப்பல்வேண்டும். அங்ஙனஞ் செய்யாதது பாரதியவர்கள் குறையே; நிற்க. பிள்ளையவர்கள் பாரதியவர்களிற் கண்டவழூஉக்களிற் செல்வாம். "ஆசிரியர் என்றனர். இங்கே ஆசிரியர் இன்னார் எனத் தெரித்துக் கூறாமையும் வழூஉ" வென்பது பிள்ளையவர்கள் செய்த கண்டனங்களுள் இரண்டாவது பாரதியவர்கள் "தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்" எனப் பெயர் தந்து எழுதிய வியாசத்திற்கேற்ப எட்டுவரிகொண்ட சொற்றொடர்களாற் பீடிகையிட்டு" ஆசிரியர் "எழுத்தெனப்படுப" என்னுஞ் சூத்திரத்தால் எனத் தொடங்கிய முதல் வசனத்தின் முதற்சொல்லாகிய "ஆசிரியர்" என்பதே இப்பிள்ளையவர்கள் காட்டிய ஆசிரியராவார். வியாசத்தின் பெயரே தொல்காப்பியம் என முகலிலுள்ளதாகவும் "எழுத்தெனப்படுப" என்னுஞ் சூத்திரஞ் செய்தார் தொல்காப்பியரன்றி வேறெவருமிலராகவும் அத்தலைச் சூத்திரஞ்செய்தாரிவர் என்பது தொல்காப்பியம் பயிலாதாரும் அறியத்தக்க தொன்றாயிருப்பவும், அச்சூத்திரஞ்செய்த ஆசிரியர் யாவரென அறியுமாற்றல் தமக்கின்றித் தமதறியாமையைப் பாரதியாரவர்கள் மேலேற்றிய பிள்ளையவர்கள் ஆராய்ச்சி வியக்கற்பாலதே.

"ஒருவரைக் கண்டனஞ்செய்வார் அவரினும் அறிவாற்றல்களான் மேம்பட்டவராயன்றோ விருத்தல்வேண்டும்" என்றதமது வசனத்தை இவ்விடத்திற் பிள்ளையவர்களும் அவர்நேணைசரும் சிந்தித்தல் நன்று, என்னை? "அறத்தாறிதுவென வெள்ளைக்கிழிபு" என்ற விடத்து அறத்தாறிதுவென்னு முதற்குறிப்புச் சொல்லையுடையது திருக்குறட்செய்யுள் என்றும் அதன் ஆசிரியர் திருவள்ளுவர் என்றும் அறியாதானைத் திருக்குறள் வல்லுநன் என்று சொல்லுவ தொல்லாதவாறேபோல் "எழுத்தெனப்படுப" என்னுஞ் சூத்திரஞ்செய்த ஆசிரியரை அறியாத பிள்ளையவர்களையும் அவர்நேணைசரையும் தொல்காப்பியங் கற்றவரென்று சொல்லுவதும் ஒல்லாதென்க.

(தொடரும்)

இங்ஙனம்.

R. R. GUNARATNAM, B. A,
(Tellippalai Jaffna.)

# 13-வது புறப்பாட்டும் உரையும்-III.

a. இதுகாறும் 'விழுநீர் வேலிநாடுகிழவோனே' என்னும் அடியொன்றின் துணைகொண்டு 'நாடுகிழவோன்' என்றது சேரனைக் குறிப்பதாகுமெனக்காட்டுதற்கு நண்பரவர்கள் முயன்றார்கள். இனி நாட்டிற்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைமொழியின் பொருளாற்றலால் அந்நாடு சேரனுக்கே யுரியதாதல் பெறப்படுமென்று அவர்கள் கூறுகின்றார்கள். அடைமொழி வருமாறு:—

'பழனமஞ்ஞையுகுத்தபீலி
கழனியுழவர்சூட்டொடுதொகுக்குங்
கொழுமீன்விளைந்தகள்ளின்
விழுநீர்வேலிநாடு'

இதன்பொருள்: 'வயலிடத்து மயிலுதிர்த்த பீலியை ஆண்டுள்ள உழவர் நெற்சூட்டுடனே திரட்டும் கொழுவிய மீனையும் விளைந்தகள்ளையுமுடைய மிக்கநீராகிய வேலியையுடையநாடு' என்பது. இவ்வாறு 'விழுநீர்வேலிநாடு' விசேடிக்கப்படுதலான், "அந்நாடு மயிலினங்களையுடைய மலைகளையடுத்துள்ள மருதநிலமுடைய தென்றும், அங்கு மயிலிறகு தொகுக்குந் தொழினிகழ்ச்சியுண்டென்று"ங்கருதி, "இவ்விலக்கணங்களையுடையது சோணாடாகாது சேரநாடேயாம்" என்றுஒருதலையாய்த் துணிகின்றார்கள். ஈண்டு 'மலைகளையடுத்துள்ள மருத நிலமுடையது' என்று நண்பரவர்களாற் பொதுப்படக் கூறப்படினும், அக்கூற்றிற்கு ஆதாரமாக அவர்கள்கொண்டது மஞ்ஞைகள் பழனங்களில் (வந்தலவிப்) பீலியுகுப்பனவென்று செய்யுளிற் காணப்படுவதேயாம். இதனாற் பழனங்களையடுத்து மயில்கள் உளவாதல் பெறப்படும். இவ்வாறுளதாகச் சோணாடு கூறப்படுகிறதாவென்ற விஷயமே நாமிங்கு ஆராய்தற்குரியது.

சோழதேசத்துத் திருப்பதிகள் பலவும் கதிர்மிகு செந்நெல்வயல்களோடு மயில்குலவு நளிர் சோலைகளுடையனவா மென்று 'தேவாரம்' 'நாலாயிரம்' முதலிய அருளிச்செயல்கள் உணர்த்துகின்றன. உதாரணமாகச் சிலமேற்கோள் தருகின்றேன்.

1. 'சேலடைந்ததண்கழனிச்சேய்ஞலூர்'
'வீசடைந்த தோகையாட விரைகமழும்பொழில்...சேய்ஞலூர்'

2. 'செறியிதழ்த்தாமரைத்தவிசிற்றிகழ்ந்தோங்கு விலைக்குடைக்கீழ்ச்
செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச் சாமரையிரட்ட விளவன்னம் வீற்றிருக்கும்மிழலை'
'வரைச்சேருமுகின்முழவ மயில்கள் பலநடமாட வண்டுபாட
விரைச்சேர் பொன்னிதழிதரமென்காந்தள்கையேற்கு மிழலை'

3. 'பைந்தாமரைகள் கழனி சூழ்ந்தபழனநகர்'
'கலவமயிலுங் குயிலும் பயிலும்......பழனநகர்'

4. 'காலாடுநீலமலர் துன்றிநின்ற கதிரேறு செந்நெல்வயலிற்
சேலோடுவாளை குதிகொள்ளமல்கு திருமுல்லைவாயில்'
'மானேறுகொல்லை மயிலேசிவந்து குயிலேறுசோலைமருவித்
தேனேறு மாவின்வளமேறியாடுந் திருமுல்லைவாயில்'



என்பனபோன்ற சம்பந்தப் பெருந்தகையருண் மொழிகளையும்,

*1. 'கானுடை மஞ்ஞைக்கணமாட மாடே
கயலாடுகானீர்ப்பழனம் புடைபோய்த்.
தேனுடைமாடக்கொடியாடுதில்லைத்
திருச்சித்ரகூடம்'

2. 'செந்நெற்கூழைவரம் பொரீஇயரிவார் முகத்தெழுவாளைபோய்க்
கரும் பந்நற்காடணையும் அணியாலி'
'சோலைத்தலைக் கணமாமயில் நடமாடமழைமுகில்போன்றெழுந்
தெங்கு மாலைப்புகைகமழும் அணியாலி'

3. 'எண்டிசையும் பெருஞ்செந்நெலிளந்தெங்குகதலி
யிலைக்கொடியொண்குலைக்கமுகோடிகலிவளஞ்சொரிய
வண்டு பலவிசைபாட மயிலாடு நாங்கூர்
வைகுந்த விண்ணகரம்'

4. 'செந்நெல்மலிகதிர்க்கவரிவீசச்சங்கம்
அலைவுமுரலச்செங்கமலமலரையேறி
யன்னமலிபெடையோடுமமருஞ்செல்வத்
தணியழுந்தூர்'
'புலம்புசிறைவண் டொலிப்பப்பூகந்தொக்க
பொழில்கள்தொறுங்குயில்கூவ மயில்களால
அலம்பு திரைப்புனல்புடைசூழ்ந்தழகார்செல்வத்
தணியழுந்தூர்'

என்பனபோன்ற திருமங்கைமன்னர் திருவாக்குகளையும் நோக்கிக் கொள்க. இங்ஙனமாகச் சோணாட்டுத் திருப்பதிகள் பலவற்றின் இயற்கை வளங்கள் எடுத்துச் சொல்லப்படுதலினாலே, அந்நாட்டின்கண், வயல்களையடுத்து மயில்களுளவாதல் அறியத்தகும்.

தேவாரமுதலியனவேயன்றியும், சங்ககால நூல்களும்மேற்காட்டிய வுண்மைக்குச்சான்று பகர்கின்றன. பொருநராற்றுப்படையின் கண்ணே கரிகாற்பெருவளவனது காவிரிபுரக்கும் நாடுவருணிக்கப்படுகின்றது. ஆண்டு 'முடக்காஞ்சிச் செம்மருதின் மடக்கண்ணமயிலால'

* இந்நான்கு மேற்கோள்களும் எனது நண்பர் ஸ்ரீதேசிகவிநாயகம்பிள்ளையவர்களாலுதவப்பட்டன.

என்னும் இரண்டடிகள் உளவாதல் கற்றோர்பலருமறிவர். உரைவகுத்த நச்சினார்க்கினியர் 'பாகற்பழத்தையும்......பலாப்பழத்தையும் தின்று காஞ்சிமரத்திலும் செவ்விய மருதிலுமிருந்த......பெடைமயில்கள் ஆரவாரித்தழைக்கும்படி' என்றுபொருள் கூறினர். இதனால் மருதநிலத்தே மயிற்பெடைகள் தங்கியிருந்தமை யுணரப்படுகின்றது. இதன் மேலும் 'மனைக்கோழிதினைக்கவர' என்னும் ஓரடியும் இப்பகுதியிற் காணப்படுகின்றது. 'மருதநிலத்தின் மனையிற் கோழிகள் தினையைத் தின்னவும்' எனவுரையுளது. இதனால் மருதநிலத்துக்கோழிகள் குறிஞ்சி நிலத்தே சென்று இரைதேர்தல் அறியலாகும். ஆகவே சோணாடு மருதநிலத்தையடுத்த குறிஞ்சியையுடைய தென்பது சந்தேகத்துக்கிடமின்றித் தெள்ளிதினுணரப்படும்.

சோணாட்டு நகரங்கள் பலவற்றினும் வயல்களையடுத்து மயில்கள் உண்மையை நேரேதெரிவித்து அதன்மூலமாய் அந்நாட்டு வளமும் அங்ஙனமே யுளதாகல் வேண்டுமென்றுணர்த்துகின்றன தேவாரமாதிய செழுந்தமிழ்நூல்கள். அந்நாட்டில் மருதமுங் குறிஞ்சியும் மயங்கியுள்ளனவென்பதும் மருதநிலத்தே மயில்கள் தங்குதலுண்டென்பதும் பொருநராற்றுப்படை அறிவிக்கின்றது. பிறிதொரு பழந்தமிழ்நூல் சோழநாட்டிலே வயல்களையடுத்து மயில்களிருந்தனவென்பதை நேரே செவ்விதின் எடுத்துச்சொல்கின்றது. 'பதிற்றுப்பத்து' என்னும் சிறந்த தொகை நூலில், 90-வது செய்யுளில் இவ்விஷயம் காணப்படுகின்றது. அங்கே,

'கழனியுழவர்தண்ணுமையிசைப்பிற்
பழனமஞ்ஞைமழைசெத்தாலுந்
தண்புனலாடுநரார்ப்பொடுமயங்கி
வெம்போர்மள்ளர்தெண்கிணைகறங்கக்
கூழுடைநல்லிலேறுமாறுசிலைப்பச்
செழும்பலவிருந்தகொழும்பஃறண்பணைக்
காவிரிப்படப்பைநன்னாடு'

என்றவரிகள் உள்ளன. உரைகாரர் ஆலும் நாடெனமுடித்துக் காட்டினர். வயிலிடத்து உழவரெழுப்பும் தண்ணுமை யொலியினை மேக முழக்கிற்றெனக்கருதி ஆண்டுள்ள மயில்கள் ஆரவாரிக்கும் நாடு என்பதுவே இங்குக்கருதப்பட்டபொருள். 13-வது புறப்பாட்டில் 'பழனமஞ்ஞை', 'கழனியுழவர்' எனப்பயின்று வந்தமைபோலவே இவ் அடிகளின் கண்ணேயும் வருதல் உய்த்துணர்தற்பாலது. உழவரது தண்ணுமை யிசையினைக்கேட்டு மயில்களாடுவன வென்பதன் மேலும் அம்மயில்கள் பழனப்பாங்கரில் உள்ளனவென்பதுஞ் செய்யுள் வெளிப்படக் கூறுகின்றது. ஆகவே சோழவள நாட்டின்கண்ணே பழனங்களையடுத்து மயில்களுளவாதல் அபாதிதப்ரமாணங்களால் நன்கு துணியப்படுவதாகும்.



இனி, 'பழனமஞ்ஞை புகுத்தபீலி-கழனியுழவர் சூட்டொடுதொகுக்கும்' என்பதன் பொருளையுணர்த்த உரைகாரர் கூறிய சொற்களையே தாமுங்கொண்டு, 'நெற்சூட்டுடனே திரட்டும்' என்ற வுரைப்பகுதியை விளக்கி, அங்ஙனம் விளக்கியதன் மூலமாக மயிலிறகு தனியே தொகுக்கும் தொழினிகழ்ச்சி யுண்மை பெறப்படும் என்றுரைக்கின்றார்கள். 'நெற்கதிரறுத்துச் சூடுதிரட்டி முடியும் பொழுதே மயிற்பீலியுமொருபுடை திரட்டிமுடியும்' எனப்பொருள்படுத்து, "நெல் விளைந்த பழனங்களில் வந்து இரைதேரு மயிற்கணங்கள் இயல்பாயுகுத்தலாற் கிடக்கும் பீலிகளைக்கதிரறுத்துக் கட்டிவருமள்ளர் நெற்கதிரோடு விரவாதவாறு தனியே திரட்டிக்கொணர்ந்து நெற்சூடு தொகுக்குமளவும் தொகுக்க அவைநெற்சூடுபோலப் பிறிதொரு பீலிச்சூடாகக்குவியும்." என நண்பரவர்கள் விரித்துவிளக்குகின்றார்கள். இப்பொருள் வலிந்துகொள்ளப் படுவதாகும். இயல்பாயமைந்து கிடக்கும் பொருள் பிறிதொன்றிருத்தலின் அது பொருந்தாதெனற்குத் தக்க காரணந் தரப்படினன்றி அப்பொருளே கொள்ளத்தகுவதாம். சாதாரணப்பொருள் எவ்வாறு சிறப்பில்லாததாயிற்று? சிறப்பிற்காக வேண்டி வலிந்தும் நலிந்தும் பொருள்கொள்ளல் தகுதியா? 'கதிரொடு தொகுக்கும் என்னாது சூட்டொடுதொகுக்கும்' என்றமையால் தாம் கொண்டதுவே பொருளெனத் துணிகின்றார்கள். இதனால் 'கதிரொடு தொகுக்கும்' என்பது சாதாரணப்பொருளொன்றனையே குறிக்கவல்லதென்றும், இப்பொருளினையே ஆசிரியர்கருதினராயின், மயங்குதற்கிடனின்றிக் கதிரொடுதொகுக்கும்' எனவே கூறியிருப்பரென்றும், அங்ஙனங் கூறாததால் ஆசிரியர் இப்பொருள் கருதினரல்லரென்றும் அவர்கள் கொள்ளுகின்றார்கள். ஆனால் 'கதிரொடுதொகுக்கும்' என்றே கூறினும் மயக்கத்திற்றீர்ந்த பாடில்லை. இத்தொடரினையும் இருவகையாகப் பொருள்படுத்தல் கூடுமாகலின். ஆகவே சாதாரணமான

பொருளினைக் குறித்தற்குப் புலவர்தந்த தொடரினுஞ் சிறந்ததொன்று காண்டற்கரிதாம்.

அன்றியும் நண்பர் கூறும்பொருளுக் கேற்ற நிகழ்ச்சி உலகவழக்கில் யாண்டுங்காணுதலரிதாகும். தொழில் நிகழிடம் வயலும்தொழில் செய்வோர் உழவருமாகலின் நெற்கூடு தொகுத்தலே உரிய முயற்சியாகும்; மயிற்பீலிகளைத் தனியே திரட்டுதலன்று. ஆதலால் நெற்கூடு போலப் பிறிதொரு பீலிக்கூடு தொகுத்தரென்றல் அசம்பாவிதமாம். மேலும் அங்ஙனம் ஒரு கூடு தொகுக்குமளவு பீலிகளையுகுத்து மயில்கள் இரைதேர்ந்தனவெனின், வயல்களைப் பயிர்செய்வதனால் உழவர்கள் யாதும் பயன்கொள்ள வல்லராகா ரென்பதும் நோக்கத்தகுந்தது. உரைகாரரது கருத்தினையே தாமெடுத்துச் சொல்வதாக நண்பரவர்கள் எண்ணுகின்றார்கள். ஆனால் உரையிலோ நண்பரவர்களது பொருளையையமின்றித் தெளிவாய்க் குறிக்கவல்ல சொற்கள் யாண்டும் இருப்பதைக்காணோம். உரைகாரர்கருதியது நண்பரவர்கள் கூறியதேயெனின், உரியவிடத்தில் ஏற்றசொற்பெய்து விளக்கியிருப்பர். அங்ஙனமொன்றுங் காணப்பெறாமையானே, உரையின்கருத்து சாதாரணமாய் வெளிப்படும் பொருளே யென்றறியத்தகும்.

மேலே பொதுப்படக்கூறிய நியாயங்கள் உண்மைப்பொருளிதுவென ஒருவாறு சுட்டவல்லனவாம். ஆனால் நண்பரவர்கள் தந்த பொருளொன்றே ஏற்புடையதெனக் கொள்ளினும், அவர்கள்கொண்ட முடிபு பெறப்படுமாறில்லை. "மயிற் பீலிதொகுக்குந் தொழினிகழ்ச்சியுடைய நாடு மலைமண்டலமாகிய சேரநாடே யாம்" என்று துணிந்து கூறுகின்றார்கள் இவ்வாறு எங்கே கூறப்பட்டுளது? மயிலினங்கள் எங்கெல்லாமிகுதியாகக் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அவையுதிர்க்கும் பீலிகளைத் தொகுத்துவைக்கும் வழக்க முளதாகல் வேண்டுமன்றோ? இவ்வுண்மை சோணாட்டின் விஷயத்தில் மட்டும் பொய்த்துவிடுதற்குக் காரணந்தான் யாதோ? உரியகாரணமொன்று மின்மையின் நண்பரவர்கள் சேரநாடொன்றிலேயே இத்தொழினிகழ்ச்சியுள்தென்று முடிவுகண்டது தவறாகும்.

இங்ஙனம் 'சேரநாடே' யென்த்துணிதற்குப் 'பீலிமஞ்ஞையும் நாவியின்பிள்ளையும்' என்னுஞ் சிலப்பதிகார வடியினை ஆதாரமாகத்



தந்தார்கள். சேரன்செங்குட்டுவன் மலைவளங்காணக்கருதி மலைநின்றிழியும் பேரியாறு என்னும் ஆற்றினதுகரையில் மணல்மிக்க எக்கரிலே தங்கியிருந்தபொழுது, ஆண்டுள்ள மலைநிசைவாணராகிய வேட்டுவர்கள் திறை சுமந்து நிற்குந்தெவ்வர்போல,

"...............................................
ஆளியினணங்கும்அரியின் குருளையும்
வாள்வரிப்பறழும்மதகரிக்களபமும்
குரங்கின் குட்டியும்குடாவடியுளியமும்
வரையாடுவருடையும்மடமான்மறியும்
காசறைக்கருவும்மாசறுநகுலமும்
பீலிமஞ்ஞையும்நாவியின்பிள்ளையும்
கானக்கோழியும்தேமொழிக்கிள்ளையும்"

கொண்டுசென்று அரசற்கு அடியுறையாக வைத்துப்பணிந்து தாம் கண்ட அற்புதக்காட்சியைத் தெரிவிக்கின்றார்கள். இங்கே மயிற் பீலி தொகுத்து வைக்குஞ் செய்தி கூறப்படவே யில்லையே! பீலியையுடைய மஞ்ஞையன்றோ அடியுறையாக வைத்தனவற்றுளொன்றாக வுரைக்கப்படுகின்றது! இங்ஙனமிருப்ப இவ்வரி நண்பரவர்களுக்கு ஆதாரமாதல் எவ்வாற்றானுமில்லை. இதன் பொருளினை நண்பரவர்கள் கூர்ந்து நோக்கினார்களில்லை யெனல் சிறிதும் பொருந்தாது. அவர்கள்போன்ற மகாபண்டிதர்கள் பிறரையுடன் படுத்துதற்பொருட்டு ஆதாரமாவனபோலிரண்டொன்றைக் காட்டுதல் பெரிதும் வ்யஸனிக்கத்தக்கதாகும்.

'மயிற்பீலிகொள்ளும் வணிகர் செல்லுமிடம் அதுவே யாதலால்' அவற்றைத் 'தொகுக்குந் தொழினிகழ்ச்சியுடைய நாடுசேரநாடேயாம்' எனக் கூறுகின்றார்கள். இக்காலத்திற்றானும், வணிகர்கள் பீலிகொள்ளுதற் பொருட்டுச் சேரநாட்டுக்குச் செல்கின்றார்களனெற்கு ஆதாரம் யாது? யாங்குளது? புராதன காலத்தும் அவ்வாறேசென்றுகொண்டிருந்தன ரென்பதற்குச் சான்றுயாது? நண்பரவர்கள் சொல் மட்டுங்கொண்டு இவ்விஷயம் நிச்சயிக்கற் பாலதன்று அவர்கள் வலிந்துகொண்ட பொருளொன்றினின்றும் பிறந்த விஷயமாதலாலே இதனாராய்ச்சியிப்பொழுது இன்றியமையாததாகத் தோன்றவில்லை. ஆதாரங் காட்டும் பொறுப்பும் அவர்கள் பாலதேயாம். ஆதாரத்தால் ஸ்தாபிக்கப்பெறாத இக்கூற்று அவர்களுக்குச் சிறிதுந்துணை செய்வதன்றாம்.

இதுவரை நிகழ்ந்த ஆராய்ச்சியானே, பழனங்களில் மஞ்ஞை யுளதாகச் சோணாடு கூறப்பட்டுளதென்பது மறுக்கவொண்ணாத எடுத்துக் காட்டுகளால் நிலையுறுத்தப்பட்டது; 'நெற்சூட்டுடனே திரட்டும் பீலி' யென்றமையானே பீலிகளைத்தனியே தொகுத்துவைக்கின்றமை பெறப்படாதென்பதும், அதுவே பொருளெனக்கொண்ட விடத்தும் அவ்வாறு தொகுக்கும் வழக்குச் சேரநாடொன்றின் கண்ணேயே யுளதென்பதற்குத்தக்க ஆதாரம் நண்பரவர்களால் தரப்படவில்லை யென்பதும், சோணாட்டினு மயில்களுண்மையின் ஆண்டும் அவ்வழக்குஇருந்ததாகல் வேண்டுமென்பதும் விளக்கிக்காட்டப்பட்டன. ஆகவே 'பழன மஞ்ஞை யுகுத்த பீலி-கழனியுழவர் சூட்டொடு தொகுக்கும்' என்ற அடைமொழிகளாற் குறிக்கப்பட்டது சேரநாடேயெனத் துணிதல் பொருத்தமுடைத்தன்று; சோணாட்டிற்கும் அவை பொருந்துவனவாம். கொழுவியமீனும் விளைந்தகள்ளும் சேரநாடொன்றற்கே யுரியனவுமல்ல. மலங்கு, வாளைமுதலியனவும் (புறம்-61) விளையல் வெங்கள்ளும் (புறம் 212) சோணாட்டினு முளவாகக் கூறப்படுகின்றன. ஆதலால்‧நாட்டிற்கு விசேஷணமாயமைந்த தொடரின் பொருளால் சேரநாடே கருதப்பட்டதென்று துணிதல் ஏற்புடையதன்று; அப்பொருள் சோணாட்டிற்கும் ஒத்தவுரிமையுடையதாகும்.

b. இனி, மேல்வியவகரித்த விசேஷணத்தொடரிற் "றோன்றும் சுவை மகிழ்ச்சியேயாம்" என்றும் 'இது இன்பவடிவாயுள்ளது' என்றும் 'நோயிலனாகிப் பெயர்கதில்லம்ம என்பதிற்றோன்றும் சுவை அச்சமேயாம்' என்றும் 'இது துன்பவடிவாயுள்ள' தென்றும் 'இங்ஙனம் மாறுபட்ட சுவைகளுக்கு ஏககாலத்தில் ஒருபொருள் நிமித்தமாக மாட்டாதாதலால் நாடுகிழவோன் என்றது இங்கு அஞ்சுதற்கு நிமித்தமாகிய சோழனைக்குறியாது மகிழ்தற்கு நிமித்தமாகிய சேரனையே குறிக்குமெனவறிக' என்றும் மாணவ நண்பர் வாதிப்பாராயினர்.

முதலாவது, 'பழனமஞ்ஞையுகுத்தபீலி' யென்றுதொடங்கும் அடைமொழிகளாலே யாதானுமொருசுவை தோன்றுகிறதென்று கொள்ளுதல்கூடயாவர்க்கும் ஒத்த வொருமுடிபன்றாம். அங்ஙனமொரு சுவை தோன்றுகிறதெனக் கொண்டவிடத்தும அது நண்பரவர்கள் கருதிய 'மகிழ்ச்சி' யாகுமா வென்பது ஆராயத்தக்கது. 'மகிழ்ச்சியெனினும் உவகை யெனினும் ஒக்கு' மென்றார் அச்சிட்ட தொல்காப்பியவுரைகாரர். இச்சுவை தோன்றுமாறெங்ஙனமென்று நண்பர்காட்டாது போயினமையின் கருத்து யாதென்பது அறிதற்கரிதாயிருக்கின்றது. மயிற்பீலிகளையுழவர் நெற்சூட்டுடன் தொகுக்குந் தொழிலினையும், கொழுவியமீனையும் விளைந்த கள்ளையும் விழுநீர் வேலியையுமுடைய நாட்டை யுடையோன் என்று சொல்லுவதன்கண் சுவைதான் எங்கே இருக்கிறது? அதன்மேலும் உவகைச்சுவைக் குறிப்பு யாண்டுளது? இச்சுவைக்கு ஏதுவாகிய பொருள்தான் யாது? இவ்வினை விஷயங்களைச் சுருக்கமாகவேனும் ஆராய்ந்த பின்னன்றே உவகைச்சுவை யுளதென்று அவர்கள் துணிதல் வேண்டும்? அங்ஙனம் ஆராயப்புகாது 'பழனமஞ்ஞை......நாடுகிழவோன்' என்பதிற்றோன்றுஞ் சுவைமகிழ்ச்சியேயாம் என்றுவாளா கூறிவிடுதல் சிறிதும் வன்மையுடையதாகமாட்டாது. இத்தொடர் வாசிப்போரது மனத்தில் உவகைச்சுவை விளைக்கும் ஆற்றல் ஒரு சிறிதும் உடையதன்றாம்.

அன்றியும் 'செல்வம் புலனே புணர்வு விளையாட்டு' என்ற நான்கனுள் ஒன்றினைப் பொருளாகக்கொண்டு உவகைச்சுவை தோன்றுமென்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். நண்பரவர்கள் கூறியாங்கு பழனமஞ்ஞை யென்ற தொடரில் உவகைதோன்றுவதுண்மையாயின், அந்நான்கனுள் எதுபற்றி யிச்சுவைபிறந்தது? புலன், புணர்வு, விளையாட்டு இம்மூன்றினடியாகவும் அது பிறக்கவில்லை யென்பது எளிதிலுணரத்தகும். 'செல்வம் என்பது நுகர்ச்சி' யென்றார் உரைகாரர். உவகையின் காரணமான செல்வத்தினின்றும் வேறு பிரித்து, 'உடைமை' 'இன்புறல்' எனப் பிறவிரண்டுளவாகத் தொல்காப்பியர் கூறுதலினாலே, அவர்க்கும் 'நுகர்ச்சி' யென்றலே கருத்தென்றறியப்படும். இச் 'செல்வநுகர்ச்சி' இத்தொடருள் யாண்டுங் கூறப்படவில்லை. ஆதலாற் செல்வம் பொருளாகப்பிறந்த வுவகையுமன்றாம். ஆகவே உவகைச்சுவை பிறத்தற்குரிய நான்கு பொருளும் ஈண்டின்மையால், இத் 'தொடரில் தோன்றுஞ் சுவை மகிழ்ச்சியேயாம்' எனப்பிரிநிலையேகாரம் பெய்து கூறியதற்கு நேர்மாறாக அச்சுவை நிச்சயமாக ஆண்டில்லை யென்பது தெளியப்படுவதாகும்.

இஃதிங்ஙனமாக, 'நோயிலனாகிப் பெயர்கதிலம்ம' என்ற தொடரில் அச்சச்சுவையே தோன்றுவதாகுமென நிச்சயித்துப் பின்னர்விதியொன்று தந்து அவ்விதியொடு முரணுகின்றது மேற்கூறிய சுவைகளி

னமைப்பு என்று நண்பரவர்கள் கூறுகின்றார்கள். 'மாறுபட்ட சுவைகளுக்கு ஏககாலத்தில் ஒருபொருள் நிமித்தமாகமாட்டாது' என்பதுதான் அவ்விதி. இவ்விதி யாண்டுளது என்றறிதற்கு அவாவுடையேன். ஆனால் அதனையறிந்த பின்னரே இவ்விஷயத்தை ஆராயவேண்டுமென்பதில்லை. இவ்விதி தமிழ்நூல் வழக்கொடு மாறுபடுகின்றது என்று காட்டக்கூடுமாயின், அதுவே நண்பரவர்கள் சுவை விஷயமாகக் கூறியுள்ளன பொருந்தாவெனத் துணிதற்குப் போதியதாகும்.

'ஆடியலழற்குட்டத்து' என்று தொடங்கும் 229-வது புறப்பாட்டினைச் சங்கநூற் பயிற்சியுடையார் யாவரும் அறிவர். இச்செய்யுள் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை இன்ன நாளிற்றுஞ்சுமென அஞ்சி, அவன் துஞ்சிய விடத்துக் கூடலூர் கிழார் இரங்கிப் பாடியது. இதனுள்,

> 'பறையிசையருவிநன்னாட்டுப்பொருநன்
> நோயிலனாயினன்றுமற்றில்லென
> அழிந்தநெஞ்சமடியுளம்பரப்ப
> அஞ்சினம்'

எனப்பயின்றுவந்துளது. பழனமஞ்ஞை........நாடுகிழவோன்' என்பதில் நாடு விசேடிக்கப்படுதல் போலவே 'பறையிசையருவிநன்னாடு' என ஈண்டும் நாடுவிசேடிக்கப்படுகின்றது; நாடுகிழவோன் என வந்திருத்தல் போலவே நாட்டுப்பொருநன் என்று இங்குவந்திருக்கின்றது. ஆதலால் 'பழனமஞ்ஞை......நாடு கிழவோன்' என்ற வரிகளிற்றோன்றுவதாக எச்சுவையைக் கொள்ளுகிறார்களோ அச்சுவையினையேதான் 'பறையிசையருவி நன்னாட்டுப் பொருநன்' என்றதன் கண்ணும் நண்பரவர்கள் கொள்ளுதல்வேண்டும். எனவே அவர்களது கருத்தில் இவ்வரி மகிழ்ச்சிச்சுவையே பயப்பதாகல் வேண்டும். 'நோயிலனாயினன்றுமற்றில்லென...அஞ்சினம்' என்றவரிகளில் அச்சச்சுவையே தோன்றுவதாகும். மேற்காட்டிய இன்பவடிவான மகிழ்ச்சிச்சுவைக்கும், அதனோடு மாறுபட்ட துன்பவடிவான அச்சச் சுவைக்கும் ஏககாலத்தில் ஒருவனே நிமித்தமாகின்றானென்பது செய்யுளை வாசித்த மாத்திரத்தானறியப்படும்.





இதுபோன்றே, வேள்பாரிதுஞ்சியவழி அவனது மகளிரைப் பார்ப் பார்ப்படுத்து வடக்கிருந்த கபிலர்பாடிய கையறுநிலைச் செய்யுளில் (புறம்-236), அவலச்சுவைக்கு நிமித்தமாகிய வேள்பாரிதானே,

> 'கலையுணக்கிழிந்தமுழவுமருள்பெரும்பழஞ்
> சிலைகெழுகுறவர்க்கல்குமிசைவாகு
> மலைகெழுநாட'

என விளிக்கப்படுகின்றான். இவ்வரிகளும் 'பழனமஞ்ஞை......நாடு கிழவோன்' என்ற தொடரினைப்போன்றே அமைந்திருத்தலால், அவற்றில் தோன்றுஞ் சுவையும் மகிழ்ச்சியேயென நண்பரவர்கள் கொள்ளுவார்கள். ஆகவே ஈண்டும் அவர்கள் தந்தவிதி நிலைபெறாமை காணப்படும்.

நற்றிணையில்,

> 'என்னைக்கொண்டுதன்கண்ணொற்றியுந்
> தன்னைக்கொண்டெனன்னுதல்நீவியு
> மன்னைபோலவினியகூறியுங்
> கள்வர்போலக்கொடியன்மாதோ
> மணியெனவிழிதருமருவிப்பொன்னென
> வேங்கைதாயவோங்குமலையடுக்கத்து
> ஆடுகழைநிவந்தபைங்கண்மூங்கில்
> ஓடுமழைகிழிக்குஞ்சென்னிக்
> கோடுயர்பிறங்கன்மலைகிழவோனே'

என்றது 28-வது செய்யுளாகக் காணப்படுகின்றது. இங்கே 'மணி......கிழவோன்' என்றவரிகளிற் றோன்றுஞ்சுவை மகிழ்ச்சியென நண்பரவர்களாற் கொள்ளப்படும். இவற்றிற்கு முன்வரியிற்றோன்றுஞ்சுவை அழுகையாகும். இங்ஙனம் மாறுபட்ட விருசுவைகள் ஏககாலத்தில் ஒரேபொருள் நிமித்தமாக வந்துள்ளனவாம்.

மேற்காட்டிய வுதாரணங்கள்போன்று எத்தனையோ தருதல் கூடும். ஆகவே நண்பரவர்கள் கொடுத்துள்ளவிதி தமிழ்நூல் வழக்கிற்கு முற்றும் விரோதமாவதென்பது நன்குதெளியப்படும். அன்றியும் சங்ககாலப் பேரிலக்கணமாகிய தொல்காப்பியத்தில் அது காணப்

படாததாகும். ஆதலினாலே இவ்விதியின் பிரயோகத்தால் 'நாடுகிழவோன்' என்பது சோழனன்றெனத் துணிதல் கூடாதாகும்.

c. 'பழனமஞ்ஞை......நாடுகிழவோனே' என்ற தொடரினின்றும் இன்னுமொரு நியாயம் எடுக்கப்படுகின்றது. அத்தொடர் துதிவாக்கியமாயமைந்துள்ளதென்றும், அக்காரணத்தானே, அது பயன்பெறுதற்குரிய சோழனைக்குறியாது பயனளித்தற்குரிய சேரனைக்குறித்தல் வேண்டுமென்றும் நண்பரவர்கள் கூறுகின்றார்கள். இங்கே துதிவாக்கியமென்று அவர்கள் சொல்வது புகழ்ச்சிமொழியையாம். முதலாவதாக இவ்வரிகள் துதிவாக்கியமாகுமா என்ற வாசங்கையுண்டாகின்றது. ஒருவனது குணம் செயல்முதலியன வியந்து கூறப்படாதவிடத்துப் புகழ்ச்சிதான் எவ்வாறு பெறப்படும்? நாட்டின் வளத்தை வருணித்து இத்தகைய நாட்டினையுடையோன் என்று ஒருபோரசனைக் குறிப்பதாயின், அஃதொரு புகழ்ச்சியாகுமா? ஆதலில்லையென்றே நினைக்கின்றேன். எனவே இத்தொடரினைத் துதிவாக்கியமென்றல் பொருந்தாதாகும்.

இனி இத்தொடர் புகழ்ந்துரைக்கிறதென்றே கொள்ளினும், நண்பரவர்கள் கூறுவன ஏலுமாறில்லை. 'புலிநிறக்கவசம்பூம் பொறிசிதையஎய்கணைகிழித்தபகட்டெழின்மார்பின்-மறலியன்ன களிற்றுமிசையோனே' யென்ற அடிகள் பயன்பெறுதற்குரிய சோழனைக் குறிக்கின்றன. போரின்கண்ணேர்ந்த விழுப்புண் நிரம்பிய பரந்துயர்ந்தமார்பினன் என்ற கருத்துப்போதரும் பகுதியே ஈண்டு ஆவசியகமாவது. 'விழுப்புண்' என்றது நண்பரவர்களே ஒப்புக்கொண்டதாகும். முடமோசியாரிடம் சேரன்வாய்விட்டு வினவினன் எனக்கொண்டவிடத்தும், அங்ஙனம் வினாவாக வெழுந்த சொற்கள் 'இவன்யார்' என்ற இரண்டேயன்றிப் பிறவாகா. இதனுண்மை செய்யுட்போக்கினால் நன்கு விளங்கும். உரைகாரர்க்கும் இதுவே கருத்தென்பது பின்னர்க்காட்டுகின்றேன். ஆகவே, இத்தொடர் முழுதும் புலவர்தாமே சேரனுக்கு எடுத்துக் கூறியதாகும் என்பதில் சந்தேகமில்லை. 'புறப்புண்' பெறுதல் இழிவாகக் கருதப்பட்டதேயன்றி 'விழுப்புண்'ணினை ஆடவரும் அரசரும் விரும்பிப்பெற்றுத் தமது ஆண்மைக்கோ ரணிகலமாகப்போற்றி வந்தனரென்பது பண்டைத்தமிழ் நூல்களால் நன்கறியப்படுவதாகும். இங்ஙனமாக, சோழனது பேராண்மையினையே இவ்விழுப்புண் விளக்குவதாயிற்று. பயன்பெறுதற்குரிய சோழனது பேராண்மையினையிவ்வாறு புகழ்ந்து பயனளித்தற்குரிய சேரனிடம் கூறுதல் தகுமெனின், அச்சோழனை, 'பீலிகளை நெற்சூட்டுடன் தொகுக்குந்தொழிலினையும் கொழுவியமீனையும் விளைந்த கள்ளையுமுடைய விழுநீர்வேலிநாட்டையுடையோன்' என்று சேரன்முன்னிலையிற் சொல்லுதல் தகுதியிற் சிறிதுங் குன்றுமாறில்லை.



பயனளித்தற் குரியோனுக்குமுன் அதுபெறுதற்குரியோனைச் சிறப்பித்துக் கூறுதல் பிழையென நண்பரவர்கள் கருதுவதுபோற்றோன்றுகின்றது. 201-வது புறப்பாட்டினைச் சிறிது நோக்கும்படி அவர்களைப் பிரார்த்திக்கிறேன். அச்செய்யுள் பாரிமகளிரை இருங்கோவேளிடங்கொண்டு சென்ற கபிலராற் பாடப்பெற்றது. அங்கே பயன்பெறுதற்குரியோராகிய பாரிமகளிர்,

> 'ஊருடனிரவலர்க்கருளித்தேருடன்
> முல்லைக்கீத்தசெல்லாநல்லிசைப்
> படுமணியானைப்பறம்பிற்கோமான்
> நெடுமாப்பாரிமகளிர்'

என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்றனர். இங்கே அம்மகளிரது குலப்பெருமை நன்குவிளங்க எடுத்துரைக்கப்படுதலினாலே இதனைத் துதிவாக்கியமென்று கோடலில் யாதோரிழுக்கு மின்றாம். இவ்வாறு புகழ்ந்து சொல்லப்படுவதன் காரணமாகப் பாரிமகளிர் பயன்பெறுதற்குரியோரன்றென முடிவுகாணுதல் எவ்வகையானும் ஏற்புடையதாமாறில்லை. பயன் பெறுந்தகுதியை யெடுத்துக்காட்டுதற் பொருட்டுப் பயன் பெறநிற்போரது சிறப்பினை விளங்கக்கூறுதல் பெருவழக்காகும். இங்ஙனமிருப்பப் பயனளித்தற்குரியோனுக்கு முன் பயனடைதற்குரியோனைப் புகழ்ந்து கூறுவது தவறெனக்கருதுதல் முற்றும் பொருந்தாதாகும். ஆதலால் 'பழனமஞ்ஞை.........நாடுகிழவோன்' என்பது துதிவாக்கியமாதல்பற்றிப் பயனளித்தற்குரிய சேரனைக்குறிப்பதன்றிப் பயன் பெறுதற்குரிய சோழனைக் குறியாதென்று நண்பரவர்கள் கூறுவது சிறிதும் அங்கீகரிக்கத்தக்கதன்று.

S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.,

# "தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்."

சார்பெழுத்து வகையில் நன்னூலானது தொல்காப்பியத்தோடு மாறுபடவில்லை என்ற ஒருசாரார் கொள்கையை மேற்கொண்ட சிலர் ரச்சமடிக்கச்செலவும் பெறாதுபோயினர். அவர் கூற்றை உலகங்கொள்ளாதெனினும் புல்லமை நிரம்பாத பலரும் மதிமயங்கி அதனையே உண்மையெனக்கொண்டு இடர்ப்படுவர். ஆதலின் உண்மைப்பொருளை ஆராய்ந்து விளக்குவது எமது கடமையாயிற்று. இது கருதியே முன்னர் விளக்கப்பட்டவைகளைப் பின்னரும் விளக்கும்படி நேர்ந்தது.

ஆசிரியர் 'குற்றியலிகரங் குற்றியலுகரமாய்தமென்ற முப்பாற் புள்ளியும்" சார்பெழுத்தென்றார், என்னை? அவையெல்லாம் "எழுத்தோரன்ன" என்றமைக்கேற்ப யாண்டும் பிரிக்கப்பெறாமலும் முதலெழுத்திற்குரிய அமைதியுறாமலும் வேறாகி இருத்தலின் என்பது.

இனிப் பின்னூல் செய்தாருள் ஒருவர் ஆய்தத்தை முதலெழுத்தோடுகூட்டி முதலெழுத்துக்கண் முப்பத்தொன்றென்று நாட்டினார். அவர்கொள்கை பிழைபடுவது கருதிய அந்நூலுரைகாரர் அம்முப்பத்தோரெழுத்துக்களையும் முதலிடைகடையெனப் பகுத்தமைக்கேற்ப ஒருமேற்கோளுங் காட்டினார். அவ்விருவர் கொள்கைகளும் குற்றம், என்னை? உடன்மேலுயிர்வந்தொன்றுதல்போல அவ்வாய்தத்தின்மேல் உயிர்வந் தொன்றாமையானும், உயிர்க்கும் மெய்க்கும் இடையே சார்த்தப்படா விடத்து அது மொழிக்குறுப்பாகாமையானும், அஃது உயிரையும் மெய்யையும் போலப் பிரதானமாகாமையானும் என்பது.

இவர்கள் கொள்கைக்கு மாறாக நன்னூலார் "உயிர்மெய்யாய்த முயிரள பொற்றள பஃகிய இ உ ஐ ஔ மஃகான் றனிநிலை பத்துஞ் சார்பெழுத்தாகும்" என்றார்.



இதனுள் அவர் உயிர்மெய்யைச் சார்பின்பாற் படுத்தியதுங் குற்றம், என்னை? அது வேண்டுழியெல்லாம் பிரிக்கப்பட்டு இரண்டெழுத்தாகக் கொள்ளப்படுவதனானும், அவ்வுயிர்மெய்யெழுத்தை அவரே "இடையனகெடும்" என்றமையானும், ஆசிரியர் நச்சினார்க்கினியரும் வேண்டுழி உயிர்மெய்யை (ஆலிலை என்பதனை ஆல் இலை என்பனபோல)ப் பிரித்துக்கொள்ளலாம் என்றமையானும் பிறவாற்றானும் என்பது.

அவர் ஆய்தக் குறுக்கத்தினைச் சார்பின்பாற் படுத்தியதுங் குற்றம், என்னை? அது சார்பாலுதித்தமையானும், முதலெழுத்தினின்றுந் தோன்றிய உயிர்மெய்யை முதலெழுத்தோடு பெய்துவையாமையானும் என்பது.

அவர் தம் கொள்கைக்கேற்ப அவ்வாய்தக்குறுக்கத்தைச் சார்பின் சார்பாகப் பகுத்துக் கூறாமையுங் குற்றம்.

அவர் முதலெழுத்தினின்றும் பிரிந்தவற்றோடு ஆய்தத்தினையும் ஒருபாற்படுத்தியதுங் குற்றம். ஆய்தக்குறுக்கங்கூறியவர் பிறகுறுக்கங்களை எடுத்துக் கூறாமையுங் குற்றம்.

அவர் செய்யுளியலை நோக்கிச் சார்பெழுத்துக்கள் வகுத்தமைக்கேற்ப ஆண்டலகுபெறாத எழுத்துக்களை எல்லாம் தனித்தனி வகுத்துக் கூறாமையுங் குற்றம்.

அவர் அளபெடையைச் சார்பெழுத் தென்றதுங் குற்றம், என்னை? அரைமாத்திரை அளவுபெற்றவை ஒருமாத்திரையாகவும், ஒருமாத்திரை அளவுபெற்றவை இரண்டு மாத்திரையாகி மூன்றுமாத்திரையாகவும் இரண்டு மாத்திரை அளவுபெற்றவை மூன்றுமாத்திரையாகவும் அளவு பெற்றுவந்த எழுத்துக்களைத் தனித்தனி எழுத்துக்களாகக்கொண்டவர் அவ்வாறே படிப்படியாக அளவு பல்கிவருதலை எழுத்துக்களாகக் கொள்ளாமையின் என்பது.

அவர் "குற்றுயிரளபினீறும்" என்றதுங் குற்றம், என்னை? அளபெடையை இரண்டு எழுத்துக்களாகப் பிரிக்க நேரிடுதலானும், அளபெடுத்தமையைக் குறித்தற்காக எழுதிய குறியை எழுத்தென்றல்

பொருந்தாமையானும், "இனக்குறில்குறியே" எனவும் "மிகலே யவற்றின் குறியாம் வேறே" எனவும் அவரே கூறினமையானும், அக்குறியை வீணே வரிவடிவெழுத்தென்றமையானும் ஒன்றற்கு வரிவடிவாகவும் பிறவற்றிற்குப் பிறவாகவும் பொருடருமாறு சூத்திரஞ்செய்யாமையானும் "அதன்வடிவொழித்திருவயிற் பெயரொடு" என்ற தங்கூற்றுக் கொவ்வாமையானும் பிறவாற்றானும் என்பது.

அவர் "தற்சுட்டளபொழி ஐம்மூவழியு நையும் ஒளவும் முதலற்றாகும்" என்றதங் குற்றம், என்னை? ஐ ஔக்கள் மொழியிடத்தளபெழுங்கால் தத்தமக்கியைந்த குறைந்த அளவோடு ஏற்றபெற்றி அளவு பெற்றுவருமென்பது போதரப் பொருடருவதனானும், அக்கருத்து "மூன்றுயிரளபு" என்றதனான் அவ்வளவிற்கு மிகுந்துவருதலைத் தழுவினாற்போலக் குறைந்துவருதலையுந் தழுவிக்கொள்ளக்கிடத்தலானும் பிறவாற்றானும் என்பது.

அவர் "பத்துஞ் சார்பெழுத்தாகும்" என்றதங் குற்றம், என்னை? பத்தும் வகையாதலானும், பின்னர்ச் "சார்பெழுத்துறவிரி" எனக் கூறுதலானும் என்பது.

இக்காட்டியவற்றைக்கொண்டு அவர் கூறிய சார்பெழுத்தின் விரியும் பொருந்தாமையுணர்க.

இவற்றானும் பிறவாற்றானும் சார்ந்து வரன் மரபினவாம் எழுத்துக்கள் மூன்றே எனவும் பிறகூற்றுக்கள் பொருந்தா எனவும் கண்டுகொள்க.

இங்ஙனம்

K. S. நவநீதகிருஷ்ண பாரதி,
தலைமைத் தமிழ்ப்பண்டிதன்,
ஸ்ரீராமநாத வித்யாலயம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

15-11-19.

கடவுள்துணை.

# ஐயவினாத்தொடர்.

திங்கள் சூடிய செஞ்சடைத் தேவே
எனஅடி யேன்போற் றின்னருட் புலவீர்,

(க) நூலாக்கலிங்கம் (பதிற்று-௬௨-௨௧.) இத்தொடருக்குஅதன் உரையாசிரியர் "ஒருவர் நூலா நூலாகிய பட்டுநூல் முதலாயவற்றாற் செய்த கலிங்கமென்றவாறு." என உரை எழுதியுள்ளார். இங்கே அடியேனது ஆசிரியர் அவர்கள் தங்களுடைய மாணவர்களுள் ஒருவர் அனுப்பியிருந்த ஒருபட்டை அடியேனுக்குக்காட்டி"இது நூலாமலும், நெய்யாமலும் ஆயது. எங்ஙனமெனில், நூல்நூற்கும் தருணத்திலுள்ள பலபட்டுப்பூச்சிகளை, மழமழப்பானதும், சமமானதும், வேண்டும் அளவோடு கூடியதும், ஆகிய ஓர் இடத்தை அமைத்து அவ்விடத்தைவிட்டு அப்பட்டுப்பூச்சிகள் வேறுஇடத்திற்குச் செல்லாவாறு தகைத்து அதனுள் சுயேச்சையாய்த்திரியும்படி விட்டுவைத்தல் வேண்டும். அக்கால் அவை அங்குமிங்கும் அதனுள் ஓடிக்கொண்டேயிருக்கும். அங்ஙனம், ஓடுங்கால் அவற்றினின்றும் இழிந்தபட்டு அக்குறித்த அளவில் முற்றும் பரவிவிடுகிறது. பரவியபின்னர்ப் பூச்சிகளைப் புறம்போக்கிக் குறித்தகாலத்தில் அங்கிழிந்திருந்தபட்டை ஒருபட்டாடையாகப் பெயர்த்தெடுத்துவிடலாம். அங்ஙனம் ஆயதே இப்பட்டு சங்கநூல்களிலே நூலாக்கலிங்கம் என்று வருகின்றதல்லவா? அப்பெயர் இத்தகைய பட்டுக்களைச் சுட்டியேஎழுந்திருக்கலாம் என்று எண்ணுகிறேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். இங்கே அடியேனது ஐயப்பாடுவெளிப்படை.

(உ) சீவகசிந்தாமணியிலே (௩௰௧) 'தீண்டுவந்து' என்றதொடருக்கு விசேஷ உரையிலே ஆசிரியர், எச்சகத்தோரும் மெச்சும் புகழ்சேர், உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் "கண்டேன் சீதையை என்றாற்போல" என்று கூறியுள்ளார். இக்காட்டிய 'கண்டேன் சீதையை' என்றதொடர் இராமாவதாரச் சுந்தரகாண்டத்திலுள்ள "கண்டனென்கற்பினுக்கணியை" என்றபகுதிக்குரிய கருத்தையே தழு

வியிருக்குமா? அங்ஙனமாயின் ஆசிரியரைக் கம்பநாடருக்குப் பிற்பட்ட காலத்தவரென்று ஒருதலையாகக் கூறலாமா? இங்ஙனங் கூறுவதிற் சிலபெரியோர் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கம்பநாடருக்குப் பிற்பட்டவராயிருப்பின் இராமாவதாரத்திற்கு உரையெழுதக் காலமில்லாதிருப்பினும் சில பலபாடல்களைத் தமது பரந்த உரையில் ஆங்காங்கு உதாரணமாகவேனும் காட்டாதொழியார். அங்ஙனம் யாண்டுமில்லையாதலின் கம்பநாடருக்கு முற்பட்டவராகத்தான் இருத்தல்வேண்டும் என்கின்றனரே. உறுதியாது?

(கூ) கொல்லிப்பாவை சேலத்திற்கும் ஈரோட்டிற்கும் இடையே ஒரு குறித்த இடத்திலே பொன்மான்போலும் ஓருருவம் பலர்க்குந் தோன்றித் தோன்றி மறைகின்றதே. அது சங்கநூல்களிலே பயின்றுவருங் கொல்லிப்பாவையாமா?

கும்பகோணம் }<br>23—11—19. } வேங்கடராம ஐயன்,<br>தண்டமிழ்த் தொண்டன்.

---

உ

சிவமயம்.

# நூலாசிரியர்.

---

யாப்பருங்கல நூலாசிரியரும், யாப்பருங்கலக் காரிகை நூலாசிரியரும் ஒருவரே என்றும், அவர்பெயர் அமிதசாகரர் என்றும் செந்தமிழ் கஎ-ந் தொகுதியிலே-கக-ம் பகுதியிலே எழுதப்பட்டிருக்கும் கடிதம் கண்டாம். பண்டித சிகாமணி-ஸ்ரீமாந் தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் வித்துவசிரோமணி ஸ்ரீ அ. குமாரசுவாமிப்புலவருடைய "யாப்பருங்கலக்காரிகைப் புத்துரையின் முகவுரையிலே யாப்பருங்கலப்பாயிரத்தின் ஒருபாகத்தை எடுத்துக் கூறிப்பின் யாப்பருங்கலத்து "விரவியு மருவியும் வேறுமொரோவழி—மருவியும் பெறுது வழங்கு மன்னவையே" என்னுஞ் சீரோத்துச் சூத்திரத்துரையுள் "இந்நூலுடையாரும் மாஞ்சீர்கலியுட்புகா" என்னும் புறனடையானும் பிறவாற்றானும்....................விளங்கக் கூறினார்" என்பதனால் யாப்பருங்கலம் செய்தாரே காரிகை செய்தவரும் என்பது பெறுதும் என்பதுங் கூறினர்.



இருவரும் ஒருவராயின் யாப்பருங்கலம் என்னும் நூலொன்றனோடமையாது யாப்பருங்கலக்காரிகை என் ஓரே விடயத்தில் வேறுமொரு நூல்செய்த காரணம்யாது? குமாரசுவாமிப்புலவர் உபக்கிரமணிகையிலே "யாப்பருங்கலக்காரிகை என்பது யாப்பருங்கலம் என்னும் நூலுக்கு அங்கமாகக் காரிகைப்பாட்டில் இயற்றப்பட்டநூல்" என்றது என்னை? யாப்பருங்கலத்துக்கு காரிகை எதனால் அங்கமாயிற்று.

குமாரசுவாமிப் புலவரவர்கள் தாமியற்றிய தமிழ்ப்புலவர் சரித்திரத்தில் உபக்கிரமணிகையிலே கஉ-ம் பக்கத்திலே 'யாப்பருங்கலகாரரைப்பாயிரகாரர் "அளப்பருங் கடற்பெயரருந் தவத்தோனே" என்பர் சிலர் அளப்பருங் கடற்பெயரோன் என்றது அமிர்தசாகரரை என்பர். சிலர் ரகாரம் நீக்கி அமித சாகரரை என்பர். அமிதம் அளவின்மை என்பதுங் கூறுவர்' என்று அமிதசாகரர் என்னும் பெயர் வேறுபாட்டின் கொள்கையையுங் காட்டினர். அமிதசாகர ரென்பதே அவர் பெயராயின் குணசாகரரும் பிறரும் அமுதசாகரர் என்றது என்னை? "அளப்பருங் கடற்பெயரருந்தவத்தோனே" என்பதில் கடற்பெயர் என்பது பாற்கடலை யுணர்த்தி அமுதசாகரம் என்பதைப் புலப்படுத்தும் எனவும் அளப்பரும் என்பது அதன் விசேடணம் எனவுங் கொண்டால் என்னை?

பாற்கடல் எனப்பொருள்படும் அமுதசாகரப் பெயரன்றி அமிதசாகரர் என்பதும் வழக்காறுகுமா? விதான மாலைச்சிறப்புப்பாயிரத்திலே "பாற்கடலான் பயந்த நாராயணன்" என்புழி "பாற்கடலான்" என்பது அமுதசாகரன் என்னும் நாமத்தை அன்றோ? கடற்பெயரோன் என்றதனால் சாகரன் என்னும் பாதி நாமம் பெறப்பட்டதன்றி அமுதசாகரன் என்னும் முழுநாமமும் பெறப்பட இல்லையே எனில் பாதி நாமத்தால் முழுநாமம் பெறப்படல் இல்லையோ? சீவகசிந்தாமணியிலே "திங்கள் விரவிய பெயரினன்" எனப்புத்திசேனனையும், "கந்துநாமன்" என கந்துக்கடனையும் கூறியன முழுநாமங்கள் தாமோ?

இங்ஙனம்,<br>க. சிதம்பரநாதன்.<br>வண்ணார்பண்ணை.

---

உ

சிவகுகமயம்.

# முகவுரை.

---

திருவாரூர் இரட்டைமணிமாலை என்னும் இச்சிறு நூலானது பூமகளுக்கு இதயகமலம் போன்றதும் விராட்புருடனுக்கு மூலாதாரத் தானமாயும் சப்தவிடங்க க்ஷேத்திரங்களுள் முதன்மைபெற்றதுமான திருவாரூரின்கண் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமான்மீது அத்திருவாரூரின் கண்ணே 'என்கண் காணச்சிறப்புற்றிலகும் தமிழ்க்கிலக்காகிய வைத்தியநாத தேசிகன் இலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்' என்று ஈசான தேசிகரால் புகழப்பட்ட இலக்கணவிளக்கமுடையாரைத் தமக்கு ஆறுவது தலைமுறையினராகவுடையவராகிய சதாசிவதேசிகரால் இயற்றப்பட்டது. இவர்கள் இற்றைக்கு 33-வருடங்கட்கு முன்னர் வியவருடத்தில் தமது அறுபத்து நான்காவது வயதில் வியோகமானார்கள் தமது பிதா முதலாயினாரிடத்துக் கல்விபயின்றது மாத்திரமன்றி இயற்றமிழாசிரியரான திருத்தணிகை சரவணப்பெருமாளையர் முதலாயினாரிடம் கல்விகற்றவர்கள் நியாயவாத அலுவலிலமர்ந்திருந்தார்கள். இவர்கள் தம் கையாலெழுதிய வேடுகளுக்கிடையில் இந்நூலும் காணப்பட்டமையின் அதனை வெளியிடத் துணிந்தேன் என்னாலேற்படும் குற்றங்குறைகளிருப்பின் பொறுத்தருளும்படி பெரியாரை வேண்டுகிறேன்.

இலக்கணவிளக்க பரம்பரை

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

உ

சிவமயம்.

# திருவாரூர் இரட்டைமணிமாலை.

## காப்பு—குறள் வெண்பா.

சீராரூர்த் தியாகர்க் கிரட்டைமணி மாலைசெய்யக்
காரானை மாமுகத்தோன் காப்பு.

## நூல்.

ஆழித்தேர்த் தியாக ரவனி யடைவதன்முன்
வாழிபெற வறுவர் வந்தடைந்தார்—ஏழுபேர்
தம்மிற் கமலைத் தயாபரனை மேலாக
அம்மகொண் டான்முசுகுந் தன். (க)

முசுகுந்தனென்பவன் முன்னொரு காலத்தில் மூவுலகு
மிசைசெலு மாறிங் கிருந்தர சாண்டவ னிந்திரற்கோர்
வசையைத் தவிர்த்திக் கமலையிற் றியாகரை வைகுவித்தான்
பசியபொற் கூவிளப் பூசையினால் வந்த பான்மையினே. (உ)

நேசத் தொடுகமலை த்யாகே சனைநிதமும்
பூசிப்பை நெஞ்சே புனிதமுற்று—பாசமற்றுச்
சாரூப முற்றுத் தனிவீ டடைவை திண்ணம்
ஆரூர்ப் பிறந்தவர்போ லாங்கு. (ங)

ஆங்கென்று மீங்கென்றும் பல்பதி தேடி யலைய னெஞ்சே
கோங்கென்று மாதர் குவிதனம் போல மிளிருமொரு
தீங்கென்றும் வாராச் செழுங்க மலைப்பதித் தியாகர்பதந்
தாங்கென்று முன்கரத் தாலுலகேழனைத் தாங்கிடுமே. (ச)

இடுக மனமே யிரப்பாருக் கென்றும்
விடுகநீ வீணர் தொடர்பை—உடுகவினும்
விண்போல் மிளிரும் விதானத்தின் கீழ்த்தியாகர்
தண்பாத தாமரையைத் தாழ். (ரு)

தாழை மடலினுட் டாதி னடையை வெண்சோறெனவே
கூழைக் குரண்டங்கள் கொத்துங் கயத்தின் குளிர்கரைவாய்
பீழை மகளிரைக் காத்தினை யாதென் பிரியநெஞ்சே
ஊழை விலக்குநம் தியாகே சரைப்பணி யுத்தமமே. (௬)

உத்தம நற்பதிநந் தியாகருறை கமலை
முத்தித்தல மூன்றில் முற்றலமா—வைத்ததினால்
இத்தலத்தி லேய்ந்து பிறந்தாரை நெஞ்சேயுன்
கைத்தலத்திற் றூங்கு கனிந்து. (௭)

கனிமூன்று மென்று முதவு பலாவுங்கதலியும்விண்
ணிமூடு மாவும் நிறையப் பொலியு நறும்பொழில்சூழ்
தினிதாங் கமலைப் பதிவாழ் தியாக ரிணையடிகைக்
கினிதாகுந் தாங்குக வேழைநெஞ் சேபிழைத் தோங்குகவே. (௮)

பிழைக்கும் வழியறியாப் பேதைநெஞ்சே சொல்வேன்
பிழைக்கும் வழிகேள் பெருமை—தழைக்கும்
கமலைப் பதியாளுங் கூத்தன் தியாகன்
அமலப் பதங்காண்ப தாம். (௯)

காணத் தருவன கமலைத் தியாகர் கனகபதம்
பூணத் தருவ தணிந்து கழித்த பொலன்கழுநீர்
பேணத் தருவதப் பெம்மா னரிய பெரும்புகழ்ச்சீர்
மாணத் தருவ தவ்வூர்ப் பிறந்தா ருறவாடுவதே. (௧௦)

உறவாட வேண்டிலந்த வூர்ப்பிறத்தல் வேண்டும்
இறவாமை வேண்டி லெழிலார்—துறைவண்
கமலைத் தியாகர் கனந்தனஞ்சீ ரூர்பேர்
அமர்ந்து புகழிலஃ தாம். (௧௧)

ஆம்பலு நெய்தலுஞ் செங்கழு நீரு மலரும் பொய்கை
தாம்பல சூழுங் கமலைத் தியாகர் தமைத்தொழுவாய்
பேம்பல தீமையு மாம்பல நன்மையும் பொன்மனமே
தேம்ப லுனக்கினி வாரா துள்ளுக்கஞ் சிறந்துறுமே. (௧௨)

சிறந்தகம லாலயத்திற் றோய்ந்து செழும்பொன்
றிறந்தேர் விநாயகரைச் சேவித்—துறங்குலவு
வீதிவல மாகிவந்து வீதிவிடங் கப்பெருமாற்
பாதம்பணி வைநெஞ்சே பாங்கு. (௧௩)



பாங்கான பொய்கையும் வீதியுந் தேரும் பழுத்தழகு
நீங்காத கோவிலும் வாய்ந்த தியாகர் நிமலபதம்
தாங்காத சென்னியை யேன்படைத்தார்செழுந் தாமரையில்
தூங்காது வைகு மயனு ரிருங்கடல் சூழிடத்தே. (௧௪)

இடமார் கமலைத் தியாக ரிரங்கார்
தடமார் மலைவல்லித் தாயே—திடமோடு
செல்வா யவரிரங்கச் செய்வாய் திடமிலையேல்
சொல்வா யொருசூழ்ச்சி சூழ்ந்து. (௧௫)

சூழ்ந்து பலபல யோசனை செய்யலை தூயகொக்கைப்
போழ்ந்தொரு சேவல் மயிலொடுறச் செய்த புண்ணியச்சேய்
தாழ்ந்து நற்றுதை தியாகரை வேண்டித் தளருநமை
வாழ்ந்திடச் செய்யு மனமே கலங்கலை வாழியவே. (௧௬)

வேயிற் பிறந்து வியனாரூர் வீதியிலே
தாயாகி வந்து தனிக்கன்றைச்—சேயூரும்
தேரி லரைத்திட்டு செய்யமனு நீதிகண்ட
பேரைத் தெரித்தானைப் பேண். (௧௭)

பேணு தவிட்ட பரவை யெனும் பெயர்ப் பெண்ணிடைப்
பேணு விக்கும் படிபின் னரும்வேண் டிடமுன்னயன்மால்
காணு முடியடி யவ்விடு கண்டிடச் சுந்தரர்க்காக்
கோணுது சென்ற குரைகழற் சுன்பென் றுங் கூறுநெஞ்சே. (௧௮)

நெஞ்சகத்தே வஞ்சமிலா நேயர்க் கருள்செய்யும்
கஞ்ச மலர்மேற் கமலைவாழ்—விஞ்சுபுகழ்
ஆரூர்த் தியாக ரடிக்கமலங் கொண்டுனது
சீரூர்முடிக் கமலஞ் செய். (௧௯)

செய்யிற் சிறந்திட்ட நெல்வேலி யாயிரஞ் செங்கழுநீர்ப்
பொய்கை யைவேலி பொற்கோயிலைவேலி புனிதமலி
செய்ய கமலா லயமோ ரைவேலி செறிந்துளவாம்
வையம் புகழ வளராழித் தேருடை வள்ளலுக்கே. (௨௦)

முற்றும்.

தியாகேசனடிகளேசரணம்.

ஸ்ரீ

## வாழ்த்து.

மஹா-ராஜ-ராஜ ஸ்ரீ ராவ்பஹதூர் கே. வி. ரங்கஸ்வாமிஐயங்கார் அவர்கள்மீது திருவநந்தபுரம் மஹாராஜகீய உயர்தரக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் பி. எஸ். ராமஸ்வாமிஐயர் பாடியவை.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

(1) நல்ல'ராவ் பஹதூர்'என் பட்டமதை
நானிலத்தில் உள்ள நல்லோர்
எல்லாரும் இனிதாகக் கொண்டாட
எய்திச்சீ ரரங்க நற்கோ
வில்லாரும் எம்பெருமான் இணையடியை
எந்நாளும் ஏத்துகின்ற
நல்லான்கே. வி. ரங்க சாமியெனும்
நன்னாமம் பூண்ட மேலோன்.

(2) இம்மேலோன் எத்தேச சரித்திரமும்
இழைமாட்சி நூலும் வல்லோன்
எம்மாண்பும் நன்கமைந்த இவனுடைய
சொல்வன்மை கண்டால் யாரும்
'அம்மா'என் றதிசயித்து நிற்பதலால்
'இவற்கெதிரே வாதம் செய்ய
நம்மாலே இயலா'தென் றெப்பொழுதும்
நவிலுதலை நான்கண் டுள்ளேன்.

(3) சென்னைமா நகரிலுள்ள ஸர்வகலா
ஸங்கந்தான் சிறந்த தாகும்
என்னென்ன காரியத்தை எடுத்துக்கொண்
டாலும்அதில் ஊக்கத் தோடு
புன்னாளும் இவன்உழைக்கும் பண்பினையார்
எடுத்துரைக்க வல்லார் ஆவர்?
இன்னோன்தன் நட்பினரை எய்துவிக்கும்
ஏற்றத்திற் குவமை உண்டோ?

(4) இவன்செய்யும் நற்றொழிலை எடுத்துரைக்க
என்னாலே இயலா தென்பேன்
இவன்நந்தம் தேசத்திற் கியற்றியுள
நன்மைகளும் பலவா கும்மே;
இவன்சேர தேசத்தும் தமிழ்மங்கை
என்றும்நிலை பெற்று வாழ
நவமாகும் வழிபலவும் நன்கமைத்து
மேன்மையுற வாழ்க நாளும்.

---



மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1919-ஆம் மேமீ-த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு. 1919 May | | | 1918 May | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) நன்கொடை, மாதச்சந்தா வகையில் வரவு ரூ | 340 | ... | ... | 150 | ... | ... |
| (2) புத்தகங்கள் விற்ற வகையில் வரவு | 18 | 12 | ... | 16 | 7 | ... |
| வி. பி. சார்ஜ் வரவு ரூ | 13 | ... | ... | 1 | 13 | ... |
| (3) காலியிடத்துக்கு வாடகை வரவு ரூ | 70 | ... | ... | ... | ... | ... |
| (4) சில்லரை வரவு ரூ | 1 | ... | ... | ... | 6 | ... |
| மொத்தம் ரூ | 430 | 12 | ... | 168 | 10 | ... |
| **II. Editorial Section:** | | | | | | |
| (1) அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ரூ | 4 | ... | ... | 10 | 12 | ... |

| விவரம். | செலவு. 1919 May | | | 1918 May | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) (a) மானேஜ்மெண்டாபீஸ்சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 172 | ... | ... | 100 | 1 | 7 |
| (b) கலாசாலைஉபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ரூ | 137 | 10 | 8 | 51 | 7 | 6 |
| மாணவர்கட்குப்போஷணைக்காகச் செல் ரூ | ... | ... | ... | 70 | 13 | 4 |
| (c) Literary Section சிப்பந்திகட்குச்சம்பளம் செல் ரூ | 14 | 12 | ... | ... | ... | ... |
| (2) ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி சாமான்கள் வாங்கியவகையில்செல்ரூ | 2 | 8 | 4 | 1 | 10 | ... |
| (3) புத்தகசாலைக்கு வாங்கிய புத்தகங்களின்கிரயமும், பத்திரிகைக்குச் சந்தாவும் செல் ரூ | 13 | ... | ... | ... | ... | ... |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (2) செந்தமிழ்ச் சந்தா வரவு | ரூ | 14 | 12 | ... | 30 | 8 | ... |
| (3) விளம்பர சார்ஜ் வரவு | ரூ | 14 | 4 | ... | ... | ... | ... |
| (4) செந்தமிழ்ப் பழைய தொகுதிகள் விற்றவகையில் வரவு | ரூ | 9 | 8 | ... | ... | 8 | ... |
| வி. பி. சார்ஜ் வரவு | ரூ | ... | 9 | 6 | ... | 3 | ... |
| மொத்தம் | ரூ | 43 | 1 | 6 | 41 | 15 | ... |
| **III. Printing Section:** | | | | | | | |
| (1) ஜாப் வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வரவு | ரூ | 320 | 3 | ... | 240 | 10 | ... |
| (2) காகிதக்கிரையம் வரவு | ரூ | 6 | 7 | ... | 21 | 8 | 3 |
| (3) சில்லரை வரவு | ரூ | ... | 5 | ... | 6 | ... | ... |
| மொத்தம் | ரூ | 326 | 15 | ... | 268 | 2 | 3 |
| **IV. Binding Section:** | | | | | | | |
| (1) ஜாப்வேலைகள் சம்பந்தமாக பைண்டிங் சார்ஜ் வரவு | ரூ | 166 | 14 | ... | 48 | 15 | 3 |
| (2) சில்லரை வரவு | ரூ | 2 | 10 | ... | ... | ... | ... |
| மொத்தம் | ரூ | 169 | 8 | ... | 48 | 15 | 3 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (4) தபால், தந்தி வகையில்செல் | ரூ | 4 | 7 | 6 | 27 | 9 | ... |
| (5) கட்டிட வாடகை செல் | ரூ | 100 | ... | ... | ... | ... | ... |
| (6) பரீக்ஷைசம்பந்தமாகச் செலவு | ரூ | 4 | 10 | 6 | ... | ... | ... |
| (7) வருஷோத்ஸவச் செலவு | ரூ | ... | ... | ... | 15 | ... | ... |
| (8) சில்லரைச் செலவு | ரூ | ... | 3 | ... | 3 | 14 | 6 |
| மொத்தம் | ரூ | 449 | 4 | ... | 270 | 7 | 11 |
| **II. Editorial Section:** | | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | ரூ | ... | ... | ... | 45 | ... | ... |
| (2) செந்தமிழ்ப்பத்திரிகை சம்பந்தமாக ஸ்டேஷனெரி வகையில்செல் | ரூ | 13 | 11 | 6 | ... | ... | ... |
| (3) தபால் தந்தி, வகையிற் செல் | ரூ | 8 | 12 | 6 | 6 | 11 | 6 |
| (4) கட்டிடவாடகை செல் | ரூ | 12 | ... | ... | .. | ... | ... |
| மொத்தம் | ரூ | 34 | 8 | ... | 51 | 11 | 6 |
| **III. Printing Section:** | | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச்சம்பளம் செல் | ரூ | 174 | 3 | 6 | 203 | 11 | 9 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (2) டைப்ஸ்வகையாரவாங்கியவகையில் செல் | ரூ | ... | ... | ... | 32 | 12 | 9 |
| (3) மெஷினுக்கு எண்ணெய் வாங்கிய வகையில் செல் | ரூ | 11 | ... | ... | 12 | 14 | 6 |
| (4) கண்டின்ஜன் ஸிசாமான்கள் வாங்கிய வகையில் செல் | ரூ | 4 | 12 | ... | 11 | 13 | ... |
| (5) ஆர்டர்கள் உபயோகத்திற்கு வாங்கிய ஸ்டேஷனெரி செலவு | ரூ | 43 | 7 | ... | 30 | 3 | 3 |
| (6) Furniture ரிப்பேர்வகையில் செல் | | ... | ... | ... | 2 | ... | ... |
| (7) தபால், தந்தி வகையில் செல் | ரூ | 1 | 4 | 3 | ... | 4 | 6 |
| (8) கட்டிடவாடகை செல் | ரூ | 100 | ... | ... | ... | ... | ... |
| (9) சில்லரைச் செலவு | ரூ | ... | ... | ... | ... | 12 | ... |
| மொத்தம் | ரூ | 334 | 10 | 9 | 294 | 7 | 9 |
| **IV. Binding Section:** | | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | ரூ | 29 | 7 | 11 | 27 | 5 | 2 |
| (2) ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி சாமான்கள் வாங்கியவகையில்செல் | | 66 | 2 | 2 | 40 | 13 | ... |
| (3) Furniture ரிப்பேர்வகையில் செல் | | ... | 5 | ... | ... | ... | ... |
| (4) தபால், தந்தி வகையில் செல் | ரூ | ... | 2 | 3 | ... | ... | ... |
| (5) கட்டிடவாடகை செல் | ரூ | 8 | ... | ... | ... | ... | ... |
| மொத்தம் | ரூ | 104 | 1 | 4 | 68 | 2 | 2 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ | 970 | 4 | 6 | 527 | 10 | 6 | * By P. B. Rs. 5. By Co-operative Bank Receipt Rs. 1050 By cash on hand Rs. 98-12-3. 1153-12-3 | ஆகமொத்தம்செலவு ரூ | 922 | 8 | 1 | 684 | 13 | 4 |
| இம்மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ | 1105 | 15 | 10 | 1320 | 12 | 10 | | இம்மாதமுடிவில் மீதியிருப்புத்தொகை ரூ* | 1153 | 12 | 3 | 1163 | 10 | ... |
| ஆகமொத்தம் ரூ | 2706 | 4 | 4 | 1848 | 7 | 4 | | ஆக மொத்தம் ரூ | 2076 | 4 | 4 | 1848 | 7 | 4 |

Audited and found correct.

V. S. Ramaswami,
*Auditor.* 24—10—19.

T. Sudarsanachari,
*Joint Secretary.*
1—7—19.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1919-ஞு ஜூன்மீ த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு. 1919 June | | | 1918 June | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) நன்கொடை, மாதச்சந்தாவகையில் வரவு ரூ | 210 | ... | ... | 150 | ... | ... |
| (2) புத்தகங்கள் விற்றவகையில் வரவு. | 10 | 9 | ... | 20 | 13 | ... |
| வி. பி. சார்ஜ் வரவு ரூ | ... | 15 | .. | 1 | 5 | ... |
| (3) காகிதம் விற்றவகையில் வரவு ரூ | 2 | 8 | ... | ... | ... | ... |
| (4) காலியிடத்திற்கு வாடகை வரவு ரூ | 70 | ... | ... | 350 | ... | ... |
| (5) சில்லரை வரவு ரூ | ... | ... | ... | ... | 8 | ... |
| மொத்தம் ரூ | 294 | ... | ... | 522 | 10 | ... |

| விவரம். | செலவு. 1919 June | | | 1918 June | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) (a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 122 | ... | ... | 102 | 5 | 2 |
| (b) 1 கலாசாலை உபாத்தியாயர்கட்குச்சம்பளம் செல் ரூ | 95 | ... | ... | 53 | ... | ... |
| 2 மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ரூ | ... | ... | ... | 5 | 13 | 11 |
| (c) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 98 | 11 | 4 | ... | ... | ... |
| (2) ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி சாமான்கள் வாங்கியவகையில் செல்ரூ | 2 | 1 | 6 | 1 | 3 | ... |
| (3) புத்தகசாலைக்கு வாங்கிய புத்தகங்களின் கிரயமும் பத்திரிகைக்குச் சந்தாவும் செல் ரூ | ... | ... | ... | 7 | 2 | ... |

## II. Editorial Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு | ரூ | ... | ... | ... | 5 | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ச்சந்தா வரவு | ரூ | 21 | 7 | 4 | 8 | 2 | ... |
| (3) 'செந்தமிழ்'ப்பழையதொகுதிகள் விற்றவகையில் வரவு | ரூ | 2 | 4 | ... | 8 | 4 | ... |
| வி. பி. சார்ஜ் வரவு | ரூ | ... | 6 | ... | 1 | 2 | ... |
| மொத்தம் | ரூ | 24 | 1 | 4 | 22 | 8 | ... |

## III. Printing Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) ஜாப் வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வரவு | ரூ | 261 | 9 | ... | 130 | 15 | ... |
| (2) காகிதக்கிரையம் வரவு | ரூ | 37 | 3 | ... | 35 | 2 | ... |
| (3) சில்லரை வரவு | ரூ | 10 | ... | ... | 4 | ... | ... |
| மொத்தம் | ரூ | 308 | 12 | ... | 170 | 1 | ... |

## IV. Binding Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஜாப் வேலைகள் சம்பந்தமாக பைண்டிங் சார்ஜ் வரவு | ரூ | 73 | 9 | ... | 68 | 1 | ... |
| மொத்தம் | ரூ | 73 | 9 | ... | 68 | 1 | ... |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (4) Furniture ரிப்பேர் வகையில் செல் | | ... | 14 | ... | ... | 6 | ... |
| (5) தபால், தந்தி வகையில் செல் | ரூ | 14 | 9 | ... | 3 | 3 | ... |
| (6) Land Revenue செல் | ரூ | 3 | 12 | ... | ... | ... | ... |
| (7) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் பிரசுர சம்பந்தமாகச்செலவு | ரூ | 5 | ... | ... | 18 | ... | ... |
| (8) பரிசளித்தவகையில் செலவு | ரூ | ... | ... | ... | 41 | 3 | ... |
| (9) வருஷோத்ஸவச் செலவு | ரூ | ... | ... | ... | ... | 12 | ... |
| (10) சில்லரைச் செலவு | ரூ | ... | 8 | ... | ... | 12 | ... |
| மொத்தம் | ரூ | 342 | 7 | 10 | 233 | 12 | 1 |

## II. Editorial Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | ரூ | ... | ... | ... | 45 | ... | ... |
| (2) செந்தமிழ்ப்பத்திரிகை சம்பந்தமாக ஸ்டேஷனெரி செலவு | ரூ | 17 | 2 | 9 | ... | ... | ... |
| (3) தபால், தந்தி வகையில் செல் | ரூ | 8 | 14 | 9 | 13 | 5 | 6 |
| மொத்தம் | ரூ | 26 | 1 | 6 | 58 | 5 | 6 |

## III. Printing Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | ரூ | 187 | 13 | 8 | 178 | 6 | 11 |
| (2) டைப்ஸ் வகையரா வாங்கிய வகையில் செல் | ரூ | 1 | 7 | 3 | 9 | 6 | ... |
| (3) மெஷினுக்கு எண்ணெய் வாங்கிய வகையில் செல் | ரூ | 13 | 11 | 6 | 21 | 12 | ... |
| (4) கண்டின்ஜன்ஸிசாமான்கள் வாங்கிய வகையில் செல் | ரூ | 12 | 5 | ... | 50 | 15 | 10 |
| (5) ஆர்டர்கள் உபயோகத்திற்கு வாங்கிய ஸ்டேஷனெரி வகையில் செல் | | 35 | 15 | ... | 40 | 10 | 9 |
| (6) Furniture ரிப்பேர் வகையில்செல் | | 9 | 8 | ... | ... | ... | ... |
| (7) தபால், தந்தி வகையில் செல் | ரூ | 3 | 6 | 3 | ... | 6 | 3 |
| (6) சில்லரைச் செலவு | ரூ | 9 | 8 | ... | ... | 2 | ... |
| மொத்தம் | ரூ | 273 | 10 | 8 | 301 | 11 | 9 |

## IV. Binding Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | ரூ | 29 | 2 | ... | 26 | 14 | ... |
| (2) ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி சாமான்கள் வாங்கியவகையில்செல் | | 45 | 11 | 4 | 33 | 4 | 11 |
| (3) தபால், தந்தி வகையில் செல் | ரூ | ... | ... | ... | ... | 1 | 3 |
| மொத்தம் | ரூ | 74 | 13 | 4 | 60 | 4 | 2 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ | 700 | 6 | 4 | 783 | 4 | ... | * By P. B. Rs 5. By Co-operative Bank Receipt Rs. 1050 By cash on hand Rs. 82-1-3 | ஆகமொத்தம்செலவுரூ | 717 | 1 | 4 | 654 | 1 | 6 |
| இம்மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ | 1153 | 12 | 3 | 1163 | 10 | ... | 1137-1-3 | இம்மாதமுடிவில் மீதியிருப்புத்தொகைரூ* | 1137 | 1 | 3 | 1292 | 12 | 6 |
| ஆகமொத்தம் ரூ | 1854 | 2 | 7 | 1946 | 14 | ... | | ஆக மொத்தம் ரூ | 1854 | 2 | 7 | 1946 | 14 | ... |

Audited and found correct.
V. S. Ramaswami,
Auditor.
24—10—19.

T. Sudarsanachari,
Joint Secretary.
24—10—19.

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-கஅ.] சித்தார்த்தி௵ மார்கழி௴ [பகுதி உ.
Vol. XVIII. December—January 1919. No. 2.

## "தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்."

செந்தமிழ் கஎ-ந் தொகுதி உகரு-ம் பக்கத்தொடர்ச்சி.

22. "அம்மூ வாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை."

முன்னர்ப் பதினெட்டெனத் தொகுத்துக் காட்டியவற்றை முப்பிரிவின வாகுமெனப் பின்னரும் வகுத்துக் காட்டியவற்றுலே ஒவ்வொரு பிரிவும் அவ்வாறெழுத்துக்களை உடைய அம்முப் பிரிவின வாகும் மெய்யெழுத்துக்களை மொழியாகவழங்கும் இயல்பினில் ஆராயுமிடத்து ஒருமெய் மற்றொரு மெய்யுடன் மயங்கு நிலைமையுடையன வாகும் என்க.

அவ்வாறு மயங்கும் மெய்களை மூன்று வகையாக்கிக்கொள்ள ஆசிரியர் உய்த்துணர வைத்தார். "டறலள" என்னும் சூத்திரம் முதல் "மெய்ந்நிலை சுட்டின்" என்னும் சூத்திரம் இறுதியாக உள்ள சூத்திரங்களிலே கசதபக்களைக் கூறாது ஏனையவைகளைக் கூறிவந்தவர் "மெய்ந்நிலைசுட்டின் எல்லா எழுத்தும்—தம்முற்றும் வரூஉம்" என்ற குறிப்பாலும் பிறவற்றாலும் இவை தம்மொடுதாமும் தம்மொடு பிறவும் மயங்கி வரூஉம் என்றாராயிற்று. அவ்வாறு மயங்கும் இவைகளில் "ரழவல்லங்கடையே" என்ற விதியால் ரழக்கள் பிறவொடு தாம் மயங்குமே யன்றித் தம்மொடு தாம் மயங்கா என அவைகளை, விலக்குவாராயினர். ஆதலின் "டறலள" என்பது முதல் "மெய்ந்நிலை சுட்டின்" என்பது இறுதியாகக் கூறிய சூத்திரங்களால் ட ற ங ஞ ண நமன

யலவள என்பவை தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் மயங்கும் எனவும் ரழக்கள் தம்மொடு பிறவே மயங்கும் எனவும் ஆராய்ந்து அறிய வைத்தார். ஆகவே இவைகளாலே பெறப்பட்ட எழுத்துக்கள் கசதபக்கள் எனவும் பெறப்படா மயக்கம் தம்மொடுதாமே மயங்கும் மயக்கம் எனவும் புலனாகும் பொழுது அவைகளே அவையாயின என உய்த்துணர வைத்தமையைக் கண்டுகொள்க. வரகு முதலியவைகளை உயிர்த்தொடராகக் கோடன் மரபாகலின் ஈண்டு உயிர்மெய்யை மெய்யாக அமைப்பதூஉம் மரபாயிற்று. ஆதலின் நன்னூலார் "உயிர்மெய்ம் மயக்களவின்றே." எனக் கூறியதூஉம் அதற்குரைகாரர் உரை வகுத்ததூஉம் குற்றமெனக் கண்டுகொள்க. அன்றியும் நன்னூலார் மெய்ம்மயக்கங்களை முறைப்படத் தொகுத்தமைபோல ஆசிரியர் தொகுக்காமை குற்றமோவென ஐயங்கொள்ளற்க. ஏனெனின் முன்னர்க்காட்டிய சூத்திரங்களாலேயே அவை பெறும்படி வைத்தமையின்.

"ரழவொழித்தீ ரெட்டாகும்" என்பதால் இவைதம்மொடுதாம் மயங்காமல் தம்மொடு பிறவே மயங்க வரூஉம் என்பதூஉம் "கசதப வொழித்த வீரேழன் கூட்டம்—மெய்ம்மயக்கு," என்பதாலும் உடனிலை ரழவொழித்தீரெட்டாகும் என்பதாலும் டற ஙஞண நமன யலவள என்னும் இவைகளே தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் மயங்க வரூஉம் என்பதூஉம் கசதபக்கள் தம்மொடு தாம் மயங்கவே வரூஉம் என்பதூஉம் அவர் இச்சூத்திரங்களாலேயே பெறவைத்தமையிற் பின்னரும் "ரழவல்லன தம்முற்றாமுடனிலையும்" எனச்சூத்திரிக்க வேண்டாமையைக் கண்டுகொள்க. இவை கருதியன்றே ஆசிரியர் தலைச்சூத்திரத்தில் மேலனவற்றைத் தொகுக்காது பிறசூத்திரங்களாலேயே உய்த்துணரவைத்தார் என்க. மேலும் ஆசிரியர்க்கு உயிர்மயக்கத்தையாவது உயிர்மெய்ம் மயக்கத்தையாவது எடுத்துக் கூறுவது கருத்தாயின் அவ்வத்தலைச் சூத்திரங்களிற் புள்ளியென விதந்தோதியிருக்கமாட்டார். ஆதலின் உயிர்மெய்ம் மயக்கத்தையும் பிறவற்றையும் மேற்கோளாலே விளக்குவது பொருந்தாதென்க.

உரிய என்றார். அவைகளின் ஒலி சிறிது மாறுபட்டுரிமைப்படுதலின். அம்மூவாறும் என்றார் முன்னர்க்கூறிய அப்பதினெட்டு மெய்களாகிய உட்பிரிவினளவுகளைச் சிதையாமற் காத்தற்கு. தெரியுங்காலை என்றார் முதலீறு நிலைகட்கு மிதனுக்கும் உளதாம் வேற்றுமை



உணர்த்தற்கென்க. மயங்குதலியல் பாகலின் மயக்கெனக் கூறாராயினர் "மெய்யினியக்கம்" எனவும், "தம்மியல் கிளப்பி னெல்லாவெழுத்தும்—மெய்நிலை மயக்கம்" எனவும், வழங்கியன் மருங்கல்லாவிடத்துக் கூறி இவற்றொடு அவற்றின் வேற்றுமை காட்டுவதாலேயே நாம் எடுத்துக் கொண்டது வலியுறூஉம் என்க. ஆதலிற் பிறர் மெய்ம்மயக்கம் உடனிலை மயக்கம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப் பிறவினையாக்குவது குற்றமென்க. வழங்கியல் என்றார் அவற்றை இயக்கும் பொழுதும் இயல் கிளக்கும் பொழுதும் இவைபோன்ற பிறபொழுதும் இவ்வாறு மயங்கு மயக்கம் அவற்றிற்கு இல்லையென்பதறிதற்கென்க.

23. "டறலள வென்னும் புள்ளி முன்னர்க்
கசப வென்னு மூவெழுத்துரிய."

டறலள என்றுரைக்கப்படும் புள்ளிகளின் முன்னர்க் கசப என்றுரைக்கப்படும் மூன்று எழுத்துக்களும் வந்துமயங்குதற்குரியன என்க.

டறலளவேயன்றிப் பிறவும் நின்று மயங்கப்படுவனவாயிருப்ப இங்ஙனம் கூறியது குற்றமோவெனின்? ஆகாது. அவைகளெல்லாம் பலவாறு பலவற்றொடு மயங்குதலிற் றனித்தனி எடுத்துக் கூறவேண்டி வருமாதலின் மிகைபட்டு விரியும் என்க. நன்னூலார் "டறமுன்கசப மெய்யுடன் மயங்கும்." எனவும், "லளமுன் கசப வயவொன் றும்மே" எனவும், சிறியனவாக்கி நயப்படுத்துவார் போன்று கசபக்கள் வரிசைகளைப் பாழ்படுத்திப் படிப்பாரை மயக்கினர். அன்றியும் முன்னர் வருபவைகளிலே சிற்சில இடங்களின் மெய்யெனக்காட்டிப் பற்பல இடங்களிற் காட்டாமலும் வருவது பொருந்தாது. யாதாலோவெனின் அவ்வாறு காட்டாமைக்கொரு நயமும் இன்மையினென்க.

அவ்வத் தலைச்சூத்திரங்களின் முன்னர் விடாது ஆசிரியர் புள்ளியெனக்காட்டிப் பெரிதும் பயன்பட வைத்தமைபோலன்றி இவர் பின்னிலைகளிற் சிற்சிலவற்றை மெய்யெனக்கூறியும் பற்பலவற்றை அவ்வாறு கூறாமலும் போவது குற்றமென்க. அவ்வாறு குற்றமாவது எவ்வாற்றாலோவெனிற் கூறுதும். "கசபமெய்யுடன் மயங்கும்" எனவும், "முன்னர் மொழிமுதன்மெய்வரும்" எனவும் கூறினமைகொண்டு இவ்விவைகளுக்குப் பின்னர் வருபவைகளே புள்ளிகளெனவும், இவ்விடங்களில் உயிர்மெய் வாராஎனவும், பிறவிடங்களில் அவ்வாறு புள்ளிகள்

வரா எனவும் கூறுமுகத்தானே புலனாகும் பல வழூஉக்குழூஉக்கள் மலிந்து கிடக்கின்றமையிற் குற்றமெனக் கண்டுகொள்க. முன்னர் வருபவைகளையே புள்ளிகளெனக் கொள்ளுமுறைமை ஆண்டு யாம் விளக்கியவாற்றானே முன்னர் வருபவைகளைப் புள்ளிகளெனப் பிறர் கூறும் கூற்றுப் பொருந்தாது. ஆதலின் ஆசிரியர் போக்கையே பின் பற்றுவது நலமென்க.

24. "அவற்றுள்—
லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்."

முன்னர்க்கசபக்கள் வந்து மயங்குமெனக் கூறிய டறலள என்னும் அந் நான்கு மெய்யெழுத்துக்களுக்குள்ளே லகார ளகாரம் என்னும் இரண்டு மெய்களும் அக்கசதபக்கள் வந்து மயங்குவதற்கு உரியனவாவ தோடு யகரவகரங்களும் வந்து மயங்குவதற்கு உரியனவாகத்தோன்று மென்க.

தோன்றும் என்றார் இவை வருதலினால் ஒலி பிறழாமை நோக்கி. இக்கிடக்கையை ஒரு நயமும் காட்டாது வயஎன மாற்றியும் கசபக் களை இலேசினால் அறியவொண்ணாது மயக்கியும் நன்னூலார் மயங்கு வர். அவற்றுள் என்றார் முன்னருணர்த்தினமை மறவாதிருத்தற் பொருட்டும் வேற்றுமை அறிதற் பொருட்டும் என்க.

25. "ஙஞண நமன வெனும்புள்ளி முன்னர்த்
தத்த மிசைக ளொத்தன நிலையே."

ஙஞணநமன வென்றுரைக்கப்படும் மெல்லினப் புள்ளிகளின் முன்னர் அவ்வவைகளுட் டமக்குத் தமக்கு இனமாகிய கசடதபறக்கள் என் னும் வல்லினப் புள்ளிகளே மெய்ம் மயங்கு நிலைமைக்காகு மென்க.

இசைகளொத்தன நிலையென்றார். இரண்டு மொத்தலின் இவை கள் ஓரினமாதலின் ஒருவகைப்படுத்தியதை அறியாத நன்னூலார் பற் பல இடங்களில் இம்முறையைச் சிதைத்து இடர்ப்படுவாராயினர்.

26. "அவற்றுள் ணனஃகான் முன்னர்க்
கசஞப மயவவ் வேழு முரிய."



தத்தமிசைகளொத்தன வென முன்னர்க் கூறிய மெல்லினப் புள்ளிக ளுள் ணனஃகான் என்னும் இவ்விரண்டெழுத்துக்களின் முன்னர் டறக்களேயன்றிக் கசஞபமயவ என்னும் ஏழெழுத்துக்களும் வந்து மயங்குவதற்கு உரியனவாகு மென்க.

ஏழும் என்றார் வகரத்தையும் இலேசாகக் கொள்ளவேண்டி. ஈண்டு வரும் கசபக்களை ஆண்டே அமைக்காத காரணம் வினாவிற் கூறுதும். அவ்வாறே இயைத்தால் ணனஃ கான் முன்னரும் வரும் எனவும், அந்த ணனஃகான் ஞமயவ என்பவையோடும் வரும் என வும், மிகைபட விரித்துக் கூறவேண்டி யிருப்பதனானும் பிறவாற்றானும் கூறினார் என்க.

27. "ஞநமவ வென்னும் புள்ளி முன்னர்
யஃகா னிற்றல் மெய்பெற் றன்றே."

ஞநமவ என்று கூறப்படும் புள்ளிகளின் முன்னர் யகரம் மயங்குதற் கண் நிற்றல் மெய்ம்மை பெற்றது என்க.

இங்குக் காட்டியவற்றுள் வகரத்தை ஒருநயமும் காட்டாது நன் னூலார் "ஙம்முன் கவ்வே வம்முன் யவ்வே" எனக்கூறினார். அவ் விரண்டும் ஒருபிரிவினவெனக் கருதிப்போலும். இதனை அந்நூலுரை காரர் விளக்காது பிறவற்றை விளக்குவதூஉம் வியப்பே.

28. "மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்."

முற்கூறியவற்றுள் மகரமாகிய புள்ளிமுன்னர்ப் பகரயகரமேயன்றி வகரமும் வந்து மயங்கத்தோன்றும் என்க.

29. "யரழ வென்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்."

யரழவென்றுரைக்கப்படும் மூன்று புள்ளிகளின் முன்னர் மொழிக்கு முதலாகுமென இனிக்கூறும் ஒன்பதெழுத்துக்களும் ஙகரத்துடனே வந்து மயங்குவதற்குத் தோன்றும் என்க.

30. "மெய்ந்நிலை சுட்டி னெல்லா வெழுத்துந்
தம்முற் றாம்வரூஉம் ரழவலங் கடையே."

மெய்யெழுத்துக்களது உடன்மயங்கு நிலையைச் சுட்டிக் காட்டுமிடத்து வேற்றுநிலைமயக்கத்திற்கு வாராவெனும் குறிப்புத்தோன்ற ஆளப்படாதனவாம் கசதபக்களும் தம்மொடு பிறவேமயங்கும் ரழக்களல்லாத பிறவும் தம்முன்னே தாம்வந்து மயங்குவனவாகும் என்க.

இக்கூறியவைகளால் "மூவெழுத்துமுரிய எனவும், "யவவுந் தோன்றும்" எனவும், "ஏழுமுரிய" எனவும் "வவ்வுந் தோன்றும்' எனவும் காட்டியவற்றாலே எச்சப்பொருள்பட்டு நிற்பதை அறியாத நன்னூலார் குறுக்கியும் மிகுத்தும் வழூஉப்படுவாராயினர் என்க.

ஆசிரியர் மொழியான் அறியப்படுவனவற்றை மொழிமரபிற் கூறினமைக் கேற்ப ஈரொற்றாவனவற்றையும் தனிக்குறில் அணையாதனவற்றையும் இவைபோன்ற பிறவற்றையும் ஆண்டு மயங்காமரபிற் கேற்பப் பலவிடங்களிற் பிரித்துப்பிரித்து அமைத்த நுணுக்கமறியாத நன்னூலார் மெய்ந்நிலைமயக்கத்துடன் அவைகளையும் இனங்களெனக் கருதி அணைத்தமை பொருந்தாது. ஈண்டியாம் குறிப்பிட்டபடி அவை மாறுபடு மயக்கம் அவற்றிற் கின்மையிற் குற்றமென்க.

31. "அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு."

ஐந்து குற்றெழுத்துக்களுள் அகர இகர உகரங்களென்ற அம்மூன்று எழுத்துக்களும் சுட்டெழுத்துக்களாக வருமென்க.

அவன் இவன் உவன் என்பவை இச்சூத்திரத்தால் இலேசாகப் பெறப்படுமாகையால் அம்மூன்றுமெனக் குறிப்பித்தது புறச்சுட்டையும் உள்ளடக்கற்கென்க. இது கருதித்தான் புறவினாவையும் உள்ளடக்கவேண்டி ஆண்டும் இவ்வாறே சுட்டினார். அ இ உ என்பவை அம்மூன்றும் என்பதுபோலவே சுட்டிக்காட்டு மிடத்திலே தான் சுட்டாகுமென உதாரணத்தானும் விளக்கியருளினார். இவையறியாத நன்னூலார் "அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே" என்றார் அதற்குரை வகுத்தார் பிறரிகழும் இகழ்ச்சியை மாற்றுவான்வேண்டிச் சில கூறினார். அவை வருமாறு. "அவன் என்பதன் கண் அகரம் அறம் என்பதன்கண் அகரம் போலப் பின்னெழுத்துக்களோடு தொடர்ந்து நின்ற ஒருபொருளை உணர்த்தாது மலையன் என்பதன்கண் பகுதிபோல வேறு நின்று சுட்டுப்பொருள் உணர்த்தலின் அகத்துவரும் இதனைத் தனிவரின் என்றார்." எனக் காட்டியவைகளும் பொருந்தா. என்னை? அவ்வெழுத்துக்கள் சுட்டினாலன்றிச் சுட்டெழுத்தாகாமையானும், இவர் வடமொழி இலக்கணங்களையும் கலந்து கூறுகின்றமையால் அயோக்கியன் அமலன் என்பவை போன்ற சொற்களின் அகரம் சுட்டுப்பொருளை உணர்த்தாமையானும், அன்றியும் தனித்துவரும் புறச்சுட்டு அம்மொழிகளின் அகரம்போலன்றிப் பகுதியைப் போல வாராமையானும் பிறவாற்றானும் குற்றமெனப் புலப்படுதலின்.



ஆசிரியர் இதுவரை எழுத்துக்களின் இயல் கூறிவந்து முடித்தார் ஆதலின் அதன் பின்னர் அவ்வெழுத்துக்களின் பொருண்மையை உணர்த்தலும் மரபாதலின் ஈண்டே யமைத்ததை உணராத பிறர் பிறவிடங்களிற் பெய்துவைத்துத் தவறுபட்டனர்.

32. "ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா."

ஏழு நெட்டெழுத்துக்களுள் ஆ ஏ ஓ என்ற அம்மூன்றும் வினாவெழுத்துக்களாகும் என்க.

எ எவன் யாவன் யாவர் யார் யாது யாவை என்பனவற்றையும் இவைபோன்ற பிறவற்றையும் பற்பல இடங்களில் ஏறக்குறைய இருபத்தைந்து முறைக்குக் குறையாமல் அவ்வவற்றின் இன்றியமையாமையோடு விளக்கிப் போந்த ஆசிரியர் ஈண்டுரைக்காதது யாதுகாரணமோவெனிற் கூறுதும். அவைகளெல்லாம் மொழியாகிப் பொருண்மை பெற்றுவருதலின் அவ்வவற்றிற்கமைந்த இலக்கணங்களை அறியும்பொழுதே அவ்வவற்றையும் அறியவும் உணர்த்தவும் முடியும் ஆதலின் அவ்வாறமைத்தாரென்க. அன்றியும் அவை எழுத்தாகாமையானும் கூறிலரென்க. அவ்வாறாயின் எ, யாக்களை ஈண்டுப் பெய்துவைக்காதது குற்றமோவெனின்? அற்றன்று. உயிர்வருக்கத்தோடுயிர்மெய்வருக்கத்தையும் உரைப்பாராயின் வினாக்கள் இவ்வளவினவே எனப் படிப்பாரிடர்ப்படுவர் ஆதலிற் குற்றமாகாது. இதனையறியாத நன்னூலார் "எ, யா" எனத்தொடங்கிச் செல்வர். அன்றியும் அவர் எகரம் மொழிக்கீறாகாமையும் நோக்காது "எய்யாமுதலும்" என்றார்.

33. "அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலு
முளவென மொழிப விசையொடு சிவணிய
நரம்பின் மறைய வென்மனார் புலவர்."

[உயிர்க்கும் மெய்க்கும் பிறவற்றிற்கும் அளவிற்கும் அளவு கூறிய பின்னரும் அவைகட்கின்றியமையாதனவாகிய இருவகைத்தாய அளபெடைகளுக்கும் அளவு கூறிவர்தவர் பிறன்கோட் கூறலென்னும் உத்திகொண்டு யாழ்நூலின்கண் இவை நீண்டு வருமென உரைப்பாராயினர்.]

எல்லாவுயிர்களும் தம்மளவு கடந்து ஒலித்தலும் எல்லா மெய்களும் தம்மளவு நீண்டிசைத்தலும் உளவென மொழியப்படுபவை இசையொடு பொருந்திய யாழ்நூலிடத்தனவென்று புலவர் கூறுவர்.

"அரிறபவாடி யளவிற்கோட லந்தணர் மறைத்தே" எனவும், "அஃதிவ ணுவலா தெழுந்துப்புறத் திசைக்கு-மெய்தெரி வளியிசை யளவுநுவன் றிசினே" எனவும், "மறையோர் தேஎத்து மன்றலெட்டனுள்" எனவும், ஆசிரியர் பிறன்கோள்களில் விடுக்கும் பகுதிகளையும் வேண்டும் பகுதிகளையும் விளக்கிப்போவர். ஈண்டவ்வாறு காட்டாமையாலே பிறன்கோளைக்காட்டினரேயொழிய ஒன்றும் கொண்டாரில்லை என்பது புலனாகின்றது. ஆதலின் ஆண்டுச் செய்யுளிபற்கு இச்சூத்திரத்தை மாட்டாக்கிப் பொருத்துவதும் பிறவும் பொருந்தாமை யுணர்க.

உயிரை உயிர்த்தே உரைக்கவேண்டுதலின் உயிர்த்தலும் என்றார். மெய்யை உரைக்குமிடத்து உயிர்ப்புவிடவொண்ணாது வளியை உள்ளே அமுக்தி நீட்டவேண்டுதலின் ஒற்றிசை நீடலும் என்றார். இவ்வாற்றான் அவைகட்குப் பெயரெய்தினமையும் கண்டுகொள்க.

இவையறியாத நன்னூலார் "ஆவியு மொற்றும் அளவிறந் திசைக்குமென்பர். அன்றியும் விளிமுதலியவற்றிற்கு அளபெடையே குறியீடாதலின் அவர்கூற்றுப் பொருந்தாமையுணர்க.

முதலாவது நூன்மரபு முற்றிற்று.

உ

# "தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்."

## இரண்டாவது மொழிமரபு.

முன்னும் இயலான் நூலுக்கு மரபாவனவற்றில் எழுத்தான் அறியப்படுவனவற்றை உணர்த்திய ஆசிரியர் இவ்வியலான் மொழிக்கு மரபாவனவற்றில் மொழியான் அறியப்படுவனவற்றை உணர்த்துவான் எடுத்துக்கொண்டார். ஆயின் ஆண்டமைத்த சுட்டு வினா முதலியவைகள் மொழியோடும் ஈண்டமைக்கும் முதலீறுகள் ஆண்டமைத்த இடைநிலைமயக்கத்தோடும் அமைக்கவேண்டுமோவெனின் அற்றன்று. என்னை? ஈண்டமைக்கப்படூஉம் நிலைகள் ஒருமொழிக்கண் முதலீறுகள் ஆவதனானும் அன்றியும் ஒருமொழிகொண்டே அறியப்படவேண்டினமையானும் அவைகள் மயக்கம் எனப்படாமையானும், அம்மயக்கமே இவ்வாறன்றி யாண்டும் முன்னர் வருபவைக்கொத்து மயங்குகின்றமையானும் பிறவற்றானும் அமைக்கவேண்டாமை காண்க. முதலீறுகளில் அவைவாராமைபற்றி இவைகளை மயக்கங்களென்னாது நிலைகளெனக் கூறிப்போந்தார். இன்னும் சுட்டும் வினாவும் எவ்வகையால் அமையுமெனிற் கூறுதும். அவைகளுட் சுட்டு மொழியான் அறியப்படாது யாண்டும் புறத்தே வருகின்றமையானும் வினாவிலே எழுத்துக்களால் அறியப்படுவனவற்றுள் சிலவற்றையே கூறினமையானும் அமையுமென்பது. ஆதலின் நன்னூலார் முதலீறுகளைக் கூறியமுடிவிலே இடைநிலைமயக்கங் கூறியது முதலீறுகளொடு வேற்றுமை அறியப்படாமல் ஒன்றெனமயங்கவைத்தும் மேற்காட்டியவற்றை அறியவொண்ணாத தாக்கியும் போவது பொருந்தாமையுணர்க.

34. "குற்றிய லுகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே."

யாவென்னும் உயிர்மெய்யெழுத்தாகிய சினையுடனே யாண்டும் நிற்றலை விரும்பும் குற்றியலுகரமானது புணரியல் நிலையிற் குறுகுவதோடு நிலைமையாக முன்னிலையிற் கூறப்படும் கட்டுரை இடத்தும் புனைந்துரையிடத்தும் வரும் அசைச்சொற்களின் மகரத்தையும் ஊர்ந்து வரும் என்க.

முன்னர்ப்புணரியலில் "யகரம் வரும் வழி யிகரங் குறுகும்—உகரக்கிளவி துவரத் தோன்றாது." என்னும் சூத்திரத்திலே யகரமெனக் கூறுவதனால் யாசினையாகாதோவெனின் அற்றன்று. என்னை? "ஆவோடல்லது யகர 'முதலாது' என்றமையான் என்க.

35. "புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே—
யுணரக் கூறின் முன்னர்த் தோன்றும்."

அக்குற்றியலுகரம் அவ்வாறு ஒருமொழிக்கண் வருவதன்றிப் புணர்கின்ற நிலையின் இடையிலே வந்து பொருந்துவதற்கு உரித்தாகும். அஃது அவ்வாறாவதை அறியும்படி கூறினால் "நெட்டெழுத்திம் பருந் தொடர்மொழியீற்றும்—குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே" என்னும் முன்னர்ச் சூத்திரத்திலேவரும் ஈற்றில் உகரந்தொடர்ந்த இருவகை மொழிகளும் நிலைமொழிகளாகப் புணரும் இடத்துத் தோன்றும் என்க.

ஆயின் வருமொழி இவற்றாற் பெறப்படவில்லையேயெனிற் கூறுதும் என்னை? யாவைச் சினையாகக் கோடமாதலின் அதனையே முதனிலையாகக்கொண்டுவரும் மொழியே அஃதென்க.

இவை கருதாத நன்னூலார் "யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்- அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய" என்றதனானே அவ்விகரம் நிலையுறுமிடத்தைக்கடையிற் கூறியும் யாண்டும் யா சினையாவதை அறியாதும்- முன்னிலையிற்கட்டுரைகூறல் முதலாய சார்பில்லாவிடத்து அவ்வசையின் இகரம் குற்றியலிகர மாகாமையறியாதும்" அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்" என்றிவர் சூத்திரித்தபடி குற்றியலுகர நிலைமொழிகளுக்கு வருமொழிகளின் முதனிலைகள் ய, யா, யு, யூ, யோ, யௌ எனவரினும் அப்புணர் நிலையிடையிற் குற்றியலிகரம் யாவொழிந்த ஏனையவிடங்களிலே தோன்றவேண்டுமே என்பதை உணராதும் தவறுபட்டனர். இன்னும் ஆசிரியர் "ஆவோடல்லது யகரமுதலாது" எனக்கூறியது கொண்டு "யகரம் வரும்வழி யிகரங்குறுகும்" என விதித்தமையையும் இவர் "அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்" எனவிதித்தமையையும் மறந்து சுருக்குவார் போன்று குறுக்கினர்.

36. "நெட்டெழுத்திம்பருந் தொடர்மொழியீற்றுங்—
குற்றிய லுகரம் வல்லாறூர்ந்தே."



குற்றியலுகரமானது வல்லெழுத்துக்கள் ஆறனையும் ஊர்ந்து நெட்டெழுத்திற்குப் பின்னரும் ஐவகைத் தொடர்மொழிகளது இறுதியிலும் நிற்றலை விரும்பும் என்க. ஆசிரியன் விருப்புப்படி அஃதமையாது தானே அமைதலின் அதுவேண்டும் என்க.

ஈரெழுத் தொருமொழி பலவற்றுள் குற்றியலுகரத்திற்கு முதனிலையாகவருவது நெட்டெழுத்தாகலின் "நெட்டெழுத்திம்பரும்" என்றார். இதனையே ஈரெழுத்தொரு மொழியெனப் பிறாண்டும் கூறிப் புலப்படுத்துவர். தொடர்மொழியாவது இதனோடு ஓரெழுத்து முதலாகத் தொடர்ந்து வருவது. புணரியலுக்கு உபகாரமாதற்கும் பிறவற்றிற்கும் இதனை மொழிவகைப் படுத்திப் பகுத்தோதினர். எழுத்தினுக் கிவ்வாறாய தொடர்பின்மையின் மொழிநோக்கி ஒன்றியற்கிழமையாயது. உயிர்முதலாய தொடரெல்லாம் இரண்டிறந்திசைக்குந் தொடர்மொழியாதலின் மெய்யை எழுத்தாக அலகிடுவதூஉம் ஈண்டைக் கின்றியமையாததென்க.

இனி நன்னூலார் "நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை தொடர்மொழியிறுதி வன்மையூருகர—மஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே" என்றதற்குரை கூறிய மயிலைநாதர் ஈரெழுத்தொருமொழி தொடர்மொழிகள் என்னும் இவைகொண்டு அவ்வவற்றின் இறுதி வன்மையூருகரமஃகும் என்றவர் அவ்வாறன்மேலும் பிறதொடரவும் பெறும் என்றபடி தொடரப்பெறின் நெடிற்றொடர் என ஒன்றில்லையாகும் ஆதலின் அதுபொருந்தாதென்க. அந்நூல் விருத்தியுரையாசிரியர் நெடின்முதலாய எழுத்துக்களினாலே தொடர்ந்தமொழியென அவற்றை விளக்கி அவ்வுகரம் அஃகுவதற்கும் மொழிநிரம்புவதற்கும் பிறமேற்றொடரவும் பெறும் எனவுரைத்தும் நெடிலொடுவைப் பிரிவிற்கும் உம்மையை இறந்தது தழீஇயதற்கும் பொருத்துவாய் காட்டியும் செல்வாராயினர். இவரெண்ணப்படியே ஒடுகொடுத்தவர் தொடரப் பெறுமே எனக் கூறின் அதுபொருந்தும். அன்றியும் நெடிலோடு பிறமேற் றொடரவும் பெறும் ஆய்தம் உயிர்வலிமெலிஇடை தொடர்மொழியிறுதி வன்மையூருகரம் அஃகும் எனப்பொருள் படுத்தவேண்டும் என்க. இவ்வாறு கண்ணழித்துப் பொருள்பண்ணாத அவர் மொழி நிரம்புவதற்கும் உகரம் அஃகுவதற்கும் ஏதுவாகப் பிறமேற் றொடரவும் பெறூஉம் எனவுங் கூறியதற்குச் சார்பாகப் பலவீன

இலக்கண விதிகளையும் புகுத்துவாராயினர். இன்னும் இவர் கூறியது நன்னூலார் கருத்தாயின் பின்னர் வகுத்த உயிர் குறில் நெடில்களாய இரண்டினையும் குறிக்குமல்லவா? அவ்வாறு குறிக்கும்போது குறிலுக்குப் பின்வன்மை யூருகரம் அஃகாதிருந்தும் நெடிலுக்குப் பின் அவ்வுகரம் குற்றியலுகரமாவதால் ஆண்டு அம்மொழி நிரம்பவும் உகரங்குறுகவும் காரணமாகப் பிறமேற் றொடரவும் பெறுதல் யாண்டையதென்க. அன்றேல் அவ்வுயிர் வகையின் நெடிலை முன்னர்ப் பிரித்தோதினமையால் குறிலே யீண்டையதெனின் வராது வாராது இவைபோன்றன உயிர்த்தொடராகாமல் முடியும் என்க. அன்றியும் நன்னூலார் "வன்மை யூருகரம் அஃகும்" எனக் கூறியது தவறாகும் என்பதைச் சிவஞான ஸ்வாமிகளது விருத்தியிற்கண்டு தெளிக. மேலும் ஈரொற்றுத் தொடர்மொழிகளை வன்றொடர் மென்றொடர்களில் ஒன்றனையே அவை ஏற்றபெற்றிகொள்ளும் என்னுமையால் படிப்பார் குசுடுதுபுறுக்களின் சேர்க்கையால் அஃகிரட்டித்த தாகக்கொண்டு அதனை இடைத்தொடராக மயங்காமற் றெளிவுபடுத்தினாருமில்லை. ஆசிரியர் "குற்றியலுகரக் கின்னேசாரியைக் எனவும், "குற்றியலுகரத் திறுதிமுன்னர்—முற்றத்தோன்று மின்னென் சாரியை" எனவும் கூறியது கொண்டு அதுபெயர் மருங்கிலாம் எனவும் பிறவற்றிலும் தமிழில் வரூஉம் புறமொழியிலும் ஆகாதெனவும் உய்த்துணரவைத்தமையையுங் காட்டினாரில்லை. நுந்தை என்பதன் கண்முதனிலை உகரத்தையும் செக்குக்கணை என்பது போன்றதின் குறுக்கத்தையும் விளக்காமையை மாற்றப் பிறரேற்றமேற்றம் குற்றமேயாகும். இதன் விளக்கத்தை எமது "தொல்காப்பியமும் மயிலைநாதருரையும்" என்ற விடயத்திலே கண்டு தெளிக.

இவ்வாற்றானே நன்னூலாரும் அந்நூலுரைகாரரும் குற்றியலுகர விளக்கத்திலும் தவறுபட்டனரென்க. இவ்விடர் நோக்கி அன்றே ஈரெழுத்தொருமொழி முதலியவைகளைக்கொண்டு ஆசிரியர் குற்றியலுகரத்தை விளக்கியருளினார். இதனையும் பிற்காலத்தார் அறியாது மறுத்துப் பிறிது வகுப்பர் என்க.

37. இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான



அவ்வுகரம் ஒருமொழிக்கண் அன்றிப் புணரும் இருமொழியிடைக் கண்ணும் அடையும் இடனும் உண்டு. அவ்வாறு புணரும் முறைமையை அறியும் புணரியலின் கண்ணே என்க.

(உ-ம்) எள்+துவரை எட்டுவரை கண்+து=கட்டு என்பன போன்றன.

குற்றியலுகரம் மொழிக்கண் "நெட்டெழுத்திம்பரும்" என்னும் சூத்திரத்தால் ஈற்றிலும் "குற்றியலுகர முறைப் பெயர்மருங்கின்" என்னும் சூத்திரத்தால் முதலிலும் இச்சூத்திரத்தால் இடையிலும் வருவது காண்க. பிறவும் அன்ன.

38. "குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

ஆய்தப்புள்ளி யாண்டுவரினும் குற்றெழுத்தின் முன்னதாய் உயிருடன் புணர்ந்த வல்லெழுத்தாறின் மேலதாய் வரும் என்க.

குறியதன் முன்னரென்றார். என்னை? யாண்டும் முன்னர்வருவது குறிலென அறிவித்தலோடு வருபவை உயிரும் உயிர்மெய் எனக் கோடற்கென்க.

உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தென்றார் இம்பர் வருபவை உயிர்மெய்க் குறினெடில்களெனக் கோடற்கென்க.

இதனை உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், புள்ளி என்றதனானும் 'ஆய்தத்-தொடர்மொழி" எனமேற்கூறுதலானும் உயிர் என்றது பெரும்பான்மையுங் குற்றுகரமேயாம். சிறுபான்மை ஏனையுயிர்களையுங் கொள்க" என்றதூஉம் பொருந்தாது. என்னை? தொடர்மொழியை, "மகரத்தொடர்மொழி" என்னுமிதுபோலவே ஆசிரியர் பலவிடத்தும் உரைத்து வருதலினாலே குற்றியலுகரத்திற்குத் தான் வரவேண்டுமென்னும் யாப்புறவின்மையான் என்க.

39. "ஈறியன் மருங்கினு மிசைமை தோன்றும்."

ஒரு சொல்லின்கண் இடைநிலையாக ஆய்தம் வரு முறைமை பொருந்திய தன்மையோடு ஈற்றுமருங்கினும் பொருந்தும் தன்மையைத் தோன்றும் என்க.

(உ-ம்) அஃகான்; கஃறீது; முஃடீது என்பனபோன்றன என்க.

40. "உருவினு மிசையினு மருகித் தோன்று
மொழிக்குறிப் பெல்லா மெழுத்தினியலா
வாய்த மஃகாக் காலை யான்."

சொற்குறிப்பினாலே நிறத்தின்கண்ணும் ஓசையின் கண்ணும் சிறு பான்மை அளபெடை அடையாளம் இடவேண்டும் என்னும்படி தோன்றும் ஆய்தமும் ஏனை எல்லா எழுத்துக்களும் செய்யுள் ஓசை சுருங்கா இடத்தானவையேல் அவ்வெழுத்தான் இயலா என்க.

இச்சூத்திரத்திற்கு உரைவகுத்தாரெல்லாம் உண்மைப்பொருள் அறியாராய் மாறுபட்டமையும் நன்னூலார் கொண்ட மௌனநிலைமையும் அறியற்பாலன. ஆய்தப்புள்ளியை முன்னர்த்தனித் தெடுத்தோதினார். அதிகாரப்பட்டது அதுவேயாகலின்.

41. "குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு
நெட்டெழுத் திம்பரு மொத்தகுற் றெழுத்தே".

செய்யுளில் அளபெடுத்துக் கூறுக்கால் ஓசைகுன்று மொழிக்கண்ணே நெட்டெழுத்துக்களின் பின்னாகத் தமக்கினம் ஒத்தகுற்றெழுத்துக்கள் நின்று அவ்வோசையை நிறைக்கும் என்க.

42. 'ஐ ஔ வென்னுமாயீ ரெழுத்திற்
கிகர வுகர மிசைநிறை வாகும்."

தமக்கினம் இல்லாத ஐகார ஔகாரம் என்றுரைக்கப்படும் அவ்விரண்டெழுத்திற்கும் ஈகார ஊகாரங்கட்கினமாகிய இகர உகரங்களைச் சார்த்திக்கூற அவை அக்குன்றிசை மொழிவயின் நின்று ஓசையை நிறைப்பனவாம் என்க.

43. "நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி".

தனித்துயிருடன் வரும் ஓரெழுத் தொருமொழி நெட்டெழுத்தேழேயாம்.

ஏகாரம் பிரிநிலையாகும். என்னை? உயிர்க்குற்றெழுத்தும் உயிர்மெய்க்நெட்டெழுத்தும் அவ்வாறு வாராமையின்.



44. "குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே".

உயிர்க்குற்றெழுத்துக்கள் ஐந்தும் ஓரெழுத் தொருமொழியாக நிறைந்து வருதல் இல. ஆயின் அவை சில மெய்யுடன் கூடிநிறைந்து நின்று மொழியாமென்க.

45. "ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி
யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழியுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே."

ஓரெழுத்தானாகும் ஒருமொழியும் இரண்டெழுத்தானாகும் ஒருமொழியும் மூவெழுத்தாதியாக இசைக்கின்ற தொடர்மொழியுடனேகூட அவை தோன்றிய நெறிக்கண் மொழிகளின் நிலைமை மூன்றேயாம்.

ஓரெழுத்தொரு மொழியாவது தனித்த உயிர் எழுத்தாலாவது உயிர்மெய் யெழுத்தாலாவது பொருள்பெற்று வருவது

ஈரெழுத்தொரு மொழியாவது உயிராவது உயிர்மெய்யாவது முதலெழுத்தாகவும் மெய்யாவது உயிர்மெய்யாவது இடையெழுத்தாகவும் பொருள்பெற்றுவருவது.

தொடர்மொழியாவது அவ்வீரெழுத்தொரு மொழியோடு உயிர்மெய்யாவது மெய்யாவது ஒன்றும் பலவுந் தொடர்ந்து வருவது.

இதுகருத்தன்றாயின் மேலே மகரத்தொடர்மொழி னகரத்தொடர் மொழி ஈரெழுத் தொருமொழி ஈரொற்றுத்தொடர்மொழி எனப் பலவிடத்தும் ஆட்சிசெய்தது குற்றமாகுமென்க. இதற்குரைவகுத்தாருக்கெல்லாம் குற்றியலுகரத்தைச் செய்யுளியலிலல கிடாமைபற்றி யீண்டு அலகிடல் கூடாதென யாவர்தாம் கூறினாரோ. அல்லதூஉம் வல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றுத் தொடர்மொழி இடையொற்றுத் தொடர்மொழி ஆய்தத் தொடர்மொழி என்னும் இவைகளில் கொக்கு கொங்கு சார்பு கஃசு என்பவை தொடர்மொழி ஆகுங்கால் மெய்யளவு பெறுவதையும் ஈரொற்றுத் தொடர்மொழி எனலையும் அறியார் போலும்.

மேலும் அவர்களில் ஒருவர் அம்மூவகை மொழிகளுக்கும் மேற்கோளாக ஆ. மண, வரகு, கொற்றன் எனக்காட்டிய உரையாசிரியரை மறுத்து ஆ, கா, நா ஓரெழுத்தொருமொழி எனவும், மணி வரகு

கொற்றன் ஈரெழுத் தொருமொழி எனவும், குரவு அரவு மூவெழுத் தொருமொழி எனவும் கணவிரி நாலெழுத் தொருமொழி எனவும் அகத்தியனார் ஐயெழுத் தொருமொழி எனவும், திருச்சிற்றம்பலம் ஆறெழுத்தொருமொழி எனவும், காட்டினர். அவரை உள்ளிட்டார் அனைவரையும் மற்றொருவர் மறுத்து அ ஆ ஓரெழுத்தொருமொழி எனவும், க கா அல் ஆல் ஈரெழுத்தொருமொழி எனவும் கல்கால் மூவெழுத்தொருமொழியாகிய தொடர்மொழி எனவும் காட்டினர். "நெட்டெழுத்திம்பரும்" என்ற சூத்திரத்தாலே குறிப்பிட்ட, நாடு, என்பது போன்றமைப் பின்னர் ஈரெழுத்தொருமொழியாக ஆசிரியர் காட்டினரேயன்றி அதனை இவர்கள் கூற்றுப்படி ஓர் எழுத்தொருமொழியாகவும் நாலெழுத்தொரு மொழியாகவும் காட்டாமையே அவர்களுரைகளைப்போலியுரைகள் என்னும்.

இத்தொடர் மொழிகளின் உண்மைப்பொருளை அறியமாட்டாத நன்னூலார் தாம்வேறு வகுப்பார் போன்று அவைகருவியாக எடுத்துக்கொண்ட விஷயங்களைப் பாழ்படுத்தினர். அவைகளை ஆண்டுக் காட்டியவற்றால் உய்த்துணர்க. பின்னரும் அவர் "னகரவிறுதி யஃறிணைப் பெயர்கள்" எனக்கூறி "டகரத்தொடர்மொழி" என்னும் சூத்திரத்தான் அமையும் பொருண்மொழிகளைப் பெறாது மயக்கியதைப் பின்னர் விளக்கிக் காட்டுதும்.

46. "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்."

தனிமெய் யெழுத்துக்களது நடப்பு அகரத்தோடு பொருந்தி நடக்கும் என்க.

அ ஆ விரண்டும் அங்காந்து இயலுவதனானும், அங்காவாது எழுத்துப் பிறவாமையானும் எல்லா எழுத்திற்கும் அதுவே முதன்மை பெற்றதைக் கீதையிற் கண்ணனும் குறளில் வள்ளுவரும், "அவற்றுள் அ ஆ ஆயிரண்டங்காந்தியலும்" என்னும் சூத்திரத்தால் ஆசிரியரும் யாவர்க்கும் புலனாமாறு விளக்கியவற்றைக் கருதாது உச்சிமேற்புலவர் கொள்நச்சினார்க்கினியர் க சட த பறஙஞண நமன யரலவழள என அகரம் அவைகளை இயக்க வருவதனையே எல்லாவற்றிற்குந் தலைமை எனக்கூறிய அவ்வகரமாகவும், அஃது உயிரின்கண் வருவது பிறர்க்குப் புலனாகாமையின் ஆசிரியர் கூறாததாகவும், இவ்வாற்றானே சிறிது உண்மைத்தன்மையும் கூறினாராகவும் கருதித்தவறுபட்டனர்.



47. "தம்மியல் கிளப்பி னெல்லா வெழுத்து
மெய்ந்நிலை மயக்க மான மில்லை."

மெய்யும் உயிர்மெய்யுமாகிய எல்லா எழுத்துக்களும் வேறுபொருள் குறிக்கும் இயல்பினவன்றித் தம்மியல்பே குறிக்குமிடத்து மெய்ந்நிலை மயக்கமாகாதது குற்றமில்லை என்க.

எல்லா எழுத்துக்களும் வேறுபொருள் குறித்துத் தம்மியல்பே குறியாதவிடத்து மெய்ந்நிலைமயக்க மாவது குற்றமுண்டு என எதிர்மறையாகப் பொருள்பண்ணியவிடத்தும் அவ்வாறு பிழையாது சிறத்தலினாலே இவ்வுரை மெய்யுரை என்க.

உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் "பன்னீருயிரும் மெய்யின் தன்மையிலே தம்முடைய தன்மை மயங்கிற்றாகப் பெயர் கூறிற் குற்றமில்லை" என்றதை எதிர்மறுத்து எதிர்முடிவு செய்யினும் குற்றம் ஆகாமையால் அவ்வுரை மெய்யுரை யன்மையறிக. மேலும் அவர் இதற்கு உதாரணமாக "வல்லெழுத்தியை யினவ்வெழுத்து மிகுமே" எனவும் "மெல்லெழுத்தியையி னிறுதியோடுறழும்" எனவும் காட்டியதூஉம் பொருந்தாது. என்னை? "மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே" என்றதனானே முன்னர் வருவது மெய்யெனவும் பின்னர் வருவது உயிர் எனவும் உய்த்துணரவைத்து அதனை இடைநிலைமயக்கத்தானும் புணரியலானும் ஆட்சிசெய்து நிலைநாட்டியது நிரம்பவேண்டித் தொடர்மொழிகளின் ஒன்றன் சார்பாலே விளக்கிப் போவதால் இவர் கூறியவற்றைப் பெறாதும். அதுகொண்டு இவர் கூறியபடி இச்சூத்திரம் உரைபெறுமேற் கூறியது கூறலாய் முடியும் என்க. அன்றியும் ஆசிரியர் ஓரிடத்தில் ஒன்றுவராதெனக் கூறியவர் பின்னரும் அது மற்றோரிடத்தில் வருமாயின் "வரினும் மானமில்லை" என்றே கூறிப் போவது வழக்கமாதலினானும் அவ்வாறே ஈரொற்றுவன வற்றையும் பிறவற்றையும் விளக்கிப் போதலினானும், அல்லாமலும் அவரே "முதலா வேன தம்பெயர் முதலும்" என்பதற்கு இச்சார்பின்படியே தழுவி உரை செய்தலினானும் அவருரைபோலி உரை என்க.

48. "யாழ வென்னு மூன்று மொற்றக்
கசதப ஙஞநம வீரொற் றாகும்".

கசதபக்களுடனும் ஙஞநமக்களுடனும் யரழவென்று சொல்லப்படும் மூன்று புள்ளிகளும் பொருந்த ஈரொற்றாகும் என்க. எனவே இடைநிலையிற் பிறவாசாமை பெற்றாம். இவை ஈரொற்றாவனவன்றி மெய்ந்நிலை மயக்க வேறுபாடின்மை யுணர்க. ஈரொற்று இடைநிலைகளின் ஈற்றின் வற்ற உயிர்மெய் எழுத்துக்கள் பெற்றே வருமென்க.

49. "அவற்றுள்:—ரகார ழகாரங் குற்றொற் றாகா".

முன்னர்க் கசதப ஙஞநம என்பனவற்றோடு ஈரொற்றுத் தொடர்மொழியாக முன்வரும் யர்ழ என்னும் மூன்று மெய்கள் என்ற அவற்றுள் ரகார ழகாரங்கள் தனிக்குற்றெழுத்தைத் தமக்கு முதனிலையாகக் கொள்ளாவென்க.

இதனானே ரழக்கள் ஈரெழுத் தொருமொழியின் கண்ணும் ஈரொற்றுத் தொடர்மொழியின் கண்ணும் குற்றொற்றை முதனிலையாகக் கொள்ளா என்பது போதரும் என்க. எனவே யகரம் அவ்விருவகை மொழிக்கண்ணும் முதனிலையாக எல்லாவற்றையும், மெய்யாகும் போதும் உயிராகும்போதும் கொள்ளும் எனவும் ரழக்களும் உயிர்மெய்யாகும்போது மாத்திரம் எல்லாவற்றையும் முதனிலையாகக் கொள்ளும் எனவும் இவைபோன்ற பிறவற்றையும் ஆசிரியர் உய்த்துணர வைத்தமை அறிக. முதனிலைகளுக்குப் பிறவற்றைச்சினைகளாக்கிக்கொண்டு பொருந்துமாறு புணர்த்திக்கொள்க. அவற்றால் அர் முதலியன அடங்கும் என்க. இவ்வாறு ஈரெழுத் தொருமொழியையும் உள்ளடக்கற்கன்றே ஆசிரியர் இவைகளை அச்சூத்திரத்திலே பெய்துவைக்காது ஈண்டுவைத்தனர் என்க. இக்காட்டிய எல்லாம் அறியாத உரைகாரர் எல்லாம் புகர் புகழ் புலவர் என்பனவற்றையும் பிறவற்றையும் அடக்கிக்காட்டும் இடம் அறியாது செல்வாராயினர்என்க.

50. "குறுமையு நெடுமையும் அளவிற் கோடலிற்
றொடர்மொழி யெல்லா நெட்டெழுத்தியல."

எழுத்துக்கள் தொடர்ந்த மொழிகள் எல்லாம் செய்யுளின்கண் குறுகிய தன்மையாயும் அக்குறுமை நிறைவுபெற நெடியதன்மையாயும் ஆவனவற்றை அளவு கருவியாகக் கொள்ளுதலின் அவ்வாறு அளவெடுப்பதற்குக் கருவியாகிய நெட்டெழுத்துத் தன் இயல்பாவதன்றி அவற்றான் மாறுபடாதென்க.



எனவே அளபெடுக்குங்கால் நெட்டெழுத்தே இரண்டுமுதலாக நான்கு மாத்திரை வரையும் அளவுபெறுவது கருதி அஃது இரண்டு அன்றி நான்குமாத்திரை வரையும் பெறுமோ எனப்பிறக்கும் ஐயம் அகற்றுவான் வேண்டியே ஆசிரியர் இச்சூத்திரம் வகுத்தார் என அறிக.

இதற்கு உரைவகுத்த உரையாசிரியர் தொடர்மொழிக் கீழ் நின்ற ரகார ழகாரங்கள் எல்லாம் நெடிற்கீழ் நின்ற ரகார ழகாரங்களின் இயல்புடைய என்று கொள்ளப்படும் என்றது பொருந்தாது. என்னை? அவற்றை அவ்வாறு கொள்ளப் பிற ஏதுக்கள் இன்மையின் என்பது. ஆசிரியர் தனிக்குற்றெழுத்தோடு ஆகாதென்றார் அன்றி இணைக்குறிலையும் பிறவற்றையும் ஆகாவெனின் அவ்வாறு உரைக்கவேண்டுமென்க. அன்றியும் அவற்றை நெட்டெழுத்தினது இயல்புடையன எனப்பொருள் கூறியக்கால் பொருந்துமோவெனிற் பொருந்தாது. என்னை? அப்பொருள் எல்லாம் முன்னர்ச் சூத்திரத்தாலே கொள்ளக் கிடத்தலின் என்பது.

பின்னரும் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் அவ்வுரையை மறுத்து அளபெடையில் நெட்டெழுத்து மாத்திரை மிக்குநடக்கும் என உரைவகுத்ததூஉம் பொருந்தாது. என்னை? அளபெடை என்பது நீட்டம்வேண்டி நெட்டெழுத்தளவு பெறுதற்கு அதனைச் சார்ந்து எழூஉம் இனமொத்த குற்றெழுத்து எடையாகும் எனப் பொருள்படுவதனானும், இசை நிறை என்பதும் அவ்வாறே பொருள் படுவதனானும், பிறவாற்றானும் என்பது.

52. "செய்யு ளிறுதிப் போலி மொழிவயின்
னகார மகார மீரொற் றாகும்."

செய்யுட்கட் போலும் என்றதன் போலியாகிய போன்ம் என்னுமொழியின் இறுதிக்கண்ணுள்ள னகர மகரங்களும் ஈரொற்றாகும்.

இதற்கு மேற்கோளாகப் பிற்காலத்தார் மருளினும் மருண்ம் என்னும் ஒருபுதியதைக் காட்டுவது பொருந்தாது. என்னை? ஆசிரியர்க்கது கருத்தாயின் செய்யுள் இறுதிப்போலியை விளக்கியதைப் போலவே விளக்கி இருப்பர் என்பது. இவ்வாறு நம்மனோர் புகுத்தி இடர்ப்படாதிருத்தற்கன்றே "னகார மகாரமீரொற்றாகும்" என விதந்து கூறினர்.

52. "னகாரை முன்னர் மகாரங் குறுகும்."

முற்கூறிய மொழியின் இறுதிக்கண்ணுள்ள னகரத்தின் முன்னர்வந்துள்ள மகரம் தன் அரைமாத்திரையிற் குறுகுமென்க.

அரைக்கால் மாத்திரை முதலியன ஈண்டாராய்ச்சி இன்மையானும், கான்மாத்திரைக்குக் கீழானவற்றைக் கான்மாத்திரையாகவும், அதற்கு மேலானவற்றை அரைமாத்திரையாகவும், கோடன்மரபாகலானும், மருண்ம் என்றதை இதனுக்கு மேற்கோள் காட்டுவது பொருந்தாதென்க. அது கான்மாத்திரையின் மிகுதிபட்டும் அரைமாத்திரையிற் குறைவுபட்டும் இருப்பதனைச் செவிகருவியாக உணர்ந்து கொள்க.

53. "மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினு
மெழுத்திய றிரியா வென்மனார் புலவர்."

எழுத்துக்களைச் சொல்லாகத் தொடர்வுபடுத்திக் கூறினாலும், அவ்வாறு கூறுவனவற்றுள் சில சிலவற்றைச் சார்ந்து வருவதனாலும், சில, சிலவிடத்தே வேறுபட்டு வருவதனாலும் வேறுவன தெரிந்து சொன்னாலும், அவ்விருவகையனவும் எழுத்துக்கள் ஆகும் தன்மையில் திரியா என்று புலவர் கூறுவர் என்க.

எழுத்தெனப்படுப மூன்றலங்கடை முப்பஃதென்பு எனஒருவாறு ஏனையவற்றைச் சார்த்திக் கூறுமுகத்தானே அவற்றின் வேறுபட்டனவோ எனவும், மகரக்குறுக்கம் முதலாயினவற்றைக் கூறுமுகத்தானே அம்முப்பத்துமூன்று எழுத்துக்களினின்றும் இவை வேறுபட்டனவோ எனவும், பலவாறு பிறக்கும் ஐயமெல்லாம் இவ்வுரையால் அகற்றப்படுவதைக் கண்டுகொள்க.

உரையாசிரியர் இச்சூத்திரத்துக்கு எழுத்துக்களைச் சொல்லாக்கிக் கூறினும் பிரிதாக்கிக் கூறினும் மாத்திரை திரியாது என்று பொருள்கூறி அகரம் என்புழியும் அ என்புழியும் ஆலம் என்புழியும் ஆ என்புழியும் ககரம் என்புழியும் க என்புழியும் காலம் என்புழியும் கா என்புழியும் ஓசை ஒத்து நிற்கும் என்றது பொருந்தாது. என்னை? எழுத்துக்கள் முப்பத்துமூன்று என்றமையால் உயிர்மாத்திரம் அவ்வாறு வருவது முறைமையாகாமையானும் அ என் புழியும் அல் என் புழியும் உயிர்மாத்திரை பெறுகின்றதேயன்றி மெய்ப்பெறுமையானும் பிறவாற்றானும் என்பது.



பின்னரும் இச்சூத்திரத்திற்கு உரைவகுத்த உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர் செய்யுளியலில் ஒற்றும் குற்றுகரமும் செய்யுளில் அலகிடப்படா என்று கூறினும் அவ்விரண்டும் ஈண்டு எழுத்தாம் தன்மை திரியாவென்று கூறினவர் இதனுள் ஒற்றும் ஆய்தமும் குற்றுகரமும் எழுத்தாகி நின்று பொருள் தருதம் எழுத்தெனவும் அலகிடவும் பெறுவென்பது கூறினாராயிற்று. தெரிந்து வேறிசைத்தல் குற்றுகரத்திற்கு இன்றாதலின் ஏற்புழிக்கோடலான் ஒற்றிற்கும் ஆய்தத்திற்கும் கொள்க என்பதும் பிறவும் கூறியது பொருந்தாது. என்னை? குற்றுகரத்தைத் தெரிந்து வேறு இசைக்கப்பெறுதென்று அவரே நீக்கினமையாலும், மூன்றனுள் ஒன்றினை நீக்கி ஏனையவற்றிற்கு மாத்திரம் பொருத்துவது பொருந்தாமையாலும், அவ்வாறு ஆண்டாவது ஈண்டுகூறவேண்டுவது இன்றியமையாமை ஆகாமையாலும், ஒற்றினை அலகிடாது மொழியாக்குவது ஆசிரியர் கருத்து ஆகாமையாலும் பிறவாற்றாலும் என்பது.

[முன்னர்க்கூறியவற்றால் குற்றெழுத்தின் நெடுமையே நெட்டெழுத்து எனவும், அவ்வவற்றிற்கு அவ்வவற்றின் குறில்களே இனமாகும் எனவும், அளபு எழுங்கால் அக்குறில்களையே அடையாளமாகச் சார்த்தி எழுதவேண்டும் எனவும், அவ்வாறு இனமில்லாத ஐ ஔக்களுக்கு இ உக்களை இனமாகக் கோடல்வேண்டும் எனவும், தெரிவித்தலினாலே ஐ ஔக்களுக்கு இனமில்லாத வழிக்குறிலாவதுவே முறையாயிருப்ப அவற்றை நெடிலாக்கியது பொருந்துமோ எனவும், அம்மட்டோடன்றி இ உக்களை அவற்றினமாக்குவது எற்றிற்கெனவும் பலவாறாக ஐயம் பிறக்குமன்றே? அவ்வாறு பிறவாமைப் பொருட்டே பின்வருஞ் சூத்திரங்களை ஆசிரியர் எடுத்துக் கூறுவாராயினரென்க.]

54. "அகர விகர மைகார மாகும்."

அகரஇகரம் என்னும் இரண்டு உயிரும் இயைந்த ஓசையே ஐகாரம் என்னும் எழுத்தாகும் என்க.

(உ-ம்) அ+இ=ஐ.

55. "அகர வுகர மௌகார மாகும்."

அகரஉகரம் என்னும் இரண்டு உயிரும் இயைந்த ஓசையே ஔகாரம் என்னும் எழுத்தாகும் என்க.

(உ-ம்) அ+உ=ஔ.

56. "அகரத் திம்பர் யகரப்புள்ளியு
மையென் னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்."

ஐகாரம் என்ற நீண்ட உறுப்பானது (நெட்டெழுத்தானது) அகர உகரங்களாகிய முதற்கண் நின்று உறுப்பாவதோடு அவ்வகரத்திற்குப் பின்னர் யகரமாகிய புள்ளியோடு கூடிய முதற்கண் நின்றும் மெய்மை பெறும்படி தோன்றும் என்க.

நெடிலைச் சினையென்றார் குற்றெழுத்தினின்று தோன்றுதலின். இதற்குரைவகுத்த உரையாசிரியரை உள்ளிட்டாரும் நன்னூலார் போன்ற பின்னூலாரும் "மெய்பெறத் தோன்றும்" என்றதனாலே அவ்வகரம் வவ்வொடுசேர்ந்து ஔகாரம் ஆகும் எனவும் இவைபோலி எனவும் கூறியதூஉம், மற்றுமொருவர்பின்னொருவராகப் பலபடி மறுத்துக் கூறியதூஉம் பொருந்தாது. என்னை? அய் எனவும் அ இ எனவும் ஐ எனவும் அ உ எனவும் உரைத்துக் காணுழி இப்பிறப்பு முதலியவற்றால் ஒருசிறிதும் மாறுபடாததுபோல அவ் எனவும் ஔ எனவும் கூறும்பொழுது பல்லிதழ் இயைந்தும் இதழ் குவிந்தும் மாறுபட்டு வருவதனாலும் பிறவாற்றாலும் என்பது.

57. "ஓரள பாகு மிடனுமா ருண்டே
தேருங்காலை மொழிவயி னான்."

தனித்துக் கூறும்பொழுது இரண்டுமாத்திரை பெறும் அவ்விடம் அன்றியும் ஆராயுமிடத்து மொழிகளின் மூவிடத்தும் ஒருமாத்திரை பெறும் இடனும் உண்டு என்க.

"மைந்திறை கொண்ட மலைமார்ப வாகுமோ
நந்துழுத வெல்லாம் கணக்கு" எனவும்,

"கையுள் தாகி விடினும் குறும்பூழ்க்குச்
செய்யுள தாகும் மனம்" எனவும்,

"மணவில் கமழும் மலிதிரைச் சேர்ப்ப
கணையினும் கூரியவாம் கண்." எனவும்



வருவனவற்றாலும் பிறவற்றாலும் அவ்வாறுவதை உய்த்துணர்ந்து கொள்க.

58. "இகர யகர மிறுதி விரவும்."

ஐகார ஒலிக்கு இறுதியாக இகர யகரங்கள் தனித்தனிக் கலந்து வரும் என்க.

அவ்வாறு ஐகாரம் ஆகிய சினைதோன்றுவதற்கு அகர இகரங்களும் அகரயகரங்களும் முதலாம் என்றதில் அவ்வெழுத்துக்கள் ஒலிக்கும் வரிசையை முன்னர் "அகரத்திம்பரென்" றமையால் ஐகாரமாகிய சினைக்கு முதலாவனவற்றில் அகரம் முதற்கண் ஒலிக்க வரும் என்றாராயிற்று. இச்சூத்திரத்தாலே அதன்பின்னர் இகர யகரங்கள் ஒலிக்கும் என்றாராயிற்று.

இதுகருதியன்றே பின்னர் வருபவைகளாகிய இகரயகரங்களில் யகரம் மெய்யானபடியால் அதனைவிலக்கி இகரத்தை ஐகாரத்திற்கும் உகரத்தை ஔகாரத்திற்கும் இனமாக்கினர் என்க. அளபெடைக் குறியீட்டினை இதனானும் உய்த்துணர்ந்துகொள்க.

இச்சூத்திரங்கட்கு உரைவகுத்தாருள் ஒருவர் இவையெல்லாம் போலி எனவும் அவற்றுள் அ இ என்பதனைக் கொள்ளற்க எனவும் பிறவற்றை அவ்வாறு கூறுமளவும் சென்றதோடு இகரவீற்றுப்போலி மொழிக்கண் யகரமும் அதுபோல இகரமும் விரவிவரும் எனவும் கூறினர்.

மற்றொருவர் அன்னாருரையே தழுவி உரைத்து அய் என்பதனையும் அவ்வென்பதனையும் நீக்கிப் பிறவற்றைக் கொள்ளற்க எனவும் கூறினர்.

இவற்றை எல்லாம் பிற்காலத்தார் தத்தம் மனப்போக்கையே தலைமையாகக்கொண்டு வேண்டியவரை வேண்டாத இடத்துப் புகழ்ந்தும் வேண்டாதவரை வேண்டிய இடத்து இகழ்ந்தும் போவாராயினர்.

இன்னார் கூறியவெல்லாம் மெய்யுரையாகாமை எமதுரைகொண்டுய்த்துணர்க.

59. "பன்னீ ருயிரு மொழிமுத லாகும்."

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் மொழிக்கு முதலாம் என்க. என்னின் ஐந்து குற்றெழுத்துக்களும் மொழி நிறைபிலவாகும் பொழுது பன்னிருயிரும் மொழிக்கு முதலாவது எங்ஙனம் எனின்? ஓரெழுத்தொருமொழிக்கே ஆண்டு வரையறை செய்தமையாலும் ஈண்டு ஏனைய மொழிகளையும் இணைத்துக் கூறுதலாலும் அவ்வாறு பொருந்துமி இயையும் என்க.

அன்றியும் ஓரெழுத்தொருமொழிக்கு முதலிடைகடை என்னும் வேற்றுமை இன்மையின் அதனை எடுத்து விளக்கும்போது வாளா சென்றும் அதன்பிறகு ஏனையவற்றை விரவிக் கூறியும் வந்த ஆசிரியர் ஏனையவற்றின் முதலீறுகளை விளக்குவாராயினர்.

இதுகொண்டே ஓரெழுத்தொருமொழி தனித்த உயிராவது உயிர்மெய்யாவது பொருட்பொருத்தமுற வருவதுவே என உய்த்துணரவைத்தமையைக் கண்டுகொள்க. இது கருத்தன்றாயின் "மொழி நிறைபில" என்றவர் முதலீறுகளை ஆண்டும் எடுத்துக் கூறியே இருப்பர் என்க. அன்றியும் ஓரெழுத்தொருமொழியாக நெட்டெழுத்தேழும் வரும்போது ஔகாரம் மெய்யோடியைந்தே வருதலின் அவ்வோரெழுத்தொருமொழியின் உண்மையைக் காண்க. இதனானும் உயிர்மெய் யெழுத்தை ஈரெழுத்தொருமொழியாக்குவது பொருந்தாமை உய்த்துணர்க.

60. உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா".

உயிரோடு கூடிய மெய்யல்லாதனவாகிய தனிமெய்கள் மொழிக்கு முதலாகா என்க.

"உயிர்மெய்யல்லன" என்றார். எழுத்துக்கள் முப்பத்துமூன்று ஆதலின் என்க.

61. "கதந பமவெனு மாவைந் தெழுத்து
மெல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே."

கதநபம என்று கூறப்பட்ட ஐந்து தனிமெய்யும் பன்னிரண்டு உயிரோடும் மொழிக்கு முதலாதற்குச் செல்லும் என்க.

இதற்கும் இதற்கு முன்னரும் இதற்குப் பின்னரும் காட்ட வேண்டும் மேற்கோள்களுள் இன்றியமையாச் சிலவற்றுள்ளும் ஒருசிறந்தே விளக்கி இருப்பதை இவற்றை எல்லாம் முறைபெறத் தொகுத்து நூலாக்கும்போது செம்மைப்படுத்துதும்.



62. "சகரக் கிளவியுமவற்றோ ரற்றே
அஐ ஔவெனு மூன்றலங் கடையே."

கதநபமக்கள் மொழிக்கு முதலாதற்குரிய பன்னிரண்டு உயிர்களில் அ ஐ ஔ என்னும் மூன்றல்லாத இடத்து உள்ளனவாம் ஒன்பதுயிர்களோடு சகரமெய்யும் அவற்றைப்போல மொழிக்கு முதலாகும் என்க.

"அ ஐ ஔவொடு சகர முதலாது" எனக்கூறாது இங்ஙனம் பெருக்கிக் கூறியது எற்றிற்கெனின் அம்மூன்றும் பிறவற்றொடு முதலாமெனப் பொருள் தருவதனானும் பிறவாற்றானும் அங்ஙனம் கூறினாரென்பது.

63. "உ ஊ ஒ ஓ வென்னு நான்குயிர்
வஎன் னெழுத்தொடு வருதலில்லை."

உ ஊ ஒ ஓ என்று சொல்லப்படுகின்ற நான்கு உயிரும் வ என்னும் மெய்யெழுத்தோடு மொழிக்குமுதல் வருதலில்லை என்க.

64. "ஆ எ ஒவெனு மூவுயிர் ஞகாரத் துரிய."

ஆ எ ஒ என்று சொல்லப்படுகின்ற மூவுயிர்கள் ஞகாரமெய்யோடு மொழிக்கு முதலாதற்கு உரியன பிறவுரியவல்ல என்க.

65. "ஆவோடல்லது யகர முதலாது."

ஆகாரத்தோடு அல்லது யகரம் மொழிக்கு முதலாகாது என்க.

66. "முதலா வேன தம்பெயர் முதலும்."

மொழிக்கு முதலாகாதனவாகிய ஏனைமெய்களும் தத்தம்பெயர் கூறும்போது முதலாகும் என்க.

"முதலாகாவேன தம்பெயர் முதலும்" என்றமையாலே முதலாவன தம்பெயர் கூறும்போதும் முதலாகும் என்பது தானே பெறப்பட்டது. இதனைக் கருதாத உரைகாரருள் ஒருவர் உம்மைகளை இடையிலே விரித்துப் பொருள் கூறுவர்.

67. "குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி
னொற்றிய நகரமிசை நகரமொடு முதலும்."

குற்றியல் உகரமானது முன்னிலையில் முறைப் பெயரிடத்துத் தனிமெய்யாய் நின்ற நகரத்திற்கு மேல்நின்ற நகரத்தோடு கூடி மொழிக்கு முதலாம் என்க.

இவ்வாறு ஆசிரியர் குற்றியலுகரம் முதலும் என்றதைக் கருதிய நன்னூலார் சுட்டு முதலியவற்றை ஒட்டி ஙகரமும் முதலாகும் என்றது பொருந்தாது. என்னை? மெய்யெழுத்துயிரோடன்றி முதலாகாதெனக் கூறியதனாலே உயிரன்றே முதலாம் என்பது வெளிப்படையாதலின் இவ்வாறாசிரியர் மொழிக்கு முதலாம் என்றனர். அங்ஙனம் என்ற தொடக்கத்தன வற்றுள் சுட்டு வினாவை ஒட்டிவருவது ஙகரப் புள்ளியாகும். ஆகவே அங் ஆங் இங் ஈங் உங் ஊங் எனவும் யாங் எனவும் உயிரெழுத்துக்களையும் உயிர்மெய் யெழுத்துக்களையும் அடுத்து ஙகரப்புள்ளிவரும். அவ்வாறு வருவனவற்றை நன்னூலாரன்றிப் பிறர் உயிர்மெய்யாகக்கொள்ளார். அன்றியும் யாங் என்பதை அவர் கூற்றுப்படி ஙாவாகக்கொண்டு யகரமெய்ப்புள்ளியைத் தனியாக்கி மொழிமுதற்படுப்பதூஉம் ஒருவியப்பே. மேலும் ஙனம் என்பது ஙானம் என அவர் அறிவு நீண்டவாறே நீண்டமையுங் கண்டுகொள்க. இவற்றாலும் பிறவற்றாலும் அவர் கூற்றுப்பொருந்தாது என்பது.

மேலும் ஙகரமுதலாகும் என்றதை இலக்கண விளக்க நூலுடையார் செவ்வனே மறுத்த மறுப்பைக் கண்டுதெளிக. ஆயின் அதனை மற்றொருவர் மறுத்தனரே எனிற்பொருந்தாது. என்னை? அக்காலத்திலே அவர் கூறியபடி ஙகரமொழிக்கு முதலாகி வருமெனில் அவ்வாறுவதைக் கூறுவதுபோலன்றி ஈண்டுரைத்தமை பொருந்தாமையாலும், "முதலாகெழுத்து ஙகரமொடு தோன்றும்." என்பது யரழ வென்னும் புள்ளி முன்னர் இடைநிலை மயக்கமாக அவ்வாறு வரும் என்றாரன்றி அங்ஙனம் முதலியவற்றிற்காகும் என்னாமையாலும் ஙகரத்தை அதிகாரப்படுத்துழி அவர் கூற்றைக் கூறாமையாலும் முதலிடைகடை என்பது ஒருமொழிக்கண் அன்றி இருமொழிக்கண் ஆகாமையாலும் அவ்வாறு இருமொழிக்கண் ஆவது புணர்ச்சி எனப்படுமன்றி இடைநிலைமயக்கம் எனப்படாமையாலும், "முதலாகெழுத்து ஙகரமொடு தோன்றும்" எனத்தமக்கு வேண்டியவற்றைக்காட்டிப் பொருந்தாத ஏனையவற்றை மறைப்பது நெறியாகாமையாலும் பிறவாற்றாலும் என்பது.

68. "குற்றிய லுகரமொடு பொருள்வேறு படா
தப்பெயர் மருங்கி னிலையிய லான



நுதற்குச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரைத்தருளிய அரிய வுரையே மெய்யுரை எனக்கண்டுகொள்க.

69. "உயிர்ஔ வெஞ்சிய விறுதி யாகும்."

அளபெடையில் ஐந்துகுறிலும் ஓரெழுத்தொருமொழியில் ஔகாரம் ஒழிந்த ஏனைய ஆறும் ஆகிய பதினோருயிரும் மொழிக்கு ஈறாகும் என்க.

இதனாலும் ஓரெழுத்தொருமொழி முதலாயவற்றின் உண்மைநிலையோர்ந்தறிக.

உரையாசிரியரை உள்ளிட்டார் அனைவரும் இச்சூத்திரத்திற்கு மேற்கோளாக உயிர்மெய் ஈற்றுச் சொற்களைக் காட்டியது பொருந்தாது. என்னை? "கவவோ டியையி னௌவு மாகும்" எனப்பின்னர்ச் சூத்திரிப்பதால் என்க.

70. "கவவோ டியையி னௌவு மாகும்."

ககர வகரங்களோடு பொருந்திவரின் ஔகாரமும் மொழிக்கு ஈறாகும் என்க.

உம்மையால் ஏனையுயிரும் மெய்யோடீறாகும் என்பது பெற்றாம். இவ்வுரை ஈண்டமைவது கருதியே அடுத்த சூத்திரத்தால் எகரமெய்யோடு ஈறாகாது எனவிலக்குப? இக்கருத்து அறியாத உரைகாரர் எல்லாம் முறை பிறழப்பொருள்கொண்டு உரைவகுத்தது பொருந்தாது என்க. யாம் கூறியவுரை மெய்யுரை என்பதை அடுத்தசூத்திரமே வலியுறுத்தும்.

71. "எ எனவரு முயிர்மெய் யீறா காது."

"பன்னிருயிரும்" என்ற சூத்திரத்தாலே அளபெடையில் மொழிக்கு ஈறாக எ எனவரும் எனக்கூறிய உயிரெழுத்தானது மெய்யுடன் ஈறாகாது என்க.

இக்கருத்து அறியாத உரைகாரரெல்லாம் "பன்னீருயிரும்" என்ற சூத்திரத்தால் எகரம் ஈறாவதை ஒப்புக்கொண்டும் அதனை ஈண்டுப் பொருத்துமுறை காணாது எகரம் உயிரோடு ஈறாகும் உயிர்மெய்யோடு ஈறாகாது எனக் கூறியது கூறித்தவறுபட்டனர்.

72. "ஔவு மற்றே நவ்வலங் கடையே".

ஔகரமும் நகரமெய்யல்லாத ஏனையவிடத்து அவ்வாறே ஈறுகாதெனக.

73. "ஏ ஒ எனுமுயிர் ஞகாரத்தில்லை."

ஏ ஒ என்னும் உயிர் ஞகாரத்தோடு ஈறுவதில்லை என்க. பிறமெய் யோடு ஈறுவது காண்க.

74. "உ ஊ கார நவவொடு நவிலா."

உகரம் நகரத்தோடும் ஊகாரம் வகரத்தோடும் பயிலா என்க.

எனவே ஊகாரம் நகரத்தோடும் உகரம் வகரத்தோடும் பயிலும் எனக்கொள்க.

இதற்குரை வகுத்தாரது கூற்றுக்களெல்லாம் இருவகை வழக் கொடு மாறுபட்டமை யுணர்க.

எமக்கு இச்சூத்திர வுரையை அரசஞ்சண்முகனார் உரைத்தா ரென அறிக.

75. "உச்ச, கார, மிருமொழிக் குரித்தே."

76. "உப்ப கார மொன்றென மொழிப
விருவயி னிலையும் பொருட்டாகும்மே."

77. "எஞ்சிய வெல்லா மெஞ்சுத லிலவே."

78. "ஞணநம னயரல வழள வென்னு
மப்பதி னொன்றே புள்ளி யிறுதி."

79. "உச்ச காரமொடு நகாரஞ் சிவணும்."

80. "உப்பகாரமொடு ஞகாரையு மற்றே
யப் பொரு ளிரட்டா திவணை யான."

81. "வகரக்கிளவி நான்மொழி யீற்றது."

இவற்றிற்கெல்லாம் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் மிகச் செவ்விதாகப் பொருள்கண்டு வகுத்தவுரையை மெய்யுரை எனத் தேர்ந்து போற்றித் தெளிக.

82. "மகரத்தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத்தொடர்மொழி யொன்பஃ தென்ப
புகரறக் கிளந்த வஃறிணை மேன."



இணைக்குறிலும் குற்றொற்றும் அல்லாத எழுத்துக்கள் தொடர்ந்த ஈரெழுத் தொருமொழியின் ஈற்றின்கண் வரும் மகரந்தொடர்ந்த தொடர்மொழி நான்கும் ஒற்றீற்றுக் குறில் நெடில் அல்லாத எழுத் துக்கள் தொடர்ந்த ஈரெழுத்தொருமொழியின் ஈற்றுக்கண் வரும் னக ரந்தொடர்ந்த தொடர்மொழி நான்கும் இணைக்குறில் ஈற்றியல்பாய் அமைந்த னகரந்தொடர்ந்த னகரத்தொடர்மொழி ஒன்றும் ஆகிய அவ்வொன்பதும் ஒன்றனோடு மற்றொன்று மயங்குதல் நீங்கின என்க.

எனவே அஃறிணையில் இணைக்குறில் அடுத்த மகரமே மயங்கும் என்பது பெற்றும்.

மகரத்தொடர்மொழி னகரத்தொடர்மொழி என்பன் மகரனகரங் கள் தொடர்வதனான் அவைதொடர் மொழியாயின என்க.

இதற்கு உரைவகுத்த உரையாசிரியர் செகின் முதலியன மயங் காதன எனவும் நிலம் முதலியன மயங்குவன எனவும் உரைத்ததூஉம் பின்னர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் வரைந்தன ஒன் பது எனவும் எகினம் என்றது போல்வன திரிபுடையன அவைகளைக் களைந்து வரும் எனவும் நிலம் நிலன் பிலம் பிலன் என இத்தொடக்கத் தன தம்முண் மயங்குவன எனவும் வட்டம் ஓடம் இவைபோலவன மயங்காதன எனவும் வரையறை னகரத்தின்மேற் செல்லும் எனவும் மயங்கா எனவே மயக்கமும் பெற்றும் எனவும் உரைத்ததூஉம் பொ ருந்தாது. என்னை? ஆசிரியர் ஒன்பது எனவரை யறுத்தும் மயங்கி யும் மயங்காதும் வருவதனானும் மயிலை நாதர் போன்றார் வலியான் முதலிய தொடக்கத்தனவற்றைக் காட்டி மறுப்பதற்குப் பொருத்து வாய் காட்ட இவர்கள் கூற்றுப் பொருந்தாமையானும் பிறவாற்றானும் என்பது. இனி இச்சூத்திரத்தின் உண்மைப்பொருள் அறியாத நன் னூலார் ஒன்பது இறந்து வருமெனக்கொண்டு "மகரவிறுதி" எனச் சூத்திரித்துத் தவறுபட்டனர்.

அதற்கு உரை வகுத்த மயிலைநாதர் நிலம் முகம் என்னும் இத் தொடக்கத்தன உற்ழ்ந்த எனவும், "உறழாநடப்பனவுள" எனவே உறழாதன பெரும்பான்மையவாம் எனக்கொள்க எனவும் அவை வட் டம் முதலாய தொடக்கத்தன எனவும் இனி இவ்விதி இவ்வாறன்றி "மகரத்தொடர்மொழி............................................................

யனைறினமேன" என்று எகின் முதலாய ஒன்பதும் மயங்காதன எனக் கொள்ளின் பனியன் என்ற தொடக்கத்தன மயங்கப்பெறு என மறுக்க எனவும் கூறியது பொருந்தாது என்னை? மயங்குவன இணைக்குறிலன்றிப் பிற இன்மையானும் அன்றியும் அவர்காட்டிய பனியன் என்ற தொடக்கத்தன மகரனகரத் தொடர்மொழியாகாமையானும், ஆசிரியர் அருளிய அச்சூத்திரப் பொருளை அறியாது பலவாறாகப் பிதற்றுவதனாலும் பிறவாற்றானும் என்பது.

இனி உரையாசிரியரை உள்ளிட்டா ரனைவரும் கூறிய உரையை மற்றொருவர் மறுத்தும் ஓரெழுத் தொருமொழி முதலாயினவற்றை வேறாகக் கருதினமையாற் பலகூறிச் சிலவுரைத்தார் என்க.

## மூன்றாவது பிறப்பியல்.

83. "உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்
பல்லு மிதழு நாவு மூக்கு
மண்ணமு முளப்பட வெண்முறை நிலையா
னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி
யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பி னாக்கம் வேறுவே றியலாத்
திறப்படத் தெரியுங் காட்சி யான."

பிறப்பினது ஆக்கத்தை ஆராய்ந்து சொல்லுமிடத்துக் கொப்பூழ் அடியாகத் தோன்றி முந்துகின்ற காற்றானது தலையின்கண்ணும் மிடற்றின்கண்ணும் நெஞ்சின் கண்ணும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் என்ற இந்துடனே அக்காற்று நின்றதலையும் மிடறும் நெஞ்சங்கூட எட்டாகிய முறைமையுடைய தன்மையோடு கூடிய உறுப்புக்களோடு அமையத் தோற்றமான எழுத்துக்கள் எல்லாம் கூறுபட வேறுவேறு இயல்பினவாகத் தெரியும் என்க.

உயிர்ப்பிற்கு வரும் வளிபோலாது வேற்றுமை உடைத்தென்பார், "உந்திமுதலா முந்துவளி தோன்றி" எனவும், எழுத்துக்கள் எல்லாம் பிறப்பதற்கு அம்மூவிடத்தும் அவ்வளி நிலைபெற்று வரும் என்பார், "தலையினு மிடற்றினு நெஞ்சினுநிலைஇ" எனவும், பின்னர்



வகுத்த தானங்களை வளிசெல் நிலை என்பார், "பல்லு மிதழு நாவு மூக்கும் அண்ணமு முளப்பட வெண்முறை நிலையான்—உறுப்புற்றமைய" எனவும் கூறினர்.

இவற்றால் வளிதோன்று நிலை ஈதெனக் கூறாது எழுத்துப் புறத்திசைக்கக் கருவியாம் இடங்களையே பின்னர் மிடறு மூக்கு எனக் குறிப்பிட்டார் என்பது பெற்றாம். இதனையே "எல்லா எழுத்தும்" என்ற சூத்திரமும் வலியுறுத்தும் என்க.

இதனை ஆராயாத உரையாசிரியரை உள்ளிட்டார் எல்லாம் அவை தோன்று நிலையாகக் கருதிப் பொருளுரைத்தமை பொருந்தாமை உணர்க.

இந்நுணுக்கம் அறியாத நன்னூலார் வளிதங்கும் இடமாகிய அம்மூன்றனொடு மூக்கினையும் இணைத்துத் தவறுபட்டனர்.

மூக்கினையும் வளிசெல்லிடமாகக் கருதற்கன்றே "பல்லுமிதழு—நாவு மூக்கு—மண்ணமும்" எனச்சூத்திரிப்பாராயினர். அன்றியும் பல் இதழ் முதலியனவற்றை அவர்முறை பிறழவைத்துச் சூத்திரித்தமையால் தோன்றும் வழூஉக்குழூஉக்களையும் உய்த்துணர்ந்து கொள்க.

84. "அவ்வழிப்:—பன்னீருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்."

தமது நிலைமைதிரியாத மிடற்றின்கண் உண்டாகிய காற்றினால் பன்னிரண்டு உயிரும் மேலே காட்டிய நிலையான் உறுப்புற்றுத் தோற்றமாதம் அவ்வழியாலே ஒலிக்கும் என்க.

தந்நிலை திரியாமை என்பது, மிடற்றுவளியாலே ஏனை உறுப்புற்று எழுத்தாவனவும், தலைசார்ந்த பின்னர் இவனுற்று எழுத்தாவனவும் தலைசார்ந்து ஈண்டு உறுப்புற்று மூக்கின் வளிவழியால் எழுத்தாவனவும் எனவரும் பலவற்றுள்ளும் இவைதிரியா நிலைமையினவாம் என்க.

இதனை அறியாத நன்னூலார் "அவ்வழி—ஆவியிடைமைமிடறு—ஆகு—மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை" எனச் சூத்திரித்தார் இதன்பொருள்: அவ்வழியாகவே ஆவி இடைமை இடம் மிடறு ஆகும் மென்மை இடம் மூக்கு வன்மை உரம் பெறும் என்பது.

இடைமையில் ர்ல்வ்ழ்ள் என்பனவற்றிற் கவ்விடம் ஆகாது. ஏனை உறுப்பாவதை உரைத்தறிக. இவ்வாற்றாலே வன்மை முதலிய ஏனை நிலை பெறுமையும் கண்டுகொள்க. ஆயின் ஆசிரியர் உயிர்மிடற்று வளியான் இசைக்கும் என்றாரன்றே? அவற்றுள்ளும் அவ்விடைமை உறுவதுபோல அண்பன்முதனா விளிம்புறலும் இதழ்குவிதலும் உள வாதலின் வழுவாம் எனின் ஆகாது என்னை? இவற்றை உரைக்குங் காலைப் பிறவுறுப்புற்று ஆண்டு அவை வெளிப்படுதல் போலாது மிடற்றின் வழியே தடைபடாது அவ்வளி வெளிப்படுதலின் என்பது. அன்றியும் மெல்லெழுத்துக்களுக்கு "மூக்கின் வளியிசை யாப்புறத்தோன்றும்" என்றவர் வல்லெழுத்திற்குரைக்க மறந்தமையைக் கண்டறிந்து நன்னூலார் அறிவின் நுணுக்கம் நம்மனோர்கட்கறியும் பான்மைத்தன்று.

85. "அவற்றுள்:—அ ஆ ஆயிரண் டங்காந் தியலும்".

அப்பன்னிரண்டு உயிர்களுள் அகர ஆகாரங்களாகிய அவ்விரண்டும் அங்காந்து நடக்கும் என்க.

அகர ஆகாரங்கள் அண்ணத்தை அங்காந்தியலுவதை அறியாது அண்ணத்தின தொழிலாகிய அங்காத்தலையுடைய எனப்பொருள்பட நன்னூலார் சூத்திரித்தது பொருந்தாது என்னை? முயற்சியுள் அங்காத்தலையும் மிடற்றுள் வளிநிலை பெறுதலையும் உடைமையால் அவை ஒலியாவாதலின் என்பது. அதனாலன்றே இயலும் என ஆசிரியர் இயைத்தாரென்க. அன்றியும் அவர் "அங்காப்புடைய" என்றுரைத்தது பொருட் பொருத்தம் உறாததையும் உய்த்துணர்க.

உயிர்க்கிழவன் கட்டளையால் வரும் வளி அங்காந்து செல்லும் எனவறிக. இவ்வாறன்றி அதனை உடையதுவாகக் கூறுவது அறியாமைப் பாலதாம்.

இங்ஙனம்

K. S. நவநீதகிருஷ்ண பாரதி,
தலைமைத் தமிழ்ப்பண்டிதன்,
ஸ்ரீராமநாத வித்யாலயம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

# 13-வது புறப்பாட்டும் உரையும் IV.

செந்தமிழ் ௧௮-ந் தொகுதி ௬௭-ம் பக்கத்தொடர்ச்சி.

இதுகாறும் இச்செய்யுளினீற்றின் கண்ணே 'நாடுகிழவோன்' என வந்துள்ளது சேரனையே குறிப்பதாகுமென்பதனைப் 'பழனமஞ்ஞை... ......நாடுகிழவோனே' என்ற நான்குவரிகளையுங்கொண்டு ஸ்தாபிக்க முயன்று அவ்வரிகளினின்று நியாயங்களாகத் தரக்கூடியன வெல்லாவற்றையும் அரிதிற்றெரிந்தெடுத்து நண்பரவர்கள் உதவினார்கள். இந்நியாயங்கள் வலியற்றனவா மென்பது இவ்வுரையின் முதன்மூன்று பகுதிகளாற்றெளியப்படும். இனி 'இவன் யார்' என்ற வினாவை நுண்ணிதினாராயப்புகுந்து, அதற்கு நாடுகிழவோனென்ற பெயரினை விடையாகக்கொள்ளுதல் இலக்கணவிரோதமாகுமென்றும் வினையொன்றினை விடையாகக்கொள்ளுவதே இலக்கணத்தொடு பொருந்துவதாகுமென்றும் முடிவு கண்டு, இங்ஙனம் விடையாதல் ஏலாதாகவே 'நாடுகிழவோன்' விளியாய் நின்று சேரனையே குறிக்கவல்லதென்று துணிகின்றார்கள்.

நண்பரவர்களது ஆராய்ச்சியின் முடிவு 'இவன் யார்' என்றவாய்பாட்டில் வரும் வினாக்கட்கு வினையேயல்லது பெயர் விடையாகமாட்டாதென்பதேயாதலால் இவ்விஷயமே இப்பொழுது நன்கு விசாரிக்கப்படுதல் வேண்டும். 'இவன்யார்' என்ற வாய்பாட்டில் வரும் வினாக்கள் என்று யான் கூறியது 'இவள்யார்,' 'அவன்யார்,' 'அவள்யார்,' 'அரசன்யார்' 'குமரன்யார்' என்பன போன்று உயர்திணையொருமையும் யார் என்னும் வினைக்குறிப்பும் இயைந்துவரும் வினாத்தொடர்களையே. இவ்வகைய வினாத்தொடர்களுக்கு வினையே உரிய விடையென்று கூறிய நண்பரவர்கள் அக்கூற்றை யாதரிக்க வோருதாரணமேனும் நூல்களிலிருந்து காட்டமாட்டாது போயினமை சிந்திக்கற்பாலது. இவற்றிற்கு 'இவன் உண்கிறான்,' 'நடக்கிறான்,' 'இவன் நீடூழிகாலம் வாழ்க' என்பன போன்றன வுரிய விடைகளாய் வருதல் தமிழ்கூறு நல்லுலகத்து வழக்கினுஞ் செய்யுளினு மில்லையாகும். இங்ஙனமாகவும் வினையே உரியவிடையென்று கூறத்துணிந்ததன் காரணம் ஒருவாற்றானும் அறியக்கூடவில்லை.

இவ்வினாக்கட்குப் 'பெயர் விடையாக மாட்டாது' என்றெழுதுகின்றார்கள். ஆனால் 'இவன் யார்' என்று கேள்வி யெழுவதாயின் அதற்கு 'என்தம்பி,' 'என்மைத்துனன்,' 'கிராமத்தலைவன்' என்பன போன்ற பெயர்களால் விடையிறுத்தல் தமிழ்நாட்டிற் சர்வசாதாரணமாகக் கேட்கப்படுவதேயாம். இதுகாறுமில்லாத அதிநூதனகொள்கை யொன்றினை நிலைநிறுத்த நண்பரவர்கள் முயன்றுள்ளமை 'இது (நாடுகிழவோன்என்றபெயர் விடையாதல்) பலருமங்கீகரிக்கும்படி தோன்றுதலால்' என்று அவர்கள் தாமே கூறுவதா லறியலாகும். தோற்றத்தான் மட்டுமேயன்றி யுண்மையாகவே தமிழ்மக்களனைவரானும் இஃது அங்கீகரிக்கத்தகுந்ததுதானா வென்பது ஆராய்தற்பாலது. இவ்விஷயத்தை நிச்சயித்தற்குக் கற்றுத்துறைபோகிய நல்லாசிரியர்களினுங்காட்டிற் சிறந்ததுணையின்மை யெல்லார்க்கும் ஒப்பமுடிந்ததே.

முதலாவதாக இலக்கணவிளக்கமியற்றிய வைத்தியநாததேசிகர் கூறுவதை நோக்குக. அவர் முற்றுவினைக்கும் எச்சவினைக்கும் வேறுபாடு அறுதியிடுமிடத்து (சூ-229-உரை) 'உண்டான் என்றவழி யார் என்னும் அவாய் நிலைக்கட் சாத்தன் என்பது வந்து இயை'யு மென்றெழுதினர். அஃதாவது 'உண்டான் யார்' என்ற வினாவிற்குச் சாத்தன் என்பது போன்ற பெயர் விடையாய் வருதல் இலக்கணத்தொடு முற்றும் பொருந்துவதா மென்பதும் அவ்வாறு பெயரேயன்றிப் பிறிதொன்றும் விடையாய் வந்து இயைதலில்லை யென்பதுங் கூறியவாறாயிற்று. ஆகவே 'இவன்யார்' என்பதுபோன்றவினாவிற்குப் பெயரை விடையாகக் கொள்ளுந் தற்காலவழக்கு இக்காலத்துத்தானே இலக்கணமறியாதாரிடைத் திடீரெனத் தோன்றியதன்றென்பது நன்கறியலாகும்.

இனிப் பண்டை யுரையாசிரியர்களை யெடுத்துக்கொள்க. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'இவன்யார்' என்ற வினாவிற்குப் 'படைத்தலைவன்' என்றபெயர் விடையாயமைதலை யுதாரணங்காட்டி யுரை யெழுதியுள்ளார்கள் (தொல்-சொல்-வேற்-7) சீவகசிந்தாமணி யுரையில் 'அந்நகரினுறையும் மன்னர் மன்னன் யாரென்னின், பவணமாதேவனென்று பெயர் கூறப்படுவானொருவன்; அவன்றேவி யாரென்னின், முத்தமொப்பாளாகிய சயமதியென்பாளொருத்தி; அவர்பிள்ளை யாரென்னின், காமன்னனாகிய அசோதரன்' என்று நச்சினார்க்



னியர் வரைந்துசென்றனர் (2856-ம் செய்-உரை). ஈண்டெல்லாம்
பயர்களே விடையாயியன்றுள்ளமை காணலாகும். புறநானூற்று
ரைகாரர் (212-ம் செய்-உரை) 'நுங்கோயாரென வினவின்', எங்கோ
காப்பெருஞ்சோழன்' எனமுடிவுகாட்டினர். பதிற்றுப்பத்துரைகா
ர் (20-ம் செய்-உரை) 'நுங்கோ யாரெனவினவின் எங்கோ சேரலா
ன்' எனமுடிவுசெய்து பொருள் விளக்கினர். இவ்விரிடத்தும் பெயர்
ளே விடையாகத்தரப்பட்டுள்ளமை யெளிதினறியலாகும். பனம்பார
னாது சிறப்புப்பாயிரத்தினுரையிலே, ஆசிரியர் இளம்பூரணர் 'இந்திர
னாற் செய்யப்பட்ட ஐந்திரவியாகரணத்தினை நிறைய அறிந்த பழைய
காப்பியக் குடியினுள்ளோனெனத் தன்பெயரைத் தோற்றுவித்து அவ்
வாறு தொகுத்தான்: அவன் யாரென்னில் தவத்தான்வரும் பல்புகழ்
னை யுலகிலே நிறுத்தின தவவொழுக்கத்தினையுடையான்' என்றுபொ
ருள் விரித்தனர். இங்கே 'அவன்யார்' என்ற வினாவிற்குத் 'தவவொழுக்
த்தினையுடையான்' என்று பொருள்படுவதான படிமையோன் என்ற
பயரை விடையாகக் கருதிக்கொண்டமை யுணரலாகும். இங்ஙன
மாகத் தொல்காப்பிய இலக்கணத்திற்குப் 'பேருரையியற்றியுதவிய
வர், ப்ரஸ்துத வியவகார காரணமாகிய புறநானூற்றின் உரைகாரர்,
திற்றுப்பத்துரைகாரர்—இவ்வனைவரும் இவன்யாரென்ற வாய்பாட்
ல் வரும் வினாக்கட்குப் பெயர்களையே உரியவிடையாகத் தந்துள்ளார்
ள். ஆகவே நாம் ஆராய்ந்துவரும் வழக்கு உரைகாரர்களது காலந்
தாட்டே யுள்ளதென்பது இனிதிற் பெறப்படுவதாகும்.

இனிப் புராதனகவிஞர்பெருமான்களையெடுத்துக்கொள்க. லோ
ப்பிரசித்திபெறத்தக்க பெரும் புலவோர்களுளொருவராகக் கருதப்
டுங் கம்பர் தமது இராமாயணத்திலே பின்வருமாறு கூறியுள்ளார்:—

என்றலுமேயடியின்மிசைநெடிதுவீழ்ந்தழுவானைஇவன்யாரென்று
கன்றுபிரிகாராவின் துயருடையகொடிவினவக்கழற்கால்மைந்தன்
இன்றுணைவனிராகவனுக்கிலக்குவற்குமிளையவற்குமெனக்குமூத்தான்
குன்றனையதிருநெடுந்தோட்குகனென்பான்இந்நின்றகுரிசிலென்றான்"

(அயோத்-குகப்-66)

இச்செய்யுளில் இவன்யார் என்ற வினாவிற்குத்'துணைவன்', 'மூத்தான்,'
குகனென்பான்' எனப் பெயர்களே விடையாயமைந்தமை வெளிப்
படை.

திருத்தக்கதேவர் அருளிச்செய்த சிந்தாமணிக் காப்பியத்திலே பின்வரும் இரண்டு செய்யுட்களையும் நோக்குக:—

1. "உரைவிளையாமைமைந்தன்கேட்கியவுவந்துநோக்கி
வரைவிளையாடுமார்பன்யார்அவன்வாழியென்ன
விரைவிளையாடுந்தாரோயான்என................" (397)

2. "கொழுநனைக்குறிப்பினாலேகுமரன்யார்என்றுநோக்கக்
கழுமியகற்பினாய்நின்மைத்துனன்ஐயனென்ன......" (1730)

இங்கே 'மார்பன்யார்' என்ற வினாவிற்கு "யான்" என்றதன்மைக்குரிய பெயரும் குமரன்யார் என்றதற்கு 'மைத்துனன்' என்ற முறைப்பெயரும் விடையாக வந்துள்ளமை காணலாம். திருத்தக்கதேவர் கடைச்சங்கப்புலவருளொருவரன்றெனினும் அவர்களோடொத்த பெருமையுடையாராய் உரைகாரர்களுக்கு முற்பட்ட காலத்தே விளங்கியவர். ஆதலின், ஈண்டாராயப்படும் வழக்கு மேலே குறித்த உரையாளர்கள் நம் காலத்திற்கும் முற்பட்டுப் பயின்றுவருவதாகும்.

சீத்தலைச் சாத்தனாரது மணிமேகலையுள் ஆபுத்திரனாடடைந்த காதையில் (XXIV).

'இந்நகர்ப்பேர்யாது இந்நகராளு
மன்னவன்யார்எனமாதவன்கூறும்
நாகபுரம்இது;நன்னகராள்வோன்
பூமிசந்திரன்மகன்புண்ணியராசன்' (167-171)

என்று காணப்படுகின்றது. இவ்விடத்தில் 'மன்னவன்யார்' என்ற கேள்விக்கு 'புண்ணியராசன்' என்றபெயரானேயே விடையிறுக்கப்பட்டுளது.

'பதிற்றுப்பத்து' என்னும் அரிய சங்கநூலின்கண்ணே, குமட்டூர்க்கண்ணனார் பாடிய இரண்டாம்பத்து 20-வது செய்யுளிற் பின்வருமாறு காணப்படுகின்றது:—

"நுங்கோயாரெனவினவின்எங்கோ
இருமுந்நீர்த்துருத்தியுள்
முரணியோர்த்தலைச்சென்று
கடம்புமுதல்தடிந்தகடுஞ்சினமுன்பின்
நெடுஞ்சேரலாதன்"



ஈண்டு 'நுங்கோயாரென வினவின் எங்கோ' என்றதும் 'இவன்யாரென்குவையாயினிவனே' என்றதும் தம்முள் ஒத்திருக்கின்றமைகாணலாம். இப்பாட்டினது உரையில் 'நுங்கோயாரெனவினவின் எங்கோ சேரலாதன்' என முடிவுகாட்டப்பட்டமை மேலே கூறினேன். ஆகவே யார் என்பதற்கு விடை 'நெடுஞ்சேரலாதன்' என்ற பெயரால் தரப்பட்டுள்ளமை நன்கறியலாகும். இதனால் திருத்தக்கதேவரது காலத்திற்கு மிக முற்பட்டதாகிய சங்ககாலந்தொட்டே நாம் வியவகரித்து வரும் வழக்கு உளதாதல் எளிதிற்றெளியப்படும்.

இங்ஙனமாக 'இவன்யார்' என்பதுபோன்ற வினாவிற்குப் பெயரை விடையாகக் கூறுதல் சங்ககாலந்தொட்டு இன்றுவரையுமுள்ளதாகிய வழக்காகும். இவ்வழக்கு குமட்டூர்க் கண்ணனார் திருத்தக்கதேவர், கம்பர் முதலிய நல்லிசைப்பெரும் புலவோராலெடுத்தாளப்பட்டது; இளம்பூரணர், சேனாவரையர் ஆதிய இலக்கணத்துறைமுற்றிய பேரறிஞர்களால் இனிது போற்றப்பட்டது; இக்காலத்துத் தமிழ்மக்கள் தம் சாதாரணவழக்கொடு முற்றும் பொருந்துவது. இவ்விஷயங்கட்கு மாறாக மேற்குறித்தவழக்கு அங்கீகாரயோக்கியமன்றெனக் கூறுதற்கு எவருந் துணியாரென்றே நம்புகின்றேன். இவன்யாரென்பது போன்ற வினாவிற்கு வினை விடையாய் வருதல் யாண்டுமில்லையென முன்னரே கூறியுள்ளேன். ஆகவே யாண்டும் பெயரானேயே விடையிறுக்கக்காணுதலாலும், வினை விடையாய் வரல் ஓரிடத்துமின்மையானும், நண்பரவர்கள் நாடுகிழவோன் என்ற பெயர் விடையாகமாட்டாதென்றும் நோயிலனாகிப் பெயர்தலாகிய செயலே விடையாதற்குரியதென்றுங் கூறியது முற்றிலும் பிழையாயொழிகின்றது. நாடுகிழவோன் என்னும் அப்பெயரொன்றினையே விடையென நாம்கொள்ளுதல்வேண்டும்.

உண்மையிவ்வாறிருப்ப, நண்பரவர்கள் புதுவதொரு நியதியைத் தாமாகவே படைத்துக்கொண்டு, அந்நியதியைத்தமக்கு வேண்டியவாற்றாற் பிரயோகஞ் செய்து தாமெடுத்துக்கொண்ட கக்ஷியை நிலைநிறுத்த முயன்றார்கள். மேலே ஆராய்ந்து தெளியப்பட்ட தமிழ்மொழிவழக்கொடு முற்றுமுரணுதலின், அந்நியதியும் அவர்களது முடிபும் விசாரித்துண்மைகாணுதற்குரியவெனச் சிறிதேனு மெண்ணுதற்கிடமில்லை. அவற்றைத் தனிப்பட ஆராய்தற்கு ஆவசியகம் சிறிதும் இல்லை. வழக்கி

னுள்ள பலவுதாரணங்களினின்றும் உய்த்துணரப்பட்ட பொதுவிதி யொன்றற்கு விருத்தமாகச் சிலவுதாரணங்களேனு முளவாயின், அவ் விதி பொதுவிதியாந்தன்மையை யிழந்துவிடுகிறதென்பதைமட்டுஞ் செந்தமிழ் நேயர்களுக்கு ஞாபகப்படுத்திக்கொண்டு இப்பகுதியை முடிக்கின்றேன். (தொடரும்)

S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.,
ஹைக்கோர்ட்டு வக்கீல்,
திருவனந்தபுரம்.

---

(முச்சங்கவரலாறுபற்றிய ஒரு நிருபம்,

திருவனந்தபுரம்.
2—4—20.

செந்தமிழ்ப்பத்திராதிபரவர்கட்கு நமஸ்கரித்து விஞ்ஞாபநம். தாங்கள் அன்புடன் திருப்பிவிட்ட முச்சங்கவரலாறு வரப்பெற்றேன். 'விழு நீர்வேலி நாடு கிழவோனே' என்ற ஒரு வரியைப்பற்றிப் பல முறையும் சுமார் 100 பக்கங்கள் வரை எழுதிய தாங்கள் முச்சங்கவரலாற்றைக்குறித்து யான் ஒருமுறை எழுதியதை மறுத்து என்னையும் என் ஆராய்ச்சியையும் சிறிது இகழ்ந்து நண்பர் தம்பையா எழுதியதற்கு விடை கூற விடுஞ்சாததும், 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்ற தொல்காப்பிய சூத்திரத்திற்கு உரையாசிரியர் யாவருக்கும் உடன்படாத உரையைவகுத்த தாங்கள் என் விடையைத் திருப்பியதற்கு முன்னூல் வழக்குக்கு மாறுபடக் கூறுகிறேன் என்பதையே காரணமாகக் கூறுவதும், என் சிற்றறிவிற்கு வியக்கத்தக்கதாகத் தோன்றுகிறது. என் ஆராய்ச்சியில் தமிழர்க்கு உவப்புண்டாகாது என்றீர்கள். ப்ரஸ்துத விஷயத்திற்கு இயையாது இங்ஙனம் கூறுவதூஉம் பிழை,' 'அங்ஙனம் கூறுவதூஉம் பிழை' என்று ஒருவருக்கொருவர் உபசாரமாகக் கூறுமொழிகளில் உவக்கும் 'செந்தமிழ்' உலகம் முச்சங்க வரலாறு நம்பத்தக்கதா இல்லையா என்று யான் ஆராய்வதில் எவ்வாறு களிப்புறும்? ஆகையால் சரித்திரவிஷயங்களைக்குறித்துத் தமிழில் எழுதப்புகுவது ஒரு பயனற்ற தொழிலே என நன்குதெரிந்து, ஆங்கிலத்திலேயே இனி எழுதத் தீர்மானித்துவிட்டேன். இம்முச்சங்கவரலாற்றைப்பற்றி யான் ஆராய்ந்தவை South Indian Rescarct என்றபத்திரிகையில் இரண்டொருமாதத்தில் வெளிவருவதால், தம்பையா அவர்கட்கு விடை கூறாதது என் பிழையல்ல வென்றும், என்னால் விடைகூற முடியாததனால் அல்லவென்றும் 'செந்தமிழ்' வாயிலாகவே தமிழ்ப்புலவர்களுக்குத் தெரிவிக்கும்படி தங்களை மிக்கவணக்கத்துடன் வேண்டிக்கொள்கிறேன். இவ்வாறு செய்யத் தாங்கள் உடன்படீராயின், எதிருரையையே கேட்கப் பயப்படும் தங்கள் கொள்கைகள் வலியற்றனவே என நடுநிலை நாடும் புலவர் ஐயமுற ஏதுவாகும்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள
கே. ஜி. சங்கரஐயர்.

# பதார்த்ததீபிகை.

---

## முற்றொடர்.

### சங்கை

ஒருமை முதல வழக்கினுக் கேதுவெண் ணென்பதுமாம்
ஒருமை முதலிப் பரார்த்த பரியந்த முள்ள தன்ன
தொருமை யநித்திய நித்தியஞ் சேரினவ் வுண்மையுறும்
ஒருமை யலாதன வெங்கு மநித்திய மொண்பொருட்கே.

(இ-ள்) எண் ஒருமை முதல வழக்கினுக்கு ஏது-எண்ணுவது ஒருமையை முதலாகவுள்ள வழக்கிற்குக் காரணம்;-ஒன்பதுமாம்-அஃது ஒன்பதுபொருள்களிலும்இருக்கும்;-அன்னது ஒருமைமுதலிப்பரார்த்த பரியந்தம் உள்ளது-அந்த எண் ஒன்று முதலாகிப் பரார்த்தம் வரைக்குமுள்ளது;-ஒருமை அநித்தியம் நித்தியஞ் சேரின் அவ்வுண்மை உறும்-ஒருமை அநித்தியப் பொருளைச் சேரின் அநித்தியமாம்; நித்தியப்பொருளைச் சேரின் நித்தியமாம்;-ஒருமை அலாதன வெல்லாம் அநித்தியம் ஒண்பொருட்கே-ஒருமையலாதனவாகிய இருமை முதலியனவெல்லாம் யாண்டும் அநித்தியமாகும் ஒள்ளிய பொருள்களின் கண் எ-று.

எண்ணெனினும் சங்கையெனினும் ஒக்கும். சங்கியாஎன்னும் வடமொழி சங்கை எனத் தற்பவமாயிற்று. சங்கியை என்பதை வடமொழி இயைபு நோக்காது சஞ்சிகை எனவழங்கு வாருமுளர். ஒருமை முதல வழக்கு ஒருமை இருமை முதலியன. ஏது-காரணம். ஒன்பது பொருள் பிருதுவி, அப்பு முதலியன.

ஒருமை முதலி-ஒன்று முதலாகி: ஒன்றுமுதற் பரார்த்த மீறுயுள்ளன என்றது ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், இலக்கம், பத்திலக்கம், கோடி, பத்துக்கோடி, நூறுகோடி, ஆயிரகோடி, பதினாயிரகோடி, இலக்ஷகோடி, பத்திலக்ககோடி, சமுத்திரம், அந்தியம், மத்தியம், பரார்த்தம் என்னும் பதினெட்டினையுமாம். ஒன்றினைப் பத்தாற் பெருக்கப் பத்தாகும். பத்தினைப்பத்தினாற்பெருக்க நூறாகும். நூற்றினைப் பத்தினாற் பெருக்க ஆயிரமாகும். இங்ஙனமே பத்தினாலே தனித்

தனி பெருக்கி வந்த சங்கியானத் தொகையே இவை என அறிக. இன்னணம் பதினெட்டுக் கூறினவர் பதகிருத்திய வுரைகாரர். சித்தாந்த சாராவலிகாரர் இருபது சங்கியை கூறுவர்.

அநித்தியப் பொருள்கள் துவியணுகம் திரியணுகம் முதலியகாரிய ரூபமாயிருக்கும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்க. இவை அழிதலால் இவற்றைச் சேர்ந்த ஒருமையும் அநித்தியமாயிற்று. நித்தியப் பொருள்கள் பிருதிவி அப்பு தேயு வாயு என்னும் நான்கின் பரமாணுக்களும், ஆகாசம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என்னும் ஐந்து பொருள்களுமாம். இவை அழியாவியல்புடையனவாதலால் இவற்றைச் சேர்ந்த ஒருமையும் நித்தியமாம்

இருமை முதலியன தோன்றற்குக் காரணம் அபேக்ஷா புத்தியாகும். அபேக்ஷாபுத்தியாவது இஃது ஒன்று; இஃது ஒன்று என்று பல ஒருமைகளைக் கவரும் புத்தி. அபேக்ஷாபுத்தி—அவாவி நிற்கும் புத்தி அஃதழிதலால் அதனாற் றோன்றிய இருமை முதலியனவும் அழிவனவாயின. இவற்றின் அநித்தியம் நித்தியப்பொருள்களிலும் அநித்தியப் பொருள்களிலும் இருத்தலால் எங்கும் என்றார். ஒண்பொருள் என்றது இருவகைப் பொருள்களையும்.

இங்ஙனம்

அ. குமாரசுவாமிப் பிள்ளை.

---

## பிழைதிருத்தம்.

செந்தமிழ்த் தொகுதி—கஅ. பகுதி—க. ந அ-ம் பக்கம் அ-ம் வரியில் "விளக்கும்படி" என்றதை விளக்குதல் எனவும். ௯ பக்கம் வரி 3-ல் உள்ள "ரச்பமகட்சிலவும்" என்றதை "பலகரட்டிச் சிலவும்" எனவும் திருத்திக்கொள்க. பிறவுமன்ன.

இங்ஙனம்

K. S. நவநீதகிருஷ்ண பாரதி,
தலைமைத் தமிழ்ப்பண்டிதன்,
ஸ்ரீராமநாத வித்யாலயம், சுன்னாகம், யாழ்ப்பாணம்

---

## "தனிநிலைச் செய்யுட் கோவை."

"செந்தமிழில்" பலவரிய இலக்கண விஷயங்களை நாணுகிநாணும் ஆய்ந்து எழுதி வருபவரும் செந்தமிழ் இயற்கை வழாமல் சிறந்த பொருள்களைச் செவ்விய சொற்கொடு இயற்கையின்பஞ் சுரந்தளிக்கும் பாக்கள் பலப்பலவாக இயற்றுந் திருவுடையாரும் ஸ்ரீராமநாத வித்யாலயத் தமிழ்த்தலைமை ஆசிரியரும் எனது நண்பரும் ஆகிய ஸ்ரீமத் நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள் அவ்வப்போது தாம் பாடிய ஐம்பது பாக்களை எனக்குக் காட்டினார்கள். அவர்களாற் காட்டப்பெற்ற பாக்களெல்லாம் எந்நிலத்துப் பெரியாரும் இனிதுகைக்கொடற்குரிய விழுமிய பொருள் கெழுமியனவாயும் இன்னோசையுஞ் செஞ்சொல்லும் உடையனவாயும் இயற்கை நலன்கள் ஆங்காங்கமைந்து அணிபெறச் சுரந்து சுரந்து ஊற்றுவனவாயும் மிகச்சிறுபொருளும் மிகப்பெரும்பொருளுங் காணவல்ல ஆடிபோன்ற நுண்ணுணர்வினர்க்குத் தெவிட்டாத செவியமுதனையவாயும் மக்கட் பிறப்பினர்க்கு இன்றியமையாத உண்மை பொதிந்தனவாயும் இருத்தல் கண்டு இறும்பூதெய்திப் படித்துப் படித்து மகிழ்ந்தேன். இம்மகிழ்ச்சியைத் தமிழுலகம் அடையவேண்டும் என்பதனானும் இத்தகைய பாக்களை இயற்றியுதவிய ஸ்ரீமத் பாரதியார் அவர்கட்குத் தக்க பொற்பரிசு முதலியன நடுவுநிலைப் பெரியோர்களாற் கொடுக்கப் பெறவேண்டும் என்பதனானும் நமது நாட்டுத் தற்காலப் பாவலர்களும் ஸ்ரீமத் பாரதியார் அவர்கள் பாடல்களின் வழியைப் பின்பற்றிப் பாடுதல் வேண்டும் என்பதனானும் அவற்றிற்குத் "தனிநிலைச் செய்யுட் கோவை" எனப் பெயரிட்டுச் "செந்தமிழ்" வாயிலாகப் பிரசுரிக்கத் துணிந்தேன்.

இத்தனிநிலைச் செய்யுட் கோவைக்கு ஏற்ற ஆங்கிலப்பாக்களும் புனையப்பெற்று வருகின்றன. இதற்குச் சிறந்த தமிழுரை இல்லாத குறையே குறை. இதனை அறிஞர்கள் விரைவிற்றீர்த்துவிடுவார்களென நம்புகிறேன்.

இனிச் செந்தமிழ்ப் பத்திராதிபர் அவர்கட்கும் ஏனைத் தமிழறிஞர்கட்கும் இந்நூல் "செந்தமிழில்" வெளிவருதல் விருப்பேல் மாதந்தோறும் முறையே பிரசுரம் செய்யப்பெறும்.

இங்ஙனம்.

S. Vyramuttu.

1. காற்றே,
யுடலம்வளர் வித்து முயிர்க்குயிர்ப் புதவியு
மடுகதிர்க் கனலை யாற்றியு மழைவள
மழைஇப்பொழி வித்து மளிக்கின்ற தம்மா
நீரே,
வெம்மை யகற்றியும் வேண்டுணா வாக்கியு
முடலழுக் கோட்டியு முவந்துதவு கின்றதால்
எரியே,
யுயிருடற் றொடர்புறற் குரியவை யுணற்றியு
மயிலுணா வாக்கியு மாந்தூய்மை யளித்து
முறுதுயர் களைந்து முதவிவரு கின்றது
புவியே,
இருக்கை நல்கியு மின்னிழற் பழுமரன்
புல்லுணா வாதி பொறைகொண்டு நல்கியு
நீர்முத லேற்றவை நேருற் றுதவியும்
மலையே நறுமலர் வனனே வயலே
நிலையாச் சுரனே நெய்தற் கடலே
யாறே குளனே யந்நீர்ச் சுனையே
யின்னவும் பிறவு மீந்தினிக் கின்றது

கதிரே,
யிமைகொள் பொழுதினும் மிளைப்பிலா தென்றும்
பொழுதுவரு கணக்கினும் போற்றூஉம் வினையினு
மெட்டுணை யேனும் வழுவா வியல்பிற்
பெட்டாங் குயிர்களைப் பேணிவரு கின்ற
தின்னண மாக விளங்கதிர் மதியமுந்
துன்னிவரு நாளுந் துகடீர் கோளுந்
தத்தம் முதவியிற் றவாஅ வாகுந
நண்பும் பகையு நொதுமலு நாடில
வுயர்வுந் தாழ்வும் மொன்றாங் கருதில
வின்புந் துன்பும் மென்றாங் கருதில
வொன்றைமற் றொன்று நம்பல வாகி
நன்றிபற் பலவா நம்விழைந் தளிக்குந



இவ்வெலாம்,
தம்முறு செயல்கொல் பிறர்தம் மேவல்கொல்
நம்முதவி பெற்றில நாமு முதவிலோ
மெய்ப்பொருட் டம்மா விவ்வகை யியற்றுந
இவற்றால்,
தம்பய னெனப்பிறர் தழைப்ப
நம்மனோ ராற்ற நயப்பது நலனே

2. அஞ்சிறைத் தும்பியு மருநூற் சிலம்பியும்
பைஞ்சிறைப் பறவையும் பற்பல வாக
நினைத்தற் கரியவாம் புனைமனை புரிகுந
பிணியிடைப் பட்டில பிறரிடங் கற்றில
தச்சனை வேண்டில தளர்வுற் றொழிந்தில
மெய்ச்சும் பொன்பூண் விழைந்தில வாற்றாப்
பச்சுயிர்க் கிளைகளைப் பரிவுறீஇப் பார்க்குந
யார்கொல் லிவற்றிற் காற்ற லளீஇயினர்
இவற்றால்,
தம்மைப் புரப்பதூஉந் தமரைப் புரப்பதூஉ
மிம்பர் ஞாலத் தினையுயிர்க் கியற்கை
யவ்வெலா மாற்றற் கருங்கலை பயின்றுஞ்
செவ்வ னாய்ந்துஞ் சிறப்புறு நமர்க
ளவற்றினு மெளியோ ராவது மறிகில
ரல்லா வுயிர்க்கு மியலா தெவ்வெனக்
கல்லாது வீவதூஉங் கருதில ரன்னே
நில்லா திடிசுவர் நேருமியாக் கைக்கு
வல்லான் புனைந்த சித்திரம் வாய்ப்பப்
பூல்லாற் றானும் பயனற்றச்
செல்லா நிற்குநர் செய்வன மறந்தே.

3. பெரும்பிணி களையும் பெறலரு மருந்தினை
விரையின் றென்ன மூக்குவெறுக் கும்மே
நறுஞ்சுவை யின்றென நாக்குவெறுக் கும்மே
நச்சுக் கனியினை நன்னிற மயக்கா
னச்சிக் கண்ணு நலனிழக் கும்மே

உள்ளன வோரா தல்லன வுணர்ந்து
நல்லன மறுத்து மல்லன நயந்து
மில்லன வியைத்து மிருப்பன மறைத்தும்
வல்லாங் கியற்று மதியின ராகி
வாணா ளென்னு மணியினை
வீணா விழந்து வீந்தழி குநர்க்கே.

6. ஒன்றணி வதற்கே மற்றவை யுழலா
தைம்பொறி தம்மி லமைதியுற் றிருக்குந
அதா அன்று,
நல்லியல் பமைஇய நாரியர் குறுநடை
யமுதுவழி மார்புக் குமுதவாய் மகாஅ
ரொருபெருந் தவத்தி னிருபெரு முதியோ
ரிவர்க்குவரு நயனே தமக்கென வெண்ணுநர்
அஃதேய்ப்ப,
வுற்றோ ருறவின ரூரினர் தேஎத்தினர்
மற்றோர் மற்றவை யுள்ளவை யெல்லா
மன்னணந் தமரென வறிந்திசி னோர்க்குத்
தமருறு நலனே தம்முறு நலனே
தமர்கைப் பொருளே தங்கைப் பொருளே
யாதலிற் பிறவுயி ராக்கமுண தாகத்
தீதறு சிந்தையிற் செவ்வ னோர்ந்து
குறைதெறு காட்சிகொடு நிறைவுபெற் றிருக்கு
மிவ்வகை யறியா வேழை மனனே
தெவ்வகை யாக்கித் தெருளழித் தொழிக்குதி
யிவ்வுல குன்னையன் றில்லை
யெவ்வகை யுய்வனோ வினையையோ டிருந்தே.

புவிவாழ் பணனே புவிவாழ் பணனே
தவனோர் வார்தஞ் சார்பில் பணனே
நல்லரை மரீஇ நல்லன வுஞற்றியும்
புல்லரை மரீஇப் புல்லிய வுஞற்றியும்
போற்றாத் தமரைப் போற்றியும் பகைஞரை
யாற்றாத் தமரோ டவர்வே ரழித்தும்

கூலங் காக்குங் கொள்கை முற்றுறீஇ
ஞாலங் காக்கு நலத்தினை மாண
மெய்க்கொண்டு நடித்தலின் மேன்மையில் லவர்முன்
பொய்க்கொண்டு மயக்கியும் பொழுது போக்குதி
யினையை யென்னினு நின்விழை வானே
தமக்கு மிருந்தன பிறர்க்குத் தந்தும்
பிறரிடை வேண்டுவ பெற்றும் பிறங்குநர்
பொல்லாப் பலரும் புவிக்கடிமை யாகிப்
பல்லாற் றானும் பயன்பெற முயன்று
நெற்றிவரு பெருவேர் நிலனுழக் குநரே
பிண்ட நெல்லிற் பெருமைகொள் பித்தர்
கொண்டநெல் லெவர்க்குங் கொடுத்து மகிழ்குநரே
வேண்டிய வெல்லாம் வேற்றுநாட் டவர்க்கு
மீண்டிய வுவகைகொண் டியைந்தீ கின்றன
ரினிதின் மயக்கிற் கிசைசிலர் தமபோ
லெனைய வுயிரையு மெண்ணிக் கரவொரீஇக்
கனிவுபெறு நெஞ்சிற் காத்துத்
தனிநிலை பெறீஇயர் தவமுயல் குநரே.

8. உடைமை முற்று மொருவர்நம் பலராய்க்
கடிமிகு வைப்பிற் காவல் புரிகுநர்
பிறர்க்கறி வுறுப்பின் பெருந்துன் புறுத்து
மறக்கடுஞ் செயன்மனத் தாஅர நினைக்குநர்
நல்லவர் தீஇக்கு மல்லவர் நலக்கு
முள்ளவ ராக வுழக்கிக் கலக்குநர்
வேட்டன நலனு வெறுத்தன வலவா
நாட்டி நலம்பல வீட்டி நலிகுந
ரொவ்வொன் றூற்று முரத்தினர் பலவா
மிவ்வுலகு கழிக்கு மியல்பின ரிவரே
யெவ்வகை யொன்றுற் றினைஇநல னெய்துவர்
அதனால்,
சான்றோர் பலருந் தமரையும் பிறரையுஞ்
சான்றநன் கறிவுறீஇத் தழைந்தவு மழிந்தவுங்



காட்சி முதற்கொடு கவினக் காட்டு
மாட்சித் தம்மா மாண்புறாஉங் கல்வி
அதுவே,
யுன்னவு முரைப்பவு மொருவினை யுஞற்றவு
மின்னவும் பிறவு மினிதுற நடாத்தவு
மருமை சான்ற விருமைமுழு தூன்றவு
மின்றி யமையாத தென்ப
நன்றியமை பன்னூ னுவ லோரே.

9. தட்ப நிறைஇ வெப்பழித் தகற்றக்
கதிர்மெய் குளிர்ந்து கவினூர்ந் திலகுற
நைப்புமனை முற்ற நானில மருங்கடி
வைக்கமனை முட்க வகையுற வெங்கதிர்க்
காய்ந்துவளங் கொள்பொருள் கடுகவுள் விரைய
உழவர் முதலோ ருளங்களி கூர
வுமணர் முதலோ ருளநனி வாட
வெளியோ ரொழுக்குற் றினைந்துமெய் நடுங்கிச்
சிறுகூழ் பெறுதா சிந்தைநொந் தரற்றப்
பொழுதறி யாது போக்கிய மடவோர்
கொழுநர்க் கண்டுதங் கொள்கையச் சுறுத்த
வீரமலி விறகிடை யெரிபற்றி யசைய
வார வூதிக் கட்புகை யடைஇ
நீர்பொழிந் தறிவுசோர்ந் தாங்குநின் றனர
வொண்பொரு ளிழந்தோர் பண்ணிடைத் தூரீஇக்
குனிந்து நோக்குங் கொள்கையிற் கூன்கொண்
முதுகொடு தளர்மெய் முதியரிற் றளர்ந்துக்
கையுங் காலுங் காட்டிவெப் பாஅரச்
சிறார் மறந்து சேற்றுட் டயர
வெங்கும் பைங்கய லினிதி னுலாவப்
பைம்புற் கம்பலம் பாஅர் புலைதப்ப
துணைஞ நவில ஞொள்ளிமனை யூரக்
கொம்பரிடை மந்தி குனிந்திருந் தடங்க
முழையிடைப் பன்மா முழக்கற் றொடுங்க

வஞ்சிறைப் பறவை குடம்பைபுக் காஅர
வானின முதல மரனடி யணைய
திருக்குக்கரைத் தென்னத் துலங்குறுஞ் செம்மைக்
கொள்ளை வெள்ளக் குன்றவுங் காட்டவு
மெள்ளில் வயலவு மெடீஇக் கடலிடைப்
பல்லாற் றுனும் பாஅய்த் தொளிக்க
நீர்நிலைக் காவ னிலைகொடு நிறுவக்
கொடுங்கோற் பட்டழி குடிமனங் களிப்பச்
செங்கோல் வேந்தன் சேர்ந்தளி தேளமெனச்
சிறுபுன் முதலவுஞ் செறீஇ மகிழ்ந்து
மலர்ந்து கனிவாய் வளர்ந்து தழைப்ப
மாவும் பறவையு மன்னும் பிறவும்
வேட்டன பெற்று விழைஇ மகிழ்தரக்
காட்டுச் சிறந்து கனிந்துருகு நெஞ்சிற்
பாட்டுச் சுரந்து பல்செவி பயன்பெற
வெண்டுய்ப் பொதிதம் பிணிவிட் டுதிர்தலி
னுண்முகில் கரும்புகை யுறீஇவிண் பறந்து
செவிபுடைத் தென்னத் தெறுகுர லெழீஇ
விழிபறித் தென்ன விரைந்தொளி மின்னி
யொண்வீழ் வெள்ளி பற்பல வூன்றித்
திடறுங் கடலுந் தேர்வரி தாகக்
கொழும்புன லுலகங் குளிரப்
பொழிந்து வண்மையொடு புரந்தமைந் தன்றே.

(தொடரும்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1919-ஞு ஜூலைமீ˚ த்திய வரவு செலவு கணக்கு

| விவரம். | வரவு. 1919 July | | | 1918 July | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) நன்கொடை, மாதச்சந்தாவகையில் வரவு ரூ | 220 | ... | ... | 50 | ... | ... |
| (2) பாங்கில் போட்டுள்ள தொகையின் பேரில் வட்டி வரவு ரூ | .. | ... | ... | 1 | 7 | 1 |
| (3) புத்தகங்கள் விற்றவகையில் வரவு. | 28 | 9 | .. | 28 | 15 | ... |
| வி. பி. சார்ஜ் வரவு ரூ | 2 | 10 | ... | 1 | 6 | ... |
| (4) காலியிடத்திற்கு வாடகை வரவு ரூ | 70 | ... | ... | 70 | ... | ... |
| மொத்தம் ரூ | 321 | 3 | ... | 151 | 12 | 1 |

| விவரம். | செலவு. 1919 July | | | 1918 July | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) (a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 113 | ... | .. | 161 | 2 | 4 |
| (b) 1 கலாசாலை உபாத்தியாயர்கட்குச்சம்பளம் செல் ரூ | 95 | ... | ... | 53 | ... | ... |
| 2 மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ரூ. | 86 | 1 | 9 | ... | ... | ... |
| (c) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 15 | ... | ... | ... | ... | ... |
| (2) ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி சாமான்கள் வாங்கியவகையில் செல்ரூ | 5 | 2 | 10 | 8 | 10 | 9 |
| (3) புத்தகசாலைக்கு வாங்கிய புத்தகங்களின் கிரயமும் பத்திரிகைக்குச் சந்தாவும் செல் ரூ | ... | ... | ... | 2 | 6 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **II. Editorial Section:** | | | | | | |
| (1) அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ரூ | 1 | ... | ... | 21 | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ச்சந்தா வரவு ரூ | ... | ... | ... | 12 | 3 | ... |
| (3) 'செந்தமிழ்'ப்பழையதொகுதிகள் விற்றவகையில் வரவு ரூ | 2 | 8 | ... | 1 | ... | ... |
| வி. பி. சார்ஜ் வரவு ரூ | ... | 5 | ... | ... | ... | ... |
| மொத்தம் ரூ | 3 | 13 | ... | 34 | 3 | ... |
| **III. Printing Section** | | | | | | |
| (1) ஜாப் வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வரவு ரூ | 330 | 15 | 1 | 358 | 4 | 4 |
| (2) காகிதக்கிரயம் வரவு ரூ | 49 | 7 | ... | 117 | 8 | 6 |
| (3) சில்லரை வரவு ரூ | 1 | ... | ... | ... | 2 | ... |
| மொத்தம் ரூ | 381 | 6 | 1 | 475 | 14 | 10 |
| **IV. Binding Section:** | | | | | | |
| (1) ஜாப் வேலைகள் சம்பந்தமாக பைண்டிங்சார்ஜ் வரவு ரூ | 28 | 13 | ... | 138 | ... | 6 |
| (2) சில்லரை வரவு ரூ | 2 | ... | ... | 1 | ... | ... |
| மொத்தம் ரூ | 30 | 13 | ... | 139 | ... | 6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (4) Furniture ரிப்பேர் வகையில் செல் | 8 | 1 | 6 | ... | ... | ... |
| (5) தபால், தந்தி வகையில் செல் ரூ | 5 | 13 | 6 | 16 | 12 | ... |
| (6) வருஷோத்ஸவச் செலவு ரூ | ... | ... | ... | ... | 13 | 6 |
| (7) சில்லரைச் செலவு ரூ | 5 | 8 | ... | ... | 8 | ... |
| மொத்தம் ரூ | 333 | 11 | 7 | 243 | 4 | 7 |
| **II. Editorial Section:** | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | .. | ... | ... | 45 | ... | ... |
| (2) செந்தமிழ்ப்பத்திரிகை சம்பந்தமாக ஸ்டேஷனெரி செலவு ரூ | 23 | 1 | 6 | ... | ... | ... |
| (3) தபால், தந்தி வகையில் செல் ரூ | 1 | 9 | ... | 11 | 6 | 6 |
| மொத்தம் ரூ | 24 | 10 | 6 | 56 | 6 | v |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **III. Printing Section:** | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 187 | 9 | 2 | 196 | 3 | 7 |
| (2) டைப்ஸ் வகையரா வாங்கிய வகையில் செல் ரூ | 5 | 8 | 3 | ... | ... | ... |
| (3) மெஷீனுக்கு எண்ணெய் வாங்கிய வகையில் செல் ரூ | 31 | 4 | 11 | 14 | 14 | 9 |
| (4) கண்டின்ஜன்விசாமான்கள் வாங்கிய வகையில் செல் ரூ | 17 | 1 | 6 | 16 | 4 | ... |
| (5) ஆர்டர்கள் உபயோகத்திற்கு வாங்கிய ஸ்டேஷனெரி வகையில் செல் | 27 | 5 | 7 | 63 | 13 | 3 |
| (6) Furniture ரிப்பேர் வகையில்செல் | ... | ... | ... | 43 | 8 | ... |
| (7) தபால், தந்தி வகையில் செல் ரூ | ... | 9 | 6 | ... | 2 | 3 |
| (6) சில்லரைச் செலவு ரூ | 1 | ... | ... | ... | 12 | 6 |
| மொத்தம் ரூ | 270 | 6 | 11 | 335 | 10 | 4 |
| **IV. Binding Section:** | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 31 | 12 | 1 | 28 | 5 | 3 |
| (2) ஸ்டேஷனெரி கண்டின்ஜன்வி சாமான்கள் வாங்கியவகையில்செல் | 45 | 13 | 3 | 113 | 2 | 9 |
| (3) தபால், தந்தி வகையில் செல் ரூ | ... | ... | ... | ... | ... | 3 |
| மொத்தம் ரூ | 77 | 9 | 4 | 141 | 8 | 3 |

| | Rs. | A. | P. | Rs. | A. | P. | | | Rs. | A. | P. | Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ | 737 | 3 | 1 | 800 | 14 | 5 | * By P. B. Rs 5. By Co-operative Bank Receipt Rs. 1050 By cash on hand Rs. 112-14-0 — 1167-14-0 | ஆகமொத்தம்செலவு ரூ | 706 | 6 | 4 | 776 | 13 | 8 |
| இம்மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ | 1137 | 1 | 3 | 1292 | 12 | 6 | | இம்மாதமுடிவில் மீதியிருப்புத்தொகை ரூ | 1167 | 14 | ... | 1316 | 13 | 3 |
| ஆகமொத்தம் ரூ | 1874 | 4 | 4 | 2093 | 10 | 11 | | ஆக மொத்தம் ரூ | 1874 | 4 | 4 | 2093 | 10 | 11 |

Audited and found correct.
V. S. Ramaswami,
Auditor.
24—10—19.

T. Sudarsanachari,
*Joint Secretary.*
12—9—19.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1919-ஆகஸ்டு-மீ-த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு. 1919 August | | | 1918 August | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) நன்கொடை, மாதச்சந்தா வகையில் வரவு ரூ | 330 | ... | ... | 266 | 8 | ... |
| (2) பாங்கில் போட்டுள்ள தொகையின் பேரில் வட்டி வரவு ரூ | ... | 10 | 1 | ... | ... | ... |
| (3) புத்தகங்கள் விற்ற வகையில் வரவு | 73 | 9 | ... | 79 | 3 | 6 |
| வி. பி. சார்ஜ் வரவு ரூ | 2 | 7 | ... | 1 | 2 | ... |
| (4) காகிதம் விற்ற வகையில் வரவு ரூ | 2 | 4 | ... | 3 | 3 | ... |
| (5) காலியிடத்துக்கு வாடகை வரவு ரூ | 70 | ... | ... | 70 | ... | ... |
| (6) சில்லரை வரவு ரூ | ... | 2 | ... | ... | ... | ... |
| மொத்தம் ரூ | 479 | ... | 1 | 420 | ... | 6 |
| **II. Editorial Section:** | | | | | | |
| (1) அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ரூ | 11 | ... | ... | 18 | 8 | ... |

| விவரம். | செலவு. 1919 August | | | 1918 August | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) (a) மானேஜ்மெண்ட் ஸிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 122 | ... | ... | 60 | 14 | 5 |
| (b) 1 கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ரூ | 95 | ... | ... | 43 | 5 | 8 |
| 2 மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ரூ | 151 | 5 | 6 | 136 | 8 | 5 |
| (c) Literary Section ஸிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 90 | ... | ... | ... | ... | ... |
| (2) ஸ்டேஷனெரி கண்டிஞ்ஜன்ஸி சாமான்கள் வாங்கியவகையில் செல் ரூ | 4 | 11 | 6 | 5 | 1 | 6 |
| (3) புத்தகசாலைக்கு வாங்கிய புத்தகங்களின் கிரையமும், பத்திரிகைக்குச் சந்தாவும் செல் ரூ | ... | ... | ... | 1 | 10 | ... |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (2) செந்தமிழ்ச் சந்தா வரவு | ரூ | 22 | 4 | ... | 34 | 7 | ... |
| (3) விளம்பர சார்ஜ் வரவு | ரூ | ... | ... | ... | 4 | ... | ... |
| (4) செந்தமிழ்ப் பழைய தொகுதிகள் விற்றவகையில் வரவு | ரூ | 75 | 15 | ... | 38 | 8 | ... |
| வி. பி. சார்ஜ் வரவு | ரூ | ... | 15 | ... | 2 | ... | ... |
| மொத்தம் | ரூ | 108 | 2 | ... | 97 | 7 | ... |

## III. Printing Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) ஜாப் வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வரவு | ரூ | 396 | 15 | ... | 504 | 7 | ... |
| (2) காகிதக்கிரையம் வரவு | ரூ | 3 | 14 | ... | 15 | 3 | 9 |
| (3) சில்லரை வரவு | ரூ | 5 | 6 | ... | ... | ... | ... |
| மொத்தம் | ரூ | 406 | 3 | ... | 519 | 10 | 9 |

## IV. Binding Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) ஜாப்வேலைகள் சம்பந்தமாக பைண்டிங் சார்ஜ் வரவு | ரூ | 51 | 3 | ... | 64 | 1 | 6 |
| (2) சில்லரை வரவு | ரூ | 3 | 10 | ... | 4 | ... | ... |
| மொத்தம் | ரூ | 54 | 13 | ... | 68 | 1 | 6 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (4) Furniture ரிப்பேர் வகையில்செல் | | ... | ... | ... | ... | 6 | ... |
| (5) தபால், தந்தி வகையில்செல் | ரூ | 9 | 10 | 9 | 10 | 13 | ... |
| (6) முனிசிபாலிட்டிக்கு வரி வகையறா செல் | ரூ | ... | ... | ... | 3 | 8 | ... |
| (7) சங்கப்பதிப்புப்புத்தகங்கள்பிரசுரசம்பந்தமாகச் செலவு | ரூ | ... | ... | ... | 5 | 11 | ... |
| (8) பரீக்ஷைசம்பந்தமாகச் செலவு | ரூ | ... | 13 | ... | ... | ... | ... |
| (9) வருஷோத்ஸவச் செலவு | ரூ | ... | ... | ... | 270 | 2 | ... |
| (10) சில்லரைச் செலவு | ரூ | 2 | 1 | ... | ... | 8 | ... |
| மொத்தம் | ரூ | 475 | 9 | 9 | 568 | 8 | ... |

## II. Editorial Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | ரூ | ... | ... | ... | 45 | ... | ... |
| (2) செந்தமிழ்ப்பத்திரிகை சம்பந்தமாக ஸ்டேஷனெரி வகையில்செல் | ரூ | 17 | ... | 6 | ... | ... | ... |
| (3) தபால் தந்தி, வகையிற் செல் | ரூ | 9 | 3 | 6 | 12 | 14 | ... |
| மொத்தம் | ரூ | 26 | 4 | ... | 57 | 14 | ... |

## III. Printing Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச்சம்பளம் செல் | ரூ | 210 | 9 | 5 | 187 | 13 | 5 |
| (2) மெஷினுக்கு எண்ணெய் வாங்கிய வகையில் செல் | ரூ | 16 | 12 | ... | 10 | 6 | 6 |
| (3) கண்டின்ஜன்விசாமான்கள் வாங்கிய வகையில் செல் | ரூ | 18 | 12 | 9 | 1 | 5 | 2 |
| (4) ஆர்டர்கள் உபயோகத்திற்கு வாங்கிய ஸ்டேஷனெரி செலவு | ரூ | 36 | 12 | ... | 50 | 3 | ... |
| (5) தபால், தந்தி வகையில் செல் | ரூ | 1 | 13 | 6 | ... | 5 | 3 |
| (6) அதிகநேரம் வேலைசெய்த கூலிஉள்பட சில்லரைச் செலவு (overtime work Rs 99—3—6; proof reading Rs.29—5—0;miscellaneous 0—7—0) | ரூ | 128 | 15 | 6 | ... | 2 | ... |
| மொத்தம் | ரூ | 413 | 11 | 2 | 250 | 3 | 4 |

## IV. Binding Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | ரூ | 29 | 4 | 9 | 28 | ... | 1 |
| (2) ஸ்டேஷனெரி கண்டின்ஜன்விசாமான்கள் வாங்கியவகையில்செல் | | 34 | ... | 6 | 76 | 12 | 3 |
| (3) தபால், தந்தி வகையில் செல் | ரூ | ... | 2 | 3 | ... | 1 | 3 |
| மொத்தம் | ரூ | 63 | 7 | 6 | 104 | 13 | 7 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ | 1048 | 2 | 1 | 1105 | 3 | 9 |
| இம்மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ | 1167 | 14 | ... | 1316 | 13 | 3 |
| ஆகமொத்தம் ரூ | 2216 | ... | 1 | 2422 | 1 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம்செலவு ரூ | 979 | .. | 5 | 981 | 6 | 11 |
| இம்மாதமுடிவில் மீதியிருப்புத்தொகை ரூ* | 1236 | 15 | 8 | 1440 | 10 | 1 |
| ஆக மொத்தம் ரூ | 2216 | ... | 1 | 2422 | 1 | ... |

* By P. B. Rs. 120. By Co-operati BankReceipt Rs. 1050 By cash on hand Rs. 66-15-8.
1236-15- 8

Audited and found correct.
V. S. Ramaswami,
*Auditor.* 24—10—19.

T. Sudarsanachari,
*Joint Secretary.*
12—9—19.



கடவுள்துணை.


# செந்தமிழ்.

தொகுதி-கஅ.] சித்தார்த்தி௵ தைமீ [பகுதி ௩.

Vol. XVIII. January—February 1919-20. No. 3.


## உவமைப்போலி.

உவமைப்போலியாவது உவமையிலக்கணம் பொருந்தாததாயிருந்தும் உவமைபோலத் தோன்றுவது. போலி-போன்றிருப்பது. இதனை வடநூலார் திருட்டாந்தாபாசம் என்பர். ஆபாசம்-போலி. இந்த உவமைப்போலி பதினெட்டு என்று சிவஞான சித்தியாரிலே அருணந்தி சிவாசாரியர் கூறினர். "விளங்குவமைப்போலி யீரொன்பான்காண்டும்" (சித்தி) இந்நூலுரைகாரர்களாகிய மறைஞானதேசிகரும், சிவாக்கிரயோகிகளும், சிவஞானயோகிகளும் இப்பதினெட்டினையும் விவரித்துக்கூறினர். இவருள்ளே சிவஞானயோகிகள் வடமொழியிற் கூறிய பெயர்க்காரணங்களை நோக்கி அவற்றிற்கு இசையுமாறு தமிழிற் பெயர்த்து விளக்கினர். உதாரணம் காட்டிற்றிலர். மற்றை இருவரும் வடமொழியிற் கூறியவாறே பெயர்களைக்கூறி வடசொற்கலப்போடும் விவரணங் கூறினர். விவரணங்களிலே முரணும் இருக்கின்றது. அறிதலும் அரிதாயிருக்கின்றது. மறைஞானதேசிகர் கூறியவைகளுள்ளே சிலவற்றை ஒருவர் விளக்கிச் சிலவற்றை வாளாவிட்டனர். அவைகளை இங்கே எழுதுவாம்.

பதினெண்வகை.

க. சாத்தியவிகலம்
உ. சாதனவிகலம்
௩. உபயவிகலம்
௪. ஆசிரயகீனம்
ரு. அவ்வியாத்தியபிதானம்
௬. விபரீதவியாத்தியபிதானம்

*

எ. சாதனவியாவிருத்தம் — கங. சந்தித்தசாத்தியம்
அ. சாத்தியாவியாவிருத்தம் — கச. சந்தித்தசாதனம்
கூ. உபயவியாவிருத்தம் — கரு. சந்தித்தவுபயம்
க0. ஆசிரயவிகீநம். — ககூ. சந்தித்தவாசிரயம்
கக. வியாவிருத்தியபிதானம் — கஎ. சந்தித்தசாத்தியவியாவிருத்தம்
கஉ. விபரீதவியாத்தியபிதானம் — கஅ. சந்தித்தசாதனவியாவிருத்தம்

க. சாத்தியவிகலமாவது சாத்தியமானது தன்னியல்பில் இல்லாத உவமை. இதனைச் சிவஞானயோகிகள் சாத்தியமுடைத்தாகாதது என்பர். சாத்தியம்-அணிபொருள். விகலம்-தன்னியல்பிலே இல்லாதது, குறைவு. உ-ம். மனம் அநித்தியம்; உருவமுடைமையால், பரமாணுவைப்போல என்பதாம். இங்கே பரமாணு என்பது உவமை. இவ்வுவமையிலே அநித்தியம் என்னும் சாத்தியத்தன்மை இல்லை. பரமாணுவை நித்தியம் என்பர்.

உ. சாதனவிகலமாவது சாதனமானது தன்னியல்பிலே இல்லாத உவமை. இதனைச் சிவஞானயோகிகள் ஏதுவுடைத்தாகாதது என்பர். சாதனம்-ஏது. உ-ம். மனம் அநித்தியம்; உருவமுடைமையால், கன்மம்போல என்பதாம். இங்கே கன்மம் என்னும் உவமையிலே உருவமுடைமை என்னும் சாதனம் இல்லை. கன்மம் உருவப்பொருளன்று.

ங. உபயவிகலமாவது சாத்தியம் சாதனம்என்னும் இரண்டும் இல்லாத உவமை. இதனைச் சிவஞானயோகிகள் இரண்டுமுடைத்தாகாதது என்பர். உ-ம். மனம் அநித்தியம்; உருவமுடைமையால், ஆகாயம்போல என்பதாம். இங்கே ஆகாயம் என்னும் உவமையிலே அநித்தியத்தன்மை என்னும் சாத்தியமும், உருவமுடைமை என்னும் சாதனமுமாகிய இரண்டுமின்மை அறிக. ஆகாயம் நித்தியம்.

ச. ஆசிரயகீனமாவது தனக்குச் சார்பில்லாத உவமை. இதனைச் சிவஞானயோகிகள் சொரூபமில்லது என்பர். உ-ம். மனம் அநித்தியம்; உருவமுடைமையால், ஆகாயப்பூப்போல என்பதாம். இங்கே ஆகாயப்பூ என்னும் உவமையிலே பூவுக்கு ஆகாயம் சார்பிடமாகாமை அறிக. ஆசிரயம்-சார்பு. ஹீனம்-இன்மை.



ரு. அவ்வியாத்தியபிதானம்
கூ. விபரீதவியாத்தியபிதானம்
எ. சாதனவியாவிருத்தம்
அ. சாத்தியாவியாவிருத்தம்
கூ. உபயவியாவிருத்தம்
க0. ஆசிரயவிஹீனம்
கக. வியாவிருத்தியபிதானம்
கஉ. விபரீதவியாத்தியபிதானம்

கங. சந்தித்தசாத்தியமாவது ஐயப்பட்ட சாத்தியமுடைய உவமை. இதனைச் சிவஞானயோகிகள் சாத்திய முடைமை நிச்சயிக்கப்படாதது என்பர். சந்தித்தம்-ஐயப்பட்டது. உ-ம். இவன் அரசனாய் வருவான்: சோழராசன் மரபினனாதலின்; அரசியல் பெறற்குரிய அரசகுமான்போல என்பதாம். இங்கே அரசியல் பெறற்குரிய அரசகுமாரன் என்னும் உவமையிலே அரசனாய் வருவான் என்ற சாத்தியம் நிச்சயிக்கப்படாமையால் ஐயப்பட்டதாதல் அறிக.

கச. சந்தித்தசாதனமாவது ஐயப்பட்ட சாதனமுடையை உவமை. இதனைச் சிவஞானமுனிவர் ஏதுவுடைமை நிச்சயிக்கப்படாதது என்பர். உ-ம். இவன் முற்றறிவில்லாதவன்; விருப்பு வெறுப்புக்களோடு கூடினவனாதலின், தெருவிற்செல்லும் புருடன்போல என்பதாம். இங்கே தெருவிற்செல்லும் புருடன் என்னும் உவமையிலே விருப்பு வெறுப்புக்களோடு கூடியிருக்கையாகிய சாதனம் நிச்சயிக்கப்படாமையால் ஐயப்பட்டதாதல் அறிக.

கரு. சந்தித்தோபயமாவது ஐயப்பட்ட சாத்தியசாதனங்களையுடைய உவமை. இதனைச் சிவஞானயோகிகள் இரண்டுமுடைமை நிச்சயிக்கப்படாதது என்பர். உபயம்-இரண்டு. உ-ம். இவன் சுவர்க்கமடைவான். பூர்வபுண்ணியமுடையவனாகையால்; தேவதத்தன்போல. இங்கே தேவதத்தன் என்னும் உவமையிலே சுவர்க்கமடைதலாகிய சாத்தியமும், பூர்வபுண்ணியமுடைமையாகிய சாதனமுமாகிய இரண்டும் நிச்சயிக்கப்படாமையால் ஐயப்பட்டனவாதல் அறிக.

கசு. சந்தித்தவாசிரயம்.

கஎ. சந்தித்தசாத்தியாவியாவிருத்தம்.

கஅ. சந்தித்தசாதனாவியாவிருத்தம்.

இப்பெயர்கள் அச்சுப்பிரதியின்படி எழுதப்பட்டனவாத லிற் பிழைப்படலும் கூடும். பொருள் விளங்கி எழுதப்பட்டனவாயிற் பிழைப்படமாட்டா. ஆதலாற் பெயர்களிலும் உரைகளிலுந் தோன் றும் பிழைகளைத் திருத்தியும், பெயர்களளவிலே விடப்பட்டவைகளை உரைகாட்டி விளக்கியும் இந்தச் செந்தமிழிலே அறிஞர் யாராவது எழுதுவாராக. அது படிப்பவர்களுக்கு நன்கு பயன்படும்.

வடமொழி தென்மொழிகளிலே இவ்வுவமைப் போலிகளைக் கூறும் முதனூல்களையும், மற்றைத் தர்க்கநூல்களையும், சிவஞான சித்தியாருரைகளையுங் கற்றுணர்ந்தோர்க்கு விளக்குதலும் திருத்துத லும் இலகுவாகும்.

இங்ஙனம்

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

உ

## பக்கப்போலி.

---

பக்கப்போலியாவது பக்கவிலக்கணத்திற் குறைவுடையதா யிருந்தும் ஒருபுடையொத்துப் பக்கம்போலத் தோன்றுவது. பக்கப் போலி நான்கு என்று அருணந்தி சிவாசாரியர் கூறுவர். "ஈண்டு பக்கப்போலி நான்கு" (சித்தியார்) இதனை வகுத்துரைத் தற்கண் உரைகாரர் மாறுபடுகின்றனர். மறைஞானதேசிகர் க. பட்சாபாசம் உ. அநுமானுபாசம், ங. பிரதிஞ்ஞாபாசம், ச. வசனுபாசம் என கூறிப் பின் க. அப்பிரசித்தவிசேடணம், உ. அப்பிரசித்தவிசேடியம் ங. அப்பிரசித்தோபயம், ச. அப்பிரசித்தாசம்பந்தம் எனக் கூறுவாரு முளர் என்றார். சிவாக்கிரயோகிகள் க. ஓரிடத்திற் பக்கமில்லாமை உ. ஓரிடத்திற் பக்கத்தன்மையில்லாமை, ங. ஓரிடத்திற் பக்கம் பக்கத் தன்மை இரண்டுமில்லாமை, ச. ஓரிடத்திரண்டுமிருந்தும் வியாத்தி யில்லாமை எனக்கூறி வடமொழிவாக்கியமுங் காட்டினர்.



சிவஞானயோகிகள் க. துணியும்பொருட் கிடனாகாதது; உ. துணியும்பொருட்கொருமருங் கிடனாகாதது, ங. துணிந்தபொருட் கிடனாவது, ச. துணிந்தபொருட்கொருமருங் கிடனாவது என்றார். நிரம்பவழகியதேசிகர் க. பிரத்தியக்ஷாபாசம், உ. அநுமானுபாசம், ங. ஸ்வநுமானுபாசம், ச. வசனுபாசம் என்றார். பாண்டிப்பெருமாள் அப்பிரசித்தவிசேடணம் முதலிய நான்கையுங்கூறிப் பின்னும் ஐந்து காட்டி ஒன்பதும் பக்கப்போலி என்றார். ஐந்துமாவன, க. பிரத்தியக்க விருத்தம், உ. அநுமானவிருத்தம், ங. சுவசனவிருத்தம், ச. உலக விருத்தம், ரு. ஆகமவிருத்தம் என்பன. இந்த ஒன்பதும் அநுமான விளக்கத்திலே செந்தமிழ்ப் பத்திராதிபர் ஸ்ரீமான் திரு. நாராயணையங் காரவர்களாலே இனிது விளக்கப்பட்டிருக்கின்றது.

இங்கே கூறப்பட்டவைகளுள்ளே "ஈண்டு பக்கப்போலி நான்கு" எனக்கூறப்பட்டவை இவை என்பதும், அவற்றின் விளக் கம் இது என்பதும், முதனூல் இது என்பதும், சிவஞானயோகிகள் கூற்றுகளுக்கு வடமொழிப்பெயர்களும் உதாரணங்களும் இவை என் பதும், திருத்தங்கள் இவை என்பதும், சமாதானம் இது என்பதும் அறிதல்வேண்டும். அறிஞர் இச்செந்தமிழில் எழுதக்கடவர்.

இங்ஙனம்

அ. குமாரசுவாமிப் பிள்ளை.

---

## "தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்"

செந்தமிழ் கஅ-ந் தொகுதி அ0-ம் பக்கத்தொடர்ச்சி.

86. "இ ஈ எ ஏ ஐயென விசைக்கு
மப்பா லைந்து மவற்றோ ரன்ன
அவைதா, மண்பன் முதனா விளிம்புற லுடைய."

இ ஈ ஏ ஏ ஐ என்று கூறப்படும் அக்கூற்று ஐந்தும் ... ஆகாரங் களைப்போல்வே அங்காந்து கூறும் முயற்சியாற் பிறக்கும். அவை தாம் அங்ஙனம் பிறக்குமாயினும் மேல்வாய்ப்பல் இடையில் அடிநாவி னது ஓரம் உறுதலையும் உடையன என்க. இவற்றாலும் வளியின் செயலாலே உறுப்புக்கள் ஏற்றபடியாமெனக் கண்டுகொள்க.

161399
600 008.
031m 24, N02
N02.18

அண்ணத்லைத நண்ணிய பல்லை அண்பல் என்றார் "அண்ணம் நண்ணிய பல்முதல்" என்றதாலும் அறிந்துகொள்க. மேல்வாய்ப்பல் கீழ்வாய்ப்பல் என்னும் வழக்கும் இதனை வலியுறுத்தும். இதனை அறியாத உரைகாரரெல்லாம் அதனை வினைத்தொகை எனவும், நாவினிம் பால் அணுகப்படும் பல எனவும் மயங்கி உரைத்தார். அன்னார் கூற்றிற்கு இணங்க அஃது மேல்வாய்ப்பல்லை மாத்திரம் அணுகியும் கீழ்வாய்ப்பல்லை அணுகாதும் இருப்பினன்றே அவர் உரை பொருந்தும் என்க.

இச்சூத்திரப்பொருளை நன்னூலார் "இ ஈ எ ஏ ஐ அங் காப்போ டண்பன் முதனா விளிம்புற வருமே." எனச் சூத்திரித்தது பொருந்தாது. என்னை? "அ ஆ அங்காப்புடைய" என்றவர் அங்காப்புடைமையோடு விளிம்புறலுடைய எனப்பொருந்தாமையின் என்பது.

87. "உ ஊ ஒ ஓ ஔ வென விசைக்கு
மப்பா லைந்து மிதழ்குவித் தியலும்."

உ ஊ ஒ ஓ ஔ என்று கூறப்படும் அக்கூற்று ஐந்தும் இதழ்குவிந்து நடக்கும் என்க.

இவற்றை விளக்கும்போது "இதழ்குவிவே" என நன்னூலார் கூறினார். அவ்வாறு குவிதலான் மாத்திரம் அவை பிறவா எனமறுக்க.

88. "தத்தந் திரிபே சிறிய வென்ப."

முன்னர் முப்பகுதிப்பட உயிர் எழுத்துக்களைப் பிறப்பு முதலியவற்றால் ஒக்கும் என்றாலும் தம்முடைய தம்முடைய வேறுபாடுகள் சிறியவாக உடைய என்க.

இச்சூத்திரத்திற்கு உயிர்க்கும் மெய்க்கும் புறனடையாகப் பொருள் பண்ணி யுரைகாரரெல்லாம் மயங்கினர். அது கருத்தாயின் "அவ்வா றெழுத்து மூவகைப் பிறப்பின" என்பது போன்றவை மிகையாம் என மறுக்க.

மேலும் அவ்வாறுவதை ஆண்டாண்டு விளக்கிக் காட்டுதும். இவ்வுரைகாரர் கூற்றை நம்பிய நன்னூலார் "எடுத்தல்-படுத்தல்" என்னும் பொதுப்புறனடையால் இவற்றை அமையவைத்ததூஉம் பொருந்தாது. என்னை? "தத்தந்திரிபே," என்றதனால் பன்னிரண்டுயிர்களும்



தங்கள் தங்கள் திரிபிற் சிறிய வேறு பாடுடைய எனவும், "அவ்வாறெழுத்தும்" என்றதனாலும் "மெல்லெழுத்தாறும்" என்றதனாலும் தங்கள் முதலியன வளிசெல் நிலை வேற்றுமையின்றி முயற்சிவேற்றுமை இல எனவும் கூறியதனாலும், ஏனையவற்றைத் தனித்தனி விளக்குவதனாலும் பெறும் உண்மையைப்போலன்றி, கஙக்கள் முதலியன முயற்சி வேற்றுமை உடைய எனப் பொருள்படுவதனாலும் கஙவும் சஞவும் எனக் கொடுத்தவும்மைகளால் அடையும் பயன் ஒன்று மின்றிப்போதலினாலும் அன்றியும் ஒவ்வொன்றிற்காம் பிறப்புறுப்புக்களின் வேற்றுமையை அவர் சூத்திரத்தாலே பெறப்படாமையாலும் பிறவாற்றாலும் என்பது.

89. "ககார ஙகார முதனா வண்ணம்."

ககாரஙகாரங்கள் முதல் நாவானது முதல் அண்ணத்தை உறப்பிறக்கும் என்க.

90. "சகார ஞகார மிடை நா வண்ணம்."

சகார ஞகாரங்கள் இடைநாவானது இடை அண்ணத்தை உறப்பிறக்கும் என்க.

91. "டகார ணகார நுனிநா வண்ணம்."

டகாரணகாரங்கள் நுனிநாவானது நுனி அண்ணத்தை உறப்பிறக்கும் என்க.

இம்மூன்றனையும் ஒரு சூத்திரமாக்கி ஓசைமுதலிய நயங்களை நன்னூலார் பாழ்படுத்தினமையை உரைத்தறிக.

92. "அவ்வா றெழுத்து மூவகைப் பிறப்பின."

முக்கூறப்பட்ட ஆறெழுத்துக்களும் மூவகையாகிய பிறப்பினை உடைய என்க.

உரையாசிரியரை உள்ளிட்டார் அனைவரும் அவ்வாறெழுத்துக்களும் தம்முள் வேற்றுமை உடைய எனவே கூறினார். அவர் கூற்றுப் பொருந்தாது. என்னை? அவ்வாறு வேற்றுமையுடையனவாயின் மூவகைப் பிறப்பின என விதந்து கூறுவதாற்போந்த பயன் இன்மையான் என்பது. இதனை முன்னர் விளக்கிக் காட்டினும்.

93. "அண்ண நண்ணிய பன்முதன் மருங்கின்—நாநுனி பரந்து
மெய்யுற வொற்றத்—தாமினிது பிறக்குந் தகார நகாரம்."

அண்ணத்தைச் சேர்ந்த பல்லினது அடியாகிய இடத்திலே நாவினது நுனி விரைந்து தன்வடிவு உறும்படி ஒற்றத் தகர நகரம் என்றவை தாம் இனிதாகப் பிறக்கும் என்க.

இதனாலும் அவை இரண்டற்கும் வளிசெல் நிலை வேற்றுமை யன்றி ஏனைய வின்மையறிக.

நாநுனி பரந்து மெய்யுறச் செவ்வன் ஒற்றாவிடின் அவை பிறவாமை உரைத்தறிக.

அவ்வாறு ஒற்றின் அவைதாம் இனிதாகப் பிறக்கும் என்க. இதனை அறியாத நன்னூலார் "அண்பல்லடிநா முடியுறத்தந வரும்." என்று சூத்திரித்தார். ஆசிரியர் கூறியபடி பரந்து ஒற்றாது இவர்கூற்றை நிறைவேற்றினால் பிறப்பன தகரநகரங்கள் அன்மை எனவுணர்க.

94. "அணரி நுனிநா வண்ண மொற்ற
றஃகான னஃகா னாயிரண்டும் பிறக்கும்".

கிளர்ந்துகொண்டு நாவினது நுனி அண்ணத்தை ஒற்ற றகர னகரங்கள் என்னும் அவ்விரண்டும் பிறக்கும் என்க. அணரிவினையெச்சம்; "ஆயிர வணர்தலை" எனத்தொகையாகி வருதலையும் "அணர்ந்த பாம்பினரும் புவிழ்காந்தள்" என எச்சமாய் வருதலையும் கண்டுகொள்க.

அணரி நுனிநா எனக்கூறியது அணரிக்கொண்டே நாநுனி செல்லவேண்டியது எனவும், இதனை நாநுனி அணரி எனப்பின்னர் மாற்றியது நாநுனி சென்று அணரிவருடவேண்டியது எனவும் வேற்றுமை காட்டவேண்டி என்க.

ஒற்றல் என்பது தீண்டித்தன்னிலையில் வருதலைக்குறிக்கும். உறுதல் என்பது ஆண்டுப் பொருந்தியுறு தலைக்குறிக்கும். வருடல் என்பது பொருந்தி ஊசலாடல்போல மெல்லிதாக விடாது வருதலைக் குறிக்கும்.

இவற்றை ஒற்றிக்கொடு தடவிக்கொடு என்றுரைக்கும் வழக்கும் வலியுறுத்தும்.



உரையாசிரியரை உள்ளிட்டாரனைவரும் இவற்றை ஒருபொருட்சொற்களாகப் பொருளுரைத்தமையைப் பின்பற்றி முறைபிறழ நன்னூலார் சூத்திரித்துத் தவறுபட்டனர்.

95. "நுனிநா வணரி யண்ணம் வருட
ரகார ழகாரமா யிரண்டும் பிறக்கும்."

நாவினது நுனியானது அணரி அண்ணத்தை வருடவும் (அணராது) வருடவும் ரகர ழகரம் ஆகிய அவ்விரண்டும் பிறக்கும் என்க.

அவ்வளவு வேற்றுமை இல்லாமை கருதி உம்மை கொடாது கூறி உய்த்துணர வைத்தார். நன்னூலார் இதனை "அண்ண நுனிநா வருட ரழவரும்." எனக்குறுக்கித் தவறுபட்டனர்.

96. நாவிளிம்பு வீங்கி யண்பன் முதலுற
வாவயி னண்ண மொற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.

நாவினது விளிம்பு அண்பல்லின் அடியிலே உறுநிற்க ஆவயின் அவ்வண்ணத்தை ஒற்றவும் வருடவும் லகர ளகரம் ஆகிய அவ்விரண்டு எழுத்துக்களும் பிறக்கும் என்க.

ஒரு தன்மையாய் அவைகட்குப் பிறப்புளவாயின், ஒற்றி வருட எனவே சூத்திரிப்பார் ஆதலின் அவைகளை ஏற்புழி ஏற்பக்கொள்க. "அண்பலு முதலு மண்ணமுமுறையி—நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்—லகார ளகார மிரண்டும் பிறக்கும்." என நன்னூலார் யாத்த சூத்திரத்தில் "முறையின்" என ஒரு சொல் உணர்த்தின்மையால் எமது உரையே அவர்க்குங் கருத்தாயது காண்க. அதனையும் அந்நூலுரைகாரர் மறைத்தமை அவரது அறியாமையை விளக்கும்.

97. "இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்."

இதழ்கள் தம்மில் இயைந்த பின்னரே பகர மகரங்கள் பிறக்கும் என்க.

இதனாலும் வன்மை மென்மையின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிக.

இதழ் இயைந்து என்பதுவே சாலுதல் அறியாத நன்னூலார் "மீகீழிதழுறப் பிறக்கும்" என இடர்ப்பட்டுச் சூத்திரித்தார். அவர்

— அச்சூத்திரம் மீஇதழ் கீழ்இதழை உற எனப்பொருள்படுதலையும் "கீழ் மேலிதழுற்று" எனக் கூறவேண்டியதையும் இவ்வாறு பலபடி கூறுவது பலவழூஉக் குழூஉக் களுக்குக் காரணமாவதையும் பிறவற்றையும் உணராராயினர் என்க. இதழ் இயைந்ததும் அவற்றை வளி பிளந்து செல்லுங்கால் அவை பிறப்பதனால் இதழியைந்தென்றார்.

98. "பல்லித ழியைய வகாரம் பிறக்கும்."

மேற்பல்லும் கீழிதழும் கூட வகரமானது பிறக்கும் என்க.

வளிவருகாலை அவ்வாறியைதலின் "இயைய" என்றார். மேற் பல்லும் கீழிதழும் பொருந்துவதே இயல்பாதலின் அதனை விளக்க வேண்டாமையை அறியாத நன்னூலார் "மேற்பல்லிதழுற" என்றார்

இதனுக்கு மாறாகக் கீழ்ப்பல்லை மேலிதழ் உறினும் அது பிறப் பதையும் அறிந்தன்றே ஆசிரியர் "பல்லிதழியைய" எனச்சூத்திரிப்பா ராயினர்.

இவ்வாறே பகரமகரங்களையும் ஏற்றபெற்றியுற உரைத்துணர்க.

99. 'அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்."

உயிர் எழுத்துக்கள் பிறப்பதற்காக அண்ணத்தைச் சேர்ந்த மிடற்ற எழுவளியினது ஓசையானது அம்மிடற்றின் கண்ணுற்று அடைவத னாலே யகாரவொற்றுப் பிறக்கும் என்க.

ஏனை மெய்யெழுத்துக்கள் அண்ணத்தை உறுதல் போலாது அண்ணஞ் சேர்ந்த இசை மிடற்றுக்கண் உறுதலே இதனோடு அவற் றின் வேற்றுமை என்பார் "அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை கண்ணுற்றடைய" என்றார். இதனை அறியாத உரைகாரர் எல்லாம் அண்ணம் கண்ணுற்றடைய எனவே பொருளுரைத்துத் தவறுபட்ட னர். நன்னூலாரோ "அடிநா வடியண முறயத் தோன்றும்" என்றார் இவ்வாறு உரைத்தது பொருந்தாதென்று இலக்கண விளக்க நூலு டையார் மறுத்துக் கூறியதை ஆண்டு உணர்ந்துகொள்க.

100. "மெல்லெழுத் தாறும் பிறப்பி னாக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினு
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்."



மெல்லெழுத்துக்கள் ஆறும் தம்பிறப்பினது ஆக்கம் சொல்லிய இடத் தே நிலைபெற்றனவாயினும் ஓசை கூறுங்கால் (மிடற்றுவழியாகச்செல் லும் ஏனைய போலாது) மூக்கின் வழியாக வளிசெல்லுதலினாலே பிறக் கும் ஓசையினால் அவை யாப்புறத் தோன்றும் என்க.

இதற்கு விசேடவுரை வகுத்தார் எல்லாம் "யாப்புற" என்றதி னால் இடையினத்திற்கு மிடற்றுவளியும் வல்லினத்திற்குத் தலைவளி யும் கொள்க எனவும், நன்னூலார் வன்மை உரம் பெறும் எனவும் தமக்கு அறிந்தவாறு கூறியவெல்லாம் தவறுதலை முன்னர் விளக்கிய வற்றைக் கொண்டு ஆராய்ந்து உணர்க.

101. "சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றுந்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
யொத்த காட்சியிற் றம்மியல் பியலும்."

சிலஎழுத்துக்களைச் சார்ந்து தோன்றின் அல்லது தமக்கெனத் தோன் றுதற்கு ஓர் இயல்பு இலவென்று (அம்முப்பதெழுத்துக்களோடு சேர வைக்காது) ஏனையவாக வெளிப்படுத்தப்பட்ட அம்மூன்று எழுத்துக் களுக்கு உளவாம் பிறப்பினைக் கூறுங்கால் தத்தமக்கு உரிய சார்பாகிய மெய்களது சிறப்புப் பிறப்பிடத்தே பிறத்தலோடு பொருந்தி நடக்கும் என்க.

இவற்றை அறியாத உரைகாரர் எல்லாம் காட்சி என்பதற்கு நெஞ்செனப் பொருள்கொண்டு உரைகூறி மேற்கோளுங் காட்டாராய் ஆய்தம் நெஞ்சுவளியாலே பிறக்கும் என்றார். அவ்வாறாயின் ஆசிரி யர் அதனைத் தனித்துச் சூத்திரித்தாயினும் அவ்வாறு பொருள்பட இதன் கண்ணினைத்தாயினும் இருப்பர். அவ்வாறு இல்லாமையே அவர் கூற்றைத் தவறென்னும்.

உண்மையைக் கூறாது வேறுமை கூறவே விழையும் நன்னூலா ரும் "ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி" என்றார். அது பொருந்தாது. என்னை? ஆய்தத்தை உரைக்கு மிடத்துக் ககரமுதலிய மெய்போன்ற முயற்சி உடையதன்றி அகர ஆகாரம்போன்ற அங்காப்பு இன்மை யாலும் அங்காவாமல் ஓர் எழுத்தும் பிறவாமையாலும் அங்காப்

புடைய எனச்சிலவற்றை விதந்து கூறியது வாயை மூடாது உரைக்க வேண்டும் என்பதன்றிப் பிறவற்றை உணர்த்தாமையாலும் பிறவாற்றாலும் என்பது.

102. "எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே."

103. "அஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கு
மெய்தெரி வளியிசை யளவுநுவன் றிசினே."

இச்சூத்திரங்கட்கு உரையாசிரியர் வகுத்தருளிய உரையே மெய்யுரை என்க.

நன்னூலார் ஐகார ஔகாரக் குறுக்கங்களையும் மகரக் குறுக்கத்தினையும் சார்பின்பாற்படுத்தியதும் குற்றம், என்னை? குற்றியலிகரமும், குற்றியலுகரமும் மெய்போல உயிரேற இடங்கொடுத்தும், உயிர்போல மெய்யின்மேல் ஏறியும் உயிர்வரின் தன்மேல் ஏறவிடாது உடம்படுமெய் கொடுத்தேற்றியும் தன்னை எழுத்திடை யறிவிக்காது மொழியிடை அறிவித்தும் ஏற்ற பெற்றியாகிப் பலவகைப்பட்டிருத்தலின் தனி எழுத்தெனப்பட்டமை போலாது தத்தம் இயல்புத்தன்மையே யாண்டும் பெற்று நடத்தலின் என்பது. இன்னும் ஆசிரியர் குற்றியலுகரக் குறுக்க முதலியனவற்றை வேறெழுத்தாகக் கொள்ளாமையே அவர் கொள்கை குற்றமாதற்குச் சான்றாம் என்க.

இனிப் "புள்ளிவிட்டவ்வொடு" என்ற சூத்திரத்தைப் பற்பல வாய்ந்து முன்னர் விளக்கினும் எனினும் புதியனவாகவும் சிற்சில பெற்றேமாதலின் அவற்றையும் ஈண்டு விளக்குதல் முறைமை என்க.

இச்சூத்திரம் முன்னுருபுள்ளிவிட்டு அவ்வொடு ஆகியும் என்று அந்வயப்படின் வந்தவுரு என்று கூறவேண்டியதில்லை எனப்பட்டு இதற்குக் காட்டிய குற்றங்கள் நிலைபெறுவோவெனின்? அற்றன்று, என்னை மெய்புள்ளிவிடுதல் அகரவுயிர் ஏறியதற்கன்றிச் சாரியை முதலியன வரும்வழியும் உண்டாதலானும், அகரமேறிய வழியே புள்ளிவிடுமெனின் ஏனையுயிரேறியவிடத்துப் புள்ளிவிடாது பிறதிரிபே வரப்பெறும்



என்பது போதாலானும், ஆசிரியரும் இக்குறைபெறாது நிற்றற்கே ஆண்டு "உருவுருவாகி" என்று போத்தந்ததை நோக்க "ஏனையுயிரோடவ்வுருவுதிரிந்தும்" என்று ஆண்டமைதலே சிறப்பாதலானும் பிறவாற்றானும் என்பது.

[மெய்ம்மயக்கவாராய்ச்சி.]

ஆசிரியர் "அம்மூவாறும்" என்ற சூத்திரமுறைகொண்டு இருவகை மெய்ம்மயக்கங்களையும் வலிமெலியிடையென்னும் வரிசைப்படுத்திக் கூறுவான்வேண்டி முதற்கண் வேற்றுநிலை மெய்ம்மயக்கங் கூறுவாராயினர்.

வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு வல்லினத்துள் கசதபக்கள் உரியனவாகா ஆதலின் அவற்றை விலக்கி டறக்களைமட்டும் விளக்குவான் எடுத்துக்கொண்டார்.

இனி டறக்களோடு கசபக்கள் மயங்கும். லளக்களோடும் அவை மயங்குவனவாதலின் லளக்களையும் டறக்களோடிணைத்து "டறலள * * * தரிய" எனச் சூத்திரித்தார்.

இனி லளக்களோடு கசபக்களன்றி யவக்களும் மயங்குவன ஆதலின், "அவற்றுள், லளஃகான் * * * * தோன்றும்" எனச் சூத்திரித்தார்.

[இனித் தத்தம் இனங்களோடு மயங்கு மெல்லினங்கள் தத்தமினங்களோடன்றிப் பிறவோடு மயங்கு மயக்கம் கூறுங்கால் ஆண்டாண்டினமென்று தழுவிப்போகாது ஈண்டு வேறுசூத்திரஞ் செய்தது மிகையாமெனின் ஆகாது என்னை? இங்ஙனம் கூறுக்கால் ஞநமக்களைக் கூறுமிடத்து வகரத்திற்கும், இனத்தோடன்றிப் பிறவோடு வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தின் மயங்காத ஙகரத்திற்கும் தனிச்சூத்திரஞ் செய்யும்படி வருதலின் என்க.]

அதன்பின்னர் ஙகரம் ககரத்தோடன்றி வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற் குரியதாகாதாகலின் அதனையகற்றி ஏனைய ஞணநமன என்பவைகளுள் ணனக்களோடு மிகுதியான எழுத்துக்கள் மயங்குதலானும் இடையெழுத்துள் ஒன்றாய வகரம் ஞநமக்களோடு சேர்த்துக் கூறுதற்

கேற்றமையானும் ணனக்களை முன்னெடுத்து “அவற்றுள் ணனஃகான் * * * மூரிய” எனச் சூத்திரித்தார்.

அதன்பின்னர் ஞநமக்களைக் கூறுவாராயினார். ஞநமக்களோடு யகரம் மயங்கும். வகரத்தோடு அது மயங்குமாதலின் வகரத்தையும் ஞநமக்களோடு கூட்டி “ஞநமவ * * * * றன்றே” எனச் சூத்திரித்தார்.

இனி மகரத்தோடு பகரயகரங்களன்றி வகரமும் மயங்குமாதலின் “மஃகான் * * * தோன்றும்” எனச் சூத்திரித்தார்.

அதன்பின்னர் இடையினத்துள் யரழக்களே கூறவேண்டுவன ஆதலின் “யரழ * * * * தோன்றும்” எனச் சூத்திரித்தார்.

[இனி நன்னூலார் “யரழ முன்னர்மொழி முதன்மெய்வரும்” என்றாங்கு ஆசிரியர் கூறாதது பிழைபடக் கூறலோவெனின்? அற்றன்று, என்னை? ஙகரம் மொழிக்குமுதலாதல் அவர்க்குடம்பாடன்மையின் என்பது.]

முதலாகெழுத்தெனப் பொதுப்படக் கூறினும் மெய்ந்நிலை மயக்கமாதலின் மெய்யெழுத்துக்களில் முதலாவன என்பது தானே பெறப்படும்.

அதன்பின்னர் உடனிலைமெய்ம்மயக்கங் கூறவேண்டுதலின் ‘மெய்ந்நிலை * * * * கடையே’ எனச் சூத்திரித்தார்.

இதனுள் ரழக்களை அமைக்காமையானும் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்துள் அமைத்தமையானும் அவை தம்மொடு பிறவே மயங்குவன என்பதூஉம் வேற்றுநிலை மயக்கத்துட் கூறப்படாதனவாம் கசதக்கள் ஈண்டுக் கூறப்பட்டிருத்தலின் அவை தம்மொடு தாமே மயங்குவன என்பதூஉம் இவ்விருபான் மயக்கத்துள்ளும் வந்த டறஙஞணநமனய லவள என்பன தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் மயங்குவன என்பதூஉம் உய்த்துணர வைத்தமையறிக. இவ்வாறுகோத்தவரிசை கற்போரினிதுணர்ந்து பயன்பெறுதற்குக் கருவியாமென்க.

டறலள முன்னர்க் கசபவு மவற்றுள்
லளமுன் யவ்வும் மெலிமுன் னினமு
மவற்றுள் ணனமுன் கசஞப மயவவும்
ஞநமவ முன்னர் யவ்வும் மம்முன்
வவ்வும் யரழமுன் ஙவ்வொடு மொழிமுதன்
மெய்யும் மயங்கு மென்மனார் புலவர்.



இச்சூத்திரம் ஆசிரியர் கூறிய வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சூத்திரங்களை எல்லாம் உள்ளடக்கிச் செல்வதோடு “ஞநமுன் றம்மினம்” “ணனமுன்னினம்” என்ற நன்னூற் சூத்திரங்களுட் டம்மினம் என்றமைக்கியையும் குற்றங்களில்லாமலும் முன்னர்க் கூறப்பட்ட அவ்வரிசை முறையில் ஒருசிறிதும் மாறுபடாமலும் செல்கின்றது. என்றாலும் ஓசையில்லாமை, மனதிற்படிந்து பயனளிக்கும் ஆற்றலில்லாமை, தெளிவில்லாமை விளக்குந் தன்மையில்லாமை, படிப்போர்க் கின்னா பயத்தன் முதலாய பற்பல குற்றங்களுக் கிடமாகிப் பயனிலதாமென்க.

இவ்வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சூத்திரத்தை நன்னூலார் கூறியிருப்பரேல் அதனுக்கியைத்த குற்றங்களை மறுத்தற்குப் பலருந் தலைப்பட்டுழல்வர்.

நன்னூலார் நுணுக்கம் இல்லாது வேற்றுநிலை மெய்ம்மயக்கங்களை நெடுங்கணக்கு வரிசைபற்றிக் கூறினமை படிப்பார்க்கின்னா பயக்குமென்றறிக.

இன்னும் அவர் “ஙஞணநமன * * * * நிலையே” என்ற சூத்திரத்துட் கூறிய மயக்கங்களை “ஞநமுன் றம்மினம்” “ணனமுன்னினம்” என்றவற்றானும் பிறவற்றானும் கூறினமையினன்றே “ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே” எனச் சூத்திரிக்க நேர்ந்தது. ஙகரத்திற்குப் பின்னர் ஞகரநகரங்களின் முன்வந்து மயங்குவனவற்றைக் கூறுவதி முறையாயிருக்கவும் “வம்முன் யவ்வே” எனத் தனித்துக் கூறும்படியு நேர்ந்தது. இனி ஒரெழுத்தின்முன் ஒரெழுத்து வந்து மயங்குவதைக் கூறினாரெனிற் பொருந்தாது, என்னை? ஈரெழுத்து முதலாயினவற்றின்முன் ஈரெழுத்து முதலாயினவந்து மயங்குவனவற்றையும் வரிசையுறக் கூறாமையின் என்பது.

இன்னும் அவர் முதனிலை கடைநிலைகளோடு மெய்ம்மயக்கத்தைச் சேர்த்தமையுங் குற்றம். முதனிலை கடைநிலைகள் ஒருமொழிக்கண் அமைவன. மெய்ந்நிலை மயக்கமோவெனின் ஒருமொழிக்கண்ணும் நிலைமொழியோடு வருமொழிவந்து புணருமிடைக் கண்ணும் அமைவதாதலின்.

இன்னும் அவர் கூறிய மெய்ம்மயக்கங்களாய "ஙம்முன் * * * யவ்வே" என்றற் றொடக்கத்துச் சூத்திரங்களாலேயே தம்மொடு தாமும், தம்மொடு பிறவும், ஆகவந்து மயங்குவன இவ்விவை என்பது பெறப்பட்டிருக்கவும் "கசதபவொழித்த வீரேழன்கூட்ட மெய்ம்மயக் குடனிலை ரழவொழித்தீ ரெட்டாகும்" என்றமையும் பிறவும் குற்றம்.

"தம்பெயர் * * * மென்ப" என்ற சூத்திரத்துள் முதலும் என்றதனானே இறுதியும் அடங்குமாதலின் மிகைபடக் கூறாராயினர் என அந்நூலுரைகாரர் புனைந்துரைத்ததூஉம் பொருந்தாது, என்னை? முதலு மயக்கமும் இம்முறை மாறியும் இயலுமெனின் கடையும் மாறாது இயலும் எனப்பொருள் கோடலு முறையாதலின் என்பது.

(தொடரும்)

இங்ஙனம்

K. S. நவநீதகிருஷ்ண பாரதி,
தலைமைத் தமிழ்ப்பண்டிதன்,
ஸ்ரீராமநாத வித்யாலயம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

---

## வீணுரை மறுப்பு.

---

செந்தமிழில் ஒருவர் நன்னூல் என்று பொதுமொழியிட்டு அந்நூலைப் புகழுமுகத்தால் "தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்" என்ற எமது விஷயத்தை அவமே குறைகூறினர். அவர் எம் கருத்தையும் இலக்கண முடிபையும் விஷயநிலைமையையும் தமது தகைமையையும் நோக்காதும், விஷயத்துட் செல்லாமல் வீணாரவாரம் புரிந்தும், சில சான்றோர் கொள்கைகளைத் தமக்கேற்றவாறே மாற்றி அவற்றையெல்லாம் தாமே கூறியதாக வெறும் புரட்டுச்செய்தும், அப்பிரசித்தமானவற்றை விரித்து விளக்கவேண்டுழியும் விளக்காதும், பிரசித்தமானவற்றை விரித்து விளக்க வேண்டா விடத்தும் வீணே விளக்கியும், யாம் எமது மேற்கோளைச் சொல்லிமுடிக்குமுன் இடையே முறையின்றி வந்து வீண்குற்ற கூறியும், 'ஒருவர் மற்றொருவரை இகழ்ந்தனவற்றையும் புகழ்ந்தனவற்றையும் முறையே எடுத்துக்காட்டி அவற்றுள் வலிமையுற்றனவற்றைப் பற்பல விதத்தானே உண்மை புலப்பட விரித்துக்



கூறித் தம்மத நாட்டிப் பிறர்மதம் வீட்டி முறைசெய்யாது இலக்கணக் கொத்துநூலாரும் சிவஞானசுவாமிகளும் நன்னூலாரைப் புகழ்ந்தனர் என வாளா கூறியும், இவ்விக் காரணங்களாலே தொல்காப்பியர் கருத்து இவ்விவையாகும், இவ்விக்காரணங்களாலே நன்னூலார் கருத்து இவ்விவையாகும் என்னாது பொதுவாகத் "தொல்காப்பியர்க்கும் நன்னூலார்க்கும் அது கருத்தன்மையின்" என்று சென்றும், எமதுரையை நன்குபயிலாது பொருந்தாதனவற்றை ஏற்றித் தம் மனம்போனவாறு குற்றமேற்றியும், தமதுப்பற்ற சிறுவிஷயம் இரண்டொருநாளில் இரண்டொரு பக்கத்தில் இயற்றப்பட்டு அடங்குவதறியாது ஓராண்டாகி எட்டுப்பக்கங்கள் பரந்தும் வீணாரவார கோஷத்திற்கும் நல்லவர்மேற் செய்யுந் துவேஷத்திற்கும் தம்மையே விசேஷித்தற்கும் தமக்கமைந்த போலிவேஷத்திற்கும் பாத்திரமாகி நின்றதன்றி எமது விஷயத்தைக் கண்டிக்கு மாற்றலில்லாமையால் அவலித்துக் கவலைப்பட்டுக் கையாறெய்தியழுந்தியும், சென்றனரேயன்றி வேறொன்றுஞ் செய்தாரில்லை. என்றாலும் அன்னாரை யிடித்துக்கூறி நல்வழிப்படுத்துவது முறையாதலிற் சிலவற்றை விளக்குதல் எமக்கு நேர்ந்தது.

எமது வாக்கியங்கள் பிழையுடையன எனத்தாபிக்கும் அந்நன்னறிவாளர், "தமிழ்ப்பதங்களைப் பகுத்துணர்ந்து கொள்ளுமாறும் வடமொழிப்பதங்கள் தென்மொழிக்கண் வந்து வழங்குமாற்றை இனிதுணர்ந்துகொள்ளுமாறும் தென்மொழி இலக்கணநூலுணர்ச்சியோடு தமது வடமொழிஇலக்கணநூலுணர்ச்சியுங்கொண்டு பவணந்தியார் பதவியற்கண் அமைத்த புதுவிதிகளும் நன்னூல் வாய்ந்தது" என்றனர். முன்னரே நன்னூல் பவணந்தியாராற் செய்யப்பட்டது என்றதை மறந்து இதனுள் "பவணந்தியார் பதவியற்கண் அமைத்த புதுவிதிகளும்" என்றதுங் குற்றம். புதுவிதிகளைப் பவணந்தியார் பதவியற்கண் அமைத்தாரென்றால் எவ்வெவர் புதுவிதிகளை எவ்வெவ்வியல்களில் அமைத்தார்? பவணந்தியார் புதுவிதிகளைப் பிறவியல்களில் அமைக்கவில்லையா? பதவியற்கண் அமைந்தனவெல்லாம் புதுவிதியன்றிப் பிற இல்லையா? பதவியற்கண் அமைந்த விதிகள் நேமிநாதத்துள்ளும் வருகின்றனவே? அவரும் இந்நன்னூலைக்கொண்டே புதுவிதிகளை யாத்தனரா? இனி அவர் "தமது வடமொழிஇலக்கணநூலுணர்ச்சி" என்றார். வடமொழிஇலக்கணநூலுணர்ச்சி தமது ஆகுர்

பொழுது தென்மொழிஇலக்கணநூலுணர்ச்சி பிறருடையதா? இன்னோரன்ன குற்றங்கள் தமது விஷயத்தில் மலிந்திருந்தும் அதனையே குற்றமற்றதாகக் கருதும் இயல்பினர்க்கு எமது விஷயம் குற்றமாதல் பொருத்தமுடைத்து. இன்னும் அவர் "இத்துணை பெருமை வாய்ந்ததாகிய இந்நன்னூலின் சிறப்பு நோக்கியே இலக்கணக்கொத்து நூலாரும் "முன்னோரொழியப் பின்னோர் பலரினுள் நன்னூலாருச் சென்னூலாரும் இணையோ வென்னும் துணிவே மன்னுக", எனப் பவணந்தியாரைப் புகழும் வாயிலாற் புகழ்ந்தனர்" என்றார். இலக்கணக்கொத்து நூலார் "நன்னூலாருக்கு" என்றது முதலில் நன்னூலையும் அதன் முகத்தாலே பின்னர் அந்நன்னூலுடையாரையும் குறிக்கும் ஆதலின் அவர், நன்னூலைப்புகழும் வாயிலாற் பவணந்தியாரை இலக்கணக்கொத்துநூலார் புகழ்ந்தனர் என்று கூறுவதும் குற்றம். இன்னும் இலக்கணக்கொத்துநூலார் பற்பலரையும் தமக்குவேண்டியவிடத்துப் புகழ்ந்தும் வேண்டாவிடத்து வீணே இகழ்ந்தும் செல்வாராதலின் அவர் கூற்றை இன்னோரன்ன இடங்களிற் பிரபல ஆதாரமாகக் கொள்வதூஉம் பொருந்தாது.

இவ்வாறு பொருந்தாதனவற்றைப் பொருந்துவனவாகக் கருதி வெளிப்படுத்து மப்பெரியோர்க் கெமது விஷயத்திற் குற்றங் காணுத லியல்பென்க. "பாரதியார் அவர்களோ தாமெழுதிய விஷயத்தைப் பிழையற எழுதும் ஆற்றலில்லாதவர்களாய் இருக்கின்றார்கள்" என எம்மை இழித்தார் கூறுமுகத்தாலே தம்மை உயர்த்திக் கூறும் உலகமெனக் கருதி எம்மைப் பற்பல இகழ்ந்த அப்பெரியார்" "இங்ஙனமே பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான்" என நன்னூல் விருத்தியுரைகாரரும் புகழ்ந்தனர்" என்றனர். இதனுள் "இங்ஙனமே" என்றது தனக்கு அணித்தாக நின்ற இத்துணை பெருமைவாய்ந்த இதனை" என்ற முற்றுத்தொடர்மொழியையே சுட்டும். சுட்டவே இவ்விருத்தியுரைகாரரும் பவணந்தியாரைப் புகழும் வாயிலாற் புகழ்ந்தனர் என்பது போதரும். உண்மையாகவே அப்பவணந்தியாரைப் புகழும் வாயிலாற் நன்னூலை அவ்விருத்தியுரைகாரரும் புகழ்ந்தார் என்பது பெறப்பட்டாலும் இலக்கணக்கொத்துநூலார் 'நன்னூலைப் புகழும் வாயிலாற் பவணந்தியாரைப்' புகழ்ந்தது போலாது அவ்விருத்தியுரைகாரர் பவணந்தியாரைப் புகழும் வாயிலால் "நன்னூலைப்" புகழ்ந்தார் ஆதலின் "இங்ஙனமே" எனச்சுட்டியதூஉங் குற்றம். இனி



உரைகாரருக்கு நூலாசிரியர்மேலும் அவர் நூலின் மேலும் மதிப்பும் விருப்பும் இருத்தல் பற்றியன்றே அவர் நூலுக்குரைவகுப்பர். அவர் மேலும் அவர் நூலின்மேலும் மதிப்பும் விருப்பும் இல்லாது உரை வகுப்பாரும் உளரோ? இவற்றை எல்லாம் நோக்காது "விருத்தியுரைகாரரும் புகழ்ந்தார்" என்றதூஉம் பொருந்தாது. "இங்ஙனமே" என்று சுட்டும் அரிய இலக்கண ஆராய்ச்சி உடையாரே பல விஷயங்கள் எழுதி வெளிப்படுத்தத் துணிந்தார் ஆதலின் "பாரதியாரவர்கள் இனி அடங்குவாராக" என ஆணை இடுவதும் அவர்க்கியல் பாயிற்றென்க.

இனி நன்னூலை மறுப்பதற்குக் கங்கணங் கட்டிக்கொண்ட பெரியாராகிய இலக்கணவிளக்க நூலாரும் தமது காலத்தில் யாவராலும் நன்னூல் பயிலப்பட்டு வந்தமையால் அதன் சூத்திரங்களையே முரண்பாடமைந்தவிடங்களின் மாற்றியும் அறவே முரண்பட்ட சூத்திரங்களை அகற்றிப் பிறவாறமைத்தும் தமது நூலை யாத்தனர் என்பது அந்நூன் முகவுரையானும் பிறவாற்றானும் அறியக்கிடப்பதை நோக்காது "இலக்கணவிளக்க நூலாரும் இதனையே அங்கீகரித்து இதன்கணுள்ள சூத்திரங்களையே தந்நூலினும் பெரும்பாலும் பொருத்தி யாத்தனர்" என்றதுங் குற்றம். இனி அவர் "புள்ளிவிட்டவ்வொடு" என்ற சூத்திரத்திற்கும் பிறவற்றிற்கும் காட்டிய விசேடவுரைகளும் மேற்கோள்களும் இலக்கண விளக்கமுடையார் உதவிபெற்று மாற்றி ஏற்றபெற்றியாகக் கொண்டனர் ஆதலின் தாம் நன்னூலைச் சிறப்பித்தற்குக் கருவியாக அமைந்த அவ்விலக்கண விளக்கமுடையார்க்கும் தமக்கு நன்னூலார் கூற்றுக்கள் அங்கீகாரமாதலை ஏற்றினார்போலும். இவ்வாற்றானே அவர் நல்லாரைத் தீயாரெனவும் திருவுடையாரைத் தரித்திரரெனவும், கற்றாரைக் கல்லார் எனவும் பலபடி புனைந்து கூறுவர் என்பது வெளிப்படை.

இன்னும் அவர் "தொல்காப்பியப் பாயிர விருத்தி முதலியவற்றிலே சிவஞான சுவாமிகளும் இதன் சிறப்பைப் பலவிடங்களிற் புகழ்ந்தனர்" என்றார். சுவாமிகள் இலக்கண விளக்கத்தைக் கண்டிக்கு முகத்தானே இதனைக் கண்டித்தமையு நோக்கிலர். நன்னூலைக் கண்டித்துத் தொல்காப்பியத்தை ஆதரித்து அந்நூல் செல்லும் இடங்களையும் அத்தொல்காப்பியத்தையும் கண்டித்தமையு நோக்கிலர். இன்

னும் இலக்கண விளக்கமுடையார்மேற் சாதித்த பகை காரணத்தானே அந்நூலாரால் மெய்ம்மை கருதி ஆதரிக்கப்பட்டாரைக் கண்டித்தும் குற்றங்கருதி மறுக்கப்பட்டாரை அவமே ஆதரித்தும் செல்வது சுவாமிகள் வழக்கம் என்பதனையும் நோக்கிலர். இவற்றானே சுவாமிகள் கூற்றை இன்னோரன்ன இடங்களில் எடுத்தாள்வது பொருந்தாது. இவ்வாறெல்லாம் உண்மை நோக்காது வெற்றெனத் தொடுத்துச் செல்லும் தமது விஷயமே அவர் செவிக்கு இன்பம் பயக்கும்போலும்.

இன்னும், அவர் "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானும் இதன் சிறப்பு நோக்கியே இதன் காண்டிகை விருத்திகளைத் திருத்தமுற அச்சிட்டனர்," என்றார். நாவலர் அவர்கள் விருத்தியுரையைப் பரிசோதித்தச்சிட்டனரா அல்லது திருத்தமுற அச்சிட்டனரா? சிறப்பு நோக்காவிடத்துத் திருத்தமுறாது அச்சிடுவாரோ? "இதன் காண்டிகை விருத்திகளை.........அச்சிட்டனர்" என்றார். நாவலர் அவர்கள் நன்னூன் மூலம் அச்சிட்டவாறேபோலத் தனித்தனியே அதன் காண்டிகை விருத்திகளை அச்சிட்டனரா? அவற்றை யாவரேனுங் கண்டதுண்டா? "கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும் அவற்றொடு வினாவிடை பாக்கலானும் சூத்திரத்துட் பொருள் தோற்றுவ காண்டிகை." ஆதலானும் "சூத்திரத்துட் பொருளன்றியு மாண்டைக் கின்றியமையா யாவையும் விளங்கத் தன்னுரையானும் பிறநூலானும் ஐயமகல ஐங்காண்டிகை யுறுப்பொடு மெய்யினை யெஞ்சாது இசைப்பது விருத்தி" ஆதலானும் நன்னூன் மூலம் வேறு அதன் காண்டிகை விருத்திகள் வெவ்வேறு என்பது தேற்றம். அவர் "இதன் காண்டிகை விருத்திகளைத் திருத்தமுற அச்சிட்டனர்" என்றது நன்னூன் மூலத்தை விடுத்து அதன் காண்டிகை விருத்திகளை மட்டும் அச்சிட்டனரெனப் பொருடருமே யொழிய நன்னூன் மூலத்தோடு அதன் காண்டிகை விருத்திகளை அச்சிட்டனர் எனப் பொருள்தராது. இனி இதனைக் காண்டிகை விருத்திகளோடு தனித்தனி அச்சிட்டனர் என்று நங்கருத்துப் பிழைபடாது எழுத அறியாதவர் நன்னூலை இகழ்ந்தாரை மறுத்த மறுப்பிற்கு "நன்னூல்" என்று பொதுமொழி யிட்டதூஉம் ஒருவியப்பன்று.

இன்னும் அவர் "நன்னூலாரைப் புகழ்ந்தாரையன்றி இகழ்ந்தாரை நாம் இற்றைவரை அறியோம்" என்று பெரும் பொய் புகன்



றனர். நன்னூலாரையும் அவரது கொள்கைகளையும் அவற்றை ஆதரித்தவர்களையும் ஆசிரியர் நச்சினார்க்கினியரும் பற்பலவிடங்களில் இகழ்ந்து மறுத்தனர். தொல்காப்பியனாரையும் நக்கீரனாரையும் நன்னூலாரையும் சின்னூலுரைகாரரும் பற்பலவிடங்களில் இகழ்ந்து மறுத்தனர். தொல்காப்பியனாரையும் நேமிநாதத்தாரையும் மயிலைநாதரும் பற்பல இடங்களில் இகழ்ந்து மறுத்தனர். நன்னூலாரையும் பிறநூலாரையும் பிரயோகவிவேக நூலாரும் பற்பலவிடங்களில் இகழ்ந்து மறுத்தனர். நன்னூலாரையும் இலக்கணவிளக்க நூலாரையும் இலக்கணக்கொத்து நூலாரும் பற்பல இடங்களில் இகழ்ந்து மறுத்தனர். நன்னூலாரையும், இலக்கணவிளக்க நூலாரையும், இலக்கணக்கொத்து நூலாரையும் தொல்காப்பியனாரையும், நன்னூலாரையும் இலக்கணவிளக்க நூலாரும் பற்பல இடங்களில் இகழ்ந்து மறுத்தனர். பிறநூலாரையும் சுவாமிகளும் பற்பலவிடங்களில் இகழ்ந்துமறுத்தனர். பற்பல நூலாசிரியரையும் அரசஞ் சண்முகனாரும் பற்பலவிடங்களில் இகழ்ந்து மறுத்தனர். நன்னூலாரை நாவலர் அவர்கள் நன்னூற் பதிப்பை அனுஸரித்து பதிப்பவரும் (அந்நூற்குக் குற்றங் காட்டலின்) இகழ்ந்து மறுத்தனராவர். இவ்வனைவர் கூற்றுக்களுள்ளும் ஒன்றனையாவது அவர்கண்டிலேம் என்றனர். ஆதலின் மேற்காட்டிய ஆசிரியர்களால் இயற்றப்பட்ட நூல்களுள் ஒன்றேனும் அறிந்திலராவர் என்பது தேற்றம். இவ்வெல்லா நூலும் ஆராயவேண்டியது எம்மனோர்க்குக் கடமையாகுமேயன்றி அவர் போன்றார்க் கியற்கை யறிவுண்மையின் ஆராய வேண்டற்பாற்றன்று போலும். அன்றியும அவர் தமக்கு நன்னூலார்மேல் வைத்த மதிப்புக் கருதியோ எம்மேல் வைத்த கொதிப்புக் கருதியோ இவ்வெல்லாரும் நூலாசிரியரை இகழ்ந்திருத்தலையும் அறியாது போயினர். இனி நன்னூலார்மேல் வைத்த மதிப்புக் கருதியே எம்மை மறுத்தனரெனின் எமக்கு முன்னர் மறுத்த பலரையும் இவர் மறுத்திலாதலிற் பொருந்தாது. மேலும் எமது விஷயத்திற்கு இவ்வாறு பொய் கூறுவிடில் அதனைக் குற்றஞ்சாட்டி மறுக்கவொண்ணாது என்பது கருதியே இவ்வனைவர் இகழ்ச்சியையும் மறைத்தாரன்றி அறியாதிருக்கவில்லை எனின் அவ்வாறு அறிந்தவற்றை மறைத்துக்கூறுவது வஞ்சமாதலினாலும் கற்றார்க்கின்னோரன்ன இழிகுணம் இயையப்பெறின் அவர்கற்ற கல்வியும் கல்வியெனப்படாமையானும் பிறவாற்றானும் ஒழுக்கம் பிழையாத அப்பெரியார் அறியாமையால் உரைத்தனரேயன்றி வஞ்சத்தானுரைத்திலரென்க.

இன்னும் அவர் "பாரதியார் அவர்கள் போலவே இன்னும் பலர் சேனாவரையர் பரிமேலழகர் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களையும் கண்டித்துப் பேர் படைக்கலாமென்று முன்னெழுந்தனர். எழுகின்றனர்" என்றார். இவ்வரிசை முதலில் உரையாசிரியர் சேர்க்கப்படாததற்குக் காரணந்தான் என்னை? இவ்வுரையாசிரியர்களின் வரிசை எம்முறை கருதி எவ்வணிக் கிலக்காயது? இவ்வுக் காட்டிய ஆசிரியரையும் இவர் போன்றாரையும் மறுத்தவரும் வொதுபூதிச் செல்வரும் திராவிட பாடிய கருத்தரும் ஆகிய சுவாமிகளை இவ்வரிசையிற் சேர்க்காத காரணந்தானென்னை? அவ்வாறு சேர்க்காது செல்வது குற்றமாகாதா? "முதலிய வுரையாசிரியர்களையும்" என்ற சார்பாற் றழுவினேம் என்பாராயின் அவ்வாறு அப்பிரசித்தமுறத் தழுவுதற்குளதாம் காரணந்தான் என்னை? பலரும் இவ்வாசிரியர்களைத் தவிர்த்து வேறெவரையுங் கண்டித்தாரில்லையோ?

இன்னும் அவர் "இவ்வகை வழூஉக்கள் வாராவண்ணம் தம் விஷயத்தை எழுதத் தெரியாத பாரதியாரவர்கள்" எனப் பின்னர்க் கூறினமை மறந்து "பாரதியார் முதலியோர் புதிய நூலுரைகள் இயற்றிப் புகழ் படைத்தால் என்னை?" என வினவுதலும் அதற்கு விடையிறுத்தலும் குற்றம். விஷயம் எழுதத்தெரியாதவர் நூலுரைகளியற்றிப் புகழ் பெறுதல் கூடுமோ? புதியனவாக நூலுரைகள் இயற்றாதவர் புகழ்பெறமாட்டாரா? சேனாவரையர் முதலிய சான்றோர்கள் பழையவுரைகளையே மாற்றி வேறு செய்யவில்லையா? அவ்வாறு செய்த அவர்கட்குப் புகழில்லையா? அவர்கட்குப் புகழில்லையென்பார் தமிழரெனப்படுவாரா? புதிய நூலுரைகள் இயற்றாது பழையவாகிய நூலுரைகளைச் செவ்வனே பரிசோதித்து அச்சிடுவாரெல்லாம் புகழ் பெறாதவரா?

இன்னுமவர் "வெளிப்படுத்தினார் பலராவர். இதற்குச் சான்றாக நன்னூலுடையாரையே இதுபொழுது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது," என்றனர். இதிற் பலராவர் எனமுடித்து இதற்கெனச் சுட்டியதூஉம் வழூஉ "என்றார். வெளிப்படுத்தினார் பலராவர்" என்றதனுள் "வெளிப்படுத்தினார்" என்றதன் கண்ணமைந்த அகநிலைச் செயப்படுபொருளாகிய தொழிற் பெயரையே "இதற்கு" என்றது சுட்டியதறியாது "இதற்கெனச் சுட்டியதூஉம் வழூஉ" என்றதுங் குற்றம். "எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதற்கு எழுவாய் இன்றாதலும் வழூஉ" என்றார். காலங் கருதிவந்த எழுவாயுண்மை இதுபொழுதாவதறிவாராக. இதுபோன்றவரும் அரிய விதிகளை அறியாதார் அறியாதார். சான்றாக என்ற இலேசினானே நன்னூலாரும் அவரோடொருவராவர் என்பது புலப்படவும் "நன்னூலாரும் ஒருவர் என்பது தோன்ற வாக்கியம் எழுதப்படாமையும் வழூஉ" என்றதுங் குற்றம்.



இன்னும் அவர் "வினைமுதல் நான்கன் நிலைமை பெற்றமைக்கேற்பத் தொகைதழுவப்பெற்று எழுவாய் நிற்கும் உண்மை நோக்காது. "பெறும் என்பது எழுவாயின்றாதலும் வழூஉ" என்றதுங் குற்றம், இவ்வாறே ஆசிரியர் நச்சினார்க்கினியரும் "மேலனவற்றிற்கும் இது பொருந்தும்" என்றனர். ஈண்டு மேலனவற்றையும் இது பொருந்தும் என்னாது மேலனவற்றிற்கும் இது பொருந்தும் எனக் கூறியது நோக்கற்பாலது. "உயிரார்க்கு" என்றதனைக் கோளிப்பொருளாக்கினமைக்கேற்பச் செயப்படுபொருளை எழுவாயாக்கி இருத்தலின் "பெறும்" என்பது இயற்கையிலே செயப்படுபொருள் குன்றாவினை எனினும் ஈண்டுக்குன்றியவினையாகக்கோடல் ஆன்றோர் மரபென்க. இவ்வாறேவரும் "பொருந்தும்", "ஒக்கும்", "அடையும்" என்பனவற்றையும் ஆராய்ந்து உண்மையறிவாராக. இவ்வாறு வருவதனை வடநூலாரும் அகபிகித கருமம் என்பர்.

இன்னும் அவர் மெய்யானது மொழிக்கண் (அவ் என) உயிரையும் "வவ்வென" உயிர் மெய்யையும் சார்ந்து வரினும் ஆண்டெல்லாம் மெய் அளவு பெறாது என்பது போதரக்கூறினமை நோக்காது "உயிர்மெய் மெய் சார்ந்து வருவது எவ்வாறு?" என்பன முதலாய பல வினாக்களை வினவினமையுங் குற்றம்.

இன்னும் அவர் கண்ணிமை முதலியன அவ்வவற்றைக் குறியாது அகுபெயராய் வேறு பொருள் குறித்து வந்தமை நோக்காது "அளவின் பெயர் கூறினார் அன்மையின் "அளவின் பெயர் கூறுவார் போன்று" என்றதூஉம் வழூஉ" என்றதுங்குற்றம்.

இன்னும் அவர் "ஏனைய மூன்றின் என்றார். இதிற்றாம் தனியப்பட்டதாகக் கொண்ட மூன்றற்கும் முற்றும்மை கொடாமையும்

வழூஉ" என்றார். இதனுள் எம்மாற்றணியப்பட்டது ஒன்றுமின்மையின் "தாம் துணியப்பட்டதாகக் கொண்ட மூன்றற்கும் முற்றும்மை கொடாமையும் வழூஉ என்றதுங் குற்றம்.

இன்னும் அவர் "வாளாச் சேறலின் என்பதிற் சகரமிக்கதூஉம் வழூஉ" என்றார். அவர் "இத்துணை பெருமை" என்றதற்குக் காரணம் உரைத்தபின்னர் உரைக்குதும்.

இன்னும் அவர் "தனித்தனி ஒவ்வொரு மெய்யெழுத்தின் அளவே அரை மாத்திரையாகும்" என்றார். "தனித்தனி ஒவ்வொரு" என்பவைகளில் ஒன்றே அமையும் இரண்டுங் கூறியதும் வழூஉ" என்றார். ஒவ்வொரு மெய் என்று ஒன்றே கூறின் மொழியிடைகளில் மெய்யெழுத்துக்களையும் எழுத்துக்களாக எண்ணுவது பெரும் வழக்காதலின் அவ்வெழுத்துக்களுக்கும் இவ்வளவு சேறுமாதலினும் பிறவாற்றானும் ஒவ்வொரு மெய் என்பதும் போதாது தனித்தனி என்பதும் வேண்டற்பாற்று என்பதனை நோக்காது "ஒன்றே அமையும் இரண்டும் கூறியதும் வழூஉ" என்றதும் குற்றம். இவ்வாறே அவர் பற்பல வீண் குற்றங்கள் இயைத்துச் செல்கின்றனர். அவ்வாறவர் கூறுவதற்குக் காரணம் அறியாமையே கந்தாகக் கொண்டனர் என்றும் என்மேல் வைத்த கொதிப்பு முதலியவைகள் காரணமாகாவெனவும் அறிஞர்கள் கருதி மன்னிப்பாராக. இவ்வாறு வரும் அரிய விஷயங்களைத் தாம் அறியாதிருந்தமையுணர்ந்து நம்மனைவர்க்கும் மேம்பட்டாராகிய ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களிடத்தாவது அவற்றை வினவி அறிதல் கூடாதா?

இன்னும் அவர் "'எழுத்தெனப்படுப" என்ற சார்பானும் பிறவாற்றானும் ஆசிரியர் என்பவர் இவரே என்பதும் புலப்படவும் "ஆசிரியர் இன்னாரெனத் தெரித்துக் கூறாமையும் வழூஉ" என்றதுங்குற்றம் இதற்குக் குற்றங் கூறியவர் "வடவேங்கடந் தென்குமரி" என்ற பெரியார் சூத்திரத்தில் நூற்பெயர் நேரே கூறப்படவில்லை என்று குற்றமேற்றுதலுங் கூடுஞ்சொல் என்று மிகவும் அஞ்சுகிறேன்.

இன்னும் அவர் "அம்முதலீராறாவி" என்ற சூத்திரத்திற் கமைத்த குற்றங்கள் இவை என அறியாது மறுக்கத் தொடங்கியதுங் குற்றம்.



இன்னும் அவர், "வல்லினங் கசடதபறவெனவாறே" என்பன வாதிய சூத்திரங்களுள் என என்றதனை எண்ணுப் பொருளாகக் கருதியே இனம் என்றதற்குக் குற்றமேற்றியதை அறியாது "என என்பது எண்ணுப்பொருளில் வரும் என்பது பாரதியார் அவர்களுக்குத் தெரிந்திலதுபோலும்" என்பார் "அம்முதலீராறாவி" "புள்ளிவிட்டவ்வொடு" முதலிய சூத்திரங்களுக்கு அமைத்த குற்றங்கள் இவ்விவை என அறியாது பற்பல கூறி மறுப்பதும் ஒரு பெரியகாரியமாகுமா? இனி, சூத்திரங்கட்கு மயிலைநாதருரைத்த உரைகளை விருத்தியுரைகாரர் கொள்ளாது வேறுரை கூறினராதலின் அவருரை நோக்குமாறும், அவ்விருத்தியுரைகாரர் கூற்றைக்கொள்ளாது செல்லுமாறும் எமக்குக் கட்டளை இடுகின்றனர். இன்னும் பெரியாரைத் தூஷிக்குந்தன்மை இல்லாதவர் போன்று நடித்தும் எம்மனோரை இகழ்ந்தும் செல்கின்ற அத்தூய்மையாளர் ஈண்டெம்மை மறுத்தற்குக் கருவியாகாது பிரதிகூலமாயமைந்த விருத்தியுரையை மறுக்காதவர் போலப் பதுங்கி ஒதுங்கியும் மயிலைநாதருரையை ஈண்டெம்மை நோக்கச் சொல்லியதூஉம் நோக்கற்பாலது. இனி அச்சூத்திரங்கள் எண் என்னும் பகுதியில் வந்தமையால் அவற்றிற்கு மயிலைநாதருரைத்தாங்கு உரைப்பதுவே பொருத்தமென்பாராகில் "இனம்" என்றதற்கு இடர்ப்பட்டுப் பொருள்கொள்வது குற்றமாகுமேயொழிய அழகாகாமையானும், நன்னூலார் "ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்" என எண் காட்டாது வாளாகூறியும் "மூன்றாய்த்தொழுபானென்ப" எனத்தொகைப் பின்னர் "என்ப" என்று இணைத்துக்கூறியும் வகைச்சூத்திரங்கட்கு மாற்றிக் கூறியுஞ்செல்கின்றனர் ஆதலின் அவர்க்கும் அது கருத்தன்றென்க. மேலும் மயிலைநாதருரைத்தவுரை இடர்ப்பாடுடையது என்பதனை உய்த்துணர்ந்தறிக.

அவர் எம்மைத் தலைத்தமிழ்ப்பண்டிதரென்றமை எவ்விலக்கணங் கருதிவந்தது?

இனி நன்னூற்சூத்திரவமைதியை யாராய்வாம்.

நன்னூலார் "புள்ளிவிட்டவ்வொடு" என்ற சூத்திரத்தில் புள்ளிவிட்டதனால் வந்த வுரு என்னாது "முன்னுருவாகியும்" என்றதுங் குற்றம். உயிர் மெய் இருவகையாகத் திரிந்துயிர்க்கும் என்ற ஆசிரியர் கொள்கையை அறியாதவராய் "ஆகியும்" "திரிதலும்" என வாளாவிட்டமையுங் குற்றம். பிறவு மன்ன.

இன்னும், அவர் "மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே" என்றதும் குற்றம்; என்னை? மெய்க் களவு மொழியிடை யின்மையானும் அவர்செய்யுளியலையு நோக்கிச் சிலவற்றைக் கருவி செய்தமை நோக்காமையானும் பிறவாற்றானும் என்பது. இவற்றின் விரிவை எமது "தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்" என்ற விஷயத்திற் கண்டுகொள்வாராக.

இவ்வாற்றானும் பிறவாற்றானும் எமது விஷயங்கள் எல்லாம் குற்றமற்றனவென்று தெற்றென வுணர்வாராக.

இங்ஙனம்,

K. S. நவநீதகிருஷ்ணபாரதி,

தலைமைத்தமிழ்ப்பண்டிதன்,

ஸ்ரீ ராமநாதவித்யாலயம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

---

உ

# முழவம்.

'எக்காலத்தும் யாவராலும் வெறுக்கப்படாதது பாலும் இன்னிசையும்' என்றனர் ஒருபெரியார். இன்னிசையானது மிடற்றுக்கருவியாலும் தோற்கருவியாலும், துளைக்கருவியாலும், நரப்புக்கருவியாலும், இன்னும் பலவழியாகவும் பிறக்கும். நரப்புக்கருவி எத்தனையோ உண்டு. அதேபோல் தோற்கருவியும் பலவாம். தோற்கருவிகளில் பலவற்றை நாமறிவோம். அறியாதன பலவாம். அறிந்தவை தண்ணுமை என்ற மிருதங்கம் அல்லது மத்தளம், டோலக், பறை, முரசம், பேரி முதலியனவாம். அறியாதன இடக்கை, படகம், சல்லரி, கைத்திரி, முழவம் போன்றனவாம்.

முழவம் என்ற பதத்திற்கு யாழ்ப்பாணத்துச் சதுர அகராதியிலே குடமுழா, பறை, முரசம் என்று எழுதப்பட்டிருக்கிறது. 'குடமுழா நந்தீசனை வாசகனாக்கொண்டார்' என்று திருவாசகத்திற் காணப்படுகிறது. 'முழவதிர' என்று புறநானூறு முதலிய சங்கச் செய்யுட்களில் பயின்று வருகின்றது. முழவு என்பது முரசமாயிருக்கலாம். முழவம் முரசோ வென்பது ஐயப்பாடுடையதாம்.



கல்லாடம் 10-வது செய்யுளிலே,

தடாவுட லும்பர்த் தலைபெறு முழவ
நான்முகந் தட்டி நடுமுக முரப்ப

என்று காணப்படுகிறது. இதற் குரைகண்டார், 'பெரிய வுடலின்மேல் தலைபெற்ற முழவம் என்னும் வாச்சியம் நான்கு முகமும் நடுமுகமும் தட்டுதலால் ஒலியைப் பண்ணுகிறப' என்று விளக்கியுள்ளார்கள். இவ்வாச்சியமானது மிகவும் அருகியே காணப்படுகின்றதென நினைக்க வேண்டியிருக்கின்றது. இதனைப் பஞ்சமுகவாத்திய மெனவும் கூறுவர்.

இது வெண்கலத்தினாலே பெரிய பீப்பாய் வடிவாகச் செய்யப்பட்டு நான்கு திசைகளிலும் உடுக்கையின் ஒருபுறத்தை யொத்த வாயினையுடையதாயும் நடுவில் புறங்களிலிருப்பதைவிடப் பெரிதானவாயையுடையதாகவும் செய்யப்பட்டிருக்கிறது. இதற்குமேல் மான்றோலினால் மூடப்படுகிறது. இதனை வாசிக்கும்போது 'இருதலைகுவிந்தநெட்டுடற் றண்ணுமை' யின் ஒலியையும் அக்ஷரங்களையுமொப்ப வாசிக்கப்படுகிறது.

'கொய்புலா மலர்ச்சோலை குயில்கூவ மயிலாலுமாரூர'ரது சந்நிதியில் இவ்வாச்சியம் ஒன்று உளது. இதன் தமிழ்ப்பெயரால் இது வழங்கப் படாமற்போயினும் பஞ்சமுக வாத்தியம் என்ற பெயராலும் குடமுழா என்ற பெயராலும் வழங்கப்படுகிறது. 'செய்யிற் சிறந்த நெல்வேலியூராயிரமுடைய' நாதனான ஸ்ரீ தியாகப்பெருமானுக்குத் திருவந்திக்காப்புக்கு முன் பணிசாத்தியருளும்போது இவ்வாச்சியம் வாசிக்கப்படவேண்டுமாம். இவ்வாச்சியம் இன்னும் அநேகவிடங்களில் இருக்கலாமாகையானும் இது போன்ற பல நாமறியாவாச்சியங்களும் இருக்கலாமாகையானும் அவற்றை வெளியிடவேண்டி இக்குறிப்பை எழுதினேன்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

உ

சிவமயம்.

# * திருக்கச்சிநெறிக் காரைக்காட்டுச் சிலாசாசனங்கள்.

“சத்தியவிரதங்காரைத்தருவனஞ்செறிதலாலே
சித்திசேர்ந்தவர்க்குநல்குந்திருநெறிக்காரைக்காடென்
றித்திருப்பெயரினேக்குமென்பரான்மாசுதீர்ந்த
வுத்தமக்கேள்விசான்றவுணர்வுடையும்பர்மேலோர்”:— என்ற

காஞ்சிப்புராணச் செய்யுள் சத்தியவிரதத்தலம் திருநெறிக்காரைக்காடென்ற சிறப்புப்பெயரெய்தியகாரணத்தை விளக்குகின்றது. சங்கநூல்களிலும், பழைய கல்வெட்டுகளிலும் கடலை ஆடையாகவுடையதனால் “கடற்கச்சி” என்று சிறப்பிக்கப்படும் காஞ்சிமாநகரத்தின் பரந்த கீழ்த் திசையில் சத்தியவிரதக்ஷேத்திரம் உள்ளதென்று வடமொழிக் காஞ்சிப் புராணங்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் பழமையை இந்த க்ஷேத்திரத்தின்கண்ணுள்ள ஒரு பழங்கோயிலில் வெட்டப்பட்டுள்ள சிலாசாசனங்களினால் அறிதல் சுலபம். இக்கோயிற் கல்வெட்டுகளை அதிக கஷ்டப்பட்டு இவண் உள்ள ஒரு இராஜவைத்தியரும், சிறந்த ஜோதிடரும், சிலாசாசன ஆராய்ச்சியிலேயே தம்முடைய வாழ்நாளைப் பல்லாண்டுகளாய்க்கழித்துவருபவருமான திரு. சுப்பிரமணியதேசிகரென்பாரைக்கொண்டு முறையே பரிசோதித்தமையால் ௸யார்மனமுவந்து எழுதிய முகவுரையையே இதற்கு ஆரம்பமாக எழுதியிருக்கிறேன். ௸ க்ஷேத்திரம் திருஞானசம்பந்தப் பெருமானால் “வாரணவுமுலை மங்கை பங்கினர்” என்று எடுத்த திருப்பதிகம் பெற்றுளது. இத்திருநெறிக்காரைக்காடு தொன்றுதொட்டு ஒப்பற்ற தனி சுரோத்திரிய கிராமமாகவும், ௸ தேவஸ்தான கிராம ஆதீனமானது “திருக்கச்சி வேளாஞ்செட்டி மக்கள்” என்ற சிவபக்தியிற் சிறந்த சைவச்செட்டிமார்களின் தருமபரிபாலனத்திற்குள் அன்றுமுதல் இன்றுவரை இருந்து வருகிறது. ௸ க்ஷேத்திரத்தில் திருஞானசம்பந்தப்பெருமான் இக்காஞ்சிமாநகரில் விஜயஞ்செய்தகாலத்துச் சிலநாட்கள் வீற்றிருந்தனரென்பதையும், ௸ ஆதீனத்தின் பழமையையும் பின்பு தெளிவாய் எழுதுகிறேன்.

* காஞ்சிபுரத்தின் கிழக்குப்பாகத்திலுள்ளது. ரயிலடிக்குச் சமீபம். செங்கற்பட்டிலிருந்து காஞ்சிபுரம் வரும் ரயில்பாதைக்குத் தெற்கு.



இந்த ஸ்தலத்தில் பூசைசெய்து புதன் கிரகநிலையைப்பெற்றதும் தவிர, ஆண்டுள்ள சிறந்த தெளிந்த தீர்த்தத்தில் தன்வாரமாகிய புதவாரத்தில் படிந்து மூழ்கினவர்கள் இரட்டிப்பான பயன் அடையவும் வேண்டி வரம்பெற்றான். சிபி எனும் இந்திரன் பூசைசெய்து காணாதிபத்தியம் பெற்றதோடு அங்குள்ள தீர்த்தம் இந்திரதீர்த்தமென்றும், அந்நகர் இந்திரபுரமென்றும் விளங்கவேண்டி வரம்பெற்றான்.

## முகவுரை.

(1) திருக்கச்சி நெறிக்காரைக்காட்டு மடமுடைய மகாதேவன் உத்தமசிகனான திருக்காரைக்காட்டுப் பிச்சன் (2) கையாலித்தேவன் கோயில் கல்வெட்டுகள்.

### தமிழ்ச்சிறப்பு.

உலகந்தோன்றி மக்கள் பெருகிய முதற்காலத்திலேயே சீரும் சிறப்பும் வாய்ந்த அரும் பெறல் உயரிய மொழி “தமிழ்” ஒன்றேயாம். அதனிடத்திருந்தே நாள் செல்லச்செல்லப் பலமொழிகள் தோன்றின. இவ்வினிய மொழியின் சொற்கள் திரிந்தாயினும் திரியாதாயினும் வழங்காத மொழிகளே உலகத்தில் இல்லை. அவைபிற்றினைச் சீனம், பர்மீ, மலேயம், சையாம், சாவகம், சிங்களம், அரேபியம், இலேடின், யவனம், எப்ரூ, முதலிய பல வெளிநாட்டுமொழிகளிலேயே காணலாம் என்றால் நம் பரதகண்டத்தின் மொழிகளைப்பற்றிச் சொல்லவேண்டுவதின்றென விடுத்தாம். ஒவ்வொரு சொற்களும், தமிழினின்று திரிந்தாயினும் திரியாதாயினும் வெவ்வேறு மொழிகளுட் சென்று வழங்கி வருகின்றதை எடுத்துக்காட்டுவ தென்றால் உரைபெருகுமென்று இத்துடன் நிறுத்துகின்றாம்.

### தேசசரித்திரங்கள்.

ஒவ்வொருதேயத்தின் சரிதங்களும் அவ்வந்நாட்டு மொழிகளிலேயே அவ்வந்நாட்டுப்புலவர்களால் எழுதப்பட்டு வழங்கிவருகின்றன.

(1) திருக்காலிக்காடென்று வழங்கும்.
(2) திருக்காலீச்வரரென்று வழங்கும்.

அன்றியும் அநாகரிகநாட்டினர்செய்தியை நாகரிகநாட்டினர் தம்மொழியில் எழுதியனவும் சிலவுண்டு. மேலும் நந்தமிழ்நாடோ, பண்டைய பொழ்தத்தில் பரந்த இடத்தினையுடையதாய்ச் சிறந்த பெரும்புலவர்களால் தோற்றுவிக்கப்பெற்ற அரிய பெருஞ்சங்கங்களினால் பல்லாயிரம் யாண்டுகட்கு முந்தியே சிறப்புற்றிருந்தது. நம் தமிழ்மொழியில் நம்நாட்டின் சரிதங்கள் பல் முன் வழங்கிவந்தன. நம்நாட்டிற் பல வேற்றுமொழிமாக்கள் அடிக்கடி குடியேறியதனாலும், அமண், புத்தம், தருக்கம், முதலிய சமயிகளின் அரசு நிலையூன்றியபடியினாலும், நம்மொழியில் பல வரலாறுகளையுடைய அரியநூல்கள் அழிவதற்கு இடமாயிற்று. அதன்றியும், நம்நாட்டில் உள்ளவர்களுள், சிலர் * ஆரியப்பித்தேறித் தமிழ்ச் சரிதங்களைத் தம் மனம் போனவாறு புனைந்துகட்டி வியாதரின் பதினெண்புராணங்களுள் நுழைப்பித்தும், தனித்தனி புராணங்கள் எழுதுவித்தும் கெடுக்கலாயினர்.

உதாரணமாக:—"காஞ்சீபுரத்திற்கு மேற்கிலுள்ள காவதிப்பாக்கம் பன்றீச்வரங் கோயிலுடையார் பெயராகிய "பன்றீச்வரர்" என்பது மாறி, "பஞ்சீச்வரர்" ஆகி, ஆங்குள்ள ஒருவரால் "பஞ்சவர்ணீச்வரர்" என்றுதிருத்தப்பட்டு ஆரியப்பாடலில் ஏறிற்று. இம்மாதிரியே 'செஞ்சி' என்பது 'சஞ்சீவிமலை' யென்றும் அஃது அனுமான் கொணர்ந்ததென்றும், காதை ஏற்பட்டு அச்சுவாகனமேறியுமுள்ளது. இம்மாதிரியான எத்தனையோ மாறுதல்கள் யான் பார்வையிட்ட இடங்களில் வழங்குவதாயின.

நிற்க; பலஇடையூறுகள் நம் தமிழ்மொழிக்கு ஏற்பட்டிருப்பினும் இன்றும் அழியாத பலசரிதங்களை விளக்குவதற்குக் கருவியாயுள்ளன சங்கநூல்களும், திருமுறைமுதலியனவும், கல்வெட்டுகளுமேயாம். அவற்றினைக்கொண்டு பழைய சரிதங்களை ஒருவாறு குறித்துணரலாம். மேற்குறித்த வழிகளால் ஆராயப்புகின் காஞ்சிபுரம் ஆரியநூல்களாகிய பதினெண்புராணங்களினும், தமிழ்ச்சங்கநூல்களினும், பல்லிடங்களுள் வியந்து கூறப்பட்ட பல பெருமைகள் வாய்ந்துள்ளதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். வடமொழிநூல்களில் காஞ்சிபுரம் பழமையுடையதெனவும். "நகரேஷு காஞ்சி"

* மிகுந்த ஆரிய பாஷாபிமானங்கொண்டு.



எனவும் சிறப்பிக்கப்பட்டும் இருக்கின்றது. சங்கநூல்களுள்ளும், பழைய கல்வெட்டுகளிலும் 'கடற்கச்சி' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. "தழுவக்குழைந்தான் மடத்துப்பட்டயத்துள் தொண்டைமான்கள், பல்லவர்கள் முதலாயினோர்களால் எடுப்பிக்கப்பட்ட பல தளிகளைக் கூறுகின்றமையாலும் அவைகள் தற்போது பாடப்பட்டுள்ள காஞ்சிப்புராணங்களுள் இல்லாமையினாலும் மேற்படி புராணங்கள் சுமார் 200, 300 ஆண்டுகட்கு முன்னர்த் தோற்றினவென்று ஊகிக்கப்படுகின்றது.

## திருநெறிக்காரைக்காட்டுச்சிறப்பு.

*கரிகாற் சோழன் காட்டை அழித்து நகரம்ஏற்படுத்திய பொழ்து காரைச்செடிகள்பொருந்தியிருந்தமையால் இப்பேர் பெற்றதுபோலும். சுமார் மூவாயிரத்துநானூறுண்டுகட்குமுன் அரசாண்ட கோச்செங்கணான் எனும் சோழனைப் பலபாடல்களுள் வியந்து கூறியிருப்பதால் ஞானசம்பந்தப் பெருமான்காலம் 3400 யாண்டு ஆகின்றமை பல்லாற்றானும் ஆராயற்பாலது. அவை இன்னும் சில நாட்களுள் வெளிவரும். 3400 ஆண்டுகட்கு முன்னர் வீற்றிருந்த திருஞானசம்பந்தப் பெருமானால் இக்காரைக்காட்டில் மடமுடைய மாதேவன் உத்தமசிதனான திருக்காரைக்காட்டுப் பிச்சன்கையாலித்தேவர் என்ற திருநாமம் வாய்ந்த சிவலிங்கமூர்த்தியார் பாடப்பெற்றிருக்கின்றமையால் அவர் காலத்திற்கு முன்னமே இக்கோயில் உள்ளதென்றுணர்க. இக்கோயிலுள் இராஜராஜ சோழன், அதிராஜேந்திர சோழன், ராஜேந்திரசோழதேவன், குலசேகரதேவன் முதலாயின அரசர்கள் காலத்து வெட்டப்

* "காடுகொன்று நாடாக்கிக்
குளந் தொட்டு வளம் பெருக்கிப்
பிறங்கு நிலைமாடத்துறந்தை போக்கிக்
கோயி லொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயி றொறும் புதை நிறீஇ" என்ற பட்டினப்பாலைச் செய்யுளால், ஓர்காலத்து இந்நகர் கோயில், குளம், குடிவளத்தோடு விளங்கியிருந்தது என்பது அறியக்கிடக்கின்றது. காலக்கேட்டினால் காடாயிருந்ததைக் கரிகாற்சோழன் கண்ணுற்றகாலத்துக் "காட்டையழித்து நாடாக்கி அவ்வூர்விட்டு வெளியேறிய குடிகளைத் திரும்பவும் குடியேற்றிக் கோயிலையும் சீர்படுத்தி அவ்வூருக்கு ஜலாதாரமும் ஏற்படுத்தியதும் இப்போது இத்தலத்தைக் கண்ணுறும் அன்பர்களுக்கு நன்குவிளங்கும்.

பட்ட பல கல்வெட்டுகள் உள்ளன. அவர்கள் காலத்து, எயில்கோட்டத்து எயில்நாட்டுச் சிறுகச்சிப்பேட்டிலும், ஊற்றுக்காட்டுநாட்டு, உத்தமசோழச் சதுர்வேதிமங்கலத்தும், சியபுரநாட்டு, பராந்தகச் சதுர்வேதிமங்கலத்தும், கான்றூர்நாட்டு மழலைமங்கலத்தும், புரிசைநாட்டு அபராபிதச் சதுர்வேதிமங்கலத்தும், நீர்வேளூர்நாட்டுந் திங்காடுபாக்கமான சோழதிவாகர நல்லூரிலும், காவியூர்க்கோட்டத்து ஓரிருக்கையூரிலும், தமனூர் நாட்டு அவ்வள்ளூரிலும் சபைகள் இருந்தனவாயும் அவற்றுள் உள்ளார் ஷை கையாலி மகாதேவர்க்கு நித்த நிபந்தங்கட்கு வேண்டும்நெல்லை, காழும், பதரும், வாலும், பூழ்தியும், நீக்கி, உலகுபாற் கூலியும் அவர்களேபட்டுத் தூய்மையுள்ளதாகக் கொடுவந்து ஷை திருக்காரைக்காட்டு மடமுடைய நாயனார் திருமுற்றத்தே ஆண்டாண்டுதோறும் அருமொழித்தேவன் மரக்காலால் அளக்கக்கடவதாகவும், இன்னும் திருநந்தா விளக்குகட்குப் பொன்னும், பசுவும், ஆடும் கொடுத்து செய்யைத் திருவேகம்பநாழியால் ஸ்தானபதிகள் பக்கலில் திங்கள் தோறும் அற அட்டக்கடவதாகவு மன்றாடிகள் முதலாயினரை ஏற்படுத்தினவும் விளங்கும். இன்னும், திருமெய்க்காவலும், மாகேச்வரர்கட்குணவும் நித்திய அமுதுபடைப்புக் கட்டளையும், கொண்டுள்ள சாசனங்கள் பல உள. இத்தானத்துள்ள, "நறுஅணிஞ்சான்" திருமடம் எனப் பெயரிய திருமடத்தின் இயல்பும் விளங்கும்.

*திருமயானத்திற்குக் கிழக்கில் இருந்த பெரியமண்டபம், கங்கைகொண்டசோழன்மண்டபம் எனப் பெயர்வழங்கினதாகப் பல்லூர்களின் கல்வெட்டுகளில் புலப்படுவதோடு இக் கையாலிநாயனார் கல்வெட்டாலும் அறியக்கிடக்கும். பருப்புப் பொங்கலுக்குக் "கும்மாயம்" என்று கூறிய அரியசொல் இக்கல்வெட்டுள் போதரும்.

இக்கல்வெட்டுகளால் அக்காலத்துத் தமிழ்வகுப்பார்களின் பாகுபாடும், அரசர் இயல்புகளும், தன்மாசனத்து அறமுறைநடாத்துமியல்புகளும், பார்ப்பனர், அறிவர், அரசர், குறுநிலமன்னர்களாகிய வேளிர்கள், வணிகர், வேளாளர், முதலாயினோர்களின் செய்திகளும், திருநாள், அமுதுபடைப்பு, விளக்கீடு, மாகேச்வரர்கட்கு உணு, மடத்தியல்பு, முதலிய பல்செய்தியும் விளங்குமென்க. அக்காலத்துத் தமிழ் அரசர் முதலாயினோர்கள் ஒவ்வொரு காரணத்தினால் ஒவ்வொருகோயிலைத்

* திருக்கச்சியேகம்ப முடையார்கோயிலினுள் உள்ள ஒரு சிவஸ்தலம்.



தாபித்தார்களாதலால் வெவ்வேறு பொருட்டால் ஏற்படுத்தப்பட்ட கோயில்களின் பழையசரிதங்களை விளக்க அவ்வக்கோயில்களின், கற்சுவர், தூண், கோபுரவாயில் முதலியஇடங்களுள் அவ்வச்சரிதங்களை *ஓவிய உருவாகச் சித்திரித்துவைப்பது வழக்கம். அவைகள்தாம் பிற்காலத்துச் சரிதமெழுதுவோர்க்குப் பயன்படுகருவியாயின. அம்மாதிரி இக்கோயிலின் வாயின்மாடத்துக் கற்றூணில் பக்கங்களில் இந்திரன், பிரமன் முதலாயினோர்சித்திரம் சிவபெருமானைப் பூஜிப்பதாக எழுதப்பட்டுள்ளது. அதுவே, பிற்காலத்து, சரிதம் எழுதினோர் இந்திரனால் பூஜிக்கப்பட்டபடியினால் இந்திரபுரமென்று இக் காரைக்காட்டுக்கு ஒருபெயர் இட்டுப் புராணமும் எழுத இடந்தந்தது என்க. விரிவஞ்சி இம்மட்டோடு நிறுத்துகின்றோம். அன்பர்கள் மன்னிக்கவும்.

(Sd.) திரு. சுப்பிரமணியதேசிகர்,
சிலாசாசனபரிசோதகர்.

இக்காலத்தில், முகவுரையிற் கண்டவாறு சிலாசாசனங்களும் பழங்கோயில்களுமே சரித்திரவாராய்ச்சிக்குச் சிறந்த பயன்படுகருவி என்பதைக் கற்றறிந்த மேதாவிகள் பலமுறையும் புகன்றுளார்கள். அவைகளை அன்போடெடுத்துத் திறமையோடு சீர்தூக்கிப் படித்து அதன் உண்மைகளை நன்றாராய்ந்தால் செவ்வனே இந்து தேசசரித்திரங்களைக் கோர்வையாக எழுத மிகவும் பயன்படும். ஷை முகவுரையை மனமுவந்து ஆழ்ந்த அறிவுடன் அளித்த தேசிகர் அவர்களுக்கும், இதை ஏற்று உலகத்தாருக்கு ஊட்டும் இச்செந்தமிழ்க்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அடுத்த சஞ்சிகைகளில் முறையே சோழசாசனங்கள் தோன்றி வெளிவரும்.

*இப்பழங்கோயிலின் கற்றூணிற்கண்டதுமே அல்லாது இத்தலம் மேற்குத் திருமுகமாதலால் ஸ்ரீகோபுரத்து மேற்குப்பக்கத்தில் முதல் நிலைக்குக் கீழ்உள்ள கருங்கற் பட்டைவரிசையில் உள்ள ஓவியங்களினால் அறியக்கிடக்கும் விஷயம்:—வடக்கு மூலையில் சிவபெருமான் பார்வதிசமேதராய்த் திருக்கைலாய மலையின்கண் வீற்றிருக்கக் கணங்கள் தொழுதுநிற்கும் திருவுருவம். அதற்குத் தெற்கில் இரண்டு பக்தர்கள் சிரமின்மேற்றூக்கிய கரத்தினராய் நிற்கும் திருவுருவம். தெற்கு மூலையில் அவ்விருவரும் தங்கள் கரங்களை மார்போடமைத்து அஞ்சலி அஸ்தராய்ச் சிரசு வட்க்குக்குனிந்த உருவங்கள். அவற்றின்பக்கத்தில் இவர்களுக்குக் காட்சிகொடுத்த விடைத்தனிப்பெருமானாய சிவபெருமான் நின்றதிருவுருவம். இதன்மத்தியில் சிவபெருமான் அம்பிகாசமேதராய் ரிடபாரூடராய்ச் சிவகணங்கள் குடைபிடிக்க இருவரில் ஒருவருக்குக் காட்சிகொடுத்தல்; இவை உள்ளன.

## திருக்கச்சிநெறிக்காரைக்காட்டுச் சிலாசாசனங்கள்.

* ஜெயங்கொண்ட சோழமண்டலத்து எயில்கோட்டத்து எயில் நாட்டு நகரங் காஞ்சிபுரத்து திருக்காரைக் காடுடைய மகாதேவர்க்கு திருவாராதனை செய்யும் சிவன்பிராமணர்க்கும், பரிசாரகஞ்செய்யும் சிவன்பிராமணர்க்கும் ஷை மகாதேவர் பண்டாரத்து நெல் அளக்கக் கடவதாக உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் திருவாய் மலர்ந்தருளிய திருமுகப் பிரசாதம்:—

கருவில் குமுதப்படை தென்மேல்.

திங்களேர்தருதன் தொங்கல்வெண்குடைக்கீழ், நிலமகள் நிலவ மலர்மகள் புணர்ந்து, செங்கோலோச்சிக் கருங்கலிகடிந்து, மன்னு பல்லூழியுட் டென்னவர் மூவருள், மாநாபரணன் பொன்முடி ஆநாப்,பருமதிட் பசுந்தலைப் பொருகளத்தரிந்து, வீரகேரளனை ஆனைக்கிடுவித்து, அசைவில் சுந்தரபாண்டியனைத் திசைகெடத், தொல்லையில் முல்லையூர்த் துரத்தி ஒல்கலில், வேணாட்டரசைச் சேணாட்டொதுக்கி, மேவுபுகழிராமகுட மூவர்கெட முநிந்து, வேலைகொழ காந்தளூர்ச் சாலை கலமறுப்பித்து, ஆஹவமல்லனும் அஞ்சநகெவுதன், தாங்காநம் படையின் ஆங்கவன் சேனையுட், கண்டப்பயனும் கங்காதரனும், வண்மாகளிறொடும் மடியத்திண்டிறல், விருதர விக்கியும், விசையாதித்தனும், கருமாரட்காங்கயனு முதலினர் சாம்ப..........மன்னோடு சுரிபுரவியொடு பிடித்து, தன்னுடையில் ஜயங்கொண்டொன்னார், கொள்ளிப்பாக்கை யுள்ளெரி மடுப்பித் தொருகனிக்கண்டாற் பொருதிரை உடுக்க, இலங்கையர்க்

* செங்கல்பட்டு ஜில்லா, காஞ்சீபுரம் தாலூகா, 87 நெம்பர் சுரோத்திரிய கிராமம். திருக்காரைக்காடு என்று தற்காலத்து வழங்கும் முறை. சுரோத்திரியதார் ஷை கிராமத்தில் கோயில்கொண்டுள்ள திருக்கையாலித் தேவர் எனும் ஸ்ரீசத்தியநாதேச்வரர். ஷை தேவஸ்தான ஆதின தர்மகர்த்தர்கள் காஞ்சிபுரத்துச் சைவ வேளாஞ்செட்டிகள் அனைவரும். பழைய உற்சவ மூர்த்திகளும் உள்ளார்கள்.



கிறைவன் அலங்கமுடியறிந்து, முன்தனக்குடைந்து தென்தமிழ் மண்டல, முழுவதும் இழந்த எழ்கடலிழிய, புக்கிலங்கேசனாகிய விக்கிரம பாண்டியன் பருமணி முடிதடிந்திசை வில்லவர் மீனவர் வெஞ்சினச் சளுக்கியர் வல்லவர் முதலினர் வணங்க வீற்றிருந்த ஜயங்கொண்ட சோழன் உயர்ந்த பெரும்புகழ் கோராஜகேசரிவந்மனான உடையார் ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு இருபத் தெட்டாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயில்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்துத் திருக்காரைக்காடுடைய மகாதேவர்பண்டாரத்து.

பிராமண ஊர்களிலார் ஆண்டுவரையும் பொலியூட்டால் அளக்கக்கடவ நெல்லுக்கே செலவுபெற உடையார்க்கு திருவாராதனைசெய்யும் சிவன்பிராமணர் இருவர்க்கு பேரால் நிசதநெல்லு தூணியும், பரிசாரகம்செய்யும் சிவப்பிராமணர் நால்வர்க்கு பேரால் நிசதநெல்லு பதக்குமாக அவர்கள் அளக்கக்கடவ நெல்லுக்கே செலவுபெற இடுவதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டுவித்து இடுவதாக உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் திருவாய்மொழிந்தருளி அதிகாரிகள் சோழபாண்டிய மூவேந்த வேளார்க்குத் திருமுகம் பிரசாதஞ்செய்தருளினார். இப்படிக்குத் திருவேகம்பம் உடையார் கோயிலுள்ளிட்ட ஸ்ரீகோயில்கள் ஸ்ரீகாரியம் பார்க்கின்ற நொச்சிக்கிழான் நம்பன் சீராளனை எவ்எயில் கோட்டத்து எயில்நாட்டு சிறு கச்சிப்பேடு சபையார் கடவ நெல்லுக்கு செலவு பெறக்கடவ:—திருவாராதனைசெய்யும் சிவப்பிராமணன் ஒருவனுக்கு நித்தநெல்லு தூணியாக நெல்லு நூற்றிருபதின்கலமும் (120) பரிசாரகஞ் செய்யும் சிவப்பிராமணன் ஒருவனுக்கு நிசதநெல்லு பதக்காக நெல்லு அறுபதின்கலமும் (60).

ஊற்றுக்காட்டுக் கோட்டத்து ஊற்றுக்காட்டுநாட்டு உத்தம சோழச்சதுர்வேதிமங்கலத்து சபையார் கடவ நெல்கடமைக்கு செலவு பெறக்குடுக்கக்கடவ:—

திருவாராதனைசெய்யும் சிவப்பிராமணன் ஒருவனுக்கு நிசத நெல்லு நூற்றிருபதின்கலமும், இக்கோட்டத்து சீயபுரநாட்டு ஸ்ரீ

பராந்தகச்சதுர்வேதிமங்கலத்து சபையார் கடவ நெல்கடமைக்கு செலவுபெற குடுக்கக்கடவ பரிசாரகஞ்செய்யும் சிவப்பிராமணன் ஒருவனுக்கு நிசதநெல்லு பதக்காக நெல்லு அறுபதின்கலமும், மணையில் கோட்டத்து, கான்றூர்நாட்டு மழலைமங்கலத்து (1) சபையார் கடவ நெல்லுக்கு செலவுபெறக்கடவ பரிசாரகம்செய்யும் சிவப்பிராமணன் ஒருவனுக்கு நிசதநெல்லு பதக்காக நெல்லு அறுபதின்கலமும்; இக்கோட்டத்து புரிசைநாட்டு அமராபிதச்சதுர்வேதிமங்கலத்து சபையார் கடவ நெல்லுக்கு செலவுபெறக் குடுக்கக்கடவ பரிசாரகம்செய்யும் சிவப்பிராமணன் ஒருவனுக்கு நிசதநெல்லு பதக்காக நெல்லு அறுபதின் கலமும், ஆக இப்படி ஆண்டாண்டுதோறும் முன்னின்றாக கிரமமுன்னி சந்திராதித்தவரை குடுவிதாகப் பொலியூட்டால் கடவ நெல்லுக்கே செலவுபெறத் திருவாய்மொழிந்தருளத் திருமுகம் பிரசாதம் செய்தருளிவீர நிமந்தஞ்செய்தது. இது

பன்மாகேசுரரக்ஷை.

கருவில் குமுதப்படை கிழக்கு (2) வது வரி.

சுவஸ்திஸ்ரீ திங்களேர்மலர்ந்து வெண்குடை மண்டலி மன்னுயிர் தொறும் நின்றருளி......னிறை நிழல் பரப்பி நிற்ப முதற்பகுதியின் வலனேர் புனிவற்கு ஒன்றையாழி யுலாவ நற்றவத் திருமலர் செல்வியும் இருநிலமடந்தையும் கீர்த்தியின்கிள்ளையும் போர்த்தனிப் பூவையும் மதலைவயிற் புணர்ந்து பொதுமைதீர்த்து தன்னதுரிமைத் தேவியாராக்கி சுடர்மணி மகுடஞ்சூட்டி நெடுநில மன்னவர் முறைமுறை தன்னடி வணங்க வீரமுந்தியாகமும் ஆரமெனப்புனைந்து வீரசிம்மாசனத்து வீற்றிருளின மாப்புகழ்மனுடன் வளர்த்த கோப்பரகேசரிவன்மரான உடையார் ஸ்ரீ அதிராஜேந்திரதேவற்கு யாண்டு மூன்றுவது நாள் நூற்றறுபத்தொன்றினால் அதிகாரிகள் சோழமண்டலத்து பாண்டிக்

(1) மதுராமங்கலம்.



குலாசனிவளநாட்டுப் புறக்கிளியூர். செட்டுப்புலாங்குடையார் பூரத்த தேவனான ராஜராஜேந்திரமூவேந்தவேளாரும் ...........................கொண்டான்வளநாட்டு...........நாட்டார் இழான் ராஜபரநிருபராக்கத்தானான வீரசோழ இளவகோவேளானும் எயிர்கோட்டத்து எயில் நாட்டு நகரம் காஞ்சிபுரத்து திருமயானமுடையார்கோயிலின் கீழைமண்டபம் கங்கைகொண்டசோழனிலிருந் திருக்காரைக்காடுடையார் தேவதானமான ஊர்கள் கச்சாக்கு கேட் இத்தேவர் தேவதானமான ஊர்களில் ஊர்கழஞ்சும், குமரக்கச்சாணமும் மீன்பாட்டமும், தட்டாரப்பாட்டமும், உள்ளிட்ட கிழிறைபாட்டமும், தறிப்புடவையும், வேலிக்காசும், தண்டலில் கடமையும் வலங்கை இடங்கை மகன்மையும் உள்ளிட்ட அந்தராயத்துக்கு ஆகாலத்துவதாய் இருபத்தைஞ்சு காசாக் கொண்டுவருகிறபடி சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரராஜேந்திரதேவற்கு யாண்டு ஏழாவதுள்ளீட....

கருவில் கீழ்வரி (3வது)

ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னிவளர இருநிலமடந்தையும் போர்சயப்பலையும் சீர்தனிச் செல்வியும் தன் பெருந் தேவியாக இன்புற நெடியதுழி யுளுடைதுறைநாடுந் துடர்வனவேலிப் படர்வனவாசியுசுள்ளிசூழ்மதிட் கொள்ளிப்பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைகட்கமும். பொருகடலீழத் தரைசர்தம் முடியும் ஆங்கவர் தேவியோங்கெழில் முடியு முன்னவர்பக்கல் தென்னவர்வைத்த சுந்தரமுடியும் இந்திரனாரமும் தெண்டிரை ஈழமண்டலமுழுவதும் எறிபடைகொள்ள முறைமையிற்சூடுங் குலதனமாகிய பலர்புகழ் முடியும் செங்கதிர்மாலையும் சங்கதிர் வேலைத் தொல் பெருங்காவற் பல்பழந்தீவு மாப்பெருந்தண்டாற் கொண்ட கோப்பர கேசரிவற்மரான ஸ்ரீராஜேந்திரசோழதேவற்கு யாண்டு ௬ (6) ஆறுவது.

ஜயங்கொண்டசோழமண்டலத்து புரவுவரிதிணைகாளநாயகவூற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேலூர்நாட்டு குலாவனி காரணை போர்த்தைப்பாக்கிழான் நாகன்.

கச்சிப்பேட்டு திருக்காரைக்காடுடைய மகாதேவர்க்கு திருநொந் தாவிளக்கொன்றினுக்கு வைத்த ஆடு தொண்ணூறு சந்திராதித்தவரை சாவா மூவா பேராட்டாக்கையுற்று இத்தேவர்கர்மிகள்வசம் நின்று ஆலே நிசதம் உழக்குநெய் யளந்து கொடுத்து தாவுகொள்வேனானேன் மணையில்கோட்டத்து திருக்கமக கோட்டப்புரத்துப் பிச்சியபாக்கத்து மன்றாடியுமார் துணைவன்..................மெய்கண்டு சோறுகொடுப்பே னாகவும் இவன்சொல்ல எழுதினேன் இக்கர் காணத்தான் சயபுற வன் கருமாணிக்கமான மங்கலாதித்தன்.

இன்னும் வரும்.

காஞ்சீபுரம் அ. நடேசசெட்டி,
சின்னக்காஞ்சீபுரம்.

---

# தோத்திரமாலை

## சேரநாட்டுத்திருப்பதிகள்.

### (1) கன்னியாகுமரி

ஆரியே சத்தி அகிலாண்ட வல்லி ஆருயி ரனைத்தினு மம்மே
காரிகை கௌரி கட்டழற் காந்தி கருணையின் கரையிலாக் கடலே
வாரிதி வரம்பில் வனப்பொடு கன்னி மதுரமா குமரியாய் நிற்கை
பாரத மாது பண்டுபோ லென்றும் பார்மிசைப் பொலிகவே யன்றே

### (2) சுசீந்திரம்

இந்திரன் சாபம் நீக்கி யிருடிகள் வேள்வி யேற்று
அந்தரம் மூவர்க் கில்லா வருமையை விளக்க வெண்ணிச்
சந்தமார் வடிவனுகித் தாணுமா லயனுய் நின்றாய்
சந்திர சூடா நின்றாள் சரணெனக் கொண்டேன் போற்றி.

### (3) திருவாட்டாறு

கேளென் மடநெஞ்சே கேசியைமால் சங்கரித்து
வாளைப் புனல்மோது வாட்டாற்றில்—காளப்
பணவரவிற் பள்ளி பயின்றானை யென்றும்
பணிவார்க்கு முண்டோ பவம்.

### (4) திருவநந்தபுரம்

திருமகளுங் கலைமகளுங் களிப்புட னவாழ் திருப்பதியா மான்றோ ரேத்துந், திருவநந்தை தனில்நலங்கள் சிறக்கவிறை மாட்சிபுரி செங் கோல்வேந்தன், திருமூலன் சேரலனால் தினந்தினமுந் திருத்தொண்டு செய்யப்பெற்றே, திருவநந்த சயனமிசைத் துயிலமர்ந்த திருநாதன் பாதஞ் சேரே.

### (5) ஜநார்த்தனம்

பித்தனைத் திரிந்த வெண்ணிப் பிணியினின் றகற்றி யன்பும்
பத்தியு முடைய னாக்கிப் பணிவொடு கொண்டு செய்யச்
சித்தமன் செவ்வை யாக்கிச் செனார்த்தன விரங்கிக் காப்பா
யத்தநின் னடிமை யல்லா லறிகிலே னுய்யு மாறே.

### (6) செங்குன்றூர்

செங்குன் றூர்த் தேவி செழுங்கருணைச் சோதியே
துங்கம் விளக்குநின் தூய்நோக்கால்—கங்குல்
விரைந்தோட மக்கள் விவேகமொடு ஞானப்
பெரும்பேறு பெற்றிடுவர் காண்.

### (7) திருஆறன்விளை

கார்மேனி யான்பாற் கடற்பள்ளி விட்டுவந்து
சீர்மேவு சேரன் திருவாழு நன்னாட்டில்
சார்மேவு பார்த்த சாரதியாய் வீற்றவிர்தை
யார்மேவு மாறன் விளையகத்தே யாரே.

### (8) திருவல்லவாழ்

தோழிகேள் கண்ணன் சூதைத் தொடியணி யாயர்மாதர்
தாழியில் வைத்த நெய்பால் தயிர்கவர்ந் துண்டபின்னாள்
மாழைநுண் ணிடையா ரின்கி மனங்கவர்ந் தொளித்தமாயன்
பூழையி லாழி பெண்டிர் புகாவிதம் நாட்டினானே.

### (9) எத்துமானூர்

மதியேன் மாசையின் மறமலி யேழரை
நிதியாய் நித்திலம் நிரைமணிப் பணிலமுங்
கதியே கண்ணுதற் கருணையென் றறிந்தபின்
பதியே பாடியிற் பரமனை யீசனே.

### (10) வைக்கம்

கற்றிலேன் கலைக ளொன்றுங் கருதுநன் னலங்கள் யாதும்
பெற்றிலேன் பேதை யானேன் பெருந்திருக் கோவி லப்பா
சுற்றவப் பயனு லீண்டு நணுகினே னைய வெண்ணிப்
பற்றினே னெளியேன் நின்றன் பதமிணை யருள்செய்வாயே.

### (11) ஆலவாய்

ஆலவா யானே ஆற்றை ஆரமா யணிந்த தென்னே
காலனைக் கனித்த காலுங் கருமணற் கனைந்த தென்னே
மாலயன் மயங்க வாம மதலையாய் நிலைத்த யீண்டைப்
பாவிதழ் மதலை நீண்டப் பதசிரந் திகழ்ந்த லென்னே.

### (12) திருவாரூர்

சித்தந் தெளிந்து திருவாரூர் வீற்றருளும்
அத்த னடிபணிய வாருமே—முத்தியெனுஞ்
சீகாழி யான்மாற்றன் சீர்வஞ்சி யாரூர்க்கு
மாகாதோ வைம்முகனே செப்பு.

### (13) திரு அஞ்சைக்களம்

நரர்களுஞ் சுரர்களும் நலநனி சிறக்க
வருட்கட லரன்றிரு வஞ்சையின் களமாக்
திரைபுரட் குடதிசைச் சிதம்பரத் தமர்ந்தான்
திருக்கழல் சிரமிசைக் கொளவிடர் கெடுமே.

### (14) கொடுங்கோளூர்

அங்கயற் கண்ணி யருட்பெருஞ் சோதி யகில சராசரங் காக்கு, மங்கை
யர்க் கரசி மறைமுகற் பொருளே மகேசக்தி தோன் றுவெஞ் சிற்றப்,
பொங்குமா புணரி புடைசூ நின்றாள் சாலினைப் புரளவே யோங்குந்,
தங்கிக்கொடுங்கோ ளூரமர் தேவி தயர்தவிர்த் தாளினைத் தாயே.

கே. ஸ்ரீ. சேஷையர்.

---

உ

# சிவபெருமானும் செந்தமிழும்.

ஒரும்பேரும் உருவுமில்லாதவன்
ஒரும்பேரு முருவமுந்தாங்கி
ஆதிசைவ அந்தண விருத்தனாய்
நாவலூராளியின் நறுமணம்தடுத்த
ஆவணவெழுத்தும் அந்தணர்முன்னர்ப்
பேசியபேச்சும் பெருந்தமிழ்ப் பாஷையே
பித்தனென்றே பீடுறப்பாடென
அத்தன்மெய்யுருவுட னுறைந்ததும்தமிழே
சித்தவடமெனும் திருமடாலயத்தில்
வீரட்டானொரு விருத்தவேதியனாய்
மலர்ப்பதஞ்சூட்டி மலர்ந்ததும் தமிழே
அம்பலத்தாடு மண்ணலெம்பெருமான்
ஆரூர்வாவென் றழைத்ததும் தமிழே
சுந்தரா நினது தோழன்யாமென்று
வன்மீகநாதர் மலர்ந்ததும் தமிழே
பரவையார் விவாகப் பண்பும்பின்னர்த்
தூது நடந்துபோய்ச் சொற்றதும் தமிழே
திருமுதுகுன்றம் செல்வழி ஏதெனக்
கூடலையாற்றூர் கொணர்வழிகூறி
மறையவர்கோலம் மறைத்ததும் தமிழே
திருக்குருகாவூர் செல்லும்வழியில்
பிராமணவடிவம் பீடுறத்தாங்கி
நீரும் சோறும் நிழலுமமைத்துப்
பசிதணிவித்த பாஷையும் தமிழே
திருக்கச்சூரிலே திருவமுதருத்த
ஐயருருவொடு மந்தணரில்லந்தொறும்
இட்டில்யாசித்தங் குரைத்ததும் தமிழே
சங்கிலியார்பாற் றழைத்ததும் தமிழே
ஐயா றுடைய வடிகளோவென்னக்

கன்றென் றழைக்கக் கதறிய பசுப்போல்
ஓலமென் றிவ் வுலகெலாங்கேட்ப
உரைத்தமொழியு மொண்டமிழ் மொழியே
தில்லையில்வாழ்ந்த திருநீலகண்டர்
ஓட்டினை யொளித்தங் குரைத்ததும் தமிழே
இயற்பகைமனையி லிசைத்ததும் தமிழே
மாறன்விருந்து வார்த்தையுந் தமிழே
அமர்நீதிபாலங் கறைந்ததும் தமிழே
கண்ணிடந்தப்பிய திண்ணனுரை
நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்பஎன்
னன்புடைத்தோன்றல் நில்லுகண்ணப்ப என்
றடிக்குத்தொடரா யமைத்ததும் தமிழே
தூசினையொலிக்கும் நேசர்பாற்சென்று
ஆடையருளியங் கறைந்ததும் தமிழே
தாதைதாளெறிந்த சண்டேசுரர்க்குத்
தாதைநாமென்று சாற்றலுந்தமிழே
திருப்பைஞ்ஞீலியிற் செல்லும் வழியிற்
காவுங்குளனும் கடிதினமைத்தே
ஆற்றுணவருத்தி யப்பமூர்த்தியின்
இளைப்பையகற்றியங் கிசைத்ததும் தமிழே
வடகயிலாய மாட்சியைக்காண
வழிநடைகொண்ட வாக்கின் செல்வர்
உடல்குறைந்தாலு முளங்குறையாமல்
முந்துறுங்காலை முனிவர்போற்றோன்றி
இன்னும்பாமாலை ஏற்கவேயுன்னி
ஐயாறதனி லத்தகைக்கோலம்
காட்டுவோமென்ற கருணையுந் தமிழே
அம்மையுமத்தனு மல்லாவொருவன்
புனிதவதியெனும் புண்ணியவதியை
அம்மேவாவென் றழைத்ததும் தமிழே
திருச்செங்காட்டிற் றிருவடிதோய்வுற
வைரவக்கோலம் வளம்பெறக்கொண்டே
பிள்ளைக்கறியுணும் பேச்செலாந் தமிழே



திருவெண்காடர் செய்தவப்பேறாய்
மருதவாணர்மகவென வளர்ந்தே
பதினாறெண்பெயின்றதும் தமிழே
தாயுந் தந்தையுந் தனயருமாகிய
மூவரும் மதுரையில் முறைபுரிநாளில்
வழங்கிய மொழியெலாம் வண்டமிழ் மொழியே
தென்னன்குமரன் றிருமுடிதனக்கு
நன்மணிவணிகனாய் நவின்றதும் தமிழே
எல்லாம்வல்ல சித்தராய் மதுரையில்
வல்லமைகாட்டி மலர்ந்ததும் தமிழே
ஆசான் மனைமே லாசையோனங்கம்
வீசியெறிந்த மேன்மையுந் தமிழே
மீனவன்முன்பு மெய்க்காட்டிட்டே
யூனமில்பரிபிவர்ந் துரைத்ததும் தமிழே
மைவிழியாராம் வணிகப் பெண்கள்பாற்
கைவளைவிற்றுக் கரைந்ததும் தமிழே
மதுரையின் வடக்கு வாயிலாற் சோழனைக்
கதிபெறக்காட்டிய கருணையுந் தமிழே
தண்ணீர்ப்பந்தர் சயம்பெறவைத்தே
யுண்ணீருத்தியங் குரைத்ததும் தமிழே
பொன்னனையாள்தன் புகழ்மனைபுகுந்தே
தன்னிகர்வாதஞ் சமைத்ததும் தமிழே
மாமனாகவே வழக்குரையாடித்
தேமெனப்பேசிச் செயித்ததும் தமிழே
விறகுசுமந்து விற்றதும் தமிழே
பாணர்தமக்கும் பகர்தருமிக்கும்
திருவாய்மலரச் செழித்ததும் தமிழே
மண்ணைச்சுமந்து மாறனடித்த
புண்ணைச்சுமந்து புகன்றதும் தமிழே
ஐயாறதனிற் சைவனு யெழுந்தே
வழக்குரையாடி மலர்ந்ததும் தமிழே
இன்னுமெம்பெருமா னிவ்வுலகத்தில்
ஆற்றியஆட லனைத்தையுமொரின்

செந்தமிழ்ப்பெருமை செப்பவும்போமோ
இவ்வாறாய தெய்வநன்மொழியைச்
சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடையரிற்
கலியெனக்கூறுங் காலக்கொடுமையால்
கற்கவுங் கேட்கவுங் கருதாதந்தோ!
சோறதுகொண்டு பீறலடைக்கும்
இம்மைச்சுகமே மெய்ம்மைச்சுகமென
வேற்றுப்பாஷையை விரும்பிக்கற்றே
அந்நியநாட்டி லவதரித்தவர்போல்
இன்றுதான்கப்பலில் இறங்கினார்போலப்
பேசவும் எழுதவும் பிரசங்கம் புரியவும்
பழக்கமில்லையெனப் பருமிதம் பகர்வர்
அறம்பொரு ளின்பம்வீ டடையும்நூற் பெருககம்
வடமொழி தென்மொழி வாய்ந்துள போல
எப்பா ஷையிலும் இல்லையென எண்ணார்
இதனால்,
தெய்வத்தியானமே சிந்தையில் வையார்
தானதருமந் தவஞ்செயமுயலார்
தீர்த்தயாத்திரைக்குச் செல்லவுந்துணியார்
கோயிலில் நுழைந்து கும்பிடநாணுவர்
நாத்திகம்பேசி நாத்தழும்பேறுவர்
சந்தியாவந்தனந் தான்செயமறந்தார்
அந்நியமதத்தி லநேகரைவிட்டனர்
லலாடசூனியராய் நாடெலாந்திரிவர்
ஒருமயிர் நீப்பி னுயிர்விடுங் கவரிமான்
அனைய மரபி லவதரித் திட்டவர்
குஞ்சி யழகெனக் கூறு வண்ணம்
முண்டிதமெனச்சொல் மொய்ம்மயிர் நீக்குவர்
சான்றோர் வகுத்த சாதியாசாரம்
வேண்டுவதில்லையென விதண்டைகள் பேசுவர்
பலமதத்தினரொடும் பகருணவுண்பார்
விதவாவிவாகம் விதியெனவிளம்புவர்
ஊக்கமது கைவிடேலெனும் நீதிக்



கூக்கர்தரு மதுவாமென வருந்துவர்
இன்னுமிங்கேயாமியம்புதற்கரிய
அநாசாரமெல்லாம் ஆஸ்தியாப்பெற்றனர்
தாயை மறந்தவர் தாமுறுங்கேடெலாம்
இவர்களு மடைவரென் றியம்பவும் வேண்டுமோ
ஆதலாலினிமேலாகிலுந்தமிழாம்
பெற்றதாயைப் பேணுவோராகி
உய்யுமின் உய்யுமின் உய்யுமின் னீரே

ஜி. சதாசிவம்பிள்ளை,
...ப்பட்டணம், 2-5-19.
நாஷனல் ஹைஸ்கூல்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்.
நாகை நீலலோசனிப் பத்திராதிபர்.

---

# தனிநிலைச்செய்யுட்கோவை.

செந்தமிழ் ௧௮-ந் தொகுதி [illegible]-ம் பக்கத்தொடர்ச்சி.

10. அவ்விளக் கேற்றிய வச்சுடர் முன்னர்
வாய்ந்தசுட ரன்றெனும் வழக்கா றுண்மையின்
வந்தவுயிர் முன்னது வன்றென வறிவறீஇப்
போற்று மொருபொருள் பொய்யெனப் புகலுநர்
கூற்றுமெய் யதுவாகக் கொள்கினுங் கலங்கவி
னுண்மைதெளி மீகா னொளித்துப் பொய்த்தாங்
கறஞ்செய் யொருமகன் றுறக்க மணைகுறாஉ
மறஞ்செய் யொருமக னரகத் தணைகுறாஉ
மெல்லாச் செல்வமு மிம்பர்வந் தெய்தும்
முன்னோன் பின்னோ னவையல பிறவே
குறுகுறாஉ மென்றுங் கொள்பவை நனியே
பெரிய வெனினும் பிரிதற் குள்ளன
வுருகு மனத்தி னுயர்ந்தோர் தமவழி
வடிவப் பற்றறு வகைத்தறம் போற்றிற்
றீதொரீஇத் தெளிநலஞ் சேர்குவ ரென்றுஞ்
சாதற் றன்போ டகவழுத் தபுத்து

நீதிமுறை நன்குறீஇ நிலன்வாழ்வு கருதியிவ்
வோதினர் பொய்யென் றுரைப்பினு மலனே
யொன் றலி னப்பொரு ளுண்டென் றுணரா
ரென் றுந் துன்புற் றினைகுவர்
நன்றிதரும் பற்பல நயனெலா மிழந்தே.

11. தம்மிற் பிறருந் தம்வெறுப் பறியார்
தம்வழித் தழுவல ரென் றுந் தங்குறை
தேரார் பிறர்குறை செய்தன ரென்று
முயர்வழித் தல்லன வுயர்த்தின ரென் றும்
பழமை மறந்து புதுமை தழீஇக்
கிழமை யொரீஇக் கெடுத்தன ரென்று
நெருப்புத் துளிப்படு நேரினிலை யற்றுச்
சிவந்து புகைத்துத் தெறுங்கடுங் குரலராய்த்
தெளிந்து மலர்ந்து சொற்றேன் பிலிற்றி
மகிழ்வுபூத் தமர்ந்த மனவிலை கலக்கி
நல்லோர் களைந்து நாவடிப் படுத்தித்
தம்மை யழித்துத் தமர்சார் பகற்றிச்
செம்மை தருவோர்ச் சேர்பொலா தாக்கி
யருமை சான்ற விருமை யழிப்பவர்
பார்ப்பன பிறவெலாம் படைஇக் காக்கு
மொருபொரு ளன்றியொன் றலமயா தாத
னல்லன நன்மை யல்லன தீமை
நல்குத லுள்ளன நண்ணுத லில்லன
நண்ணா தாதலொடு தம்மழித் தற்கே
வஞ்சப் புல்லர் வனைந்த சூழ்ச்சிக்
காளா யொருபொரு ளடிமைவடுப் படுத்த
லன்னவும் பிறவு மாதற்
றன்மையறிந் தாயுந் தகுதியில் லவரே.

12. ஒருசார் மங்கைய ரணன்முகம் வேட்குந
ரொருசார் மங்கைய ரதுவெறுக் குநரே
யின்னண மொருசார் மாக்கட் கினிய
வுணவு முதல பிறிதுசார் பினர்தா



மறவெறுத் தம்மா பிறவிழை குநரே
யஃறிணை யனவு மிவ்வே யமையு
மிவற்றுற் பழகிய வினியன பிறவே
யல்லன வாத லவனிக் கியற்கை
இனியே,
ஓருடற் குரியவா மைம்பொறி யுள்ளு
மொருபொறி வேட்பன பிறவெறுப் பவ்வே
யெனினு மைம்பொறி வேட்பன வெல்லா
மவ்வவ் வழிநின் றளாய்மன னின்புறாஉம்
அறிவே,
மனன்வேட் டெல்லாம் வன்மையொடு தூக்கிக்
கொள்ளுவ கொண்டு தள்ளுவ தள்ளி
யெள்ளறாஉ நன்னிலை யெய்துறாஉ மென்ப
வாதலி னுலகோர் தமக்கமை வனதா
நல்லன வென்று மாகா தனதா
மல்லன வென்று மமைதல்
புல்லிய நெறித்தாப் புகன்றிசி னோரே.

13. உலகிய லொடுதம வுளத்தமை வொன்றுற்
றமிழ்துவழி முழுச்சொல லனாஅய்ச் சுருங்கித்
தெளிவுறீஇ யாழ்ந்து செப்பற் கெளிதாம்
வேட்கை தரீஇ மேன்மே லூக்கி
மன்பதை தமக்கெலா மின்றியமை யாத
நன்றிபுரி முத்தை நற்றமிழ்ப் பாட்டிடைக்
கோங்குமுத லொப்பாக் கொள்ளுறுப்பு மிடைதல்
பாங்கன் றென்னப் பகருந ரென்னே
கண்கவர் வனப்புக் காட்டோ வியத்திடை
யவ்வுறுப் பில்லெனி னுவர்த்தாங் ககற்றியு
மவ்வுறுப் புறினே யவாவுறீஇ மகிழ்ந்து
மெண்ணிலர் பற்பல வியம்புநர்,
மண்டிணி ஞாலத்து மாண்புநனி நன்றே.

14. பின்வரு தம்வழிப் பெருக்கங் கண்ணார்
தம்முறு பொருளெலாம் பிறர்க்குத் தந்தவர்

நிலனவு நீரவு நெருப்பவும் விண்ணவு
முயிரவு முடலவு மியலவுஞ் செயலவு
மழிபவும் வளர்பவு முறுபவும் பெறுபவு
நன்னர்செய் பண்ணு னமக்குதவு நல்லோர்
செயற்கரி துதவிச் சிற்றகடு நினைப்பவர்
தாம்பெற லழிவறு தகைசிறி தறிகிலர்
தேஎ நல்லுறு செயலொன் றறிகுநர்
சிறுகுடில் வாழ்க்கையர் சீரை தைஇய
வுடுக்கையர் கல்விச் செந்நீ ரூற்றின
ரழிவன தேறு வாண்மைய ரென்றுந்
தொழுதல கேத்துந் துரிசில் வினையின
ரவாஅ முதல வறத்துநிலை யாற்றலர்
தாழ்புலைக் குடியினுங் கேழ்நிலா வீசு
மாபத் தன்ன மாசறு மாண்பினர்
தலைசென் றெனினுந் தக்கவொன் றுற்றுந
ருலகுமுறை நடாத்தற் குரியவை சூழப்
பற்றறு நற்றிறன் படர்ந்துநடு வெலீக்குங்
குற்றமறு காட்சிக் கூர்த்தறி குழூஉவின்
மற்றையர் சூழ்ச்சி மறந்துஞ் சூழ்கில
ரிழிசனர் பகைஞ ரென்னு ரேற்றக்
குண்மையொடு பழிச்சு முரைசால் சிறப்பினர்
மகிழ்தலுல கேத்துந் துயர்தம தாக்குந
ரெனைய ராயினு நல்வழிக் கேற்றுவ
ருடற்றுன் பறியா ருளத்துன் பில்லோர்
மாண்பொழு தன்றி வீண்பொழுது கழியார்
ணர்தலை யுலகு நல்வழிப் பழூஉங்
கனவுகுறு கில்லா வுறக்கங் காண்கிலர்
தாக்குவளர் விலாவணந் தழைஇவளர் மானின்
முருக்குநர் வழிகெட முதிர்ந்தவழி செழிக்குநர்
இவரே,
யெல்லா வுயிருமேமம் பூணச்
செந்தண்மை பூண்ட செல்வத்
தந்தண ரெனுநல் லறத்திறத் தினரே.

(தொடரும்)

---

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1919-ஆ செப்டம்பர்மீ-த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு. 1919 September | | | 1918 September | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) நன்கொடை, மாதச்சந்தா வகையில் வரவு ரூ | 225 | ... | ... | 200 | ... | ... |
| (2) புத்தகங்கள் விற்ற வகையில் வரவு | 61 | 15 | 2 | 32 | 14 | 3 |
| வி. பி. சார்ஜ் வரவு ரூ | 2 | 15 | ... | 2 | 10 | ... |
| (3) காலியிடத்துக்கு வாடகை வரவு ரூ | 70 | ... | ... | 70 | ... | ... |
| மொத்தம் ரூ | 359 | 14 | 2 | 305 | 8 | 3 |
| **II. Editorial Section:** | | | | | | |
| (1) அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ரூ | 11 | ... | ... | 6 | ... | ... |
| (2) செந்தமிழ்ச் சந்தா வரவு ரூ | 40 | 10 | ... | 22 | 4 | ... |

| விவரம். | செலவு. 1919 September | | | 1918 September | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) (a) மானேஜ்மெண்டாபீஸ்சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 118 | 5 | 11 | 114 | ... | ... |
| (b) 1. கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ரூ | 95 | ... | ... | 53 | ... | ... |
| 2. மாணவர்கட்குப்போஷணைக்காகச் செல் ரூ | 70 | 2 | 10 | 126 | 7 | 6 |
| (c) Literary Section சிப்பந்திகட்குச்சம்பளம் செல் ரூ | 45 | ... | ... | 49 | 5 | 8 |
| (2) ஸ்டேஷனெரி கண்டிஞ்ஜன்ஸி சாமான்கள் வாங்கியவகையில்செல் ரூ | 16 | 14 | 6 | 1 | 3 | ... |
| (3) புத்தகசாலைக்கு வாங்கிய புத்தகங்களின்கிரயமும், பத்திரிகைக்குச் சந்தாவும் செல் ரூ | ... | ... | ... | 10 | 4 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (3) செந்தமிழ்ப் பழைய தொகுதிகள் விற்றவகையில் வரவு ரூ | 66 | ... | ... | 9 | 8 | ... |
| வி. பி. சார்ஜ் வரவு ரூ | 1 | 1 | 10 | 1 | 9 | ... |
| மொத்தம் ரூ | 118 | 11 | 10 | 39 | 5 | ... |

## III. Printing Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) ஜாப் வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வரவு ரூ | 157 | 3 | 9 | 125 | 1 | ... |
| (2) காகிதக்கிரையம் வரவு ரூ | 3 | 15 | 6 | 21 | 15 | 3 |
| (3) சங்கம்பிரஸ்குத்தகைதாரிடமிருந்து Security-க்காக மூன்று மாதத்திய குத்தகைத் தொகை வரவு ரூ. 750. சில்லரை வரவு ரூ. 1-ம் ஆக வரவு ரூ. | 751 | ... | ... | 2 | 5 | ... |
| மொத்தம் ரூ | 912 | 3 | 3 | 150 | 1 | 3 |

## IV. Binding Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) ஜாப்வேலைகள் சம்பந்தமாக பைண்டிங் சார்ஜ் வரவு ரூ | 59 | 12 | 6 | 105 | 3 | ... |
| (2) சில்லரை வரவு ரூ | 1 | ... | ... | 1 | ... | ... |
| மொத்தம் ரூ | 60 | 12 | 6 | 106 | 3 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (4) Furniture வாங்கியவகையில் செல் | 2 | 12 | ... | 6 | ... | ... |
| (5) Furniture ரிப்பேர் வகையில் செல் | ... | ... | ... | 2 | 14 | ... |
| (6) தபால், தந்தி வகையில்செல் ரூ | 8 | 1 | 9 | 3 | 14 | 6 |
| (7) முனிசிபாலிட்டிக்கு வரி வகையரு செல் ரூ | 104 | ... | ... | ... | ... | ... |
| (8) சங்கப்பதிப்புப்புத்தகங்கள்பிரசுரசம்பந்தமாகச் செலவு ரூ | .. | ... | ... | 15 | 5 | 6 |
| (9) வருஷோத்ஸவச் செலவு ரூ | ... | ... | ... | 6 | ... | ... |
| (10) சில்லரைச் செலவு ரூ | 10 | 7 | ... | 1 | 3 | 4 |
| மொத்தம் ரூ | 470 | 12 | ... | 389 | 9 | 6 |

## II. Editorial Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | ... | ... | ... | 41 | 9 | 10 |
| (2) செந்தமிழ்ப்பத்திரிகை சம்பந்தமாக ஸ்டேஷனரி வகையில்செல் ரூ | 18 | 4 | ... | 10 | 8 | ... |
| (3) தபால் தந்தி, வகையிற் செல் ரூ | 11 | 3 | ... | 1 | 11 | 6 |
| (4) தொழில்வரிக்காகச்செல் ரூ | 4 | ... | ... | 4 | ... | ... |
| மொத்தம் ரூ | 33 | 7 | ... | 57 | 13 | 4 |

## III. Printing Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச்சம்பளம் செல் ரூ | 196 | 14 | 8 | 171 | 13 | 10 |
| (2) டைப்ஸ் வகையரு வாங்கிய வகையில் செல் ரூ | ... | ... | ... | 51 | 8 | ... |
| (3) மெஷினுக்கு எண்ணெய் வாங்கிய வகையில் செல் ரூ | 9 | 8 | ... | 5 | 14 | 9 |
| (4) கண்டின்ஜன்விசாமான்கள் வாங்கிய வகையில் செல் ரூ | 19 | 6 | ... | 26 | 1 | 9 |
| (5) ஆர்டர்கள் உபயோகத்திற்கு வாங்கிய ஸ்டேஷனரி செலவு ரூ | 17 | 12 | 6 | 27 | 11 | 9 |
| (6) Furniture ரிப்பேர்வகையில் செல் | 6 | ... | ... | 6 | ... | ... |
| (7) தபால், தந்தி வகையில் செல் ரூ | ... | 2 | ... | 1 | 4 | 6 |
| (8) தொழில்வரிக்காகச் செல் ரூ | 6 | ... | ... | 6 | ... | ... |
| மொத்தம் ரூ | 255 | 11 | 2 | 296 | 6 | 7 |

## IV. Binding Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 32 | 6 | 10 | 28 | 3 | 2 |
| (2) ஸ்டேஷனரி கண்டின்ஜன்விசாமான்கள் வாங்கியவகையில்செல் | 73 | 6 | 2 | 30 | 3 | 6 |
| (3) Furniture ரிப்பேர்வகையில் செல் | ... | ... | ... | ... | 4 | ... |
| (4) தபாற் செலவு ரூ. | ... | ... | ... | ... | ... | 6 |
| மொத்தம் ரூ | 105 | 13 | ... | 58 | 11 | 2 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ | 1451 | 9 | 9 | 601 | 1 | 6 | * By P. B. Rs. 120. By Co-operative Bank Receipt Rs. 1050 By cash on hand Rs. 652-14-3 / 1822-14-3 | ஆகமொத்தம் செலவு ரூ | 865 | 11 | 2 | 802 | 8 | 7 |
| இம்மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ | 1236 | 15 | 8 | 1440 | 10 | 1 | | இம்மாதமுடிவில் மீதியிருப்புத்தொகை ரூ* | 1822 | 14 | 3 | 1239 | 3 | ... |
| ஆகமொத்தம் ரூ | 2688 | 9 | 5 | 2041 | 11 | 7 | | ஆக மொத்தம் ரூ | 2688 | 9 | 5 | 2041 | 11 | 7 |

Audited and found correct.

**V. S. Ramaswami,**
*Auditor.* 18—12—19.

**T. Sudarsanachari,**
*Joint Secretary.*
31—10—19.



மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1919-௵ அக்டோபர்௴ த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு. 1919 October | | | 1918 October | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) நன்கொடை, மாதச்சந்தாவகையில் வரவு ரூ | 253 | 14 | ... | 180 | ... | ... |
| (2) புத்தகங்கள் விற்றவகையில் வரவு. | 22 | 4 | ... | 86 | 5 | 9 |
| வி. பி. சார்ஜ் வரவு ரூ | 1 | 6 | ... | 4 | 8 | ... |
| (3) காகிதம் விற்றவகையில் வரவு ரூ | .. | ... | ... | 3 | 1 | ... |
| (4) காலியிடத்திற்கு வாடகை வரவு ரூ | 70 | ... | ... | 70 | ... | ... |
| (5) சில்லரை வரவு ரூ | ... | 8 | ... | ... | ... | ... |
| மொத்தம் ரூ | 348 | ... | ... | 343 | 14 | 9 |

| விவரம். | செலவு. 1919 October | | | 1918 October | | |
|---|---|---|---|---|---|---|
| **I. General Section:** | | | | | | |
| (1) (a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 120 | 9 | 7 | 110 | 13 | 8 |
| (b) 1. கலாசாலை உபாத்தியாயர்கட்குச்சம்பளம் செல் ரூ | 95 | ... | ... | 53 | ... | ... |
| 2. மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ரூ | 127 | 5 | 4 | 137 | 5 | 4 |
| (c) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ரூ | 45 | ... | ... | 45 | ... | ... |
| (2) ஸ்டேஷனெரி சண்டின்ஜன்லி சாமான்கள் வாங்கியவகையில் செல்ரூ | 15 | 8 | 11 | 7 | 10 | 2 |
| (3) புத்தகசாலைக்கு வாங்கிய புத்தகங்களின் கிரயமும் பத்திரிகைக்குச் சந்தாவும் செல் ரூ | 6 | ... | ... | 2 | 6 | ... |

## II. Editorial Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு | ரூ | 7 | 8 | ... | ... | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ச்சந்தா வரவு | ரூ | 30 | 7 | ... | 20 | 5 | ... |
| (3) விளம்பரச்சார்ஜ் வரவு | ரூ | 8 | 5 | ... | ... | ... | ... |
| (4) 'செந்தமிழ்'ப்பழையதொகுதிகள் விற்றவகையில் வரவு | ரூ | 1 | 4 | ... | 38 | 8 | ... |
| வி. பி. சார்ஜ் வரவு | ரூ | ... | 6 | ... | 1 | 15 | ... |
| மொத்தம் | ரூ | 47 | 14 | ... | 60 | 12 | ... |

## III. Printing Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) ஜாப் வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வரவு | ரூ | 40 | 12 | ... | 141 | 2 | ... |
| (2) காகிதக்கிரையம் வரவு | ரூ | 4 | 10 | ... | 10 | 14 | ... |
| மொத்தம் | ரூ | 45 | 6 | ... | 152 | ... | ... |

## IV. Binding Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) ஜாப் வேலைகள் சம்பந்தமாக பைண்டிங்சார்ஜ் வரவு | ரூ | 59 | 12 | ... | 42 | 14 | ... |
| (2) சில்லரை வரவு | ரூ | 1 | ... | ... | ... | ... | ... |
| மொத்தம் | ரூ | 60 | 12 | ... | 42 | 14 | ... |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (4) Furniture ரிப்பேர் வகையில் செல் | | 29 | 3 | 8 | ... | ... | ... |
| (5) தபால், தந்தி வகையில் செல் | ரூ | 5 | 4 | ... | 10 | 11 | 6 |
| (6) சங்கப்பதிப்புப்புத்தகங்கள்பிரசுரம் சம்பந்தமாகச்செலவு | ரூ | 3 | 8 | ... | ... | ... | ... |
| (7) கடன்வகைக்குச்செல் | ரூ | 125 | ... | ... | ... | ... | ... |
| (8) சில்லரைச் செலவு | ரூ | 14 | 1 | 9 | 10 | ... | ... |
| மொத்தம் | ரூ | 586 | 9 | 3 | 376 | 14 | 8 |

## II. Editorial Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | ரூ | ... | ... | ... | 30 | ... | ... |
| (2) செந்தமிழ்ப்பத்திரிகை சம்பந்தமாக ஸ்டேஷனெரி செலவு | ரூ | 63 | 5 | 9 | 24 | 7 | 3 |
| (3) தபால், தந்தி வகையில் செல் | ரூ | 19 | 8 | ... | 12 | 12 | ... |
| மொத்தம் | ரூ | 82 | 13 | 9 | 67 | 3 | 3 |

## III. Printing Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | ரூ | 176 | 13 | 7 | 145 | ... | 6 |
| (2) மெஷினுக்கு எண்ணெய் வாங்கிய வகையில் செல் | ரூ | ... | ... | ... | 5 | 4 | 6 |
| (3) கண்டின்ஜன்ஸிசாமான்கள் வாங்கிய வகையில் செல் | ரூ | ... | 2 | ... | 8 | 5 | ... |
| (4) ஆர்டர்கள் உபயோகத்திற்கு வாங்கிய ஸ்டேஷனெரி வகையில் செல் | | 2 | 10 | ... | 51 | 7 | 2 |
| (5) தபாற் செலவு | ரூ | ... | 4 | ... | ... | ... | 6 |
| (6) அதிகநேரம் வேலைசெய்த கூலியுள்பட சில்லரைச்செலவு (overtime work Rs.62–15–0 Proof reading Rs.18—0—0;Miscellaneous 5—2—0) | ரூ | 86 | 1 | ... | ... | ... | ... |
| மொத்தம் | ரூ | 265 | 14 | 7 | 210 | 1 | 8 |

## IV. Binding Section:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | ரூ | 30 | 8 | ... | 25 | 10 | ... |
| (2) ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி சாமான்கள் வாங்கியவகையில்செல் | | 2 | 11 | ... | 45 | 13 | ... |
| மொத்தம் | ரூ | 33 | 3 | ... | 71 | 7 | ... |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ | 502 | ... | ... | 599 | 8 | 9 | * By P. B. Rs 195. By Cooperative Bank Receipt Rs. 1050 By cash on hand Rs. 111-5-8 | ஆகமொத்தம்செலவு ரூ | 968 | 8 | 7 | 725 | 10 |
| இம்மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ | 1822 | 14 | 3 | 1239 | 3 | ... | | இம்மாதமுடிவில் மீதியிருப்புத்தொகை ரூ | 1356 | 5 | 8 | 1113 | 1 |
| ஆகமொத்தம் ரூ | 2324 | 14 | 3 | 1838 | 11 | 9 | 1356-5-8 | ஆக மொத்தம் ரூ | 2324 | 14 | 3 | 1838 | 11 |

Audited and found correct.
V. S. Ramaswami,
*Auditor.*
18—12—19.

T. Sudarsanachari,
*Joint Secretary.*
29—11—19.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.


தொகுதி கஅ] சித்தார்த்தி ஷு-தைமீ [பகுதி ச.

*Vol. XVIII. • February—March 1919-20. No. 4.*


## அகராதி நிகண்டு.

தேன ருமகிழ்த் தொடையலு மவுலியுந் திருக்கிளர் குழைக் காதுங்
கான ருமலர்த் திருமுகச் சோதியுங் கயிரவத் துவர் வாயு
மோன மாகிய வடிவமு மார்பமு முத்திரைத் திருக் கையு
ஞான தேசிகன் சரணதா மரையுமென் னயனம்விட் டகலாவே.(பி-ம்)

சோதிவிநாயகர்பாதமெனமுடி
வோதியநாவினோர்நீதியுளார்களே. (பி-ம்.)
வெள்ளைவாரணப்பிள்ளையார்பதம்
உள்ளுவார்மனக்கள்ளமாறுமே. (பி-ம்.)
உலகினர்பவமறமலைமகடவஞ்செயும்
தேசுகொள்பட்டீச்சரன்பதம்பணிந்து
ஒலிபெருகடல்சூழுலகினிற்றெறிக்கும்
இயற்சொற்றிரிசொற்றிசைச்சொல்வடசொலென்
றுரைதருசொற்களொருநான்கதனிற்
றிரிசொலின்பேதமிருவகையதுதான்
ஒருசொற்றனேபலபொருளாகியும்
பலசொற்றனேயொருபொருணிலவியும்
வருமிதிலொருசொற்பலபொருளதனைத்
தெரிதருபிங்கலந்திவாகரமுதலாய்ப்
பரவியநிகண்டுபலவெடுத்தாராய்ந்
ததிற்சிலதிரட்டியகரமுதலாய்
மதித்தெழுவகாரவர்க்கமீறாய்
மொழிமுதலெழுத்துறுத்தெருநாலடைவே
மொழிதருசூத்திரமுதற்பதந்தோறும்
வருபெயராதிப்பொருளாயெடுத்தே

ஒருபெயர்முதல்நாற்பத்தாறிரறய்
நிகழ்தரவுரைக்குந்தொகைதனக்கிப்பெயர்
அடைவினிலங்கங்கமர்ந்துளபேரும
இடையிடையடைவிலங்கில்லாப்பேரும்
மன்னுசூத்திரமூவாயிரத்துடனே
முந்நூற்றறுபத்தெட்டெனுந்தொகையாய்
வந்திடுந்தொகுதியீரைந்தெனவகுத்தே
அரியசகாத்தமாயிரத்தைஞ்ஞூற்
றொருபத்தாறெனவுரைத்திடுமாண்டினில்
ஐந்ததிகார*மறுபத்துநாற்கலை
உந்தியவறிவாலொருங்குடனுணர்ந்த
நாற்கவிவாணர்நகைதரயானும்
நூற்பாவதனால்நுண்ணியவறிவினில்
ஆதரவாலகராதிநிகண்டென
ஓதினன்யாவருமுணர்ந்திடநினைந்தே.

---

முதலாவது அகராதிப்பேர்த்தொகுதி

அம்முதலொருபெயர்

அரனென்பதுவேசங்கரனாகும்.
அம்பிகையென்பதுமையவள்பெயரே.
அயனேவேதனுமெனநுவல்வர்
அம்பணத்தியேதுர்க்கையாகும்
அமுதகதிரோனென்பதுசந்திரன்
அனவலனென்பதுசுக்கிரனாகும்
அசங்கதந்தானேபொய்யின்பெயராம்
அரமேயராவுங்கருவியாகும்
அரட்டமென்பதுவிடிகையினமம்
அயினிதானேசோறெனலாகும்
அம்மியமேகள்ளாமெனமொழிவர்
அரவிந்தமென்பதம்போருகமே

* மறுபத்தெண்கலை (பி-ம்.)



அயின்றனென்பதன்னையின்பேராம் ௧௩
அரிசமென்பதுமிளகெனநுவல்வர் ௧௪
அவையென்பதுவேசவையெனலாகும் ௧௫
அரமியமென்பதுநிலாமுற்றப்பெயரே ௧௬
அகருவேயகிலாமெனமொழிவர் ௧௭
அகலிடந்தானேசெகதலமென்ப ௧௮
அகழியேயகழாமெனவுரைப்பர் ௧௯
அங்குலமென்பதணிவிரலாகும் ௨0
அங்கையென்பதகங்கையின்பேரே ௨௧
அங்கோலந்தானழிஞ்சிலாகும் ௨௨
அகப்பாவேயரணமெனவுரைப்பர் ௨௩
அசுழமென்பதுநாயெனலாகும் ௨௪
அடங்காரென்பதுபகைவராகும் ௨௫
அடமேபொல்லாங்காமெனமொழிவர். ௨௬
அடக்கமென்பதுவேயொடுக்கத்தின்பெயர் ௨௭
அதங்கதந்தானேயானைத்தீவனம் ௨௮
அமையேமூங்கிலாமெனப்புகல்வர் ௨௯
அடிமையென்பதுதொழும்பெனலாகும் ௩0
அகைப்பேதாழ்த்தலாமெனப்படுமே ௩௧
அசலென்பதுவேயன்னியமாகும் ௩௨
அரித்தைதானேகிலேசமென்றாகும் ௩௩
அலத்தையென்பதுசெம்பஞ்சாகும் ௩௪
அலமரலென்பதுசுழற்சியின்பேரே ௩௫
அமரமேபின்பக்கமாகும் ௩௬
அந்தித்தலென்பதுபொருந்தலாகும் ௩௭
அம்பகமேவிழியாமெனப்புகல்வர் ௩௮
அம்புராசியேகடலெனப்படுமே ௩௯
அதளென்பதுவேதோலெனலாகும் ௪0

அம்பணவரென்பதொருசாதிப்பேர்
அரந்தையென்பதுகிலேசமாகும்
அரிசனந்தானேமஞ்சளின்பேரே
அரவரென்பதுவேதமிழராகும்
அவாவேயாசையாமெனத்தகுமே
அவையலென்பதுதிரளையின்பேரே
அழுவையேயிபமாமெனவைப்பர்
அஞ்சனியென்பதுகாயாவாகும்
அழுப்புகந்தானேசுவர்க்கமெனலாம்
அழுப்பென்பதுவேசோறெனலாகும்
அகழுவென்பதுபெருமரமாகும்
அறன்கடைதானேபாவமாகும்
அறைபோதலென்பதுகீழ்போதலாகும்
அற்காமையென்பதுநிலையாமையின்பெயர்
அருக்கமேயெருக்காமெனமொழிவர்
அகுன்றியென்பதுவாச்சியமாகும்
அரும்புதானேமுகையெனலாகும்
அழலென்பதுவேதழலின்பேரே
அழிகைதானேகெடுகையாகும்
அளிக்கையென்பதுகொடுத்தலாகும்
அழைக்கைதானேகூவுகையாகும்
அறமேதருமமாமெனப்படுமே
அமையமென்பதுபொழுதெனப்புகல்வர்
அன்றமையென்பதுகாற்றின்பெயரே
அளவரென்பதுவேயுப்பமைப்போரே
அழிதல்தானேகனிதலாகும்
அளித்தலென்பதுதருப்பண்ணுதலாம்
அளைவுதானேகுழைவெனலாகும்



அறவோரென்பதுதுறவோராகும் ௬௯
அறுதொழிலோரேயந்தணராகும் ௭௦
அஞ்சமென்பதுவேயன்னமென்புள்ளாம் ௭௧
அனலேயக்கினியாமெனத்தகுமே ௭௨

அம்முதலொருபேர்முற்றும்.

அம்முதலிருபெயர்

அந்தரியேயுமைதுர்க்கையென்றிருபேர் ௭௩
அனந்தைதானேசத்தியும்பூமியும் ௭௪
அமரரேவிண்ணவரும்பகைவரும் ௭௫
அந்தணர்வேதியரறவோராகும் ௭௬
அகலுளேநாடேரெனவிருபெயா ௭௭
அகளமென்பதுமிடாவுந்தாழியும் ௭௮
அக்சுரமேயொருநோயுமெழுத்தும் ௭௯
அங்காரகமென்பதுதீயோடும்
பூகுவனைவுமாமெனுமிருபெயர் ௮௦
அசனமேபட்டினிசோறுமிருபெயர் ௮௧
அஞரேதுக்கமறிவிலாரிருபெயர் ௮௨
அடலைதானேயடலையின்பெயரும்
வெண்பலியெனவும்விளம்புமிருபெயர் ௮௩
அருளேகிருபையுஞ்சிவசத்தியுமாம் ௮௪
அலமேகலப்பையுமமைவுமாகும் ௮௫
அரந்தையேநீர்நிலையுந்துன்பமும் ௮௬
அரசரேவன்னியருமரசரும் ௮௭
அந்தகனென்பதுகூற்றனுங்குருடனும் ௮௮
அமரேபூசலுமமர்தலுமிருபெயர் ௮௯
அழகேயழகுங்கண்டசற்கரையும் ௯௦
அமைதலேசம்மதித்தலும்பொழுதும் ௯௧
அரக்கென்பதுவேசிவப்பரக்கிருபெயர் ௯௨
அகவல்தானேர்பாவுமாடலுமாம் ௯௩

அரங்கேயோரில்லிடங்களென்றிருபெயர் ௯௪
அரசனென்பதுவேவிருபனும்வியாழமும் ௯௫
அரம்பைதானேவாழையுமரம்பையும் ௯௬
அருச்சுனமென்பதுவெண்மையுமருதும் ௯௭
அருந்ததியேகள்ளாசையென்றிருபெயர் ௯௮
அழனமேபிணந்தீயெனவிருபெயர் ௯௯
அற்பமென்பதுசிறிதுநாயிரண்டே ௧௦௦
அணுக்கமேயுரகஞ்சந்தனமிருபேர் ௧௦௧
அரிவையென்பதோர்பருவமாதரும்
மகளிருமென்றேவழங்குமிருபேர் ௧௦௨
அருகரேநிலையாமையுமமணரும் ௧௦௩
அருந்தல்தானேபொசித்தலுமருமையும் ௧௦௪
அறிக்கையேபற்றுவித்தலுமறிவும் ௧௦௫
அறுபதமென்பதுகையாந்தகரை
வண்டெனவிருபேர்வைக்கவும்படுமே ௧௦௬
அனங்கமேமல்லிகையிருவாட்சி ௧௦௭
அறுவையென்பதுசித்திரைநாளும்
தூசுமெனவேசொல்லுமிருபேர் ௧௦௮
அன்றில்தானேயோர்புள்மூலநாள் ௧௦௯
அன்னமென்பதுசோறுமோர்புள்ளும் ௧௧௦
அன்னியமேகுயிலன்னியமிரண்டாம் ௧௧௧
அன்னைதானேதாயுந்தோழியும் ௧௧௨
அங்காரகனேசெவ்வாயனலாம் ௧௧௩
அற்பசியென்பதைப்பசிமாதமும்
அசுபதிநாளுமாமிருபெயரே ௧௧௪
அழுக்கேயாமையுமழுக்குமாகும ௧௧௫
அணவல்தானேயணுகலும்புல்லலும் ௧௧௬
அயனந்தானேயாண்டினிற்பாதியும்
வழியுமென்றேமதிக்குமிருபெயர் ௧௧௭
அருகல்தானேசுருங்கலுஞ்சார்தலும ௧௧௮

அனிலமேபயங்காற்றேடிருபெயர்
அசனியேயிடிவச்சிரமிருபெயர்
அரிதமென்பதுதிசையும்பசுமையும்
அக்கென்பதுவேவிடையின்முரிப்பும்
சங்கின்மணியுஞ்சாற்றுமிருபெயர்
அகியேயுரகமுமிரும்புமாகும்
அலரேவிரிமலர்பழியெனவிருபெயர்
அவிர்தலேயொளிபிறலென்றிருபெயர்
அளவையேதினமுமெல்லையுமாகும்
அசைதல்தானேதங்கலும்நோதலும்
அசமென்பதுமூவாட்டையினெல்லும்
ஆடுமென்றேயறையுமிருபேர்
அராகமேபணமுடுக்கியலிருபேர்
அதரேவழியும்புழுதியுமாகும்
அணையென்பதுவேமெத்தையுங்கரையும்
அமலையென்பதுமையுஞ்சோறும்
அவினயமென்பதுவேநாடகாங்கமும்
பதுவலுமென்றேபகருமிருபெயர்
அழுக்காறென்பதுமனக்கோட்டத்துடன்
பொறாமையுமென்றேபுகலுமிருபெயர்
அந்தியேயசைசந்தியென்றிருபெயர்
அம்முதலிருபேர்முற்றும்.
அம்முதல் முப்பேர்
அத்தனென்பதுவேசிவனும்பிதாவும்
சுவாமியுமென்றேசொல்லுமுப்பேரே
அவனியென்பதுபாரகாவேந்தர்
அம்புவியெனுமேயறையுமுப்பேரே
அஞ்சலிதானேபேதையும்வாவலும்
கும்பிடலெனவுங்கொள்பேர்மூன்றே

அமுதேமழையுந்தேவருணவும்
ஈரமுமெனவேகிளக்குமுப்பேரே ௧௩௯

அச்சமென்பதுவேயஞ்சலுமகத்தியும்
ஐயமுமெனவேயமைக்குமுப்பேரே ௧௪௦

அடுப்பென்பதுவேயச்சமுமடுப்பும்
பரணிநாளும்பகர்பேர்மூன்றே ௧௪௧

அளகமென்பதுபெண்ணின்மயிரும்
அப்பும்பெண்மயிர்க்குழற்சியுமுப்பேர் ௧௪௨

அடரேஐயமுந்தகடுநெருக்கமும் ௧௪௩

அம்பியேநீர்மேலோடுவனவும்
தெப்பமுந்தோணியுஞ்செப்புமுப்பேரே ௧௪௪

அடியேசெண்டுவெளியுந்தாளும்
மண்டமுமென்றேவழங்குமுப்பேரே ௧௪௫

அந்தமென்பதுமுடிவுமழகும்
கத்தூரியுமெனக்கருதுமுப்பேரே ௧௪௬

அரிட்டமென்பதுகள்ளுங்காக்கையும்
வெப்புமெனவேவிதிக்குமுப்பேரே ௧௪௭

அம்போதியென்பதுகாலுங்கடலும்
பாட்டிலக்கணமும்பகருமுப்பெயரே ௧௪௮

அருணனென்பதிரவியும்புதனும்
அருக்கன்றன்றேர்ப்பாகனுமாமே ௧௪௯

அம்மென்பதுவேயசைச்சொல்லுமழகும்
நீருமெனவேநிகழ்பேர்மூன்றே ௧௫௦

அம்பரந்தானேகடலும்புடவையும்
ஆகாசமுமெனவறையுமுப்பேரே ௧௫௧

அம்பேகணையுநீரும்புயலும் ௧௫௨

அம்புயமென்பதுப்ட்டிலும்பொதியும்
அம்போருகமுமாகுமுப்பேரே ௧௫௩

அரசேமன்னனுமிராசியுமுடனே
ஒருமரமெனவுமுரைக்குமுப்பெயரே ௧௫௪



அவலென்பதுவேபள்ளமுமவலும்
நீர்நிலையெனவுநிகழ்பேர்மூன்றே ௧௫௫

அநித்தந்தானேநிலையாமையுமொடு
சத்தியுஞ்சந்தனமுமுப்பேரே ௧௫௬

அண்டரென்பதுவேபகைவருமிடையரும்
அமரரெனவுமமையுமுப்பேரே ௧௫௭

அங்கணமேசலதாரையுஞ்சேறும்
முற்றமுமெனவேமுப்பேராகும் ௧௫௮

அளமேகூர்மையுமுப்பெழுநிலமும்
செறிவுமென்றேதெரித்திடுமுப்பேர் ௧௫௯

அசியென்பதுவேயவமதிச்சிரிப்பும்
வாளோடாயுதபவழங்குமுப்பேரே ௧௬௦

அந்திலென்பதசைச்சொல்லுமிடமும்
ஆங்குமென்றேயமைக்குமுப்பேரே ௧௬௧

அகடென்பதுவேநடுவும்வயிறும்
பொல்லாங்கெனவும்புகலுமுப்பேரே ௧௬௨

அடலேகொலையும்புயவலியுடனும்
பொருதலுமெனவேபுகலுமுப்பேரே ௧௬௩

அலவனென்பதுநண்டும்பூனையும்
நிலவுமென்றேநிகழ்த்துமுப்பேரே ௧௬௪

அடையென்பதுவேயிலையுங்கனமும்
இலட்டுகமெனவுமிசைக்குமுப்பேரே ௧௬௫

அந்தமேமுடிவில்லாதனவும்
விண்ணொடுபொன்னும்விரிக்குமுப்பேரே ௧௬௬

அண்ணலென்பதுமாண்புந்தலைவனும்
பெருமையுமெனவேபேசுமுப்பேரே ௧௬௭

அமறலென்பதுமிகுதியும்பொலிவும்
பெருமையுமென்றேபேசிடுமுப்பேர் ௧௬௮

அரணியென்பது நீக்கடைக்கோலும்
மதிலுங்கவசமும் வைக்குமுப்பேரே கசுகூ

அயிரே நுண்மையுஞ்சற்கரையதனொடு
நுண்மணலெனவுநுவலுமுப்பேரே களO

அரங்கந்தானேயாடிடம்போர்க்களம்
ஆற்றிடைக்குறையெனவாகுமுப்பேரே களக

அசையேநேரசைநிரையசையசைச்சொல் களஉ

அள்ளலென்பதுசேறும்நிரயமும்
அள்ளலுமெனவேயழைத்திடுமுப்பெயர் களங

அழுங்கல்தானேயிரங்கலுங்கேடும்
கம்பலையெனவுங்கருதிடுமுப்பெயர் களச

அம்முதன்முப்பேர்முற்றும்.

அம்முதனாற்பெயர்

அனந்தனேசிவன்மாயனருகன்
அனந்தனெனவேயாகுநாற்பேரே களரு

அகலமென்பதுநிலமுமிடமும்
விரிந்துரையுடனேமார்புநாற்பேரே களசு

அருப்பமென்பதுவேயூரும்நோயும்
காடுமரணுங்காதுநாற்பெயரே களஎ

அகைத்தலேவேதனையுமொடித்தலும்
அறுத்தலுமுயர்த்தலுமாகுநாற்பேரே களஅ

அத்தியென்பதுவேயானையுங்கடலும்
எலும்புமோர்மரமுமுவம்போர்நாலாம் களகூ

அயிலேலகிரையுமிரும்புங்கூர்மையும்
கைவேலெனவுங்கருதுநாற்பெயரே கஅO

அல்கலென்பதுதங்கலுஞ்சுருங்கலும்
இராத்திரியுடனும்நாளுநாற்பேரே கஅக

அறலென்பதுவேகருநீர்த்திரையும்
திரிபணலுடனும்அறலுநாற்பேரே கஅஉ



அல்லேயிரவியுமிராவுமிருளும்
வெயிலுமென்றேவிளம்புநாற்பேரே கஅங

அத்தென்பதுவேயசைச்சொலுஞ்சிவப்பும்
இசைப்புமலைநாலுடனுநாற்பேரே கஅச

அருணமென்பதெலுமிச்சுடனே
மானுஞ்சிவப்பும்வருடையுமநாற்பேர் கஅரு

அளியேயன்புங்கொடையுமதுவும்
வண்டுமென்றேவருபேர்நான்கே கஅசு

அலங்கலென்பதுதளிருமசைவும்
இலங்கலும்பூமாலையுமெனநாற்பெயர் கஅஎ

அந்தரமென்பதுமுடிவும்பேதமும்
இடமுடன்விண்ணுமெனும்பெயர்நாலாம் கஅஅ

அண்டமேபிரமாண்டமுமுட்டையும்
ஆகாயமும்விண்ணுலகுநாற்பேரே கஅகூ

அம்மையேவருபிறப்புடனழகும்
அன்னையுமுமையுமாகுநாற்பேரே ககூO

அரவமேநூபுரமுமுரகமும்
ஆயிலியத்தோடோசையுநாற்பேர் ககூக

அளையேதயிரும்புற்றும்பாழியும்
முழையுமெனவேமொழியுநாற்பேரே ககூஉ

அணியென்பதுவேயழகொடுபூணும்
அலங்காரமுமணிவகுப்புநாற்பேரே ககூங

அரலையென்பதுகாழுங்கழலையும்
கனியுங்கடலுங்கருதுநாற்பேரே ககூச

அங்கமேயாறங்கமுமெலும்பும்
உறுப்புமுடலுமோதுநாற்பேரே ககூரு

அம்முதல்நாற்பேர்முற்றும்.

அம்முதலைம்பேர்

அத்தமேயோர்நாளும வழியும
பாதியுங்கரமும்பொன்னுமைம்பேரே ககூசு

அத்திரமென்பதுவிடுமாயுதமும்
கணையுமவெற்புங்கழுதையுங்குதிரையும் ககூஎ

அலியேபேடும்நமனுஞ்சோறும்
நறுவலியுடனெருப்புமைம்பேரே ககூஅ

அளக்கரேகார்த்திகையுமளமும்
புடவியுங்கடலுஞ்சேறுமைம்பேராம் ககூகூ

அழுவமென்பதுநடுக்கமும்பரப்பும்
நாடுமுரசுந்துருக்கமுமைந்தே உ00

அருணமென்பதுமானுடன்சிவப்பும்
ஆனையும்வெள்ளையும்பொன்னுமைம்பேரே உ0க

அறுகேயானையுஞ்சிங்கமும்யாளியும்
புலியுமோர்புல்லும்பொருந்துமைம்பெயரே உ0உ

அல்லியேவெள்ளாம்பலுந்தாதும்
அகவிதழுடனேகாயாமரமும
அலியுமெனவேயைம்பேராகும் உ0ங

அங்கதமேதோளணியொடுபொய்யும்
மார்புமுரகமும்வசைச்சொலுமைந்தே உ0ச

அள்ளேகாதுஞ்செறிவுங்கூர்மையும்
வலிபற்றிருப்பும்வன்மையுமைந்தே உ0ரு

அம்முதலைம்பேர்முற்றும்.

அம்முதலறுபேர்

அம்பணமேதுலாக்கோலும்வாயும்
மரக்கலமுடனே தப்பும்வாழையும்
ஆமையுமெனவேயறுபேராகும் உ0சு

அத்திரியேயொட்டகமுங்கழுதையும்
விண்ணுங்கணையும்வரையும்பரியுமாம் உ0எ



அஞ்சனமேநிக்கயமுங்கருப்பும்
ஓர்கற்பிறப்புங்கண்ணிடுமருந்தும்
இருளுமையுமெனப்பெயராறே உ0அ

அறையேகிளவியுமறைஞ்சுப்பொதலும்
திரையும்பாறையுஞ்சிற்றிலுமறுபெயர் உ0கூ

அம்முதலறுபேர்முற்றும்.

அம்முதலெழுபெயர்.

அலரியேகணவரியும்நீராவியும்
பூவுமிரவியுமழகுமோர்மரமும்
தேனீயுடனுஞ்செப்புமேழ்பெயரே உக0

அம்படலந்தான் அம்மியுமிரதமும்
ஓடமும்வெளியும்வெள்ளியுமீயமும்
மரக்காலெனவுமதிக்குமேழ்பேரே உகக

அரணமேகொத்தளமுங்கவசமும்
மதிலும்வேலுமஞ்சமுங்காடும்
செருப்புமெனவேதெரித்திடுமேழ்பேர் உகஉ

அம்முதலேழ்பெயர்முற்றும்.

அம்முதலெண்பெயர்

அரிலென்பதுவேபாயலுஞ்சேரும்
குரலுங்குழலுங்குற்றமுஞ்சந்தியும்
பிணக்குஞ்சிறுதூறுடனுமெண்பெயரே உகங

அரகதமேசெம்மரத்தமும்பவளமும்
அரக்குஞ்சிவப்புமரத்தமுங்கடம்பும்
பொன்னுமுற்பவமும்போற்றிடுமெண்பெயர் உகச

அலகேதுடைப்பமும்நெற்கதிராதியும்
கிழின்பாலுமெண்ணுமாயுதமும்
பலகறையும்புள்வாயுநளமுமாம் உகரு

அற்றமேயவகாசமுமறைவும்
அற்றதுஞ்சோர்வுமுண்மையுந்துடியும்
சற்றுஞ்சேயுஞ்சாற்றுமெண்பேரே உகசு

அணங்கேயழகும்நோயுங்கொலையும்
அச்சமும்வருத்தமுந்தெய்வமாதரும்
தெய்வப்பெண்ணுந்தெரிக்குமெண்பேரே

அகமேயுள்ளுமகப்பொருடானும்
இடமும்மனையுமனமும்பாவமும்
ஆன்மாவுடனல்லனவுமெண்பெயர்

அம்முதலெண்பெயர்முற்றும்.

அம்முதலொருபத்தின்பெயர்

அயமேயாடும்நீரும்சேலமும்
குளமுங்குதிரையுஞ்சேறும்விழவும்
மகமுமிரும்புஞ்சூதனுடனும்
ஒருபத்துப்பெயரெனவுரைக்கவும்படுமே

அம்முதலொருபத்தின்பெயர்முற்றும்

அம்முதற்பதினொருபெயர்

அண்டசந்தானேயுரகமுந்தவளையும்
முதலையுமீனுமுடும்புமோந்தியும்
அரணையுங்கெவுளியுநண்டும்பறவையும்
ஆமையுமிவைமுதலாம்பதினொருபெயர்

அம்முதற்பதினொருபேர்முற்றும்.

அம்முதல் நாற்பத்தாறுபெயர்

அரியேயரித்தலுமருக்கனுமுராரியும்
பரியுஞ்சிங்கமும்பகையுந்தேரையும்
பொன்னுங்காற்றும்பொன்னகர்க்கிறையும்
செங்நெற்கதிருங்கிள்ளையுங்காந்தியும்
தேருமைம்மையுஞ்சேகும்வரியும்
கூர்மையுநிறமுங்கூற்றும்வண்டும்
வேயு[illegible]ன்றியுஞ்சிசியும்புகையும்
பாயலுஞ்சிலம்பின்பரலுஞ்சோலையும்



கண்ணினில்வரியுங்கடலுமுரகமும்
எண்ணியதிகிரியுமிரவாளும்
தகரும்வலியுமரிசியுங்குரங்கும்
புகரும்நெருப்புமபுரையுஞ்சயனமும்
எறிதருபறையுமெண்படைக்கலமும்
குறிதருபச்சையுங்கூறியமதுவும்
அரிதலுமெனப்பெயர்நாற்பத்தாறே. உ௨க

அம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆமுதலொருபெயர்

ஆலகண்டனென்பதுசிவனும் க
ஆகண்டலனேயிந்திரனாகும் உ
ஆகவமென்பதுபோரெனப்படுமே ௩
ஆகுளிதானேவாச்சியமாகும் ச
ஆசானென்பதுஆசாரியன்பெயர் ரு
ஆசியென்பதுவாழ்த்துதலாகும் சு
ஆசீவகரேயமணராகும் எ
ஆணரென்பதுபாணரெனப்படும் அ
ஆதரமென்பதுதேகதமாகும் கூ
ஆதரவேநல்லாசையாகும் க0
ஆதபமென்னும்பெயர்வெயிலாகும் கக
ஆதபத்திரமென்பதுகுடையே க௨
ஆதிரனென்பதுபெரியோனெனப்படும் க௩
ஆதிவருணரேவேதியராகும் கச
ஆதோரணரேயானைப்பாகர் கரு
ஆமரியென்பதுவார்த்தையின்பெயரே கசு
ஆமிரமேமாமரமெனப்படுமே கஎ
ஆயனியென்பதுதார்க்கையென்றாகும் கஅ

ஆயோதனமேபோர்செய்தலாகும் ௧௯
ஆய்மலரென்பதுதாமரையாகும் ௨௦
ஆரஞரென்பதுதுக்கத்தின்பெயர் ௨௧
ஆரென்பதுவேயனுக்கமாகும் ௨௨
ஆர்கூடமென்பதுபித்தளையாகும் ௨௩
ஆரவையென்பதுகொத்தளிப்பாமே ௨௪
ஆரிடமென்பதோராகமமாகும் ௨௫
ஆருவமேநீராமெனப்படுமே ௨௬
ஆர்பதமென்பதுவண்டின்பேரே ௨௭
ஆருபதமேபித்தளையாகும் ௨௮
ஆலம்பமென்பதுபற்றென்லாகும் ௨௯
ஆலுதல்தானேயாடுதலாகும் ௩௦
ஆயுகமென்பதுவாணுளாகும் ௩௧
ஆவரிதானேயம்பெனலாகும் ௩௨
ஆரலமென்பதுபகையெனலாகும் ௩௩
ஆனனமேமுகமாமெனப்படுமே ௩௪
ஆவலமென்பதுகூறையாகும் ௩௫
ஆவலாதிதான்தூற்றுதலின்பேர் ௩௬
ஆவித்தலென்பதுகொட்டாவியின்பேர் ௩௭
ஆழல்தானேகறையானெனப்படும் ௩௮
ஆற்றுமையென்பதுபொறுமையாகும் ௩௯
ஆனுலகென்பதுதேவருலகே ௪௦
ஆளிதானேசிங்கமாகும் ௪௧
ஆடையென்பதுபுடவையாகும் ௪௨
ஆரணமேமறையாமெனநுவல்வர் ௪௩
ஆனலரென்பதிடையராகும் ௪௪
ஆசிதமேமுகமாமெனமொழிவர் ௪௫
ஆயுள்வேதியரேமாமருத்துநூலோர். ௪௬

ஆமுதலொருபெயர் முற்றும்.

௳

# உவமைப்போலிவிளக்கம்.

சென்ற தைமாதச்செந்தமிழ்ப்பகுதியில் சுன்னாகம் வித்துவான் ஸ்ரீமத்- அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களால் 'உவமைப்போலி,' 'பக்கப்போலி' என்னும் விடயங்கள் வெளியிடப்பட்டன. ஏதுப்போலி வகையும் இனி யெழுதுவார்கள். அவை அளவைநூல்கற்போர் அறிந்துகொள்ளவேண்டும் பல விடயங்களையுடையன.

இங்ஙனம் பிள்ளையவர்களெழுதிவரும் ஆராய்ச்சிகளெல்லாம் 'செந்தமிழ்'க்கு ஏற்றனவாய்ப் பெரிதும் பயன்படுவன. இத்தகைய ஆராய்ச்சியே சங்கமிருந்து தமிழாராய்தலென நன்குமதிக்கத்தக்கன.

அவர்கள்காட்டிய 'உவமைப்போலி,' 'பக்கப்போலி'களின்பெயர்களினும், உரைகளினும் உள்ள பிழைகளைத்திருத்தியும், பெயர்களுள்விலேவிடப்பட்டவைகளை உதாரணங்காட்டி விளக்கியும், உரைவேறுபாட்டிற்குச் சமாதானங்கூறியும் ஒருரையெழுதி வெளியிடவேண்டுமென்று என்னை அவர்கள் தனியே தூண்டியதற்கிசைந்து யானறிந்த அளவில் ஒருசிறிது உரை வரைகின்றேன்.

இங்கு உவமையென்றது காவியவழக்கில் அணிவகையுளொன்றாம் உவமையாகாது, அளவைநூலுள்ளே அநுமானவுறுப்பாக வழங்கப்படும் திட்டாந்தமாமென்று கொள்ளத்தக்கது. திட்டாந்தம், உதாரணம், எடுத்துக்காட்டு என்பன ஒருபொருட்சொற்கள்.

'போலி'யென்பது தன்னின்வேறாகிய பிறிதொன்றுபோன்றிருப்பது. இதனால் 'உவமைப்போலி' என்பதற்கு, 'உவமை'யென்னும் திட்டாந்தத்தின்வேறாய்த் திட்டாந்தம்போன்றுதோன்றுவதென்பது பொருளாயிற்று.

இங்குதிட்டாந்தமென்பது தருக்கநூலுட்கூறியவாறு பரார்த்தாநுமான வாக்கியங்களுள் மூன்றாவதாக எண்ணப்படுங்கூற்று; அது (1) சாதனத்தில் வியாபித்த சாத்தியமுடையதாகத் தெளியப்பட்டதொன்றை யெடுத்துக்காட்டுவதும் (2) சாத்தியாபாவத்தில் வியாபித்த

சாதனபாவமுடையதாகத் தெளியப்பட்ட தொன்றை யெடுத்துக் காட்டுவதும என இருவகைப்படும். அவற்றுள் முன்னது அந்நுவய வியாத்தியுடைமையால் 'சாதர்மியமென்றும்,' பின்னது வியதிரேக வியாத்தியுடைமையால் 'வைதர்மிய'மென்றும் வழங்கப்படும். அந்நுவயம்-சாதன, சாத்தியங்களின் உண்மை. வெதிரேகம்-அவற்றின் இன்மை. சாதர்மியம்-சமான (ஒத்த) தர்மமுடையது. வைதர்மியம்-தர்மஹீனமாயிருப்பது. தர்மமெனினும், தன்மமெனினும், தன்மை எனினும் ஒக்கும். இங்கு தர்மமென்று வழங்கப்படுவது சாதன சாத்தியங்களாம். அவை பக்ஷ சபக்ஷங்களுக்கு உடைமையாயிருத்தலால் அவ்வாறு வழங்கப்பட்டன. இதனை, சாத்தியத்தைச் சாத்தியதன்மமெனவும், சாதனத்தைச்சாதனதன்மமெனவும் இருபெயரொட்டாய் மணிமேகலையுளெடுத்தாளுதலானு மறியலாம்.

இவ்விருவகைத்திட்டாந்தத்துள், சாதன்மிய திட்டாந்தமாவது, மலை நெருப்புடைத்து புகையுடைமையால் என்னும் அநுமானத்தில், யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது; பாகசாலைபோல; எனவியாத்தியோடு கூடிய சாதன சாத்தியங்களைத் தன்னகத்துடையதா மொருபொருளைத் திட்டாந்தமாக எடுத்துக் காட்டுவதாம். இது பக்ஷத்தோடொத்த சாதன சாத்தியதர்மங்களை யுடைமையாற் சாதன்மியமெனப்பட்டது.

வைதன்மிய திட்டாந்தமாவது:-முற்கூறியசாதன்மியதிட்டாந்த வியாத்திவாசகப் பொருளின் அபாவத்தை (அதாவது ஏது சாத்தியாபாவங்களைத்,) தட்டுமாறி, யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது; ஆற்றுவெள்ளம்போல எனச்சாத்திய சாதனங்களைத்தன்னிடத்தில்லாததொன்றைத் திட்டாந்தமாக எடுத்துக் காட்டுதலாம். இது பக்ஷத்தோடொவ்வாது வேறுபட்ட சாத்திய சாதனபாவதர்மங்களையுடைமையால் வைதன்மியமெனப்பட்டது.

இவ்விருவகைத்திட்டாந்தங்களும் இலக்கணம சிதையில் குற்றமுடையனவாய்த்திட்டாந்தப்போலிகளாம்.

இவ்வாறே இவ்வுறுப்போடொத்த 'பக்கம்,' ஏது என்னும் உறுப்புக்களும் இலக்கணம் சிதையிற் குற்றமுடையனவாய்ப் பலதிறப்பட்ட 'பக்கப் போலி' ஏதுப்போலிகளாம்.



இவை யெல்லாம் வடநூல்களில் நியாயாசாரிய வாசகங்களிலும் பௌஷ்கராகம முதலியவற்றிலும் தமிழ்நூல்களில் மணிமேகலையிலும், சிவஞான சித்தியாருரை முதலியவற்றிலும் அளவையிலக்கணங்கூறும் பகுதிகளிலறியலாம்.

அச்சிட்ட சிவஞான சித்தியாருரைகளில், இப்பகுதியுள் பல பிழைபாடு காணப்படுகின்றன. அவற்றைச்சுத்தபிரதிகொண்டு சோதித்துத்திருத்திக்கொண்டாலன்றிப் பொருளறிதல் அரிதாயிருக்கும். ஒவ்வோருரையும் வகுக்குமுறையான் ஒருநெறிப்படாது வேறுபட்டிருக்கிறது.

சிவாக்கிரயோகிகளுரையில், திட்டாந்தப்போலிகளைச் சாதன்மிய வைதன்மியங்களிற் சாத்தியசாதன ஹீநாஹீனவகையால் பொருட்குற்றமுடையன எட்டாகவும், சொல்லும முறை திறம்பலாகிய சொற்குற்றமுடையவை பத்தாகவும் ஆகப்பதினெட்டாக்கிக்காட்டி, அவற்றிற்கு வடமொழிப்பிரமாணங்காட்டியவிடத்து அந்நுவயத்தில் ஐந்துதாரணங்கள்மட்டும காட்டப்பட்டன. ஐந்தாமுதாரணத்தில் 'ஹ்ருதவத்' எனற்பாலதான 'திட்டாந்தம்வேறுப்சொல்லும்' சொல் எழுதப்படாமையால் ஏனையவும் ஏடெழுதுவோரால் ஓரேடு எழுதாதுவிட்டதவறுதலால் விடப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. பொருட்குற்றம்-அர்த்த தோஷமெனவும்' சொற்குற்றம்-உக்திதோஷமெனவும்படும்.

மணிமேகலையுள் இப்பொருட்குற்றமுடைய எட்டுடன், அநந்நுவயம், விபரீதாந்நுவயம், அவ்வெதிரேகம், விபரீத வெதிரேகம், என்னும் சொற்குற்றமுடைய நான்குகூட்டித் திட்டாந்தப்போலி பன்னிரண்டுகாட்டப்பட்டன.

அவற்றோடு சந்தித்த வகையால் ஓராறுகூட்டி மறைஞானதேசிகரால் பதினெட்டெனக்காட்டப்பட்டன.

இனிச் சிவஞானமுனிவர் இப்பதினெட்டனுள் அவ்வியாத்தியபிதானம், வியாத்தியநபிதானம் என்னும் இரண்டும் 'சொல்லில்வழி வருமுத்துணர்'வால் வியாத்தியுணரப்பட்டுப்பிழையிலவாதல்பற்றித் திட்டாந்தப்போலிகளாகாவெனவொழித்து, அவற்றிற்கீடாக ஆசிரய

கினம், ஆசிரயவிகினம் என்னுமிரண்டினும் திட்டாந்தப்பொருள் பரனுக்கு உடம்பாடின்மைபற்றி அவற்றை, சொரூபமுண்மைபரனுக்கு உடம்பாடாகாதது எனப்பெயர் கொடுத்து இரண்டாகப்பிரித்துச் சாதன்மியத்துள்ளும் வைதன்மியத்துள்ளும் கூட்டி, சாதன்மியத்தும், வைதன்மியத்தும் சொல்லப்பட்ட (ஈ) விபரீதவியாத்தியபிதானம் ' (வை) விபரீதவியாத்தியபிதானம் ' என்னுமிரண்டையும் ' சொல்லுமுறை பிறழச்சொல்லும் சொற்குற்ற முடையனவாகக் கொள்ளாது பொருட்குற்றமுடையனவாகக்கொண்டு அவற்றிற்கு முறையே "செயற்கையானகிய வியாத்தியுடையதெனவும் வெதிரேக வியாத்திசெயற்கையானுடைய தெனவும் பெயர்கொடுத்து அப்பதினெட்டுப் பொருட்குற்றமுடையனவாகவைத்தெண்ணி, சந்தித்தவகை ஒராறையும் தனித்தனி அவற்றின் இனத்தோடு கூட்டிமுறைப்படுத்தித் தமிழ்ப்பெயரால்வழங்கினர். அவை ஒன்றற்கும் உதாரணங்காட்டிற்றிலர்.

மறைஞானதேசிகருரையிற் கூறிய முறையில், சாத்தியவிகலம், ' சாதன விகலம் ' ' உபயவிகலம் ' என முதலெண்ணப்பட்ட மூன்றும் முறையே 'மணிமேகலை (29ல் 350, 341, 360)ல்' சாத்தியதன்மவிகலம், சாதனதன்மவிகலம், உபயதன்மவிகலம் என்ற பெயருடன் இலக்கணமு முதாரணமுங்காட்டி விளக்கப்பட்டன. இவற்றைச்சிவஞானமுநிவர் முறையே ' சாத்தியமுடைத்தாகாததூஉம், ' ' ஏதுவுடைத்தாகாததூஉம்' இரண்டுமுடைத்தாகாததூஉம் ' எனப்பெயரிட்டு ஒன்று, மூன்று, ஐந்காவதாக வைத்தெண்ணினர். இவை மூன்றும் பொருளானும் இலக்கணத்தானும் மறைஞானதேசிகருரையோடும் மணிமேகலையோடும் சிறிதும் வேறுபாடில்லனவாய்ச் சென்ற செந்தமிழ்ப்பகுதியிற் செவ்விதினெழுதப்பட்டன.

இனி நான்காவதாகக்காட்டிய ' ஆசிரயகினம் ' என்பது மணிமேகலையுள், (29, 363) உபயதன்மவிகலத்துள் 'அசந்த' எனப்பெயர் கொடுக்கப்பட்டு இலக்கணமும் உதாரணமுமெழுதப்பட்டிருக்கிறது. இங்கு ஆசிரயம் என்றது உபயமென்று அதிகாரப்பட்டுள்ள சாத்திய சாதநங்களுக்கு ஆசிரயமான திட்டாந்தப்பொருளாமெனக்கொள்ளத்தக்கது. ஆசிரயம்-பற்றுக்கோடு. ஈனம் இல்லாதது. ஆகவே ' ஆசிரயகீனம் ' என்றது சாத்திய சாதன தர்மங்களுக்குப் பற்றுக்கோடாகியதிட்டாந்தம் இல்பொருளாயிருப்பதென்றவாறும்,



இத்திட்டாந்தப்போலிக்கும் சென்ற செந்தமிழ்ப்பகுதியிற் காட்டியவுதாரணம் பொருந்தும். ஆயினும் இலக்கணம் மேலே கூறியவாறெழுதித்திருத்திக்கொள்ள வேண்டும். 'விளக்கவுரையில்' ' ஆகாயப்பூ என்னும் உவமையிலே பூவுக்கு ஆகாயம் சார்பிடமாகாமையறிக ' என்ற வாக்கியத்தை ஒழித்து' அதற்கீடாக " இத்திட்டாந்த வாக்கியத்துள், சாத்திய சாதனங்களுக்கு ஆசிரயமாகக் காட்டிய ஆகாயப்பூ வென்னும் திட்டாந்தப்பொருளே இல்லையாதலறிக. " என்று திருத்திக்கொள்ளவேண்டும்.

இதனை மறைஞானதேசிகருரையில், " மனது அநித்தியம்; மூர்த்தமாகையினாலே, " என்கிற ஏதுவுக்கு ஆகாயப்பூப்போல என்பது திட்டாந்தமாயின் திட்டாந்தமாயிருக்கிற " ஆகாசபுட்ப " மில்லாதபடியினால் (இது திட்டாந்தப்போலியாயிற்று) எனக்கூறியவாற்றானுமறிக. இதனை, சிவாக்கிரயோகிகள் சொரூபவைகல்யமெனக்கூறி விளக்கியவாற்றானுமறிக.

இத்திட்டாந்தப்போலியே சிவஞானமுனிவருரையில் "சொரூபமில்லதூஉம், சொரூபமுண்மை பரனுக்குடம்பாடாகாததூஉம்" என இருவகையாகப்பகுத்து ஏழாவதும், எட்டாவதுமாகவைத்தெண்ணப்பட்டிருக்கிறது. இங்குக்காட்டியவுதாரணம் 'சொரூபமில்லது' என்பதற்குப்பொருந்துவதாம். 'சொரூபமுண்மை பரனுக்குடம்பாடாகாதது' என்பதற்கு உதாரணம்:—காற்று திரவியம்; குணமுடைமையால்; யாதுயாது குணமுடையது அது அது திரவியம் ' ஆகாயம்போல' எனப் புத்தசாருவாகரை நோக்கிக்கூறுதலாம். இங்குதிட்டாந்தமாகக்காட்டப்பட்ட ஆகாயத்தின் சொரூபமே அவருக்கு உடம்பாடில்லாமையாலிது சொரூபமுண்மைபரனுக்கு உடம்பாடாகாதது என்னும் திட்டாந்தப்போலியாதலறிக.

5. ' அவ்வியாத்தியபிதானம் ' என்றது வியாத்தியபிதானசூனியமாகச்சொல்லும் திட்டாந்தவுறுப்பென்று பொருள்படும். வியாத்தியபிதானம் என்பது ஈண்டு அந்நுவயவியாத்திவாசகமெனக்கொள்ளத்தக்கது. அது, மலை நெருப்புடைத்து, புகையுடைமையால்என்னும் அநுமானத்தில், " யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது" என ஏது சாத்தியங்களுக்குள்ள அந்நுவயவியாத்தியைப் புலப்படுத்துக்கூறும் கூற்றும். இக்கூற்றைக்கூறாது ஒழித்து, 'பாகசாலைபோல' எனத்திட்டாந்தப்பொருளைமட்டும் கூறின் வியாத்தி தோன்றாமையால் இது திட்டாந்தப்போலியாம் என்பது ஒருசாரார் கருத்து.

இதனை 'அநந்நுவயம்' என மணிமேகலைகூறும். அதுவருமாறு:—

(29, 386) "அநந்நுவயமாவது சாதநசாத்தியந்
தம்மிற்கூட்டமாத்திரஞ்சொல்லாதே
இரண்டனுடையவுண்மையைக்காட்டுதல்

சத்தம்அநித்தம்;கிருத்தமாதலின்;
யாதொன்றுய தொன்றுகிருத்தமதநித்தமெனும்
அந்நுவயம்சொல்லாது,குடத்தின்கண்ணே
கிருத்தவநித்தபகாணப்பட்ட
என்றால்,அந்நுவயம்தெரியாதாகும்."

என்பதனுனறிக. இதனுள், "சாதனசாத்தியந்தம்மிற் கூட்டமாத்திரஞ்சொல்லாதே இரண்டனுடைய வுண்மையைக்காட்டுதல்" என்றது, "யாதுயாதுசாதனமுடையது அது அது சாத்தியமுடையது"என்னும் பொதுவாய்பாடுபற்றி அவ்வச்சாதன சாத்தியங்களுக்குளதாகிய வியாத்தியைப்புலப்படுத்தும் சிறப்புவாய்பாடாகிய வியாத்திவாசகத்தைமட்டுப கூறுதொழித்து, ஏனை அநுமானவுறுப்புக்களையெல்லாம்கூறிச் சாதனசாத்தியமுள்ளதாகத் திட்டாந்தத்தையெடுத்துக்காட்டுதல் என்றவாறு.

சத்தம் இங்குபக்ஷம். அநித்தமாதல்சாத்தியம். கிருத்தமாதல் ஏது. (கிருத்தம் ஆக்கப்படுவது.) அந்நுவயம் சொல்லாதென்றது.— அந்நுவயவியாத்திவாசகம் சொல்லாதொழித்து. என்றவாறு. குடத்தின்கண்ணே கிருத்தவநித்தங்காணப்பட்ட என்றுலென்றதற்கு, 'குடம் ஆக்கமும் அழிவும் ஒருங்குடையது அதுபோல'எனத் திட்டாந்தவுருப்புக்கூறினுல் எனப் பொருளுரைத்துக்கொள்க. அந்நுவயம்தெரியாதாகும் என்றது - அந்நுவயவியாத்தி புலப்படாதாதலால் இது அநந்நுவயமென்னும் திட்டாந்தப்போலியாமென்றவாறு.

இதனை மறைஞானதேசிகருரையுள்ளும் "இந்தவேதுவுக்குத்தானே (மனது அநித்தியம்; மூர்த்தமாதலினுல் என முன் சொல்லப்பட்ட ஏதுவுக்கே) 'கடம்போல' என்கிறதிட்டாந்தத்திலே யாதொன்றுமூர்த்தம் அது அநித்தியம்என்ற(வியாத்திவாசகம்கூறிய) விடத்தல்லது வியாத்திதோன்றுதபடியினுல் (இது அவ்வியாத்தியபிதானமும்) என்னுங்கருத்தான் விளக்கியிருக்குமாறுகாண்க. இது சிவாக்கிரயோகிகளுக்கும் சிவஞானமுனிவர்க்கும் உடம்பாடன்று.

இங்குக்கூறிய வியாத்திவாசகமில்லாவிடினும் வியாத்தி குறிப்பாற்கொள்ளக்கூடுமெனக்கொண்டு, சிவஞானமுனிவர் இதனைத் திட்டாந்தப்போலிவகையுட் சேராதொழித்து, இதற்கீடாக, சொரூபமுள்ளதாயிருப்பதொன்றே பரனுக்கு உடம்பாடில்லதாயிருக்குமாயின் அதுபற்றி அதனை. "சொரூபமுண்மைபரனுக்குடம்பாடில்லாதது"எனப்பெயர்கொடுத்து வேறுபடுத்தி, ஆசிரயகீனத்தின்வேறான ஒரு திட்டாந்தப்போலியாக்கினர்.! அதை மறைஞானதேசிகர் ஆசிரயகீனத்துள்ளடக்கினர்.

உண்மையாகநோக்குங்கால்,"மறைஞானதேசிகர்கூறிய "அவ்வியாத்தியபிதானம் என்பதற்கு வியாத்திவாசகங்கூறுதற்குப் பொருந்காதவொன்றைத் திட்டாந்தமாகக்கூறுவது என்றும், இதன் பரியாயமாகவே மணிமேகலையிற்கூறிய 'அநந்நுவய' மென்பதற்கு அந்நுவயவியாத்திவாசகங்கூறுதற்குப் பொருந்தாதவொன்றைத்திட்டாந்தமாகக்கூறுவதுஎன்றும் பொருள்கொண்டு, குடம அநித்தியம்; பெயருடைமையால்; படம்போலும். எனவுதாரணங்காட்டுதல் பொருந்தும்.



இங்குக்காட்டிய திட்டாந்தமாகியபடம், சாத்தியத்தின் மறுதலையாகிய நித்தியப்பொருளில்வியபிசரிக்கிற பெயருடைமைஎன்னும் ஏதுவையுடையதாயிருத்தலால், "யாதுயாதுபெயருடையது அது அது அநித்தியம்" என வியாத்திவாசகங்கூறுதற்குப் பொருந்தாதிருப்பதுகாண்க.சிவஞானமுனிவர்கருத்துக்கும் இஃதிணங்கியதென்பதை, விபரீதவியாத்தியபிதானத்துக்கு அவரிட்டபெயர்கொண்டு காட்டப்படும் உதாரணத்தாலும் விளக்கத்தாலும் அறியலாம்.

௬. விபரீதவியாத்தியபிதானம் என்றது விபரீதமாகக்கூறும். அந்நுவயவியாத்திவாசகத்தையுடைய திட்டாந்தக்கூற்று என்றவாறு. விபரீதம் - தட்டுமாறல். அது, மலைநெருப்புடைத்து; புகையுடைமையால். என்னுமிடத்து, யாதுயாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து; என ஏதுப்பெயர் முன்னும்சாத்தியப்பெயர்பின்னுமாகக்கூறவேண்டிய முறையேகூறுது, யாதுயாதுநெருப்புடைத்து அது அது புகையுடைத்து பாகசாலைபோல எனச்சாத்தியப்பெயர் முன்னும் ஏதுப்பெயர்பின்னுமாகத் தட்டுமாறிக்கூறித் திட்டாந்தங்காட்டுவதாம். இப்படிக்காட்டின் வியாத்தியுணர்வுதோன்றுமையாலிதுவும் திட்டாந்தப்போலியாமென்பது கருத்து.

இதனை மணிமேகலையுள், 'விபரீதாந்நுவயம்'என வழங்குப. அது வருமாறு:—

(29, 394) விபரீதாந்நுவயம்வியாபகத்துடைய
அந்நுவயத்தாலேவியாப்பியம்விதித்தல்
சத்தம்அநித்தங்கிருத்தத்தால்எனின்
யாதொன்றுயாதொன்றுகிருத்தம்அதநித்தமென
வியாப்பியத்தால்வியாபகத்தைக்கருதாது,
யாதொன்றுயாதொன்று அநித்தமதுகிருத்தமென
வியாபகத்தால்வியாப்பியத்தைக்கருதல்
அப்படிக்கருதின்,வியாபகம்வியாப்பியத்தை
இன்றியும்நிகழ்தலின்விபரீதம்."

என்பதாம். வியாப்பியம் - ஏகதேசத்திலிருப்பது. (அது இங்கு ஏதுவாம்) வியாபகம் - அதிகதேசத்திலிருப்பது (அது இங்கு சாத்தியமாம்) இங்கு அநித்தமாதல்சாத்தியம். அது கிருத்தமாகிய குட

முதலியவற்றினும் அகிருத்தமாகிய மின் முதலியவற்றினு முண்மையால் அதிகதேசத்திலிருப்பதாயிற்று. இங்கு கிருத்தமாதல் ஏது; அது அநித்தமாகிய மின் முதலியவற்றிலின்றிக் குடமுதலியவற்றின் மாத்திரமுண்மையால் ஏகதேசத்திலிருப்பதாயிற்று. ஆகவே சாத்திய நிலைக்களத்தின் ஏகதேசத்திலிருப்பதாகிய ஏதுவான கிருதகமாதலைக்கொண்டு அநித்தமாதலைக்காட்டாது வியாபகமாய் அதிகதேசத்திலிருப்பதான அநித்தமாதலைக் கொண்டு கிருத்தமாதலைக்காட்டினமையால் இது விபரீதம் (மாறுதலுடையது) ஆயிற்றெனக்கொள்க.

இது மறைஞானதேசிகருரையுள் மனது அநித்தியம் மூர்த்தமாதலின் என்னும ஏது சாத்தியங்களுக்கே யாதொன்று மூர்த்தம அது அநித்தியம் என்று வியாப்பியமாகிய ஏதுவைப்பிடித்து வியாத்தி சொல்லாமல், இதற்கு விபரீதமாக, யாதொன்று அநித்திய அது மூர்த்தம் என்று வியாபகமாகிய சாத்தியத்தைப்பிடித்து வியாத்திசொல்லுகையினாலிது விபரீதவியாத்தியபிதானமுமெனவறிக. எனக்குறிக்கப்பட்டது.

இத்திட்டாந்தப்போலியைச் சிவஞானமுனிவர், "வியாத்திவாசகத்தை முறைபிறழக்கூறலாகிய சொற்குற்றமுடையதாகக்கொள்ளாது பொருட்குற்றமுடையதாமாறு செயற்கையானாகிய வியாத்தியுடையதென்றார். அதாவது செயற்கையையுடைய ஏதுவைக் கொண்டு வியாத்திகாட்டும்திட்டாந்தம் என்பதாம். இதற்குதாரணம். மலை புகையுடைத்து; நெருப்புடைமையால். என்னும ஏதுவில் யாது யாது நெருப்புடைத்து அது அது புகையுடைத்து என வியாத்தி வாசகம் கூறுதற்கு(ச்சிவக்கவெந்தவிரும்பின்கண் நெருப்பிருக்கப் புகையின்றி)ப் பொருத்தமில்லாமல் யாது யாது ஈரவிறகுடன் கூடிய நெருப்புடைத்து அது அது புகையுடைதது என ஈரவிறகின் கூட்டமாகிய செயற்கையோடுகூடிய வியாத்தியே கூறக்கிடப்பது காண்க.

இவரிதனை வியாப்பிய வியாபகங்களை மாறிக்கூறும் சொற்பிழையாகக்கொள்ளாது உபாதியுடைய பொருட்பிழையாகக் கொண்டமையால் இதனையொத்த அவ்வியாத்தியபிதானமும் கூற்றாற்கூற வேண்டியதான அந்நுவயங்கூறாதுவிட்ட சொற்பிழையெனக்கொள்ளாது அந்நுவய வியாத்திவாசகம் சொல்லுவதற்கியலாத பொருட்பிழையெனக் கொண்டாரென்பது பொருத்தமுடைத்தாகும்.

(தொடரும்.)

பத்திராதிபர்.

உ

கணபதி துணை.

# சரீரத்தியல்பு.

* அமிழ்தினுமினிய தமிழறிவுடைய அன்பர்களே, இம்மானுட சரீரத்தினியல்பினைத் தெரிந்தமட்டுங் கூறுகின்றதை விருப்பமுற்றுக் கேட்கவேண்டும்.

"பூத்தநீராடிய நாண்முதலாகப்பன்னிருநாட்பூவைமார்க்கு
வாய்த்தகருவுறுங்காலமாதலினலந்நாளுண்மகமேமூலம்
பாத்தசீர்விரததினந்தனக்காகாநாள்பஞ்சபருவமெல்லா
நீத்துநூல்விதித்ததினம்புணரானேற்கருவொன்றுநீக்கினனும்"

எனத்திருவானைக்காப்புராணத்திற்கூறியவாறு மாதர் இருதுவாகி நீராடியநாண்முதலாகப்பன்னிருநாளுங் கருப்பமுண்டாகு நாளாம், அந்நாட்களிலே சுதினமறிந்து நாயகன் மனைவியைக்கூட வேண்டும். நம்பியகப்பொருளிலும இவ்வாறே "பூத்தகாலை புனையிழை மனைவியை-நீராடியபின்னீராறுநாளுங்-கருவயிற்றுறூஉங்காலமாதலிற்-பிரியப்பெறாஅன்பரத்தையிற்பிரிவோன்" எனக்கூறுமாறு காண்க. தனக்காகாநாள்-தான்பிறந்தநாளும், அதற்குப்பத்தாநாளும், அதற்குப்பத்தாநாளுமாம்; பஞ்சபருவம்-மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, பூரணை, அமாவாசை, அட்டமி என்பனவாம். இப்பன்னிரு நாளிலும்,

"பூவையேயனையார்தம்மிற்பூத்தநாண்முதனான்கின்
மேனீடார்புணர்ச்சி பின்னைவிரும்புநாள்பன்னிரண்டி
லேவுறுகருப்பமுண்டாமிங்கிதிலிரட்டிநாளாண்
பாலினதொற்றைநாளேற்பெண்ணெனப்பகருநீயே"

என உள்ளமுடையானிற் கூறியவாறு ஒற்றித்தநாளிற் கூடிற் பெண்பிறக்கும், இரட்டித்தநாளிற் கூடில் ஆண்பிறக்குமென்றறிந்து கூடவேண்டும். இருதுவான நாண்முதலாக நான்குதினமும்நாயகியை நாயகன் கூடலாகாது, கூடினால், முதனாள் நாயகனுக்கும், இரண்டாநாள் மனைவிக்கும், மூன்றுநாட்கருப்பத்துக்கும், நான்காநாட்பிறந்த

* இது, இராமநாதபுரஞ்சமஸ்தானத்தைச்சேர்ந்த அபிராமநகரம் வித்யாபாஸ்கர செந்தமிழ்ச்சங்கத்தில், நான்காவது ஆண்டு விழாக்கொண்டாட்டத்தில் அக்கிராசனாதிபதியாயிருந்தபோது கூறியபிரசங்கம்.

பிள்ளைக்குங் கேடுண்டாம் என விதானமாலையென்கிற சோதிட நூலிற் கூறியிருப்பதனால், "பூத்தநாண்முதனான்கின்மேவிடார் புணர்ச்சி" என்றார்.

இனி ஆடிமாதத்திலும் நாயகியை நாயகன் கூடலாகாதென்பர். "ஆடிக்காலத்தாகாதாகுங்-கூடற்றென்னன்கொற்றப்புயமே" என்னுமோர் பழஞ்செய்யுள் வெறிவிலக்கற்றுறையில்வைத்துச் சிலேடையாகக்கூறியவாறு காண்க. கூடினாற் சித்திரைமாசம் பிள்ளைபிறப்பதனாற்பிதாவிற்காகாதென்பர்.

இவ்வாறறிந்து கூடியகாலத்துச்சேர்ந்த சுக்கிலசுரோணிதங்கள் முதன்மாதந்தாமரையினீர்போலிருக்கும். ௨ ஆமாதம் ஒரு கட்டியாம், ௩ ஆமாதம் அங்கங்கள் முளைக்கும், ௪ ஆமாதம் எலும்பு பற்றும், ௫ ஆ மாதம் தோல்பற்றும், ௬ ஆ மாதம் உரோமமுளைக்கும், ௭ ஆ மாதம் ஆசையுடன் அறிவுண்டாகும், ௮ ஆ மாதம் பசிதாகமுண்டாம், ௯ ஆ மாதம் அசைந்துபெயர்ந்து கிலேசமடையும், ௰ ஆ மாதம் பூமியிற் பிறக்கும், இவ்வாறு "செறிவுறுநீராந்திரளுமுளைபெறுமென்புபற்றுங்-குறியுறுதோலாமயிருதிக்குங்கூறுமார்வமுடனறிவுறுந்தாகமசையுமவனியிடைப்பிறக்கு-நெறியுறுமாதநிரையறிநல்லநிரைவளையே" என விதானமாலையென்னுஞ் சோதிடநூலிற் கூறியிருத்தல் காண்க.

இவ்வாறு பிறந்த சரீரத்திலே உயிரெவ்வாறு வந்து தங்கியிருக்கின்றதென்றால்? காய்கனியாதியவுணவுகளினிடமாகச்சென்று பிதாவின் வயிற்றிலிருமாதமிருந்து பின் புணர்ச்சிக்காலத்திற் சுக்கிலத்தினிடமாகச்சென்று மாதாவின்வயிற்றிற் கருப்பத்திற்சார்ந்து பத்துமாதமிருந்து உண்டாகிய வுடம்பிலே தங்கியிருக்கின்றதென்பர்.

மாதக்கணக்கிற்குப் பத்துமாதமெனக்கூறினும், நாட்கணக்கிடும்போது ௨௱௭௰௨ நாளே மாதாவயிற்றிலிருந்து பின்பிறக்குமெனச் சோதிடர்கள் கூறுகின்றார்கள். உண்டவுணவின் சாரம் ஒருகூறு மலமாக்கழியும், இருகூறு உடம்பிலே வர்த்திக்குமென ஞானாமிர்தநூலார் கூறுவர்.

இச்சரீரத்தில் ஒன்பதுதுவாரமெப்போதுந்திறக்கப்பட்டிருப்பினும் உயிர் அத்துவாரங்களின்வழியிலாயினும் போகாமற் சரீரத்திற் கலந்திருக்கின்றது ஓராச்சரியமாம். ஏனெனில்? உயிர் தான்செய்த



வினையையனுபவிக்கவெடுத்தசரீரமாதலால், அவ்வினையை அனுபவிக்குமளவுஞ் சரீரத்திலிருந்து பின்பு நீங்கவேண்டுதலாலென்க. "வினைப்போகமேயொருதேகங்கண்டாய்வினைதானொழிந்தாற்-றினைப்போதளவுநில்லாதுகண்டாய்" எனப்பட்டினத்தடிகள் கூறியருளியது காண்க.

இவ்வுயிரியல்பையும் அவ்வுயிர்வகையையும் இப்போதெடுத்துக்கூறின் மிகவிரியுமாதலாலதனைப்பின்னொருகாலத்திற்பேசவேண்டும். இனிப் பஞ்சபூதபரிணாமமேயிச்சரீரமாமென்பர் அவை வருமாறு, அருவமாகியிருக்கின்றசூக்குமபஞ்சபூதங்கள் தத்தந்தன்மை நீங்கி விகாரப்பட்டு மண், தீ, காற்று, ஆகாயம் எனத் தூலபஞ்சபூதங்களாம். மண் உடம்பாயும் நீர்வாயாயும் (நாவாயும்) தீக்கண்ணாயும், காற்று மூக்காயும், ஆகாயஞ்செவியாயுநின்று பஞ்சப்பொறிகளாம் - இப்பொறிகடோறும் விநியோகிக்கப்பட்ட புலன் சுவைமுதலைவகைப்படும். அவை மண்ணாய் உடம்பு ஊறாயும், (பரிசமாயும்) நீரால் வாய் (நா) சுவையாயும், தீயாற்கண்ணொளியாயும், காற்றால் மூக்கு நாற்றமாயும், வானாற் செவி ஓசையாயும் வந்து மருவிநிற்கும். இனி அத்தூலபஞ்சபூதங்கள் ஒவ்வொன்றைந்தாய் இருபத்தைந்து வகையாம்-மண்ணின் பகுதி நரம்பு இறைச்சி என்பு மயிர் தோல் எனவைந்தாம்; நீரின் பகுதி நீர் மூளை சுக்கிலம் நிணம் உதிரம் எனவைந்தாம்; தீயின் பகுதி பசிசோம்புமைதுனம் காட்சி நீர்வேட்கை எனவைந்தாம்; காற்றின்பகுதி போதல் வருதல் நோய் கும்பித்தல் பரிசம் எனவைந்தாம்; ஆகாயத்தின் பகுதி வெகுளி மதம் மானம் ஆங்காரம் உலோபம் எனவைந்தாம். இத்தூலபஞ்சபூதங்கள் இருபத்தைந்துவகையாகிச் சரீரமாமெனவறிக. இச்சரீரத்துள்ளே தசவாயுக்களுந் தசநாடிகளுமுள்ளன; அவை வருமாறு, பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் என வாயுக்கள் பத்தாம்; இடை பிங்கலை சுழுமுனை காந்தாரி அத்தி சிங்குவை சங்கினி பூடா குகு கன்னி அலம்பு என நாடிகள் பத்தாம்; மூலாதாரத்தெழுபத்தீராயிரநாடிகளும் பீர்க்கங்கூட்டின் மூன்று கண்கள் போல இடைபிங்கலை சுழுமுனையென்னு மூன்று நாடிகளாமெனவறிக. நாடிகள் எழுபத்தீராயிரத்திலுந் தசநாடிகள் பிரதானமெனவறிக. இந்நாடிகளிற் சில பெயர்களை அத்தத்துவக்கட்டளைகளில் வேறுபெயர் கூறுவர். நடுநின்ற சுழுமுனையொழிய

மூக்கினிடமாகவும்வலமாகவு நிற்கும் இடை பிங்கலையென்னுமிரண்டு நாடிகளானும் மூலத்தினிற்கும் பிராணவாயு மேனோக்கியேறி வெளியே புறப்பட்டுப் பன்னிரண்டங்குலியளவு சென்று நாலங்குலிதேய்ந்து உள்ளே எட்டுவிரலடங்குகின்றதெனவறிக. காஞ்சிப்புராணஞ் சனற்குமாரப்படலத்தில், ஒரு நாளைக்கு இருபத்தோராயிரத்தறுநூறு சுவாசமியங்குகின்றதெனக் கணக்கிட்டிருக்கின்றனர். அபானவாயு மலமூத்திரங்களைப் பெய்விக்கும். உதானவாயு கண்டத்தினிற்கும். வியானவாயு போக்குவரவுசெய்நியங்கப்பண்ணும். சமானவாயு அறுவகைச்சுவையும் அன்னத்தையும் பிரித்து எழுவகைத்தாதுவின்கண்ணுங்கலப்பிக்கும். எழுவகைத்தாதுக்களாவன, "இரதமுமுதிரமுமென்புந்தோலுந்-தசையுமூளையுஞ்சுக்கிலமுமென்றிவை - யெழுவகைத்தாதுவெனப்பெயர்பெறுமே" எனப் பிங்கலநிகண்டிற் கூறியவாறு காண்க. இரதம்-உமிழ்நீர். கூர்மன் இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும். நாகன் விக்கல் செய்யும்-கிருகரன் கோபத்தைப்பண்ணுவிக்கும்-தேவதத்தன் உடம்பெரிவைப்பண்ணுவிக்கும். தனஞ்சயன் பிராணன் போனபின்னும் உடம்பை விடாதே நின்று மூன்று நாள் உச்சந்தலையிற் பிற்கூற்றிலே மூன்று நெற்கிடை வெடித்துப்போகுமென வறிக.

இவ்வாறாகிய தூலவுடம்பைக்கொண்டு இருவினையையுந் தன்னகத்தடக்கி அவ்வினையின்பயனையநுபவிக்க வுயிர்பிறக்குமெனவறிக.

இச்சரீரத்தினளவு தன்கையாலே தொண்ணூற்றாறங்குலமாம். மேலே நாற்பத்தேழரை அங்குலமுங் கீழே நாற்பத்தேழரையங்குலமுநீக்கி நடுநின்ற ஓரங்குலம் மூலாதாரம் என்க. இவ்வாறு சிலப்பதிகாரவுரையிற் கூறியிருக்கின்றார். இந்தமூலாதாரமுதலாறாதாரமும் அன்னமயகோசமுதலைங்கோசமும், ஆமாசயமுதலைந்தாசயமுதலாயினவு மிச்சரீரத்துள்ளனவென ஞானாமிர்தம் அ-ஆவது அகவலிற்கூறுதல் காண்க. இத்தூலசரீரத்தைத் தத்துவக்கட்டளைகளிலே சிறுபான்மைபேதமுறக் கூறியிருக்கின்றார்.

இத்தூலசரீரத்துக்கு முதற்காரணமாயுள்ளது சூக்குமசரீரமாம். "தூலமாமுருவினுக்குச்சூக்குமமுதல்" எனச் சிவஞானசித்தியாரிற் கூறியவாறுகாண்க. அச் சூக்குமசரீரத்துக்கு முதற்காரணம மூலப்பிரகிருதியென்பர்; இவற்றின்வகையெல்லா மீண்டுரைப்பின் விரியுமெனவஞ்சிக்கூறவில்லை. இன்னும் பரசரீரமுமுண்டென்பர்.



இத்தூலசரீரமிறந்தால் உயிர்கள் பின்பென்செய்யுமென்னில்? நன்றுகேண்மின் இத் தூலவுடம்பு கழிந்தபின் அதனுடனேதானுங்கழியாமல் நிலைபெற்றிருக்கின்ற சூக்குமவுடம்பினின்று யாதனாசரீரமுண்டாகும், வினைப்பயனையநுபவித்தற்குரிய அந்தயாதனாசரீரமாகிய வெவ்வேறுடம்புகளை உயிர்கள் கடவுளாணைசெலுத்தப்பற்றிக்கொண்டு அச்சரீரத்துடன்சென்று சுவர்க்கநரகங்களிலே இன்பதுன்பங்களையநுபவித்துப், பின்பு வினையின்சேட மநுபவித்தற்காகச் சூக்குமவுடம்போடு நிலத்திற்சென்று கருப்பாசயத்தையடைந்து பிறக்குமெனவறிக. இவ்வாறே சிவஞானசித்தியாரில் "பூதனாசரீரம் போனாற்புரியட்டரூபந்தானே-யாதனாசரீரமாகியின்பதுன்பங்களெல்லா - நாதனாராணையுய்க்கநரகொடுசுவர்க்கந்துய்த்துத் - தீதிலாவணுவாயோநிசேர்ந்திடுஞ்சீவனெல்லாம்" எனக்கூறியவாறு காண்க. புரியட்டரூபம்-சூக்குமவுடம்பு, சூக்குமவுடம்பாவது, சூக்குமபஞ்சபூதமெனப்படுந்தன்மாத்திரைகளைந்தும், மனம் புத்தி யாங்காரமுமாமென்க. இக்கவியில், அணு என்றது நுட்பமாகிய சூக்குமவுடம்பெனக்கொள்க.

இவ்வாறு முன்வினைப்பயனையநுபவிக்கச் சரீரங்களையெடுத்தவுயிர்கள் அநுபவிக்கும்போது பின்னும் வினைகளையீட்டிக்கொள்வதனாலே பின்னுமச்சரீரங்களையெடுத்துக் கறங்குங்கொள்ளிவட்டமுஞ் சுழலுவதுபோலச் சுழலுமெனவறிக. "மற்றுயிர்க்குயிர்க்குவேறாணலிபெண்ணெனும்வழக்கஞ்-சற்றுமில்லை" எனக் காஞ்சிப்புராணத்திற் கூறியவாறே அவ்வுயிர்க்கு ஆணுயிர், பெண்ணுயிர், அலியுயிர் என்னும்பேதமில்லை, இம்மூன்றுபேத முடம்பின்வகைபற்றிச்சொல்லப்படுமெனவறிக.

ஞானாமிர்தநூலில் கசூ-ஆவது அகவலில் ஆன்மாவானது, ஆன்மாவினால்வருகிறதுக்கமும், பூதவிகாரப்பொருள்களால்வருகிற துக்கமும், தெய்வத்தால்வருகிறதுக்கமுமாகிய ஆன்மிகம் பௌதிகம் தைவிகமென் மூவகைத்துக்கமுமெய்தியிருக்குமென விரிவாகக்கூறியிருக்கின்றார். அங்ஙனமெய்தியிருப்பதற்கு, இச்சரீரத்தையொரு வீடாக, கூ-ஆவது அகவலில், இரண்டுகாலைநாட்டி, இரண்டுகையைவைத்து, முதுகந்தண்டென்னுமுகட்டிலேபழுவெலும்பென்னுங் கழியைச் சுவராகநிறைத்து, நரம்பெனுங்கயிற்றினாலேகட்டிக், கழிச்சுவரிலே மாங்கிசமென்னு மண்ணைப் பூசி, மயிருடையதோலான்

மேய்ந்து, இந்திரியங்களாகிய ஐந்துசாளரங்களையும்வைத்து, மேலே மணிக்குடமாகிய தலையையுங் கூந்தலாகியகொடியையும் பொருத்தி யிருக்கின்றதெனக் கூறினார். இவ்வாறே திருமறைக்காட்டுத் தேவாரத்திலுந் திருநாவுக்கரசுநாயனார் "கால்கொடுத்திருகையேற்றி" என்னுஞ்செய்யுளிற்கூறியிருக்கின்றார். இவ்வாறாகிய சரீரத்தியல்பை யறிந்தவனே ஆன்மாவாகிய தன்னையறிவான், அங்ஙனந்தன்னையறிந்தவனே தன்னுடன் கலந்திருக்கின்ற தலைவனையறிவான் என்றறிக. தன்னையறியான் றலைவனையுமறியான் என்னும் பழமொழியுங்காண்க. திருக்குறளிலும் "சுவையொளியூறோசைநாற்றமென்றைந்தின் - வகைதெரிவான்கட்டேயுலகு" எனச்சுருக்கிக்கூறியிருத்தல்காண்க.

இவ்வாறு ஆன்மாவிற்கோர் வீடாயிருக்கிற இச்சரீரமே எல்லாச்சரீரங்களிலுமேலானதென்றும் மிகவுமரியதென்றுஞ் "சிவஞானசித்தியாரில்" "அண்டசஞ்சுவேதசங்களுற்பிச்சஞ்சராயுசத்தோ - டெண்டருநாலெண்பத்துநான்குநூறாயிரத்தா- யுண்டுபல்யோனியெல்லாமொழிந்துமானுடத்துதித்தல்- கண்டிடிற்கடலைக்கையானீந்தினன்காரியங்காண்" எனக்கூறியிருக்கின்றார். "பரவைவெண்டிரைவடகடறபடுநுகத்துளையுட் - டிரைசெய்தென்கடலிட்டதோர் நோன்கழிசிவணி - யரசவத்துளையகவயிற்செறித்தெனவரிதாற் - பெரியயோனிகள்பிழைத்திவண்மானுடம்பெறலே" எனச்சீவகசிந்தாமணியினுங் கூறியிருக்கின்றார்.

இம்மானுடசரீரமெடுக்குங்கால், வேதவழக்கமுடையநாட்டிலே பிறப்பதுமிக்க புண்ணியத்தாலுண்டாமென்றுங் கீழான சாதியை விட்டுத் தவஞ்செய்தற்குரிய வுத்தமசாதியில்வந்து பிறந்து புறச்சமயங்களிலேசெல்லாம லுத்தமசமயத்திற்குரிய நன்மையுண்டாகுதலரிதென்றும் விளங்க "நரர்பயிறேயந்தன்னினுன்மறைபயிலாநாட்டில் - விரவுதலொழிந்துதோன்றன்மிக்கபுண்ணியத்தானுகும்- தரையினிற்கீழைவிட்டுத்தவஞ்செய்சாதியினில்வந்து - பரசமயங்கட்செல்லாப்பாக்கியம்பண்ணொணுதே" என்ச் சிவஞானசித்தியாரிற் கூறியிருக்கின்றார்.

இவ்வாறருமையாகக்கிடைத்த இம்மானுடசரீரத்தாலான்மாக்களரியமுயற்சிசெய்தடையவேண்டுவனவாகிய பயன்கள் அறம்பொருளின்பம்வீடெனநான்காம். இந்நான்கின்வகையெல்லா முறைப்பின்



மிகவிரியுமாதலாற் பின்னொருகாலத்திற் கூறக்கருதியிங்கேயிப்போது கூறவில்லை.

ஆதலால் அன்பர்களே, "உண்டதேயுண்டுமுடுத்ததேயுடுத்து முரைத்ததேயடுத்தடுத்துரைத்துங் - கண்டதேகண்டுங்கேட்டதே கேட்டுங்கழிந்தனகடவுணாளெல்லாம்" எனச்சோணசைலமாலையிற் கூறியவாறு காலத்தைவீணாகக்கழித்துவிடாமல், "விண்ணிடுவில்லும் புனன்மேற்குமிழியுமின்னுமென - மண்ணிடைத்தோன்றியழியுமிக்காயத்தைமாய்விலதென்-றெண்ணிடுமெண்ணந்தவிர்த்து" முற்கூறிய நான்கினையும்விரைந்துதேடிப் பெற்றுக்கொள்ளவேண்டும், "கணமதனிற்பிறந்திறுமிக்காயத்தின்வரும்பயனை - யுணர்வுடையார்பெறுவருணர்வொன்றுமிலார்க்கொன்றுமிலை" எனத் திருவிளையாடற்புராணத்திற் கூறுமாறுணர்க.

இச்சரீரமுதலியவற்றை நிலையாயிருக்குமென்றெண்ணிக் காலங்கழித்தொருபயனுமின்றிப்போயினார் அனந்தங்கோடியாராகும். "நடலைவாழ்வுகந்தென்செய்தீர்நாணிலீர்- சுடலைசேர்வதுசொற்பிரமாணமே-கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டா- லுடலினார்கிடந்தூர்முனிபண்டமே." எனத்திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்திற்கூறியருளினார்; இங்ஙிலே, "சுடலைசேர்வதுசொற்பிரமாணமே" என்பதைச் சுடலைசேர்வது ஆகமப்பிரமாணமன்று காட்சிப்பிரமாணந்தானேயிதற்குச்சந்தேகமில்லையே எனப் பொருள்படக்கூறியிருத்தலால், நிலையில்லா இவ்வுடலை நிலையாகவெண்ணிக்காலங்கழித்து அழிவெய்துவது புல்லறிவாகும்; "ஆக்கையுமாயிரத்தெட்டண்டமுமேநிலையாத்-தாக்கியழிந்தான்சூரன்சோமேசா - நோக்கியிடி-னில்லாதவற்றைநிலையினவென்றுணரும்புல்லறிவாண்மைகடை" எனச்சோமேசர் முதுமொழிவெண்பாவிற்கூறியவாறு காண்க.

இந்தச்சரீரமழிந்தால், இனிவருஞ்சரீரமிதுதானோ, "புல்லாகிப் பூடாய்ப்புழுவாய்மரமாகிப், பல்விருகமாகிப்பறவையாய்ப்பாம்பாகி" யின்னும்பலவாகிவருஞ்சரீரமோதெரியாது ஆதலால், "ஒன்றேசெய்யவும்வேண்டுமொன்றும் - நன்றேசெய்யவும்வேண்டுநன்றும் - இன்றேசெய்யவும்வேண்டுமின்றும் - இன்னேசெய்யவும்வேண்டும்" "புன்னுனிமேனீர்போனிலையாமையென்றெண்ணி-யின்னினியேசெய்கவறவினை" என்றபடி! இச்சரீரமிருக்கும்போதே இதனாலாம்பயன்களை

விரைந்துசெய்யவேண்டும். அநேகர்கள் இச்சரீரத்தையே பொருளாகக்கருதி உடுப்பன பூசுவன அணிவனவாகிய பொருள்களைக்கொண்டு அலங்கரித்து மகிழ்ந்து போதுபோக்குகின்றார்கள்; "தக்கோலந்தின்றுதலைநிறையப்பூச்சூடிப் - பொய்க்கோலஞ்செய்யவொழியுமோ" என நாலடியாரிலும், "நோக்கதனிற்பீளையிருசெவிகளவற்றினுங்குறும்பிநாகர்வாயெச்சின் - மூக்கதனிற்சளிதலையிற்பேன்மேவர் வைமலசலங்கண்மூளுநாற்றம் - போக்கவோர்நாள்கழுவாவிடிலழுக்குமிகத்திரண்டுபுழுத்துநாறு - மாக்கமிலாத்தேகமிதையழகென்னச்செருக்கலறியாமையாமே" என நீதிநூலினுங்கூறியவாறுணராதவரேயாம். அறிவுடையோர் அவ்வலங்கரிப்பெல்லாங்கடவுளுக்கு மவனடியார்களுக்குஞ்செய்துஞ் செய்வித்துங்கண்டு பேரானந்தமுறுவார்கள்.

செவ்வாய்க்கிழமை மங்களவாரமெனப் பெயர்பெற்றிருப்பது போலப் பொய்யாயிருந்து மெய்யெனப் பெயர்பெற்றிருக்கிற இச்சரீரத்தையும் இச்சரீரத்தைநம்பியிருப்போர் சரீரத்தையுங்காப்பதற்கே பலமுயற்சிசெய்து காலமெல்லாங்கழித்துவிடாமல் அம்முயற்சிகளையியற்றும்போதே "கள்ளக்காதலனிடத்தன்புகலந்துவைத்தொழுகு, முள்ளக்காரிகைபோல்" இச்சரீரத்தாலாம்பயன்களையுங் கருத்திலமைத்துவைத்துத் தேடிப்பெற்றுக்கொள்ள வேண்டியது நல்லறிவுடையோர்கடனாகும்.

"வாழ்த்தவாயுநினைக்கமடநெஞ்சுந்
தாழ்த்தச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்துமாமலரிட்டுத்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே"

"கற்றுக்கொள்வனவாயுளநாவுள
இட்டுக்கொள்வனபூவுளநீருள
கற்றைச்செஞ்சடையானுளனாமுளோ
மெற்றுக்கோநமனான்முனிவுண்பதே"

சுபம்.

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய,
ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

---

# மதுரைத்தமிழ்ச்சங்கம்.

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷை.

## பி. ஏ. வகுப்பு.

பரீக்ஷகர்—இ. வை. அனந்தராமையர்

### இலக்கியம்.

1920௵ மார்ச்சு௴ 6உ சனிக்கிழமை பகல் 10—1.

[அம்சம்—120.]

I. (1) முல்லைப்பாட்டின் தலைவன் இன்னனென்பதையும் அவன் வருதற்கு இன்ன காலத்தைக்குறித்து இன்னதற்குப்பிரிந்தானென்பதையும் ஆதாரத்துடன் எழுதுக.

(2) வருணாச்சிரம ஒழுக்கம் பண்டைக்காலத்தே உண்டென்பது இப்பாட்டின் எப்பகுதியால்தெரிகின்றது?

(3) இப்பாட்டில் முல்லைக்கருப்பொருள்களுள் எவை கூறப்பெறவில்லை?

(4) விரிச்சியோர்த்தலென்றால் என்ன?

II. (1) பண்டைக்காலத்தில் இந்நாட்டில் எவ்வெத்தேவாலயமுண்டென்று சிலப்பதிகாரத்தால் விளங்குகிறது?

(2) (a) கொடுகொட்டி, குடம், மரக்கால், இவ்வாடல்கள் எவ்வெவரால் எந்தெந்தக்காலத்தில் எங்கெங்கே ஆடப்பட்டன?

(b) இப்பெயர்க்காரணங்கள் யாவை?

(3) அடியிலுள்ளவற்றைச்சந்தர்ப்பங்காட்டி விளக்குக.

(1) "யாமொருநாளாடுதும்"

(2) "இலம்பாடுநாணுத்தரும்"

(3) "உய்திக்காலமுரையீரோ"

(4) பாசண்டச்சாத்தன் வரலாறு யாது?

(5) மழையின்மைக்கு அறிகுறியாகச் சிலப்பதிகாரத்திலும் புறநானூற்றிலும் கூறப்பட்டுள்ள ஒன்று எது?

III. (1) (1) அறம்பொருளின்பங்களுள் அறம் சிறந்தது,

(2) ஈவாருங்கொள்வாருமில்லாதவானம்,

(3) அரசர் புகழின்பொருட்டே வெல்லவிரும்புவர்,

(4) அரசர் காட்சிக்கெளியராயிருக்கவேண்டும்:

என்ற கருத்துக்கிசைந்தவற்றுள் எந்த இரண்டினுக்கேனும் ஆதாரமானபகுதிகளைப் புறநானூற்றிலிருந்து எடுத்தெழுதுக.

(2) (1) "வேந்தனொடு.................. டலைத்தனையென்பது நாணுத்தகவுடைத்தே" (2) "நோற்றோர்மன்றநின்பகைவர்" (3) வல்லராகுக கெடாததுப்பினின்பகையெதிர்ந்தோரே" தகுதியில்லனபோலத்தோன்றுமிவற்றை முன்னேபின்னே வேண்டிய சொற்களைவருவித்து அவற்றொடு சேர்த்துத்தகுதியுடையன வாக்குக.

(3) இயன்மொழி, துணைவஞ்சி இத்துறைகளின் இலக்கணமென்ன?

(4) "உய்வில்லை செய்ந்நன்றிகொன்றமகற்கு" என்பது புறநானூற்றில் எங்ஙனம் விளக்கப்பட்டிருக்கிறது?

(5) யானை யாமைகளின் எவ்வெவ்வடக்கம் மக்களின் எவ்வெவ்வடக்கத்திற்கு உவமை?

IV. (1) அடியிலுள்ளவற்றிற்குப்பொருளெழுதுக.

(1) அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொலுரைப்பான் பொறை.

அவ்விய நெஞ்சத்தானாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

(2) 'இலனென்னு மெவ்வமுரையாமையீதல்' என்பதற்குமூன்று பொருளெழுதுக.



(3) 'குடிபொன்றி', மகனெனன் மக்கட்பதடியெனல்', ஊருணி நீர்நிறைந்தற்றே': இவற்றில் கோடிடப்பெற்ற பகுதிகளுக்கு இலக்கணக்குறிப்பு எழுதுக.

(4) (1) இன்மையுளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப்பொறை.

(2) தீயினாற்சுட்டபுண்ணுள்ளாறு மாறாதே
நாவினாற்சுட்டவடு. இவை என்ன அணிகள்?

(5) (a) "கொடுப்பதழுக்கறுப்பான்சுற்ற முடுப்பதூஉம் உண்பதூஉமின்றிக்கெடும்" என்பது எந்தக்குறளில் மேற்கோளாகவந்துள்ளது?

(b) இச்சொற்பொருளமைந்த வேறுபாடல் யாது?

V. (1) (a) கொள்ளுதறீது கொடுப்பது நன்று', (2) 'அழுக்காறுடையான்கணாக்கம்போன்றில்லை': இக்கருத்தமைந்த குறள்கள் யாவை?

(b) 'அழுக்காறுடையான்கண்' என்னும் இக்குறள் திருவள்ளுவரில் எதற்கு எடுத்துக்காட்டப் பெற்றிருக்கிறது.

(2) "நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என்பது யார் யாருடைய் கருத்தைக் காட்டிலும் சிறப்புற்றிருக்கிறது?

(3) திருவள்ளுவருருவம் எங்கேயாரால் பிரதிட்டிப்பிக்கப்பெற்றதென்பர்?

VI. (1) இராமன் கழலணிந்தமை எங்ஙனம் வருணிக்கப் பெற்றிருக்கிறது?

(2) 'கன்னலின்மணவேலைகடிகைதெரிவாரும்'

A தெரிவது எப்படி?

B இது வேறெங்கே கூறப்பட்டுள்ளது?

(3) 'கைவளைதிருத்துபுகடைக்கணினுணர்ந்தாள்' இப்பகுதியால் சீதையின் எவ்வெக் குணங்கள் புலப்படுகின்றன?

(4) (1) பரசுராமன் வில்லின் வரலாறு யாது? (2) அவ்வில்லை வளைத்த இராமன் அவனைநோக்கிக் கூறியவை யாவை?

(5) 'மண்ணிடையாவரிராகவனன்றிமாதவமறத்தோமெ வளர்த்தார்' என்ற கருத்துள்ள பாடற் பகுதியாது?

(6) கம்பர்கூறிய உவமைகளுள் இரண்டை எடுத்துக்காட்டி அவற்றிலுள்ள விசேடங்களையும் குறிக்க.

VII. (1) மூவருலாவுக்குத் தலைவரான சோழர் எவ்வெக்காலத்தவர்?

(2) தஞ்சையும் கங்கைகொண்ட சோழபுரமும் இராஜதானியாயிருந்த காலங்கள் எவை?

(3) கலிங்கத்துப்பரணி திருவிசைப்பா, நன்னூல், பெரியபுராணம் இந்நூற்பெயர்களைக் காலமுறைப்படி எழுதுக.

(4) சிற்றம்பலம் பொன்வேய்ந்தவனும் பேரம்பலம் பொன்வேய்ந்தவனும் யார் யார்?

(5) (1) கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத்தலைவன் யார்?

(2) இதிலுள்ள தடையும் விடையும் என்ன?

VIII. (1) தோழி எப்போது அறத்தோடு நிற்றற்கு உரியள்?

(2) களவு எத்தனைகாலம் நிகழும்?

(3) அல்லகுறிப்படுதலென்றால் என்னை?

(4) ஊடல் புலவி துனிகளுக்கும் அம்பல் அலர்களுக்குமுள்ள வேறுபாட்டை விளக்குக.

(5) உண்மையான அன்பின் இலக்கணமென்ன?

---

## பி. ஏ. வகுப்பு.

பரீக்ஷகர்—மு. வேங்கிடசாமிநாட்டார்.

### இலக்கணம்.

1920-ஞு மார்ச்சுமீ 6உ சனிக்கிழமை பகல் மணி 2—4 வரை.

[அம்சம்—90.]

I. (1) நன்னூலில் இப்பொழுதுகாணப்படாதபொருள்யாப்பு அணிகளும் பவணந்தியார் செய்திருக்கவேண்டும் என்பதற்கு ஆதாரம் என்ன?

(2) ந, ன, ர, ற, இவ்வெழுத்துக்கள் எவ்வெம்முயற்சியால் பிறக்கின்றன?



(3) செப்பு, ஒன்பது; இவை பழைய காலத்தில் எங்ஙனம் எழுதப்பட்டனவாகும்?

II. (1) லகர ளகர மெய்களின் பின்வந்து மயங்கற்குரிய மெய்கள் யாவை?

(2) எவ்வெவ்வெழுத்துக்கள் எவ்வெச்சாரியை பெற்று வரும்?

(3) ஓரெழுத்துப்பதங்களில் பன்னிரண்டு எழுதிப் பொருள் கூறுக.

III. (1) பகுபதவுறுப்புள் சந்தியென்பது யாது? விகாரம் என்பது யாது?

(2) பெரியீர், நினைந்தக்கால், வருதும்: இச்சொற்களின் உறுப்புக்களைப்பிரித்து முடித்துக்காட்டுக.

(3) அங்கை, நாடுரி, மக்கட்குணம், வான்சிறப்பு, ஆதிபகவன், வண்டின்கால்: புணர்ச்சிகட்கு விதி கூறுக.

IV. (1) இருதிணைப்பொதுப்பெயர்கள் யாவை? இருதிணைப் பொது வினைகள் யாவை?

(2) ஆகுபெயர் அன்மொழித்தொகைகளின் இலக்கணமும் அவற்றின் வேறுபாடும் எழுதுக.

(3) சொல்லெச்சம், இசையெச்சம்: ஏவல், வியங்கோள்: இவற்றின் பேதத்தினை விளக்க.

V. (1) முற்றெச்சம், எச்சத்திரிபு, இடைப்பிறவரல், இரட்டைக்கிளவி, கருமகருத்தா, பூட்டுவிற்பொருள்கோள்: இவற்றை விளக்கி உதாரணங்கொடுக்க.

(2) 'செய்யும்' என்னும் முற்று எத்திணைபால் இடங்கட்கு உரியதாகும்? மலையாள மொழியில் இதற்கு இவ்வரம்பு உளதோ?

(3) திணை, பால், கால வழுவமைதிகளுக்கு ஒவ்வோருதாரணந்தந்து, அமைதிக்குக் காரணங்காட்டுக.

VI. (1) அகத்திய முனிவன், குலோத்துங்கச்சோழன், இவை எங்ஙனம் வருதல் சிறப்பு?

(2) தில், மன், என்னும் இடைச்சொற்கள் எவ்வெப்பொருள் குறிக்கும்?

(3) நன்னூலிற் கூறிய விதிகளில் 'பழையன கழிதல்' என்று விடற்பாலன இருப்பிற் காட்டுக.

---

## பி. ஏ. வகுப்பு.

பரீக்ஷகர்—K. G. சேஷையர் B. A., B. L. M. R. A. S.

---

### வியாசம்.

---

1920௵ மார்ச்சு௴ 6௳ சனிக்கிழமைபகல் மணி 4½—5½வரை.

[அம்சம்—30]

பின் குறித்த யாதேனுமோர் விஷயத்தைப்பற்றி ஒரு வியாசமெழுதுக:—

(1) இன்னாசெய்தாரையொறுத்தலவர்நாண நன்னயஞ்செய்து விடல்.

(2) நட்பின் சிறப்பு.

(3) தமிழ்நாட்டுப்பண்டைக்காலத்துச் சரித்திர வாராய்ச்சிக்கு முதற்றுணைக்கருவி தொன்னூற்பயிற்சி.

(4) தமிழ் வர்த்தமானபத்திரிகைகள் விளைவிக்கும் பயன்.

---



## இண்டர்மீடியேட் வகுப்பு.

பரீக்ஷகர்—அ. கந்தசாமிப் பிள்ளை.

---

### இலக்கியம்.

---

1920௵ மார்ச்சு௴ 6௳ சனிக்கிழமை பகல் மணி 10—1 வரை.

[அம்சம்—120.]

1. (a) ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், எலாதி, அறநெறிச்சாரம், பாரதம், திருவிளையாடற்புராணம்:—இவை ஒவ்வொன்றும் எவ்வித நூல்வரிசையிற்சேரும்?

(b) i. சிறுபஞ்சமூலம், எலாதி எனப்பெயர்வந்த தெதனால்?

ii. இவைபோன்ற வேறுநூல் ஒன்று கூறுக.

iii. எலாதியில் ஒவ்வொரு செய்யுளும் ஆறு பொருளை கூறுகிறதா? உதாரணத்தால் விளக்குக.

2. (a) i. வில்லிபுத்தூரர்க்கு முன்னும் பின்னும் தமிழிற்பாரதம் பாடினவர் யாவர்?

ii. இவர் நடையின் அழகு, வடமொழித்தொடரையமைத்தல் இவ்விரண்டுதாரணத்தால் விளக்குக.

(b) புன்கண்மாலை, பலபாதகரைப்பயந்தாள், வண்டிமிர்சண்பகம் இந்த அடைமொழிகளைப்பற்றி நீங்கள் எழுதவிருக்கும் குறிப்பை எழுதுக.

(c) i. ஒத்திறலென்னகுறை? ii. கைக்கொண்டாற் குழல்பற்றி iii. சொல்லின் செல்வமும் பொருளும் தூக்கி, iv. பொய்ச்சுற்றத்தாரும் பொருளோகிற்றிட்ட மொழிகள் இங்கு எப்பொருளில் வந்தன?

3. (a) காக்கைக்குக்காப்படுத்தசோறு, தோற்பாவைக் கூத்தினுட் போர் இவ்வுவமைகளின் பொருத்தன்மை யாது? உவமேயம் யாது?

(b) i. இரப்பாரில் வள்ளல்களும் இல்லை எப்படி

ii. தானே தனக்குக்கரி—எப்படி?

iii. பிறரோடு பேசுங்கால் கருதவேண்டும் விதிகள் யாவை?

(c) ஐவகை வேள்வி, நால்வகை சீலம், உருவம் நான்கும் அருவம் நான்கும் அகன்றோன் ஏதேனும் இரண்டிற்கு வகை எழுதுக.

4. (a) திருதராட்டிரனை "நீதியமைதருதந்தை" எனக்கூறிப்பின் "விரகினுக்கோர் வீடுபோல்வான்" எனக்கூறுவது தகுமா? காரணம் கூறுக.

(b) அவன், ஊரினின்றுவந்த தருமனுக்குக்கூறிய முகமனுரைகளிற்சில கூறி அவற்றைப்பற்றி யுங்கள் அபிப்பிராயத்தையும் கூறுக.

5. (a) பின் வருவனவற்றில் இரண்டிற்கு விடைதருக.

i. கதையோடு சம்பந்தப்படுத்தி வில்லிபுத்தூரார்கூறும் சூரிய சந்திரோதய வருணனைச்செய்யுட்களில் ஒன்று.

ii. திருக்குறளையடக்கிய பாரதச்செய்யுட்களில் ஒன்று.

iii. "கொங்குதேர்வாழ்க்கை" என்னும் செய்யுள்.

iv. நெஞ்சினைப்பற்றி அறநெறிச்சாரம் கூறும் செய்யுட்களில் ஒன்று.

(b) பரஞ்சோதியார் கூறும், சோலைவருணனை வேனிற்கால வியல்பு, களியர் இயல்பு ஏதேனும் ஒன்றை வசனமாக எழுதிக்காட்டுக?

(c) விடங்கன், ஆலவாய், காளத்தி, ஆரிடம், இவை காரணப் பெயராவதைக்காட்டுக.

6. (a) தேம்போதனைத்தும் தலைசாயும் சிலபோதலரும் சிலபோது
வேம்போதங்குவாழ்வவெல்லாம் வெங்கானுடனேவேவாவோ
ஆம்போதாகும அதுவின்றி ஆயபொருள்க ளம்முறையே
போம்போதனைத்தும்போம்முன்னம் பொறுத்திரின்னும் பொறுமென்றான்.

i. முதலிரண்டடிகளில் ஒவ்வொன்றும் எவ்வெப்பொருள் தரும்?

ii. முன்னம் பொறுத்திர் — இரண்டு சந்தர்ப்பங்கூறுக.

iii. இதின் ஒவ்வொரு வாக்கியமும் ஒன்றோடொன்று சம்பந்தமுடையதாகக் கருத்தைத்தெளிவுற எழுதுக.



(b) மொட்டினபருமணி முடிகொடேர்ப்பரி
வெட்டின பரிகளும் வெம்மையாறின
மட்டினபரிமள மரங்கள்யாவையும்
கட்டின கழைபொருகவளயானையே—

i. இதற்குப்பதவுரை எழுதுக.

ii. இதில் எத்தனை வாக்கியங்கள் உள்ளன? அவை எவை?

iii. முற்றெச்சம், முற்றும்மை, பால்பகாவஃறிணைப்பெயர் இப்பாட்டில் காட்டுக.

iv. தேர்ப்பரி, தேர்பரி, வித்தியாசம் யாது?

(c) தருமியென்றுளான் — ஒருவனுன்முகத்தொருவன்மார்புறை
திருவனுடருந்தேவனுனுரு வருவகாலகன்றனைத் தன்கலி
வெருவராடிமுன்வீழ்ந்து வேண்டுவான்.
பொழிப்புரை எழுதுக.

7. (a) தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள்வைப்பு, ஒட்டு இவ்வணிகளுக்கு ஒவ்வொரு உதாரணம் உங்கள் பாடபுத்தகத்திலிருந்து காட்டி விளக்குக.

(b) தேசிங்கு சரித்திரத்தில் சுவை குறைய எழுதினபாகம் எது?

---

## இண்டர்மீடியேட்

பரீக்ஷகர்—ஆ. கார்மேகக்கோனர்.

## இலக்கணம்.

1920ளு மார்ச்சுமீ 6உ சனிக்கிழமைபகல் மணி 2—4 வரை.

[அம்சம்—90.]

1. (1) நன்னூலை இயற்றுமாறு வேண்டிக்கொண்ட அரசன் யார்? அவனது காலம் நகர் முதலியவற்றைக்குறிக்க.

(2) ‘நன்னூல்’ என்பதின் பெயர்க்காரணத்தையும் இஃது இந்நூலின் வழிநூலென்பதையும் வரைக.

(3) நன்னூலார் காலத்துக்கு முன்னரேவடசொற்கள் தமிழில் மிகுதியாகப்பயிலத்தொடங்கிவிட்டன: இதனை இந்நூலின் அகச்சான்றுகொண்டு புலப்படுத்த.

(4) ‘இடுகுறிகாரணப்பெயர்’ என்ற பெயரிலக்கணச்சூத்திரத்தைப்பெயரியலில் வைக்காது எழுத்தியலில் வைத்ததேன்?

II. (1) பல்—|—தலை நாழி—|—உரி முள்—|—தாள் எண்—|—பெரிது பாண்—|—தொழில் இப்பதங்களை இலக்கண அமைதியாய்ப்புணர்த்திக்காட்டி விதியுங் கூறுக.

(2) செய்யுளிகல் அளபெடுப்பது எதற்காக? நீவிர்கொடுக்கும் விடைக்கு இரண்டுதாரணமுந்தருக.

(3) சார்பெழுத்துக்கள் இத்தனையாமென்பதையும் அதன் விரி இத்தனையாமென்பதையும் விவரிக்க.

(4) தொழிற்பெயர், பண்புப்பெயர் பெயரெச்சம் இவற்றின் விகுதிகள் யாவை?

III. (1) இடைநிலைகளேயன்றி வேறுகாலங்காட்டுவனயாவை? உதாரணமுந்தருக.

(2) தமிழிலுள்ள திணை பால் வகுப்புக்களை விவரிக்க

(3) இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி, இலக்கணப்போலி:—இவற்றிற்குக்குறிப்பெழுதி ஒவ்வோருதாரணங்கொடுக்க.

(4) ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளையும் அவ்வுருபுகள் தரும் பொருளினையும் எழுதுக.

IV. (1) ஏவலுக்கும் வியங்கோளுக்கும், அடுக்குத்தொடர்க்கும் இரட்டைக்கிளவிக்கும், ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் உள்ள வேறுபாட்டினைக்குறிக்க.

(2) ‘கடி’ என்னும் உரிச்சொல் எவ்வெப்பொருளை உணர்த்தும்?

(3) கொல், மன், மற்று, ஏ, ஒடு இவ்விடைச்சொற்கள் என்னென்ன பொருளில் வரும்.

(4) பசு—இரும்பூது—தாலு—ஏழு—கதவு இவற்றுள், குற்றுகரங்களையும் முற்றுகரங்களையும் எடுத்துக்காட்டுக.

---



## இண்டர்மீடியேட் வகுப்பு.

பரீக்ஷகர்—V. T. ஸ்ரீநிவாஸையங்கார்.

### வியாசம்.

1920-ஆம் மார்ச்சுமீ 6௳ சனிக்கிழமை பகல் மணி $4\frac{1}{2}$—$5\frac{1}{2}$ வரை

[அம்சம்—30.]

அடியிற்கண்டவற்றுள் எவையேனும் இரண்டைப்பற்றி வியாசம் எழுதுக.

1. விஜயத்தின் ஜயம் அல்லது சைதன்யரின் மதக்கொள்கைகளும் உபதேசங்களும்.
2. கம்பர் சோழனது கர்வத்தை அடக்கியது அல்லது திருவாய்மொழி சங்கமேறியது.
3. மூன்று சங்கங்களின் வரலாறு அல்லது தமிழ் அபிவிருத்திக்கு வேண்டிய சீர்திருத்தங்கள்.

---

## ஸ்கூல்பைனல் வகுப்பு.

பரீக்ஷகர்—ரெ. அப்புவையங்கார்.

### இலக்கியம்.

1920ஆம் மார்ச்சுமீ 6௳ சனிக்கிழமை பகல் 10—1.

[அம்சம்—120]

I. 1. நற்றிணையென்றால் என்ன? இந்நூல் எத்தனை பாடல்களுள்ளன? இதிற்கூறப்பட்ட விஷயம் என்ன? இந்நூல்எதைச் சேர்ந்தது?

2. வேதமுதல்வன் யார்? அவனுக்கு எதைத சேவடிமுதலியவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது?

3. குகனது தன்மை கூறக்கேட்டுக் கௌசலை பரதன் முதலியோரை நோக்கிக்கூறியதென்ன?

4. பின்வரும் பாட்டிற்குப் பதவுரை எழுதுக.—

வந்தெதிரே தொழுதானை வணங்கினன் மலர்இருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவனடி வீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினன் றகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்

5. கீழே குறித்தவற்றின் பொருளை நன்கு விளக்குக.—

a. மன்றுமன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல் என்முன்னே.

b. மூன்றுலகு மீன்றானை முன்னீன்றானைப் பெற்றதாற்பெறுஞ்செல்வம் யான்பிறத்தலா விழந்தபெரியாள்.

c. முழுதுலகளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும் வழுவினன்.

II. 1. நால்வகைச்செய்கை, நால்வகைப்பயன் இவற்றின் இலக்கணமென்ன?

2. பன்னு நான்கினும் பணியணி பரமர் பொற்கோயில்
முன்னியே வலம் வருவது சரியை பன்முறையின்
மன்னுமோர் வகையன்னது விரிக்கிலேழ் வகையாம்

இதற்குப் பொழிப்புரை யெழுதுக.—

3. வலன் என்னென்னதன்மையில் நாய், நரி, புலி இவைகளுக்கு ஒப்பாகச் சொல்லப்படுகிறான்.

4. பின்வரும் பதங்களுக்கு அர்த்தமெழுதுக.—

அடலை, நடலை, முண்டம் முளைத்தோரை, ஜவனம், பதுக்கை, கூரல், ஒடி. உழுவை, சூகரம், சுரவிதாங்கி, தொம்தோல்.

5. மறைமுடிமேற் பழுத்த பழமென்றது எதனை? அதனை எவ்வாறு சிறப்பித்துக் கூறியுள்ளார்?

III. 1. பிள்ளைத்தமிழிற் குறிக்கும் பருவம் பத்துள் ஏதாவது மூன்றினிலக்கணமு மவற்றின் காலமும் இன்னின்னதென விளக்குக.

2. விநாயகர் விசுவரூபங்கொண்டபொழுது அவரது உருவம் ஆகாயத்தை ஊடுருவிச்சொல்வதை எப்படி வர்ணிக்கிறார்?

3. "நாமேவு அம்முதலொடொன்றவினையுருபுதொகாரன்கனடியாதிசெய்து-நாற்சீரிரு னெறிவிளக்கி" இதனைத் தெளிவாய் விளக்கி யெழுதுக.

4. வாரானைப்பருவத்துக்குக் கூறியபாட்டிற் குறித்தகதையைப் பத்து வரிக்குளெழுதுக.

5. நோய்ப்பிறவி போக்குவார்க்கு-நோற்றவர் புராணமிலாதமைவராதார் என்பதற்குக் காட்டிய திருட்டாந்தங்களெவை?

IV. 1. சிகாளத்தியென்று பெயரெய்தியதற்குக் காரணமென்ன? இதற்கு வேறு சிறப்புப்பெயரென்ன?

2. பாண்டி நாட்டிற்கே உரிய சிறந்த பொருள்களெவை?

3. சிவபெருமான், முருகக்கடவுள், பாண்டியன், இவன்மனைவி, இவர்களைக்குறிக்கும் மும்மூன்று சொற்றொடரெழுதுக?



4. சிவபெருமான் கொய்குதேர் வாழ்க்கையென்னும் பாட்டைத் தருமிக்கு எழுதிக்கொடுத்ததற்கு என்னென்ன காரணங் கூறுகின்றனர்.

5. வெள்ளைத்தாமரைச் செல்வியென்ற பாட்டை வசனக்கிரமப்படுத்தி எழுதுக.

V. 1. "உத்தியோகபருவமென்றாலென்ன?

2. புயங்ககேது விரோசனன் சுதனைக்கங்கர்சுதனேடும் வேளுளிமாற்றி" இதன் சந்தர்ப்பமென்ன?

3. துவாரகை' அதின் மதில், அகழி'கொடி இவைகளின் வர்ணனையைக்கூறும் பாடல்களிலேதாவதொன்றின் கருத்தைச்சுருக்கமாக விளக்குக.

4. புயங்கம், பன்னகம், துரோணன், துரியோதனன், யுதிட்டிரன், விரோசனன், புரோகிதன் இப்பெயர்க்காரங்கூறுக.

5. கண்ணன் துரியோதனனை நோக்கி உனக்குப்படைத்துணையாகமாட்டேனென்பதற்கு என்னென்ன காரணங்கள் கூறினர்? அதற்குத் துரியோதனன் கண்ணனைக்கேட்டுக்கொண்டதென்ன?

VI. 1. கடலைத் தெப்பத்தினாலன்றிக் கையினாலே கடக்கக்கருதுதல் போலுமென்றதெதனை?

2. மார்ச்சார நியாயம், பார்வை மிருகம், நான்காவது சத்திரியாதம் என்றாலென்ன?

3. வானாதி ஐந்து, மனமாதி நான்கு எவை?

4. சிவபருமானை வில்லாலடித்தவன். கல்லாலெறிந்தவன், பிரம்பாலடித்தவன் யார் யார்? எத்தெந்த சந்தர்ப்பத்தில்.

VII. 1. பச்சையப்பமுதலியார் 1774 மார்ச்சுமீ 27௨ 1791ஞு ஜூன்மீ 28௨ 1794ஞு மார்ச்சுமீ 22௨ இவைகளிலென்னென்ன காரியஞ்செய்தனர்?

2. சிவஞானமுனிவர் செய்த திராவிட மகாபாஷ்யத்துக்கு அங்கங்களெவை? இவரது மாணாக்கருட் சிறந்தவர்கள் யார்?

3. கண்ணகிக்குக் கோவில் கட்டுவித்துத் திருவிழா முதலிய சிறப்புச் செய்தவர்கள் யார் யார்?

4. நாயக்கர் வமிசத்தினர் எத்தனை வருஷகாலம் அரசாட்சி புரிந்தனர்? யார்முதல் யார்வரை?

5. மங்கம்மாள் யார்? இவர் அரசாட்சி செய்வதற்குக் காரணமென்ன? நாயக்கர் வமிசத்தினர் தற்காலத்திலெங்கெங்கே யுள்ளார்கள்?

VIII. 1. சாக்ரடீஸ் வாக்கியங்களை அடிப்படையாகவைத்து யார் யார் என்னென்ன மதங்களை யேற்படுத்தினர்?

2. சப்தமுனிவரென்றது யாரை? அவர்கள் கூறிய அமுதவாக்கியங்களெவை?

IX. 1. மோகனாங்கியின் இருப்பிடம், பூந்தோட்டம் அவள் முத்து வியாபாரியிடத்திற்கு முத்துமாலை வாங்கத் தோட்டத்துக்குவந்தபொழுது செய்துகொண்ட அலங்காரம் இவற்றுள் ஏதாவதொன்றைச் சிறப்பித்துப்பத்து வரிக்குளெழுதுக.

2. இலக்குமிக்கும், விமலைக்கும் நடந்த சம்பாஷணையை, அல்லது விஜயராகவ நாயக்கருக்கும் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு நடந்த சம்பாஷணையை விடாமலெழுதுக.

---

## ஸ்கூல்பைனல் வகுப்பு.

### பரீக்ஷகர்—சர்க்கரை இராமசாமிப்புலவர்.

### இலக்கணம்.

1920-ஆம் மார்ச்சுமீ 6உ சனிக்கிழமை பகல் மணி 2—4 வரை.

[அம்சம்—90.]

I. 1. தமிழிலக்கணம் எத்தனை வகைப்படும்? அவற்றுள் நன்னூலிலமைந்தவை எவ்வென்ன? அந்நூலின் அதிகார வியல்களின் முறையே கூறுக.

2. எழுத்தியலிற் கூறிய பெயரின் பொது விலக்கணத்துக்கும், பெயரியலிற் கூறிய பெயர்ச்சொல்லின் பொது விலக்கணத்துக்குமுள்ள வேற்றுமையென்ன? பெயரிலக்கணத்தை யெழுத்தியலிற் கூறியது ஏன்?

3. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யொவ்வொன்றுக்குமுள்ள பேதமென்ன? ஒற்றளபெடை நாற்பத்திரண்டாவது எப்படி? அவற்றிற் கொவ்வோருதாரணந்தருக.

4. யகரம்வரத் திரியாத குற்றுகரம் எது? அது அங்ஙனம் திரியாததற்கு விதியாது?

5. மகரக்குறுக்க மூன்றுவது எப்படி? பன்னிரண்டுயிருடன் மொழிமுதலாகு மெய்கள் எவை? இறுதிப்போலியை முற்கூறியதனாற் போந்த பயன் யாது?

II. 1. பண்புப்பகுதிகள் விகாரப்பட்டுப் புணரும் பதப்புணர்ச்சிகள் ஒவ்வொன்றுக்குந் தனித்தனி யுதாரணந் தருக.

2. குறிப்புவினை யெச்சவிகுதி, பண்புப்பெயர் விகுதி, கருவிப் பொருள்விகுதி, பகுதிப் பொருள்விகுதி, தொழிற்பெயர் விகுதி, இவை எவை? ஒவ்வொன்றுக்குந் தனித்தனி யிரண்டுதாரணங்கூறுக.



3. தன்வினையைப் பிறவினையாக்குமா றெங்ஙனம்? காலங்காட்டும் விகுதிச் சூத்திரத்திலசங்கேயென்ற மிகையாற் பெறும் விதிகளெவை?

4. தழுவுதொடர், தழாத்தொடர், இவற்றின் வேறுபாடென்ன? அவையிருவழியினும் வருமாறெங்ஙனம்?

5. புணர்ச்சிவிகாரத்துக்குஞ் செய்யுள்விகாரத்துக்கும், முன்னிலை வினைக்கும் ஏவல் வினைக்குமுள்ள பேதமென்ன?

III. 1. பல்வகைப் பெயரெச்சம், என்றுலென்ன? அவ்வழியில் இ ஐ முன் வலிவரினியல்பு மிகுதி விகற்பம் எவ்வெவ்விடத்துக் கொள்ளப்பெறும்?

2. டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே, என்றதனாற் கொள்ளும் பொருள் என்னென்ன?

3. உயிரீறொத்தல் என்பது என்ன? இயல்புயிரீறு விதியுயிரீறாகட் கூற வேண்டும்.

4. அந்தக்கண்டான், இருப்புலக்கை, தோன்றல்செவி, தாய்கை, நாய்க்கால், வாட்படை, மான்குளம்பு, ஆதிபகவன் இவைகட்குப் புணர்ச்சிவிதி கூறுக.

5. முதல்வேற்றுமைக் கருத்தாவுக்கும் மூன்றும் வேற்றுமைக் கருத்தாவுக்குமுள்ள பேதமென்ன?

IV. 1. முதற்குறிப்பு, பலபொருள் குறித்தவொருவினைத்திரிசொல், காரியவாகுபெயர், வேற்றுமையுருபேற்காத பெயர், விளியேற்காத பெயர் இவை எவை?

2. வினையையும், அதனொடு பொருந்தும் பெயரையுங் கொண்டு முடியும் வேற்றுமைகள் எவை? உருபு மயக்கமாவது யாது? இரண்டு உதாரணங் கூறுக.

3. புகையிலைப்பொடி, மணியொளி, கம்புகொண்டு தாக்கினன், கற்பிற் சிறந்தவளருந்ததி, முருகன்றன்னை இவை எந்தெந்த வேற்றுமைக்கு எவ்வெப்பொருட்குதாரணமாகும்?

4. வினையெச்சங் கொண்டுமுடியுஞ்சொற்கள் எவை? பெயரெச்சத்தில் எஞ்சிநிற்கும் பெயர்கள் எவை?

5. செய என்னெச்ச முக்காலத்திலும் வருவது எப்படி.

V. 1. எச்சத்திரிபு, முற்றெச்சம், இருதிணை முக்கூற்றொருமை, இருதிணைப்பொதுவினை, இவை எவை? இவைகட்கொவ்வோருதாரணம் வேண்டும்.

2. வியங்கோள், ஏவல், இவைகட்குள்ள பேதமென்ன?

3. உவமம், உம்மை, பண்பு, இவை எவ்வெவைபற்றி வரும்?

4. வழுவென்றாலென்ன? திணை, பால், மரபு, வழுவமைதிகட்கு ஒவ்வோருதாரணந்தருக.

5. ஏ. ஓ. உம், இவை எவ்வெப் பொருள் தரும்? அறுவகை வினா எண்வகை விடை இவை எவை?

---

## ஸ்கூல், பைனல் வகுப்பு.

பரீக்ஷகர்—ஆ. மா. சடகோப ராமாநுஜாசாரியர்.

### வியாசம்.

1920-ஞு மார்ச்சுமீ 6உ சனிக்கிழமை பகல் மணி $4\frac{1}{2}$—$5\frac{1}{2}$ வரை.

[அம்சம்—30.]

பின் வருவனவற்றுள் ஏதேனு மிரண்டு விஷயங்களைப் பற்றி மாத்திரம், ஒவ்வொன்றும் மும்மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல், இரண்டு வியாஸங்களெழுதுக:

I. மங்கம்மாள் அல்லது திருமலை நாயகரின் ஆட்சிச்சிறப்பு.

II. 'சொக்கநாத நாயகரும் இலக்குமியும்' அல்லது சொக்கநாத நாயகரின் தஞ்சைப் படையெடுப்பு.

III. ஸாக்ரட்டீஸின் கொள்கைகள் அல்லது அவர் சிறையிலிருக்கும்போது நடந்த செய்திகள்.

IV. ஆங்கில கலாசாலைகளில் தமிழ்ச சங்கங்களேற்படுத்தி விருத்தி செய்யும் மார்க்கங்கள்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து

### 1919 ஞு நவம்பர்மீ த்திய வரவு செலவு கணக்கு:

| விவரம் | வரவு 1919 November | | | வரவு 1918 November | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | |
| (1) நன்கொடை, மாதச் சந்தாவகையில் வரவு ... | 200 | ... | ... | 695 | 8 | ... |
| (2) புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 25 | 6 | ... | 29 | 14 | 9 |
| வி. பி. சார்ஜ் வரவு ... | 2 | ... | ... | 2 | 12 | ... |
| (3) Waste papers விற்றவகையில் வரவு ... | 6 | 3 | | ... | | |
| (4) வாடகை வகையில் வரவு ... | 70 | ... | ... | 70 | ... | ... |
| (5) கடன் வாங்கியவகையில் வரவு ... | ... | ... | ... | 200 | ... | ... |
| (6) Miscellaneous வரவு... | ... | ... | ... | ... | 3 | ... |
| மொத்தம் ... | 303 | 9 | ... | 998 | 5 | 9 |

| விவரம் | செலவு 1919 November | | | செலவு 1918 November | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | |
| (1) Establishment:— | | | | | | |
| (a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 106 | ... | ... | 110 | 14 | [illegible] |
| (b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச்சம்பளம் செல் ... | 95 | ... | ... | 53 | ... | ... |
| (c) மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ... | 90 | 15 | 5 | 182 | 8 | [illegible] |
| (d) Literary Section சிப்பந்திகட்குச்சம்பளம் செல் ... | 45 | ... | ... | 45 | ... | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **II Editorial Section:** | | | | | | |
| (1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ... | 24 | 6 | ... | 10 | 3 | ... |
| (2) விளம்பர சார்ஜ் வரவு... | ... | ... | ... | 14 | 4 | ... |
| (3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ... | 8 | 4 | ... | 6 | 8 | ... |
| வி. பி. சார்ஜ் வரவு ... | ... | 12 | ... | ... | 18 | ... |
| மொத்தம் ... | 33 | 6 | ... | 31 | 12 | ... |
| **III Press Section:** | | | | | | |
| (1) சங்கம் பவர்ப்பிரஸ் குத்தகைதாரிடமிருந்து குத்தகைப் பணம் வரவு ... | 250 | ... | ... | ... | ... | ... |
| (2) பழைய பில் பாக்கித் தொகை முதலியன வரவு ... | 149 | 3 | ... | 511 | 11 | 3 |
| மொத்தம் ... | 399 | 3 | ... | 511 | 11 | 3 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (2) Stationery, contingencies வாங்கியவகையில் செல் ... | 2 | 15 | 6 | 10 | 14 | 7 |
| (3) Furniture வாங்கிய வகையில் செல் ... | ... | ... | ... | 1 | ... | ... |
| (4) Furniture ரிப்பேர் வகையிற் செல் ... | 5 | ... | ... | ... | ... | ... |
| (5) கட்டிட ரிப்பேர்வகையிற் செல் ... | 8 | 5 | 6 | ... | ... | ... |
| (6) தபால், தந்திவகையில் செல் ... | 8 | 8 | 3 | 4 | 9 | 6 |
| (7) புத்தகங்கள் பிரசுர சம்பந்தமாக அச்சுக்கூலி, காகிதம் வகையரா செலவு ... | 43 | 14 | ... | 465 | 9 | ... |
| (8) சில்லரை வேலைகள் சம்பந்தமாக ஷை செலவு | 11 | 8 | ... | ... | ... | ... |
| (9) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ... | 5 | 14 | ... | ... | ... | ... |
| (10) Miscellaneous செலவு | 0 | 3 | 6 | 0 | 10 | 0 |
| மொத்தம் ... | 423 | 4 | 2 | 874 | 2 | 2 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | ... | ... | ... | 30 | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைப் பிரசுர சம்பந்தமாக அச்சுக்கூலி காகிதம் வகையரா செலவு... | 191 | 5 | 6 | 89 | 1 | ... |
| (3) தபால், தந்தி வகையில் செல் ... | 20 | 7 | 9 | 28 | 1 | ... |
| மொத்தம் ... | 211 | 13 | 3 | 92 | 2 | ... |
| **III Press Section:** | | | | | | |
| (1) டைப்ஸ் வகையரா வாங்கியவகையில்செல்... | ... | ... | ... | 26 | 9 | ... |
| (2) Furniture, Machine வாங்கியவகையிற்செல்... | ... | ... | ... | ... | 14 | ... |
| (3) ஷை ரிப்பேர்வகையிற் செல் ... | 17 | 8 | ... | 5 | ... | ... |
| (4) Miscellaneous செலவு | 57 | 8 | ... | 301 | 13 | 1 |
| மொத்தம் ... | 75 | ... | ... | 334 | 4 | 1 |

| | Rs. | A. | P. | Rs. | A. | P. | | Rs. | A. | P. | Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவுரூ. ... | 736 | 2 | ... | 1541 | 13 | ... | ஆக மொத்தம் செலவு ... | 710 | 1 | 5 | 1300 | 8 | 3 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ... | 1356 | 5 | 8 | 1113 | 1 | 2 | மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ... | *1382 | 6 | 3 | 1354 | 5 | 11 |
| ஆகமொத்தம் ரூ. ... | 2092 | 7 | 8 | 2654 | 14 | 2 | ஆகமொத்தம் ரூ. ... | 2092 | 7 | 8 | 2654 | 14 | 2 |

*By C Pass Book Rs. 300—0—0
By Co-operative Bank Receipt 1050—0—0
Cash on hand 32—6—3
1382—6—3

*Audited and found correct.*

***V. S. Ramaswami,***
Auditor.
14—2—20.

***J. Sudarsanachari,***
*Joint Secretary,*
Madura Tamil Sangam.
9—2—20.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1919௵ டிசம்பர்மீ த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு 1919 December | | | வரவு 1918 December | | | விவரம் | செலவு 1919 December | | | செலவு 1918 December | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31 I General Section: | | | | | | | I General Section: | | | | | | |
| | | | | | | | (1) Establishment:— | | | | | | |
| (1) Donations & Grants வகையில் வரவு ... | 20210 | ... | ... | 270 | ... | ... | (a) மானேஜ்மெண்டு ஆபீஸ்சிப்பந்திகட்குச் சம்பளம் செல்... | 111 | 8 | ... | 112 | 3 | 10 |
| (2) பரீக்ஷைக் கட்டணத் தொகைவரவு ... | 3 | ... | ... | 1 | ... | ... | | | | | | | |
| (3) புத்தகங்கள் விற்ற வகையில் வரவு ... | 51 | 4 | ... | 16 | 2 | 3 | (b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ... | 95 | ... | ... | 53 | ... | ... |
| (4) Waste Papers விற்ற வகையில் வரவு ... | ... | 8 | ... | 3 | 1 | ... | | | | | | | |
| (5) வாடகை வகையில் வரவு ... | 70 | ... | ... | 70 | ... | ... | (c) மாணவர்கட்கு ப்போஷணைக்காகச் செல் ... | 77 | 3 | 2 | 123 | 3 | 2 |
| (6) Miscellaneous வரவு .. | ... | ... | ... | 1 | ... | ... | (d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 51 | ... | ... | 45 | ... | ... |
| மொத்தம் ... | 20334 | 12 | ... | 361 | 3 | 3 | (2) Stationery, contingencies வகையிற்செல்.. | 12 | 14 | 6 | 2 | 15 | 9 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சங்கத்தின் அங்கத்தினரிடமிருந்து சந்தா வரவு ... | 18 | 8 | ... | 6 | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தாவரவு ... | 4 | ... | ... | 3 | 2 | ... |
| (3) விளம்பர சார்ஜ் வரவு ... | ... | ... | ... | 3 | ... | ... |
| (4) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ... | 16 | 7 | ... | 31 | 13 | ... |
| மொத்தம் ... | 38 | 15 | ... | 48 | 15 | ... |
| **III Press Section:** | | | | | | |
| (1) சங்கம் பவர்ப்பிரஸ் குத்தகைதாரிடமிருந்து குத்தகைப்பணம் வரவு ... | 250 | ... | ... | ... | ... | ... |
| (2) பழைய பில் பாக்கித் தொகை முதலியன வரவு | 63 | 15 | ... | 318 | 6 | ... |
| மொத்தம் ... | 313 | 15 | ... | 818 | 6 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (3) பாண்டியன் புத்தகசாலைக்கு வாங்கிய புத்தகங்கட்குக் கிரையம் செல் ... | ... | ... | ... | 1 | 8 | ... |
| (4) Furniture ரிப்பேர் வகையிற் செல் ... | ... | ... | ... | ... | 1 | 3 |
| (5) சங்கமாபீசு வைத்துள்ள கட்டிடத்தை சங்கத்திற்காக விலைக்கு வாங்கிய வகையில், கட்டிடத்தின் கிரையத்தொகை வகைக்கு நாளதுமாதத்தில் சங்கத்தினின்றும் செலுத்தப்பட்டது ... | 20000 | ... | ... | ... | ... | ... |
| (6) தபால், தந்திவகையிற் செல் ... | 17 | 4 | ... | 13 | 14 | 6 |
| (7) முனிசிபாலிட்டிக்கு வரி வகையில் செல் ... | ... | ... | ... | 3 | 8 | ... |
| (8) புத்தகங்கள் பிரசுரசம்பந்தமாக அச்சுக்கூலி காகிதம் வகையரா செலவு ... | 93 | 8 | ... | 19 | 8 | 9 |
| (9) சில்லரைவேலைகள்சம்பந்தமாக ஷை செலவு ... | 5 | 6 | ... | ... | ... | ... |
| (10) சங்கப்பரீக்ஷை சம்பந்தமாகச் செலவு ... | 4 | 8 | ... | 15 | 1 | 3 |
| (11) Prizes and Medals வகையிற்செல் ... | 172 | 14 | ... | ... | ... | ... |
| (12) Miscellaneous செலவு. | 2 | 14 | 6 | 3 | 4 | 6 |
| மொத்தம் ... | 20644 | 0 | 2 | 393 | 5 | ... |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | ... | ... | ... | 30 | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைப் பிரசுரசம்பந்தமாக அச்சுக்கூலி, காகிதம் வகையரா செலவு ... | 63 | 7 | 6 | 46 | ... | 9 |
| (3) தபால், தந்தி வகையில் செல் ... | 12 | 6 | ... | 23 | 7 | 3 |
| மொத்தம் ... | 75 | 13 | 6 | 99 | 8 | ... |
| **III Press Section:** | | | | | | |
| (1) டைப்ஸ் வகையரா வாங்கியவகையிற்செல் ... | ... | ... | ... | 1 | 9 | ... |
| (2) Furniture, Machines வாங்கியவகையிற்செல் ... | 8 | 2 | ... | 1 | 3 | ... |
| (3) ஷை ரிப்பேர்வகையிற் செல் ... | ... | ... | ... | 1 | ... | ... |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | (4) சிப்பந்திகள் சம்பளம் வகையரா சம்பந்தமாக செலவு ... | ... | ... | ... | 363 | 15 | 10 |
| | | | | | | | மொத்தம் ... | 8 | 2 | ... | 368 | ... | 10 |
| ஆகமொத்தம் வரவு ... | 20,687 | 10 | ... | 728 | 8 | 3 | ஆக மொத்தம் செலவு ... | 20,727 | 15 | 8 | 880 | 13 | 10 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ... | 1,382 | 6 | 3 | 1354 | 5 | 11 | மாதமுடிவில் மீதி இருப்புத் தொகை ... | 1,342 | ... | 7 | 1222 | ... | 4 |
| ஆகமொத்தம் ரூ. ... | 22,070 | ... | 3 | 2082 | 14 | 2 | ஆகமொத்தம் ... | 22,070 | ... | 3 | 2082 | 14 | 2 |

*By C. Pass Book 150—0—0
,, Bank Receipt 1050—0—0
, Cash on hand 142—0—7

1342—0—7

*Audited & found correct.*
**V. S. Ramaswami,**
AUDITOR.
14—2—20.

**C. Sudarsanachari,**
*Joint Secretary,*
MADURA TAMIL SANGAM.
9—2—20.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 AUG 1920
MADRAS.

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி கஅ] சித்தார்த்தி-ஹூ பங்குனிமீ [பகுதி ரு.
Vol. XVIII. March—April 1920. No. 5.

## உவமைப்போலிவிளக்கம்.

(கசஅ-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி வைதன்மியதிட்டாந்தப்போலிகள் வருமாறு.

எ. சாதநாவியாவிருத்தமாவது.—சாதனத்தால் (சாதன்மியத்தோடு) வேறுபாடில்லாதது; அதாவது சாதனத்தைத்தன்னகத்துடைய வைதன்மியதிட்டாந்தமென்றபடி. சாதனம்-ஏது. அவ்வியாவிருத்தம் - வேறுபாடில்லாதது. இதனைச் சிவஞானமுனிவர், "ஏதுவின்மையுடைத்தாகாதது" என்பர். ஏதுவின்மையுடைத்தாகாதது-ஏதுவையுடையதாயிருப்பது. இது மணிமேகலையுள் சாதநாவியாவிருத்தியென வழங்கப்படும். இதனை,

(29, 414) "சாதநாவியாவிருத்தி
யாவது.-சாத்தியதன்மமீண்டு,
சாதனதன்மமீளாதொழிதல்.
சத்தம்நித்தம்;அமூர்த்தத்தென்றால்.—
யாதொன்றியாதொன்றுநித்தமன்றஃது
அமூர்த்தமுமன்று;கன்மம்போல.
என்றால், வைதன்மியதிருட்டாந்த
மாகக்காட்டப்பட்டகன்மம்
அமூர்த்தமாய்நின்றே அநித்தியமாதலிற்
சாத்தியமானநித்தியமீண்டு,
சாதனமான அமூர்த்தம்மீளாது."

என்பதனுனறிக. இங்குக்காட்டிய வைதன்மிய திட்டாந்தப் பொருளாகிய கன்மத்துள் அமூர்த்தத்துவமாகிய சாதனம், இல்லா தொழியவேண்டுமென்னுமிலக்கணந்தவிர்ந்து, சாதன்மியத்துட் போலவுள்ளதாயிருத்தலால் இது, சாதனத்தால்(சாதன்மியத்தோடு) வேறுபாடில்லாமையாற் 'சாதனுவியாவிருத்தி' என்னும் திட்டாந்தப்போலியாயிற்று.

சாத்தியதன்மமீண்டு என்றது சாத்தியம் இல்லதாய் என்றபடி. சாதனதன்மமீளாதொழிதல் என்றது சாதனம் உளதாயிருத்தல் என்றவாறு.

இதனை, மறைஞானதேசிகர், மனது அநித்தியம் மூர்த்தமாதலினுல்; என்கிற ஏதுசாத்தியங்களுக்கு "யாதொன்று அநித்தியமன்று அது மூர்த்தமுமன்று பரமாணுப்போல" எனத் திட்டாந்தங்கூறினுல் அத்திட்டாந்தத்திலே சாதனமாயிருக்கிற மூர்த்தத்துவம் வியாவிருத்தமாகாமல் அதிலே இருக்கையினு லிது சாதநாவியாவிருத்தமாமெனவறிக. என்பதுபட விளக்கியவாற்றானுமறியலாம். அநித்தியம் - நாசமடையுமியல்புடையது. மூர்த்தம் - அளவுபட்டபரிமாணமுடையது. வியாவிருத்தமாதல் - வேறுபாடுற்றுநிற்றல்.

அ. சாத்தியாவியாவிருத்தம் என்பது.-சாத்தியத்தால் (சாதன்மியத்தோடு) வேறுபாடில்லாதது. அதாவது சாத்தியமுடையதனை வைதன்மிய திட்டாந்தமாகக்காட்டுவதென்றபடி.

இதனைச்சிவஞானமுனிவர் "சாத்தியமின்மையுடைத்தாகாதது" என்பர். சாத்தியமின்மையுடைத்தாகாதது - சாத்தியமுடைத்தாயிருப்பது.

இது மணிமேகலையுள், சாத்தியாவியாவிருத்தி என வழங்கப்படும். அது வருமாறு.—

(29, 404) "சாத்தியாவியாவிருத்தி
யாவது.—சாதனதன்மமீண்டு,
சாத்தியதன்மமீளாதொழிதல்.
சத்தம்நித்தம்;அமூர்த்தத்தென்றல்;
யாதொன்றுயாதொன்றுநித்தமுமன்று;அது
வமூர்த்தமுமன்று;பரமாணுப்போல்எனின்;
அப்படித்திட்டாந்தமாகக்காட்டப்-
பட்டபரமாணுநித்தமாய்,மூர்த்த-
மாதலிற்,சாதனவமூர்த்தம் மீண்டு,
சாத்தியநித்தமீளாதொழிதல்." என்பதாம்.



இங்குக்காட்டிய வைதன்மியதிட்டாந்தம் 'பரமாணு'; அதன் காட்டவேண்டிய சாத்தியாபாவம் அநித்தியத்துவம். அஃதப்ப ணுவிலில்லாது சாத்தியமாகிய நித்தியத்துவமேயுண்மையால் சாத்தியத்தால் சாதன்மியத்தின் வேறுபாடில்லதாயிற்று. அதனை சாத்தியாவியாவிருத்தியெனப்பட்டது. சாதனதன்மம் - சாதன கியதன்மம்; அதாவது ஏது. மீண்டு - இல்லதாய். மீளாதொழித உளதாதல்.

இது மறைஞானதேசிகருரையுள், மனது அநித்தியம்; மூ மாதலால்; என்ற ஏது சாத்தியங்களுக்கு கன்மம்போல, என் வைதன்மியதிட்டாந்தத்திலே சாத்தியமாயிருக்கிற அநித்தியத்து வியாவிருத்தமாகாமல் அதிலே இருக்கையினுல் (இது சாத்தியா விருத்தமாயிற்று.) என்பதுபடவிளக்கப்பட்டது.

(அநித்தியத்துவம் - அழிவுடைமை. வியாவிருத்தமாகா வேறுபாடுற்றுநில்லாமல். அதிலே - கன்மத்திலே.).

௯. உபயாவியாவிருத்தம் என்றது அதிகாரப்பட்டுநின்ற தன சாத்தியங்களிரண்டாலும் (சாதன்மியத்தோடு) வேற்று யில்லாதவொன்றை வைதன்மியதிட்டாந்தமாகக் காட்டுவது.

இதனைச் சிவஞானமுனிவர் "இரண்டின்மையுமுடைத்த தது" என்பர். இரண்டின்மையுமுடைத்தாகாதது-இரண்டுண் முடைத்தாயிருப்பது. இரண்டு - சாதனசாத்தியங்கள்.

இது மணிமேகலையுள் 'உண்மையின் உபயாவியாவிருத்தி' வழங்கப்பட்டது. (அதாவது திட்டாந்தப்பொருளுள்ளதாய் சாதன சாத்தியங்களையுடையதாய்ச் சாதன்மியத்தின் வேறுட தோன்றுதிருப்பதொன்றை வைதன்மியதிட்டாந்தமாகக்காட லென்றபடி, அது வருமாறு.—

(29, 430) ..................."உண்மையின்உபயா
வியாவிருத்தி.-உள்ளபொருட்கட்
சாத்தியசாதனமீளாதபடி
வைதன்மியதிருட்டாந்தங்காட்டல்.
சத்தம்நித்தம்அமூர்த்தமாதலின்
என்றற்கு,யாதொன்றுயாதொன்றுநித்தமன்று.
அமூர்த்தமுமன்று. ஆகாசம்போலென்றால்,
வைதன்மியதிருட்டாந்தமாகக்—
காட்டப்பட்டவாகாசப்பொரு-
ளென்பாற்கு ஆகாசம்நித்தமும், அமூர்த்தமும்
ஆதலாற்,சாத்தியநித்தமும்,சாதனமா
வுள்ளவமூர்த்தமுமிரண்டுமீண்டில" என்பதாம்.

இங்கு நித்தமாதல் சாத்தியம். அமூர்த்தமாதல் சாதனம். இவ்விரண்டும் வைதன்மியதிட்டாந்தமாகக்காட்டப்பட்ட வாகாயத்தில் இல்லனவாகாது உள்ளனவாயிருத்தலால் எதிர்மறைமுகத்தால் மறித்துக்கூறப்படாமைபற்றி இது திட்டாந்தப்போலியாயிற்று.

இதனை, மறைஞானதேசிகருரையுள், மனது அநித்தியம்; மூர்த்தமாதலினால் என்றவதுசாத்தியங்களுக்கு யாது அநித்தியமன்று அது மூர்த்தமன்று குடம்போல என வைதன்மியதிட்டாந்தங் காட்டினால், அங்ஙனங்காட்டிய வைதன்மியதிட்டாந்தமாகிய குடத்தில் இருக்கவேண்டிய நித்தியத்தன்மையும், அமூர்த்தத்தன்மையுமாகிய சாத்தியசாதனங்களிரண்டுமுண்மையால் அவ்விரண்டானும் சாதன்மியத்தோடு வேறுபாடின்மைபற்றி இது உபயாவியாவிருத்தமாமென்பதுபடக் குறிப்பிட்டிருக்கிறவுதாரணத்தானுமுய்த்துணர்ந்துகொள்க.

௧௦. ஆசிரயவிகீனம்:—இது சாதன்மிய திட்டாந்தப்போலியுள் ஆசிரயகீனம் என வழங்கப்பட்டபொருளில் வைதன்மிய வேறுபாடுதோன்ற 'ஆசிரயவிகீனம்' என வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கு ஆசிரயம் என்றது சாத்தியசாதன தர்மாபாவங்களாகிய விசேடணங்களுக்குப் பற்றுக்கோடாயிருத்தற்குரிய வைதன்மிய திட்டாந்தப்பொருள் என்று கொள்ளத்தக்கது. விகீனம் இல்லாதொழிவது.



இது மணிமேகலையுள் இன்மையினுபயாவியாவிருத்தியெனக் கூறப்பட்டது. இதனை
(29,442) "இன்மையினுபயாவியாவிருத்தியாவது.-
சத்தம்அநித்தம் மூர்த்தமாதலால்
என்றவிடத்து,யாதொன்றுயாதொன்று
அநித்தமூர்த்தமுமன்று ஆகாசம்போலென
வைதன்மியதிருட்டாந்தங்காட்டில்,
ஆகாசமபொருளல்லவென்பானுக்கு
ஆகாசந்தானேயுண்மையின்மையினாற்,
சாத்தியவநித்தமும்சாதனவமூர்த்தமும்
மீட்சியுமீளாமையுமஇலையாகும்"

என்பதனானறிக. இங்கு அநித்தமாதல்சாத்தியம்; மூர்த்தமாதல் சாதனம். இவ்விரண்டனதின்மைக்கும் ஆசிரயமாகக்காட்டப்படும் வெதிரேகதிட்டாந்தம் ஆகாயம். இது ஆகாயமென வொருபொருளில்லையென்னும் புத்தசாருவாகருக்கு விகீனமாய் அந்நுவயவியாத்திக்கும் வெதிரேகவியாத்திற்குப் இடனாகாது திட்டாந்தலக்ஷணம் சிதைதலானிது திட்டாந்தப்போலியாயிற்று.

இதனைச்சிவஞானமுனிவர், "சொரூபமில்லதூஉம்," 'சொரூபமுண்மைபரனுக்குடம்பாடாகாததூஉம்' என இருகூறுபடுத்துப்பதினான்கு பதினைந்தாவதாகவைத்தெண்ணினர்.

அவற்றுட் (1) சொரூபமில்லதற்கு உதாரணம்,—"குடம் அழிதற்பாலது; தோற்றமுடைமையால்." என்ற சாத்திய சாதனங்களுக்கு, யாதுயாது அழிதற்பாலதன்று அது அது தோற்றமுடையதன்று; முயற்கொம்புபோல என்பதாம். இங்கு வியாத்திவாசகத்தாற்கூறிய அழிதற்பாலதல்லாமையும் தோற்றமுடையதல்லாமையுமாகிய சாத்தியசாதனாபாவதர்மங்களுக்குப் பற்றுக்கோடாகக்கூறிய திட்டாந்தப்பொருள் முயற்கோடு; அதன் சொரூபமேயுலகத்தின்மையால் இது சொரூபமில்லதாயிற்று.

(2) 'சொரூபமின்மைபரனுக்குடம்பாடாகாதது' என்பதற்கு உதாரணம்.—வாயு காட்சிப்பொருள்; பரிசமுடைமையால் என்னும் சாத்தியசாதனங்களுக்கு யாதுயாது காட்சிப்பொருள் அன்று; அது

அது பரிசமுடையதன்று; ஆகாசம்போல. எனப்புத்தசாருவாகரை நோக்கிக்கூறுவதாம். இங்கு வைதன்மியதிட்டாந்தமாகக் கூறப்பட்ட வாகாயசொரூபமேயவர்க்குடம்பாடின்மையாலிது சொரூபமுண்மை பரனுக்குடம்பாடாகாததெனப்பட்டது. இதன்கண்ணும் சொரூப மில்லதன்கட்போலவே வியாத்தியுணர்வுதோன்றாமையாலிதுவும் திட்டாந்தப்போலியாயிற்று. இங்கு ஆகாயத்தின் சொரூபமாவது சத்தகுணமுடையதாய், விபுவாய், ஒன்பது திரவியத்துளொன்றாய்ச் சித்தித்திருப்பது. புத்தசாருவாகமதத்தில் ஆகாயஸ்வரூபம் இவ்வாறு சித்திக்காமையால் அவர்க்கிது உடம்பாடன்றென்றறிக.

இதற்கு, மறைஞானதேசிகருரையுள், 'ஆசிரயவிகினமாவது- என்று தொடங்கி மனது அநித்தியம் மூர்த்தமாதலால் என்னும் ஏது சாத்தியங்களுக்கு "ஆகாயப்பூப்போல" எனத்திட்டாந்தங்காட்டப் பட்டது. இங்கும் சாத்திய சாதனபாவங்களாகிய அநித்தியமூர்த்தா பாவதர்மங்களுக்கு ஆசிரயமாகக்காட்டப்பட்ட ஆகாயப்பூவுக்குச் சொரூபமேயில்லாமையாலிதுவும் ஆசிரயவிகினமாமென விளக்கப் பட்டவாறு காண்க.

௧௧. இனிப்பதினொன்றாவதாக எண்ணப்பட்ட வியாவிருத்திய பிதாநமென்ற பெயர் பிழைபட்டது. அது வியாத்தியநபிதானம் என்றிருக்கவேண்டும். இதன்பொருள் வியாத்திவாசகமின்மையை யுடையது என விரியும். அவ்வியாத்தியபிதானமென்பது சாதன்மிய மும், இது வைதன்மியமுமாகிய வேறுபாடுதோன்ற 'வியாத்தியநபி தாநம்' என வேறுபெயரிடப்பட்டது. இங்கு வியாத்தியென்றது வெதிரேகவியாத்தியெனக்கொள்க. அநபிதானம்-அபிதான (வாசக) சூனியமாதலால், வியாத்தியநபிதானமென்பதற்கு வெதிரேகவியாத்தி வாசக சூனியமான திட்டாந்தமென்பது பொருளாம்.

இது மணிமேகலையில் 'அவ்வெதிரேகம்' என வழங்கப்பட்டது. 'அவ்வெதிரேகம்' என்பதும் வெதிரேகவியாத்திவாசக சூனியமாயுள் ளது என்னும் பெயருடையதாய் வியாத்தியநபிதானம் என்பதோடு பரியாயமாதல் காண்க. வெதிரேகம்—அந்நுவயவியாத்தியின் மறு தலைப்பட்ட எதிர்மறை வியாத்திவாசகம்; அதனை யில்லாதது-அவ் வெதிரேகமெனப்பட்டது. இதனிலக்கண முதலியன மணிமேகலை யுட் பின்வருமாறு கூறப்படும். அவை வருமாறு.—



அவ்வெதிரேகமாவது.-சாத்திய
மில்லாவிடத்திலேதுவுமின்மை-
சொல்லாதேவிடுதலாகுஞ். சத்தம்
நித்தம்;பண்ணப்படாமையாலென்றால்;
யாதொன்றுயாதொன்றுநித்தமன்று
பண்ணப்படுவதல்லாததுவு
மன்;றெனுமிவ்வெதிரேகந்தெரியச்
சொல்லாது,குடத்தின்கண்ணேபண்ணப்
படுதலும்,அநித்தமுங்கண்டேமாதலான்
என்னின்,வெதிரேகந்தெரியாது. என்பதாம்.

இதில் நித்தமாதல்சாத்தியம். பண்ணப்படாமை சாதனம். முறையே இவ்விரண்டனதின்மையும், தொடர்புடையவெனப்புலப்படுப்பதான வியதிரேகவியாத்திவாசகங்கூறாமையால், திட்டாந்தத்தில் வியதிரேக வியாத்தியுடைமை தோன்றாமைபற்றி இது திட்டாந்தப்போலியா யிற்று என்பது ஒருசாரார் கொள்கை.

இது மறைஞானதேசிகருரையில், ஆகாயம்போல என்ற உதார ணத்தாற் குறிக்கப்பட்டது. அவ்வுரைவாக்கியங்கள் குறைந்து பிழைபட்டிருத்தலால் அதன்பொருள் ஆராய்ந்தறிதற்பாலது. அதா வது மனது அநித்தியம் மூர்த்தமாதலினால் என முற்கூறிய ஏதுசாத் தியங்களுக்கு, யாதுயாது அநித்தமன்று; அதுஅது மூர்த்தமன்று; என்னும் வெதிரேகவியாத்தி வாசகங்கூறாது, ஆகாயம்போல என்ற திட்டாந்தத்தை மட்டுங்கூறில், வியாத்தியுணர்வுண்டாகாமையாலிது திட்டாந்தப்போலியாமெனவறிக என்பதாம். இருக்கும் உரைவாக் கியத்தில் "வியாத்தியனபிதானம்" எனற்பாலது வியாவிருத்தியபிதா னன் என்றும், "ஆகாயம்" எனற்பாலது ஆச்ரயம் என்றும், "உண் டாகாமையா" லெனற்பாலது உண்டாகையாலென்றும் பிழைபட் டுள்ளன.

சிவஞானமுனிவர் இத்திட்டாந்தப்போலியையும், சாதன் மியத்தின் அவ்வியாத்தியபிதானத்தோடொப்ப வியாத்தியுணர்வு, சொல்லில்வழித்தோன்றும் குறிப்பாற் பெறப்படுமெனக்கொண்டு, டோலிலையுட்சேராதொழித்து, இதற்கோசச் சொரூபமுள்ள

தொன்றையே, பரனுக்கு உடம்பாடின்மைபற்றி, ச்"சொரூபமுண்மைபரனுக்குடம்பாடாகாதது" எனப்பெயர் கொடுத்து, ஆசிரயவிகனத்தின் வேறுபடுத்தி ஒருதிட்டாந்தப்போலியாக்கினர்.

இதற்கு உதாரணம் மனது அநித்தியம் மூர்த்தமாதலால் என்ற ஏதுசாத்தியங்களுக்கு யாதுயாது அநித்தியமன்று அதுஅது மூர்த்தமன்று ஆகாயம்போல எனப்புத்தசாருவாகரைநோக்கி வைதன்மியதிட்டாந்தங்காட்டுதலாம். இங்குக்கூறிய சாத்தியசாதன தர்மாபாவங்களுக்கு ஆசிரயமாகக்காட்டிய ஆகாயசொரூபம், அவர்களுக்கு உடம்பாடாகாமையால், இது "சொரூபமுண்மைபரனுக்குடம்பாடாகாதது" எனப்பட்டது. இதுவும் மறைஞானதேசிகர்க்கு ஆசிரயவிகனத்துளடங்கும்

கஉ. விபரீதவியாத்தியபிதானமாவது-வெதிரேகவியாத்தி வாசகத்திற் சாத்திய சாதனாபாவங்களை முன்பின்னாகமாற்றிக்கூறித்திட்டாந்தங்காட்டுதலாம். அதாவது மலை நெருப்புடைத்து; புகையுடைமையால்; என்னுமிடத்து, யாதுயாது நெருப்பில்லாதது அதுஅது புகையில்லாதது எனச்சாத்தியாபாவம் முன்னும் சாதனாபாவம் பின்னுமாக வெதிரேகவியாத்தி கூறவேண்டுமுறையேகூறாது, யாதுயாது புகையில்லாதது அதுஅது நெருப்பில்லாதது மடுப்போல எனச்சாதனாபாவம் முன்னும் சாத்தியாபாவம் பின்னுமாகத்தட்டுமாறித்திட்டாந்தம் காட்டுவதாம். இப்படிக்காட்டினால், புகையில்லாத செந்தணலில் நெருப்பிருக்கக்கண்டுழி வியாத்தியுணர்வுதோன்றாமையாலிதுவும் திட்டாந்தப்போலியாமென்பது கருத்து.

இதுமணிமேகலையுள் விபரீதவெதிரேகமென வழங்கப்படும். இதனை.—

(29,461) விபரீதவெதிரேகமாவது.—
பிரிவைத்தலை தடுமாறச்சொல்லுதல்,
சத்தம்நித்தம்மூர்த்தமாதலின்
என்றால்,என்றுநின் றவிடத் து.
யாதோரிடத்துநித்தமுமில்லை அவ்
விடத்துமூர்த்தமுமில்லையெனாதே,
யாதோரிடத்துமூர்த்தமுமில்லையவ்
விடத்துநித்தமுமில்லையென்றால்!
வெதிரேகமாறுகொள்ளுமெனக்கொள்க.



என்பதனானறிக. இங்கு, பிரிவென்றது சாத்தியசாதனங்களின் பிரிவாகிய அவற்றின் அபாவங்களாம். தலைதடுமாறல்-தட்டுமாறல், வியாத்திவாசகத்திற்காட்டியநித்தம், அநித்தம் என்பன அவ்வத்தன்மைகளை யுணர்த்திநின்றன. வெதிரேகம் மாறுகொள்ளுமென்றது-வெதிரேகவியாத்தி தோன்றாது விரோதிக்குமென்றபடி. இது மறைஞானதேசிகருரையுள், விபரீதவியாத்தியபிதானவது, (மனது அநித்தியம்; மூர்த்தமாதலினால் என்ற) இந்த ஏதுசாத்தியங்களுக்கே விபரீதவியாத்தியிலே-(யாதுயாது மூர்த்தமன்று அதுஅது அநித்தமன்று) ஆகாசம்போல என்கிற திட்டாந்தம் பொருந்துதலால் (அது விபரீதவியாத்தியபிதானமெனவறிக.) எனக்குறிக்கப்பட்டது. அதாவது மனது அநித்தியம் மூர்த்தமாதலினால் என்ற ஏதுசாத்தியங்களுக்கு வெதிரேகவியாத்தி சொல்லுமிடத்து யாதுயாது அநித்தமன்று (நித்தியம்) அதுஅது மூர்த்தமன்று ஆகாயம்போல எனச்சாத்தியாபாவம் முன்னும்,சாதனாபாவம் பின்னுமாக வியாப்பியவியாபகங்களை முறையேகூறாது, யாதுயாது மூர்த்தமன்று அதுஅது அநித்தமன்று, என வியாபகமாகிய சாதனாபாவம் முன்னும், வியாப்பியமாகிய சாத்தியாபாவம் பின்னுமாகவைத்துமுறைபிறழ(வெதிரேகமாறுகொள்ள)க்கூறி, ஆகாயம்போல என்று திட்டாந்தங்காட்டினால் இது விபரீதவெதிரேகமாமென்பது குறிப்பு.

இத்திட்டாந்தப்போலியையும், சிவஞானமுனிவர் வியாத்திவாசகத்தை முறைபிறழக்கூறலாகிய உக்திதோஷமுடையதாகக் கொள்ளாது பொருட்குற்றமுடையதாமாறு செயற்கையானாகியவியாத்திபுடையதென்றார். அதாவது. செயற்கையுடைய ஏதுவைக்கொண்டு வியாத்திகாட்டும் திட்டாந்தம் என்பதாம்.

உதாரணம்.—குடம்புருடனாற்பண்ணைப்படுவது; அழிவுடையதாதலால் என்னும் ஏதுசாத்தியங்களுக்குவெதிரேகத்தில், யாதுயாது புருடனாற்பண்ணப்படாதது; அதுஅது அழிவுடையதன்று; ஆகாசம்போல. எனத்திட்டாந்தம் காட்டுதலாம். இங்ஙனம்காட்டில் புருடனாற்பண்ணப்படாத மின் முதலியவற்றில் அழிவுபாடுண்மையால் இயற்கையான் வியாத்தியின்றாம். காரியப்பாடின்மை ஆகிய செயற்கையோடுகூடியவிடத்து யாதுயாது காரியப்பாடில்லதாய்ப்புருடனாற்

பண்ணப்படாதது அதுஅது அழிவுடையதன்று என வெதிரேக வியாத்தியுடைமையால் இது வெதிரேகவியாத்தி செய்கையானுடைய தெனப்படுமாறு காண்க. இவ்வுதாரணத்தின் வெதிரேகவியாத்தி வாசகத்தையே விபரீதப்படக்கூறின், யாதுயாது அழிவுடையதன்று அதுஅது புருடனாற்பண்ணப்படுவதன்று என வியாத்தியுடையதாய் விபரீதவியாத்தியபிதானமாமாறு காண்க. இதனால் விபரீதவியாத்திய பிதானங்களும் வியாத்தி செயற்கையானுடையனவும் பொருளால் வேறில்லையாமாறு காண்க.

இங்ஙனம் மணிமேகலையுட்கூறிய திட்டாந்தப்போலி வகையெல்லாம் அனுமான விளக்கத்துள்ளும் விளங்கக்காணலாம்.

இனி சந்திக்தவகை ஆறனுள் முறையே ௧௩, ௧௪, ௧௫-ஆமிலக்கங்களிடப்பெற்ற சந்திக்தசாத்தியம், சந்திக்தசாதனம், சந்திக்தோபயம் என்பன தைமாதச்செந்தமிழ்ப்பகுதியிற் சுன்னாகம் வித்வான் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்காட்டிய விளக்கத்தால் நன்குவிளங்குதலால் அவை இங்கு விடப்பட்டன.

௧௬. சந்திக்தவாசிரயமாவது - உள்ளதென்று தெளியப்படாது ஐயப்பாட்டிற்கிலக்காயிருப்பதொன்றைத் திட்டாந்தமாகக் காட்டுவது. சந்திக்தம்-ஐயப்பாடுடையது. இங்கு ஆசிரயமென்றது முன்பு அதிகாரப்பட்டுநின்ற சாத்தியசாதனங்களும், இனி அதிகரிக்கப் படுவனவாய்ப்பின்னிற்கும் சாத்தியசாதனாபாவங்களுமாகிய தன்மங்களுக்கு ஆச்சிரயமாகிய திட்டாந்தப்பொருளெனக் கொள்ளத்தக்கது. இதற்கு உதாரணம்-ஆதித்தன் இமையாநாட்டமுடையவன்; தேவனாதலால்; எவன் எவன் தேவனோ அவனவன் இமையாநாட்டமுடையவன்; சயந்தன்மகன்போலும். என்பதாம். இதில் திட்டாந்தமாகக்காட்டப்பட்ட சயந்தன்மகன் என்ற சாத்தியசாதனதர்மாச்சிரயமான திட்டாந்தப்பொருள் உண்டோ இல்லையோ? வென ஐயப்பாட்டிற்கிலக்காயிருத்தலால் இது சந்திக்தவாசிரயமாமெனக்கொள்க. (இது சாதன்மியம்.)

இனி வைதன்மிய உதாரணம் வருமாறு. இந்திரன் தேவனவன்; தேவலோகத்திருத்தலால்; எவனெவன் தேவனில்லை அவனவன் தேவலோகத்திருப்பவனல்லன், சுக்கிரீவன்மகன்போலு



மென்பதாம். இங்குக்காட்டப்பட்ட சுக்கிரீவன்மகன் என்னும் (சாத்தியசாதனதர்மாபாவாச்சிரயமான) திட்டாந்தம் உண்டோ? இல்லையோ? வென ஐயப்பாட்டிற்கிலக்காயிருத்தலால் இது வைதன்மியத்தில் வந்த சந்திக்த வாச்சிரயமெனக்கொள்க.

௧௭. சந்திக்தசாத்தியாவியாவிருத்தமாவது-சாத்தியத்தின் ஐயப்பாடுடையதொன்றை வெதிரேகதிட்டாந்தமாகக் கூறுவது. உதாரணம்.—மலைநெருப்புடைத்து; புகையுடைமையால் என்னும் அனுமானத்தில், யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது மழுப்போல என்பதாம். இங்குக்காட்டிய வைதன்மிய திட்டாந்தமாகிய மழுவில், சாத்தியமாகியநெருப்பு உண்டோ? இல்லையோ? என ஐயப்பாடுடைய பரனுக்கு இது சந்திக்தசாத்தியாவியாவிருத்தமாமெனக்கொள்க. இப்பெயர்ப்பொருள்.—சந்திக்தசாத்தியத்தால் (சாத்தியசந்தேகத்தால்) வேறுபாடு (சாத்தியாபாவநிச்சயம்) தோன்றாதது என்பதாம். வைதன்மியதிட்டாந்தத்திலிருக்கவேண்டிய சாத்தியாபாவநிச்சயமில்லாமையால் இது திட்டாந்தப்போலியாயிற்று. இனிவரும் 'சந்திக்த சாதனாவியாவிருத்தம்' என்பதற்கும் இவ்வாறுபொருளுரைத்துக்கொள்க.

௧௮. சந்திக்த சாதனாவியாவிருத்தமாவது சாதனத்தின் ஐயப்பாடுடையதொன்றை வைதன்மியதிட்டாந்தமாகக்காட்டுவது. உதாரணம்.—பனை புல்வகையுட்சேர்ந்தது புறக்காழுடைமையால், என்னும் அனுமானத்தில் யாது யாது புல்வகையுட்சேராதது அது அது புறக்காழுடையதன்று. முருங்கைபோலும் என்பதாம். இங்கு வைதன்மிய திட்டாந்தமாகக்காட்டப்பட்ட முருங்கை புறக்காழுடையதோ அன்றோ என்று ஐயுறுநிற்கும் பரனுக்குச் சாதனம் சந்திக்தமாதலால் அவனுக்கு இது சந்திக்தசாதனாவியாவிருத்தமாமெனக்கொள்க.

இங்குக்காட்டிய சந்திக்தவகை ஆறனுள், முதல்நின்றமூன்றும் விகலமென வழங்கற்குரிய சாதன்மியப்போலிவகையாகவும், இறுதிநின்ற இரண்டும் அவ்வியாவிருத்தமென வழங்கற்குரிய வைதன்மியப்போலிவகையாகவும், இடைநின்ற சந்திக்த ஆசிரயம் ஒன்றும் சாதன்மிய வைதன்மியங்களிரண்டற்கும் இடையே பொதுமையிற்கூறியதாகவும் ஏற்புழிக்கோடலாற்கொள்க.

இங்குச்சாதன்மியவைதன்மியங்களுக்குப் பொதுப்படக்கூறிய சந்தித்த வாச்சிரய: போலவே ஆசிரயசினத்தையும் சாதன்மிய வைதன்மியங்களுக்குப் பொதுவாகவைத்து, ஆசிரயசிகினத்தை யொழிப்பினுமிழுக்காது.

ஆயின் திட்டாந்தப்போலி பதினெட்டு என்னும் எண்ணுள் ஒன்று குறைபடும். அதற்கீடாக, சந்தித்தவகையிற்கூறுதுவிட்ட உபயாவியாவிருத்தமொன்றுகூட்டிப் பதினெட்டாக்கிக்கொள்ளலும் கூடும். அங்ஙனம்கொள்ளுங்கால் அதன் விவரணமும் பின்வருமாறு காண்க.

கஅ. சந்தித்தோபயாவியாவிருத்தமாவது சாத்தியசாதனங்களிரண்டினும் ஐயப்பாட்டிற் கிலக்காயிருப்பதொன்றை வைதன்மிய திட்டாந்தமாகக்கூறுவது.

உதாரணம்.—"காற்று அளவுடையது; செலவுடையதாதலால்." என்னும் அநுமானத்தில், ("யாதுயாது செலவுடையது அது அது அளவுடையது அம்புபோலும்." எனச்சாதன்மிய திட்டாந்தம் காட்டியபின்பு) யாது யாது அளவுடையதன்று? அது அது செலவுடையதன்று; சத்தம்போல என (சத்தத்தின் இயல்பறியாதபரனுக்கு) வைதன்மிய திட்டாந்தங்காட்டுதலாம். இங்குக்காட்டிய வைதன்மியதிட்டாந்தம் சத்தம்; அது, சிறிது, பெரிது, குறிது, நெடிது என வழங்கப்படுதலால் அளவுடையதோ? குணமாதலால், அளவென்னும் பிறிதொருகுணமில்லாததோ? என்று துணிபொருளைப் பாடும், அலைபோற்சூழ்ந்து செய்மைக்கண்ணும் புடைபெயர்தலால் செலவுடையதோ? குணமாதலாற்செலவில்லாததோ? எனவதனைப் பாடும் உடையபரனுக்குச் சத்தத்தின்கட் சாத்தியசாதனபாவ நிச்சயமான வேறுபாடுதோன்றாமைபற்றி இது சந்தித்தோபயாவியாவிருத்தமாமெனக்கொள்க. இன்னும் இவ்வாறே ஒவ்வோருவமைப்போலிக்கும் வெவ்வேறுதாரணங்களும் உய்த்துணர்ந்துரைத்துக் கொள்க. சிவாக்கிரயோகிகளுரையிற்கண்டவகையும் ஒருவாறுகாட்டப்படும்.

(தொடரும்.)

பத்திராதிபர்.

---

# ஏதுப்போலி.

ஏதுப்போலியாவது தருக்கநூல்களிற் சொல்லப்பட்ட பிரமாணங்களுள் அநுமானப் பிரமாணத்தாற் பெறப்படும் அநுமிதியறிவைத் தடைசெய்யுங் குற்றங்களுள் ஒன்று. அஃது ஏதுவுக்குரிய இலக்கணத்திலே குறைவுடையதாயிருந்தும் ஏதுப்போலத் தோன்றுதலால் ஏதுப்போலி என்னும் பெயருடையதாயிற்று. ஏதுவாவது இன், ஆன் என்னும் வேற்றுமையுருபுகளுள் ஒன்றீறாக நின்று பொருளைத் துணிவிக்குங் குறியை அறிவிப்பது. போலி போல்வது. இதனை வடநூலார் ஏத்துவாபாசம் என்பர். ஏது—|—ஆபாசம்—ஏத்துவாபாசம். ஆபாசம்—பிரதிபிம்பம், நிழல்.

இந்த ஏதுப்போலியும் அநைகாந்திகம், விருத்தம், சற்பிரதிபக்கம், அசித்தம், பாதிதம் என ஐவகைப்படும். இவற்றுள் அநைகாந்திகம் சாதாரணம், அசாதாரணம், அநுபசங்காரி என மூவகைப்படும். அசித்தமும் ஆசிரயாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பியத்துவாசித்தம் என மூவகைப்படும் என இரண்டுக்கும் வகைகாட்டி மற்றையன ஒவ்வொன்று எனத் தருக்கசங்கிரகம், தருக்ககௌமுதி முதலிய நூல்கள் கூறும். சிவஞானசித்தியோ வகையால் மூன்று என்றும், விரியால் இருபத்தொன்று என்றும் கூறும். "ஏதுப்போலியொருமூன்றாய் வேண்டுமெழுமூன்றாகும்" என்பது சிவஞானசித்தி. சித்தியுரைகாரருள்ளே மறைஞானதேசிகர் அநைகாந்திகம் ஏழு என்றும், விருத்தம் இரண்டு என்றும், அசித்தம் பன்னிரண்டு என்றுங் கூறி அவைகளையுங் காட்டினர். மற்றைய உரைகாரரும் பலவற்றிலே முரணுவர். மறைஞானதேசிகர் கூறிய விருத்தமும் அசித்தமும் இங்கே காட்டப்படுகின்றன.

## விருத்தம்.

விருத்தமாவது சாத்தியத்தின் அபாவத்திலே வியாபிக்கும் ஏது. அது பக்கவிபக்க வியாபக விருத்தம், பக்கவிபக்கைகதேசவிருத்தம் என இருவகை. விருத்தம்-முரணியது.

௪. பக்கவிபக்க வியாபகவிருத்தமாவது பக்கத்திலும் விபக்கத்திலும் வியாபித்துச் சபக்கத்திலே வியாபகமாகாத ஏது. (உ-ம்.) சத்தம் நித்தியம் காரியமாகையான்; ஆன்மாவைப்போல. இங்கே காரியமாகையான் என்னும் ஏது பக்கமாகிய சத்தத்திலும், விபக்கமாகிய குடத்திலும் வியாபித்தலும் சபக்கமாகிய ஆன்மாவில் வியாபியாதிருத்தலும் அறிக.

௫. பக்கவிபக்கைகதேசவிருத்தமாவது...............

அசித்தம்.

அசித்தமாவது பக்கத்திலேசென்று வியாபியாமையான் முடிவு பெறாதிருக்கும் ஏது. வியாத்தியோடுகூடிப் பக்கத்திலேசென்று முடியும் ஏதுவே முடிவு பெறுவது. அசித்தம் முடிவு பெறாதது. சித்தம்—முடிவு பெறுவது.

அசித்தவகை.

௧. சொரூபாசித்தம்.
௨. வியாத்தியதிகரணாசித்தம்.
௩. விசேடியாசித்தம்.
௪. விசேடணாசித்தம்.
௫. பாகாசித்தம்.
௬. ஆசிரயாசித்தம்.
௭. ஆசிரயைகதேசாசித்தம்.
௮. வியர்த்தவிசேடியாசித்தம்.
௯. வியர்த்தவிசேடணாசித்தம்.
௧௦. சந்தேகாசித்தம்.
௧௧. சந்திக்தவிசேடியாசித்தம்.
௧௨. சந்திக்தவிசேடணாசித்தம்.

௧. சொரூபாசித்தமாவது பக்கத்திலே சொரூபம் இன்மையான் முடிவுபெறாத ஏது. சொரூபம் தன்னியல்பு (உ-ம்.) சத்தம் அநித்தியம் காணப்படுகையான்; குடம்போல. இங்கே சத்தமாகிய பக்கத்திலே காணப்படுகை என்னும் ஏது தன்னியல்பில் இல்லை.

௨. வியாத்தியதிகரணாசித்தமாவது...............
.......................

௩. விசேடியாசித்தமாவது தன்பாலுள்ள விசேடியம் பக்கத்தின்மையான் முடியாத ஏது. (உ-ம்.) வாயு காட்சிப்பொருள் பரிசமுடைய உருவமுடைமையான். இங்கே ஏதுவின்கணுள்ள உருவமுடைமையாகிய விசேடியம் வாயுவாகிய பக்கத்தில் இன்மை அறிக. இதனைச் சிவஞானமுனிவர் "விசேடியமில்லது" என்பர்.



௪. விசேடணாசித்தமாவது தன்பாலுள்ள விசேடணம் பக்கத்தின்மையான் முடியாதது. உ-ம். சத்தம் அநித்தியம் காணப்படும் பொதுமையுடைமையான். இங்கே ஏதுவினுள்ள காணப்படுகையாகிய விசேடணம் சத்தமாகிய பக்கத்தின்மை அறிக. இதனைச் சிவஞானமுனிவர் "விசேடணமில்லது" என்பர்.

௫. பாகாசித்தமாவது ஒரு பாகத்திலிருத்தலின்மையான் முடியாத ஏது. உ-ம். உயிருமுடம்பும் நித்தியம். காரியமாகையான் இங்கே காரியம்என்னும் ஏது உயிருமுடம்பும் என்னும்பக்கத்திலே ஒரு பாதியாகிய உயிரில் இருத்தலின்மை அறிக.

௬. ஆசிரயாசித்தமாவது..............
.......................

௭. ஆசிரயைகதேசா சித்தமாவது...............
.......................

௮. வியர்த்த விசேடியாசித்தமாவது பயனிலதாகிய விசேடியமுடைமையான் முடியாத ஏது. உ-ம். சத்தம் அநித்தியம் காரியமான சாமானியமுடையதாதலின். இங்கே சாமானியம் என்னும் விசேடியம் வியர்த்தம். வியர்த்தம் - பயனிலது.

௯. வியர்த்தவிசேடணாசித்தமாவது பயனிலதாகிய விசேடணமுடைமையான் முடியாதஏது. உ-ம். சத்தம் அநித்தியம். சாமானியமான காரியமாதலின். இங்கே சாமானியம் என்னும் விசேடணம் வியர்த்தமாதல் அறிக.

௧௦. சந்தேகாசித்தமாவது ஐயமுடைமையால் முடிவுபெறாத ஏது. உ-ம். இம்மலை நெருப்புடையது. புகையோ பனியோ தோன்றலால். இங்கே புகையோ ? பனியோ என்பது ஐயம்.

௧௧. சந்திக்த விசேடியாசித்தமாவது ஐயப்பட்ட விசேடியமுடைமையான் முடியாத ஏது. உ-ம். கபிலர் இப்பொழுது விருப்பு

வெறுப்புக்களோடு கூடினவர். புருடதத்துவத்தோடுகூடிய தத்துவ ஞானமில்லாத புருடராகையின். இங்கே புருடதத்துவத்திற்குவிசேடியமாய்நின்ற தத்துவஞானம் அவரிடத்திலே உண்டோ? இல்லையோ? எனத் தெரியாமையால் ஐயப்பட்டதாயிற்று. சந்திக்தம் - ஐயப் பட்டது.

௧௨. சந்திக்தவிசேடணாசித்தமாவது ஐயப்பட்ட விசேடண முடைமையான் முடியாத ஏது. உ-ம். கபிலர் இப்போது விருப்பு வெறுப்புக்களோடு கூடினவர். தத்துவஞானமில்லாத புருடதத்துவ முடைமையால், இங்கே புருடதத்துவத்திற்குத் தத்துவஞான மின்மை விசேடணம். தத்துவஞானம் அவரிடத்திலே உண்டோ? இல்லையோ என்பது சந்திக்தம்.

இங்கே எழுதப்பட்டவைகளிலுள்ள வழுக்களைத் திருத்திவிட வேண்டும். சித்தியாருக்கும் உரைக்கும் தர்க்கசங்கிரகம்முதலிய நூல்களுக்குமுள்ள முரண்களையும் இணக்கவேண்டும். எழுதப்படாத வற்றின் விவரம் எழுதவும்வேண்டும். மறைஞானசம்பந்தருரைக்கு முதனூல் யாது என்பதையும் அறிவிக்கவேண்டும்.

இவைகளைச் சித்தியார் முதலிய சித்தாந்தசாத்திரங்களையும். அவற்றின் உரைகளையும், அவைகளை உள்ளவாறுணர்தற்குக் கருவிக ளாய் விளங்கும் தருக்கம், இலக்கணம், நிகண்டு, புராணம் முதலிய நூல்களையுங்கற்றுணர்ந்த பண்டிதர்களும், தருக்கம் முதலிய கற் றுணர்ந்த பண்டிதர்களும் நன்குநோக்கி உரைகளையும்நோக்கித்தமது கருத்தை எழுதக்கடவர்.

சைவதாபன நிமித்தம் சைவப்பிரசங்கஞ்செய்தல், சைவசமாசந் தாபித்தல், நூலுரைகளை எழுதுதல், எழுதுவித்தல், கற்பித்தல் முதலியவற்றிலே சிந்தையுள்ளார்க்கு இவ்விடயத்திலுஞ்சிந்தைசெல லும். அவர்க்கு இவ்விடயத்தை அறிதலும் அவசியம்.

இங்ஙனம்,

ந. குமாரசுவாமிப்பிள்ளை.

---

௨

# மதுரைத்தமிழ்ச்சங்கம்.

## தனித்தமிழ்ப்பரீக்ஷை விஞ.

---

## பண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

மஹாமஹோபாத்தியாய

### வே. சாமிநாதையர்.

---

## இலக்கணம் I.

சித்தார்த்தி௵ பங்குனி௴ 24௳ (5-4-20) 10-மணிமுதல் 1-மணிவரை.

(அம்சம் 60.)

I. (1) தொல்காப்பியத்திற்குத் தமிழில் முதனூலுண்டென்பதற்கு உரிய ஆதாரங்கள் இரண்டெழுதுக.

(2) அதிகாரமென்பதற்குச் சேனாவரையர்கொண்ட பொருள் யாது? சிவஞானமுனிவர்கொண்ட பொருள் யாது?

(3) கிளவியாக்கத்திற்கும் வேற்றுமை யியலுக்கும் உரையாசிரியர் காட்டிய இயைபு என்ன? அது பொருந்துவதன்றென்பதற் குச் சேனாவரையர் என்ன நியாயங் காட்டினர்?

(4) எச்சவியலென்பதற்கு உரையாசிரியரும் சேனாவரையரும் கொண்ட பொருள்களெவை?

(5) பிரயோகவிவேகநூலுடையாரிடத்துள்ள விசேட இயல்புகள் யாவை?

(6) பண்டையுரையாசிரியர்களுள் யார்யாரிடத்து இவர்க்கு நன் மதிப்புண்டு? காரணத்துடன் தெரிவிக்க.

(7) வரருசி, பதஞ்சலி யென்பவர்களுக்குரிய வேறு பெயர்க ளென்ன? இவர்களியற்றியவை யாவை?

II. (1) "ஆயெட்டென்ப தொழின்முதனிலையே" "அவ்விருமுதலிற் றோன்றுமதுவே", இவற்றுள் எட்டு, இருமுதலென்பன யாவை?

(2) "பெயரினாகியதொகையுமாருளவே, யவ்வுமுரியவப்பாலான:" இதற்கு உரையும் உதாரணமு மெழுதுக.

(3) "குன்றியலுகரத்திறுதியாகும்" இதிற் குற்றியலுகரமென்னாமைக்குக் காரணமென்ன?

(4) "குஐஆனெனவரூஉமிறுதி" இதில் உருபுகளைமாற்றி அமைத்ததிலுள்ள விசேடமென்ன?

(5) "செய்கென்கிளவிவினைகொண்டுமுடியினு மவ்வியறிரியாது" என்பதைத் தடை விடைகளால் விளக்குக.

(6) "பொருட்குப்பொருடெரியினதுவரம்பின்றே" இச்சூத்திரம் எதற்காகக் கூறப்பட்டது?

(7) புணரியனிலையிடைப்பொருணிலைக்குதவுநவும் வேற்றுமைப் பொருள்வயினுருபாகுநவும் ஒப்பில்வழியாற்பொருள்செய்குநவு மாகிய இடைச்சொற்களின்வகையை விளக்கி முறையே ஒவ்வோருதாரணம் தருக.

II. (1) முன்னிலைசுட்டியவொருமைக்கிளவி பன்மையொடுமுடிவது பெரும்பாலும் எந்த நூலில்? அங்ஙனம் முடிவதற்குக் காரணமென்ன?

(2) வினைகொண்டுமுடிதலை விதியாகப்பெற்ற மாரீற்று வினைச்சொல் "பாடன்மாரெமரே" என்புழிப் பெயர்கொண்டு முடிந்ததற்குச் சமாதானம் என்ன?

(3) குறைச்சொற்கிளவிக்கும் தொகுக்கும்வழித்தொகுத்தற்கும் வேறுபாடு யாது?

(4) பெயரெச்சம் எவ்வகைப்பெயர்களைக்கொண்டு முடியும்? "நின்முகங்காணுமருந்தினேன்", "ஆறுசென்றவியர்" என்பவற்றிலுள்ள பெயரெச்சங்கள் அப்பெயர்களுள் எவற்றைக்கொண்டு முடிந்தன?

(5) "உரற்கால்யானையொடித்துண்டெஞ்சிய யாஅ வரிநிழற்றுஞ்சும்" இதிலுள்ள வினையெச்சமுடிபு, "முதனிலைமூன்றும் வினைமுதன்முடிபின" என்னும்விதிக்கு மாறென்பதைப் புலப்படுத்திச் சமாதானமும் எழுதுக.

(6) "அரசோதஞ்சம்", "நிற்றகைக்குநர்யாரோ" இவற்றிலுள்ள இடைச்சொற்கள் எவ்வெப்பொருளில் வந்தன?



(7) "புரையமன்றபுரையோர்கேண்மை", "ஏகலடுக்கம்" "தடமருப்பெருமை", பணைத்துவீழ்பகழி", "அவலெறியுலக்கைப் பாடுவிறந்தயல", "ஆரங்கவைஇயமார்பே", "நனவுப்புகு விறலியிற்றோன்றும்:" இவற்றிலுள்ள உரிச்சொற்களை முறையே எடுத்துக்காட்டி அவற்றிற்குப் பொருளுமெழுதுக.

(8) "எழுதுவரிக்கோலத்தாரீவார்க்குரியார்": இதனாற் குறிக்கப்பட்டது யாது? இஃது எதற்கு உதாரணம்?

(9) "அரியகானஞ்சென்றோர்க் கெளியவாயின தடமென்றோளே", "நல்லவையெல்லா அந்தீயவாந்தீயவு, நல்லவாஞ்செல்வஞ் செயற்கு": இவற்றிலுள்ள ஆக்கத்திற்குக் காரணங்கள் எவை?

IV. (1) வீடுமின், தண்ணந்துறைவன் இவற்றிலுள்ள விகாரங்களை முறையே தெரிவிக்க.

(2) இக்காலத்துப்பயின்றுவாரா அசைநிலைகள் யாவை?

(3) இரட்டைக்கிளவிக்கு உவமையென்ன? மொறுமொறுத்தார், குறுகுறுத்தது இவை எவைபற்றி வந்தன? குறுகுறுத்ததென்பதைப் பிரித்தாலென்ன?

(4) பன்மைபற்றியவழக்கிற்கும் தலைமைபற்றியவழக்கிற்கும் ஒவ்வோருதாரணம் தருக.

(5) உயர்திணைப்பெயர்களுள் விளிகொள்வன எவை?

V. (1) வழூக்காத்தல் எத்தனை வகைப்படும்?

(2) வேற்றுமையென்பதற்குப் பொருளென்ன?

(3) ஞாபகம், வெள்ளொக்கலர், இனச்சுட்டில்லாப்பண்புகொள் பெயர்க்கொடை, ஐயப்புலப்பொதுச்சொல், நோக்கனோக்கம், நின்றுவற்றல்: இவற்றை விளக்குக.

(4) ஆக்கம், நறுங்கு, இடைநிலை, வண்ணக்கர்: இவற்றுக்குப் பொருளென்ன?

IV. (1) செயப்படுபொருளைச் சேனாவரையர் வகுத்துக்கொண்ட வகைகள் இன்னவென்று தெரிவிப்பதுடன் பிரயோகவிவேக நூலுடையார் அதற்குக்காட்டிய ஆதாரத்தையும் தெரிவிக்க.

(2) சதிசத்தமியைத் தொல்காப்பியரும், பரிமேலழகரும் எவ்வாறு வழங்குவர்?

(3) உருபுமயக்கத்திற்கும் பொருண்மயக்கத்திற்குமுள்ள வேறுபாடு என்ன?

(4) "கச்சினன் கழலினன்" என்பதற்கு, பிரயோகவிவேக நூலுடையார் எழுதிய இலக்கணமுடிபென்னை?

(5) எழுத்தியல்பைப்பற்றிச் சத்தநூலாரும் தருக்கநூலாரும் கூறுவனவற்றை முறையே தெரிவிக்க.

(6) செந்தாமரை, செங்கரும்பென்பன எங்ஙனம் விரிக்கப்படும்?

(7) மக்கட்சுட்டென்பதற்குக் கல்லாடரும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறிய இலக்கணவிசேடங்கள் என்ன?

---

## பண்டிதர் வகுப்பு.

பரீக்ஷகர்

## ரா. இராகவையங்கார்.

## இலக்கணம். II.

சித்தார்த்தி௵ பங்குனி௴ 24௳ (5-4-20) 2-மணிமுதல் 5-மணிவரை.

(அம்சம் 60.)

I 1. இறையனாரகப்பொருள் களவியல் என்று பெயர்பெற்றதன் காரணத்தை விளக்குக.

2. "கற்புக் களவுபோல ஒருதலையான அன்பிற்றன்று" என்று துணிந்தது எதுபற்றி?

3. முதனூலாகிய இறையனாரகப்பொருளில் "கந்தருவவழக்க மென்மனார் புலவர்" என வழிநூல் வாய்பாட்டாற்கூறியதற்கு ஏது என்னை?

4. நக்கீரனாரும் சிவஞானமுனிவரும் அபிப்பிராயபேதப்படுவனவற்றுள் இரண்டெடுத்துக் காட்டுக.

5. "தானேயவளே தமியர்காண" என்புழித் "தமியர்காண" என்பதற்குப் பொருள்கூறி அங்ஙனம் பொருள்கொள்ளுதற்குக் காரணமுங் காட்டுக.

6. மாயப்புணர்ச்சி, சேட்படைமறுத்தல், படைத்துமொழிகிளவி, களவினுட்டவிர்ச்சி இத்தொடர்களை விளக்குக.

II 1. பாண்டியன் அரிகேசரியின் வரலாற்றை இறையனாரகப்பொருட் கோவைக்கலித்துறையினின்று நீவிர் தெரிந்தவாறு எழுதுக.



2. அறத்தொடுநிலை இன்னதென்று விளக்கி அதற்கு வேறோர் பெயரும் எழுதுக.

3. "வெண்டிரைமேனின்றான்" இவன் வரலாற்றினை நீவிர் தெரிந்தவாறெழுதுக.

4. "கொடுமையில்லைக்கிழவிமேன" இச்சூத்திரம் இன்ன சந்தர்ப்பத்து இன்ன காரணம்பற்றி நிகழ்ந்தது என்று விளங்க எழுதுக.

5. இரவுக்குறிக்கும் பகற்குறிக்குமுள்ள வேற்றுமையினை எடுத்துக் காட்டுக.

6. "அல்லகுறிப்படுதல்" இஃதென்று விளக்கி எழுதுக.

III 1. "அக்காலிடத்துமெய்க்காலொழிஇ" இதன்கட் கூறிய காலிடத்தையும் எழுதுக.

2. சேனூர், ஆற்றுக்குடி இவை யாருடையன? ஆதாரத்துடன் எழுதுக.

3. களவினகத்துப்பிரிவினைக் கற்பினுட்போலப்பிரிவென்று ஆசிரியர் வேண்டாமைக்குக் காரணங்காட்டுக.

4. "முன்னமல்லது கூற்றவணில்லை" என்புழி முன்னம் என்பது இன்னதென்று காட்டுக.

5. "முற்படப்புணராதசொல்லின்மையிற் கற்பெனப்படுவது களவின்வழித்தே" இச்சூத்திரத்துக்குப் பொருளெழுதுக.

6. குறியாள்கூற்றுக்கு ஒருதாரணங் காட்டுக.

IV 1. எழுத்தென்னுங்குறி உடனிகழ்ச்சிபற்றிய பெயராகாது என்றார்; உடனிகழ்ச்சிபற்றியபெயர் இன்னதென்று விளக்குக.

2. நட, வா முதலிய முதனிலைகள் நால்வகைச்சொற்களுள் இன்ன என்று காரணத்துடன் எழுதுக.

3. யோகவிபாகம் இஃதென்று விளக்குக.

4. "மூப்பஃதென்ப" என்புழி 'என்ப'என எதிர்காலத்தாற்கூறியதனயத்தை எடுத்துக்காட்டுக.

5. வினைமுதனிலை, பெயர்விகுதி, இடைநிலை, வினைமுதனிலை மேல்வரும்பெயர்விகுதி இவற்றிற்கு வடமொழிப்பெயர் எழுதுக.

6. 'அலங்கடை' இஃது இன்ன சொல் என்று விளக்குக.

V 1. மரபினை என்பது மரபென்னும்பண்படியாகத் தோன்றிய பெயர் என்றார்; வினைக்குறிப்போடிதனிடை வேற்றுமை யிஃதென்று விளக்குக.

2. "ணகரவிறுவாய்" என்புழி இறுவாய் என்பது இன்ன தொகை யென்று விளங்க வெழுதுக.

3. "பாணன்பறையன்றுடியன்கடம்பனென், ' றந்நான்கல்லது குடியுமில்லை" என்புழிப் பாணன் முதலியன இன்னதிணை யென்று காரணத்துடன் எழுதுக.

4. "அகரமுதனகரவிறுவாய்" என்றது அறுவாதமாதல் யாங்ஙனம்?

5. உடம்பொடுபுணர்த்தல் என்பதனை விளக்கி இதற்குதாரணம் தொல்காப்பியப் பாயிரத்தினின்று காட்டுக.

6. திங்களன்னகல்வி, ஞாயிறன்னவாய்மை இவ்வுவமையிலுள்ள பொருத்தன்மைகளை விளக்குக.

---

## பண்டிதர்வகுப்பு.

### பரீக்ஷகர்

### ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

---

## இலக்கியம் I

சித்தார்த்தி௵ பங்குனிமீ ௨௫உ (6-4-20) 10-மணிமுதல் 1-மணிவரை (அம்சம் 90.)

### மதுரைக்காஞ்சி.

1. மதுரைக்காஞ்சி என்பதற்குப் பொருளென்னை?

2. மதுரைக்காஞ்சியென்னுமித்தொடர்மொழி என்னதொகை?

3. ஈண்டுக் காஞ்சி என்பது எத்திணையின் பாற்படும்?

4. "ஒலிமுந்நீர்வரம்பாக" என்றதில் முந்நீர் என்பதற்குப் பொருளென்னை?

5. "தென்னவற்பெயரியதுன்னருந்துப்பிற் றொன்முதுகடவுட்பின்னர்மேய-வரைதாழருவிப்பொருப்பிற்பொருந" இவ்வடிகட்குப் பொருள் வரைக.



தென்னவன் என்றது, இன்னும் யார்யார்க்குப் பெயராகுமென்று விசேடவுரை கூறினர்?

6. "அரசுபடவமருழக்கி - முரசுகொண்டுகளம்வேட்ட - வடுதிறலுயர் புகழ்வேந்தே" என்றதில் களம்வேட்டல் என்றதற்குப் பொருளென்னை? அதனை விரித்தெழுதுக.

7. "பாலைசான்றசுரஞ்சேர்த்து" என்றதற்குப் பொருள் வரைக. பாலையை வேறோர் நிலமாகக் கூறியதற்கு விசேடவுரையில் என்ன காரணங் கூறியிருக்கின்றார்?

8. "ஓவுக்கண்ட விரும்பெருநியமத்து" என்றதற்குப் பொருள் வரைக.

9. "சிறந்தவேதம் விளங்கப்பாடி" என்றதில் அதர்வமொழிந்த வேதம் என வுரைகூறினர்; அவ்வாறு கூறுவதற்குக் காரணமென்னை?

10. "தாமேஎந்தோன்றியநாற்பெருங்குழுவும்" இவ்வடிக்குப்பொருளை விளக்கி வரைக.

11. இந்நூலுள்ளே நீவிர் தெரிந்துகொண்ட சிறந்த பொருள்களிவை யென வரைக.

12. அவல், மிசை, ஐயவி, தாரம், வை, நனந்தலை, கவல், அல்லங்காடி, இளிச்சிறை, இரும்பூது, பொய்தல், அகவல் என்னுமிப்பதங்கட்கு இந்நூலுள் என்ன பொருளுரைத்தார்?

### சீவகசிந்தாமணி.

1. "தாய்மாண்ட தெங்கின்பழம்
பூமாண்ட தீந்தேன்"
இதில் வந்தவெதுகை யின்னதென வரைக?

2. "குழவிவெண்மதிக்கோடுழக்கீண்டுதேன்
முழவினின்றதிர்மொய்வரைச்சென்னியி
னிழியும்வெள்ளருவித்திரள்யாவையுங்
குழுவின்மாடத்துகிற்கொடிபோன்றவே"
இக்கவிக்குப் பொருள்வரைக. இதிற் பொருள்கோள் இன்னதெனவும், அலங்காரமின்னதெனவும், வரைக.

3. "விழுக்கலஞ் சொரியச்சிந்தி வீழ்ந்தவை யெடுத்துக்கொள்ளா வொழுக்கினரவர்கள்செல்வமுரைப்பர்தொழிகவேண்டா" இச் செய்யுளிற்கூறிய வேண்டா என்னுஞ்சொல்லை, ஈஎசு ஆவது

முதற் பலகவியினும் கூறியிருக்கின்றார்; அச்சொற்குப் பொருளென்னை? என்ன சொல்? என்னபாலை யுணர்த்தும்?

4. சீவகனுற்பத்தியானபின் "கறைபன்னீராண்டுடன்விடுமின்" எனக் கூறியிருக்கின்றது; பன்னீராண்டென்னும் வரையறை எதன்பொருட்டு?

5. சீவகனெனப் பெயர் எய்தியதற்குக் காரணம் யாது?

6. "பாயுமாரிபோற் பகழிசிந்தினா
ராயர்மத்தெறி தயிரினாயினார்"
இதிற் சிந்தினார் என்பதனை என்னசொல்லாகவைத்துரைசெய்தார்? ஈண்டு ஆயரென்பது யாரை?

7. "தன்பான்மனையாளயலான்றலைக்கண்டுபின்னும் . மின்பாலடிசிற் கிவர்கின்றகைப்பேடிபோலா" இவ்வடிகட்குப் பொருள்வரைக. போலா என்பதனை இங்கே என்னசொல்லாகவைத்துரைகூறினார்.

8. "முருகுவிம்முகோதையார்" என்னுமுதற்குறிப்புள்ள கவியில், ஐங்கணை இரண்டெனவுரைசெய்தார்; அவையாவை?

9. "பருந்துமதனிழலும்பாட்டுமெழாலுந்
திருந்துதார்ச்சீவகற்கேசேர்ந்தனவென்றெண்ணி"
இவ்வடிகட்குப் பொருள் விரித்து வரைக.

10. "ஐந்துமூன்றடுத்தசெல்வத்தமளிமூன்றியற்றி"
என்னுமிதற்குப் பொருள் விரித்து வரைக.

## கலித்தொகை.

1. "தாளிற்கடந்தட்டுத்தந்தையைக்கொன்றானைத்
தோளிற்றிருகுவான்போன்ம்"
இவ்வடிகட்குப் பொருள் விளங்கவரைக.

2. "இருளையிஃதொன்றுகண்டை யிஃதொத்தன்
கோவினத்தாயமகனன்றேயோவான்
மறையேற்றின்மேலிருந்தாடித்துறையம்பி
யூர்வான்போற்றோன்றுமவன்"
இவ்வடிகட்குப் பொருள் வரைக.
கண்டை, ஒத்தன் இவை என்ன சொற்கள்?
இவற்றின் பகுதிகள் யாவை?



3. "பான்மதிசேர்ந்தவரவினைக் கோள்விடுக்கு
நீனிறவண்ணனும்போன்ம்" இவ்வுவமானத்திற்குக்கூறிய
வுவமேயமின்னதென வரைக.

4. "பெரும்பெயர்க்கணிச்சியோன்மணிமிடற்றணிபோல
விரும்பிணரெருத்தி னேந்திமிற்குராலும்"
இவ்வடிகட்குப் பொருள் வரைக.
பெரும்பெயரென்றதற்கு, இவ்வுரையிற்கூறிய பொருளன்றி வேறு பொருளுணர்ந்திருப்பினதனை வரைக.

5. "வைகற்பதின் மரைக்—காமுற்றுச் செல்வாயோர்
கட்குத்திக்கள்வனை" என்றதிற்கூறிய பழமொழியாது?
ஈண்டு அதன் கருத்தென்னை?

6. "தருமணற்றாழப்பெய்தில்பூவலூட்டி
யெருமைப்படையோடெமரீங்கயரு
பெருமணமெல்லாம்"
இவ்வடிகட்குப்பொருள் வரைக.
இவ்வடிகளில் ஆகு பெயர் யாது?

7. "காணுமையுண்டகடுங்கள்ளை மெய்கூர
நாணுதுசென்று நடுங்கவுரைத்தாங்கு"
இவ்வுவமை எதற்காகக் கூறியது? ஆங்கு என்றது என்னசொல்?

8. "பாட்டங்காற் கன்றொடு செல்வேம்"
"தொடீஇயசெல்வார்த்துமித்து" இத்தொடர்கட்குப் பொருளென்னை?

9. "போழிற்புனைந்தவரிப்புட்டில் புட்டிலுளென்னுள"
இவ்வடிக்குப்பொருள்வரைந்து, இவ்வடிவந்தபாட்டுக்குத் துறையும் வரைக.

## பண்டிதர் வகுப்பு.

பரீக்ஷகர்

தி. த. கனகசுந்தரம்பிள்ளை.

## இலக்கியம் II.

சித்தார்த்தி௵ பங்குனி௴ 25உ (6-4-20) 2 மணி முதல் 5 மணி வரை.
(அம்சம் 90.)

[இராமாயணம்-பாலகாண்டம்; திருக்கோவை, 150-307; பெரிய திருமொழி முதல் 300 செய்யுள்.]

I. (1) கம்பராமாயணம், திருக்கோவை, பெரியதிருமொழி என்னும் இம்மூன்று நூல்களும் தோன்றியகாலத்தை ஆராய்ந்து அவற்றின் முற்பிற்பாடுகளை ஆதாரத்துடன் புலப்படுத்துக.

(2) கம்பருடைய செய்யுணடை எத்தன்மைத்தென்று விவரிக்க.

II. (1) இராமன்முறித்த வில்லின் வரலாறு கார்முகப்படலத்திற் கூறப்பட்டதற்கும் பரசுராமப்படலத்திற் கூறப்பட்டதற்குமுள்ள வேற்றுமை யாது? அதற்குக் காரணமென்ன?

(2) சுனசேபன்கதை மிதிலைப்படலத்திற் கூறப்பட்டதற்கும் வேதத்தில் (ஆத்திரேயபிரமாணத்தில்) கூறப்பட்டதற்குமுள்ள வேற்றுமை யாது? அதற்குக் காரணமென்ன?

(3) இராமன் அயோத்தியினின்று விசுவாமித்திரரோடு அவரது ஆசிரமஞ்சென்று பின்னர் அங்குநின்றும் புறப்பட்டு மிதிலையை அடைந்த வழியைப் புலப்படுத்துக.

III. (1) ஏகம்முதற்கல்விமுளைத்தெழுந்தெண்ணில்கேள்வி
ஆகும்முதற்றிண்பணைபோக்கியருந்தவத்தின்
சாகந்தழைத்தன்பரும்பித்தருமம்மலர்ந்து
போகங்கனியொன்றுபழுத்ததுபோலுமன்றே.

(a) இதற்குத் தெளிவாக உரையெழுதி இதன் கருத்தின்னதென்று விளக்குக.

(b) இதற்கும் "அம்மாணகருக்கரசன்" என்றற்றொடக்கத்து அடுத்த பாட்டிற்குமுள்ள இயைபென்ன.



(2) நின்றேநெறியுணர்வானொருவினைவாளனையழையா
நன்றேபழுதுளதோநயமுரைநீநடுவென்னக்
குன்றேபுரைதோளானெதிர்புள்ளின்குறிதேர்வான்
இன்றேவருமிடையூறதுநன்றாய்விடுமென்றான்.

இன்றேவருமிடையூறதுநன்றாய்விடுமென்று புள்ளின்குறிதேர்வான் கூறியதற்கு ஆதாரம் யாது?

(3) வெங்கண்யானையனான்றனிவெண்குடை
திங்கடங்கள்குலக்கொடிசீதையாம்
மங்கைமாமணங்காணியவந்தருள்
பொங்கிப்பொங்கித்தழைப்பதுபோன்றதே.
இதில் சீதையைத் திங்கடங்குலக்கொடி என்றது யாங்ஙனம்?

(4) (a) மன்மதக்களிறுமாதர் கொங்கையுமாரனம்புந்
தென்வரைச்சாந்துநாறுஞ்சேனையுமிறுத்ததன்றே.

(b) இஞ்சி - குன்றேங்குதோளார்குணங்கூட்டிசைக்குப் பையென்ன - ஒன்றேடிரண்டுமுயர்ந்தோங்கினவும்பர்நாண.
இவற்றின் பொருளை விளக்குக.

IV. (1) தமிழில் அகப்பொருட்கோவைதோன்றியவரலாற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் புலப்படுத்துக.

(2) திருச்சிற்றம்பலக்கோவை தொடர்நிலைச்செய்யுளா? அன்றா? உமது விடைக்கு ஆதாரங்காட்டுக.

(3) உள்ளுறையினியல்பு யாது? நீவிர் படித்த திருக்கோவையிலிருந்து உதாரணமெடுத்துக்காட்டி விளக்குக.

(4) குறிப்புநிலைக்கும் குறிப்பெச்சத்துக்குமுள்ள வேற்றுமை என்ன? திருக்கோவையிலிருந்து உதாரணமெடுத்துக்காட்டி விளக்குக.

V. (1) (a) பாலன்புகுந்திப்பரிசினினிற்பித்தபண்பினுக்கே
பாலனென்னும் பான்மயக்கம் அதிகாரப்புறனடையாற் கொள்க.

(b) செம்பஞ்சியின்மிதிக்கிற் பதைக்குமலர்ச்சீறடியென்பன ஒருசொன்னீர்மைப்பட்டு நின்றன. இதனை அதிகாரப் புறனடையாற் கொள்க.

(c) நறைக்கண்மலிகொன்றையோனின்றுநாடகமாடுதில்லை.
நாடகமென்பது ஈண்டுக்கூத்தென்னுந் துணையாய்நின்றது.

(d) சுரும்புறுநீலம் - மேலாற்சுரும்புவந்துபொருந்து நீலமலர்; எதிர்காலவினை "மென்னனையாய் மறியே பறியேல்" என்பது போலக் கொள்க.
இவ்வுரைக்குறிப்புகளின்பொருளைத் தெளிவாக விளக்குக.

(2) (a) அருந்தும்விடமணியாமணிகண்டன் - அருந்துமென்பது காலமயக்கம்.

(b) பாமரைமேகலைபற்றி - பாவுமென்னுமீற்றுமிசை யுகரம் மெய்யொடுங்கெட்டுக காலமயக்கமாய்நின்றது.

(c) தேம்பலிடைநுண்மிய: - தேம்பலிடை இருபெயர்ப்பண்புத்தொகை.

(d) வண்டில்லைமெல்லங்கழிசூழ் - மெல்லங்கழியென்பதூஉம் ஒரு பண்புத்தொகை முடிபு.
இவ்விலக்கணக்குறிப்புக்களை விளக்குக.

(3) (a) புகழும்பழியும்பெருக்கிற்பெருகும்பெருகிநின்று -
நிகழும்நிகழாநிகழ்த்தினல்லால்
இதற்கு விளக்கமாக உரை யெழுதுக.

(b) பாயினமேகலைபண்டையளல்லள் - பாயினமேகலை என்னுஞ் சொற்கள் ஒருசொன்னீர்மைப்படுதலின் ஆகுபெயரெனப்படும்.

பாயினமேகலை என்பது ஆகுபெயரா? அன்மொழித்தொகையா? பிரயோகவிவேகநூலுடையார்கருத்து யாது?

(c) ஒத்ததொவ்வாதுரைத்ததோழி
கொத்தவிழ்கோதையாற்கூறுவிக்குற்றது.
இதற்குப் பொருளுரைத்து இலக்கணக்குறிப்புமெழுதுக.

(d) காமமிக்ககழிபடர்கிளவி, கூடவிழைத்தல், அறத்தொடுநிற்றல், பெரும்பான்மைகூறல், பதப்பொருள்கூறி இத்துறைகளை விளக்குக.

(4) (a) வரைபொருட்குத்தலைமகன்போக, அவன் வரவு நீட்டித்தலான், தலைமகளதாற்றுமையானுண்டாகிய நோயை முருகனால் வந்ததென்று கட்டுவித்திகூறியது பொய்யன்றோவென்று கடா விடைகளான் ஆராய்க.

(b) புகழுவமை, பரியாயம், புகழாப்புகழ்ச்சி, ஒற்றுமைக் கொளுவுதல்.



இவ்வலங்காரங்களுள் ஒன்றையெடுத்து விளக்கித் திருக்கோவையிலிருந்து உதாரணமுங் காட்டுக.
(c) கட்டுவித்தி, தக்கின்று, சிறந்தன்று
இப்பகுபதங்களைப் பகுத்துக்காட்டிப் பொருள்கூறுக.
(d) நாமரையாமத்தென்னோவந்துவைகிநயந்ததுவே.
இங்குவந்துள்ள நாமென்னும்பதத்துக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக.
(e) கழிகட்டிரவு, சொற்புள், வலக்காரம், அழற்றடம் இவற்றுக்குப் பொருள்கூறுக.

VI. (1) திருமங்கைமன்னனை மாறன்பணித்ததமிழ்மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்தான் என்று கூறுவது யாது காரணத்தாலென்று கூறுக.

(2) திருவாய்மொழிபோலப் பெரியதிருமொழிக்கும் பண்வகுக்காது இராகமும் தாளமும் குறித்ததற்குக் காரணமென்னை?

(3) பெரியாழ்வார்முதலியோர்பாடல்கள் திருமொழி என்று பெயர்பெறத், திருமங்கைமன்னன் பாடல்மாத்திரம் பெரிய திருமொழி என்று பெயர்பெற்றதற்குக் காரணமென்னை?

(4) பெரியதிருமொழியிலுள்ள அகச்சான்றுகளால் திருமங்கை மன்னன் காலம் நன்கு நிச்சயிக்கப்படுமென்பர். அவையாவை?

VII. (1) அட்டபுயகரம், பரமேச்சுரவிண்ணகரம், நந்திபுரம், கடன்மல்லை, ஆலிநகர்.
இவை எவ்வெவ்விடத்திலுள்ளனவென்று கூறுக.

(2) திருமாலின் அகடிதகடனசாமர்த்தியத்தைத் திருமங்கை மன்னன் உணர்த்திய பாட்டை எடுத்தெழுதி விளக்குக.

(3) பெரியதிருமொழியில் திருப்பிரிதி, வதரி, நைமிசாரணியம் முதலிய தலங்களுக்குப் பாடல்களுள்ளன. இத்தலங்களுக்கெல்லாம் திருமங்கைமன்னன் நேரேசென்று தரிசனம் செய்து பாடினரோ? ஆராய்க.

(4) வளரக்கர் - தலைவன்றலைபத்தறுத்துகந்தான் சாளக்கிராமமடைநெஞ்சே.

இங்கேகுறித்த சாளக்கிராமமும் ஒரு திருப்பதியோ? ஆராய்க.

VIII. (1) கலியன் என்றும் கலிகன்றி என்றும் திருமங்கைமன்னனுக்குப்பெயர்வந்தது எங்ஙனம்?

(2) ஏர்கொள்பூஞ்சுனைத்தடம்படிந்தினமலரெட்டுமிட்டிமையோர்கள்-பேர்களாயிரம்பரவிநின்றடிதொழும்பிரிதி.
இனமலரெட்டென்பனயாவை?

(3) திருமாலாடிய குடக்கூத்தினிலக்கணம் யாது?

(4) தாடாளன்—இதனைப்பிரித்து விளக்கிப்பொருள் கூறுக.

(5) ஒக்கலித்தல், கவிற்றல், ஆயம், ஒருக்குதல், எள்கல், முழுசுதல் அறை, சோமு.

இப்பதங்கள் பெரியதிருமொழியில் என்னபொருளில் வந்துள்ளன?

---

## பண்டிதர்வகுப்பு.

### பரீக்ஷகர்

### அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

## வசனமும், தர்க்கமும்.

---

சித்தார்த்தி-ஹு பங்குனிமீ 26உ (7-4-20) 10-மணிமுதல் 11½-மணிவரை.
(அம்சம் 60.)

### திராவிடப் பிரகாசிகை.

க. தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் யாவர்? வேத்துணையோர் பரிபாடலாவது யாது? தலைச்சங்கமிரீஇயினோர் யாவர்? அச்சங்கமிருந்த இடம் யாது? அவர்க்கு நூல் யாது?

உ. தொல்காப்பியவுரைகாரர்கள் யாவர்? இவ்வுரைகாரருள்ளே சிறந்தவர் யாவர்? சேனாவரையர் எழுத்ததிகாரத்துக்கு உரை செய்யாமைக்குக் காரணம் யாது?

ங. பதினெண் கீழ்க்கணக்குகள் யாவை? எட்டுத்தொகை யாவை? உருத்திரங்கண்ணனார் பாட்டு எதனுள் அடங்கும்?

ச. அட்டாதசவித்தைகள் யாவை? வைதிக சாத்திரங்கள் யாவை? ஐக்கியவாத சைவசாத்திரங்கள் யாவை?

ரு. இராமாயணத்தைப்பற்றியும், இரகுவமிசத்தைப்பற்றியும் சுருக்கி எழுதுக.

சா. சித்தாந்தசாத்திரம் எத்தனை? சரியாபாதத்துள்ளே சொல்லப்படும் விடயங்கள் யாவை? சரியையிற்சரியையாவது யாது?

எ. உபபிருங்கணம், தரிசனம், அதிகாரம், உபாக்கியானம், சையுத்தம், கர்த்திருசட்டி, சுரத்தெறிதல், கடாவிடுதல் என்பவைகளின் பொருள்கள் யாவை?

அ. நல்லாசிரியர் இலக்கணம் யாவை? நன்மாணாக்கரிலக்கணம் யாவை?

கூ. கல்விச்சிறப்பைப்பற்றித் தெரிந்தவளா எழுதுக.

கo. இளந்தமிழ்ப்புலவர் என்னும் பட்டத்துக்கு உரியவர் யாவர்?



### அன்னம்பட்டீயம்.

க. அன்னம்பட்டீயம் என்பதை விரித்துப்பொருள்கூறுவது எப்படி? அது எத்தனைகிரந்த முடையது? எத்தனை உரையுடையது? அதற்குச் சந்திரசிங்கர் செய்த உரைக்குப் பெயர் யாது?

உ. பொருட்குப் பொதுவிலக்கணமாவது யாது? சிறப்பிலக்கணமாவது யாது? "விப்பிரனாவான் பூணூலுடையவன்" என்பதில் இலக்கணத்தைச்சிதைக்கும் குற்றங்களிருந்தால் அவைகளை விளக்குக.

ங. இந்திரியமாவது யாது? சரீரமாவது யாது? போகமாவது யாது?

ச. விசேடணவிசேடியத்தன்மைச்சம்பந்தத்தை விரித்து விளக்குவதெப்படி? இது பதார்த்தவகையுள்ளே எதனுள் அடங்கும்?

ரு. அநுமானவுறுப்புக்களுள் எதுவாவது யாது? நிகமனமாவது யாது? நிகமனத்திற்குப் பயன் யாவை?

சா. "சத்தம் அநித்தியம்-அறியப்படுகையால் குடம் போல" என்னும் இஃது எதற்கு உதாரணமாகும்? "கட்டில் கூப்பிடுகின்றது" இஃது எதற்கு உதாரணமாகும்?

எ. தாற்பரியம், கதம்பமுகுளநியாயம், தகுதி, பிரமேயம், பிரேத்தியபாவம், அபவர்க்கம் என்பவைகளை விளக்குக.

அ. அழிவுபாட்டபாவமாவது யாது?

(இவற்றுள்ளே எவை யெனினும் எழு வினாக்களுக்கு விடைகள் எழுதினாற்போதும். காலம் காணுமாயின்; முற்ற எழுதுவது நன்று.)

---

## பண்டிதர்வகுப்பு.

### பரீக்ஷகர்

### V. P. சுப்பிரமணியமுதலியார்.

---

## செய்யுளியற்றல்.

---

சித்தார்த்தி-ஹு பங்குனி-மீ 26உ (7-4-20) 12-மணிமுதல் 1½-மணிவரை.
(அம்சம் 60.)

1. பின் வருவதன் கருத்தை அமைத்து ஒரு நேரிசைஆசிரியப்பா எழுதுக.

'இராகவர்' இலக்குமணர்சகிதராய், விசுவாமித்திரரை முன்னாகச் செல்லச்செய்து, (கௌதமரது) ஆச்சிரமத்திலே பிரவேசித்தார். அங்கே கடலளால் தெய்வீகவசிகரசக்தியோடு கூடியவளாய்ப்

பெண்கள்நாயகமாகப்படைக்கப்பட்டாற்போன்று, தேவாசுரரும் அதி சமீபத்தில்நின்று நோக்கமாட்டாத தேஜஸோடு தன்தவமகிமையினால் சுவாலியாநின்று விளங்கும் அந்தமகத்தவ மாதை (அகலிகையை)க் கண்டார்கள். இரகு வமிசத்திற்றோன்றிய (இராமலக்குமணர்) இருவரும் (வணங்கி) அவள் பாதங்களைப் பற்றினார்கள். அவள், கௌதமர் ("ஸ்ரீராமரால் உன் சாபம் நீங்கும்" என்று சொன்ன) வார்த்தைகள் ஞாபகத்திற்கு வர, அவர்களுடைய பாதங்களைத் தான் பற்றினாள். பின் அவள் மனத்தை ஒருமைப்படுத்திக்கொண்டு அவ்விருவர்க்கும் அர்க்கிய பாத்தியங்கள் அளித்து விதிப்படி அதிதிபூசை புரிந்தாள். உடனே தேவதுந்துமி முழங்கப் புஷ்பமாரி பெருமிதமாக வருஷித்தது. தேவர்களும் அப்சரசுகளும் சந்தோஷங்கொண்டாடினார்கள். தேவர்கள் உத்தமம் உத்தமம் என்று ஆரவாரித்து அகலிகையைக் கௌரவப்படுத்தினார்கள்'

2. செல்வப்பொருளினும் கல்விப்பொருள் சிறந்தது என்பதை விளக்கி ஒரு கலிவெண்பா எழுதுக.

3. ஓதலினுஞ் சிறந்தது ஒழுக்க முடைமை என்பதை விஷயமாகக் கொண்டு ஒரு அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம் எழுதுக.

## பண்டிதர்வகுப்பு.

### பரீக்ஷகர்

### மு. இராகவையங்கார்.

---

## வியாசம்

---

சித்தார்த்தி வரு பங்குனி மீ 26ௗ (7-4-20) 2½-மணிமுதல் 4½-மணிவரை.

(அம்சம் 60.)

1. தமிழ்ப்பாஷையின் சொற்பொருணயங்களின் சிறப்பைப்பற்றி நீவிர்படித்த இலக்கியங்களினின்று விளக்கி ஒரு வியாசம் எழுதுக.

2. மதுரைக்காஞ்சியில் கூறப்பட்ட விஷயங்களைச் சுருக்கமாக மூன்று பக்கத்துள் எழுதுக.

---

ஆமுதலிருபெயர்

ஆனேவிடைச்சொல்லும்பசுவுமாகும் ௪௭
ஆண்டாரேயுடையோருந்தேவரும் ௪௮
ஆதல்தானேநாலுங்கூத்தும் ௪௯
ஆகுலமென்பதிடும்பையுமோசையும் ௫0
ஆசையேபலமவாமலமிரண்டாம் ௫௧
ஆமலகந்தான்படிகமும்நெல்லியும் ௫௨
ஆஞ்சியேகூத்தழுங்கலிரண்டே ௫௩
ஆம்பிரமேமாமரமும்புளிப்பும் ௫௪
ஆம்பியேகாளானுஞ்சத்தமும் ௫௫
ஆரியனென்பதாதித்தியனும்
மேவலரெனவும்விளம்புமிருபெயர் ௫௬
ஆரமையென்பதுமதிலுங்கூர்மையும் ௫௭
ஆர்கலியென்பதுமழைகடலிருபேர் ௫௮
ஆர்ப்பாவந்தான்போருந்துளியும் ௫௯
ஆவமென்பதம்புபெய்கூடுமே
காழிகையெனவுநவிலுமிருபெயர் ௬0
ஆவல்தானேயாசையும்வளைவும் ௬௧
ஆவியரேவேளாளரும்வேடரும் ௬௨
ஆர்த்தியென்பதுவேபோதச்செய்தலும்
நெற்றியுமென்றேநிகழ்த்துமிருபெயர் ௬௩
ஆரூபந்தானீங்காதமையும்
அமையாமையுமெனவிருபெயராகும் ௬௪
ஆனியமென்பதுநாளும்பொழுதும் ௬௫
ஆணந்தானேயன்புங்குழம்பும் ௬௬
ஆதனென்பதோரறிவில்லானும்
ஆரியரெனவுமமைக்குமிருபெயர் ௬௭

ஆய்வேயாய்தலும்வருத்தமுமாகும்
ஆணுவென்பதுநன்மையுமிரதமும்
ஆலவேயாடுதலுமொலியுமாகும
ஆகமென்பதுவேயுடம்புமார்புமாம்
ஆசுகமேகணைகாற்றெனவிருபெயர்
ஆர்வலரென்பதுகாதலருடனே
கொண்கரெனவுங்கூறுமிருபெயர்
ஆடவரேயிளையோரும்புருடரும்
ஆய்தலென்பது நுணுக்கமுந்தெரிதலும்
ஆகாரந்தான்வடிவுமூணுமாம்
ஆக்கமென்பதுவாழ்வுந்திருவும்
ஆதவரேவேதியரேசூரியர்
ஆணியேயெழுத்தாணியுமதனோ
டாணியுமெனவேயறையுமிருபெயர்
ஆறென்பதுவேதலைக்கடையுடனே
ஆற்றுதலெனவுமாமிருபெயரே.

ஆமுதலிருபேர்முற்றும்.

ஆமுதல்மூப்பெயர்

ஆகுவேபெருச்சாளியுமெலியும்
கொப்பூழெனவுங்கூறுமுப்பேரே
ஆசாரமென்பதுசீலமுங்காட்சியும்
தூசமெனவேசொல்லுமுப்பேரே
ஆசிடைதானேகூட்டமுந்தூசும்
வாழ்த்துமென்றேவழங்குமுப்பேரே
ஆசையென்பதுதிசையும்பரிவும்
பொன்னுமென்றேபுகலுமுப்பேரே.
ஆதனேவாதனையுஞ்சூழும்
ஏவலெனவுமிசைக்குமுப்பேரே



ஆனியென்பதுகேடுமோர்மாதமும்
மூலநாளுமொழியுமுப்பேரே அசு
ஆர்வந்தானேவிருப்பமும்வில்லும்
நரகமுமெனவேநவிலுமுப்பேரே அஎ
ஆனகமேகற்பகமும்படகமும்
துந்துமியெனவுஞ்சொல்லுமுப்பேரே அஅ
ஆலேயல்லவுமாமென்றிடலும்
ஆலமாமுமாகுமுப்பேரே அகூ
ஆரையேபுற்பாயும்பரிசையும்
ஆரையுமெனவேயாகுமுப்பேரே கூ0
ஆர்தலென்பதுநிறைதலுமுண்டலும்
குடித்தலுமெனவேமுப்பெயர்கூறும் கூக

ஆமுதல்முப்பேர்முற்றும்.

ஆமுதல் நாற்பெயர்

ஆமென்பதுவேயிடைச்சொலுமீரமும்
ஆமென்றிடலுநீருநாற்பேரே கூஉ
ஆடியென்பதோர்மாதமுங்காற்றும்
கண்ணாடியும்படியாணியுநாற்பேர் கூங
ஆடேயாடும்வெற்றியுங்கூர்மையும்
கூத்துமெனவேகூறுநாற்பெயரே கூச
ஆண்டென்பதுவேவருடமும்புல்லும்
நெல்லுமவ்விடமுநிகழ்த்துநாற்பேரே கூரு
ஆலியென்பதாலாங்கட்டியும்
துளியுநீருங்காற்றுநாற்பேரே கூசு
ஆரலேசெவ்வாயுமதிலும்
கார்த்திகைநாளுமோர்மீனுநாற்பேர் கூஎ
ஆடலென்பதுகூத்தும்வார்த்தையும்
வெற்றியும்பெண்ணாண்கூடலுநாற்பேர் கூஅ

ஆர்ப்பென்பதுவேபொருதலுஞ்சிரித்தலும்,
தூளியுமோசையுஞ்சொல்லுநாற்பேரே,

ஆமுதல்நாற்பேர்முற்றும்.

ஆமுதலைம்பெயர்

ஆவியென்பதுநாற்றமும்புகையும்
வாவியுமூச்சுமுயிருமென்றைந்தே
ஆலமேவடவிருக்கமுமழையும்
நீருநஞ்சுமலர்ந்தபூவுமாம்
ஆணையென்பதுவேயேவலுமெய்யும்
வெற்றியுஞ்சூளோடிலாஞ்சனையைந்தே

ஆமுதலைம்பேர்முற்றும்.

ஆமுதலறுபெயர்

ஆசென்பதுவேசடுதியுங்கவசமும்
அற்பமுங்குற்றமுமோர்கவியுடனே
கைக்கருவியுமெனக்கருதுமறுபெயர்.
ஆசினியேமரம்வயிரமாவுரி
விண்பலாவிசேடமெனும்பெயராறே
ஆரமென்பதுமுத்தும்பதக்கமும்
ஆத்தியுமாலையும்பித்தளையதனொடு
சந்தனமெனவுஞ்சாற்றுமறுபேர்
ஆவணமேபுனர்பூசமும்வீதியும்
பிடிகையுஞ்சாதனமுமுரிமையும்
அங்காடியுமெனவறுபெயராமே
ஆழியேமோதிரமும்நேமியும்
கடலுங்கரையும்வட்டமுமாணையின்
கைநுனியெனவுங்கருதுமறுபெயர்
ஆற்றலென்பதுபொறையுமுயற்சியும்
அதிகமும்வலியுஞானமும்பரித்தலும்
நிலையுடைமையுமெனநிகழ்பேராறே

ஆமுதலறுபேர்முற்றும்.



ஆமுதலெழுபெயர்

ஆதியென்பதுசிவனுமுராரியும்
வேதனுமிரவியுமசோகுடைச்செல்வனும்
முதலுநேரோடலுமொழியுமேழ்பெயரே
ஆயமேயல்லரியுஞ்சுங்கமும்
சூதுமாதாயமுமாதர்கூட்டமும்
கவற்றிற்றாயமுநீளமுமேழ்பெயர்
ஆரென்பதுவேயாத்தியுங்கூர்மையும்
பாகும்பூமியுஞ்சோதியுநிறைவும்
தேராழியுட்செறியுறுப்புமென்றேழாம்
ஆவேயாச்சாமரமிசையிரக்கம்
இச்சைவியப்பொடுபசுவென்றேழ்பேர்

ஆமுதலேழ்பேர்முற்றும்.

ஆமுதலொன்பான்பெயர்

ஆம்பலென்பதுமூங்கிலுநிலவும்
இபமுங்கள்ளுமல்லியுங்கவ்வையும்
ஊதிடுங்கொம்புமோரெண்ணுடனே
யோர்பண்ணெனவுமோதுமொன்பான்பேர்

ஆமுதலொன்பான்பேர்முற்றும்.

ஆமுதற்பலபேர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம் ௩௩௪.

இம்முதலொருபெயர்

இலிங்கினென்பதுதுறந்தோன்பெயரே
இறடியென்பதுகருந்தினையாகும்
இருகரையென்பதிடிகரையாகும்
இமிழியேயிசையாமெனவிசைப்பர்
இரும்பையென்பதுகுடமென்றுமே.
இங்கென்பதுவேபெருங்காயமாகும்

இக்குதல்தானே தங்கலாகும் ௭
இட்டளமென்பது துக்கமாகும் ௮
இடவைதானேவழியெனவிசைப்பர் ௯
இடங்கழியென்பதுமெய்க்காதலாகும் ௧0
இடாகென்பதுவேபுள்ளியாகும் ௧௧
இடாகினிதானேவஞ்சனியாகும் ௧௨
இடும்பரென்பதிராக்கதர்பெயரே ௧௩
இணக்கமென்பதுவேதோழமையாகும் ௧௪
இணுக்கேபழுக்கென்றிசைக்குமென்பர் ௧௫
இண்டேயீங்கையென்றிசினோரே ௧௬
இதழியென்பதுகொன்றையாகும் ௧௭
இதரரென்பதுகீழ்மக்களாகும் ௧௮
இதணமேபரணுமெனவிசைப்பர் ௧௯
இத்தியென்பதுபூளையாகும் ௨0
இந்திரையென்பதுதிருமகளாகும் ௨௧
இந்தீவரமேநெய்தலாகும் ௨௨
இளமயிலென்பதுகருடனாகும் ௨௩
இமழிதானேயானையின்பேராம் ௨௪
இயவுளென்பதுபிள்ளைப்பெயரே ௨௫
இயக்கர்வேந்தனென்பதுகுபேரன் ௨௬
இயவையென்பதுவழியின்பெயரே ௨௭
இயவரேசண்டாளராகும் ௨௮
இரசதமென்பதுவெள்ளியாகும் ௨௯
இரம்பமேகத்தூரியாகும் ௩0
இராவணமென்பதுவிளக்கெனலாகும் ௩௧
இரதபதமேபுறவெனப்படுமே ௩௨
இரும்பைதானேயுரகமாகும் ௩௩



இலதையேகொடியாமெனவிசைப்பர் ௩௪
இலத்திகையென்பதியந்திரவாசல் ௩௫
இலட்டையென்பதுவேயப்பமாகும் ௩௬
இயக்குரோதமென்பதாலெனவிசைப்பர் ௩௭
இமமேபனியென்றிசைத்தனர்புலவர் ௩௮
இலடுதானேகுதிரையென்றாகும் ௩௯
இலாழியென்பதுகுதிரையின்வாய்நீர் ௪0
இழுதுதானேநெய்யெனவிசைப்பர் ௪௧
இழுதையென்பதுபேதையாகும் ௪௨
இயையேவாழையென்றிசைத்தனரே ௪௩
இளம்பிடியென்பதுபெண்பெயராகும் ௪௪
இறங்கரென்பதுகுடங்களின்பெயரே ௪௫
இறவுளர்தானேகுறவராகும் ௪௬
இறைஞ்சியென்பதுமரவுரியாகும் ௪௭
இன்னியர்தானேபாணராகும் ௪௮
இலங்கலென்பதுவேயொளிவிடலாகும் ௪௯
இரணியமும்பொன்னுமெனவிசைப்பர் ௫0
இம்மையென்பதிப்பிறப்பின்பெயர் ௫௧
இழிவுதானேதாழ்வெனலாகும் ௫௨
இளிவரலேவசைப்படுத்தலாகும் ௫௩
இன்டையென்பதுமாலையின்பேராம் ௫௪
இப்பரென்பதுசெட்டிகளாகும் ௫௫
இட்டிகையென்பதுசெங்கலின்பேரே ௫௬
இர்துளியென்பதுபெருங்காயப்பேர் ௫௭
இட்டியென்பதுவேவேள்வியாகும் ௫௮
இரேகைதானேநுண்ணிமையாகும் ௫௯

இம்முதலொருபேர்முற்றும்.

## இம்முதலிருபெயர்

இரவியேமலைசூரியனிருபேர் ௬௦
இகலனேநரியோரியென்றிருபெயர் ௬௧
இகுளையென்பதுநட்புந்தோழியும் ௬௨
இக்கேகரும்பொடுகள்ளெனவிருபேர் ௬௩
இசகுவேபுளியம்புக்கட்டே ௬௪
இஞ்சியென்பதுவேயிஞ்சியுமதிலும் ௬௫
இடக்கரேகூடமறைத்துச்சொல்லிருபேர் ௬௬
இணரேபூங்கொத்தொடுபூவிருபெயர் ௬௭
இதலேசிவலுங்கவுதாரியுமாம் ௬௮
இதியென்பதுபேயிறுதியென்றிருபெயர் ௬௯
இமிழேயினிமையுமிசையுமென்றிருபேர் ௭௦
இயறலென்பதுமுத்தியும்போதலும் ௭௧
இராடமேயொருதேசமுங்கழுதையும் ௭௨
இகரமென்பதோரெழுத்துஞ்சந்தமும் ௭௩
இரவுதானேயிரக்கமுமிரவும் ௭௪
இரதனென்பதுகண்ணொடுகிளியே ௭௫
இகுரியேமரக்கலமும்வழக்கும் ௭௬
இருசென்பதுவேபண்டியுளிரும்புஞ்
செவ்வையுமெனவேதெரிக்குமிருபெயர் ௭௭
இலம்பகமேமுதல்மேலணிமாலையும்
அத்தியாயமுமாமிருபெயரே ௭௮
இலம்பாடென்பதுதுக்கமும்வறுமையும் ௭௯
இலவமென்பதோர்மரமும்பூசையும் ௮௦
இலங்கையென்பதுவேயாற்றிடைக்குறையும்
இலங்கையுமென்றேயிசைக்குமிருபெயர் ௮௧
இலயமென்பதுகூத்தின்விகற்பமும்
கூத்துமெனவேகூறுமிருபெயர் ௮௨



இறவைதானேயேணியும்புட்டிலும் ௮௩
இலாடமேயோர்தேசமும்நெற்றியும் ௮௪
இளகல்தானேயழுங்கலும்வாரமும் ௮௫
இருவியேதினைத்தாளுமிருவியும் ௮௬
இராசியமென்பதுமறைவும்யோனியும் ௮௭
இறப்பேமிகுதிபோக்கெனவிருபெயர் ௮௮
இவறல்தானேயாசையுமறவியும் ௮௯
இழுமெனலென்பதொலியுமினிமையும் ௯௦
இனமேகிளையுமமைச்சுமிருபெயர் ௯௧
இலாங்கலியென்பதுநாளிகேரமும்
செங்காந்தளுமெனவிருபேர்செப்பும் ௯௨
இளமையென்பதுதண்மையுங்காகமும் ௯௩
இலங்கல்தானேயழுங்கலுமார்வமும் ௯௪
இடைதலென்பதிடைதலும்புடவியும் ௯௫
இருமைதானேயிம்மையுமறுமையும்
பெருமையுமென்றேபேசுமிருபெயர் ௯௬
இறவுதானேயிறக்கமுமிரவும் ௯௭
இடித்தலென்பதுறுதிக்கட்டுரை ௯௮
இடித்தலுமென்றேயிசைக்குமிருபெயர் ௯௯
இரும்புதானேபொன்னுமிரும்புமாம்
இளைத்தலென்பதுவேயிளைத்தலுமிரங்கலும் ௧௦௦
இறலேயெறலுமிறலுமென்றிருபேர் ௧௦௧
இயம்பலென்பதுபழிமொழியுடனே
சொல்லுமெனவேதொடுக்குமிருபேர் ௧௦௨
இண்டையென்பதுமாலையும்வனசமும் ௧௦௩

இம்முதலிருபேர்முற்றும்.

## இம்முதல்மூப்பெயர்

இடங்கரென்பதுமுதலையுந்தூர்த்தரும்
குடங்கரெனவுங்கூறுமுப்பெயரே கOச

இதழேயுதடும்பூவினிதழும்
பனையேடெனவும்பகருமுப்பேரே கOரு

இதையேகலப்பையுமரக்கலப்பாயும்
புதுப்புனமெனவும்புகலுமுப்பெயரே கOசு

இந்தென்பதுவேகரடியுங்கரியும்
சந்திரனெனவுந்தருமுப்பெயரே கOஎ

இலகலென்பதுவேயகிலுமெழுத்தும்
நொய்ம்மையுமெனவேநுவலுமுப்பேரே கOஅ

இமையேகண்ணினிமையுங்காடியும்
மயிலுமெனவேவகுக்குமுப்பெயரே கOகூ

இம்மியென்பதுபொய்ம்மையும்புல்லனும்
நுண்மையெனவுநுவலுமுப்பேரே ககO

இய்வேவழிகாடேரெனமூன்றும் ககக

இரலையேமுதனாளுங்கலையும்
ஊதிடுங்கொம்புமென்றோதுமுப்பேரே ககஉ

இழையென்பதுவேயிழைதலுநூலும்
ஆபரணமுமெனவாம்பெயர்மூன்றே ககங

இபமேமரத்தின்கோடுமியம்பலும்
ஆனையுமென்றேயறையுமுப்பேரே ககச

இகலேபகைவலிபோரெனமூன்றே ககரு

இருபிறப்பென்பதுபறவைபார்ப்பு
எயிறெனமுப்பேரிசைக்கவும்படுமே ககசு

இறத்தல்தானேகடத்தலுமிகுதியும்
சாதலுமென்றேசாற்றுமுப்பெயரே ககஎ

இறுத்தலென்பதுசெப்பலுந்தங்கலும்
இறுத்தலெனவுமிசைக்குமுப்பெயரே ககஅ

இம்முதல்மூப்பேர்முற்றும்.



## இம்முதல்நாற்பெயர்

இகத்தலென்பதுபுடைத்தலுங்கடத்தலும்
நெருக்கமுங்காழ்த்தலுமிகழ்த்துநாற்பெயரே ககசூ

இணையேயிருமேதியுங்கண்ணிணையும்
பனிச்சையுமொப்பும்பகருநாற்பேரே கஉO

இரதமேயரைநாணுஞ்சூதமும்
பொற்றேருடனின்சுவையுநாற்பேரே கஉக

இயமென்பதுவேயியமோசையும்
வார்த்தையும்வாச்சியமொடுநாற்பேரே கஉஉ

இரதியென்பதுபித்தளையாசை
மதனன்றேவிபெண்ணானைநாற்பேரே கஉங

இழைத்தலென்பதுகூத்தமுமாற்றமும்
ஆர்த்தலுமிணைத்தலுமாகுநாற்பேரே கஉச

இளியேயிசையுமிசித்தலுமுரித்தலும்
இளுங்குதலெனவுமிசைக்குநாற்பேரே கஉரு

இச்சையென்பதிடித்தலுமாசையும்
அஞ்ஞானமும்பொய்த்தலுநாற்பேரே கஉசு

இந்தனமென்பதுபுகையுமிசையும்
எரியிடுகல்லும்விறகுநாற்பேரே கஉஎ

இராகமேவிரமிச்சைசெம்மை
கீதமெனவேகிளக்குநாற்பெயரே கஉஅ

இருளேநிரயங்கறுப்புமையல்
யானையெனவேயறையுநாற்பெயரே கஉகூ

இடமேசெல்வம்விசாலமிடப்புறம்
இடமெனநாற்பேரிசைக்குமதற்கே கஙO

இறாலென்பதுகார்த்திகைநாளோர்மீன்
ஏறுடன்றேன்கூடென்னுநாற்பெயரே கஙக

இயலேசாயலுநடையுந்தமிழும்
இயலுமெனவேயிசைத்திடுநாற்பேர் கஙஉ

இம்முதல்நாற்பேர்முற்றும்.

இம்முதலைம்பெயர்

இரணமேபொன்பூசல்மாணிக்கம்
அரவொடுகடலெனவைந்தாகும்மே
இடையேயானைநடுநிறையிடமொடு
நசைப்புமெனவேநவலுமைம்பேரே
இடியேநென்மாவுறுதிச்சொல்லிடி
தகர்சுண்ணமென்னத்தருமைம்பேரே
இவர்தலென்பதுமேவலுஞ்சேறலும்
எழுச்சியுமாசையோடேலுதலைம்பேர்
இவர்வென்பதுவேசேறலுமேறலும்
எழுதலுஞ்செலுத்தலும்விருப்பலுமைந்தே

இம்முதலைம்பேர்முற்றும்.

இம்முதலறுபெயர்

இல்லேயிடமனைசாவொடுமனைவி
யில்லைராசியெனும்பெயராறே
இறும்பென்பதுவேவியப்புந்தகைமையும்
மலையுங்குறுங்காடேனேதூறும்
வனசத்தலருமதிக்குமறுபெயர்

இம்முதலறுபேர்முற்றும்.

இம்முதலெழுபெயர்

இலஞ்சியென்பதுகுணமுமதிலும்
புன்குமாமரமும்வகுளமுங்குளமும்
கொப்பூழெனவுங்கூறுமேழ்பெயரே
இசையென்பதுவேகிளவியும்பாட்டும்
வண்மையுமிசைப்பும்பண்ணுந்திசையும்
தித்திப்பெனவுஞ்செப்புமேழ்பெயரே

இம்முதலேழ்பேர்முற்றும்.



இம்முதலெண்பெயர்

இளையேபூமியும்புயலும்பசுவும்
இளமையும்வேலியுங்கிடங்குமங்காடியும்
காவற்காடுங்கருதுமெண்பெயரே
இறும்பூதென்பதுமலையுந்தகைமையும்
வண்டுங்குழையுந்தாமரைப்பூவும்
அதிசயமுடனுங்காந்தட்பூவும்
சிறுதூறெனவுஞ்செப்புமெண்பெயரே
இருத்தலென்பதுசெருக்கலும்விழ்த்தலும்
ஈதலுமிழைத்தலுமிரிதலுந்துடைத்தலும்
வருந்துவித்தலுந்தாழ்த்தலுமெண்பேர்

இம்முதலெண்பேர்முற்றும்.

இம்முதற்பதினொருபெயர்

இறையேகடனுஞ்சிறுமையுந்தங்கலும்
வீட்டினிறப்புஞ்சிவனுஞ்சென்னியும்
இறையிறுப்புடன்புட்சிறகுமன்னனும்
உயர்ந்தோருங்கையிறையும்பன்னொருபேர்

இம்முதற்பதினொருபேர்முற்றும்

இம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம் சுளசு.

ஈமுதலொருபெயர்

ஈர்ங்கையென்பதுகொடுங்கையென்றனர்
ஈங்கைதானேயீங்கைச்செடியாம்
ஈகமேசந்தனமெனப்பகர்வர்
ஈமவனமேசுடுகாடாகும்
ஈரவனென்பதுசந்திரனாகும்
ஈரிலைதானேசூரியனெனுமே

ஈயுவனென்பதிராவணன்பேரே
ஈறிலிதானேதெய்வமென்றாகும்
ஈனமென்பதுவெள்ளியின்பேரே
ஈர்வாளென்பதீரரிவாட்பேர்
ஈசானந்தான்வடகீழ்த்திசையாம்

ஈமுதலொருபேர்முற்றும்.

ஈமுதலிருபெயர்

ஈறேமுடிவும்பயனுமிருபெயர்
ஈமமென்பதுமயானமும்விறகும்
ஈரேகதுப்புமீருமாகும்
ஈசனென்பதுபிதாவும்பிரமனும்
ஈன்றானென்பதுபிதாவும்பிரமனும்
ஈயென்பதுவேகொடுத்திடென்றலும்
ஓர்பறவையுமெனவுரைக்குமிருபெயர்

ஈமுதலிருபேர்முற்றும்.

ஈமுதல்முப்பெயர்.

ஈழமென்பதோர்தேசமுங்கள்ளும்
பொன்னுமெனவேபுகலுமுப்பேரே
ஈண்டென்பதுவேயிவ்விடஞ்சடுதி
யிப்படியெனவுமுப்பெயராகும்
ஈனமென்பதுமுயலுஞ்சரிவும்
இழிவுமென்றேயியம்புமுப்பேரே

ஈமுதல்முப்பேர்முற்றும்.

ஈமுதல்நாற்பெயர்

ஈடேகுறையும்வலியுமொப்பும்
பெருமையுமெனவேபேசுநாற்பேரே

ஈமுதல்நாற்பேர்முற்றும்.



ஈமுதலைம்பெயர்

ஈரமென்பதுகுளிர்ச்சியுமன்பும்
வனப்பும்பகுதியுமறிவுமென்றைம்பேர் ௨௨

ஈமுதலைம்பேர்முற்றும்.

ஈமுதலறுபெயர்

ஈகையென்பதுகொடையுங்காற்றும்
இல்லாமையுங்கற்பகமுங்கனகமோ
டிண்டுமெனவேயிசைக்குமறுபேர் ௨௩

ஈமுதலறுபேர்முற்றும்.

ஈமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம் ௫௦௨.

உம்முதலொருபெயர்

உமினமென்பதுபுளிமாவாகும் ௧
உரகமேபன்னகமெனப்படுமே ௨
உள்குதலேநினைத்தலாகும் ௩
உதகமேநீராகுமென்ப ௪
உதளென்பதுவெள்ளாட்டேற்றின்பேர் ௫
உத்தரிகந்தானேகாசப்பெயர் ௬
உபநிடதமென்பதுவேதமாகும் ௭
உப்பக்கந்தான்முதுகெனலாகும் ௮
உருப்பமென்பதுவெப்பத்தின்பெயர் ௯
உமணரென்பதுவேயுப்புவாணியராம் ௧௦
உசிதனேபாண்டியனெனவுரைப்பர் ௧௧
உள்ளானென்பதோர்குருவிப்பேர் ௧௨
உம்மையென்றல்கழிபிறப்பாகும் ௧௩
உயர்நிலையென்பதேவருலகே ௧௪
உளுவாரமென்பதுவெள்ளியாகும் ௧௫

உயங்கல்தானேவருந்தலாகும் ௧௬
உரண்டமென்பதுகாக்கையின்பேரே ௧௭
உருளரிசியென்பதுகொத்தமலியே ௧௮
உட்பிடிதானேகைவேலாகும் ௧௯
உழுந்தேபயற்றிலொன்றெனப்படுமே ௨0
உலூகந்தானேயுரலெனப்படுமே ௨௧
உல்விதானேமதிலெனவுரைப்பர் ௨௨
உல்லரியென்பது தளிரெனலாகும் ௨௩
உவரகந்தானே களர்மண்ணெனுமே ௨௪
உவரியென்பது கடலெனப்படுமே ௨௫
உழத்தல்தானேயழித்தலாகும் ௨௬
உளியமென்பதுகரடியாகும் ௨௭
உளியேதச்சர்களாயுதமெனுமே ௨௮
உள்ளாளமென்பதுகூத்தின்பெயராம் ௨௯
உய்யானமென்பதுசோலையாகும் ௩0
உத்தமேபித்தேறலெனப்படும் ௩௧
உருக்கலேகோபித்தலாகும் ௩௨
உலவல்தானே துறந்தோர்பெயரே ௩௩
உறையல்தானேபிணக்கெனவுரைப்பர் ௩௪
உல்லமென்பதொருமீனாகும் ௩௫
உற்பலமேசெங்கழுநீராகும் ௩௬
உன்னமென்பதுவேயன்னமென்புள்ளாம் ௩௭
உன்னதமென்பதுயர்ச்சியின்பெயராம் ௩௮
உற்ஞர்தானேசுற்றமெனப்படும் ௩௯

உம்முதலொருபேர்முற்றும்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1920ஹ ஜனவரிமீ த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு 1920 January | | | 1919 January | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | |
| (1) Donations & Grants வகையில் வரவு ... | 450 | ... | ... | 810 | ... | ... |
| (2) பாங்கில் போட்டு வரும் தொகையின் பேரில் வட்டி வரவு ... | ... | 12 | 9 | ... | 7 | 11 |
| (3) பரீக்ஷைக் கட்டணத் தொகைவரவு ... | 100 | 14 | .. | 119 | 8 | .. |
| (4) புத்தகங்கள் விற்ற வகையில் வரவு ... | 52 | 2 | ... | 38 | 15 | ... |
| (5) Waste Papers விற்ற வகையில் வரவு ... | 3 | ... | ... | ... | ... | ... |
| (6) வாடகை வகையில் வரவு ... | 70 | ... | ... | 70 | ... | ... |
| மொத்தம் ... | 676 | 12 | 9 | 1038 | 14 | 11 |

| விவரம் | செலவு 1920 January | | | 1919 January | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | |
| (1) Establishment:— | | | | | | |
| (a) மானேஜ்மெண்டு ஆபீஸ்சிப்பந்திகட்குச்சம்பளம் செல்... | 121 | ... | ... | 112 | 10 | 4 |
| (b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச்சம்பளம் செல் ... | 95 | ... | ... | 53 | ... | ... |
| (c) கலாசாலை மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ... | 10 | 13 | 10 | 41 | 13 | 6 |
| (d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 45 | ... | ... | 45 | ... | ... |
| (2) Stationery, contingencies வகையிற்செல்.. | 16 | 8 | 6 | 5 | 1 | 2 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ... | 6 | ... | ... | 344 | 2 | ... |
| (2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தாவரவு ... | 18 | ... | ... | 219 | 5 | ... |
| (3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ... | 106 | 7 | ... | 45 | 3 | ... |
| மொத்தம் ... | 130 | 7 | ... | 608 | 10 | ... |
| **III Press Section:** | | | | | | |
| (1) சங்கம் பவர்ப்பிரஸ் குத்தகைதாரிடமிருந்து குத்தகைப்பணம் வரவு ... | 250 | ... | ... | ... | ... | ... |
| (2) பழைய பில் பாக்கித்தொகை முதலியன வரவு | 35 | ... | ... | 197 | 15 | ... |
| மொத்தம் ... | 285 | ... | ... | 197 | 15 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (3) பாண்டியன் புத்தகசாலைக்கு வரவழைத்த பத்திரிகைக்குச் சந்தா செல் ... | 4 | 13 | ... | ... | ... | ... |
| (4) Furniture வாங்கிய வகையில் செல் ... | 13 | ... | ... | ... | ... | ... |
| (5) Furniture ரிப்பேர் வகையிற் செல் ... | ... | ... | ... | ... | 12 | ... |
| (6) தபால், தந்திவகையிற் செல் ... | 3 | 2 | ... | 1 | 2 | ... |
| (7) முனிசிபாலிட்டிக்கு வரி வகையில் செல் ... | 65 | 4 | ... | ... | ... | ... |
| (8) புத்தகங்கள் பிரசுரசம்பந்தமாக அச்சுக்கூலி காகிதம் செலவு ... | 126 | 10 | 6 | 150 | 1 | 6 |
| (9) சில்லரைவேலைகள்சம்பந்தமாக ஷை செலவு ... | 11 | ... | ... | ... | ... | ... |
| (10) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ... | ... | ... | ... | 6 | 2 | ... |
| (11) கடன் வாங்கியிருந்த தொகை வாபஸ் செய்யப்பட்ட வகையில் ... | ... | ... | ... | 200 | ... | ... |
| (12) Miscellaneous செலவு. | 3 | 8 | 6 | 121 | 13 | 6 |
| மொத்தம் ... | 515 | 12 | 4 | 737 | 8 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | ... | ... | ... | 30 | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைப்பிரசுரசம்பந்தமாக அச்சுக்கூலி, காகிதம் வகையரா செலவு ... | 130 | 9 | ... | 16 | 3 | 1 |
| (3) தபால், தந்தி வகையில் செல் ... | 6 | 3 | ... | 24 | 3 | 6 |
| (4) வரி வகையில் செல் ... | ... | ... | ... | 4 | ... | ... |
| (5) Miscellaneous செலவு. | ... | ... | ... | 18 | .. | ... |
| மொத்தம் ... | 136 | 12 | ... | 92 | 6 | 7 |
| **III Press Section:** | | | | | | |
| (1) டைப்ஸ் வகையரா வாங்கியவகையிற்செல் ... | ... | ... | ... | 134 | 6 | 3 |
| (2) Furniture, Machines வாங்கியவகையிற்செல் ... | ... | ... | ... | 3 | ... | ... |
| (3) ஷை ரிப்பேர்வகையிற் செல் ... | ... | ... | ... | ... | 13 | 6 |
| (4) சிப்பந்திகள் சம்பளம் வகையரா சம்பந்தமாக செலவு ... | ... | ... | ... | 530 | 7 | 3 |
| மொத்தம் ... | ... | ... | ... | 668 | 11 | ... |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 1092 | 3 | 9 | 1845 | 7 | 11 | ஆக மொத்தம் செலவு ரூ ... | 652 | 8 | 4 | 1498 | 9 | 7 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ... | 1342 | ... | 7 | 1222 | ... | 4 | மாதமுடிவில் மீதி இருப்புத் தொகை ... | *1781 | 12 | ... | 1568 | 14 | 8 |
| ஆகமொத்தம் ரூ ... | 2434 | 4 | 4 | 3067 | 8 | 3 | ஆகமொத்தம் ரூ. ... | 2434 | 4 | 4 | 3067 | 8 | 3 |
| | | | | | | | *By C Pass Book 505—0—0<br>„ Indian Bank Receipt ... 1050—0—0<br>„ Cash on hand 226–12—0<br>1781–12–0 | | | | | | |

*Audited & found correct.*

***V. S. Ramaswami,***
AUDITOR.
14—2—20.

***T. Sudarsanachari,***
*Joint Secretary,*
MADURA TAMIL SANGAM.
**9—2—20.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **II Editorial Section:** | | | | | | |
| (1) அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ... | ... | ... | ... | 70 | 12 | ... |
| (2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ... | 8 | ... | ... | 101 | 9 | ... |
| (3) விளம்பர சார்ஜ் வரவு... | 4 | 8 | ... | ... | ... | ... |
| (4) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ... | 5 | 3 | ... | 32 | 8 | ... |
| மொத்தம் ... | 17 | 11 | ... | 204 | 13 | ... |
| **III Press Section:** | | | | | | |
| (1) சங்கம் பவர்ப்பிரஸ் குத்தகைதாரிடமிருந்து குத்தகைப் பணம் வரவு ... | 250 | ... | ... | ... | ... | ... |
| (2) பழைய பில் பாக்கித் தொகை முதலியன வரவு ... | 16 | 9 | ... | 310 | 6 | 6 |
| மொத்தம் ... | 266 | 9 | ... | 310 | 6 | 6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (2) Stationery, contingencies வாங்கியவகையில் செல் ... | 27 | 14 | 6 | 7 | 13 | 10 |
| (3) லைப்ரேரி உபயோகத்துக்கு வாங்கிய புத்தகம் வகையராவுக்குச் செல் | ... | ... | ... | 10 | 4 | ... |
| (4) Furniture ரிப்பேர் வகையிற் செல் | ... | ... | ... | ... | 4 | ... |
| (5) கட்டிட ரிப்பேர்வகையிற் செல் ... | 24 | 6 | 6 | ... | ... | ... |
| (6) தபால், தந்திவகையில் செல் ... | 9 | 7 | 6 | 10 | 9 | 6 |
| (7) வரிவகையில் செல் ... | 1 | 11 | ... | ... | ... | .. |
| (8) புத்தகங்கள் பிரசுர சம்பந்தமாக அச்சுக்கூலி, காகிதம் வகையராவுக்குச் செல் ... | 123 | 4 | 6 | ... | ... | ... |
| (9) சில்லரை வேலைகள் சம்பந்தமாக ஷெ செலவு | 4 | ... | ... | ... | ... | ... |
| (10) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ... | 68 | 15 | ... | 125 | 3 | 9 |
| (11) Miscellaneous செலவு | 11 | ... | 3 | 3 | 3 | ... |
| மொத்தம் ... | 586 | 15 | 8 | 426 | 14 | 9 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | ... | ... | ... | 80 | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைப் பிரசுர சம்பந்தமாக அச்சுக்கூலி காகிதம் வகையரா செல் ... | 24 | 2 | ... | 83 | 4 | ... |
| (3) தபால், தந்தி வகையில் செல் ... | ... | 12 | 6 | 9 | 1 | 6 |
| மொத்தம் ... | 24 | 14 | 6 | 72 | 5 | 6 |
| **III Press Section:** | | | | | | |
| (1) டைப்ஸ் வகையரா வாங்கியவகையில்செல்... | ... | .. | ... | 9 | 2 | ... |
| (2) Furniture, Machines ரிப்பேர் வகையிற்செல்... | 51 | 4 | ... | ... | ... | ... |
| (3) சிப்பந்திகள் சம்பளம் வகையரா சம்பந்தமாகச் செலவு ... | 68 | 6 | ... | 356 | 4 | 4 |
| மொத்தம் ... | 119 | 10 | ... | 365 | 6 | 4 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 556 | 11 | 9 | 830 | 6 | 6 | ஆக மொத்தம் செலவு ரூ. | 731 | 8 | 2 | 864 | 10 7 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ... | 1781 | 12 | ... | 1568 | 14 | 8 | மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ... | *1606 | 15 | 7 | 1534 | 10 7 |
| ஆகமொத்தம் ரூ. ... | 2338 | 7 | 9 | 2399 | 5 | 2 | ஆகமொத்தம் ரூ. ... | 2338 | 7 | 9 | 2399 | 5 2 |

*By C Pass Book Rs. 265—0—0
By Co-operative Bank Receipt 1050—0—0
Cash on hand 291—15—7
1606—15—7

*Audited and found correct.*

***V. S. Ramaswami,***
AUDITOR.
17—4—20.

***J. Sudarsanachari,***
*Joint Secretary,*
MADURA TAMIL SANGAM.
7—4—20.

ட

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி கஅ] ரௌத்திரி-ௗ சித்திரைமீ [பகுதி சு.
*Vol. XVIII.* *April—May 1920.* *No. 6.*

## மதுரைத்தமிழ்ச்சங்கம்.

### தனித்தமிழ்ப்பரீக்ஷை வினா.

---

### பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

இ. வை. அனந்தராமையர்,

---

### இலக்கணம் I.

---

சித்தார்த்தி௵ பங்குனிமீ 24உ (5-4-20) 10-மணிமுதல் 1-மணிவரை.
(அம்சம் 60.)

I: 1. தொல்காப்பியவுரையில் திருக்குறள் மூன்று பால்களை யுடையதென எங்கே எதற்காகக் கூறப்பெற்றுள்ளது?

2. சிலப்பதிகாரமென்பது எதற்கு உதாரணமாகக் காட்டப்பெற்றிருக்கிறது?

3. நான்மறை யென்பதற்கு நச்சினார்க்கினிய ரெழுதிய விசேடவுரை என்னை?

4. அவர் செய்யுணடையை உரைநடையாக எழுதியிருத்தற்கு உங்கள் பாடத்திலிருந்து ஓர் உதாரணம் எழுதுக.

5. எழுவகை அளவைகள் யாவை?

6. நால்வகைப் புணர்ச்சிகள் எவை?
7. நெடியதன்முன்னர் எவ்வொற்றுக்கள் கெடும்?
8. வலித்தல் முதலியவிகாரங்கள் ஒருமொழிக்கேயுரியனவென்பது எதனால் தெரிகின்றது?
9. தம் நம் நும் என்பவை முதல்குறுகியவையென்றும் குறுகாதவையென்றும் கூறப்படும்; இவை பொருந்துமாறு எங்ஙனம்?
10. 'திருச்சிற்றம்பலம்' என்பதை ஒருசொல்லென்பார்கருத்தென்னை? இதனை வலியுறுத்துவன யாவை?
11. "ஆறன்கிளவி முதனீடும்மே", "சுட்டுமுதலாகியவாய்தவிறுதி" இவற்றுக்கு விளக்கமாக உரையும் உதாரணமும் தருக.
12. வாராததனால் வந்ததுமுடித்தல், ஏற்புழிக்கோடலென்னும் உத்திகட்கு ஒவ்வோருதாரணமெழுதுக.

II. 1. அது + அன்று இவற்றை நன்னூல்விதிகாட்டியும் தொல்காப்பியவிதிகாட்டியும் புணர்க்க.
2. யானென்னுஞ்சொல் எவ்வெத்திணைக்குரியதென்று இவ்விருநூலினுங் கூறப்பெற்றிருக்கின்றது?
3. அன்றியின்றியென்வினையெஞ்சிகரம், தொடர்பினுளுகரமாமென்பர். இவற்றுள் தொல்காப்பியச்சூத்திரத்துக்கூறப்படாதது யாது?
4. 'ஆ எ ஒ அம்மூன்றும் வினா' என்னும் தொல்காப்பியனாருக்கு ஏ, யா வினாவாதற்கண் என்ன கருத்து? விளக்குக.
5. நச்சினார்க்கினியர் ஏ யா வினாக்களைக்குறித்து என்னமுடிவு செய்திருக்கிறார்?

## நம்பியகப்பொருள்.

III. 1. அகப்பொருள்விளக்கவுரையில், எட்டுத்தொகைகளுள் மேற்கோளாகவாராத நூல் யாது? பத்துப்பாட்டின் மேற்கோளாகவந்துள்ள நூல்கள் எவை?
2. குலமடமாதரொடு கலமிசைச் சேறலாகாதென்பதற்கு மேற்கோள் யாது?



3. குலமடமாதரொடு பாசறைச்சேறல் பழுதன்றோ? "முல்லை நாறுங் கூந்தல் கமழ்கொள, நல்ல காண்குவ மாஅயோயே, பாசறை யருந்தொழி லுதவிநங், காதனன் னாட்டுப் போதரும் பொழுதே" இதற்கென்ன சமாதானம்?
4. குறையுறவுணர்தல் எப்பொழுது? அதன் பாகுபாடுகள் எவை?
5. சீறே லென்றவள் சீறடி தொழுதல் எந்தப்பகுப்பிற்குரிய கிளவி?
6. வன்புறை வன்பொறைகளின் பொருளையும் காமக்கிழத்தியர் காதற்பரத்தையரின் இலக்கணங்களையும் விளக்குக.
7. அறத்தொடு நிலைதோன்றும் காலிடங்க ளெவை?
8. "செயலையம்பகைத்தழை வாடுமன்னாய்" "அஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றாதீமே" "கானமுமினியவா நும்மொடு வரினே" இவை முறையே எவ்வெப்பகுப்பிலுள்ள என்ன என்ன கிளவிகள்?
9. "மறையோர்முதற் பதின்மருங்கேட்ப" எவற்றை? பதின்மர் யார்யார்?
10. கைக்கிளை அகப்புறக்கைக்கிளைகட்கு முறையே இலக்கணம் என்ன?

---

## பாலபண்டிதர் வகுப்பு.

பரீக்ஷகர்

மு. வேங்கடசாமிநாட்டார்.

---

## இலக்கணம் II.

சித்தார்த்தி௵ பங்குனி௴ 24௳ (5-4-20) 2-மணிமுதல் 5 மணி வரை.
(அம்சம் 60.)

I. (1) வாகை, காஞ்சி என்றதிணைகளின் இலக்கணம் என்ன? இவை எவ்வெத்திணைகளின் புறனென்று தொல்காப்பியர் கூறுவர்?
(2) கொற்றவைநிலை, கிணைநிலை, கந்தழி: இத்துறைகள் எந்த இரண்டிரண்டு திணைகளில் வருகின்றன?

(3) கொடிநிலை, கந்தழி, வள்ளி: இவற்றுக்கு நச்சினார்க்கினியர் என்ன பொருள் கூறுவர்?

II. (1) வாணிகவாகை, தாபதவாகை, நாவொழ்த்து, புலவராற்றுப் படை, புறநிலைவாழ்த்து: இவற்றுள் எவையேனும் மூன்று துறைகட்குச் செய்யுள் எழுதுக.

(2) ‘ஆமினிமூப்பும்.........ஐயைந்துமாய்வதறிவு’, ‘ஒன்றிலிரண் டாய்ந்து............எழ்கடிந்தின்புற்றிரு’: இவற்றிற்குத் துறைப்பெயர் கூறுக.

(3) பாடீடு, கொற்றவை, மாராயம், களமர், களவழி, பொருநன், பாசறை, கட்டேர்: இவற்றுக்குப் பொருளும், பொருட் காரணமும் எழுதுக.

III. (1) கொய்யாக்குறிஞ்சி, உன்னநிலை, வாய்ப்புள், ஆனந்தப்பையுள்‘ வெள்ளணி: இவற்றை விளக்குக.

(2) ‘காமப்பகுதி கடவுளும் வரையார்’, ‘குழவிமருங்கினும் கிழவ தாகும்’ என்றிங்ஙனம் தொல்காப்பியர் கூறும் பொருள்களைத்துணிதற்கு வெண்பாமாலை உதவியாமாறு காட்டுக.

(3) அரசன் ஐந்தொழிலும், அவைக்குரிய எட்டும் எழுதுக.

IV. (1) பொருத்தமபத்தில் எழுத்தாற் கொள்ளப்படுவன எவை? எப் பொருத்தங்கள் இன்றியமையாதன என்பர்?

(2) பிள்ளைக்கவியின் காப்புப்பருவத்தில் எத்தெய்வங்களைத் தொகுத்துக்கூறுதலே மரபாகும்? பாட்டியல்கூறும் முறையை மாற்றி யார்யார் காப்புப்பருவம் பாடியுள்ளார்கள்?

(3) பஞ்சகம், பதிகம், சதகம், என்பனபோலும்பெயர்களைத் தமிழாற்கூறுதல் வழுவாமா? ஆராய்ந்து கூறுக.

V. (1) கலம்பகம், பரணி என்ற பெயர்களின் பொருளை ஆராய்க.

(2) பரணி, நான்மணிமாலை, உலா, தூது: இவற்றின் இலக்கணம் எழுதுக.

(3) ‘அதர்ப்பட யாத்தல்’ என்பதன் பொருள் என்ன?

VI. (1) உரைச்செய்யுளின்வகையினை விவரிக்க.

(2) ஒருத்தல், சேவல்: இவை எவ்வெவற்றின் ஆணினையுணர்த்துவன?

(3) பனையானது புல், மரம் என்பவற்றுள் எதன்பாற்படும்? அதன் உறுப்புக்களின் பெயர்களைக் கூறுக.

---



## பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

ரா. இராகவையங்கார்.

## இலக்கியம் 1.

ஸித்தார்த்திஞூ பங்குனிமீ 25உ (6-4-20) 10-மணிமுதல் 1-மணிவரை.

(அம்சம் 90)

I. (1) திருமுருகாற்றுப்படை யென்னும் பெயருக்கும் மற்றைய ஆற்றுப்படையென்னும் பெயர்களுக்கும் பொருள் கூறுமிடத்துள்ள வேற்றுமையை விளக்குக?

(2) திருமுருகாற்றுப்படையிற்கூறியவிஷயத்தைச் சுருக்கிப் பத்துவரிக்குமேற்படாமலெழுதுக?

(3) பலர்புகழ்ஞாயிறு கடற்கண்டாங்கு இதனைத் தொழிலுவமமாகக் கொண்டாற் பொருள்கூறுவதெங்ஙனம்?

(4) வாள்போழ்விசும்பின், நன்னர்நெஞ்சத்தின்னசை, அம் பொதிபுட்டில், அரும்பெறன்மரபிற்பெரும்பெயர், நலம்புரிகொள்கைச்செம்மலுள்ளம்—இவற்றிற்குப் பொருளென்?

(5) அறுவேறுவகையினஞ்சுவரமண்டி இதற்கு இரண்டுவகையாகப் பொருள்கூறுவர்; எப்படி?

II. (1) முருகக்கடவுளது கண்ணி தார் எதெது?

(2) சேய் என்னும்பொருள்குறித்த வேறுபெயர்களெவை?

(3) ஆறுமுகங்களிலேதாவதொருமுகத்தின் றொழிலும் அதற்கேற்றகைகளின்றொழில்களும் வழுவாதெழுதுக?

(4) நால்வேறியற்கைப் பதினொரு மூவர் என்றது யாரை? விளக்குக.

(5) பிரமசரியவிரதத்தினரை எப்படிச்சிறப்பித்துக்கூறியுள்ளார்?

III. (1) நாமகளிலம்பகமெனப் பெயரெய்தியதற்குக் காரணமென்ன?

(2) பின்வருபவர்கள் யார்? விசயை, வசந்தமாலை, சண்பகமாலை, சுநந்தை, கட்டியங்காரன், மதனன், கந்துக்கடன், நந்தட்டன், அச்சணந்தி, உலோகமாபாலன், ஸ்ரீவர்த்தமானன், சுபுலவிபுலர்.

(3) பிறைகொள்வாளின் மீனென இதற்குபமேயமென்ன?

(4) இராசமாபுரத்துச்செல்வநிறைவுக்குக்கூறிய உவமையென்ன?

(5) பொன்மாட்டத்துச்சியின் நீலமணிக்குடங்கள் விளங்குவதை எப்படி உத்பிரேக்ஷிக்கிறார்?

IV. (1) பின்வரும்பாட்டை வசனக்கிரமப்படுத்தியெழுதிக் கருத்துங் கூறுக?

இரிந்ததேன்குவளையினெற்றிதைவர
முரிந்துபோதவிழ்ந்துகொங்குயிர்க்குமுல்லையின்
அரும்புசேர்த்தணிஞிமிறார்ப்பவாய்பதம்
விருந்தெதிர்கொண்மெனத்தழுவிவீழ்ந்தவே.

(2) பின்வரும் பாட்டிற்குப் பொழிப்புரை யெழுதுக?

சோர்புனன்முகிறலைவிலக்கித்தூநில
மார்புகொண்டார்ந்ததுநரலவண்சுனை
யார்வுறுபலாப்பழமழிந்தநீள்களம்
போரினுன்மலிந்துடன்பொலிந்தநீரவே.

(3) குழுவினீங்கியோகொடு—கறையறமுயல்வதோர் கடவுளொத்தது-எது? இது எதனது சிறப்புக்கூறுமிடத்துள்ளது?

(4) நிமித்திகன்னன்னுமமைச்சன் அரசுரிமையைக் கட்டியங்காரனிடம் ஒப்புவிக்கலாகாதென்றதற்குச் சச்சந்தன் கூறிய மறுமொழி யென்ன?

(5) அமைச்சன் சச்சந்தனுக்குக் காமத்தால் யார் யார் என்னென்னகுறையுற்றனரென்றுகூறினன்?

V. (1) ஈங்கென்வரவென்ற கோவலனுக்கு மாங்காட்டுமறையோன் கூறியதென்ன?

(2) இடைச்சேரியிற் குரவைக்கூத்தாடியதெதற்கு?

(3) கண்ணகிக்குக் கோவலனுடையமுற்பிறப்புணர்த்தியது யார்?

(4) கண்ணகியை அக்கினிதேவன் மதுரையையெரிக்க அனுமதிகேட்டபொழுது அவன் சொன்னதென்ன?

(5) "காண்டகுமரபினவல்லமற்றவை" இதற்கு எவ்வெவ்விதமாகப் பொருள்கூறுகின்றனர்?



VI. (1) வாரணங்கழிந்து, நெடும்பேரத்தம், சாத்தொடு போந்து, வகுந்துசெல்வருத்தம், வேதினத்துப்ப, இடிதருமுளியம், மலர்பூந்துருத்தி, இளைசூழ்மிளை, இதிற்கீறிட்ட சொற்களுக்குப் பொருளென்ன?

(2) வயிரம், முத்து இம்மணிகளுக்குக் கூறும் முக்கியமான குற்றங்களின் பெயரென்ன? மாணிக்கமணியி னான்குஜாதி எவை?

(3) பிலத்துவாரத்துள்ள மூன்றுபொய்கைகளின்பெயரென்ன? அப்பொய்கைகளிலாடுவாரடையும் பயன் கூறிய பிராமணனுக்குச் சவுந்தியடிகள் கூறியதென்ன?

(4) குலத்தருநெறி கவர்க்கும் என்றாலென்ன?

(5) கோவலன் நீருண்ணும்விருப்பால் ஒருபொய்கையையெய்தியபொழுது அங்கு நடந்ததென்ன?

VII. (1) கிள்ளிவளவனை ஆலூர் கிழார்பாடிய இயன்மொழியில் "பகைவர்நாட்டிலுள்ள பரிசிலரும் நின்னாட்டையுள்ளுவர்" என்பதற் கென்னென்ன காரணங் கூறியிருக்கின்றனர்?

(2) மேற்குறித்த அரசனை மாறோக்கத்துநப்பசலையார் பாடிய இயன்மொழியில், ஈகை, அடுதல், முறைநின்புகழன்று என்றது என்னென்னபெருமையை விளக்கும்?

(3) நீயே — புறவினல்லலன்றியும்பிறவும்—பலவும்விடுத்தோன் மருகனை—என்றசெய்யுள் யார் யாரை எப்பொழுது பாடியது? இதன் திணையுந் துறையு மெவை?

(4) நாடனென்கோவூரனென்கோ-பாடிமிழ்பனிக்கடற்சேர்ப்பனென்கோ-என்னும்பாடல் ஆற்றுப்படையாவது எப்படி? இதிற் கூறிய அரசன் யார்? இவன் முல்லைநிலத்துக்குமுரியனென்றது எதனாற் பெறப்படும்?

(5) வைகல்எண்டேர்செய்யுந்தச்சன் — திங்கள்வலித்தகாலனோன்;

ஒருபிடிபடியுஞ்சீறிடம்,எழுகளிறுபுரக்குநாடுகிழவோனே.
இவற்றுற்கூறிய சிறப்பு இன்னின்னதென விளக்குக?

## பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

மு. கதிரேசச்செட்டியார்.

## இலக்கியம் II.

சித்தார்த்தி௵ பங்குனி௴ 25௳. (6-4-20) 2 மணி முதல் 5 மணி வரை.

(அம்சம் 90.)

### I. திருக்குறள்.

1. கடவுளையுணர்தற்குரிய கேட்டன் முதலிய மூன்றுபாயங்களையுங் கூறுங்குறள்களெவை? அவை அவற்றில் எவ்வாறு புலப்படும்?
2. இந்திரனை மூலத்தானும் உரையானும் குறிப்பிடுங்குறள்களெவை?
3. "யானெனதென்னுஞ்செருக்கு" "வேண்டாமையென்னுஞ்செருக்கு" "தீவினையென்னுஞ் செருக்கு" "ஆற்றுவாராற்றல்" "மறத்திற்குமஃதேதுணை" "மடமை மடவார்கணுண்டு" "தாந்தந், தகுதியான்வென்றுவிடல்" பொருள் கூறுக.
4. "பற்றுகபற்றற்றான் பற்றினை......விடற்கு" "நாளெனவொன்று போற்காட்டி......பெறின்" இவற்றிற்குப் பரிமேலழகர்கூறிய பொருள்களை உள்ளவாறு எழுதுக.
5. "மூலப்பகுதி ஒன்றிற்றோன்றியதன்மையிற் பகுதியேயாவதல்லது விகுதியாகாது" "காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றிவருதலிற் பிறவிப்பெருங்கடலென்றார்" "பயனை ஆறென்றார் பின்னதாகலின்" "வலியினிலைமையானென்ற அடையானும், மேய்ந்தற்று என்னுந் தொழிலுவமையானும் வல்லுருவத்தோடு மனவழிப்படுதலென்பது பெற்றாம்" இவ்வுரைப்பகுதிகளை விளக்கிக் காட்டுக.
6. இயல்புடைய மூவர் யாவர்? "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும்" துறந்தார் யார்? துறக்கமெய்துவார்க்கு ஆமாயினும் வீடெய்துவார்க்காகாதது யாது? பிறவித்துன்பங்கள், பிறவிக்கேதுவாவன, உற்சர்ப்பிணி, அவசர்ப்பிணி, என்பன யாவை? "ஐயுணர்வெய்தியக்கண்ணும்" ஐயுணர்வு யாது?



7. "தவமுந்தவமுடையார்க்காகும்......மேற்கொள்வது" "வேண்டிய வேண்டியாங்கெய்தலால்.........முயலப்படும்" இவற்றானறியப்படும் விரோதநிலையும் அதனைப் பரிகரிக்குமுறையும் விளக்கியெழுதுக. முற்குறளாற் றவஞ்செயக்கருதுவோனறியக்கிடப்பது யாது?

### II. திருக்கோவையார்.

1. "தெய்வத்தைமகிழ்தல்" "புணர்ச்சிதுணிதல்," இவ்விரண்டும் எத்திணைப்பாற்படும்? எக்காரணத்தால்? மெய்ப்பாடு, பயன் என்பன யாவை?
2. "அணியுமமிழ்துமென்னாவியுமானவன்" "தவவினைதீர்ப்பவன்" "தில்லைமாதோ" "அரனம்பலம்போற்றேயத்ததாய்" "பெருங்கணியார் நொடிவார் நமக்கினி கோதக" "கடிதோட்டகளவகத்து" "பிறவிகெட்டின்றழிகின்றதாக்கியதாளம்பலவன்" "படிச்சந்தமாக்கும் படமுளவோ" பதப்பொருள் விசேடவுரை வரைக.
3. "வாட்டம் வினாதல்" என்பதென்ன? ஈது யாண்டுநிகழும்? இயற்கைப்புணர்ச்சி யிறுதியில்நிகழாமைக்குக் காரணங் கூறுக?
4. "மிக்கோனாயினுங் கடிவரையின்றே" என்னும் விதியறியக்கிடக்குஞ் செய்யுள் யாது? அதன்கண் எவ்வாறு அறியப்படும்? "தலைப்படு சால்பினுக்குந் தளரேன்......யாரையுந் தேற்றுவனெத்துணையும்" யார் கூற்று? ஈண்டுப்போதருந் தற்புகழ்ச்சிக்குற்றம் எதனாற் பரிகரிக்கப்படும்?
5. "கோம்பிக்கொதுங்கிமேயாமஞ்ஞை" இப்பாட்டிலுள்ள உபமான உபமேயங்களை விளக்கியெழுதுக.
6. "சூளாமணியும்பர்க்காயவன்" என்னுஞ் செய்யுட்குத் திணைமுதலிய அகப்பாட்டிலக்கணங்களை வரைதலோடு "தாயச்சங்கூறி வரைவுகடாத"ற்குரிய செய்யுளையும் எழுதுக.
7. "மெல்விரல் வருந்த, மென்னனையாய் மறியே பறியேல் வெறியார் மலர்க,ளின்னன யான்கொணர்ந்தேன்" யார் யார்க்குக் கூறியது? இப்பகுதிக்கு விசேட வுரை கூறுக.

### III. இராமாயணம்.

1. "ஓதியவுடம்புதோறுமுயிரெனவுலாயதன்றே" "செல்லுறுகதியிற்செல்லும்வினையெனச்சென்றதன்றே" இவ்வுவமைகளிலுள்ள பொதுத்தன்மையை விளக்கி எழுதுதலோடு உபமேயங்களின் அளவால் உபமானங்களில் அறியக்கிடக்கும் இயைபு இன்னதென்பதையும் வரைக.
2. "குற்றபாகு கொழிப்பவர்" என்னுஞ் செய்யுள் எங்கில வருணனை? எவ்வாறு வினை முடிக்கப்படும்? "எகம் முதற் கல்வி......பழுத்தது போலுமன்றே" பொழிப்புரை வரைக.

3. தசரதன் நிலங்காத்தலையும் உயிர்களைக்காத்தலையும் கவி எவ்வாறு வருணிக்கிறார்? செய்யுள் கூறாது விஷயங்களைமாத்திரம் சுருக்கி எழுதுக.

4. "நமித்திரர் நடுக்குறும்" "ஐவரையறுவராக்கியவசிட்டன்" "நன்னெடுந்தவன் றுணைநவையில்செய்கைநீ" "அனைபுகுமரவினோடலவன் வாழ்வுற" "ஆவரும்வன்மைநேரறிந்துநீட்டலால்" சொல்லொக்குங்கடியவேகச்சுடுசரம்" என்னும் செய்யுட் பகுதிகளுக்குப் பொருள் கூறுக.

5. "மெய்ய நின்னுரைவேதமெனக்கொடு, செய்கையன்றோ அறஞ்செயு மாறென்றான்" யாவன்? யாரைநோக்கிக்கூறியது? சந்தர்ப்பம் யாது?

6. "பாருமோடாது நீடாது" என்னுஞ் செய்யுட்குப் பதவுரை விசேடவுரை வரைக.

7. கம்பர் கவித்திறத்தைப்பற்றிய முக்கியவிஷயங்களைப் பதினைந்து வரிக்குக் குறையாமலெழுதுக.

## IV. தேவாரம்.

1. சிவபிரான் அணிந்தனவாகத் திருவிருத்தத்திற் காணப்படும் ஐந்து மலர்களெவை? பாசுரப்பகுதியும் எடுத்துக் காட்டுக.

2. சிவபிரான் யானையுரிபோர்த்திருக்குங்கால் நுதற்கண்ணும் பாம்பும் பிறையும் எவற்றையொப்பத்தோன்றின? பாசுரத்தையும் எழுதிப் பொருளுங் கூறுக.

3. இறைவன் உயிர்களிடத்துச்செய்யுங்கருணை எத்தனை வகைப்படும்? அவற்றைக் குறிப்பிடும் பாசுரம் யாது? எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன. இறைவன் உயிர் அறிவில் விளங்கும் அறிவுருவன் என்பதைக் குறிப்பிடும் பாசுரப்பகுதி யாது?

4. இறைவன் திருமுடியையும் அவர்சடைக்கண்மதியையும் மிகச்சிறப்பித்துக்கூறும் பாசுரங்கள் இரண்டு எழுதுக.

5. "என்றுந்தன்பிறப்பையரியான்" "வெந்துயர்த்துக்கமெல்லாம் ஆவித்துநின்றுகழிந்தன" "உம்மையவர், கொண்டியிற்பட்டு மறக்கினும்என்னைக்குறிக்கொண்மினே" "பின்னையொற்றியெல்லாஞ்சோன்றுகண்டாய்" பொருள் கூறுக.

6. அருச்சுனன்செய்திகளைக் குறிப்பிடும் பாசுரப்பகுதி மூன்றும் அமர்நீதிநாயனாரைப்பற்றிய பாசுரமொன்றுங் காட்டுக. குறிப்பிடப்பட்ட சரிதப்பகுதியையும் சுருக்கிவரைக.

7. "முன்னேயுரைத்தான் முகமனேயொக்கும்" என்றார் அஃதின்னதென்பது பாசுரத்தாலறியக்கூடுமோ? கூடுமாயின் விளக்கிஎழுதுக.

8. அப்பர்சுவாமிகளுக்குக் காலத்தாற்பிற்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரிதப்பகுதியிலொன்றை நினைவுகூரும்படி வேறொருபடியாகக் குறிப்பிடும்விஷயம் எப்பாசுரத்திலமைந்துளது? அஃது எதற்காக அவ்வாறு கூறப்பட்டுள்ளது?



## V. பெரியதிருமொழி.

1. "கற்பகம்புலவர் களைகணென்றுலகிற் கண்டவாதொண்டரைப்பாடுஞ், சொற்பொருளாளீர்" "உடம்புருவில்மூன்றொன்றாய் மூர்த்திவேறாயுலகுய்ய நின்றானை" "வரைமீகானிற்றடம்பெருகு கருமுகிலை" "பிறரில்லைநுனக்கெனுமெல்லையினான்" பொருள் கூறுக.

2. "சேயனணியன்சிறியன்பெரியனென்பதுஞ்சிலர்பேச" எதற்காக இங்ஙனம் பேசுகின்றனர்? விசேடவுரைவரைக.

"வெள்ளியான் கரியான் மணிநிறவண்ணன்" எவ்வெக்காலங்களில் இந்நிறமுண்டு?

3. "பிச்சச்சிறுபீலிபிடித்துலகிற்பிணந்தின்மடவாரவர்போலங்ஙனே அச்சம்மிலர் நாணிலர்" இவர்யார்? ஏனிவ்வாறுவமிக்கப்பட்டனர்?

4. இரணியன் இரணியாக்கன் இவ்விருவர்சரித்திரங்களை மாத்திரம் உணர்த்தும் பாசுரமொன்று காட்டிப்பதவுரைவரைக.

5. பாராருலகும்பனிமால்வரையுங்கடலுஞ்சுடருமிவையுண்டுமெனக், காரதென நின்றவன்" இதனாலறிந்துகொள்ளக்கூடிய தாற்பரியம் யாது?

6. "வெந்திறற்களிறும்வேலைவாயமுதும்விண்ணொடுவிண்ணவர்க்கரசும், இந்திரற்கருளியெனக்குமீந்தருளுமெந்தை" யென்றார் அவர்க்கு என்ன ஈந்தருளினார்?

7. "1 பரிவாய்கீண்டசீரானை" 2 "போரானைக்கொம்பொசித்தபோரேற்றினை" 3 "தூதிற்சென்றப், பொய்யறைவாய்ப்புகப்பெய்த மல்லர்மங்கக், காய்ந்தானை" 4 "பான்மதிக்கிடர்தீர்த்தவன்" இச்சரிதக் குறிப்புக்களை விளக்கியெழுதுக.

---

### பாலபண்டிதர்வகுப்பு.

### பரீக்ஷகர்

### அ. கந்தசாமிப்பிள்ளை

---

### வசனமும் தர்க்கமும்

---

சித்தார்த்தி௵ பங்குனிமீ 26உ (7-4-20) 10 மணிமுதல் $11\frac{1}{2}$-மணிவரை.
(அம்சம் 60.)

க. (i) தருக்கம்—பெயர்க்காரணத்தையும் நூற்பயனையும் எழுதுக.

(ii) பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழர் தருக்கம் பயின்றிருந்தனர்; பிற்காலப் புலவரும் அக்கருத்தொடுபட்ட கவிச்சுவை விரும்பினர்;—என்பதை நிரூபிக்க.

உ. (i) தரிசனம் ஆறு, பதார்த்தம் ஏழு, ஏதுப்போலி ஐந்து—வகை மட்டும் எழுதுக.

(ii) அசமவாயி, அநைகாந்திகம். சற்பிரதிபக்கம்—அருத்தம்மட்டும் எழுதுக.

(iii) ஆன்மா, பிரமை, பாதிதம்—இலக்கணம் மட்டும் எழுதுக.

ங. (i) "காற்றந்தோன்ற அசைந்ததுவசந்தத்தென்றல்" "காலுக்கும் வாசமில்லை"—என்னும் திருவிளையாடற் புராணக்காரர் கூற்று முரணுமையைத் தருக்கவாயிலாய்க் காட்டுக.

(ii) பின்வருவனவற்றைப் பாடபுத்தகத்தில் இல்லாத உதாரணங் கொண்டு விளக்கிக்காட்டுக:—

சமவேதசமவாய சம்பந்தம், அந்நுவய வெதிரேகி, வியாப்பியத் தன்மையசித்தம்.

ச. (க) பின்வருபவை யெவ்வெவற்றிற்கு உதாரணமாகும்?

(i) மரம் அறிவுடையது; பெயருடைமையால்.

(ii) குதிரை மிருகம்; கொம்புடைமையால்.

(iii) குடம் அழிதற்பாலதன்று; ஆக்கப்படுதலால்.

(உ) தருக்கத்தை இலக்கணத்தோடு ஒப்ப ஒரு புலவர், எண்ணுகின்றார்—அதுபொருந்துமாறு காட்டுக.

ரு. (க) ததாகதன், சடபிஞ்ஞன், சாக்கியன், அறவாழிஆள்வோன், அருளறம்பூண்டோன் — என்னும் பெயர் கௌதமருக்குக் கூறுவதேன்—விளக்குக.

(உ) (i) பௌத்தமதம் இந்துமதத்தின் பாகமாயடங்கும்;

(ii) அக்காலத்துக்கு இம்மதம் தோன்றவேண்டியது இன்றியமையாததாயிருந்தது;

(iii) நாயன்மாராதியோர் அதனைக்கடிந்ததும் சரி; இவற்றின் விடையை விளங்க எழுதுக.

(ங) ஏது நிகழ்ச்சி, நிர்வாணம், தாதுசூழ்வான், உபாசகர் இக் குழூஉக்குறியை விளக்குக.

(ச) நால்வகைவாய்மையைப்பற்றி விளக்குக.

---



## பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்.

சு. ஹரிஹரையர்.

## செய்யுளியற்றல்.

சித்தார்த்திஹு பங்குனிமீ 26உ (7-4-20) 12மணி முதல் 1½மணி வரை.
(அம்சம் 60.)

1. க, கம், என்பன முறையே வெண்பாவின் முதலும் இறுதியுமாக வரவும்; முதலடியின் முதற்சீர் ஓரரசனையும், கடையடியின் இறுதிச் சீர்கள் ஓர் தலத்தினையும் உணர்த்தவும்; காழியர்கோன் கருமுருட்ட மண்வென்றகதையையமைத்து நேரிசை வெண்பாவொன்றியற்றுக

2. திருமால் பிரஹ்லாதாழ்வானையும், சிவபெருமான்நாவுக்கரசையும், ஆட்கொண்ட வைபவங்கள் விளங்க 30 அடிகட்கு மேற்படாத வெண்கலிப்பா ஒன்றியற்றுக.

## பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

V. முத்துசாமி ஐயர் M. A. L. T.

## வியாசம்

சித்தார்த்திஹு பங்குனிமீ 26உ (7-4-20) 2½ மணி முதல் 4½ மணி வரை.
(அம்சம் 60.)

1. உங்கள் இலக்கிய பாடத்தில் சம்பந்தட்ட எவரேனும் ஒரு புலவருடைய கவித்திறமை ஜீவியசரிதை முதலியவற்றுக்குத்தக்க மேற்கோளாதாரந் தந்து, ஒரு வியாசம் 4 பக்கத்துக்கு மேற்படாமலெழுதுக. (20)

2. (க) "தனக்கெனவாழாப் பிறர்க்குரிய" தகைமை

(உ) "ஒத்ததறிவான்உயிர்வாழ்வான்மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்"

இவற்றில் யாதேனும் ஒன்றைப்பற்றி ஒரு வியாசம் சற்று முன்பின் 3 பக்கமெழுதித்தருக. (20)

3. தமிழ்நூல்களால் அறியப்படும் வியாபாரம் அல்லது விவசாயம் இவற்றில் ஒன்றைப்பற்றிய விவரங்களைத்தொகுத்து 3 பக்கத்துக்குக் குறையாது ஒரு வியாசம் வரைக. (20)

உ

கணபதிதுணை.

# ஞானம்.

விநாயகவணக்கம்.

திருவாக்குஞ்செய்கருமங்கைகூட்டுஞ்செஞ்சொற்
பெருவாக்கும்பீடும்பெருக்கு—முருவாக்கு
மாதலால்வானோருமானைமுகத்தானைக்
காதலாற்கூப்புவர்தங்கை.

குருவணக்கம்.

கயிலாயபரம்பரையிற்சிவஞானபோதநெறிகாட்டும்வெண்ணெய்
பயில்வாய்மைமெய்கண்டான்சந்ததிக்கோர்மெய்ஞ்ஞானபானுவாகிக்
குயிலாரும்பொழிற்றிருவாவடுதுறைவாழ்குருநமச்சிவாயதேவன்
சயிலாதிமரபுடையோன்றிருமரபுநீடூழிதழைகமாதோ.

அவையடக்கம்.

குற்றமேதெரிவார்குறுமாமுனி
சொற்றபாவினுமோர்குறைசொல்வராற்
கற்றிலாவென்கவிவழுவாயினு
முற்றுநாடிவல்லோருய்த்துரைக்கவே.

---

அன்பர்களே? ஈண்டெடுத்துரைக்கவந்தஞானமாவது? சரியை கிரியை யோகமென்னுமூன்றின்மேற்பட்டது.

சரியையாவது.

அவ்வாற்றுல்யாமருவுந்திருக்கோயிலலகிடுதன்மெழுகலன்பின்
செவ்வாற்றுன்மலர்கொய்துதார்மாலைதொடுத்தணிதறீபமேற்றன்
மெய்வாய்ப்பச்சிவனடியார்பணித்தபணிதலைநின்றுமேவலாதி
யிவ்வாற்றிற்றுதநெறிச்சரியையினைப்புரிவோரெம்முலகில்வாழ்வார்.



கிரியையாவது.

ஈதியற்றிமுற்றியபின்பகநெறிக்காம்விசேடத்தையெய்திப்பூசைக்
கோதியகொண்டாதாரசத்திமுதற்சத்திமீறுங்குகஞ்சத்
தாதனமேமூர்த்திமுதற்பாவித்தாவாகித்தாவரணபூசை
யாதியசெய்தழலோர்புமிக்கிரியைவழாதாரெம்மருகுவாழ்வார்.

யோகமாவது.

இக்கிரியைமுற்றியபினியமாதியெட்டுறுப்பினியல்புவாய்ந்து
பக்கவழித்தனையடைத்துநடுநாடியுறப்பயிற்றியாறுதாரந்
தொக்கபொருளுணர்ந்தேகிமதிவரைப்பினமுதுண்டுசோதியுள்ளாற்
புக்கழுந்துசகபார்க்கயோகுழப்போரெம்முருவம்பொருந்திவாழ்வார்.

எனக்காஞ்சிப்புராணத்திற் றழுவக்குழைந்தபடலத்திற் கூறிய வாறு காண்க.

உரைசெயிற்பரமஞானமொன்றுமேமுத்திக்கேது
சரியைநற்கிரியையோகந்தாமொருமூன்றுஞான
மருவுதற்கேதுவென்றுமறைபுகன்றுரைக்குமிந்தக்
கருவியைப்பொருளென்றெண்ணிக்கழிப்பவர்கயவரன்றே.

எனப் பிரபுலிங்கலீலையிற் சித்தராமையர்கதியிற் கூறியவாறுகாண்க.

விரும்புஞ்சரியைமுதன்மெய்ஞ்ஞானநான்கு
மரும்புமலர்காய்கனிபோலன்றோபராபரமே.

எனத்தாயுமானவருங்கூறியதுகாண்க.

இனி ஞானமாவது முற்செய்தவத்தாலுண்டாமெனக. "ஐம் புலவேடரினயர்ந்தனைவளர்ந்தெனத் - தம்முதல்குருவுமாய்த் தவத் தினிலுணர்த்தவிட் - டன்னியமின்மையினரன்கழல்செலுமே" எனக் கூறிய சிவஞானபோதத்தில், எட்டாஞ்சூத்திரவுரையில், ஆன்மாக்க ளுக்கு முற்செய்தவத்தான் ஞானநிகழுமென்றது என மேற்கோளி லெடுத்துக்கொண்டு கூறியதுகாண்க. அம்மேற்கோளுக்குரைசெய்த திராவிடமகாபாடியகர்த்தர் படிமுறையானன்றி யிவ்வொரு பிறவியிற் செய்த தவந்தானே யமையாதென்பதுணர்த்துதற்கு முற்செய் தவ மென விசேடித்தார் என வுரைவகுத்திருக்கின்றார்.

இன்னுமச்சூத்திரத்திற்குரிய வுதாரணவெண்பாக்களில், ஒரு வெண்பா "பசித்துண்டுபின்னும்பசிப்பானையொக்கு - மிசைத்துவரு வினையிலின்ப - மிசைத்த - விருவினையொப்பிலிறப்பிறவத்தான் - மருவு வனுஞானத்தைவந்து" எனவுங்கூறியிருக்கின்றார். இதிலே யாகாதி கன்மங்களாற்சுவர்க்கபதவியனுபவித்தலே முத்தியென்பாரை மறுத்துப் "பசித்துண்டுபின்னும்பசிப்பானையொக்கு - மிசைத்துவருவினையி லின்பம்" எனக்கூறியதுங்காண்க.

சிவஞானசித்தியாரிலும், "புறச்சமயநெறிநின்றுமகச்சமயம்புக் கும்புகன்மிருதி வழியுழன்றும்புகலுமாச்சிரம - வறத்துறைகளவை யடைந்துமருந்தவங்கள்புரிந்துமருங்கலைகள்பலதெரிந்துமாரணங்கள் படித்துஞ் - சிறப்புடையபுராணங்களுணர்ந்தும்வேதசிரப்பொருளை மிகத்தெளிந்துஞ்சென்றுற்சைவத் - திறத்தடைவரிதிற்சரியைகிரியா யோகஞ்செலுத்தியபின்ஞானத்தாற்சிவனடியைச்சேர்வர்" எனக்கூறி யிருக்கின்றார்.

இவ்வெட்டாஞ்சூத்திரத்திலே குருவுமாயுணர்த்தலாவது, முன்னேயுண்ணின்றுணர்த்தியதன்றிப் புறத்தே குருவடிவமாகவந்துதீக் கைசெய்து ஞானத்தையுணர்த்தவென்பது கருத்தாகக்கொள்க.

தீக்கையாவது, "தேக்கூறுதேமொழியாய்மலஞ்சிக்குந்தீக்கை பலவிதமாமங்க-ணேக்கூறுமொழியெண்ணனூல்யோகமௌத்திரியா றுவனுமேழுண் - மீக்கூறுமௌத்திரிதான்வியன்கிரியைஞானமென விருபாலாய்முப் - பாற்கூறுபடுஞ்சமயவிசேடநிருவாணமெனும்பகுப் பினாலே" எனக்காஞ்சிப்புராணத்திற் றழுவக்குழைந்த படலத்திற் கூறியவாறுகாண்க. ஊறு - பரிசம். ஔத்திரிதீக்கை - ஓமசகிதமாகச் செய்யுந்தீக்கை.

இனி ஆளுடையபிள்ளையாராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், கண்ணப்பநாயனார் முதலாயினோர்க்குத் தவமின்றியு ஞான நிகழ்ந்தவாறென்னையெனின்? அவ்வாறில்லையென்பதுணர்த்துதற்கே அவ்வெட்டாஞ்சூத்திரத்தில், "தவத்தினிலுணர்த்த" என்றும், ஏதுவிலே, சரியைகிரியாயோகங்களைமேற்செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக்காட்டியல்லது அவை மோக்கத்தைக்கொடாவாகலான்" என்றுங்கூறியிருத்தல் காண்க.



இனிக் குருவடிவாகிவந்து தீக்கைசெய்துபதேசிக்கு ஞானத்தினாலேதான் சிவப்பேறெய்துமென்க; "மெய்ஞ்ஞானந்தானேவிளையும் விஞ்ஞானகலர்க் - கஞ்ஞானவச்சகலர்க்கக்குருவாய் - மெய்ஞ்ஞானம் - பின்னுணர்த்துமன்றிப்பிரளயாகலருக்கு - முன்னுணர்த்துந்தான் குருவாய்முன்" என்றும், இல்லாமுலைப்பாலுங்கண்ணீருமேந்திழைபா - னல்லாயுள்வாமானீர்நிழல்போ - லில்லா - வருவாகிநின்றானையாரறிவார் தாமே - யுருவாகித்தோன்றானேலுற்று" எனச்சிவஞானபோதத்திலும், "நிலையிருந்தாரைமுற்றத்தேவிட்டவர் - சாலப்பெரியரென்றுந்தீபற - தவத்திற்றலைவரென்றுந்தீபற" எனத் திருவுந்தியாரிலும், "உருவன்றியேநின்றுருவம்புணர்க்கும் - கருவன்றியேநின்றுதான்கருவாகு - மருவன்றியேநின்றமாயப்பிரானைக் - குருவன்றியாவர்க்குங்கூட வொண்ணாதே" எனத்திருமந்திரத்திலும், "உள்ளத்திருந்துமொளித்தான்பரன்குரவன் - கள்ளந்தனைத்தவிர்த்துக்காட்டினான் - வள்ளலருவானகோலமோவக்கோலங்காட்டும் - குருவானகோலமோகூறு" எனக்கூறியவாறுகாண்க.

இவ்வாறே குருவடிவாகவந்துபதேசித்த ஞானத்தாலே வாதவூரடிகள் சீவன்முத்தராயிருந்தாரெனத் திருவிளையாடற்புராணத்திலே, "சூக்குமாதுமைந்தெழுத்தினிற்சுற்றியபாச - வீக்கநீக்கிமெய்யானந் தம்விளைநிலத்துய்த்துப் - போக்குமீட்சியும்புறம்பிலாப்பூரணவடிவ - மாக்கினான்றொருதீபகம்போல்வருமண்ணல்" "பார்த்தபார்வையாலிரும் புண்டநீரெனப்பருகும் - நீர்த்தன்றன்னையுங்குருமொழிசெய்ததுந்தம் மைப் - பேர்த்தபாசமுந்தம்மையுமறந்துமெய்ப்போத - மூர்த்தியா யொன்றுமறிந்திலர்வாதவூர்முனிவர்" எனக்கூறியிருத்தல் காண்க. "மிக்கதொருபக்குவத்தின்மிகுசத்திநிபாதமேவுதலுஞானம் விளைந் தோர்குருவினருளாற் - புக்கதுட்டித்தேகிட்டைபுரிந்துளோர்கள்பூத லத்தேபுகழ்சீவன்முத்தராகிக் - தக்கபிரியாப்பிரியமின்றியோட்டிற்ற மணியத்திற்சமபுத்திபண்ணிச்சங்கானே - டொக்கவுறைந்திவணவினை யலவிவினைவிடாதேயுடங்கையாய்ச்சிவன்றோற்றமொன்றேகாண்பர்" என்றும். "சூரியகாந்தக்கல்லினிடத்தேசெய்யசுடர்தோன்றியிடச் சோதிதோன்றுமாபோ - லாரியனுமாசான்வந்தருளாற்றோன்றவடி ஞானமான்மாவிற்றோன்றுந்தோன்றத் - தூரியனுஞ்சிவன்றோன்றுந் தானுந்தோன்றுந்தொல்லுலகமெல்லாந்தன்னுள்ளேதோன்று - நேரிய

ஞய்ப்பரியனுமாயுயிர்க்குயிராயெங்குநின் றநிலையெல்லாமுன்னிகழ்ந்து தோன்றும்" எனச்சிவஞானசித்தியாரிலுங்கூறியிருத்தல் காண்க.

இனி ஞானம் மூன்றென்றும், அம்மூன்றையுமிரண்டாகவகுத்து இரண்டென்றுங்கூறுவர். மூன்றாவன: பாசஞானம், பசுஞானம், சிவஞானமென்பர். "வேதசாத்திரமிருதிபுராணகலைஞானம்விரும்ப சபைவைகரியாதித்திறங்கண் மேலா- நாதமுடிவானவெலாம்பாசஞான நணுகியான்மாவிவைகீழ்நாடலாலே - காதலினுளன்பிரமமென்னு ஞானங்கருதுபசுஞானமிவனுடலிற்கட்டுண் - டோதியுணர்ந்தொன் றென்றாவுணர்ந்திடலாற்பசுவா - மொன்றாகச்சிவனியல்பி லுணர்ந்திடுவன் காணே" என்றும், "சிவனையவன்றிருவடி ஞானத்தாற்சேரச்செப்புவது" என்றுஞ் சிவஞானசித்தியாரிற் கூறியவாறுகாண்க.

## ஞானம் இரண்டாவன.

"சிவனடியேசிந்திக்குந்திருப்பெருகுசிவஞானம் - பவமதனையற மாற்றும்பாங்கினிலோங்கியஞான - முவமையிலாக்கலைஞானமுணர்வரியமெய்ஞ்ஞானந் - தவமுதல்வர்சம்பந்தர்தாமுணர்ந்தாரந்நிலையில்" எனப் பெரியபுராணம் ஆளுடையபிள்ளையார்புராணத்திற்கூறியவாறு காண்க; இக்கவியிலே, சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞானமாகியவுவமையிலாக் கலைஞானம் பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானமாகிய வுணர்வரியமெய்ஞ்ஞானந் தவமுதல்வர்சம்பந்தர் தாமுணர்ந்தாரந்நிலையில் எனக்கொண்டுகூட்டிப் பொருளுரைக்க வேண்டும். இங்ஙனம் பொருள்கொள்ளுங்கால் ஞானமிரண்டே யென்க.

இக்கவிக்கிவ்வாறே கலைஞானமென்றும், மெய்ஞ்ஞானமென்று மிரண்டாகப் பொருளுரைக்கவேண்டுமென்பதற்குச் சான்றியாதோ வெனில்? தணிகைப்புராணத்தில், "மேவருஞானமிரண்டவற்றென்றுளிமலனார்பாததாமரையே-யோவருமன்பினுணர்திருவளிக்கு மொப்பிலாவுயர்கலைஞானந்-தாவரும்பவத்தைவேரொடுங்களையுந்தக்க மெய்ஞ்ஞானமென்றிவற்றுற்- சாவதும்பிறப்புந்தணப்புறச்சிவத்தைச் சார்ந்தவாய்நிற்றல்யோகம்" என நான்கினையிரண்டாகவிளக்கிக் கூறியிருக்கின்றவாறுகாண்க, இக்கலைஞானத்தை அபரஞானமென்றும், மெய்ஞ்ஞானத்தைப் பரஞானமென்றுங்கூறுவர். திருவிளையாடற் புராணம் நரிபரியாக்கியபடலத்திற் சுவாமியேறிவந்த வேதமாகிய குதிரைக்குள்ள அங்கங்களை யெடுத்துரைக்குமிடத்துக் கண்களைக் கூறும்போது, "ஒருமையாம்பரம்பரமாமுணர்வெனுங்கண்ணது" எனக்கூறுமாறு காண்க.



அக் கலைஞானத்தின்மேலாகிய மெய்ஞ்ஞானத்தை, உண்மைஞானமென்றுங்கூறுவர்; அவ்வுண்மைஞானம் நான்கு வகைப்படும். "கேட்டலுடன்சிந்தித்தறெளிதனிட்டை கிளத்தலெனவீரிரண்டாங் கிளக்கின்ஞானம் - வீட்டையடைந்திடுவர்நிட்டைமேவினோர்கண்மேவாதப்பினவர்மேலாயபதங்கட் - கேட்டியபுண்ணியநாதராகியின்பமினிதுநுகர்ந்தரனருளாலிந்தப்பார்மே - லோட்டியநற்குலத்தினில்வந்தவதரித்துக்குருவான்ஞானநிட்டையடைந்தடைவர்நாதன்றாளே" எனச் சிவஞானசித்தியாரிற் கூறியவாறுகாண்க.

இந்த ஞானநிட்டையுமதன்பயனுமிவ்வாறெனக் காஞ்சிப்புராணத்திலே, "உணர்பொருளுமுணர்வானுமுணர்வுமெனும்பகுப்பொழியாதொழிந்துபாலும் - புணர்விழியுநீர்நிழலுந்தீயிரும்பும் புனலுவரும்பருதிமீனுந்- துணையவிரண்டறுகலப்பினெம்முடனுப்பேரின்பந் துய்த்துவாழ்வா - ரிணர்விரைத்தமலர்க்கோதாயவர்வடிவேயெமக்கினியகோயிலாமால்" எனக்கூறியிருத்தல்காண்க. இவ்விரண்டறுகலப்பையே, திருவானைக்காப்புராணம், ஞானவுபதேசப்படலத்தில், "போதவாருயிரபேதபாவனைபுரிவஃதே-மாதராயுயர்முத்தி" என்றும், சிவஞானசித்தியாரில், "கண்ணுதலினிறைவதனிற்கலந்து" என்றுங் கூறியிருத்தல்காண்க. இதனை அத்துவிதக்கலப்பென்பர்; அத்துவிதமென்னுஞ்சொற்குப்பொருள் அத்துவிதவாக்கியத்தெளிவுரையிற் காண்க.

இச்சித்தாந்தஞானநெறியே வீடுபேற்றிற்குநேர்வழியென உபமன்னியர் அகத்தியர்முதலிய வுயர்ந்தோரெல்லாம் வாயுசங்கிதை, சிவகீதைமுதலியவற்றிற் கூறியிருக்கவுந்தெளியமாட்டாது, உலகரெலாம் வேறுபிதற்றிப் பாவக்குழியில்வீழ்வார்கள். ஈதென்னமயக்கம் எனச்சிவஞானசித்தியாரில், "சித்தாந்தத்தேசிவன்றன்றிருக்கடைக்

கண்சாத்திச்செனனமொன் றிலேசிவன்முத்தாக்கை வைத்தாண்டமேலங் கழுவிஞானவாரிமடுத்தானந்தம்பொழிந்துவரும்பிறப்பை யறுத்து - முத்தாந்தப்பாதமலர்க்கீழ்வைப்பனென்றுமொழிந்திடவுமுலக ரெலா மூர்க்கராகிப் - பித்தாந்தப்பெரும்பிதற்றுப்பிதற்றிப்பாவப்பெருங் குழியில்வீழ்ந்திடுவரிதுவென்னபிராந்தி” எனக்கூறியிருத்தல்காண்க. கேட்பவர்சிரமநோக்கியிங்ஙனஞ் சுருங்கவுரைத்ததென்க. கற்றறி வுடையோர்க்கு இக்கவிகளின்பொருள்விளங்குமாதலால் விரிவஞ்சிப் பொருள்விரித்துரைக்கவில்லை. நல்லறிவுடையோரிந்த ஞானநெறி யைக்கொண்டொழுகி யுய்வாராக.

“மெய்ம்மையாமுழவைச்செய்துவிருப்பெனும்வித்தைவித்திப்
பொய்ம்மையாங்களையைவாங்கிப்பொறையெனுநீரைப்பாய்ச்சித்
தம்மையுநோக்கிக்கண்டுதகவெனும்வேலியிட்டுச்
செம்மையுணிற்பராகிற்சிவகதிவிளையுமன்றே”

எனத்தேவாரத்திற்கூறியதுங்கண்டு கடைப்பிடிக்க. சுபம்.

ஒருமதியாற்றன்முகங்கண்டுற்றவர்மற்றவர்முகங்கண்டுரைத்தேற்காமற்
றருமதியாகம்புரிவோன்பெத்தாச்சிதன்சபைமுன் றகைஞானத்தைப்
பெருமதியாலாராய்ந்துபிரசங்கஞ்செய்கவெனப்பேணிமீனம்
வருமதியாதிலக்கருவூர்த்திருநாளிலெடுத்துரைத்துவாழ்வுற்றேமே.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனத்துவித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

---

உ

# சிசுபால சரிதம்.

மஹாகாவியமாய் வடமொழியிலே வழங்கும் மாககாவிய மஹா வாக்கியத்தைப் பெரும்பாலும் மூலவாக்கியமாய் முன்வைத்துச் சேதிநாட்டரசன் சிசுபாலன் சரிதத்தைக் கதைசேர்ந்த வாசகமாய் எழுதி வருகின்றோம். ஆதியிலே நின்ற நாரதர் கதையையும், அடுத்து நின்ற மந்திரகதையையும் எடுத்து இந்தச் செந்தமிழில் எழுதுகின் றோம். தமிழ்மொழிவளர்ச்சியிலும், தமிழ்மொழியுணர்ச்சியிலும் கருத்து மிக்க பிரபுக்களும், நூலுரைகளிலே சென்று திருத்தம் மிக்க புலவர்களும் நோக்கக்கடவர். பிரகடனம் பெறுதற்குத் திரவிய சகாயமும் பிழைநீங்கிப் பரிசுத்தமாதலும் வரவேண்டும்.

உ

## நாரதர் வருகை.

உலககாரணராகிய நாராயணமூர்த்தி முன்னொருகாலத்திலே பூவுலகத்திலே பாரதகண்டத்திலே வடமதுரையிலே யதுகுலதில கன் வசுதேவன் என்பவனுக்கும் தேவகி என்பவளுக்கும் புத்திர ராய்ப் பிறந்து கிருஷ்ணர் என்னுந் திருநாமமும் பெற்று அற்புத மான பற்பலசெயல்களைச் செய்தும், விற்பனமான விளையாடல்களைச் செய்தும், வீரச்செயல்களைச் செய்தும், தீரச்செயல்களைச் செய்தும், தீயவர்களைச் செறுத்து நீத்தும், நல்லவர்களை மதித்துக் காத்தும் ஒப்புயர்வற்ற உத்தம புருடராய்த் துவாரகை என்னுந் திருநகரியிலே அரசுவீற்றிருந்தார். வாசுதேவன், கண்ணபிரான் முதலிய நாமங் களும் அவருக்கு வழங்கப்படும்.

அந்த நாராயண மூர்த்தியாலே இராமாவதாரத்திற் கொல்லப் பட்ட இராவணன் என்னும் இராக்கதனும் வசுதேவன்றங்கையாகிய சாத்துவதி என்னும் நங்கைக்கும் தமகோஷன் என்பவனுக்கும் மக னாய்ப் பிறந்து சிசுபாலன் என்னும் பேரும்பெற்றுத் தீக்குணங்களிலே

மிக்குத் தீத்தொழிலே கன்றிப் பலரையும் வருத்திச் சேதி என்னுந் தேசத்துக்கு ஆதிபனுமாய் மாகிஷ்மதி என்னும் மாநகரியிலே அரசுவீற்றிருந்தான்.

இங்கிவர் இருவரும் இவ்வாறு வீற்றிருக்கும் நாள்களிலே ஒருநாள் அங்கங்கே நிகழும் காரியங்களை அங்கங்கேபோய் நன்குபார்த்தறிந்து வந்து அவரவர்க்குத் தெரிவிக்குஞ் சுபாபகுணமுடைய தேவமுனிவராகிய நாரதமுனிவர் தேவுலகுக்கும் போனார். அந்த நாரதரை இந்திரன் கண்டு எதிர்கொண்டழைத்துப்போய் இன்சொல் முதலியவற்றால் இனிமைபெற உபசரித்து இருக்கையிலிருத்தி நானாவித காரியங்களையும் பேசிக்கொண்டாடியபின் சிசுபாலன்செய்யுந் தீங்குகளையுந் தெளிவாக எடுத்துச்சொல்லி இந்தச் சிசுபாலனை எவ்வழியாலுங் கொல்லுவிக்கவேண்டும். இவனைக் கொல்ல வல்லவர் யாவர்? என்று கருதும்போதெல்லாம் கண்ணபிரான் என்னுந் திருநாமமே மனத்திலும் வாயிலும் வருகின்றது. சுவாமீ! நீர் இப்பொழுது பூவுலகிற்போய்த் துவாரகாபுரியில் வீற்றிருக்குங் கண்ணபிரானைக் கண்டு சிசுபாலன்புரியுந்தீங்குகளையுஞ் செவ்வனே சொல்லிச் "சிசுபாலனைக் கொன்றருளும்படி யான்கேட்கின்றேன்" என்பதையும் அவர்க்குச்சொல்லி வருதல்வேண்டும் என்று வணங்கிக்கேட்டான். நாரதமுனிவரும் நல்லகாரியம் என்றுடன்பட்டுச் சடிதியில் விடையும் பெற்றுத் தேவுலகினின்றும் பூவுலகை நோக்கித் துவாரகாபுரிக்கு நேரே இறங்கிவந்தார்.

இறங்கிவருகின்ற நாரதமுனிவருடைய திருமேனியின் செவ்வொளியே பூமிக்கு முதலில் புலப்பட்டது. அவ்வொளியைக் கண்டார் யாவரும் ஒளியுருவமான பொருள் ஒன்று மேலே நின்று கீழே வருகின்றது. சூரியனுடைய ஒளியோ? அக்கினியுடைய ஒளியோ? சூரியனுடைய ஒளியாயின்; குறுக்கே சரிந்து செல்லும். அக்கினியுடைய ஒளியாயின் மேலே நிமிர்ந்து செல்லும். இந்த ஒளியோ எந்தப்பக்கத்திலும் பரந்து பாய்கின்றது. ஆதலால் இவையிரண்டுமன்று. யாதோ வேறொன்று. யாவதென்று தெரிகிலம் அற்புதம்! அற்புதம்! என்று சிந்தித்துத் திகைக்கும்போது கண்ணபிரானும் அதனைக்கண்டு பலவகையாக எண்ணினார். முதற்கண் ஒளித்திரட்சி



ஒன்று என்றும் அதற்குப் பின்னர் உருவுடைய பொருள் ஒன்று என்றும், அதற்கும் பின்னர்ப் புருடன் ஒருவன் என்றும் படிப்படியே வரவர எண்ணிவந்து கிட்டியவுடனே நாரதமுனிவர் என்று நேரே கண்டார். கண்டவுடனே கதுமென எழுந்து வணங்கி இன்சொல்லுங் கூறி உள்ளே கொண்டுபோய் அருக்கியம் முதலியன கொடுத்து இருக்கையில் இருத்தி மனவாக்குக் காயங்களாலே வழிபாடு செய்தார். நாரதமுனிவருந் தீர்த்தநீர் தெளித்து வாழ்த்துரையுங் கூறி இருக்கும்படி கட்டளை செய்யக் கண்ணபிரானும் இருந்து நாரதமுனிவரை நோக்கிச் சொல்லுவார்.

## கண்ணபிரான் கூற்று.

பகவானே!

இப்பொழுது நீர் இங்கே எழுந்தருளி வந்து நமக்கெல்லாம் நற்காட்சியைத் தந்தீர்! உமது காட்சி புண்ணியங்களை ஆக்குகின்றது. பாவங்களைப் போக்குகின்றது! உமது வருகை நமது தைரியத்தை வீக்குகின்றது! உமது மகிமை நமது மனவிருளை நீக்குகின்றது! நாமுஞ் செயற்பாலன யாவையுஞ் செய்து முடித்துளேமாயினம். ஆயினும் உமது வாக்கையுங் கேட்கும் வேட்கையுமுடையேம் என்றார். ஆர்வமோடும் அந்த வார்த்தைகளை நாரதமுனிவர் கேட்டு மனம் மகிழ்ந்து கண்ணபிரானை நோக்கிச் சொல்லுவார்.

## நாரதர் கூற்று.

புருடோத்தமரே!

நீர் முழுமுதற் பொருளாய் நின்று மூவுலகையுங் காவல் புரிகின்றீர். முனிவராயுள்ளோர்க்கும் முதல்வராய் நின்று கிருபை செய்கின்றீர். முத்தியை விரும்பும் பத்தசனங்களுக்கும் முத்தியைக் கொடுக்கின்றீர். கபிலர் முதலிய யோகிகளுக்குங் காட்சி கொடுத்தீர். நல்லோரைக் காக்கும் பொருட்டுந் தீயோர்களைப் போக்கும் பொருட்டும் பலவகை அவதாரங்களை எடுத்தீர். பன்றியவதாரமாய் வந்து

கடலின் கீழேபோன பூமியை மேலே கொணர்ந்து விடுத்தீர். நரசிங்காவதாரமாய் வந்து இரணியன் என்னுங் கொடியவனை நாமசேடம் பெற நகத்தாற் படுத்தீர். இராமாவதாரத்திலே இராவணன் என்னுங் கடியவனைப் பத்துத் தலைகளுஞ் சிதறப் பாணந்தொடுத்து வேரோடுங் கெடுத்தீர். அந்த இராவணன்றானே இப்போது சிசுபாலனென வந்து சேதி என்னுந் தேசத்துக்கு அரசனுமாய் நின்று நீதி என்பது சிறிதுமின்றி நிட்டூரஞ் செய்கின்றான். அவனே தேவர்க்கும் அசுரர்க்கும் யாவர்க்கும் நன்மை தீமைகளைச் செய்தற்கு வல்ல அத்துணைச் சாமர்த்தியம் மிக்க வித்தக வீரன் பிரமாவின் சொல்லையும் பொருள் என்று கொளான். இங்கே நின்று யாவர்க்கும் இடர்புரிய விடாமல் இயமலோகம்போக அவனை அனுப்பிவைக்கும்படி இந்திரன் உம்மை இரந்து கேட்கின்றான் என்று சொல்லித் தமதுவார்த்தைகளை நாரதமுனிவரும் முடித்தார். கண்ணபிரானும் ஓம்என்று சொல்லி உடன்பட்டார்.

---

## தெரிந்து செய்தல்.

சிசுபாலன் செயல்களைக் கண்ணபிரான் நினைந்து நினைந்து நெஞ்சம் வருந்தினார். சிசுபாலன்மேற் சீற்றமும் போர்த்தொழிற்கண் ஊற்றமும் மிகுந்தார். சேனைகளோடுஞ் செல்லவேண்டும் என்றுஞ் சிசுபாலனைக்கொல்லவேண்டும் என்றுஞ் சிந்தனை கொண்டார். அந்தச் சமயத்திலே "இராஜசூய யாகம் நடாத்துதற்கு நீர் வரவேண்டும்" என்று தருமபுத்திரர் அனுப்பிய தூதும் வந்தது. அதற்கும் போதல் அவசியம் என்பதையும் நினைத்து "இரண்டுகன்றினுக்கிரங்குமோ ராவெனா" (இராமா) வருந்தி, "இரண்டு காரியங்கள் ஒருங்கு வந்து எதிர்ந்திருக்கின்றன. ஒன்று தேவகாரியம் ஒன்று மித்திரகாரியம். இரண்டும் அவசியஞ் செய்யவேண்டியன. இரண்டையும் ஒருகாலத்திலே முடிப்பது எப்படி ?" என்று கருதி ஒன்றுந் தெரியாமல் மனந் தடுமாறித் தெரிந்த முதியோரோடுங் கலந்தெண்ணித் துணிவுபெறக் கருதிப் பலராமர் உத்தவர் என்னும் இருவரையுங் கூட்டிக்கொண்டு தனியிடம் ஒன்றிற்போய் அவர்களையும் இருத்தித் தாமும் இருந்து நிகழ்ந்த காரியத்தையுந் தமது கருத்தையுஞ் சொல்லுவார்.

மூத்தோர்களே!

நீங்கள் இப்பொழுது நாம் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு நன்றாக எண்ணி உங்கள் கருத்தையுஞ் சொல்லுங்கள். இப்போது செய்யப்படவேண்டியனவாய் இரண்டு காரியங்கள் எமக்கு வந்திருக்கின்றன. ஒன்று தேவகாரியம். மற்றது மித்திரகாரியம். சிசுபாலனைக் கொல்லவேண்டும் என்று இந்திரன் கேட்கின்றான். இது தேவகாரியம். தமது யாகத்துக்கு வரவேண்டும் என்று தருமபுத்திரர் கேட்கின்றார். இது மித்திரகாரியம். இரண்டையும் ஒருகாலத்திலே முடிப்பது எப்படி? சிசுபாலனைக் கொலைபுரிந்து தேவரிடர் தீர்த்தலாகிய தேவகாரியம் அவசியமா? தருமபுத்திரருடைய யாகத்தைச் சென்று நின்று நடாத்துதலாகிய மித்திரகாரியம் அவசியமா? எது செய்யவேண்டும் என்பது தெரியவில்லை. மெய்யுணர்வுடையோருஞ் செய்யுங் காரியங்களிலே சிந்தனை தடுமாறுவர். பின்னை யாம் துணிவு பெறுவது எப்படி? ஆயினும் நாந் துணிந்த கருத்தையும் உங்களுக்குச் சொல்லுகின்றாம்.

௨

## கண்ணபிரான்கருத்து.

தருமபுத்திரரோ தமது சகோதரர்களாகிய வீமன்முதலியவீரர்களை அனுப்பித் திக்குகளிலுள்ள அரசர்களையெல்லாம் வென்று கீழ்ப்படுத்தி அரசிறைகளும் பெற்று அரசர்க்கரசராய் விளங்குகின்றார். அவருக்கு மாறாய் அரசர் ஒருவரும் இப்போது எழும்பத்துணியார். வீமன்முதலியவீரருந் துணைவராய் விளங்குகின்றார்கள். எமது துணைவேண்டாமலுந் தமது யாகத்தை இனிது முடிப்பார். ஆதலால் அவருடைய யாகத்துக்குத் துணைபுரியப்போதல் அதிகம் அவசியமன்று. சிசுபாலனோ எமது பிதாவின் சகோதரிபுத்திரன். எனக்கு மைத்துனன். அவ்வுரிமைநோக்கிப் பைய மெல்லப் பார்ப்போம் என்று பராமுகமாக விடப்படத்தக்கவனுமல்லன். வளர்ந்து மிகுந்து வரும் நோயே போன்று பகைத்திற மிகைத்துவருகின்றான். எமக்குந் துரோகஞ்செய்கின்றான் பிறர்க்குந் துரோகஞ்செய்கின்றான். பலரும் மனம் பதைத்து வருந்துகின்றார். எமக்குத்துரோகஞ்செய்

கின்றான் என்று மனக்கவலை கொள்கின்றிலம். பலர்க்குந் துரோகஞ் செய்கின்றான் என்றே மனக்கவலைகொண்டு பரிதபிக்கின்றாம். அந்தப் பாதகனால்வருந்துயரம் ஆற்றரிது! ஆற்றரிது! பரிதாபம்! பரிதாபம்!

கந்தபுராணம்.

> ஏற்றெழு வன்னிமே லினிது துஞ்சலாம்
> தோற்றிய கடுவிட மெனினுந் துய்க்கலாம்
> மாற்றல ரலைத்திட வந்த வெந்துயர்
> ஆற்றரி தாற்றரி தலைமைப் புன்மையே.

இப்படியெல்லாம் இருத்தலாற் சிசுபாலனைக் கொலைபுரிதலாகிய தேவகாரியமே அவசியம் என்று கருதுகின்றாம். இதுவே நமது கருத்தாகும் என்று கண்ணபிரான் சொல்லிமுடித்தார். அதன்பின் சேடாவதாரபுருடரும், அறிவாளரும், மூதாளருமாகிய பலராமர் தமதுகருத்தைச் சொல்லுகின்றார்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

உ

# உவமைப்போலிவிளக்கம்.

(உ௪௬-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி, சிவாக்கிரயோகிகளுரையிற்கூறிய முறையை ஆராயுமிடத்து அது இப்பகுதியில், (மறைஞானதேசிகருரையில் "ஒப்பில் போலியுமப்பொருட்டாகும்" என்றார் தொல்காப்பியனாரும் என்று ஓரியைபுமில்லாது கிடக்குமிடைச்செருகல்போல) பண்டிதமானிகளால் கூட்டியுங் குறைத்துந் திருத்தியும் இடைச்செருகலாயெழுதப்பட்ட பல பிழைபாடு காணப்படுதலால் அவ்வுரைப்பொருளைத் தெளிவுற விளக்கலரிதாயிருக்கிறது. இதனைப் பின்வருமாற்றாலறியலாம்.

"விளங்குவமைப்போலியைந்தென் பான்காண்டும்" என்றது உவமைபோற்பிரகாசித்து உவமாபாசமாகப்போவது 'சாத்தியவிகலன்,' 'சாதனவிகலன்' என்றிரண்டுவகையாகப் பதினெட்டுப்பேதமாம்" என்று உரையெழுதப்பட்டிருக்கிறது. இதனால் சாத்தியவிகலபேதம் ஒன்பதும், சாதனவிகலபேதம் ஒன்பதும் ஆகப்பதினெட்டுப்பேதம்



கூறவேண்டும். அவ்வாறு விவரணவாக்கியங்களாற் பெறப்படாமையால் அவை ஐககண்டியமுடையனவாகத்தோன்றவில்லை. ஆயினும் அவற்றுள் சாத்தியவிகலம், சாதனவிகலம் என்னுமிரண்டற்கும் எழுதியிருக்கும் விவரணம்மட்டும் பொருத்தமுடையதாயிருக்கிறது.

சாதருமியதிட்டாந்தவகையில், (1) சாத்தியவைகல்யம், (2) சாதனவைகல்யம், (3) உபயவைகல்யம், (4) ஸ்வரூபவைகல்யமென்று சொல்லப்பட்டநான்கும் முறையே மறைஞானதேசிகருரையிற்கூறிய (1) சாத்தியவிகலன் (2) சாதனவிகலன் (3) உபயவிகலன் (4) ஆசிரயகீனன் என வழங்கப்பட்ட நான்குமாம். அவற்றுள் ஒவ்வொன்றும் வெதிரேகதிட்டாந்தத்துக்குமுதாரணமென்றெழுதியிருப்பது சிறிதும் பொருந்தாதிருக்கிறது. அன்னுவயத்துக்கு உரியன வெதிரேகத்தில் மாறுபடுமாதலால் வெதிரேகத்துள்ளும் ஒவ்வொன்றற்கும் வெவ்வேறுதாரணம் மறைஞானதேசிகருரையில் காட்டியவாறே காட்டவேண்டும்.

இரண்டாவதாகக்காட்டிய சாதனவைகல்யவுதாரணத்தில் 'திருஷ்டம்போல' என்றெழுதியிருப்பது தவறாயிருக்கிறது; அது, "அதிருஷ்டம்போல" என்றெழுதப்படவேண்டும்.

வைதன்மியதிட்டாந்தத்துள் நான்காவதற்கு ஆசிரயாபாவவைகல்யம் என்று பெயர்கொடுத்திருப்பதும் தவறு. அது "ஆசிரயவைகல்யம" என்றே வழங்கத்தகும். இவையெல்லாம் இடைச்செருகலானும், ஏடெழுதுவோர் பராக்கானும்நேர்ந்த பிழைகளாம்.

வைதன்மியதிட்டாந்தத்துள் 5, சாத்தியாபாவவைகல்யம் 6, சாதனாபாவவைகல்யம் 7, உபயாபாவவைகல்யம் 8, ஆசிரயவைகல்யம் என்பன முறையே மறைஞானதேசிகருரையுள் சாத்தியாவியாவிருத்தம், சாதனாவியாவிருத்தம், உபயாவியாவிருத்தம், ஆசிரயவிகீனம் என வழங்கப்பட்டன. இவ்வெட்டும் அர்த்ததோஷமுடையனவாகக்கொண்டு வினையபத்தும் உத்திதோஷமுடையனவாகப் பின்வருமாறு காட்டப்பட்டன. அவை வருமாறு.

(1) அன்னுவயதிட்டாந்தத்திற்குவேறாய்ச்சொல்லுகையும்
(2) அன்னுவயவெதிரேகவியாத்திக்குவேறாய்ச்சொல்லுகையும்
(3) அவ்வியாத்திகளிற்றானே சாத்தியசாதனங்களைவேறாய்ச்சொல்லுகையும்.
(4) சாத்தியத்தைச்சாதனமாகச்சொல்லுகையும்

## யப். ஏ. பரீக்ஷை.

### I-வது வகுப்பு.

I. 5. T. R. வெங்கடாசலமூர்த்தி, S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
(முதற்பரிசு. ரூ. 40-பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2. 4. C. S. ராஜாராம்ராஜேந்திரநாத், S.P.G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
(இரண்டாவது பரிசு. ரூ. 35.)

---

### II-வது வகுப்பு.

1. 30. P. S. வெங்கட்டராமன், மஹாராஜாகாலேஜ், புதுக்கோட்டை.
2. 21. R. S. சுப்பிரமணியன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
3. 27. S. குற்றாலலிங்கம்பிள்ளை, மஹாராஜாகாலேஜ், திருவனந்தபுரம்.
4. 10. H. S. இராமஸ்வாமி, ஸெண்ட்ஜோசப்காலேஜ், திருச்சிராப்பள்ளி.
5. 32. R. சீனிவாசசர்மா, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
6. 29. T. A. இராமச்சந்திரன், முனிசிபல் காலேஜ், சேலம்.
7. 8. S. குப்புசாமி, S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
8. 18. P. K. சுப்பிரமணியன், கவர்ன்மெண்ட்காலேஜ், கும்பகோணம்.
9. 26. A. S. பத்மநாபன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
10. 34. P. S. முத்தையன், பிண்டிலேகாலேஜ், மன்னார்



## மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

### II-வது வகுப்பு.

1. 239. R. சேஷாத்திரி, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
2. 101. T. சுந்தரமூர்த்தி, St. Francis Xaviers' High School, பாளையங்கோட்டை.
3. 123. A. பழனியப்பன், ஸெண்ட்மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.
4. 46. K. நாகலிங்கம், ராஜாஹைஸ்கூல், இராமநாதபுரம்.
5. 111. A. வைத்தியநாதன், முனிசிபல்காலேஜ், சேலம்.
6. 112. O. K. பெருமாள், ஷை ஷை
7. 94. T. சீனிவாசன், St. FrancisXaviers' High School, பாளையங்கோட்டை.
8. 114. V. வெங்கடரமணன், முனிசிபல் காலேஜ், சேலம்.
9. 220. K. கங்காதரன், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
10. 98. O. பரமசிவன், St. Francis Xaviers' High School, பாளையங்கோட்டை.
11. 245. M. J. செல்லையா, கால்டுவெல் ஹைஸ்கூல், தூத்துக்குடி.
12. 303. N. சடகோபன், போர்டுஹைஸ்கூல், விழுப்புரம்.
13. 83. A. N. மகரபூஷணன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
14. 224. C. M. எதிராஜம்(பெண்), Presidency Training School for Mistresses, Egmore, சென்னை.
15. 233. T. தொப்பையா, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
16. 277. N. நரசிம்மராவ், விக்டோரியாஹைஸ்கூல், சிவகாசி.

B. இராஜராஜேச்வரஸேதுபதி,

# தனிநிலைச்செய்யுட்கோவை.

(௧௪௪-ஆம்பக்கத்தொடர்ச்சி.)

15. கள்ளற் கஞ்சித் தன்னடிப் புகுநரை
யுண்மைக் கஞ்சி யுறலவர்க் குரைப்பதூஉ
மெய்யே யெனூஉ மேதினி நிறுத்தச் (நிறுவச்)
செய்கொலை முதல தீய வெனூஉக்
கொள்ளும் வழக்காறு கொள்ளா துலகம்
வறிஞன் றானறி வகையற வழங்கியுஞ்
சிறிதுமுத வில்லான் பொருளொடை செய்வோன்
சொற்சுவை தழாஅத் துன்னுசெல் வர்க்குத்
தானே வந்து தருகுவன் மாதோ
முறைமைதரு கட்டளை முற்றினோன் மொழிந்தவை
நெறியன் றெனினு நிலங்கைக் கொள்ளு
நிறுவகட் டளையிலோ வீள்கலை நிலையறீஇப்
பொறைநட் டமுதிற் புகல்கொளா துலகம்
பொருந்துயிர் போக்கும் புரிநஞ் செனினுநன்
மருந்தே யாகு மருத்துவன் கைப்படின்
வழூஉச்சொல் லெனினும் வழங்குவ னாக தேர்ந்த
குழூஉக்கடைக் குறங்கிற் குலாஅய்நலன் பயக்கு
மின்னண முலகத் தியலுந் திறனெலா
நன்கறிந் தொப்ப நடத்தன்
மன்பதை தமக்கெலாம் வாய்ந்தநற் கடனே.

---



## உம்முதலிருபெயர்

உள்ளமென்பதுமுயற்சியின்பெயரும்
நெஞ்சமென்றேநிகழ்த்துமிருபெயர் ௪0
உடுக்கையேதுகில்வாச்சியமிருபெயர் ௪௧
உணவேமனழயுஞ்சோறுமாகும் ௪௨
உதகமேநீர்பூமியென்றிருபெயர் ௪௩
உகளமென்பதிரண்டெயிட்டமும் ௪௪
உதியரேபாண்டியருஞ்சேரரும் ௪௫
உத்தரகுருவேயருந்ததிபாண்டவர் ௪௬
உமட்டியரேயுப்புவிற்றிடுமகளிரும்
நுளைச்சியரெனவுநுவலுமிருபெயர் ௪௭
உச்சியென்பதுமுடியுநண்பகலும் ௪௮
உம்பலேநற்குலமுந்தந்தியும் ௪௯
உரியரென்பதுமுதறிந்தோரும்
தமருமெனவேசாற்றுமிருபேர் ௫0
உவணமென்பதுகருடனுங்கழுகும் ௫௧
உபகாரந்தான்செய்தலுமகிழ்ச்சியும் ௫௨
உழிஞையென்பதுவேயெயிலைவளைத்தலும்
சிறுபூளையுமெனச்செப்புமிருபேர் ௫௩
உளையேகுதிரையிற்கட்டியமயிரும்
பிறமயிரெனவும்பேசுமிருபேர் ௫௪
உழுவையேபுலிபெருமையிருபேர் ௫௫
உறையூரென்பதுசோழனூரோடு
மருதநிலத்தூரெனவுமிருபேர் ௫௬
உண்டிதானேயுண்டலுஞ்சோறும் ௫௭
உயிரேகாற்றுஞ்சீவனுமாகும் ௫௮
உண்டையேபடைவகுப்புந்திரளையும் ௫௯

உருத்தல்தானேதோற்றலுங்கோபமும் ௬௰
உளர்தலென்பதுசிதறலுந்தடவலும் ௬௧
உள்ளலேநினைவுமுள்ளான்பேரும் ௬௨
உழப்பேவலியுமுற்சாகமுமே ௬௩
உடலேமேனியும்பொருளுமிருபெயர் ௬௪
உறுப்பேயவயவந்தேகமிருபெயர் ௬௫
உரையேகிளவிதேய்வெனவிருபெயர் ௬௬
உண்டாட்டென்பதுவிளையாட்டெனவும்
மகளிர்விளையாட்டெனவுமிருபெயர் ௬௭
உலகரென்பதுபாண்டியருரகர் ௬௮
உறுவனேமுனியருகனென்றிருபெயர் ௬௯
உழுதலென்பதுகளுதலுமுழுதலும் ௭௰
உதும்பரந்தானேயத்திமரமும்
தாம்பிரமெனவுஞ்சாற்றுமிருபேர் ௭௧

உம்முதலிருபேர்முற்றும்.

உம்முதல்முப்பெயர்

உஞற்றேவழக்குந்தாளாண்மையு
மனவெழுச்சியுமெனவைக்குமுப்பேரே ௭௨
உத்தரியேபன்னகமும்யானையு
வரியுமெனவேவரும்பேர்மூன்றே ௭௩
*உலக்கையேதிருவோணமுங்கடலும்
உலக்கையுமெனவேயுரைக்குமுப்பேரே ௭௪
உணர்வேயூடறீர்தலுந்தெளிவும்
அறிவுமெனவேயாகுமுப்பேரே ௭௫
உம்பரென்பதுமேலுந்தேவரு
முயர்நிலமெனவுமுரைக்குமுப்பேரே ௭௬

* உலக்கையேதிருவோணமும்முரோங்கலும் என்பது பிரதிபேதம்,



உருத்திதந்தானேதொழிலினுனும்
உரியபொருளும்வளர்ச்சியுமுப்பேர் ௭௭
உழையேமானும்யாழினோர்நரம்பும்
இடமுமென்றேயிசைக்குமுப்பேரே ௭௮
உவளகமென்பதுமதிலுநீர்த்தாழ்வும்
ஒருபக்கமுமெனவோதுமுப்பேரே ௭௯

உம்முதல்முப்பேர்முற்றும்.

உம்முதல் நாற்பெயர்

உகமேயுரகமும்பூமியுநாளும்
முடிவுமெனவேமொழியுநாற்பெயரே ௮௰
உசிதமென்பதுநீருய்வனிதலும்
கூப்பிடலுடனேயுசிதமுநாற்பெயர் ௮௧
உத்தியென்பதுசெந்திருவுறுப்பும்
சுணங்குங்கடலும்படத்தின்பொறியுமாம் ௮௨
உருப்பேபவமுந்துக்கமும்வெம்மையும்
அடுக்காலையுமெனவறையுநாற்பேரே ௮௩
உரமேவலியுஞானமுமார்பும்
ஊக்கமுமென்றேயுரைக்குநாற்பெயரே ௮௪
உத்தரமென்பதுமேலும்வடக்கும்
நூலிலொன்றுமெதிருரையுஞ்சொலும் ௮௫
உறையுளேயூர்ப்பொதுவுஞ்சயனமும்
மனையும்நாடும்வைக்குநாற்பேரே ௮௬
உழுவலென்பதுபெற்றியும்புணர்ச்சியும்
வாராமின்றவன்புமெழுமையும் ௮௭
உறுகண்டானேதுன்பமுநோயும்
பயமுமிடியும்பகருநாற்பேரே ௮௮
உவாவென்பதுவேயானையுங்கடலும்
பூரணையுடனிளையோனுநாற்பேரே ௮௯

உம்முதல்நாற்பேர்முற்றும்.

உம்முதலைம்பெயர்

உப்பேயிராகமுங்கடலுமுவரும்
மகளிராடலுமினிமையுமைந்தே
உறவியேயுலைக்களமுமெறும்பும்
உயிருமுறவுநீற்றுமென்றைந்தே
உலவையேமரக்கொம்பும்வன்னியும்
விலங்கின்கோடும்வாவுங்காற்றுமாம்
உடுவென்பதுவேகணையுங்கிடங்கும்
விண்ணின்மீனும்அம்பினிறகும்
நாவாயோட்டியகோலுமென்றைந்தே
உருவேயட்டையும்வடிவுநிறமும்
நோவுடன்உள்ளுமென்றோதுமைம்பேரே
உறழ்வேயொப்பும்புணர்வுஞ்செறிவும்
காலமுமிடையீடுடனைம்பேரே

உம்முதலைம்பேர்முற்றும்.

உம்முதலறுபெயர்

உக்கமென்பதுமருங்கும்பசுவும்
ஆலவட்டமுங்கோழியுமேறும்
தீயுமெனவேசெப்புமறுபெயர்

உம்முதலறுபேர்முற்றும்.

உம்முதலெழுபெயர்

உலகமேகுணஞ்சனமும்பூமியும்
உயர்ந்தோருடனேவியனுந்திசையும்
விண்ணுமெனவேவிறிக்குமெழுபெயர்
உடையென்பதுவேசெல்வமுங்கூறையும்
உடைமையுஞ்சாணமுங்கலனையுமுள்ளும்
குடைவேலெனவுங்கூறுமேழ்பேரே

உம்முதலேழ்பேர்முற்றும்.



உம்முதலொன்பான்பெயர்

உலமேவலியும்பிணமும்விசாலமும்
நீருங்காற்றுந்துன்பமும்வாசலும்
பட்டாடையுங்கற்றிரளுமொன்பான்பேர் ௯௯

உம்முதலொன்பான்பேர்முற்றும்.

உம்முதற்பத்துப்பெயர்

உந்தியென்பதுவேநதியுநீர்ச்சுழியும்
நாபியுங்கடலும்யாழினுறுப்பும்
நடுவுடனுயர்ச்சியுந்தேரினுருளோடுந்
துணையும்பறப்பனவுடனுமீரைம்பேர் ௧00

உம்முதற்பத்துப்பேர்முற்றும்.

உம்முதற்பன்னிருபெயர்

உரையேயொழுகலுமோரிடைச்சொல்லும்
படைபெய்கூடும்பாவிடுமிரையும்
பொருளுமருந்துமோரிலக்கக்குறிப்பும்
ஆடையழுக்கினையகற்றுவர்நீரும்
வாணாளொடுகாரமுநீர்த்துளியும்
வெண்கலமும்மெனவிளம்புமீராறே ௧0௧

உம்முதற்பன்னிருபேர்முற்றும்.

உம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௬0௩.

ஊமுதற்பலபெயர்.

ஊமுதலொருபெயர்

ஊருணியென்பதுவாவியாகும் ௧
ஊச்சந்தானேபயமெனவுரைப்பர் ௨
ஊடலையென்பதுதலையாட்டப்பேர் ௩
ஊதியன்றானேசேரனாகும் ௪
ஊர்கோளென்பதுபரிவேடப்பேர் ௫
ஊன்றிதானேயுரகமெனலாம் ௬

ஊழித்தீயேவடவானலமாம் ௭

ஊரனென்பதுமருதத்தலைவன் ௮

ஊதையெனலேகுளிர்காற்றாகும் ௯

ஊர்தலென்பதுநடத்தலாகும் ௧0

ஊசல்தானேஊஞ்சலெனப்படும் ௧௧

ஊற்றமென்பதறிவுடைமைப்பேர் ௧௨

ஊமுதலொருபேர்முற்றும்.

ஊமுதலிருபெயர்

ஊகமேபுலிகுரங்கெனவிருபெயர் ௧௩

ஊனேயிறைச்சியுநெல்லுமிருபேர் ௧௪

ஊபமென்பதுபூசலினணியும்
குறைத்தலையுடனுங்கூறுமிருபேர் ௧௫

ஊரிதானேபுயல்சங்கிருபேர் ௧௬

ஊமையென்பதுகிரியுமூமையும் ௧௭

ஊசியேயெழுத்தாணியுஞ்சூசியும் ௧௮

ஊதியமென்பதுகல்வியுமிலாபமும் ௧௯

ஊழேமுறையும்பகையுமிருபேர் ௨0

ஊற்றென்பதுவேயூன்றியகோலும்
ஊற்றுமெனவேயோதுமிருபேர் ௨௧

ஊமுதலிருபேர்முற்றும்.

ஊமுதல்முப்பெயர்

ஊழிதானேயுகமுங்காலமும்
பூமியுமென்றேயுகலுமுப்பேரே ௨௨

ஊட்டியென்பதூட்டியுமழையும்
பறவையிலங்கூனுடனுமுப்பேரே ௨௩

ஊழ்த்தலென்பபதனழிவுஞ்செவ்வியும்
நினைத்தலெனவுரிகழ்த்துமுப்பேரே ௨௪

ஊமுதல்முப்பேர்முற்றும்.



ஊமுதனாற்பெயர்

ஊறேதீமையுந்தீண்டலுங்கொலையும்
இடையூறெனவுமிசைக்குநாற்பேரே ௨௫

ஊமுதனாற்பேர்முற்றும்.

ஊமுதலைம்பெயர்

ஊக்கமென்பதுவேயுயர்ச்சியும்வலியும்
உள்ளமிகுதியுமுற்சாகத்திறனு
ண்மையுமென்றேயுரைக்குமைம்பேரே ௨௬

ஊமுதலைம்பேர்முற்றும்.

ஊமுதலறுபெயர்

ஊர்தியேபரிசிவிகைபாண்டில்
யானைவிமானந்தேரெனவாறே ௨௭

ஊமுதலறுபேர்முற்றும்.

ஊமுதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௬௱௩௰.

எம்முதற்பலபெயர்.

எம்முதலொருபெயர்.

எட்டியரென்பதுசெட்டிகள்பெயரே ௧

எண்கேகரடியெனச்செப்பினரே ௨

எண்கலைபர்தாமேகளியிலாரெனுமே ௩

எண்டோளியென்பதுதுர்க்கையினாமம் ௪

எருத்தந்தானேபிடரியென்றிசைப்பர் ௫

எருமணமென்பதுசெங்கழுநீரே ௬

எருக்கியின்பேரேயிப்பியென்றிசைப்பர் ௭

எல்லரியாவதுகைம்மணியாகும் ௮

எளிமைதானேயடிமையாகும் ௯

எல்லவனென்பதுசந்திரனாகும் ௰

எழிலிதானேமேகமென்றிசைப்பர் ௰௧

எறுழியென்பதுபன்றியாகும் ௰௨
எய்த்தலேயிளைத்தலாகும் ௰௩
எல்லியென்பதுவேயிராத்திரியின்பேர் ௰௪
எறும்பிதானேயானையின்பெயராம் ௰௫

எம்முதலொருபேர்முற்றும்.

எம்முதலிருபெயர்

எயிலேதிரிபுரமதிலெனவிருபேர் ௰௬
எருந்தேயுரலுங்கிளிஞ்சிலுமாகும் ௰௭
எறுழேவலியுந்தாறுமிருபெயர் ௰௮
என்பேபுல்லுமெலும்புமாகும் ௰௯
எள்ளலேநகையிழிவெனவிருபெயர் ௨௰
எழிலேவண்ணமுமிளமையுமாகும் ௨௧
எகினேபுளிமாபுளிமரமிருபெயர் ௨௨
எற்றுதலென்பதுபுடைத்தலுமெறிதலும் ௨௩
எதிர்தலென்பதுமலர்தலுந்தோன்றலும் ௨௪
எவ்வந்தானேதுன்பமுந்தனிமையும் ௨௫
எழினியென்பதுவேயிடுதிரையுடனும்
கிடையாடையுமெனக்கிளக்குமிருபெயர் ௨௬

எம்முதலிருபேர்முற்றும்.

எம்முதன்மூப்பெயர்

எஃகமென்பதுவேகூர்மையும்வேலும்
எஃகுமென்றேயிசைக்குமுப்பேரே ௨௭
எச்சமென்பதுகுறையும்வேள்வியும்
புத்திரனெனவும்புகலுமுப்பேரே ௨௮
எருக்குதலென்பதுவெட்டுக்கட்டையும்
பரித்தலுங்கோறலும்பகருமுப்பேரே ௨௯

எம்முதன்மூப்பேர்முற்றும்.



எம்முதனாற்பெயர்

என்றாழென்பதுவெயிலுங்காற்றும்
இரவியுங்குடையுமெனும்பேர்நாலே ௩௰
எற்றேயிரக்கமுமொத்தலுமெறிதலும்
எத்தன்மைத்தென்றலுமெனநாற்பேரே ௩௧
எல்லேயிகழ்ச்சியும்பகலுமொளியும்
இராத்திரியெனவுமிசைக்குநாற்பேரே ௩௨

எம்முதனாற்பேர்முற்றும்.

எம்முதலைம்பெயர்

எல்லையென்பதுவேயந்தமுங்கோசமும்
பகலுமளவுமிரவியுமைம்பேர் ௩௩

எம்முதலைம்பேர்முற்றும்.

எம்முதலறுபெயர்

எண்ணென்பதுவேசோதிடநூலும்
எளிமையும்வலியுமென்னும்விசாரமும்
எண்ணுமென்றேயிசைக்குமறுபெயர் ௩௪
எகினமென்பதுபுளியமரமும்
அன்னப்புள்ளுங்கவரிமாவும்
புள்ளிமானுங்கீரியும்
முடுவலுமெனவேமொழியுமறுபெயர் ௩௫

எம்முதலறுபேர்முற்றும்.

எம்முதலெண்பெயர்

எருவையென்பதுகழுகுங்கழுதையும்
கோரையுங்கொறுக்கையுஞ்சொல்லுமுதிரமும்
குஞ்சரமுடனுஞ்செம்புமெண்பேர் ௩௬

எம்முதலெண்பேர்முற்றும்.

எம்முதற்பலபெயர்க்குச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம் ௩௬௬.

## ஏமுதற்பலபெயர்

### ஏமுதலொருபெயர்

ஏசாதவரேதேவராகும் ௧
ஏசியென்பதுகிளியெனலாகும் ௨
ஏரண்டமென்பதாமணக்கின்பெயர் ௩
ஏம்பரேமாமேருவெனப்படும் ௪
ஏமகரமென்பதுபொன்னெனலாகும் ௫
ஏகாசந்தானுத்தரியப்பெயர் ௬
ஏலியென்பதுகள்ளெனப்படுமே ௭
ஏழகமேதுருவாட்டேற்றின்பெயர் ௮
ஏலுவன்றன்றோழன்பெயராம் ௯
ஏரலேகிளிஞ்சிலெனவிசைத்தனரே ௧௦
ஏதிலாரேயன்னியராகும் ௧௧
ஏலுதலென்பதெதிர்தலாகும் ௧௨

ஏமுதலொருபேர்முற்றும்.

### ஏமுதலிருபெயர்

ஏதலென்பதுமரக்கலமுட்டலும்
போதலுமெனவும்புகலுமிருபேர் ௧௩
ஏனந்தானேபன்றியுமானும் ௧௪
ஏனலேசெந்தினைதினைப்புனமே ௧௫
ஏதமென்பதுகுற்றமுந்துன்பமும் ௧௬
ஏதியேயாயுதம்வாளிருபெயர் ௧௭
ஏனையென்பதிடைச்சொல்லுமொழிவும் ௧௮
ஏனாதியரேதந்திரிமந்திரி ௧௯
ஏரேயழகுமுழுபெற்றமுமாம் ௨௦
ஏலமென்பதுமயிர்ச்சாந்துடனும்
ஏலமெனவுமிசைக்குமிருபெயர் ௨௧

ஏமுதலிருபேர்முற்றும்.



### ஏமுதன்மூப்பெயர்

ஏவலென்பதுவேயேவலுமாணையும்
வியங்கோளெனவும்விதிக்குமுப்பேரே ௨௨
ஏங்கல்தானேயொலியுமிரங்கலும்
ஏங்குதலெனவுமிசைக்குமுப்பேரே ௨௩
ஏந்திரந்தானேயாலையுந்தேரும்
மதிலுறுப்புமெனமதிக்குமுப்பெயரே ௨௪
ஏற்றலென்பதெதிர்ந்துபோர்செய்தலும்
கோடலுமேற்றலுங்கூறுமுப்பேரே ௨௫

ஏமுதன்மூப்பேர்முற்றும்.

### ஏமுதனாற்பெயர்

ஏணியென்பதுமானுமேணியும்
எல்லையுமுலகுமென்றிசைக்குநாற்பெயரே ௨௬
ஏடகமேபனைபலகைநல்லாடை
நாளிகேரமுநவிலுநாற்பேரே ௨௭
ஏடேகுற்றங்கண்ணிமைபூவிதழ்
உலகமென்றேயுரைக்குநாற்பெயரே ௨௮

ஏமுதனாற்பேர்முற்றும்.

### ஏமுதலைம்பெயர்

ஏறேயிடியுமசுபதிநாளும்
இடபமுமெருதுமொருதருவுமைம்பேரே ௨௯

ஏமுதலைம்பேர்முற்றும்.

### ஏமுதலறுபெயர்

ஏந்தலென்பதுவேமலையும்பெருமையும்
முதலுமேடுமிளமையுமேந்தலும்
எனவேயறுபேரெண்ணப்படுமே ௩௦

ஏமுதலறுபேர்முற்றும்.

ஏமுதலொன்பான்பெயர்

ஏமமென்பதுசேமமுங்காவலும்
இன்பமும்மிரவும்பொன்னுமையலும்
வலியுமேமாப்புங்கலையுமொன்பான்பேர்

ஏமுதலொன்பான்பேர்முற்றும்.

ஏமுதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௬௯௭.

ஐம்முதற்பலபெயர்.

ஐம்முதலொருபெயர்.

ஐங்கரனென்பதுகணபதியின்பேர்

ஐங்கணையன்றான்காமனெனப்படும்

ஐயவியேவெண்சிறுகடுகாகும்

ஐயிருவட்டமேபலகையெனப்படும்

ஐவகைப்பொன்னேபஞ்சலோகமாம்

ஐவனம்மலைச்சாரலில்விளைநெல்

ஐம்முதலொருபேர்முற்றும்.

ஐம்முதலிருபெயர்

ஐயர்தானேமுனிவருந்தேவரும்

ஐம்முதலிருபேர்முற்றும்.

ஐம்முதன்முப்பெயர்

ஐஞ்ஞையென்பதுவேயாடுமழகும்
அறிவுகேடனுமாகுமுப்பெயரே

ஐம்முதன்முப்பேர்முற்றும்.

ஐம்முதனாற்பெயர்

ஐயமேபிச்சையேற்றிடுமோடும்
பொழுதுமனுமானமும்பிச்சையுநாற்பேர்
ஐயனென்பதுமூத்தோன்சாத்தன்
அப்பன்சுவாமியெனும்பேர்நான்கே

ஐம்முதனாற்பேர்முற்றும்.



ஐம்முதலைம்பெயர்

ஐஞ்ஞீலமென்பதுவேகற்பூரமும்
இலவங்கமுந்தக்கோலமுஞ்சிங்கமும்
சாதிக்காயுமென்னுமைம்பேரே

ஐம்முதலைம்பேர்முற்றும்.

ஐம்முதலறுபெயர்

ஐயையென்பதுவேதுர்க்கையுங்காளியு
மருந்தவப்பெண்ணுமுமையுமிடைச்சியு
மாசாளெனவுமாம்பெயராறே

ஐம்முதலறுபேர்முற்றும்.

ஐம்முதலெண்பெயர்

ஐயேயழகுமிடைச்சொலுங்கோழையும்
இருமலும்பதியும்நாதனுஞ்சுவாமியும்
மந்தாரமுமெனவைக்குமெண்பெயரே

ஐம்முதலெண்பேர்முற்றும்.

ஐம்முதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௭௧௦.

ஒம்முதற்பலபெயர்.

ஒம்முதலொருபெயர்

ஒய்யெனல்தானேகடுமையாகும்

ஒய்யெலென்பதுவேயுயர்தலாகும்

ஒருடுதானேநீங்கலாகும்

ஒருவந்தமென்பதுசம்பந்தமாகும்

ஒருமைமகளிரேகற்புடைமகளிராம்

ஒருவென்பதுவேயாடெனலாகும்

ஒல்லுநர்தானேமேவினராகும்

ஒல்லாரென்பதுமேவார்பெயரே

ஒல்லாமைதானேயிகழ்தலாகும்

ஒழுகையென்பதுபண்டியாகும்

ஒற்றுமையேகூறிக்கொள்ளலாகும் ௧௧

ஒற்கமென்பதுவறுமையாகும் ௧௨

ஒற்றர்தாமேவேயெனப்படுமே ௧௩

ஒக்கலையென்பதுபக்கமாகும் ௧௪

ஒறுத்தறானேநோவுசெய்தற்பேர் ௧௫

ஒட்டாரென்பதுமேவினராகும் ௧௬

ஒட்டாரென்றல்மேவார்பெயரே ௧௭

ஒம்முதலொருபேர்முற்றும்.

ஒம்முதலிருபெயர்

ஒக்கலேகுடிசுற்றமிருபெயர் ௧௮

ஒதுங்கறானேபோதலுமொதுங்கலும் ௧௯

ஒசித்தலென்பதுகொடுத்தலுமிறுத்தலும் ௨௦

ஒப்புரவேகடன்கொடையுமொப்புரவும் ௨௧

ஒற்றுதறானேயறிதலுமுறுத்தல் ௨௨

ஒடுக்கமென்பதுவேமுடியச்செய்தலு
மொடுக்கமெனவுமுறைக்குமிருபெயர் ௨௩

ஒள்ளியோன்பொன்சுக்கிரனிருபெயர் ௨௪

ஒடுங்கறானேசைக்கொளலொடுங்கல் ௨௫

ஒத்தலேநடுவொப்புடனிருபெயர் ௨௬

ஒற்றலென்பதுநீங்கலுமொற்றலும் ௨௭

ஒளிவட்டந்தான்சக்கரத்துடனே
கண்ணாடியுமெனக்கருதுமிருபெயர் ௨௮

ஒதுக்கமேநடைமறைவிருபெயரே ௨௯

ஒற்றேயுடம்புமொற்றுமிருபெயர் ௩௦

ஒம்முதலிருபேர்முற்றும்.

ஒம்முதன்முப்பெயர்

ஒண்மையென்பதுவேயறிவுமழகும்
நன்மையுமென்றோவிலுமுப்பேரே ௩௧

ஒம்முதன்முப்பேர்முற்றும்.



ஒம்முதனாற்பெயர்

ஒப்பேபிசைவும்பொருதலுமுவமையும்
கட்டமுகெனவுங்கருதுநாற்பேரே ௩௨

ஒலியென்பதுவேயிடியுமோசையும்
ஒளியுங்காற்றுமென்றோதுநாற்பேரே ௩௩

ஒளியேயொளிப்பிடமிருசுடர்புகழொடு
தீயெனநாற்பேர்செப்பினர்புலவர் ௩௪

ஒல்லையேசிறுபோதுங்கடுப்பும்
விரைவுந்தொல்லையும்விளம்புநாற்பெயரே ௩௫

ஒம்முதனாற்பேர்முற்றும்.

ஒம்முதலைம்பெயர்

ஒலியலென்பதுபுடவையுநோயும்
* தாருடன்றியுந்தோலுமைம்பேரே ௩௬

ஒம்முதலைம்பேர்முற்றும்.

ஒம்முதலறுபெயர்

ஒருத்தலேபுலியானைகுதிரை
மான்கனம்விலங்கினேறுடனறுபெயர் ௩௭

ஒம்முதலறுபேர்முற்றும்.

ஒம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௭௪௭.

ஓமுதற்பலபெயர்.

ஓமுதலொருபெயர்

ஓதலென்பதுசொல்லுதலாகும் ௧

ஓர்தலேவிசாரித்தலாகும் ௨

ஓத்தலென்பதுவேயசங்கதமாகும் ௩

ஓசைதானேபண்ணெனஉரைப்பர் ௪

ஓச்சலென்பதுவேயோட்டலாகும் ௫

ஓருவேநொடியாமெனவோதுவர் ௬

---

* தாருடனதியுந்தோலுமைம்பேரே என்பது பிரதிபேதம்,

ஓமையேமராமாமெனவிசைப்பர் ௭
ஓம்பறுனேபாதுகாத்தலாம் ௮
ஓம்படையென்பதுகாவலாகும் ௯
ஓருமந்தானேநீர்நிலையாகும் ௧௦
ஓவியமென்பதுசித்திரமெனப்படும் ௧௧
ஓவியர்தானேசித்திரகாரர் ௧௨
ஓவரேபாடற்கீழ்மக்களாம் ௧௩

ஓமுதலொருபேர்முற்றும்.

ஓமுதலிருபெயர்

ஓகையென்பதுவருவதுசொல்லலு
முவகையுமெனவேயுரைக்குமிருபெயர் ௧௪
ஓரமென்பதுவேயோரமுஞ்சகாயமும் ௧௫
ஓவேகொடுமைபிறங்கலிருபேர் ௧௬
ஓதையேபேரொலியுமதிலுமாம் ௧௭
ஓசையென்பதுவாழையுமொலியும் ௧௮
ஓளியென்பதுவேயானைக்கூடமும்
ஒழுங்குமென்றேவழங்குமிருபேர் ௧௯
ஓட்டமேமேலுதடுந்தோல்வியும் ௨௦
ஓணர்தானேயாறுமோர்நாளும் ௨௧

ஓமுதலிருபேர்முற்றும்.

ஓமுதன்முப்பெயர்

ஓதிமமென்பதுமலையுமெகினமுங்
கவரிமாவுங்கருதுமுப்பெயரே ௨௨
ஓடலேயாமெனலுமோடலு
மல்லலுமெனவேயறையுமுப்பெயரே ௨௩
ஓலமேகடல்பாம்பொலிமூன்றும் ௨௪
ஓதநர்தானேயுண்டியுஞ்சோறும்
பெருமையுமென்றுபேசுமுப்பேரே ௨௫

ஓமுதன்முப்பேர்முற்றும்



## மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1920ஆ மார்ச்சுமீ த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு 1920 January | | | 1919 January | | | விவரம் | செலவு 1920 January | | | 1919 January | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION: | | | | | | | I GENERAL SECTION : | | | | | | |
| (1) நன்கொடை, மாதச் சந்தா வகையில் வரவு ... | 101 | ... | ... | 200 | .. | ... | (1) ESTABLISHMENT:— | | | | | | |
| (2) பாங்கில் போட்டுள்ள தொகையின் பேரில் வட்டி வரவு ... | 63 | ... | ... | 115 | 8 | ... | (a) மானேஜ்மெண்டு ஆபீஸ்சிப்பந்திகட்குச்சம்பளம் செல... | 122 | ... | ... | 113 | 4 | 7 |
| (3) புத்தகங்கள் விற்ற வகையில் வரவு ... | 59 | 10 | .. | 23 | .. | 9 | (b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச்சம்பளம் செல ... | 95 | ... | ... | 95 | ... | ... |
| வி. பி. சார்ஜ் வரவு ... | 3 | 1 | ... | 2 | 2 | 3 | (c) கலாசாலை மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல ... | 96 | 4 | 4 | 127 | 6 | 10 |
| (4) வாடகை வகையில் வரவு ... | 8 | ... | ... | 70 | ... | ... | (d Literary Section சிப்பந்திகட்குச்சம்பளம் செல ... | 45 | ... | ... | 60 | ... | ... |
| (5) Miscellaneous வரவு ... | 1 | 9 | 6 | 5 | 10 | 6 | (2) Stationery, contingencies சாமான்கள் | | | | | | |
| மொத்தம் ... | 236 | 4 | 6 | 416 | 5 | 6 | | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Editorial Section:** | | | | | | |
| (1) அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ... | 294 | ... | ... | ... | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ச் சந்தா வரவு ... | 248 | 3 | ... | 26 | 4 | ... |
| (3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ... | 17 | 8 | ... | 28 | ... | ... |
| வி. பி. சார்ஜ் வரவு ... | 1 | 15 | ... | 2 | 7 | ... |
| மொத்தம் ... | 561 | 10 | ... | 56 | 11 | ... |
| **I Press Section:** | | | | | | |
| (1) சங்கம் பவர்ப்பிரஸ் குத்தகைதாரிடமிருந்து குத்தகைத்தொகை வரவு ... | 235 | ... | ... | ... | ... | ... |
| (2) பழைய பில் பாக்கித்தொகை முதலியன வரவு | ... | ... | ... | 449 | 2 | ... |
| மொத்தம் ... | 235 | ... | ... | 449 | 2 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வாங்கியவகையிற்செல்... | ... | 8 | 6 | 3 | 12 | 6 |
| (3) லைப்ரேரி உபயோகத்துக்கு வாங்கிய புத்தகம் வகையராவுக்குச் செல் ... | 4 | 13 | ... | ... | ... | ... |
| (4) கட்டிட ரிப்பேர் வகையில் செல் ... | 5 | 12 | ... | ... | ... | ... |
| (5) தபால், தந்திவகையிற் செல் ... | 14 | 5 | 6 | 8 | 13 | 6 |
| (6) வரி வகையில் செல் ... | 50 | 4 | 4 | 97 | 8 | ... |
| (7) புத்தகங்கள் பிரசுரசம்பந்தமாக ஸ்டேஷனெரி அச்சுக்கூலி வகையராவுக்குச் செல் ... | 18 | 6 | ... | 193 | 9 | ... |
| (8) சில்லரைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வகையரா செல் ... | 20 | 2 | ... | ... | ... | ... |
| (9) பரீக்ஷை சம்பந்தமாகச் செலவு ... | 60 | 1 | 6 | 33 | 12 | ... |
| (10) Miscellaneous செலவு... | 19 | 11 | 2 | 75 | 8 | ... |
| மொத்தம் ... | 552 | 4 | 4 | 808 | 10 | 5 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைப் பிரசுரசம்பந்தமாக ஸ்டேஷனெரி, அச்சுக்கூலி வகையராவுக்குச் செல் ... | 28 | 4 | ... | ... | ... | ... |
| (2) தபால், தந்தி வகையில் செல் ... | 28 | 15 | 6 | 10 | 12 | 9 |
| (3) Miscellaneous செலவு. | ... | ... | ... | 9 | ... | ... |
| மொத்தம் ... | 57 | 3 | 6 | 19 | 12 | 9 |
| **III Press Section:** | | | | | | |
| (1) டைப்ஸ் வகையரா வாங்கியவகையிற்செல்... | 1 | 7 | ... | ... | ... | ... |
| (2) சிப்பந்திகள் சம்பளம் வகையரா சம்பந்தமாக செலவு ... | ... | ... | ... | 510 | ... | 7 |
| மொத்தம் ... | 1 | 7 | ... | 510 | ... | 7 |

| விவரம் | 1920 ரூ | அ | பை | 1919 ரூ | அ | பை | விவரம் | 1920 ரூ | அ | பை | 1919 ரூ | அ | பை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 1032 | 14 | 6 | 922 | 2 | 6 | ஆக மொத்தம் செலவு ரூ ... | 610 | 14 | 10 | 1338 | 7 | 9 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ... | 1606 | 15 | 7 | 1534 | 10 | 7 | மாதமுடிவில் மீதி இருப்புத் தொகை ... | *2028 | 15 | 3 | 1118 | 5 | 4 |
| ஆகமொத்தம் ரூ ... | 2639 | 14 | 1 | 2456 | 13 | 1 | ஆகமொத்தம் ரூ. ... | 2639 | 14 | 1 | 2456 | 13 | 1 |

*By C Pass Book 770—0—0
„ Indian Bank Receipt ... 1050—0—0
„ Cash on hand 208–15—3

2028–15—3

*Audited & found correct.*

***V. S. Ramaswami,***
AUDITOR.
17—4—20.

***C. Sudarsanachari,***
*Joint Secretary,*
MADURA TAMIL SANGAM.
17—4—20.

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1920 ஆம் ஏப்பிரல்மீ த்திய வரவு செலவு கணக்கு.

| வரவு விவரம் | 1920 April ரூ | அ | பை | 1919 April ரூ | அ | பை |
|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION: | | | | | | |
| (1) Donation & Grants வரவு ... | 12,311 | 10 | 8 | 190 | ... | ... |
| (2) புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 43 | 10 | ... | 6 | 12 | 6 |
| (3) Waste Papers வகையரா விற்றவகையில் வரவு | 2 | 3 | ... | 3 | 14 | ... |
| (4) வாடகைவகையில் வரவு | ... | ... | ... | 70 | ... | ... |
| (5) கடன்வாங்கியவகையில் வரவு ... | ... | ... | ... | 125 | ... | ... |
| (6) (a) மதுரை சேதுபதி ஹைஸ்கூலுக்கு மேற்பக்கமுள்ள சங்கத்தைச்சேர்ந்த இடத்தை, போஸ்டாபீசிற்காகக், கவர்ன்மெண்டாரவர்கள் Land | | | | | | |

| செலவு விவரம் | 1920 April ரூ | அ | பை | 1919 April ரூ | அ | பை |
|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION: | | | | | | |
| (1) ESTABLISHMENT:— | | | | | | |
| (a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | 121 | 1 | 1 | 64 | 13 | 11 |
| (b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ... | 95 | ... | ... | 50 | ... | ... |
| (c) மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ... | 43 | 14 | ... | 151 | 9 | 10 |
| (d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 40 | 10 | 4 | 45 | 3 | 10 |
| (2) Stationery, contingencies வாங்கியவகையில் செல் ... | 13 | 9 | 6 | 3 | 11 | 9 |
| (3) லைப்ரேரி உபயோகத்திற்கு வாங்கிய புத்தகம் வகையராவுக்குச் செல் ... | ... | ... | ... | 1 | 4 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Acquisition Act பிரகாரம் கைப்பற்றிக்கொண்டதற்கு, சங்கத்திற்கு Compensation தொகை வரவு ரூ 50,000-0-0 (b) Miscellaneous வரவு ரூ 10-2-1 | | | | | | |
| ஆக ரூ 50,010-2-1 | 50,010 | 2 | 1 | 1 | 10 | ... |
| மொத்தம் ... | 62,367 | 9 | 9 | 397 | 4 | 6 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு | 41 | 8 | ... | 10 | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ... | 109 | 12 | ... | 20 | 6 | ... |
| (3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ... | 9 | 12 | ... | 9 | 5 | ... |
| மொத்தம் ... | 161 | ... | ... | 39 | 11 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (4) Furniture ரிப்பேர் வகையிற் செல் ... | ... | ... | ... | 2 | ... | ... |
| (5) சங்கமாபீசு வைத்துள்ள கட்டிடத்தை சங்கத்திற்காக விலைக்குவாங்கியவகையில், கட்டிடத்தின் கிரையத்தொகை வகைக்கு, நாளதுமாதத்தில் சங்கத்தினின்றும் செலுத்தப்பட்டது ... | 12,141 | 10 | 8 | ... | ... | ... |
| (6) தபால்,தந்திவகையில் செல் ... | 13 | 4 | 3 | 4 | 12 | 9 |
| (7) புத்தகங்கள் பிரசுர சம்பந்தமாக அச்சுக்கூலி, காகிதம் வகையரா வுக்குச் செலவு ... | 29 | 4 | ... | ... | ... | ... |
| (8) சில்லரை வேலைகள் சம்பந்தமாக ஷ்டி செலவு | 28 | 12 | ... | ... | ... | ... |
| (9) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ... | 11 | 1 | ... | 4 | 9 | ... |
| (10) (a) சங்கத்தைச் சேர்ந்த இடத்தை போஸ்டாபீசிற்காக கவர்ன்மெண்டாரவர்கள் கைப்பற்றிக்கொண்டவகையில் சங்கத்திற்குக் கிடைத்த Compensation தொகை கனம் அக்கிராசனாதிபதியவர்கள் பெயரால் மதுரை Madras Bank யில் போடப்பட்டிருப்பது ரூபாய் 50,000—0—0 (b) கலாசாலை மாணவர் போஷணைக்காக மூலதனமாகவை | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **III Press Section:** | | | | | | |
| (1) சங்கம் பவர்ப்பிரஸ் குத்தகைதாரிடமிருந்து குத்தகைத்தொகை வரவு ... | 265 | ... | ... | ... | ... | ... |
| (2) பழைய பில் பாக்கித்தொகை முதலியன வரவு ... | ... | ... | ... | 137 | 6 | ... |
| மொத்தம் ... | 265 | ... | ... | 137 | 6 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| த்துக்கொள்ளும்படி ஏற்கனவே கிடைத்துள்ள தொகை ஷெயாரவர்கள் பெயரால் மதுரை Co-operative Bankல் போடப்பட்டிருப்பது ரூ 1050-0-0 (c) Miscellaneous செலவு ரூ 0—8—6 | | | | | | |
| ஆக ரூ *51,050-8-6 | *51050 | 8 | 6 | 4 | 10 | 10 |
| மொத்தம் ... | 63,588 | 11 | 4 | 332 | 11 | 11 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைப் பிரசுர சம்பந்தமாக அச்சுக்கூலி காகிதம் வகையரா செல் ... | 6 | 12 | ... | 15 | 5 | ... |
| (2) தபால், தந்தி வகையில் செல் ... | 1 | 5 | 9 | 5 | 1 | 3 |
| மொத்தம் ... | 8 | 1 | 9 | 20 | 6 | 3 |

| | | | | | | | III Press Section: | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | (1) சிப்பந்திகள் சம்பளம் வகையரா சம்பந்தமாகச் செலவு ... | ... | ... | ... | 233 | 8 | 10 |
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 62,793 | 9 | 9 | 574 | 5 | 6 | ஆக மொத்தம் செலவு ரூ. | 63596 | 13 | 1 | 586 | 11 | ... |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ... | 2028 | 15 | 3 | 1118 | 5 | 4 | மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ... | *1225 | 11 | 11 | 1105 | 15 | 10 |
| ஆகமொத்தம் ரூ. ... | 64,822 | 9 | ... | 1692 | 10 | 10 | ஆகமொத்தம் ரூ. ... | 64822 | 9 | ... | 1692 | 10 | 10 |

*By Co-operative Bank Receipt 1100—0—0
Cash on hand 125-11-11
1225—11-11

*Audited and found correct.*

**V. S. Ramaswami,**
Auditor.
19—6—20.

**J. Sudarsanachari,**
*Joint Secretary,*
Madura Tamil Sangam.
20—5—20.

2 - OCT 1920 MADRAS.

கடவுள் துணை.

# செந்தமிழ்.

[தொகுதி கஅ] ரௌத்திரி-ஹு வைகாசிமீ [பகுதி எ.
XVIII. May—June 1920. No. 7.

## மதுரைத்தமிழ்ச்சங்கம்.

### தனித்தமிழ்ப்பரீக்ஷை வினா.

பிரவேச பண்டிதர் வகுப்பு.

பரீக்ஷகர்

**அ. கோபாலையர்.**

### இலக்கணம் I.

(நன்னூற் காண்டிகையுரையும் விருத்தியும்.)

விருத்தியுரை.

கார்த்திகை ஹு பங்குனிமீ 24உ (5-4-20) 10-மணிமுதல் 1 மணி வரை.
(அம்சம் 60)

(1) எழுத்தின் அநாதிகாரணம் யாது? ஆதிகாரணம் யாது?

(2) இந் நூலார் அணுத்திரளை எழுத்துக்கு முதற்காரணமாகக் கூறியதேன்; இஃதென்னமதம்?

இந் நூலார் அருகனை நான்முகனென் றுகூறக் காரணமென்ன?

(1) வடநூலார் யாப்பு முதலிய நான்கினையும் எங்ஙனங்கூறுவர்?

(2) "எழுத்தறியத்தீரும் இழிதகைமை" என்பது எதற்குக் காட்டப்பட்டது?

(1) பொதுப்பாயிரத்தானுஞ் சிறப்புப்பாயிரத்தானும் முறையே பெறப்படுவனயாவை?

(2) இந்நூலாசிரியர் மேற்கோளாகக்கொண்ட சூத்திரங்கள் இரண்டு தருக.

௫. (1) மதம், அழகு இவற்றில் வருவன சிலவற்றை உத்தியினுள்ளுங் கூறியிருப்பதற்கு உரையாசிரியர்கூறும் சமாதானமென்ன?

(2) தவளைப்பாய்த்து, சிங்கநோக்கு இவற்றிற்கு நன்னூற் சூத்திர மொவ்வொன்று உதாரணங்காட்டி விளக்குக.

௬. (1) 'உண்ணான்' என்பதற்குப் பகுபதவுறுப்புக்கள் கூறி விதியுடன் முடித்துக்காட்டுக.

(2) பிற்காலத்தார் ஆகாரவிடைநிலைகொள்வதற்கு ஆதாரம் யாது?

௭. (1) குற்றியலுகரப்புணர்ச்சியுள் விருத்தியுரையாசிரியரால் மறுக்கப்படும் மதம் யாது?

(2) இவ்விரண்டுமதங்களுட் சிறந்தது எது? காரணத்துடன் விளக்குக.

௮. (1) 'இல்லெனின்மைச்சொற்கு' என்னுஞ் சூத்திரத்திற் கூறப்பட்ட ஐகார வாகாரங்கள் யாவை?

(2) இதற்குத் தொல்காப்பியர் கூறிய சூத்திரம் யாது?

௯. "விகுதிபதஞ்சாரியையுருபு" "இடைகுறிகாரணமரபோடு" என்னுஞ் சூத்திரங்கள் முதலியன யாவை?

௧௦. (1) சொல்லதிகாரம்—இதனிற் சொல்லென்றது எதனைக்குறிக்கும்?

(2) பொருட்டன்மையாவது யாது?

௧௧. (1) "மூன்னாவ்வொடு வருவை" என்னுஞ் சூத்திரத்திற்குப் பொழிப்புரை கூறுக.

(2) இச்சூத்திரத்தில் 'வருவையவ்வும்' என்று அகரவீற்றுப் பெயரையும் முதலிலேகூறியிருக்க, பின்னும் "உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில" என்று சில அகரவீற்றுச் சொற்களை விதந்தமைக்குக் காரணமென்னை?

௧௨. (1) தன்வினை-பிறவினை, விதி-மறை, செய்வினை-செயப்பாட்டுவினை, ஈரெச்சம் இவற்றிற்குப் பொதுவாகிய இவ்விரண்டு உதாரணந்தந்து விளக்குக.

(2) "ஒருவன்முதல்" என்னுஞ் சூத்திரத்து 'ஒருவன்' என்றது என்ன சொல்?



௧௩. (1) 'புதியன புகுதல்' 'மொழிந்தபொருளோடொன்றவவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தல்' இவ்விரண்டற்கும் வினையியலினின்றும் ஒவ்வோருதாரணந் தருக.

(2) வேண்டும், தகும், படும் என்பன யாவை? அவை யெவ்வாறு நிற்கும்?

௧௪. (1) உண்டவிளைப்பு: இவ்வெச்சம் என்ன காண்டது? மெய்ப்படு பொருள் கொண்டதெனின் வருப் இழுக்கென்னை?

(2) கோழிகூவிப்பொழுதுபுலர்ந்தது: இஃதெதற் குதாரணம்?

௧௫. "உயர்திணைதொடர்ந்தபொருண்முதலாறும், அதனொடுசார்த்தினத்திணைமுடிபின." இதனுள், 'தொடர்' 'சார்த்தல்' என்பவற்றை விளக்குக.

௧௬. (1) உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு என்பவற்றிற்குப் பொருள்கூறுக.

(2) 'இவ்வூர்ப் பூசையும் புலாற்றின்னாது' என்பதெதற்குதாரணம்?

௧௭. "மக்கடாமேயாறறிவுயிரே" என ஆசிரியர் தொல்காப்பியர் கூறியிருக்க, நன்னூலார், மக்களையும் ஐயறிவுயிரென்றதென்னை?

### காண்டிகையுரை.

௧௮. (1) உம் விகுதி எவ்விடத்தில் வரும்? உதாரணத்துடன் கூறுக.

(2) "விளம்பியபகுதிவேறாதலும்விதியே." ஈண்டுப் பகுதி எவற்றின் பகுதி.

௧௯. (1) குற்றம் பத்தும், வடநூலார்கூறும் அவ்யாப்தி முதலிய மூன்றும் எவ்வவற்றுள் அடங்கும்?

(2) செய்வித்தோனாலும், மிகுதியாலும் பெயர்பெற்ற நூல்கள் இவ்விரண்டு தருக.

௨௦. புணர்ச்சிவிகாரம்—செய்யுள்விகாரம்; தொகுத்தல்—மூவழிக் குறைதல் இவற்றிற்குப் பேதமென்ன?

௨௧. "முன்னிலைமுன்னர்... தொடர்மொழியுள்" என்னுஞ்சூத்திரத்து 'மன்' என்ற தனால் பெறப்பட்டது யாது?

௨௨. இவைகளுக்குப் புணர்ச்சிவிதி கூறுக.—

| | |
|---|---|
| (1) மண்ணூறு. | (5) சேறு. |
| (2) மூன்று. | (6) சேயாவன். |
| (3) சிறியன். | (7) நீயுண்டெனில் |
| (4) சென்று. | (8) சிற்றூர். |

௨௩. அச்சன், இருளை, தள்ளை, சிக்குதல், எலுவன், பாழி இவை எவ்வெந்நாட்டுச் சொற்கள்? இவற்றின் பொருள் என்னை?

௨௪. (1) வினையுடனுமுடியுந் தன்மைவினைமுற்றுக்களெவை?

(2) சென்றீபெரும: அட்டிலோலை தொட்டனை நின்மே: கோடிட்ட சொற்களுக்குப் பொருளும், அவை அவ்வாறு வருதற்கு விதியுங் கூறுக. இவற்றிலுள்ள ஈகார எகாரங்கள்யா?

௨௫. 'தற்சேர்ந்தார்.' இஃதெத்தனை பொருளால் மயங்கியது? விரித்துக்காட்டுக.

௨௬. "உருவகவுவமையில்" என்னுஞ் சூத்திரத்து, 'பிறவும்' என்றதனாற் கொள்ளக்கிடந்தவை யாவை.?

---

## பிரவேச பண்டிதர் வகுப்பு.

### பரீக்ஷகர்

### வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்.

---

## இலக்கணம் II.

---

சித்தார்த்தி௵ பங்குனி௴ 24௳ (5-4-20) 2-மணிமுதல் 5-மணி வரை.

(அம்சம் 60.)

I. (1) கட்டளைக்கலிப்பாவின் இலக்கணத்தை விளக்கமாக எழுதுக.

(2) கலிப்பாவில் வரத்தகாத சீர்கள் எவை?

(3) இயற்றளைவெள்ளடிவஞ்சியின்பாதமகவலுள்ளான் மயக்கப் படாவல்ல, மற்றொருசார், கருதிற்கடையே கடையிணை பின்கடைக்கூழையுமென், றிரணத்தொடைக்கு மொழிவ ரிடைப்புணரொன்பதுவே, வான்றளைதட், டிலைசதனதாகியும் வெண்பாவிலையந்தும், விசையறுசிந்தடியாலிறுமாய் விடின் வெண்கலியே:—இவற்றின் கருத்துக்களை விளங்க வுரைக்க.

(4) 'பாக்களுக்கும் கூறும் பொருட்கும் தொடர்புண்டு' என்ற கொள்கை நிலைக்குமா? ஆராய்க.



II. (1) சொற்சீரடி, நூற்பா, கூன்—இவற்றை விளக்குக.

(2) வண்டார்பூங்கோதை வரிவளைக்கைத்திருநுதலாள்,— பண்டையளல்லள்படி—இச்செய்யுளை யோசையூட்டி, இது எதன் பாற்படுமென்று நிரூபிக்க.

(3) கலிப்பாவினுறுப்புக்கள் எத்தனை? எவை? அவற்றுள் ஒன்று இரண்டு குறைவுறப்பெற்று வரும்பாக்கள் என்னவென்று பெயர் பெறும்?

(4) "மெய்யாங்கடவுளையோர்வதுவேதியர்மெய்க்கடனே" இந்தச்சமசியைப்பூரித்து இன்னபாடலென்பதையுங் காரணத்தோடு காட்டுக.

III. (1) தண்டியாசிரியர் கூறிய அணிகள் எத்தனை?

(2) குணத்திற்கும் அணிக்கும் வேறுபாடு யாது?

(3) பிரிபொருட்சொற்றொடரென்றால் என்ன? அது எப்போது குணமாகும்?

(4) நாகபந்தத்தை அமைத்துக்காட்டுக.

(5) காதைகரப்பிற்கும் கரந்துறைபாட்டிற்கும் வேறுபாடு யாது?

IV. (1) விலக்கணியை வடநூலார் என்னவென்று கூறுவர்? இதன் இலக்கணம் என்ன?

(2) ஒப்புமைக்கூட்டவணிக்கும், தீவகவணிக்கும் வேறுபாடி யாது?

(3) படுத்தபாயுடனேபிணிமூழ்கினும் பல்விழுந்துநரைத்தறமூப் பினும், அடுத்ததிங்கிவர்க்கேபெருவாழ்வெனு மப்பெரும் பதியெப்பதியென்பிரேல், விடுத்துவிட்டிந்திரதிருவும் புவி வெண்குடைக்குரிமைரசாட்சியும், கடுத்ததும்புகளத் தரைத்தேடுவார் காதலித்துவருந்திருக்காசியே:— இது இன்ன செய்யுளைச்சேர்ந்ததென்று காட்டி, இதிலுள்ள அணியையும் விளக்குக.

(4) சமாயிதம் என்றால் என்ன? அதற்கு அணியிலக்கணத்தில் யாது பெயர் கூறியிருக்கின்றார்? உதாரணமுந் தருக.

---

# செந்தமிழ்

## பிரவேச பண்டிதர் வகுப்பு.

பரீக்ஷகர்

ஆ. கார்மேகக்கோனார்.

## இலக்கியம் 1.

த்தார்த்தி௵ பங்குனி௴ 25௳ (6-4-20) 10 மணிமுதல் 1மணி வரை.

(அம்சம் 90)

I. 1. 'நான்மணிமாலை' 'உலா' இவற்றின் இலக்கணம் என்னை? 'நான்மணிக்கடிகை' என்பது நூலை எவ்வாற்றா னுணர்த்தும்?

2. நல்லிசைப் புலவர்களிற் சிலருடைய செய்யுள்கள் வேதம் போலக்கொள்ளப்பட்டன வென்பதற்கு நான்மணிக்கடிகையிலிருந்து ஆதாரங்காட்டுக.

3. பழமொழியினின்றும் இரண்டு மூன்று பழமொழிகளை எடுத்துக்காட்டி அதனால் நம் முன்னோரின் நாகரிகம் மனப்பான்மை முதலியவற்றை விளக்கிக்காட்டுக.

4. "சொல்லுதல்யார்க்கும்" என்ற திருக்குறள் நம்பாடத்துள் யாண்டு எடுத்தாளப்பட்டுளது?

5. (a) 'கன்றுபயிர்மேயக் கடாவின்செவியரிந்தாங்கு'

(b) "வற்புறுத்த வோர்பொருளை வள்ளுவனார் பத்துமுறை சொற்பொருத்தி யோதுந் துணிவுபோல்"

(c) "பிறையொழுக வொழுகுபுனற் கங்கையாற்றின் பேரணையிற் றொடுத்துவிட்ட பெரும்பாம்பென்ன"

இவ்வுவமைகள் எச்சந்தர்ப்பத்துள் எந்நூலில் வந்தவை?

II. 1. "நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை - யல்லாக், கடைகட்குந் தம்மூரென் றூரில்லை"

இங்ஙனங்கூறியதன் கருத்தென்னை?

2. வாலிழையார் முன்னர் வனப்பில்லார் பாடிலர்
சாலுமவைப்படிற் கல்லாதான் பாடிலன்
கற்றானொருவனும் பாடிலனே கல்லாதார்
பேதையார் முன்னர்ப்படின்.

இப்பாட்டில் நான்குபொருள் கூறப்பட்டிருக்குமாற்றை எடுத்துக் காட்டுக.



3. (a) "பெற்றானதிர்ப்பிற்பிணையன்னா டானதிர்க்கும்"

(b) "தாழீயாத், தெற்றென்றார்கண்ணே தெளிந்தனர்"

(c) "சிறந்தார்க்கரிய செறுதல்"

(d) "வேந்தனையுந், தன்னடைந்த சேனை சுடும்"

(e) "நீரிடும்பை புள்ளினு ளோங்க லறியும்"

இவ்வடிகட்குப் பொருள் எழுதுக.

4. நான்மணிக்கடிகையினும் பழமொழியினும் ஒத்த கருத்துடைய பகுதிகளுள் இரண்டைத் தெரிவிக்க.

5. (a) முறைமைக்கு மூப்பிளமையில்

(b) குலவிச்சை கல்லாமற் பாகம் பெறும்

(c) கூரம், படியிழுப்பினில்லையரண்

(d) உறற்பால நீண்டாவிடுதலரிது.

இவற்றிற்கு இந்நூலாசிரியர் காட்டிய சரித்திரங்களைக் குறிக்க.

III. 1. "தாமிருந்தகோடு குறைத்துவிடல்"
"நாய்மேற்றவிசிடுமாறு"
"முள்ளினால் முட்களையுமாறு"

இவற்றாற் குறிக்கப்பட்ட செய்கைகள் யாவை?

2. "பனையின்மேற், பஞ்சிவைத்தெஃகிவிட்டற்று" இப் பழமொழியைக் குறிப்புரையாசிரியர் எங்ஙனம் ஆக்ஷேபித்து எங்ஙனம் உண்மைப்பாடம் நிறுவுகின்றார்?

3. பட்டினத்தடிகள் எந்தெந்தத் தலங்கட்குத் தனிப்பிரபந்தம் பாடியுள்ளார்? இவரால் வியந்து பாடப்பெற்ற பெரியார் யார்? அரசன் யார்? இவர்பாடல்கள் சைவத்திருமுறைகளுள் எத்திருமுறையுட்சேர்க்கப்பட்டிருக்கின்றன? அடிகளது வேறு பெயரென்ன?

4. பட்டினத்தடிகள், சிவபெருமான் மதிசூடுதல், ஆனேறுதல், மானேந்துதல், சூலமேந்துதல், ஆகிய இச்செய்கைகளை எதற்கெனக் கற்பித்துக் கூறுகின்றார்?

5. "நன்றென்பசிலவே; தீதென்பசிலவே ஒன்றினும் படாதன சிலவே" இவற்றுள் ஒன்றினும் படாதன யாவை?

IV. 1. "வளைவாய்த்தூண்டிலி
னுள்ளிரைவிழுங்கும்பன்மீன் போலவும்

மின்னுபுவிளக்கத்து விட்டில்போலவும்,
ஆசையாம்பரிசத்து யானைபோலவும்,
ஓசையின்விளிந்த புள்ளுப்போலவும்,
வீசியமணத்தின் வண்டுபோலவும்,
உறுவ்துணராச் செறுவுழிச்சேர்ந்தனை"

இதனுள் சேர்ந்தனை என்றது எதனை? அதனோடு உவமானத்தைப் பொருத்திக்காட்டுக.

2. நமக்குப் பாடமாய அப்பர் திருவிருத்தம் அனைத்தும் கட்டளைக்கலித்துறைகளாகவேயிருப்பவும் அவற்றிற்குத் திருவிருத்தமென்றபெயர் எவ்வாற்றால் வந்தது? ஆராய்க.

3. "மூந்திவட்டத்திடைப்பட்டதெல்லாமுடிவேந்தர் தங்கள்
பந்திவட்டத்திடைப்பட்டலைப்புண்பதற்கஞ்சிக்கொல்லோ
நந்திவட்டந்நறுமாமலர்க்கொன்றையுநக்கசென்னி
அந்திவட்டத்தொளியானடிசேர்ந்ததென்னுருயிரே"

இதன் பொருளை விளக்கி எழுதுக.

4. நம் நூலாசிரியருள் அசுணத்தை மாவெனக்கொண்டார் யார்? புள்ளெனக்கொண்டார் யார்?

5. (a) "முழுகுபவஞ்—சிந்தும்விவசித்துச்செய்பணிக்குக் காரணமாய், வந்துமுதனின்றெழுங்காயீவன்னியான்"

(b) முத்தமணி—யாற்றிற்பொருடிருவாரூர்க்குளத்திலன்று சென்று, தோற்றப்புரியுந்தொழிற்சித்தன், இவற்றிற்குப் பொருள் எழுதி, வரலாறுகளையும் சுருக்கி யெழுதுக.

V. 1. வெங்கையுலாவாசிரியர் வேறொந்தஉலாவைப் பாராட்டுகிறார்; அந்த அடியை எடுத்துக் காட்டுக.

2. குமரகுருபரர் சிவபிரானின்சடைமேல் வெண்டிங்கள் நிலவை என்னவென்று உத்பிரேக்ஷிக்கிறார்.

3. "தன்னுடைமயக்கந்திசைமேல்வைத்துச்
சென்னெறிபிழைத்தோன் திசைமயங்கிற்றென
மொழிகுவதேய்ப்ப"

இதனோடு தொடர்புற்ற விஷயத்தை வசனத்தில் எழுதி முடிக்க.

4. திருவாரூர்நான்மணிமாலையினின்றும் இடையூறுகிளத்தற்றுறைக்கு ஒருசெய்யுள் உதாரணங்காட்டுக.



5. அங்கிங்கெனாதபடி என்ற செய்யுளில் வந்துள்ள எது, எது, என்ற வினாக்கள் ஆறும் எதனைக் குறிக்கின்றன? அப்பாட்டிலுள்ள எச்சத்தொடர்களைப் பொருளியையுக்குத் தகச் சுருக்கமாய் முடித்துக்காட்டுக.

VI 1. தாயுமானவர் மூத்திக்கு எது எதுவென்கிறார்?

2. மௌனத்திருந்துமுயர்மலைநுழைவுபுக்கியும்மன்னுதசநாடிமுற்றும்சுத்திசெய்தும் மூலப்பிராணனோடங்கியைச் சோமவட்டத்தடைத்தும் சொல்லரியவமுதுண்டுமற்பவுடல்கற்பங்கள்தோறுநிலைநிற்கவீறு சித்திசெய்தும், இவ்வடிகளுக்குப் பொருள் எழுதுக.

3. சூடாமணிநிகண்டு எவ்வரசன்காலத்துச் செய்யப்பட்டது? இதற்குமுன் எழுந்த நிகண்டுகள் யாவை?

4. மருதநிலத்தூரின்பெயரையும், மரக்கலத்தின்பெயரையும், இளமையின்பெயரையும் குறிக்கும் நிகண்டுச்செய்யுளை எழுதுக.

---

## பிரவேசபண்டிதர்வகுப்பு

பரீக்ஷகர்.

ரெ. ராமையங்கார்.

## இலக்கியம் II.

சித்தார்த்தி௵ பங்குனி௴ 25உ (6-4-20) 2 மணி முதல் 5 மணி வரை.
(அம்சம் 90.)

I. (1) மணிமேகலை சிலப்பதிகாரம் இவற்றையும் இவற்றின் ஆசிரியரையும்பற்றித்தெரிந்தவற்றை யாதாரத்தோடெழுதுக.

(2) இந்திரவிழாவைப்பற்றி நீர் தெரிந்துகொண்டவற்றை விரித்தெழுதுக.

(3) முரசறைவோன்கூற்றைச் சொந்தநடையி லெழுதுக.

(4) ஐம்பெருங்குழு, எண்பேராயம், நால்வகைமரபினரூபப்பிரமர், நால்வேறுதேவர், எண்வகைநரகர், நாற்பெரும்பண், நால்வகையாழ், நால்வகை வாய்மை, ஐவகைச்சீலம், நால்வகையவிநயக்களம், எழுவகை நிலம் இவற்றை விரிக்க.

(5) நற்றவம்புரிந்தது நாணுடைத்தென்ற வயந்தமாலைக்கு மாதவி கூறியதென்ன?

II. (1) கட்குடியன்கூற்று, பித்தனியற்கை, யாக்கையியல்பு இவற்றைக் கூறுக.

(2) இவனுயிர்தந் தென்னுயிர்வாங்கென்ற கோதமைக்குச் சம்பாபதி கூறியதும், மணிமேகலாதெய்வம் உதயகுமரனிடங்கூறிய அறவுரையும் எவை?

(3) காவிரிப்பூம்பட்டினத்தின் பழையநிலையையும் அதிலிருந்த தேவகோட்டமுதலியவற்றையும்பற்றித் தெரிந்தவற்றையெழுதுக.

(4) அறியாத்தேயத்தாரிடையுழந்து சிறுமையுற்றேனென்ற கோவலற்குக் கவுந்தி கூறியதென்ன?

(5) பாலைக்கு நிலமின்மை, கோவலன் புகாரினின்று மதுரை சேர்ந்தகாலம் இவற்றை யாதாரத்தோ டெழுதுக.

III. (1) மாதவியனுப்பியவோலைப்பாசுரத்தை யெழுதி இருபொருள் கூறுக.

(2) கட்புலமயக்கத்தாற் கோவலனையையுற்ற கௌசிகன் செய்த தென்னை? அறமும் அதன்றுறைகளு மெவை?

(3) வயிரம், மாணிக்கம் இவற்றின் குணதோஷங்களை விரித்தெழுதுக.

(4) சங்கதருமன், பிரமதருமன், இரவிவன்மன், சாதுசக்கரன் எட்டிகுமரன், காயசண்டிகை, ஆதிரை, ஆபுத்திரன், சித்தாதேவி, தச்சயன், மாருதவேகன், தீவதிலகை, இவர் யாவர்?

(5) பின் வருவனவற்றிற்குப்பொருள் கூறுக.

(a) ஆரிடை, உறுகண், வகுந்து, இயவு, சாத்து, கோலைக்கனைதல், இணை, ஒய்தல், சுருங்கை, அம்பணம், காதை, ஏதுநிகழ்ச்சி, புறமறிப்பார்த்தல், பொதியறை.

(b) "கழிபேராண்மைக்கடன்பார்த்திருக்கும், விழிநுதற்குமரி"

"சுமமெணேருவகேங்குசிறப்பின் முடியரசொடுங்குங் கடிமனை"

"உருவிலாளனொருபெரும்பெயர்ப்ப, வோவியனுள்ளத் துள்ளியதுவியப்போன்"

IV. (1) பாரதத்தைப்பற்றி நீர் தெரிந்துகொண்டவற்றை விரித்தெழுதுக.



(2) சராசந்தன் வரலாறென்ன?

(3) (a) திக்குவிஜயத்தினிமித்தம் யார்யார் எவ்வெத்திசைகளிற் சென்றார்கள்.

(b) இராஜசூயகாலத் தியார்யார் எவ்வெத்தொழிலிற்பணிக்கப்பட்டார்?

(4) சிசுபாலனிறந்த போர்க்களத்தில் வியாசர்கூறிய விர்த்தாந்தமென்ன?

(5) பாஞ்சாலிக் கரசவையிற் பழுதுரைத்தபொழுது விகர்ணன் கூறிய வழக்கும் அதற்குக் கர்ணன்கூறிய மறுமொழியு மெவை?

V. (1) செருத்துணையார்முறைசெய்தது, தொண்டைமான்களிற் றினை முல்லையாற்றொடக்கியது இவற்றை விளக்குக.

(2) "ஆற்றுப்பெருக்கற்றடிசுடுமந்நாளும்" இச்செய்யுளோ டொத்த கருத்துடையசெய்யுளை யெழுதுக.

(3) திணைமயக்கமுரைத்தசெய்யு ளிரண்டு தருக.

(4) நயமிக்கவுவமை, உத்ப்ரேக்ஷை, வேற்றுப்பொருள்வைப்பு இவை வந்தசெய்யுட்களில் ஒவ்வொன்று தருக.

---

## பிரவேசபண்டிதர்வகுப்பு.

### பரீக்ஷகர்

### மு. ரா. அருணாசலக்கவிராயர்.

---

### வசனம்.

---

### பாவலர்சரித்திரம்.

சித்தார்த்தி௵ பங்குனி௴ 26ௗ (7-4-20) 10-மணிமுதல் 11½மணிவரை.

(அம்சம் 60.)

1. அந்தகாரக் குப்பாயம்போர்த்து, அஞ்ஞாதவாசஞ்செய்த புலவரென்பதற்குப் பதார்த்தமெழுதுக.

2. அதங்கோட்டாசிரியர் எந்தச்சங்கத்தில் வித்துவானாயிருந்தனர்? அவர் ஊர் எது?

3. அருணந்திசிவாசாரியர் மெய்கண்டதேவரிடம் வந்ததற்குக் காரணமென்னை?

4. ஆடெரிபடர்ந்த கோடுயரடுப்பில் என்னும் பாடல்பாடியவர் யாவர்? ஆடெரி யென்பதற்கும் கோடுயரடுப்பென்பதற்கும் பொருளென்னை?

5. சுவாமிநாததேசிகர் ஸம்ஸ்கிருதத்திலிருந்தே தமிழ்பிறந்ததென்றொரு பிரசங்கஞ்செய்தது சரியன்றென்பதற்கு, அவர் கூறிய நூலி லேதேனுஞ் சான்றுண்டாயி லதை யெழுதுக.

## புலவர்புராணம்.

1. எண்வகைப்பொருளுமாகி என்ற கவியில் எண்வகைப்பொருள்கள் யாவை?

2. புலவர்புராண நூலாசிரியருக்குக் குரு யாவர்?

3. சிந்துபானன் யாவன்? இப்பெயர் இடுகுறியா? காரணமா? காரணமாயிற் காரணத்தை விளக்குக.

4. ஔவையார் மழையினனைந்த காட்டின்பெயர் யாது?

5. வெண்டளையில் நாலசைச்சீரை மூவசைச்சீராகக்கொள்வதற் கிரண்டுதாரணம் எழுதுக.

## மகாபாரதம்.

1. சாந்திபர்வ மென்பதன் பொருளென்னை?

2. கௌரவர் யாவர்? விளக்கியெழுதுக.

3. கர்ணனுடைய பாதங்கள் குந்தியினுடைய பாதங்களென்றது, யாதுகாரணத்தால்?

4. துரியோதனன் பலவந்தமாகத் தூக்கிக்கொண்டுபோன கன்னியின் பட்டணம் எது.

5. குமார்க்கத்தை யடையவேண்டா என்று யாருக்கு யார் சொன்னார்? குமார்க்கமென்பதற்குப் பொருளென்னை?

## சங்கராசாரியர்சரித்திரம்.

1. இளையோர் யாவருக்கும் உபயோகமாக எழுதப்பட்டதென்றதில் இளையோர் யாவர்?

2. விஷ்ணுவும் ஆதிசேடனும் வேதபாகத்தை விளக்குதற்கு யார் யாராக அவதரித்தனர்?



3. சங்கராசாரியர் தருக்கவாதத்தில் வென்று யாருக்குச் சந்நியாசங் கொடுத்தார்?

4. பதுமபாதர் பாஷியவுரையையிழந்த சரிதத்தைச் சுருக்கமாக எழுதுக.

5. சங்கராசாரியர் சந்திரமோலீசுரரைப் பெற்ற இடம் எது? மோலி யென்பதற்குப் பொருளென்னை?

## பிரவேசபண்டிதர்வகுப்பு.

### பரீக்ஷகர்

### திருஞானசம்பந்தக்கவிராயர்.

---

## செய்யுளியற்றல்.

---

சித்தார்த்தி௵ பங்குனிமீ 26உ (7-4-20) 12மணிமுதல் 1½-மணிவரை.

(அம்சம் 60)

1. கானத்தரக்குரித்துங்கன். என்பதை யீற்றடியாகவும், கல்லாலிருந்து கரங்காட்டி, என்பதை யிரண்டாமடியாகவும் வைத்துக் காமதகனவிஷயமாய் நேரிசை நேரிசைச்சிந்தியல்வெண்பா வியற்றுக. இருந்துகரங்காட்டியென்பது வெளிப்படவும் பொருள் காட்டுக.

2. கனத்திற் கனங்குளிருங்காண் இவ்வீற்றடியை வெளியாக்கிக் குறள்வெண்பாவியற்றுக.

3. ஒற்றில்லாமல்வர வொரு நேரிசைவெண்பா யாதேனு மொரு பொருளைக்குறித் தியற்றுக.

4. தை, மாசி, சித்திரை, ஆடி இம் மாதங்கள், ஒருபத்தடிக்குள்ளான நேரிசையாசிரியப்பாவில் வேறுபொருள்பட மங்கையர் விஷயமாக வியற்றுக.

5. தெய்வவிஷயமாய், பதி, நதி, மதி, எனுஞ்சொற்கள் விரவிவர ஒரு அடிமறிமண்டிலவாசிரியப்பா வியற்றுக.

6. சந்திரன், பாம்பு, மயில். அன்னம், குயில், வண்டு, இவைகள் உவமானமாகவர அந்திப்பொழுதை வர்ணித்துச் சோலையிடமாக 8 அடியுட்பட்ட பஃறொடைவெண்பா வியற்றுக.

---

## பிரவேசபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

ச. பூபாலபிள்ளை.

---

## வியாசம்.

---

சித்தார்த்தி௵ பங்குனிமீ 26உ. (7-4-20) 2½மணி முதல் 4½மணி வரை.
(அம்சம் 60.)

1. சண்பகபுரமென்னும் பட்டணத்திலே வைசியர்குலத்தில் குணநிதி என்பான் பிறந்து, பருவகாலத்தில் தக்க குரவனை அடுத்துப் பலகலை பயின்றுதேறி, இருவகை அறங்களில் இல்லறஞ் சிறந்ததெனக்கண்டு விரும்பி, கற்புடைக் கமலவதி என்னுங் கன்னியை விதிமுறைமணந்து, இல்லறநடாத்திவருநாளில், மகப்பேறின்றி மனங்கலவுற்றுத் தவமோற்று, ஒரு மைந்தனைப் பயந்து, செப்பமாய் வளர்த்துக் குடும்பபாரத்தை அவன்மேல் நிறுத்திப் பரகதி அடைந்தான் என்பது ஒரு கற்பித சரித்திரத்தின் பொழிப்பாகும். இப்பொழிப்பை ஆதாரமாகக் கொண்டு, சண்பகபுரத்தின் வளப்பங்களையும், குரவன் இலக்கணங்களையும், கல்வி பயின்ற முறைகளையும், இல்லறப்பெருமையையும், கமலவதியின் கற்பியலையும், மகவின்றிப்பட்ட பருவரலையும், பிறவற்றையும் இஷ்டப்படி கற்பித சரிதமாக விரித்து ஒரு வியாசம் முப்பது வரிக்குக் குறையாமல் எழுதுக. (அம்சம் 30.)

2. கல்வி அல்லது கைத்தொழில் என்னும் இரண்டு விடயங்களில் ஒன்றைக்குறித்து விரிவாக 25 வரிக்குக் குறையாத ஒரு வியாசம் எழுதுக.
(அம்சம் 30)

---

# தனிநிலைச்செய்யுட்கோவை.

(உஎஉ-ம் பக்கத்தொடர்ச்சி.)

16. மனன்சிவப் பார மதிமயக் கேற
வைகலும் பற்பல வண்மையொடு சூழ்ந்து
கைவந்த வெல்லாங் கடனுலகு கொள்ளும்
வண்ணஞ் சான்ற வளநூல் யாத்த
பாவலர் நாவலர் பல்லாறு போக்கி
யார்வமொடு பொருளுடை யொருவற் குறுகி
யெய்முறு கடனே யின்றமி ழாய்ந்து
செம்பொருள் கண்டு தேளநலன் புரித
லும்முறு கடனே பிடிநுங் காம
லெம்முறு குலனை யினிதுபுறந் தருதலென்
றும்பர்நாட் டமுதிற் செனிமுத லொழுக்கினு
மன்னுர் முதற்றம் பொய்க்குறை யறைஇ
இன்னு வாக்க வினிதறி புலவர்
அன்னோர் தம்மை யன்பொடு விளீஇ
நின்னதூஉம் பிறாதூஉ மெனக்கொடு நீயே
நெல்பெறு வினைமுத னிகழ்த்துநர்க் குதவுதி
சொல்பெறு வினைபுரி தொல்லோர்க் களைகுதி
எனப்பல விடிப்பினு மீயா ரிவரே
யெண்ணிலர் பற்பல விகழுந ரென்னே
கதிரே மழையே காலே யென்பன
காய்தல் பொழிதல் வீசுத லென்றிவை
நடுவொரீஇ யாற்றிய தானே
படுபொரு ளெல்லாம் பாழ்பட் டெனவே.

17. 'மேலை நாட்டுழி விளங்குபுலந் தெளிந்தோன்
றன்னாட் டவர்க்குத் தகுதிசெயல் விழைஇப்
பொருள்குறு கொருவற் பொருந்துபு போற்றி
யையநின் மக்கட் களவறு கல்வி
யெய்தல் செய்வ லெற்புறந் தருகென
அன்னோன்,

நன்றிதங் கினிக்க நல்லோய் நிறூஅ
தோன்றிய வருகை யுவந்தனன் யாழ
மற்றுநின் குலனு மரபு மிவ்வெனச்
சொற்றல் வேண்டுந் தாயோ யென்னப்
புலவன்,
தருதமிழ் நாட்டுத் தலைமையை நின்வினு
நகையி னேன்பிலர் தமக்குநகை செய்தன்
றிறைமைதரு மக்களி னெவ்வேற் றுமைகொடிங்
கறைகுதி யிவ்வெலாம் பூணா லணியாக்
குறையே கடையோர்க்கு முதல்வரொடு கொள்ளுங்
குறைமற் றம்மா கொன்பிறி தில்லை
கற்புடை யவரே பெருங்குலக் காட்சியர்
கற்பமை கிலரே கடைக்குல வாட்சியர்
இம்மெய் யறிவுறீஇ யினிதுய் கென்னப்
பொருளோன்,
கண்டது வேட்டுக் கொண்ட திழக்குந
கழறக் கேண்மோ காசினி மாக்க
டத்தம் தொழிற்குத் தகுமுறை முதல
மரபுவழி யாக வழாஅது பெறீஇ
யுய்தல் வேண்டி யொருவனுவந் துதவின
னறிவின் மக்கடம் மளிப்புக் கருதிக்
கோடு முதல கொடுத்தாங் கினிநீ
யெவ்வெச் சரிதை வல்லுநை யென்னப்
புலவன், மேலையர் சரிதம் வல்லுந னென்னத்
தமிழன்,
அச்சரித மேனாட் டவர்க்குமிக வினிதே
நம்மனோர் தமக்கே நம்முன் வேந்தர்
தம்முறு சரிதை தக்கன் றம்மா
நினவ கூறுவ லெனவ கேண்மதி
தன்னுறு பெண்டிர் மக்கள் தாயர்
இன்னவர்க் கேற்ற வினைலான் றறுது
நாடொருண் முற்று நவைபெற வழித்தோ
னொருவற் கண்டு நிறுது பொருளெலா
மினிதுவகை செய்குவ லெற்காத் தீத்தை
எனினே யன்னே னியைக்குங் கொல்லோ
அஃதேய்ப்ப, நின்னுறு கல்வியை நேடிலை
யென்னுற் றுரைத்தனை யென்றிசி னேனே.

(தொடரும்.)

S. வயிரமுத்து.

உ

# குழந்தைகளின் படிப்புமுறை.

## பீடிகை.

பூவுலகில் ஒவ்வொருதேசத்திலும் தற்காலத்தில் ஏதாவது கிளர்ச்சி ஒன்று நடந்துவருகிறது. ஐந்துவருஷகாலமாக, தேசத்தார்கள் இருபத்தெண்மருக்கு மேற்பட்டவர்கள் இருகக்ஷிகளாகப்பிரிந்து, தங்களுக்குள் ஓயாதுசமர்புரிந்து, பொருளிழந்து ஆண்மைஅழிந்து சகலவன்மையுங்குன்றித் தத்தளிக்க, பொறைக்கு இலக்காகவுள்ளபுவியும் ஆற்றாது கூக்குரலிட்டு இரங்கியது; இப்பொழுது சமாதானமும் அமைதியும் வழங்குவதாகத்தோன்றுகின்றது. இப்படித்தோன்றும் இக்காலத்தில் ஒவ்வொருதேசத்தாரும் தங்கள் தங்கள் நாட்டிற்கு வேண்டிய சீர்திருத்தங்களைச்செய்துகொள்வதில் வெகுவானதீவிரத்தையும் ஆத்திரத்தையும் காட்டிவருகின்றார்கள். அச் சீர்திருத்தங்களில் முதன்மையாய்நிற்பது கல்வியின்சீர்திருத்தம். சிற்றுயிர்களாகிய நம்மவர்களுக்குக் கல்வியைப்பார்க்கிலும் உற்றதுணை வேறொன்றும் கிடையாது. ஆகவே ஒவ்வொருநாட்டினரும் தங்கள்தங்கள், பிரதம நடுத்தர, உயர்தரக் கல்விமுறைகளையும் கோட்பாடுகளையும் ஏற்றவண்ணம் மாற்றி, மற்றொருநாட்டிற் செம்மையாகக் கண்டு கேட்டுள்ளவைகளைத் தத்தம் நாட்டிற் கடைப்பிடித்து, "நான்முதல்வன், என்முறைசிறந்தது"எனப் பிறருக்கு எடுத்துக்காட்டிகளாக விளங்கும்படி முயற்சித்துவருகின்றனர். காலத்திற்கேற்பக் கல்விமுறையும் மாறுகின்றது. கல்விமுறையில் பாலர்களுடையகல்வி அதி சிரேஷ்டமானது. அதன், லக்ஷணம் எது என்பதையும், எவ்வளவுதூரம் நம் நாட்டினர், முக்கியமாய்த் தமிழ்நாட்டினர், இந்தவிஷயத்திற் சிரத்தையாகப் பாடுபடுகின்றனர் என்பதையும் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

## பாலர்கள்.

பாலர், அல்லது குழந்தைகள், என்பவர்கள் பிறந்ததுமுதல் ஏழு வயதுவரை வளருகிறவர்களாவர்கள். இவர்களே ஒரு தேசத்

தாரின், ஒருஜாதியாரின் "பண்ணப்படைத்தபெருஞ்செல்வம்"—இவர்களைப் பாதுகாத்துத் தேக ஆரோக்கியத்துடன் திடகாத்திரர்களாய் வளரும்படிசெய்து நன்னெறியில் நிற்கவைப்பது மூத்தோர்களது கடமையாகும். இவர்கள் பிறர்உதவியைநாடி நிற்பவர்கள்; விஷயங்களையறிய விரும்புகிறவர்கள்; நன்றாய்விளையாடி ஆனந்தமாகத்தூங்கும் இயற்கையுள்ளவர்கள்; யாழினும் குழலினுமினியவையாகத் தம் மழலைச்சொற்களைச்சொல்லித் தாய்தந்தையர்களைக் களிக்கச்செய்பவர்கள்; நாம் வளர்க்கும்வண்ணம் வளர்கிறவர்கள்; பிரபஞ்சத்திலுள்ள கெட்ட சுபாவங்கள் இல்லாதவர்கள். இவர்களைப்பற்றி ரூஸோஎன்ற பிரஞ்சுதேசத்து ஞானிஒருவர் "மனிதன்இயற்கையின். அற்புதமாய் உற்பவிக்கும்போது சத்தாகத்தோன்றுகிறான்; மனிதர்கள்கையிலகப்பட்டுக்கெட்டுப்போகிறான்"என்று சொல்லுகிறார். இப்பேர்ப்பட்ட அரிய பொருளை, மனிதனால், பகுத்தறியமுடியாத இவ்வுயிர்ப்பொருளை, நாம் எம்மாதிரி உபயோகிக்கின்றோம்?

## கல்விமுறை.

நம் நாட்டில் மேனாட்டாருடையநாகரிகம், முக்கியமாய் ஆங்கில நாகரிகம், நடமாடத்தொடங்கி நூற்றைம்பதுவருடங்களுக்கு மேலாகின்றது. "பழையனகழிதலும்புதியனபுகுதலும்,வழுவலகாலவகையினானே"என்பது மனிதர்கள் சிஷ்டாசாரங்களுக்கும் நடையுடைகளுக்கும் பொருந்தியதுபோலும். மேனாட்டாரின்பழக்கம் மிகுதியாகவே, நம் பழக்கவழக்கங்களும் மாறுபாடு அடைகின்றன. அப்படி மாறுபாடு அடைந்ததிற் கல்விமுறையும் ஒன்று. முற்காலத்திய திண்ணைப்பள்ளிக்கூடங்கள் மறைந்தன. அண்ணாவிகளும் பழைய சரித்திரகாலத்தவர்களாய்விட்டார்கள். அந்தஸ்தானத்தில் தற்காலத்திய பிரதம பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன. பிரதம உபாத்தியாயர்களும் ஏற்பட்டுள்ளார்கள். இவர்களுடைய ஆதரவின்கீழேதான் நமது இணையில்லாத, அருமைமாணிக்கங்களாகிய, குழந்தைகளை அனுப்பநேரிடுகின்றது. இந்தமுறை தற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. காலத்தின்போக்கோ ஒரேபோக்காய் இருக்கிறது; ஜீவனோபாயக்கஷ்டம் குறையாமல் மிகுதியாகிவருகின்றது; ஸ்திரீ புமான்கள் வியர்வைநீர்வடியப் பாடுபட்டுக் கூலிசம்பாதித்துச் சிறிது உண்டு ஜீவித்துவருகிறார்கள். இவர்கள் தம்மக்களைப் பக்கத்துப் பிரதம



பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். அங்கேயுள்ள உபாத்தியாயர் அவர்களை ஏற்று அவர்களுக்குத்தக்க கல்வியைப் புகட்டித் தேற்றிவருகிறார்கள். இப்பள்ளி முதலாக அனுசரித்துவரும் கல்விமுறையைப்பற்றி, நம் மாகாண லார்ட் பிஷப்பவர்களாகிய ஒயிட் ஹெட் பிரபு சென்ற வருஷம் ஜூன்மாதத்திற் குன்னூரிற் கூடிய ஒரு கூட்டத்தில், "கவர்ண்மெண்டை அனுசரித்த கல்வி கிராம வாழ்க்கைக்கு ஒத்ததாயில்லையென்றும், கல்விப்பயிற்சி கிராமஜனங்களின்வாழ்க்கைக்கு ஒத்ததாயும், பொருளாதார விஷயங்களுக்குப் பயன்படக்கூடியதாயுமிருக்கவேண்டும்" என்றும் கூறியிருக்கிறார். வேறுபலரும் இம்மாதிரி உணருகிறார்கள். ஆகவே நம் இந்தியாவில், நம் ராஜதானியில், வேரூன்றியிருக்கும் தற்காலத்திய கல்விமுறையானது கிராமவாழ்க்கைக்கும், நம்நாட்டுவாழ்க்கைக்கும், ஏற்றதல்ல என்று புலப்படுகிறது. அப்படியாயின் அது எப்படி ஏற்பட்டுள்ளது என்பதை யாராய்வோம். ஆங்கிலேயர்கள் வியாபாரார்த்தமாக நம் நாட்டுக்கு வந்தபொழுது அவர்களுடைய ஆசாபாசங்களை நம் நாட்டவர்களுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்காக அவர்கள் மிகுதியாக நம் நாட்டுமொழிகளைக்கற்காமல், சமத்காரமாய்த் தங்கள் பாஷையை நாம் மிகுதியாகக் கற்கும்வண்ணம் பயத்தாலும், நயத்தாலும் செய்துவிட்டனர்; வியாபாரிகள் ராஜாங்கத்தாராக ஆனவுடனே இது மேன்மேல் ஓங்கிவளர ஆரம்பித்தது. சர்க்கார் வேலையைச் சரிவரப்பார்த்து நடத்துவதற்கு எண்ணிறந்த மனிதர்கள் வேண்டியிருந்தனர். அவர்களை இலகுவில் தேடிக்கொள்ளும் வண்ணம் இக்கல்விமுறையை ஸ்தாபிக்கத்தொடங்கினார்கள். இதன் பயனாகவந்தவர்தாம் தற்காலத்திய உத்யோகஸ்தர் என்ற ஒருவித வகுப்பினர். அவர்கள் ஒரு சிறு குமாஸ்தாமுதல் பெரிய கௌன்சில் மெம்பர்வரை ஸ்தானம் பெறலாகும்; அதனால்தான் இம்மாதிரியானமுறை நூற்றைம்பது வருடமாக இருந்தும், நம் நாட்டினர்கள் நூற்றுக்கு 95-பேர்கள் இன்னும் எழுதப்படிக்கத்தெரியாதவர்களாயிருக்கிறார்கள். மற்றநாகரிகநாடுகளிலோ எனின், நூற்றுக்கு ஐவரே எழுதப்படிக்கத்தெரியாதவர்களாயிருக்கிறார்களாம். இது திருப்திகரமற்ற விஷயம் என்று தெரிந்தபலர் இம்முறையை மாற்றுவதற்கான வழிகளைத்தேடிவருகின்றனர். இது நிற்க.

## குழந்தைப்பருவத்தின் பாகுபாடு.

நம்முடைய பிரதமபள்ளிக்கூடங்களில் ஐந்து வகுப்புக்களும், நடுத்தரப்பாடசாலைகளில் ஆறுவகுப்புக்களும் இருக்கின்றன. சாதாரணமாகப் பள்ளியிறுதிப்பரீக்ஷைக்கு ஆஜராகிறவர்கள் பதினைந்தாவது ஆண்டு நிரம்பியுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆகவே குழந்தைகள் நாலாவதுவயதுமுடியுங்காலத்திற் பள்ளிக்கூடங்களுக்குப் போகத்தொடங்குகிறார்கள். அதாவது ஐந்துவயதுவரையிலும் அவர்கள் தாய்தந்தையர் உறவினர்சமீபத்தில் வளருகிறார்கள். பின்னர் ஒன்பதுவயதுவரை உபாத்தியாயர் சமீபத்திற் பாதிப்பொழுதும் உறவினர்சமீபத்திற் பாதிப்பொழுதுமாக வளருகிறார்கள். இந்தவயதெல்லையே குழந்தைப்பருவத்தின் எல்லையாகும். முதல்மூன்று வயதுவரை சிசுப்பருவமாகவும், 3-முதல் 5-வரை சிறுகுழந்தைப்பருவமாகவும் 5-முதல் 9-வரை குழந்தைப்பருவமாகவும் பாவிக்கலாம். இம்மூன்றுபருவங்களிலும் அவர்களின்சுபாவம்வெவ்வேறாக இருக்கும். ஐந்து வயதுவரை அவர்களின் வளர்ச்சிக்குத் தாய்தந்தையர்களே முக்கியகாரணமாகஇருக்கிறார்கள். பிறகு உபாத்தியாயர்களும் அந்தச் சிரமத்தை ஏற்றுப் பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள். ஆகவே குழந்தைகளின் கல்விமுறையில் குழந்தைகளின்தன்மையும், கற்கப்படும் விஷயங்களும், கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயர்களின் லக்ஷணங்களும் கவனிக்கப்படவேண்டும். இவைகளை முறையே சிறிது ஆராய்வோம்.

## சிசுப்பருவம்.

சிசுப்பருவத்தில் குழந்தைகள் தாயிடமே பெரும்பான்மையும் வளருகின்றன. விளக்குப்போன்ற பிரகாசமான பதார்த்தங்களை உற்றுநோக்குவதும், மிகுதியாகப் பழகுகிறவர்களை அறிந்துகொள்வதும், எந்தவஸ்துவைக் கையிற் கொடுத்தாலும் உடனே அதை வாயிற்கொண்டு திணித்துக்கொள்வதும், இப்படியாகத் தம் ஐம்புலன்களின் மூலமாய் முதற்பாடங்களைப் படிக்கத்தொடங்குகின்றன. இதற்காகவே வைகறைப்பொழுதில் தீபத்தை அவர்கள் சமீபத்தில் வைப்பதும், பகலில் அவர்கள் தொட்டிலில் கிளித்தட்டுமுதலிய அலங்காரவஸ்துக்களைத் தொங்கவிடுவதும் வழக்கமாகவிருக்கிறது. ஒன்றரைவயதளவிலே சிற்சில ஒலிகளை ஒலிக்க ஆரம்பிக்கின்றன. அப்



பொழுது சிறுசிறுவார்த்தைகளைக் கிளிப்பிள்ளைகளுக்குச் சொல்லுவதுபோற் சொல்லிக்கொடுக்கிறோம். இன்னும் காதில் இன்பமான மொழிகள் சென்று திவ்யமான பொருள்விளங்கும்படியாக அழகான தாலாட்டுகள் பாடப்படுகின்றன. இரண்டுவயதளவிற் குழந்தைகளுக்குத் தம்ஞாபகமும், ஆசையும் பிடிவாதமும், ஊக்கமும், பணிவும், ஜீவகாருண்யமும், மனவுறுதியும் பிடிபட ஆரம்பிக்கின்றன. நான் அநேகங் குழந்தைகளைக் கவனித்திருக்கிறேன். அவைகளுக்கு மாடுகளில் ஒரு தீவிரதிருஷ்டி ஏற்படுகிறது; விடாது ஓயாது அவைகளை நோக்கி நின்று விளையாடுகின்றன. ஒருசமயம் ஒருத்தி தன் வீட்டு முற்றத்தில் வற்றல் முதலியன உலர்த்தியிருந்தாள். அவளது மூன்று வயதுக் குழந்தை பக்கத்திலிருந்தது. அவசரமாக வீட்டுக்குள்போகவேண்டியிருந்தபொழுது, தாயார் தன்குழந்தையைப்பார்த்து "கண்மணி, அணில், காக்காய் முதலியன வற்றலண்டை வராமல் பார்த்துக்கொள்" என்று சொல்லிப்போனாள்—தாயார் உள்ளேசென்றதும், குழந்தை "அணிலே, அணிலே, அம்மா இல்லை இப்பொ ஓடிவந்து வத்தலைத்தின்னு" என்று அழைத்தது. அணிலுக்கு அதுதேவை என்றும் அதைத் தான் கொடுக்கவேண்டும் என்றும் தெரிந்தோ தெரியாமலோ நாப்பழக்கமாய்ச் சொல்லிற்று. ஆனால் அது தெரிந்ததாய் தன் குணத்திற்கேற்ப அக்குழந்தையை இதற்காகக் கண்டிக்கவும் கூடும்; மெச்சவும் கூடும்;—இம்மாதிரியான சுபாவத்தைச் செம்மைப்படுத்திப் பக்குவமாகச் செய்வது பெற்றோரது கடமையாகும். இன்னும் இக்காலத்திற் பிறர்செய்வதைப்பார்த்து அப்படியே தாமும் செய்யக் குழந்தைகள் முயலுகின்றன. செருப்புகளை மாட்டிக்கொள்வதும், கற்களைப்பொறுக்கிவைத்துக்கொண்டு சுவாமியென்றும் பூ அர்ச்சனை செய்வதென்றும் விளையாடுவதும், "நான் அம்மா, நீ குழந்தை, நான் ஸ்நானம்பண்ணிவருகிறேன், நீ வீட்டைப்பார்த்துக்கொள், நான் சமைத்துப்போடுகிறேன்" என்று இம்மாதிரி சொல்லிப் பொழுதுபோக்குவதும், பகல்முழுவதும் ஓடியாடி இரவில் நன்றாய் நித்திரைகொள்வதும் அவர்களுடைய முக்கியவேலையாக இருக்கின்றன. இதற்காகவே, குழந்தைகளுக்குப் பொம்மைகளும், மரப்பாச்சிகளும் விளையாட்டுச்சாமான்களும் வாங்கிக்கொடுக்கப்படுகின்றன. இந்தலக்ஷியத்தை நன்றாக உபயோகிக்கும்பொருட்டு நவீனமுறையில்

நாகரிகமனிதர்கள் அவைகளுக்குப் பலவிதரூபமுள்ள அழகான மரக்கட்டைகள் துண்டுகள் முதலியவைகளைக்கொடுத்துப் பிற்காலத்துக்கு உபயோகமுள்ள வீடு கட்டுதல், இயந்திரங்களைக் கூட்டுதல் ஆகிய தொழில்களுக்கு அடிகோலுகின்றார்கள். இவைதவிர, குழந்தைகளுக்குக் கதைகள் கேட்பதில் தீராத ஆசைஉண்டாகிறது. இக்கதைகள் மூலமாய் அவர்களுக்கு நல்லொழுக்கமும் நற்புத்தியும் ஏற்படும்படியாய்ச் செய்யலாகும். அவர்கள் இளம்பருவத்திற் கேட்கும் கதைகள் பிற்காலத்தில் அவர்களுக்கு வெகு உபயோகமாக ஏற்படும். இளம்பருவத்தில் நாம்சொல்லும் விஷயங்கள், பசுமரத்தில் ஆணிபதிவதுபோல், அவர்கள் ஞாபகத்திற் பதியும். நம்முடைய முற்காலத்துத் தாத்தா கதைகள் எல்லாம் இம்மாதிரி ஏற்பட்டவையே. காரணகாரிய வைப்பு, வீரம், உதாரம், நன்னெறி, மனிதசுபாவம் முதலியன இவைகளைக்கேட்பதால் ஏற்படுகின்றன. இவை விநோதமாயும சிரிப்பை உண்டுபண்ணக்கூடியனவாயு மிருக்கவேண்டும். குப்பையைத்தோண்டிய குருவிக்கதையைக் கேட்டிராதவர்யார்? ஒரு ஈ மெய்ம்மறந்து கர்வங்கொண்டு தன்பெயர் யாதெனத் தெரியாது இடர்ப்பட்டு, ஒவ்வொன்றின் இடத்திலும்போய்க் கேட்டுக் கடைசியாக ஒருகுதிரைபரிகசிக்கச்சிரித்ததனால் தெரிந்துகொண்டதாம். அதுகுதிரையைப்பார்த்துக்கேட்கும்போது பின்வருமாறு சொல்லியது:—“குழகுழகன்னே, கன்னின் தாயே, தாயைமேய்க்கிற ஆயா, ஆயன்கையிற் கோலே, கோலைவளர்த்த கொடிமரமே, கொடிமரத்தில்வாழும் கொக்கே, கொக்குவாழும் குளமே, குளத்தில்வாழும் மீனே, மீன்பிடிக்கிறவலையா, வலையன்கையிற் சட்டியே சட்டிவனைகிறகுசவா, குசவன்குண்டில் இருக்கிற மண்ணே, மண்மேலிருக்கும் புல்லே, புல்லைமேய்க்கிற குதிரையே, என்பெயரை எனக்குச்சொல்லமாட்டாயா? இப்படிக் கன்றுமுதற் பதினாலாவதாகக் குதிரையிடம்போய்க் கெஞ்சிக்கேட்டபொழுது, அது சிரித்து ஈ, ஈ, ஈ என்று கனைத்ததாம்—உடனே ஈக்குத் தன்பெயர் ஞாபகம் வந்துவிட்டதாம்—இம்மாதிரிக்கதைகளைக் கேட்கக் குழந்தைகள் வெகு ஆனந்தம் அடைகின்றனர். நர்ஸரி ரைம்ஸ் என்றபாக்கள் ஆங்கிலநாட்டிலு முண்டு.



## சிறுகுழந்தைப்பருவம்.

மூன்றுவயதுக்குமேல் ஐந்துவயதுவரை குழந்தைகளின்குணம் கொஞ்சம் மாறுபடுகிறது. பிறர் உரிமைகள் எவை, தன் உரிமைகள் எவை என்பதை மெல்லத் தெரிந்துகொள்ளுகின்றனர்; கேட்டகேள்விகளுக்கு உரிய பதிலைக்கொடுக்கும் சக்தி ஏற்படுகிறது; பெரியவர்கள் சொல்வதையறிந்து அதன்படி நடக்கமுற்படுகின்றனர்; இடைவிடாமல் இது என்ன? அது என்ன? அது என்ன பிரயோஜனம், இது எங்கேயிருந்து வந்தது? என்றுகேள்விகளைக் கேட்கிறார்கள். பலசமயங்களிற் பெரியவர்கள் புத்திமுட்டிப்போகும்படி கேள்வியைக் கேட்டுவிடுவார்கள்; தனது வயதுக்கு ஒப்பானவர்களுடன் சேர்ந்து விளையாட ஆவலுடையவர்கள்; இவைகளே இச்சிறுகுழந்தைகளின் தன்மையும் அவர்கள் கற்கும் விஷயங்களுமாகும். இவர்களைக் கற்பிப்பவர் யாவர்?

## உபாத்தியாயர்கள்.

இவர்களுக்குக் கல்விபுகட்டிச் சரியானமார்க்கத்திற் செலச்செய்யும் பாக்கியம்வாய்ந்தவர்கள் அவர்கள் தாய்மார்களே. தாயாரின்கதி எப்படியிருக்கிறது? தாய் நல்லபகுத்தறிவுள்ளவளா யிருக்கலாம்; உலகவழக்கங்களி லனுபவம்பெற்றவளாயிருக்கலாம். ஆனால் எழுதப் படிக்கத்தெரியாமலிருக்கும்; மேன்மேலும் தன்னறிவை விசாலிக்கச் செய்யச் சக்தியற்றவர்களாக இருக்கலாம். பிள்ளைவளர்க்கத்தெரியாதவளாக இருக்கலாம். இன்னும் நம்நாட்டிற் பெண்களுக்குக் கல்வி தேவையா இல்லையா என்பதைத் தர்க்கித்துவரும் காலமாயிருக்கிறது! காத்தியாயனியும், கற்கியும், மைத்திரேயியும் மலிந்தநன்னாடன்றோ நம்நாடு!! தற்கால ஆங்கிலப்படிப்பு அவர்களுக்குவேண்டிய அவசியமில்லையாயினும் நம்நாட்டு இதிகாச, புராண, வேதாந்தவிஷயங்களைத் தெரிந்துகொள்வதால் நன்மையேபயக்கும். அந்தோ, அவ்வறிவு நம் பாட்டி, தாய்மார்களோடுபோக, நம்காலத்தவர்களுக்குத் தற்காலத்துப் பொய்க்கதைகளில் தான் கவனம் மிகுதியாகச்செல்லுகிறது. நம் தாய்கள், பாட்டிகள், குழந்தைகளுக்குத் தேகஅசௌக்கியமாயிருந்தால்,

உடனே கைம்மருந்துகொடுத்துக் குணப்படுத்துவார்கள். நம்காலத்துப் பெண்களுக்கு அதுதெரியாது; உடனே டாக்டரிடம்போகவோ, அல்லது ஆஸ்பத்திரிக்குப்போகவோதான் வேண்டும். தற்கால வழக்கப்படி தாய்மார்கள் காபிமுதலியன அருந்திப் பட்டுச்சேலைகள் முதலியன கட்டிக்கொண்டு உடம்புதுர்ப்பலமாக இருக்கிறார்கள். மிகுந்தபணமுள்ளவீடாயிருந்தால், குழந்தைகள் எப்பொழுதும் ஒரு ஆயாவிடம் அல்லது வேலையாளிடமிருக்கிறது; உத்யோகஸ்தர் வீடாயிருந்தால் சதா ஒரு வேலைக்காரனே குழந்தைகளைச்சுமந்து பழக்கிவருகிறான்; நடுத்தரவாழ்விலிருப்பவர்களாயிருந்தால், தாய்மார்களுக்குக் குழந்தையை எடுத்துவைத்துக்கொள்ள நேரமே அகப்படாது; வீட்டுவேலைசெய்யவேண்டியிருக்கும். எளியவர்களாயிருந்தாலோ, கேட்கவேண்டியதில்லை. உத்தியோகஸ்தனும், நடுத்தரவாழ்விலுள்ளவனும் எளியவனும் குடும்பசம்ரக்ஷணைக்காகப் பாடுபட்டுச்சம்பாதிப்பதில்தான் தன்காலத்தைச் செலவிடமுடியும். பணக்காரனுக்கோ, தன்மிராசு அல்லது கிராமக்கணக்குவழக்குகளை நிதானிப்பதற்குத்தான் சாவகாசமிருக்கும். ஆகவே சிசுக்களையும் சிறுகுழந்தைகளையும் பயிற்றுவிப்பவர்கள் வேலைக்காரர்களும் அயற்குழந்தைகளுமே. இது கொடுமையினும் கொடுமை! இதற்கு நிவர்த்தியும் உண்டென்று எனக்குத் தோன்றவில்லை. ஆதலின் தற்காலத்திய நம் குழந்தைகள் வீடுகளிற் சரியானபயிற்சியின்றி, வீணேவளர்ந்துவருகிறார்கள்.

## குழந்தைப்பருவம்.

ஐந்தாவதுவயதில் குழந்தைகளுக்குச் சாதாரணமாக அக்ஷராப்பியாசம் செய்துவைக்கிறார்கள். இவர்கள் முதலில் எழுத்துக்கள், வார்த்தைகள் வாக்கியங்கள் கற்றுக்கொள்வதிலும், கணக்குப்போடுவதிலும், சித்திரம் வரைதலிலும், இயற்கைச்சம்பவங்களை உற்று நோக்கி அறிவதிலும் தம் காலத்தைக் கழிக்கிறார்கள். வழிகாட்ட ஒருவருமில்லாது வீட்டில் இடர்ப்பட்டதுபோல, இப்பொழுது கஷ்டப்படுவதில்லை. ஒவ்வொருவகுப்புக்கும் ஒரு உபாத்தியாயர் உண்டு, அறைஉண்டு; கட்டில் நாற்காலி உண்டு, எழுதுகோல், கடிதங்கள், புஸ்தகங்கள்உண்டு. தாய்தந்தையர்களும் தம் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பியாய்விட்டதென்று திருப்தியடைந்து



விடுகிறார்கள். இதுமுதல் அவர்களது கடமையும் முற்றிப்போய்விட்டதென்று நினைக்கிறார்கள். ஆனால் கல்வியில் ஏற்றமடைந்ததற்குத்தகுந்தபடி வருவாய் அதிகப்படாது இருக்குமிக்காலத்தில், பெற்றோர்கள் படிப்பின் செலவையுத்தேசித்து வருந்தி "பள்ளிக்கூடத்தில் இது சொல்லிக்கொடுத்தாற்போதாதா, அது சொல்லிக்கொடுத்தாற்போதாதா, இவ்வளவுபுஸ்தகம் எதற்கு, எத்தனைநோட்டுப்புத்தகங்கள், இதெல்லாம் உபாத்தியாயரின்கொடுமை" என்று சிந்திக்கத்தொடங்கிவிட்டார்கள். இப்படியாக, ஒன்பது வயதுவரையிலும் குழந்தைகள் பிரதமப்பள்ளிகளிற் படித்துவருகிறார்கள். ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்துகிறவன் ஒரு சிறைச்சாலையை அடைக்கிறவனாகிறான். ஆகையாற் பள்ளிக்கூடங்கள் எவ்வளவு புதிதாக ஏற்பட்டாலும் அது ஒருநாளும் மிகுதியாகாது.

## உபாத்திமைத்தொழிற்பழக்கமும் (டிரெயினிங்கும்) உபாத்தியாயர்களும்.

குழந்தைகளின் இளம்பருவத்தையும், இளகும்மனத்தையும், களங்கமற்ற இயற்கையையும் உத்தேசித்தால், அவர்களைப்பழக்கிப் படிப்புச்சொல்லிக்கொடுப்பதற்கு யோக்கியதையுள்ளவர்கள் சாந்தமூர்த்திகளாகவும் பழுத்த ஞானமுடையவர்களாகவும் குழந்தைகளின் சுபாவத்தை நன்றாயறிந்தவர்களாகவுமிருக்கவேண்டும் என்று விளங்கும். ஆனால் பிரகிருதத்தில் அப்படி ஒருவரும் அப்பள்ளிகளில் அமருகிறதில்லை. சாதாரணமாக வருகிறவர்களுக்குக்கூடப் போதிய பணம் கொடுப்பதற்கு அகப்படுவதில்லை. இப்பள்ளிகளுக்கு வேலைக்கு வருகிறவர்கள் பெரும்பாலும் மேல்வகுப்புக்கு மாற்றப்படாதவர்களும், மேல்வகுப்பிற்சேர்ந்து வாசிக்க வலிமையற்றவர்களுமாகவேயிருக்கிறார்கள். ஆயிரம் பேர்வழிகளைக்கொன்றவன் அரைவைத்தியன் என்பார்கள். நமது ஆசிரியர்கள் தொடக்கத்திற் சில பள்ளிகளிலிருந்து அனுபவம்பெற்றால்தான், பள்ளிக்கூடங்களைப் பரிசீலனை செய்பவர்களால் உபாத்திமைத்தொழில் பழக்கும் (டிரெயினிங்) பள்ளிக்கூடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவே முதல் முதலாகக் குழந்தைகளுக்குச்சொல்லிக்கொடுப்பது எத்தகைய உயரிய அரியவேலையென்பதை அறியாதவர்களே பிரதமப்பள்ளிகளில் ஆசிரிய

ராக நியமனம் பெறுகிறார்கள். அவ்வாறுநியமனம்பெற்றவர் சில ஆண்டுகள்சென்றபின்னர், உபாத்திமைத்தொழில்பழக்கும் (டிரெயினிங்) பள்ளிக்கூடங்களிற்போய்க் குழந்தைகளைப்பயிற்றுவிக்கும் வித்தையைக்கற்றுவருகின்றனர். இவர்கள் அன்னத்தையும் ஆவையும்போலக் கற்றுவருகின்றனரோ? அல்லது நிலத்தையும் கிளியையும்போலக் கற்றுவருகின்றனரோ? அன்றேல், இல்லிக்குடம், ஆடு, எருமை, பன்னாடை இவைபோன்று கற்றுவருகின்றனரோ? என்பது அப் பள்ளிக்கூடத்துத் தலைமையுபாத்தியாயரைப்போன்றவர்களுக்குத்தான் நன்றாய்த்தெரியும். ஆனால் ஒன்று எல்லாருக்குந்தெரியும். அது அவர்களின் வேலையின்உயர்வுக்கேற்ப அவர்களுக்குச் சம்பளம் கொடுபடவில்லையென்பதாம். வருகிறசம்பளத்தில் தானும், தன் குடும்பத்தாரும் வயிறுநிறையச்சாப்பிடுவதா? அல்லது குழந்தைகளின் கல்யாணம், படிப்புமுதலியவைகளை உத்தேசித்துப் பணம் மீத்துவைப்பதா? அல்லது பின்னால் திட்டமாய் ஏற்படும் வயோதிககாலத்தை உத்தேசித்துப் பணம்சேர்ப்பதா? இல்லை, தன் அறிவை விசாலப்படுத்துவதற்காகவேண்டிய புத்தகங்களைவாங்கிப் படிப்பதற்காவது, அல்லது மற்ற இடங்களுக்குச்சென்று அங்குள்ள அபூர்வ, விசேஷ விஷயங்களைக்கண்ணுற்று வருவதற்காவது, செலவழிப்பதா? உபாத்தியாயர்களின்பொருட்டு அவர்களுக்குவேண்டியபுஸ்தகங்களைக் கூட வாங்கிவைக்கத் திறமில்லாத பள்ளிக்கூடங்கள் மலிந்தகாலமாகவன்றோ இக்காலம் இருக்கிறது!! பள்ளிக்கூடத்தலைமையுபாத்தியாயர்களும், நடத்துபவர்களும் புத்தகசாலையிற் பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கு அத்தியாவசியமாகவேண்டிய ஒரு சில புத்தகங்களை வாங்கிவைப்பதைத்தவிர, உபாத்தியாயர்களின் தேவையை உத்தேசித்து அவர்களுக்குத்தகுந்த புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வரவழைக்கிறார்களில்லை. அப்படியாராவது செய்திருப்பினும் அங்குள்ள உபாத்தியாயர்கள் அவைகளை உபயோகிப்பதுமில்லை. உற்சாகமும் ஊக்கமும் இருவருக்கும்வேண்டும். அப்படி ஒற்றுமையாய் உழைத்தால்தான், பள்ளிக்கூடங்களுக்குச்செல்லும் சிறுவர்கள் லாபமடைவார்கள். எல்லாம் பணமில்லாக்குறையாலேதான் வருகின்றன. பிரதமக்கல்வி மற்றெல்லாக்கல்விக்கும் அடிப்படையாக இருப்பதாலும், எல்லா ஜனங்களுக்கும் இன்றியமையாததாகையாலும், அதன்



பொருட்டாகச் செலவழிக்கவேண்டியபொருளுக்கு ஒருகுறைவும் வராமற் பாதுகாத்து, அதைச் சரிவரநடத்துவது எந்த ராஜாங்கத்தாருக்கும் முதற்கடமையாகும். பிரதமக்கல்வியைப்பயிலும் குழந்தைகளே பின்னாட்களில் தேசத்தின் முன்னேற்றத்தைக்கருதி அரசு நடத்துபவர்களாய் வருவார்கள். ஆதலின் அவர்களை வெகுஜாக்கிரதையாகக் கவனித்துவரவேண்டும்.

## குழந்தைகளின் மனோதத்துவம்.

மேல்நாடுகளில் இப்பிரதம சிக்ஷைக்காக வரும் குழந்தைகளின் மனோதத்துவத்தைப் பரிசீலனம் பண்ணுவதற்காக அனேக சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன; அவைகளில் அனேகர் வெகு உற்சாகத்துடன் உழைத்துத் தங்கள் ஆராய்ச்சிகளை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டுகின்றனர்; பத்திரிகைகளிற் பிரசுரம் செய்கின்றனர். இம்மாதிரியாக நம் தமிழ்நாட்டிலும் பல உபாத்திமைச் சங்கங்கள் ஏற்பட்டுத் தக்கபடி உழைத்துத் தமிழ்மக்களின் குழந்தைகளின் மனோபாவமும் மனோதத்துவமும் எம்மாதிரி இருக்கின்றன என்பதை அறிய முயலவேண்டும். பிறநாட்டுப் பத்திரிகைகளைப்படித்து அவர்கள் முறையை நம் ஆராய்ச்சிக்கு எவ்வளவு தூரம் துணைக்கொள்ளலாமோ அவ்வளவு தூரம் எடுத்தாளவேண்டும். அதற்கு வேண்டிய சௌகரியங்களைப் பள்ளிக்கூட அதிகாரிகளிடமிருந்துபெறவேண்டும். ரூசோ, பிரீபல் முதலியவர்கள் எழுதிய குழந்தைகளின் மனோதத்துவ நூல்களைக்கற்கவேண்டும். புதிதாகச் சமீபகாலத்தில் மாண்டசாரி முறை என்று ஒன்று உலாவுகிறது. அது இடாலி தேசத்தில் உண்டாகி அமெரிக்காவில் மிகுதியும் பரவிவருகின்றது. இங்கிலண்டு தேசத்திலும் சிறிது சிறிது இது பரீக்ஷிக்கப்பட்டுவருகிறது. நம் நாட்டில் இன்னும் இது சிலபள்ளிக் கூடங்களுக்குக்கூடத் தெரிந்தபாடில்லை. நாகரிகமிம்மம் பாட்டில் புதியவிஷயங்கள் ஐரோப்பாவில் ஜெர்மனிமுதலிய நாடுகளில் உற்பத்தியாகி, பிறகு அமெரிக்காவில் பரவி, அதன்பின்னர் இங்கிலண்டுக்கு வருமென்றும் அதற்கப்புறமே நம் நாட்டுக்கு அவை வருமென்றும் சொல்லுவார்கள். இந்தக்காலத்துக்குள் முதலில் சொல்லிய தேசங்களில் இவை மாறுபாடடைந்துவிடுகின்றன. ஆகவே நாம் மறுபடியும் புது முறைகளைப்பற்றிக்

கேட்பதற்குப் பல்லாண்டுகள் செல்லும். தற்காலத்தில் நம்மவர்கள் பேசிக்கொள்ளும் கிண்டர்கார்டன் என்பதும் இப்படி வந்ததே. கிண்டர்கார்டன் என்பவை ஜெர்மன்பதங்கள் - இத்தொடருக்கு "குழந்தைகளின் தோட்ட" மென்று அர்த்தம் இது சென்ற நூற்றாண்டின் மத்தியகாலத்தில் ஏற்பட்டது - நமகிராமாந்தரப் பள்ளிக்கூடங்களில் இது இன்னும் ஒரு நவீனமாகப் பாவிக்கப்பட்டு வருகிறது. மாண்டசாரி என்ற பெயரையே அனேகர் கேள்விப்பட்டதில்லை. முக்கிய முனிசிபல் நகரிலுள்ள ஒரு ஹைஸ்கூலில் அம்முறையைப்பற்றிய புஸ்தகங்கள் ஏதாவது அகப்படுமா என்று கேட்டதற்கு, பெயரே தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். இவற்றால் நான சொல்லுவதென்னவென்றால், முன்னேற்றத்தில் நாம் பின்னிற்காமலிருக்க வேண்டுமானால், பிறநாட்டுப்பத்திரிகைகளை வாசித்து, அவர்கள்முறைகளை ஆய்ந்தறிந்து, நமக்குச்சாதகமா யுள்ளவைகளை எடுத்துக்கொண்டு, நம்தேவைக்குத்தக்கபடி புதுமுறைகளைக் கையாளவேண்டுமென்பதேயாம்.

## உபாத்தியாயர்களின் நிலை.

பிரதமபாடசாலை உபாத்தியர்களுக்கு இன்னும் ஒருகஷ்டமிருக்கிறது. அவர்களிடம் வரும் குழந்தைகள் பற்பலதாரதம்யங்களை உடையன. பணக்காரன் வீட்டுக்குழந்தைகளும் எளியவன் வீட்டுக்குழந்தைகளும் உத்யோகஸ்தன் வீட்டுக்குழந்தைகளும் அங்கேபடிப்பதற்கு வருகிறார்கள். சிலர்புத்திக் கூர்மையுள்ளவர்களாக விருக்கலாம்; சிலர்புத்திமட்டாக உள்ளவர்களாயிருக்கலாம்; சிலர்புத்தியில்லாதவர்களாக விருக்கலாம். எளியவர் வீட்டுப்பிள்ளைகள் முழு ஆகாரமற்றவர்களாயிருக்கலாம், ஒருவகுப்பில் ஒருபாத்தியாயருக்கு இப்படியாக இருபத்தைந்து குழந்தைகளும் இருக்கலாம். இவர்களுக்கோ பொதுப்படையாகப் பாடங்களைக் கற்பிக்கவேண்டும். தலைமையுபாத்தியாயருக்கோ குறித்தகாலத்தில், ஏற்படுத்தியிருக்கிற பாடங்களை முடித்துக் காட்டவேண்டும். வகுப்புபாத்தியாயரோ சாதாரணப் படிப்புள்ளவராய்த்தானிருப்பார். பாவம், அவர் வேலைமிகவும் கஷ்டமானது. குழந்தைகளின் தாரதம்மியத்தை உணர்ந்து அவரவர்களுக்கு உரித்தான முறையை அனுசரித்துப்போதனை செய்ய வேண்டும்.



## தேக ஆரோக்கியப்பரிசீலனம்.

இவர்களின் தேகக்கூறுகளைப் பரிசோதித்து, அப்பொழுதுக்கப்பொழுது ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையறிந்து அதற்குத் தகுந்தபடி சிகிச்சைசெய்ய வைத்தியர்கள் ஏற்படவேண்டும். மற்றநாகரிக நாடுகளில் இவ்வழக்கம் அனுபவத்திலிருக்கிறது. நம்நாட்டிலும் இதைப்பற்றி இப்பொழுது பேசிவருகிறார்கள். வைத்தியரின் துணையிருந்தால் உபாத்தியாயரின் வேலை வெகு சுலபமாக ஆய்விடும். ஒருசிறுவன் புத்திசாலியாய் வாசித்து வந்தான். திடீரென அவன் மட்டியாய்த்தோன்றினான். உடனே அச்சிறுவன் தந்தை அவனை வைத்தியரிடம் அனுப்பிப் பரீக்ஷித்தார். அச்சிறுவனுக்குத் தொண்டையிலும் காதிலும் ஏதோசீக்கு இருப்பதாய்த்தெரிந்தது. உடனே வேண்டிய சிகிச்சையும் நடந்தது மறுபடியும் அவன் புத்திசாலியாய்ப் படிக்க ஆரம்பித்துவிட்டான். ஆகவே குழந்தைகளின் ஆரோக்கியத்தைக் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது. பம்பாயில் Childrens Health & welfare (குழந்தைகளின் தேகாரோக்கியத்தைக் கவனித்தற்கேற்பட்ட) சங்கத்தின் மூலப்பொருளை உத்தேசித்து, அவர்கள் தங்களுக்கு நன்கொடையாகக்கிடைத்த நல்முத்துமாலைகளை ஒரு பெரிய லாட்டரியாக விநியோகிக்கக் கூட்டினார்கள். அதில் அவர்களுக்கு ஏழுலக்ஷ ரூபாய்க்குமேல் பணம் பிரிந்ததாம். ராஜாங்கத்தாரும் இது விஷயத்தில் நன்முயற்சி எடுத்துவருகிறார்கள். நமது ராஜதானியிலும் இப்படிப்பட்ட சங்கம் சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது அதற்குக் கிளைச்சங்கங்களும் தோன்றியிருக்கின்றன. எல்லாப்பள்ளிகளிலும் (Medical inspection) (வைத்திய பரிசோதனை) சிறுவர்களுடைய தேகப்பாதுகாப்புக்காகச் செய்யும் முயற்சியில் சர்க்கார் உதவிபண்ணுவதாக வாக்களித்திருக்கிறார்கள். இவையெல்லாம் நமநற்காலத்துக்கே சர்வகலாசங்கப்பட்டம் பெற்றவர்களெல்லாம் இது விஷயத்தில் சிரத்தைகாட்டிப், பிறருக்கு இதன் நன்மைகளை எடுத்துச்சொல்லித் தனவந்தர்களைப் பணம்பெரிதும் உதவச்செய்தும் தாங்களும் பிறரும் இச்சங்கங்களுக்கு அங்கத்தினராயமர்ந்தும் உழைக்கவேண்டும்.

## போதனைமுறை.

எந்தப்பருவமாயினும் குழந்தைகளைப் பரிபாலிப்பதில் முக்கியமாய்ப் பிரம்பினாலடித்தல் அதட்டுதல், முதலிய பயங்கரமான வழிகளை அனுசரிக்காமல், அவர்களை அன்பாய் ஆதரிக்கவேண்டும். நம் நாட்டில் "அடியாதமாடுபணியாது" என்று ஒருபழமொழி வழங்குகிறது. அது மாடுகள் சம்பந்தப்பட்ட மட்டிலும் உண்மையே. குழந்தைகள் மாடுகளல்ல. குழந்தையினுடைய உயரிய புத்திசாலித்தனத்துக்கு உவமையானது வேறொன்றுமில்லை. இன்னும் "அடித்து வளர்க்காதபிள்ளையும் முறுக்கிவளர்க்காத மீசையும் செவ்வையாகா" என்றும் கல்வி என்கிற பயிருக்குக் கண்ணீர் என்கிறமழைவேண்டும். என்றும் வேறு சிலபழமொழிகளும் உலவுகின்றன. ஒழுக்கத்தில் பொறுக்கமுடியாதபடி தவறிநடந்தால்தான், தண்டனைசெய்ய ஆலோசிக்கலாமேதவிர, மற்றப்படி தண்டிக்கக்கூடாது. "Spare the rod, spoil the child" அதாவது பிரம்பை மீத்துக் குழந்தையைப்பாழாக்குதல் என்பது முற்காலத்திய வழக்கம். இப்பொழுது "Spoil the rod & spare the child" (அதாவது குழந்தையை மீத்துப்பிரம்பைப் பாழாக்கவேண்டும்) என்பதே நீர ஆராய்ந்த கொள்கையாக இருக்கிறது இதுவே சரியானமுறை..

## சில எண்கள்.

இனிக்குழந்தைப் படிப்பின் சம்பந்தமாக நம்ராஜதானியில் கிடைக்கக்கூடிய சில எண்களைப்பற்றி விசாரிப்போம். நம்ராஜதானியில் 279 பட்டணங்களும் 53835 கிராமங்களுமிருக்கின்றன. ஜனத்தொகை 20382955 ஆண்களும் 21022449 பெண்களுமிருக்கிறார்கள். அதாவது ஆறுலக்ஷத்துக்கு மேல் பெண்கள் மிகுதியாகவிருக்கிறார்கள். 32009 பிரதம பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இன்னும் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு பிரதமபள்ளிக்கூடம் கூட ஏற்பட்டபாடில்லை. கட்டாய இலவச ஆரம்பப்படிப்பு அவசியமென்றும் மிகுந்தபயனைத் தரக்கூடியதென்றும், அது இல்லாதிருத்தல் இந்தியநாகரிகத்துக்கும ஆங்கில நாகரிகத்துக்கும் ஒருபெரிய குறையென்றும், பத்துவருஷங்களுக்குமுன் காலஞ்சென்ற கோபாலகிருஷ் கோக்கலே பலவிதமாக எடுத்துரைத்து, அதை அமுலுக்குக்



கொண்டுவரவேண்டுமென்று ஆலோசனை சபைகளில் மன்றாடினார். முன்னைவிட இப்பொழுது அதிகப்பள்ளிக்கூடங்களும் உபகரணங்களுமிருக்கின்றன; ஆயினும் இது இன்னும் சமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்தமாதிரிதானிருக்கிறது. சென்றவருஷம் மார்ச்சுமீ 31உ யன்று பிரதமபள்ளிக்கூடங்களில், சர்வகலாசங்கப்பட்டம் பெற்றவர் 10 பேர்களும், இருபத்திரண்டாயிரத்து எழுபத்துமூன்று உபாத்திமைப்பழக்கம் பெற்றவர்களும் பட்டமும் உபாத்திமைப் பழக்கமும் பெறாத 35528 பேர்களும் உபாத்தியாயர்களாயிருந்தார்களாம். அதாவது நூற்றுக்கு அறுபதுக்கு மேற்பட்டவர்கள் குழந்தைகளின் படிப்பு எப்படிப்பட்டது என்று தெரியாதவர்களேயாம். இது மிகவும் பரிதபிக்கத்தக்கது. இன்னும் ஐந்துக்குமேல் ஒன்பது வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள் 769118 பேர்களே வாசித்துக்கொண்டிருந்தனராம். நடுத்தரப்பாடசாலை, காலேஜ்கள் முதலிய இடங்களில் வசித்தவர்கள் உள்பட மொத்தம் 1566552 வித்தியார்த்திகளே யிருந்தனராம். அதாவது ஒரு ஜனத்தொகையில் நூற்றுக்கு இருபத்தைந்துபேர் பள்ளிக்கூடங்களுக்குப்போகும் வயதுள்ளவர்களாக இருப்பார்கள் என்று சொல்வது ஒருகொள்கை அதன்படி பார்த்தால் சாதாரணமாகப் பள்ளிக்கூடங்களில் இருக்கவேண்டியவர்களில் நூற்றுக்குப் பதினைந்துபேர்களே படித்துவருகிறார்கள். இதுவும் மிகவும் விசனிக்கத்தக்க விஷயமாகவிருக்கிறது. தற்காலத்தில் நம் நிலையைச் செம்மைப்படுத்தி, உலகத்து நாகரிக சமூகத்தார்களின் முதல்வரிசையில் ஒரு ஸ்தானம் பெறுவதற்குத் தமிழர்களனைவரும் பாடுபடவேண்டும். இம்மாதிரி செய்வதில் நமக்கு விருப்பம் இருக்கிறது என்பதைக்காட்டி ஊக்கத்துடன் முயற்சித்து வந்தால், நம்மையாளும் காருண்ணிய கவர்ன்மெண்டாரும் நம்முடன் ஒத்துழைத்து நாம் சீர்பெறச் செய்வார்கள். வேண்டிய வேண்டியாங்களிக்கும் எல்லாம் வல்லஈசன் நமக்கு அருள்புரிவாராக.

K. C. வீரராகவையர்,
M. A., L. T., F. C. S.,
சர்க்கார்க்கலாசாலை கும்பகோணம்.

## "மறுபிறப்பு" உண்டென்பது இந்துமதக்கொள்கையா? அல்லது புத்தகமதக் கொள்கையா?

நமது தென்னாட்டு சங்க மருவிய பல நூல்களில் "மறுபிறப்பு" உண்டென்று கூறியிருப்பதாக உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதை யாவருமறிந்திருக்கிறார்கள் நமது "சைவமதம்" "வைஷ்ணவமத" மாகிய இந்து மதஸ்தரும் "மறுபிறப்பு உண்டென்றே விசுவசித்து வருகிறதையும் நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம். ஆனால், ஆதியில் கடவுளாலேயே தரப்பட்ட ஆதிநூலாகிய 'இருக்கு' வேதமென்னும் நூலில் மறுபிறப்பைப்பற்றி சொல்லியிருக்கிறதா வென்று நமது தென்னாட்டின் தென்கலை, வடகலைகளிலும், மேனாட்டுக் கலையிலும் மிகுந்த தேர்ச்சியடைந்து மகாபண்டிதர்களெனப்பட்டம் பெற்ற யாவராயினும் ஆராய்ச்சி செய்திருப்பாராயின் அவ்வாராய்ச்சியை இப்பத்திரிகையின் மூலமாய் வெளியிடும்படி பிரார்த்திக்கின்றேன். ஏனெனில் உண்மையையறிவது கற்றோர் கடனன்றோ.

பங்காளதேசத்தில் வடகலையில் வல்லுனராகிய "சிஷீர் குமார் கோஸ்" என்பவரால் பிரசுரிக்கப்பட்டுவந்த "The Hindu Spiritual Magagine" என்னும் பத்திரிகையில் மேற்சொன்ன ஆதிநூலாகிய "இருக்கு" என்னும் வேதநூலில் "மறுபிறப்பைப்பற்றிப் பேசவேயில்லை யென்று எழுதிவந்ததை அமெரிக்கா தேயத்துக்கலைவல்லோரெல்லாம் கண்ணுற்று மிகுந்த சந்தோஷமடைந்து இவ்வுண்மையை விசாரிக்கப்புகுந்து மேற்சொன்ன பத்திராதிபரைக்கேட்க, அவர் மறுபிறப்பைப்பற்றி இருக்குவேதத்தில் யாதொன்றும் சொல்லவேயில்லை யென்று அந்த அமெரிக்கா நாட்டின் கலைவல்லார்களுக்கு வெகுவிரிவாயெடுத்துக்காட்டியிருக்கிறார்.

அப்பத்திராதிபர் சொல்வது உண்மையாயின் நமது இந்துமதஸ்தர் மறுபிறப்பு உண்டென்று அனுசரித்தல் தகுமா? "மறுபிறப்பு" உண்டென்று வாதித்தது சமணமதமன்றோ? ஆதிசிவமதத்திலும் வைஷ்ணவமதத்திலும் "மறுபிறப்பு" உண்டென்னுங்கொள்கைவந்து குடிகொண்டதெவ்விதம்? நமது இந்தியநாட்டுக் கலைவல்லார்களில் யாரேனும் இதன் உண்மையை விளக்கி இப்பத்திரிகையில் பிரசுரிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

ச. உடையார்.

இந்துநேயன்.

---



ஓமுதனாற்பெயர்

ஓரையென்பதுமாதராடலுங்
கலன்களுங்கூட்டமுமிராசியுநாற்பேர் உசு

ஓமுதனாற்பேர்முற்றும்

ஓமுதலைம்பெயர்

ஓரியேமுதுநரியுங்கரியோர்
வள்ளலான்மயிர்முகவெனவுமைம்பேர் உஎ

ஓமுதலைம்பேர்முற்றும்.

ஓமுதலறுபெயர்

ஓங்கலென்பதுமலையுமூங்கிலும்
இபமுமரக்கலத்துடனேபடும்
உயரமுமென்றேயோதுமறுபெயர் உஅ

ஓதியேபெண்மயிருப்பூனையும்
ஓந்தியும்வெற்போடறிவுமெகினமும் உகூ

ஓடைதானேகிடங்குநீர்நிலையும்
மலையின்வழியுமிபமுமோர்தருவும்
மணிப்பட்டமுமெனவகுக்குமறுபேர் ஙய

ஓமுதலறுபேர்முற்றும்.

ஓமுதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-எஎஎ.

ஔமுதலொருபெயர்

ஔவையென்பதுதாயெனலாகும் க
ஔவியமேமனக்கோட்டமாகும் உ

ஔமுதலொருபேர்முற்றும்.

ஆகச்சூத்திரம்-எஎக

புலியூர்ச்சிதம்பரரேவணச்சித்தன்
சொல்லுமகராதிநிகண்டினிற்றொடுத்த
வழுவிலகராதிப்பெயர்முதற்றொகுதி
யெழுநூற்றெழுபத்தாறுசூத்திரமே.

முதலாவது அகராதிப்பெயர்த்தொகுதிமுற்றும்.

# இரண்டாவது ககராதிப்பெயர்த்தொகுதி.

பட்டிகையன்பாற்பணிந்தருச்சனைசெய்
பட்டீச்சுரன்றன்பதமலர்வாழ்த்திக்
ககராதிப்பெயர்த்தொகுதிசட்டுரைப்பாம்.

## கம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

### கம்முதலொருபெயர்

கங்கணமென்பதுகடகமாகும் க
கங்கமேபருந்தாமெனவிசைப்பர் உ
கசற்பமென்பதுமஞ்சளாகும் ௩
கச்சரிதானேநெருப்பெனலாகும் ௪
கஞற்றலேபொய்யாமெனவிசைப்பர் ௫
கஞ்சனமென்பதுகண்ணாடிப்பேர் ௬
கடலகமேயூர்க்குருவியாகும் ௭
கமடந்தானேயாமையென்றிசைப்பர் ௮
கராவென்பதுவேமுதலையாகும் ௯
கம்பில்தானேயப்பமாகும் க0
கயமுனியென்பதுகுஞ்சரக்கன்றாம் கக
கயிரைதானேசுற்றமெனலாம் கஉ
கபோதமேபுறவாமெனப்படுமே க௩
கரவதமென்பதுகாக்கையின்பெயரே க௪
கரடிதானேமுழ்த்தெனலாகும் க௫
கண்ணுளரென்பதுகூத்தராகும் க௬
காவையேகூத்தென்றிசினோரே க௭
கருப்பையென்பதுகாரெலியாகும் க௮
கருவைதானேவரகுவைக்கோலாம் க௯
கருமயிரென்பதுகரடியின்பெயராம் உ0
கடிப்பகைதானேகடுகெனவிசைப்பர் உக
கத்தையென்பதுகழுதையின்பெயராம் உஉ
கத்தியமேற்புடைவையென்றாகும் உ௩
கந்தற்பனென்பதுகாமன்பேராம் உ௪
கருமபாகையேவேதநூற்பொருளாம் உ௫
கலமரென்பதுவேடாணராகும் உ௬
கலரென்பதுகீழ்மக்களாகும் உ௭
கலினமேகடிவாளமெனப்படும் உ௮
கலுழனென்பதுகருடனாகும் உ௯
கல்விதானேசகடமாகும் ௩0
கல்லாரேகீழ்மக்களாகும் ௩க
கல்லோலமென்பதுநீர்த்திரையாகும் ௩உ
கலவகமென்பதுகாக்கையெனலாம் ௩௩
கபாடமேகதவாமெனப்படுமே ௩௪
கவிரென்பதுவேமுருக்கெனலாகும் ௩௫
கவுரியரேபாண்டியரெனலாகும் ௩௬
கவினென்பதுவேயழகெனப்படுமே ௩௭
கவுண்டர்தானேபுலையராகும் ௩௮
கண்டியரென்பதுபாணராகும் ௩௯
கவடியேபலகறையெனவிசைப்பர் ௪0
கறையடிதானேயானையாகும் ௪க
கவுரவரென்பதுகுருகுலத்தரசர் ௪உ
கவையந்தானேகாட்டாவாகும் ௪௩
களக்கரென்பதுபுலையர்பெயரே ௪௪
களிமமேயெலியாமெனக்கருதுவர் ௪௫

கலிகைதானேபூமொட்டாகும் ௪௬

களமரேயுழவோரெனப்படுமே ௪௭

கறுழேகுதிரைவாய்க்கருவியாகும் ௪௮

கனகமென்பதுபொன்னெனலாகும் ௪௯

கன்னிகாரமேகோங்கெனலாகும் ௫௦

கண்ணுகமென்பதுகுதிரையின்பேரே ௫௧

கன்னுவரேகன்னரெனப்படுமே ௫௨

கதிரமென்பதுகருங்காலிப்பேர் ௫௩

கன்னகமென்பதுகன்னக்கோலே ௫௪

கம்முதலொருபேர்முற்றும்.

## கம்முதலிருபெயர்

கஞ்சிகையேதிரையாடையிருபெயர் ௫௫

கறியேமிளகுங்கறியுமிருபெயர் ௫௬

கடறென்பதுவேவழியுங்காடும் ௫௭

கருமானேகருமானும்பன்றியும் ௫௮

கடலேபசுவுங்கடலுமாகும் ௫௯

கம்மியரென்பதுதொழில்செய்வோர்க்குங்
கம்மாளர்க்குங்கருதிடுமிருபெயர் ௬௦

கம்புள்தானேசம்பங்கோழியும்
*சம்புமெனவேசாற்றுமிருபெயர் ௬௧

கயினியென்பதுவேயத்தநாளும்
கைம்பெண்ணெனவுங்கருதுமிருபெயர் ௬௨

கதம்பமேபலபூவுங்கடம்பும் ௬௩

கரண்டமென்பதுநீருறைகாக்கையும்
கமண்டலமெனவுங்கருதுமிருபெயர் ௬௪

கரோடிகைதானேசிரசுமாலையும்
பெருஞ்சூட்டெனவும்பேசுமிருபெயர் ௬௫

* சங்குமென்பது பிரதிபேதம்.



கலாபமேயரைப்பட்டிகைபீலிகை ௬௬

கனவட்டமென்பதுபாண்டியன்குதிரையும்
புரவியுமெனவேபுகலுமிருபெயர் ௬௭

கலவைதானேசேறுஞ்சாந்தும் ௬௮

கலுழியென்பதுகாட்டாறுடனே
கலங்கியநீருமெனவிருபெயரே ௬௯

கவந்தமேநீர்குறைத்தலையிருபெயர் ௭௦

கவடேயானையைக்கட்டிடுகயிறும்
கப்புமெனவேயிருபெயர்கருதும் ௭௧

கம்பேசங்குங்கம்புமிருபெயர் ௭௨

கழுந்தியென்பதுமுத்துங்கழையும் ௭௩

களிற்றுயிர்தானேகுழவிப்பேரும்
தூம்புமெனவேசொல்லுமிருபெயர் ௭௪

களேபரமேபிணமுடலெனவிருபெயர் ௭௫

கறடேபொன்னுங்கறடுமாகும் ௭௬

கப்பணமென்பதுகைவேலுடனே
யிரும்பினிற்செய்திடுநெருஞ்சின்முள்ளுமாம் ௭௭

கன்றேவளைசாமுதலாயினவும்
கைவளையெனவுங்காட்டுமிருபெயர் ௭௮

கன்றுதலேகன்றுதலுமிருதலும் ௭௯

கங்கேகருந்தினைவரம்புமிருபெயர் ௮௦

கண்டலென்பதுமுள்ளியுந்தாழையும் ௮௧

கதழ்வென்பதுவேசிறப்பும்வேகமும் ௮௨

கலாமேகொடுமையுஞ்சினமுமாகும் ௮௩

கயிலென்பதுவேபூணின்கடைப்புணர்வும்
பிடர்த்தலையெனவும்பேசுமிருபெயர் ௮௪

கயவேமென்மையும்பெருமையுமாகும் ௮௫

கந்தருவமென்பதுபுரவியொடிசையாம் ௮௬

கவிகையேகுடைகொடையெனவிருபெயர் அஎ

கரடமென்பதுமதம்பொழிகவுளும்
காக்கையுமெனவேகருதுமிருபெயர் அஅ

களவேவமையலுந்துயிலுமாகும் அகூ

கந்தனென்பதுமுருகனும்* புத்தனும் கூ0

கனையேயொலியுஞ்செறிவுமாகும் கூக

கம்பமென்பதுநடுக்கமுந்தம்பமும் கூஉ

கலித்தல்தானேயெழுச்சியுமொலித்தலும் கூங

கல்வியென்பதறிவும்பயிற்சியும் கூச

ககமேகணையும்புள்ளுமாகும் கூரு

கண்ணுதலேசிவன்கருதுதலிருபெயர் கூசா

களையேகளைக்கோலாற்களைவும்
களையுமெனவேகாட்டுமிருபெயர் கூஎ

கடைப்பிடியென்பதுமறப்பிலாமையும்
தேற்றமுமென்றேசெப்புமிருபெயர் கூஅ

கம்முதலிருபேர்முற்றும்.

கம்முதன்முப்பெயர்

கசமென்பதுவேயிரும்புங்காலும்
கசமுமென்றேகருதுமுப்பெயரே கூகூ

கசடேயையமுஞ்சுற்றமுமாகும் க00

கரைதல்தானேவிளித்தலுமோசையுங்
கரைதலுமெனவேகாட்டுமுப்பெயர் க0க

கவுசியென்பதுகுழையும்வருத்தமும்
பாட்டுமென்றேபகருமுப்பெயரே க0உ

கச்சென்பதுவேநெருப்புமீனும்
முலைக்கட்டெனவுமொழியுமுப்பெயரே க0ங

* சமணனும் என்பது பிரதிபேதம்.



கமலமேசெம்படாமுநீரும்
தாமரையெனவுஞ்சாற்றுமுப்பெயரே க0ச

கணியென்பதுவேமருதநிலமும்
வேங்கைமரமுமோர்சாதியுமுப்பெயர் க0ரு

கற்பேயுள்ளுயர்நிலமும்புரிசையும்
கற்புமெனவேமுப்பெயராகும் க0சா

கதையேவார்த்தைதண்டாயுதமுடன்
காரணமெனவுங்கருதுமுப்பெயரே க0எ

கழுதெவண்டுங்காவற்பரணும்
பேயுமெனவேபேசுமுப்பெயரே க0அ

கந்தரமென்பதுகழுத்துமேகமும்
மலைமுழையெனவும்வைக்குமுப்பெயரே க0கூ

கல்லாரந்தான்செங்கழுநீரும்
மஞ்சளுடனீர்க்குளிரியுமுப்பெயர் கக0

கழையென்பதுவேமூங்கிலுங்கரும்பும்
புனர்பூசமுமெனப்போற்றுமுப்பெயரே ககக

கன்னமேபொற்கொல்லனுங்களவுங்
கன்னக்கோலுங்கருதுமுப்பெயரே ககஉ

கற்பமென்பதுகற்பகஞ்சுவர்க்கம்
பிரமனாயுளெனுமுப்பெயரே ககங

கனலிதானேதீயும்பன்றியு
மிரவியுமெனவேயிசைக்குமுப்பேரே ககச

கச்சையென்பதுகயிறுந்தழும்பும்
கவசமுமெனவேகாட்டுமுப்பெயரே ககரு

கணையேயம்புந்திரட்சியுங்கோலும் ககசா

கட்சியென்பதுகாடுங்கூடும்
துயிலிடமெனவுஞ்சொல்லுமுப்பெயரே ககஎ

கண்டிகையேபணிச்செப்பும்பதக்கமும்
வாகுவலயமுமருவுமுப்பெயரே ககஅ

கந்துகமென்பதுபந்துங்குதிரையுங்
குறுநிலமன்னர்குதிரையுமுப்பெயர் ௧௧௯
கந்திகையேதொடைவிகற்பமுந்துவசமும்
கமழ்வாசந்தியுங்காட்டுமுப்பெயரே ௧௨௦
கந்தேகம்பமும்யாக்கையின்மூட்டும்
பண்டியுளிரும்புமகருமுப்பெயரே ௧௨௧
கரகமென்பதுவேயாலங்கட்டியும்
ஆலிநீர்க்கங்கையுங்கமண்டலமுமாகும் ௧௨௨
கரியவனேசனிமாயனிந்திரனும் ௧௨௩
கரிலேகுற்றமுங்காழ்த்தலுங்கூர்த்தலும் ௧௨௪
கலனேயாழ்பூணுவாய்மூன்றும் ௧௨௫
கழுமலென்பதுபற்றுமயக்கமும்
நிறைவுமெனவேநிகழ்த்துமுப்பெயரே ௧௨௬
கடவுளேமுனிதெய்வமுநன்மையும் ௧௨௭
கழிதலென்பதுவேசாதலுமிகுதியுங்
கடந்திடலெனவுங்கருதுமுப்பேரே ௧௨௮
களபந்தானேகலவையுஞ்சாந்தும்
யானையின்கன்றுமென்னுமுப்பெயரே ௧௨௯
கரியேயானையுஞ்சாட்சியுங்கரியும் ௧௩௦
கரீரமென்பதுமிடாவுமகத்தியும்
யானைப்பல்லடியுமெனமுப்பெயரே ௧௩௧
கவியென்பதுவேமந்தியும்புலவனுஞ்
சுக்கிரனுடனுஞ்சொல்லுமுப்பெயரே ௧௩௨
கண்டகமென்பதுசுரிகையும்வாளும்
முள்ளுமென்றேமொழியுமுப்பெயரே ௧௩௩
கல்லேமலையுமோசையுங்கல்லும் ௧௩௪
கடுத்தலென்பதுவேயையமும்வேகமும்
உவமையுமெனவேயுரைக்குமுப்பெயரே ௧௩௫



கதிரேமதியுமிரவியுங்கதிரும் ௧௩௬
கதவமென்பதுகாவலுங்காத்தலும்
கதவுமென்றேமுப்பெயர்கருதும் ௧௩௭
கதியேபரகதிநாற்கதியுடனே
ஐங்கதியெனவுமாகுமுப்பெயரே ௧௩௮
கருவேகருப்பமுங்கருப்பொருளுடனும்
நடுமேடெனவுநாட்டுமுப்பெயரே ௧௩௯
கண்ணியென்பதுமுகுளமுந்தாரும்
படுத்திடுகயிறுமெனப்பேர்மூன்றே ௧௪௦
கலித்தல்தானேயொலியும்பொலிவும்
எழுச்சியுமென்றேயிசைக்குமுப்பேரே ௧௪௧

கம்முதன்முப்பேர்முற்றும்.

கம்முதனாற்பெயர்

ககனமென்பதுவேவிண்ணும்படையும்
காடும்பலபுள்ளொடுநாற்பெயரே ௧௪௨
கதுப்பேமஞ்சளுங்கவுளுமாண்மயிரும்
பெண்மயிரெனவும்பேசுநாற்பெயரே ௧௪௩
கழங்கென்பதுவேவேலனுடனும்
அணங்கினுடனுங்கொடியின்கழலும்
இந்திரியமுமெனவிசைக்குநாற்பேரே ௧௪௪
கறையேயிறுத்தலுமிரத்தமுங்கறுப்பும்
உரலுமென்றேயுரைக்குநாற்பேரே ௧௪௫
கடுவேவிடமுங்கசப்பொடுமுள்ளும்
அரிதகியெனவுமாகுநாற்பெயரே ௧௪௬
கதலியென்பதுதேறும்வாழையுந்
துவசமுங்காற்றாடியுமெனுநாலே ௧௪௭
களியேசெருக்குங்குழம்பும்வடிவும்
மதுவுமென்றேவைக்குநாற்பெயரே ௧௪௮
கருமையென்பதுபெருமையுங்கறுப்பும்
வலியுநஞ்சுமருவுநாற்பெயரே ௧௪௯

கவனந்தானேகாடுங்கலக்கமும்
குதிரையின்கதியும்வெம்மையுநாலே ௧௫௦

கழலேகழங்குஞ்செருப்புங்காலும்
காலணியெனவுங்காட்டுநாற்பெயரே ௧௫௧

களிறேயானையுஞ்சுறவும்பன்றியும்
அத்தநாளுமாகுநாற்பெயரே ௧௫௨

களனேபொய்கையுங்கள்ளுந்தொடர்பும்
மருதநிலனுமென்னுநாற்பேரே ௧௫௩

கலியேவலியுமோசையுங்கடலும்
கடையுகமெனவுங்கருதுநாற்பேரே ௧௫௪

கட்டலென்பதுகிட்டலுங்கடையும்
களைதலும்பந்தித்தலுநாலே ௧௫௫

கரிணிதானேபலையொடுமுழையும்
பிடியுந்தந்தியும்பேசுநாற்பெயரே ௧௫௬

களரேமிடறுங்கருமையுங்கொட்டியும்
களருறுநிலமுங்கருதுநாற்பெயரே ௧௫௭

கறங்கலேவளைதடியும்பேயும்
ஒலியுஞ்சுழலுதலுடனுநாற்பேரே ௧௫௮

கவையேயாயிலியமுமெள்ளிளங்காயும்
கவர்வழியுடனுங்காடுநாற்பேரே ௧௫௯

கவரியேதேரெருமைசாமரை
கவரிமாவெனக்காட்டுநாற்பேரே ௧௬௦

கட்டேமிகுதியுங்குறியுங்காவலும்
தளைதலுமெனவேசாற்றுநாற்பெயரே ௧௬௧

கணையமென்பதுவேயானைக்கம்பமும்
பொன்னுமெழுவுங்காவற்காடுமாம் ௧௬௨

கட்டியேயோர்புள்ளுங்கட்டியும்
கருப்புவட்டுமகிழ்ச்சியுநாற்பெயர் ௧௬௩

கம்முதனாற்பேர்முற்றும்.



## கம்முதலைம்பெயர்

கச்சமென்பதுதுணிவுமளவும்
யானையின்கழுத்திடுகயிறும்வாரும்
மரக்காலெனவுமருவுமைம்பெயரே ௧௬௪

கஞ்சமேவெண்கலம்மம்போருகம்
அப்பந்தாளங்கஞ்சாவைந்தே ௧௬௫

கடிகையென்பதுசமயநாழிகை
துண்டந்தாழ்ப்பாள்வேதமென்றைந்தே ௧௬௬

கட்டளைதானேயிட்டிகையியற்றலும்
நிறையறிகருவியுமுரையறிகருவியும்
நிறைதலுமொப்புநிகழ்த்துமைம்பெயரே ௧௬௭

கரமேகிரணமுங்கழுதையுங்கரமும்
இறுத்தலுநஞ்சுமென்னுமைம்பெயரே ௧௬௮

கள்வனேமுசுநண்டியஞ்சோரன்
கருநிறத்தவனெனக்காட்டுமைம்பேரே ௧௬௯

கம்பலைதானேயச்சமுமொலியும்
வருத்தமுந்துன்பமுநடுக்கமுமைந்தாம் ௧௭௦

கள்ளென்பதுவேமதுவுஞ்சோர்வும்
மருதநிலத்தின்றொடர்பும்பொய்கையும்
நறவுமென்றேகாட்டுமைம்பெயரே ௧௭௧

கம்முதலைம்பேர்முற்றும்.

## கம்முதலறுபெயர்

கணமென்பதுவேயற்பமும்பேயும்
காலநுட்பமும்வட்டமுந்திரட்சியும்
ஓர்நோயுடனுமோதுமறுபெயர் ௧௭௨

கரணமேமனமாதியுங்கணிதமும்
கலவியுங்கூத்துந்துணைக்காரணமும்
மின்னார்கலவியிற்கொள்நிலையுமாறே ௧௭௩

கவலையேசெந்தினையுஞ்சந்தியும்
நோயுமோர்கொடியுங்கவர்வழியுடனே
துன்பமுமெனவேசொல்லுமறுபெயர் ௧௭௪

கன்னலென்பதுகரகமுங்குடமும்
கரும்பும்நாழிகையும்நாழிகைவட்டிலும்
சருக்கரையுடனேசாற்றுமறுபெயர் ௧௭௫

கடையேயிடமுஞ்சோர்வும்வாயிலும்
ஆவணமுடனேஅப்பக்கடையும்
முடிவுமென்றேமொழியுமறுபேர் ௧௭௬

கடகமென்பதுமதிலும்வட்டமும்
கையிடுவளையுமாயுதத்துடனே
கங்கணமும்படைவீடுமென்றூறே ௧௭௭

கண்ணென்பதுவேயேழாம்வேற்றுமை
விழியருளிடம்வேய்கருத்தெனவாறே ௧௭௮

கலமேமரக்கலமட்கலமுண்கலம்
பிசுனமோரளவுபூணெனவாறே ௧௭௯

கம்முதலறுபேர்முற்றும்.

கம்முதலெழுபெயர்

கன்னியேயோராறுமிராசியுங்
கற்றாழையுமகட்டிளமையும்பெண்ணும்
அழிவிலாமையுந்துர்க்கையுமேழ்பெயர் ௧௮௦

கந்தமென்பதுபகுத்தலுங்கிழங்குங்
கருணையுநாற்றமும்பொன்னுமிந்திரியமும்
கழுத்தடியெனவுங்கருதுமேழ்பேர் ௧௮௧

கனமேமுத்தக்காசுந்திரட்சியும்
புயலும்பாரமுஞ்செறிவும்வட்டமும்
பொன்னுமென்றேபுகலுமேழ்பேர் ௧௮௨

கயமென்பதுவேயானையுமாழமும்
குளமுங்கீழும்பெருமையுந்தெய்வமும்
மேன்மையுமென்றேவிதிக்குமேழ்பெயர் ௧௮௩

கம்முதலெழுபேர்முற்றும்.



கம்முதலெண்பெயர்

கண்டமேயிடுதிரையுங்கவசமும்
கழுத்தும்வெல்லமுந்துண்டமும்வாளும்
பூமியுந்தேசமும்போற்றுமெண்பெயரே ௧௮௪

களமென்பதுவேகறுப்பும்விடமும்
களாவுங்கண்டமும்பரப்புநெல்விடமும்
அமர்க்களமுமுடனில்லாளுமெண்பெயர் ௧௮௫

கம்முதலெண்பேர்முற்றும்.

கம்முதலொன்பான்பெயர்

கம்மேயாடும்வெண்மையுநீரும்
முகிலும்விண்ணுந்தலையும்பிரமனும்
காற்றும்வாயுங்கருதுமொன்பான்பெயர் ௧௮௬

கலையென்பதுவேமானுங்கல்வியும்
நூலுந்தூசுஞ்சேகுங்காஞ்சியும்
மதியின்பங்குங்காலநுட்பமும்
முசுவுமென்றேமொழியுமொன்பான்பெயர் ௧௮௭

கம்முதலொன்பான்பேர்முற்றும்.

கம்முதற்பதினொருபெயர்

கடமேயுடலுஞ்சுரமுமதமும்
குடமுங்கயிறும்நீதியும்வானமும்
கடனுமலைச்சாரலும்யானைக்குழாமும்
யானைக்கதுப்புமெனப்பதினொன்றே ௧௮௮

கம்முதற்பதினொருபேர்முற்றும்.

கம்முதற்பதின்மூன்றுபெயர் .

கருவியேபல்வினைப்பேறொன்று
மீட்டமுந்தொடர்புந்துணைக்காரணமு
முகிலுமாயுதமும்யாழுங்கலனையுங்
கசையும்பல்லியமுங்கவசமுந்தொகுதியு
மாபரணமுமெனவாம்பதின்மூன்றே ௧௮௯

கம்முதற்பதின்மூன்றுபேர்முற்றும்.

## கம்முதலிருபத்திருபெயர்

கடியே அச்சமும்விரைவும்பேயும்
கூர்மையுங்காலமும்விளக்கமுங்கரிப்புங்
காப்புநாற்றமுங்கருதிடுமணமும்
வாசமும்புதுமையுமணமும்வரைவுடன்
ஐயமுஞ்சிறப்பும்விம்மிதமும்புணர்வுங்
கடிதலுங்கண்ணிடமுஞ்சிறுகொடியு
மையமேற்றிடுகுடியுமென்றிருபத்திருபெயர்

கம்முதலிருபத்திருபேர்முற்றும்.

கம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௧௯௦.

## காமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

### காமுதலொருபெயர்

காகளமென்பதுகாளத்தின்பெயர்
காஞ்சுகிதானேசட்டையெனப்படும்
காண்டையேகற்பாழியெனச்சொலும்
காத்திரையென்பதுபடைக்கலத்தின்பெயர்
காவற்கிளியேவாழையெனப்படும்
காருணிதானேவானம்பாடியாம்
காராமென்பதுமேதியெனப்படும்
காருவேயிரங்கொல்லிப்பெயரே
காரோடரேயுறைகாரராகும்
கார்முகமென்பதுவில்லின்பெயரே
காலவந்தானேநெருப்பெனலாகும்
காலதரேபலகணியெனலாகும்
கார்வலயந்தான்கடலெனப்படுமே
காகதுண்டமேயகிலெனப்பகர்வர்



காளவனந்தான்சுடுகாடெனலாம் ௧௫
காவிதியரென்பதுமந்திரியர்பேரே ௧௬
காலேகவண்ணமேசாந்தெனப்படுமே ௧௭
காவலூகங்குரங்கெனலாகும் ௧௮
காரண்டமென்பதுநீர்க்காக்கையின்பெயர் ௧௯
காகோடியரேகூத்தராகும் ௨௦
காளையென்பதுபாலைநிலத்தரசன் ௨௧
கானநாடன்முல்லைத்தலைமகன் ௨௨
காவதமென்பதுகாதமாகும் ௨௩
காழென்பதுவேகோட்டையாகும் ௨௪

காமுதலொருபேர்முற்றும்.

### காமுதலிருபெயர்

காதேகொலையுங்காதுமிருபெயர் ௨௫
*காட்டமென்பதுமிகுதியும்விறகும் ௨௬
காட்டிதானேபிராட்டியும்பன்றியும் ௨௭
காளிங்கமென்பதுபாம்புமேலமும் ௨௮
காதையேகதைசொல்லிருபெயரே ௨௯
காலந்தான்வைகறையுங்காலமும் ௩௦
காழியர்தானேயுப்புவாணிகரும்
வண்ணாரெனவுமதிக்குமிருபெயர் ௩௧
காசையேகாயாவுநாணலும் ௩௨
காந்தாரந்தானிசையுங்கானமும் ௩௩
காம்பீரமேகாம்பீரமுமுருக்கும் ௩௪
காலையென்பதுநாளுங்காலமும் ௩௫
கானேகாடுமணமுமிருபெயர் ௩௬

காமுதலிருபேர்முற்றும்.

* காட்டமென்பது குதிரையும் விறகும் என்பது பிரதிபேதம்.

### காமுதன்முப்பெயர்

காகமென்பதுகாக்கையுங்கிரியுங்
கற்பகமென்வுங்கருதுமுப்பெயரே ௩௭

காவியேகருங்குவளையுங்கள்ளுங்
காவியுமெனவேகாட்டுமுப்பெயரே ௩௮

காசறையேகத்தூரியுமணியும்
மயிர்ச்சாந்தெனவுமதிக்குமுப்பேரே ௩௯

காமன்றானேமதனும்வண்டுந்
திப்பிலியெனவுஞ்செப்புமுப்பெயரே ௪0

காகுளியேமிடற்றெழுதருமொலியு
மிசையுந்தவிசுமென்றிசைக்குமுப்பேரே ௪௧

காவிதானேயருணனுங்காற்று
முரசுமுமென்றேயோதுமுப்பெயரே ௪௨

காலசமென்பதுவட்டமுங்காற்று
மாலவட்டமுமாமுப்பெயரே ௪௩

காசேகோழையுமாணிக்கத்தொடு
குற்றமுமெனவேகூறுமுப்பெயரே ௪௪

காம்புதானேமூங்கிலும்பட்டும்
மலர்த்தாளெனவுமதிக்குமுப்பெயரே ௪௫

காமரமேயிசைப்பொதுவுமடுப்பு
மிசையுமெனவேயேற்றுமுப்பெயரே ௪௬

காமுதன்முப்பேர்முற்றும்.

### காமுதனாற்பெயர்

காணமேபொற்காசுடனளவும்
பரியூண்செக்கொடுபகருநாற்பெயரே ௪௭

காடியென்பதுநெய்யுஞ்சோறு
காடியுமூறுகறியுநாற்பெயரே ௪௮

காழகமென்பதுபுடைவையுங்கறுப்புங்
கழுதையுஞ்சேதகமுடனுநாற்பேரே ௪௯

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1920ஆம் மேமீ த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு 1920 May | | | வரவு 1919 May | | |
|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION: | | | | | | |
| (1) Donations & Grants வகையில் வரவு ... | 90 | ... | ... | 340 | .. | ... |
| (2) புத்தகங்கள் வித்ற வகையில் வரவு ... | 27 | 12 | ... | 19 | 12 | ... |
| (3) வாடகை வகையில் வரவு ... | ... | ... | ... | 70 | ... | ... |
| (4) Miscellaneous வரவு ... | ... | 4 | ... | 1 | ... | ... |
| மொத்தம் ... | 118 | ... | ... | 430 | 12 | ... |

| விவரம் | செலவு 1920 May | | | செலவு 1919 May | | |
|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION: | | | | | | |
| (1) ESTABLISHMENT:— | | | | | | |
| (a) மானேஜ்மெண்டு ஆபீஸ்சிப்பந்திகட்குச்சம்பளம் செல்... | 108 | ... | ... | 172 | ... | ... |
| (b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச்சம்பளம் செல் ... | 95 | ... | ... | 137 | 10 | 8 |
| (c) கலாசாலை மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ... | 96 | ... | ... | ... | ... | ... |
| (d Literary Section சிப்பந்திகட்குச்சம்பளம் செல் ... | 33 | 12 | ... | 14 | 12 | ... |
| (2) Stationery, contingencies சாமான்கள் வாங்கியவகையிற்செல்... | ... | 5 | 3 | 2 | 8 | 4 |

| | Rs. | A. | P. | Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|
| **II Editorial Section:** | | | | | | |
| (1) அங்கத்தினர்களிட மிருந்து சந்தா வரவு ... | 6 | 2 | ... | 4 | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ச் சந்தா வரவு ... | 30 | 8 | ... | 14 | 12 | ... |
| (3) விளம்பர சார்ஜ் வரவு ... | ... | ... | ... | 14 | 4 | ... |
| (4) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ... | ... | ... | ... | 10 | 1 | 6 |
| மொத்தம் ... | 36 | 10 | ... | 43 | 1 | 6 |
| **III Press Section:** | | | | | | |
| (1) பழைய பில் பாக்கித் தொகை முதலியன வரவு | ... | ... | ... | 496 | 7 | ... |

| | Rs. | A. | P. | Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|
| (3) பாண்டியன் புத்தகசாலைக்கு வரவழைத்த பத்திரிகைக்குச் சந்தா செல் ... | ... | ... | ... | 13 | ... | ... |
| (4) தபால், தந்திவகையில் செல் ... | 7 | 14 | 6 | 4 | 7 | 6 |
| (5) பரீக்ஷை சம்பந்தமாகச் செலவு ... | ... | ... | ... | 4 | 10 | 6 |
| (6) Prizes & Medals வகையில் செல் ... | 120 | 12 | ... | ... | ... | ... |
| (7) Miscellaneous செலவு... | 90 | 5 | 2 | 100 | 3 | ... |
| மொத்தம் ... | 552 | ... | 11 | 449 | 4 | ... |
| II Editorial Section: | | | | | | |
| (1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைப்பிரசுரசம்பந்தமாக ஸ்டேஷனெரி, அச்சுக்கூலி வகையராவுக்குச் செல் ... | ... | ... | ... | 13 | 11 | 6 |
| (2) தபால், தந்தி வகையில் செல் ... | 8 | 13 | 6 | 8 | 12 | 6 |
| (3) Miscellaneous செலவு. | ... | ... | ... | 12 | ... | ... |
| மொத்தம் ... | 8 | 13 | 6 | 34 | 8 | ... |
| III Press Section: | | | | | | |
| (1) Furniture & Machines ரிப்பேர்வகையில் செல் | ... | ... | ... | ... | 5 | ... |
| (2) Miscellaneous செலவு | ... | ... | ... | 438 | 7 | 1 |
| மொத்தம் ... | ... | ... | ... | 438 | 12 | 1 |

| விவரம் | 1920 | 1919 | விவரம் | 1920 | 1919 |
|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 154 10 ... | 970 4 6 | ஆக மொத்தம் செலவு ரூ ... | 560 14 5 | 922 8 1 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ... | 1225 11 11 | 1105 15 10 | மாதமுடிவில் மீதி இருப்புத் தொகை ... | *819 7 6 | 1153 12 3 |
| ஆகமொத்தம் ரூ ... | 1380 5 11 | 2076 4 4 | ஆகமொத்தம் ரூ. ... | 1380 5 11 | 2076 4 4 |

*By C Pass Book 700—0—0
,, Cash on hand 119—7—6
819—7—6

*Audited & found correct.*

***V. S. Ramaswami,***
AUDITOR.
19—6—20.

***C. Sudarsanachari,***
*Joint Secretary,*
MADURA TAMIL SANGAM.
16—6—20.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1920 ௵ ஜூன்மீ" த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1920 June | வரவு 1919 June | விவரம் | செலவு 1920 June | செலவு 1919 June |
|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION: | | | I GENERAL SECTION: (1) ESTABLISHMENT:— | | |
| (1) Donations & Grants வகையில் வரவு ... | 190 ... ... | ... ... ... | (a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | 99 2 1 | ... ... ... |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 42 ... ... | ... ... ... | (b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ... | 95 ... ... | ... ... ... |
| (3) மதுரையிலிருக்கும் Madras Bankல் டெபாஸிட் செய்யப்பட்டிருந்த தொகை withdraw செய்த வகையில் வரவு ரூ 50000 அதன்பேரில் வட்டி வரவு ரூ 11-5-0 ஆகமொத்தம் வரவு ரூ | 50011 5 ... | ... ... ... | (c) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 45 ... ... | ... ... ... |
| | | | (2) Stationery, contingencies வாங்கியவகையில் செல் ... | 3 13 6 | ... ... ... |
| | | | (3) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தாவகையில் செல் ... | 10 ... ... | ... ... ... |
| | | | (4) Furniture வாங்கிய வகையிற் செல் ... | 16 14 ... | ... ... ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (4) Miscellaneous வரவு | 17 | 4 | ... | ... | ... | ... |
| மொத்தம் ... | 50260 | 9 | ... | 294 | ... | ... |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு | 6 | ... | ... | ... | ... | ... |
| (2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ... | 8 | 2 | ... | ... | ... | ... |
| (3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ... | 21 | ... | ... | ... | ... | ... |
| மொத்தம் ... | 35 | 2 | ... | 24 | 1 | 4 |
| **III Press Section:** | | | | | | |
| (1) சங்கம் பவர்ப்பிரஸ் குத்தகைதாரிடமிருந்து குத்தகைப்பணம் அட்வான்சு வரவு | 100 | ... | ... | ... | ... | ... |
| மொத்தம் ... | 100 | ... | ... | 382 | 5 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (5) சங்கக்கட்டிட வகையரா ரிப்பேர் சம்மந்தமாகச் செலவு ... | 541 | 4 | ... | ... | ... | ... |
| (6) தபால், தந்திவகையில் செல் ... | 19 | 4 | 3 | ... | ... | ... |
| (7) Madura Ramnad Central Co-operative Bankல் வட்டிக்கு டெபாஸிட் செய்யப்பட்டுள்ள தொகை. ... | 50,011 | 5 | ... | ... | ... | ... |
| (8) Miscellaneous செலவு | 1 | 10 | ... | ... | ... | ... |
| மொத்தம் ... | 50,843 | 4 | 10 | 342 | 7 | 10 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) தபால், தந்தி வகையில் செல் ... | 8 | 4 | 9 | ... | ... | ... |
| மொத்தம் ... | 8 | 4 | 9 | 26 | 1 | 6 |
| **III Press Section:** | | | | | | |
| (1) Furniture வாங்கிய வகையில் செலவு ... | 1 | ... | ... | ... | ... | ... |
| (2) Contingencies வாங்கியவகையில் செலவு ... | 1 | 5 | 3 | ... | ... | ... |
| (3) Special staffக்கு சம்பளம் செல்லாக்கிய வகையில் ... | 20 | 2 | ... | ... | ... | ... |
| மொத்தம் ரு | 22 | 7 | 3 | 348 | 8 | ... |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 50,395 | 11 | ... | 700 | 6 | 4 | ஆக மொத்தம் செலவு ரூ. | 50874 | ... | 10 | 717 | 1 | 4 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத் தொகை ரூ. ... | 819 | 7 | 6 | 1153 | 12 | 3 | மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ... | *341 | 1 | 8 | 1137 | 1 | 3 |
| ஆகமொத்தம் ரூ. ... | 51,215 | 2 | 6 | 1854 | 2 | 7 | ஆகமொத்தம் ரூ. ... | 51215 | 2 | 6 | 1854 | 2 | 7 |

*By Co-operative Pass Book 300—0—0
Cash on hand 41—1—8
341—1—8

*Audited and found correct.*
***V. S. Ramaswami,***
AUDITOR.
22—8—20.

***J. Sudarsanachari,***
*Joint Secretary,*
MADURA TAMIL SANGAM.
12—8—20.

161399
600 003.

கடவுள் துணை


# செந்தமிழ்.

தொகுதி கஅ] ரௌத்திரி-ஹு ஆனிமீ [பகுதி அ.

Vol. XVIII. June—July. 1920. No. 8.


## சிசுபாலசரித்திரம்.

(உசுசு-ம் பக்கத்தொடர்ச்சி.)

சிசுபாலசரிதத்திலே பின்னுஞ் சிலபாகங்களை இங்கே எழுதுகின்றோம். அவைகளையும் பிரபுக்கள், புலவர்கள் என்னும் அவ்விருபாலாரும் நோக்கக்கடவர். பலராமர், உத்தவர் என்னும் இருவர் கருத்தும் இப்பாகத்தில் வருகின்றது.

### பலராமர்கருத்து.

ண்ணபிரானே!

இப்பொழுது நீர் சொல்லிய வாக்கியங்கள் சுருக்கமாகத் தோன்றினும் பெருக்கமானபொருள்களைப் பெரிதும் உள்ளடக்கிச் சூத்திரம்போன்று துலங்குகின்றன. உமதுகருத்தை அநுசரித்துச் சில வாக்கியங்களை யாமும் இப்பொழுது சொல்லுகின்றோம். அவை சூத்திரப்பொருள்களை விரித்துவிளக்கும் விருத்தியுரைபோன்றுவிளங்குக. சிசுபாலனைக் கொலைபுரியச் செல்லுதலே அவசியம் என்று கருதுகின்றீர். அது நன்றன்று. எண்ணித் துணிவு பெறாமல் எக் கருமத்திலும் எழும்பலாகாது. வகைபற எண்ணியபின்னே எழுதல் வேண்டும்.

திருக்குறள்.

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

போர்புரிதற்குப்போகும் புருடர் தருமசாத்திரங்களிற் சொல்லப்பட்ட நட்பாக்கல், பகையாக்கல், மேற்செல்லுதல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்னும் அறுவகைக்குணங்களையும், அறிவுவலி பெருமைவலி, ஆண்மைவலி என்னும் மூவகை வலிகளையும் அவற்றால் வரும் மூவகைப்பேறுகளையும் பிறவற்றையும் முற்ற அறிந்திருத்தல் ஆவசியகம்.

இரகுவமிசம்.

இனந்தரு சந்திவிக் கிரகம் யானமா
சனந்துவை தத்தொடாச் சிரயந் தானெனும்
மனந்தகு குணங்களோ ராறும் வல்லகோ
அனந்தபூ பாலர்கட் கரச னவனே.

(சந்தி - நட்பாக்கல். விக்கிரகம் - பகையாக்கல். யானம் - மேற்சேறல். ஆசனம் - இருத்தல். துவைதம் - பிரித்தல். ஆச்சிரயம் - சார்தல். பூபாலர் - அரசர்.)

நல்லனவுந் தீயனவு நாடி உள்ளவாறே சொல்லும் நல்லறிவாளரோடு கூடி ஆராய்ந்தறியும் அறிவாகிய ஆலோசனையை ஆரம்பத்தின் முன்னரே செய்தல் வேண்டும். ஆலோசித்து அவர்கள் சொல்லும் வார்த்தைகளையும் அவாவோடுங் கேட்டல்வேண்டும். அவர் வார்த்தைகள் அவமேபோகாமல் நலமே தருவனவாய் அறிவை வளர்க்கும். காரியங்களை அறியாத வாசாலகருடைய வார்த்தைகளைக் கேட்டலால் வரும் பயன் இல்லை. அவர் வார்த்தைகள் இலக்குத் தவறிய அம்பே போல வம்பேயாய் விலக்குண்டு வீணாகும். அறிவாளர் எண்ணிச் சொல்லிய துணிவைத் தாமுமே எண்ணித் துணிதல்வேண்டும். துணிந்த காரியத்தை நெடுநீர், மறவிமுதலியனவின்றிச் சடிதியிலே தொடங்கல்வேண்டும்.



திருக்குறள்.

நெடுநீர் மறவி மடிதுயி னான்குங்
கெடுநீரார் காமக் கலன்.

திரவியம், சேனை முதலியவைகளாலே தமக்குளதாய வளர்ச்சியையும், பகைவனுக்குளதாய தளர்ச்சியையும் நோக்கி "யாம் எழுச்சியும் நிலைபேறுமுடையேம். இப் பகை யாதுசெய்யும்" என்று மனம் மகிழ்ந்து பகைமேற்செல்லாது வாளாவிருத்தல் நலமமைந்த செயலன்று. பகை சிறியது என்று பராமுகஞ் செய்யாமல் வேரோடும் பிடுங்கி மேலெழுதலே எழுச்சியாகும். வேரோடும் பிடுங்காதொழியின், அப்பகை மேன்மேல் வளர்ந்து மிகுந்து கெடுக்கத் துணியும். நிலைபேறும் இல்லதாகும். அபிமானமுடையோர் பகைவரை முற்றாகப் பரிகரித்தே எழுச்சியும் நிலைபேறும் எய்துவர். பகையைச் சிறியது என்று பரிகரியாது விட்டவர் பெரிதும் பிழைப்பாடு எய்துவர்.

நீதிநெறிவிளக்கம்.

சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைப்பா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது.

அந்தச் சிசுபாலன் பிதாவழியால் வந்த உறவு பற்றி இயல்பிலமைந்த மித்திரனாய் இருக்கின்றான். தீங்குபுரியுந் திறம்பற்றி இடையில் வந்த சத்துருவாயும் இருக்கின்றான். மித்திரன் என்பது பற்றிப் பொறுத்து நட்பாக்குதற்கும், சத்துரு என்பதுபற்றி ஒறுத்துப் பகையாக்குதற்கும் உரியனாகின்றான். அவனை எப்படி ஆக்குதல் நல்லது? நட்பாக்குதல் நல்லதா? பகையாக்குதல் நல்லதா? அடிக்கடி தீங்குபுரியும் மிடுக்கனாய் இருத்தலால் அவனை நட்பாக்கல் நல்லதன்று. அவனோ தூர்க்குணன். பின்னும் பின்னுந் தீங்குசெய்வான். அவனைப் பகையாக்குதலே நல்லது. உறவனாயினுந் தீங்குபுரியுந் தூர்க்குணனை ஒறுத்துத் தள்ளல்வேண்டும் என்றும், பகைவனாயினும் நன்குபுரியுஞ் சற்குணனைப் பொறுத்துக் கொள்ளல்வேண்டும் என்றும், தருமசாத்திரஞ் சொல்லுகின்றது.

அவன் உறவனாயிருந்துஞ் சும்மா இருந்தானா? இல்லை. உமக்குந் தீங்குபுரிந்தான். எமக்குந் தீங்கு புரிந்தான். பிறர்க்குந் தீங்கு புரிந்தான். தனக்கு நியமித்த உருக்குமிணி என்னும் கன்னிகையை உமக்கு மனைவியாக்கி நீர் கொண்டநாளேதொடங்கி உம்மீது வைரம் வைத்துச் சாதித்துவருகின்றான். நரகாசுரனைக் கொல்வதற்கு நீர் சென்ற அந்தச்சமயத்திலும் உம்முடைய துவாரகாபுரியை ஒருங்கே முற்றுகைசெய்து பெரும்போர் விளைத்தான். உமது தந்தையாகிய வசுதேவனுடைய அசுவமேதயாகத்தை அழிக்கக்கருதி அங்கே விட்ட குதிரையை எங்கேயோ கொண்டுபோய் மறைத்தான். இரைவதக மலையிலே பொழுதுபோக்கின்பொருட்டுப் போயிருந்த யாதவரையும் பிடித் தடித்துக் கயிற்றாற் கட்டிக் காவலிலும் வைத்தான். வப்புரு என்னும் யாதவனுடைய மனைவியையும் வலாற்காரமாகக் கவர்ந்தான். இப்படியே எண்ணிலாத தீங்குகள் பலர்க்குஞ் செய்தான். இப்பொழுதுந் தீங்கு புரிந்துவருகின்றான். அந்தோ இந்தத் துரோகி இருக்கும்வரைக்கும் எங்களுக்குச் சுகம் என்பது கனவினும் இல்லை. இவனைக் கொலைசெய்து துயரைநீக்குதல் அவசியம். இவனுக்குத் துணையாயிருந்த வீரனாகிய சராசந்தனும் முன்னரே வீமசேனன்கையாலே முடிந்துபோனான். இப்பொழுது இந்தச் சிசுபாலனைநோக்கிச் சேனைகளோடுஞ் சேதிதேசம் செல்லுதல் நல்லது. சேதிதேசத்துவிருக்கங்களை முரிக்கும்படி யானைச்சேனைகள் செல்லுக. சிசுபாலனுடைய மாகிஷ்மதிநகரியை முற்றுகைசெய்யும்படி யாதவசேனைகள் செல்லுக. யாகம்நோக்கி இந்திரப்பிரத்தஞ்செல்லுதல் இப்பொழுது வேண்டாம். தருமபுத்திரர் தமது யாகத்தைத் தாமே செய்யக்கடவர். தேவராசன் தேவுலகைக் காக்கக் கடவன். சூரியன் வானிலே துலங்கக்கடவன். நாம் நமது பகைவரை வெல்லக்கடவேம். என்று தமதுகருத்தைப் பலராமர் சொல்லிமுடித்தார்.

முடித்த பொழுதே கண்ணபிரான் கற்றுத்தெளிந்த வித்தகவிற்பன்னராகிய உத்தவரை நோக்கினார். உத்தவரும் தமது வித்தியாகுருவாகிய வியாழபகவானைப்போன்று கண்ணபிரானுக்கு முன்னரே நின்று கனிவமைந்த வாக்கியங்கள்கொண்டு துணிவமைந்த தமதுகருத்தைச் சொல்லுவார்.



## உத்தவர்கருத்து.

கண்ணபிரானே!

இப்பொழுது மூத்தோராகிய பலராமர் சொல்லிய வார்த்தைகள் பூரணமடைந்து பொலிந்து விளங்குகின்றன. எமது வார்த்தைகளுக்கோ இங்கே இடமில்லை. நீரோ எமது வார்த்தைகளையுங் கேட்க விரும்புகின்றீர். தருமசாத்திரப்பொருள்களைத் தவறின்றிக்கிரமமாய் அறிந்த அறிவாளராகிய உமக்குத் தருமசாத்திரக்கருத்துக்களைத் தழுவி நாம் சொல்லும் வார்த்தைகள் படித்த பாடங்களை அடிக்கடி சொல்லும் அப்பியாசம் போன்றிருக்கும். அப்படியிருந்தாலும் எமது வார்த்தைகளையும் இங்கே சொல்லி உமது வேட்கையையும் ஒருவாறு முடிக்கின்றோம்.

வெற்றிமுதலிய காரியசித்திகளைவிரும்பும் அரசரும் பிறரும் ஆலோசனையையும் முயற்சியையும் அவசியஞ் செய்துகொள்ளவேண்டும். ஆலோசனையும் முயற்சியும் பின்னர்வந்து கைகூடும் பெருமைக்கு முன்னர்வந்துநிற்கும் மூலகாரணங்களாகும். ஆலோசனையே முன்னர்ச் செய்துமுடிக்கவேண்டியது. முயற்சிக்கும் ஆலோசனையே மூலம். ஆலோசனையைக் கைக்கொண்டு முடித்தே முயற்சிசெய்யவேண்டியது. ஆலோசனையைக் கைக்கொள்ளும் அறிவாளர் எக்காரியங்களையும் இளைப்பென்பதின்றித் தக்காங்குசெய்து தவறின்றி முடிப்பர். ஆலோசனையைக் கைக்கொள்ளாமல் அவமதித்துவிட்டு முயற்சிமாத்திரஞ்செய்யும் மூடர் முடிக்கும்வழிதெரியாமல் முட்டுப்பட்டுக் காரியங்களையும் இடையிற் கைவிடுவர். ஆலோசனையைக் கைக்கொள்ளும் அறிவாளர் சரீரத்திலே சிறுகத்தைத்து உள்ளேபோய் உயிரைப்பிரித்துக் கொலைத்தொழில்புரியுங் கூரிய பாணம்போலச் சிறிய முயற்சிசெய்து பெரியகாரியங்களையும் பிரயாசமின்றி முடிப்பர். ஆலோசனையைக் கைக்கொள்ளாமல் அவமதிக்கும் மூடர் எலியைப் பிடித்தற்கு மலையைத் துளைக்கும் பாமகன்போலச் சிறியகாரியத்துக்கும் பெரியமுயற்சிகள்செய்து பிரயாசப்படுவர்; ஆலோசனையைக் கைக்கொள்ளும் அறிவாளர் பொறுமையாளராயிருந்து முயற்சிகளை முற்றுகச்செய்து காரியங்களையுந் தவறாதுமுடிப்பர். ஆலோசனையைக் கைக்கொள்ளாமல் அவமதிக்கும் மூடர் பயனடைதலிலே அவசியப்

பட்டு முயற்சிகளை முற்றுகச்செய்யாமற் குறையாகவிட்டுக் காரியங் களையும் இடையிற் கைவிடுவர்.

ஆலோசனையைக் கைக்கொள்ளும் அறிவாளராயிருந்தாலும் அவதானமே பொருளாய்க்கொண்டு காரியத்திற் கண்ணுயிருப்பவரே கருதியபயனுங் கைகூடப்பெறுவர். காரியத்திற் கண்ணுயிருப்பவர் நித்திரையையும் பாரார். நிந்தையையும் பாரார். சத்துருவையும் பாரார். சரீரநோவினையும் பாரார். பொழுதையும் பாரார். போசனத்தையும் பாரார்.

நீதிநெறிவிளக்கம்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்.

காரியத்திலே கண்ணுயிருத்தலில்லாதவர் உறுதியான உபாயவழியிலே நின்றாலும் மிருகவேட்டை கருதி ஒளியிருந்துந் துயில்புரிந்த வேடன்போலப் பயனிழந்து வருந்துவர். அவரோ பலவழியாலுங் காரியத்தைக் கைவிட்டுப் பயனிழப்பர். நித்திரை கொள்ளுவர். நிந்தையைக் கேட்பர்! சத்துருவைச் சாடுவர்! சரீரவருத்தம் நாடுவர்! பசியை நோக்குவர்! பராக்காயும் இருப்பர்!

ஆலோசனையின்முடிவாய்த் துணிவுபெற்றகாரியத்திலே தளர்ச்சியின்றி முயற்சிசெய்யவேண்டும். முயற்சியின்றி ஒருகாரியமும் முடியாது. முயற்சியினாலே செல்வம் வந்துசேருகின்றது. செல்வத்தினாலே சேனை வந்துசேருகின்றது. செல்வத்தாலுஞ் சேனையாலும் பெறுதற்கரிய பெருமை வந்துசேருகின்றது.

சீவகசிந்தாமணி.

பொன்னி னாகும் பொருபடை யப்படை
தன்னி னாகுந் தரணி தரணியிற்
பின்னை யாகும் பெரும்பொரு ளப்பொருள்
துன்னுங் காலைத் துன்னாதன வில்லையே.



முயற்சியே பெருமைக்கும் மூலகாரணம். "முயன்றால் ஐந்தலை நாக நன்மணியும் பெறலாம்." என்பர். பொறுத்திருந்துசெய்யும்பகுதியவாகியகாரியங்களிலே முயற்சியை நிறுத்திப் பொறுத்திருந்து பின்னர்க் காலம்வந்துழிச் செய்யவேண்டும். "தெய்வந் தானேதரும்" என்று சிந்தனைசெய்து முயற்சியை எப்பொழுதும் கைவிட்டிருத்தல் மூடத்தனம். அறிவாளர் தெய்வத்தையுங் கொள்ளுவர்; முயற்சியையுங் கொள்ளுவர். சொல்லும் பொருளுந் தொடர்ந்து பாட்டாதல்போலத் தெய்வமும் முயற்சியுஞ் சேர்ந்து காரியங்கள் கைகூடும் என்பர். காரியங்கள் காலத்திலே முடிதற்கு முயற்சிவேண்டும். வட்டிலிற் சோறு வாயிற்புகுதற்குக் கையின்முயற்சிவேண்டும்.

முயற்சிவலி, ஆலோசனைவலி, பெருமைவலி என்னும் மூவகை வலிகளையும் தரித்திருக்குந் தலைமையாளர், யாவரும் வந்து பரிவாரமாய்ச் சுற்றிநின்று துணைசெய்யப்பெற்றுப் பூமிமுழுதையும் ஆளுவர்.

இரகுவமிசம்.

மந்திரம் பிரபுவுற் சாக மாம்வல
முந்துறு சந்திகண் மூன்று மங்கது
தந்திடு சித்தியுந் தரிக்கு மன்னவற்
கெந்தமா நிலங்கொலோ வெய்தி டாதவே.

(மந்திரசத்தி-ஆலோசனைவலி. பிரபுசத்தி-பெருமைவலி. உற்சாகசத்தி-முயற்சிவலி. அங்கது தந்திடுசித்தி-மந்திரசித்தி, பிரபுசித்தி, உற்சாகசித்தி என்பன. சித்தி - பேறு.)

கண்ணபிரானே!

நீர் இப்போது சிசுபாலன்மேற் போர்செய்யப்போகும்முயற்சிக்கும் ஆலோசனை அவசியமாகவேண்டும். போதற்குமுன்னரே உம்மிடத்துள்ள வலிமைகளின் நிலைமைகளையும், அவனிடத்துள்ள வலிமைகளின் நிலைமைகளையும் நோக்கவேண்டும். உமக்கும் அவனுக்குமுள்ள காலம் இடம் என்பவற்றின் நிலைமைகளையும் நோக்கவேண்டும். போர்தொடங்கும் நெறிமுதலியவைகளையும் நோக்கவேண்டும். இவைகளையெல்லாம் நோக்காமற் பொள்ளெனப் போருக்கெழுதல் நல்லதோர் செயலன்று.

அந்தச் சிசுபாலன் அற்பமான ஒரு சத்துரு என்று அவமதிக்கத்தக்கவனல்லன். அவனோ போர்த்தொழிற் பயிற்சியிலே கீர்த்தி பெற்ற மகாவீரன்! சென்றபோரிடை வென்றியேபெறுந் தீரன்; துணைவலியான் மிக்க சூரன்! கலங்காநிலையமைந்த அகங்காரகுணவினைகாரன்! பலநோய்களையுந் துணையாகப்பற்றிவரும் க்ஷயரோகம் என்னும் பெருநோய்போலப் பலவரசர்களையுந் துணையாகப்பற்றி வருவான். அவனுக்கு நண்புமிக்கதுணைவராய்க் காலயவன், சாலுவன் முதலிய காவலரும் வருவார்; உம்மீது வைரம்வைத்திருக்கும் வாணாசுரனும் அவனொடு சேருவன்; பெருந்துணையுள்ளவர் காரியங்களின் முடிவை விரைந்து காணுவர்.

அன்றியும் நீர் சென்றுநின்று போராடுங் களத்திலே பல அரசர்களும் வந்துகூடுவர். அவனோடு நட்புக்கொண்டிருக்கும் அரசரும், உம்மோடு பகைகொண்டிருக்கும் அரசரும் அவனொடு கூடிவந்து உம்மொடு போராடுவர். அவனொடு பகைகொண்டிருக்கும் அரசரும், உம்மொடு நட்புக்கொண்டிருக்கும் அரசரும் உம்மொடு கூடிவந்து அவனொடு போராடுவர். தருமபுத்திரருடைய யாகத்துக்கும் போகவேண்டிய அரசருள்ளும் பலர் அங்கேவந்து நிற்பார். அந்த யாகமும் அரசருள்ளே பலரும் போகாமையாற் பங்கப்பாடெய்தும்; தருமபுத்திரரும் "அந்தோ! இந்தப்போரை எழுப்பி எமது யாகத்துக்குப் பங்கம் செய்தீர்" என்று உம்மைக் கொறுகொறுப்பர். சத்துருவில்லாதவர் எனப் பொருள்படுகின்ற "அசாதசத்துரு" என்னும் பெயரும்பூண்டு இன்று வரையுஞ் சத்துருவின்றி இருந்த தருமபுத்திரருக்கு இப்பொழுது வந்தடையும் முதற்சத்துருவுமாவீர்! அந்த யாககாரியமாகிய பாரத்தை நீரே சுமந்து நிறைவேற்றுவீர் என்று முற்றும் நம்பியிருந்த மித்திரராகிய தருமபுத்திரர் அந்தப் பாரத்தைத் தாமே சுமக்கவேண்டியவராவர். ஆகவே அவர்மனமும் வேறுபடும். வலியவராயினுஞ் சத்துருக்களைத் தண்டனையாலே மெல்லமெல்ல வசமாக்கி இணக்கலாம். மித்திரர்மனம் வேறுபட்டால் அவரை எதனாலும் இணக்கல் அரிது.

இனி, மித்திரகாரியத்தினுந் தேவகாரியமே மிக்கது என்பீர் போலும். அவியுணவாகிய சுவையமுதத்தைத் தமக்குக்கொடுக்கும் யாகத்தை முடித்தல் தேவர்க்கும் பிரியமாயிருக்கும். சத்துருவைக் கொல்லுதலிலே அத்துணைப் பிரியம் இருக்கமாட்டாது. அவியுணவை விரும்பியுண்ணும் தேவர்க்கு அவியுணவுகொடுத்தலால் யாகத்தைத் தேவகாரியம் என்று சொல்லலாம். தேவர்கள் மனம் வெறுத்தற்கு இடமேஇல்லை. தருமபுத்திரருடைய மனம் வேறுபடாமையையும் பிறவற்றையும் நோக்கிச் சிறிது பொறுத்திருத்தல் நல்லது. பொறுத்திருத்தற்கு வேறே ஒருகாரணமுமுண்டு. அதனையுஞ் சொல்லுவாம்.



அந்தச் சிசுபாலன் குழந்தையாய்ப் பிறந்தபொழுது நான்கு கைகளும் நெற்றிக்கண்ணோடு மூன்றுகண்களுங்கொண்டு தோன்றினான். அந்தக்குழந்தையின் அற்புதமான வடிவைப் பற்பலரும்பார்க்கும்படி அங்கே போயிருந்தார்கள். யாதவர்களும் போயிருந்தார்கள். நீரும் போயிருந்தீர். தாயாகிய சாத்துவதியானவள் அக்குழந்தையை யாவரும் பார்க்கும்படி எடுத்துவந்து தனித்தனி எல்லார்தமது மடிகளிலும் வைத்தாள். உம்முடையமடியிலும் வைத்தாள். நீரும் பார்த்தீர். நீர் பார்த்தவுடனே மிகையாயிருந்தகைகளிரண்டும் விழுந்துபோக நெற்றிக்கண்ணுந் தெற்றென நீங்கிற்று. அதனைக்கண்ட சாத்துவதி "மிகையான இந்த அவயவங்கள் எவனாலே நீங்குமோ அவனே இவனுக்கு இயமனாவான்" என்று முன்னமே சொன்ன அசரீரிவாக்கினை அந்நேரமே நினைத்து மனத்திலே துயர்கொண்டு நீரே இவனுக்கு இயமனாவீர் என நிச்சயஞ்செய்து புலம்பி அழுது உம்மைநோக்கி "அப்பா! இவன் செய்யுங்குற்றங்களை மனத்திலேகொள்ளாது பொறுத்தருளவேண்டும்" என்று உம்மை இரந்து கெஞ்சிநின்று கேட்டதும், நீரும் அவன்மேலே இரக்கம்வைத்து நூறுகுற்றம்வரையும் பொறுத்துக்கொள்வேன் என்று ஆறுதலான வாக்குக்கொடுத்ததும் உண்டல்லவா? நீரும் நினைத்திருப்பீரே. அந்த வாக்கையும் வாய்க்குமிடம்நோக்கிக் காக்கவேண்டும். வாய்மைதவறலாகாது.

பிரமோத்தரகாண்டம்.

வாய்மைதப்பி னோர்க ளிந்த யாநி லத்தி லீனராய்த்
தீமை யுற்று மேலுளோர் பழிக்கவே திரிந்துபின்
தாய்மை யற்ற கும்பியுட் டழுந்த மூழ்கு வாரென
ஆய்மனுப் பகர்ந்த வேத சாகை முற்று மறையுமே.

காலமும்வந்து கைகூடவேண்டும். அடுத்துமுயன்றாலும் ஆகும் நாளன்றி எடுத்தகருமங்கள் வாயா; இரகசியமாய்ப்போய் உளவு பார்த்துப் பராமுகமின்றிக் காரியங்களைச் செய்துமுடிக்கத்தக்க ஒற்றரையுங் கண்கள்போலக்கொண்டு கையில் வைத்திருத்தல்வேண்டும். ஒற்றரில்லாத அரசியல் எத்துணைச்சிறப்புடையதாயினும் பாயிரமில்லாத இலக்கணப்பனுவல்போலப் பயன்படமாட்டாது. அந்த ஒற்றர்வழியாகச் சத்துருவின் ஆழ நீளங்களின் அளவையும் அறிதல் வேண்டும். சத்துருவோடு சார்ந்துநிற்குஞ் சனங்களையும் பேதஞ் செய்து பிரித்துவிடவேண்டும். கூட்டத்தக்கவர்களைக் கூட்டிக்கொள்ளவும் வேண்டும்.

இந்திரப்பிரத்தநகரியிலே தருமபுத்திரருடைய இராயசூய யாகத்துக்கு எந்த அரசர்களும் வந்துகூடுவர். உம்மொடுகூடிநின்று பயன் தரத்தக்க அரசர்களை ஒற்றர்வழியாலே அந்தரங்கமாக ஆயத்தமாக்கி யாகத்துக்கு வருந் தலைக்கீடாக அங்கே வரும்படி செய்துகொண்டு நீரும் யாகத்துக்கே போகவேண்டும். எங்களுடைய பெரியகாரியத்துக்கும் அங்கே இடம்வரும். சிசுபாலனும் வருவான். அங்கே நீருந் தலைவராய் நிற்பீர்! தருமபுத்திரரும் இடையூறின்றித் தமது யாகத்தைக் கிரமமாக முடிப்பார். அங்கே செய்யும் அக்கிர பூசையையும் உமக்கே செய்வர். "அக்கிரபூசைக்கு இவருந் தக்கவரா?" என்று சிசுபாலனும் அவனோடுசேர்ந்த நரபாலரும் பொறாமைகொண்டு வாயில்வந்தபடியெல்லாம் நிந்தித்து வாதுக்குஞ் சண்டைக்கும் வருவர். அவரோடிணங்கி அங்கே இருக்கும் அரசருள்ளே சிலர், சபையையும் பாராது தாறுமாறாகப் பேசிச் சீறி நாய்போல வறிவிழும் தீயவரோடிணங்கியிருத்தல் சாலவுந் தீதாய்முடியும் என்று தள்ளி உம்மொடுவந்து சாருவர். அப்போது அத்தீயவர் நீர் காட்டும் வீரியம் என்னும் விளக்கொளியிலே விட்டிற்பூச்சிபோல வீழ்ந்து மாரணம்பெற்று மாளக்கடவர். என்று சத்தமராகிய உத்தவர், தமதுகருத்தைச் சொல்லிமுடித்தார். முடித்தவுடனே மூவரும் தத்தம் உறைவிடங்களைச் சார்ந்தனர். கண்ணபிரான் உத்தவர் கருத்தையே உறுதியாகக்கொண்டார்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்,

---

ஸ்ரீ

# பக்கப்போலி.

பக்கப்போலியென்பது பிறர்பொருட்டனுமானத்தின் முதலாவதாயுள்ள பக்கவுறுப்பைப் பிழைபடக்கூறுவதாம்.

இது சிவஞானசித்தியாருள் நால்வகையாகுமெனத் தொகுத்துக் கூறப்பட்டது; இதனை அச் சிவஞானசித்தியா ருரைத்தமிழ்பலவும், ஒருதிறப்படாறுவகுத்துப் பெயர்கூறியும், ஒருசில வுதாரணங்காட்டியும், பிறன்கோட்கூறியும் சென்றன.

அவற்றுட் சிவாக்கிரயோகிகளுரையில் "பக்ஷாபாசாதிகளுக்குத் தொகையாகப் பௌஷ்கரானுசாரமாகத் தோஷங்களினது ஸ்வரூபங் கூறுகின்றது." என்றெழுதப்பட்டிருத்தலால், சிவஞானசித்தியாருட் கூறிய இப் போலிவகைகளுக்கு ஆகரம் பௌஷ்கராகமமாயிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. ஆனால், சிவாக்கிரயோகிகளுரையிற்காட்டிய பௌஷ்கராகம வசனங்களுள் ஒன்றேனும் பக்கப்போலி முதலியவற்றை இத்துணையவெனப் பகுத்துக்காட்டிப் பெயர்கூறியதாகக் காணப்படவில்லை.

ஆதலா லிதனுண்மை பௌஷ்கராகமத்தை ஸமக்கிரமாகப் படித்தோர்வாய்க் கேட்டறியத்தக்கது.

சித்தியாருரைகளுள்ளும் இடையே காட்டப்பட்ட பெயரும், உதாரணங்களும், ஒரு சில செவ்வியவல்ல. எங்ஙனமெனில்? மறைஞானதேசிகருரையுள் பக்கப்போலியின் பாகுபாடுகளை யுரைக்குமிடத்து,—

க. பட்சாபாசம். ௩. பிரதிஞ்ஞாபாசம்

உ. அனுமானபாசம் ௪. வசனபாசம்

என்றெழுதப்பட்டுள்ளன.

இவற்றுள், முதலதாகிய பக்ஷாபாசம் என்பது, "பக்கப்போலி' என்ற பெயரின் பரியாயமாயிருத்தலால், அது நால்வகைப் பக்கப்'

போலிக்கும் பொதுப்பெயராவதல்லது அவற்றுள் ஒன்றற்குச் சிறப்புப்பெயராக வழங்கத்தகுவதன்று.

அதற்குக்காட்டிய உதாரணவிளக்கங்களும் ஒன்றோடொன்று பொருந்தாக்கூற்றாயுள்ளன. அவை வருமாறு:—

"பக்ஷாபாசமாவது— அநுஷ்ணம் வன்னி, ஈதனுமானம். எ - து. பட்சமாயுள்ள வன்னியிடத்துச் சூடில்லாமை யாபாசமாகையாலறிக" என்பனவாம். இங்குக்காட்டியவுதாரணம் பக்கப்போலி ஒன்பது வகையென்னும் பிறன்கோட்கூற்றினுள் ஒன்றாகிய பிரத்தியட்ச விருத்தம் என்னும் பக்கப்போலியின் பாற்படுவதாயிருக்கிறது.

இரண்டாவதாகக்காட்டிய அநுமானபாசம் என்றபெயர் ஏதுப்போலிமுதலியவற்றிற்கும் உரிய பொதுப்பெயராதலால் அதுவும் பக்கப்போலிவகையுள் ஒன்றற்குச் சிறப்புப்பெயராகமாட்டாது. இவ்வாறே பிறவுள்ளனவும் சில பொருந்தாக்கூற்றுக்களாம்; ஆதலால் இத்தகைய வாக்கியங்கள் உரையாசிரியர்கூற்றின்வேறாகப் பிறரெழுதிச்சேர்த்த இடைச்செருகலென விலக்கத்தக்கன.

இனி, அவ்வுரைமுடிவில் "அப்பிரசித்தவிசேடணம், அப்பிரசித்தவிசேடியம், அப்பிரசித்தோபயம், அப்பிரசித்தசம்பந்தம் எனக் கூறுவாருமுளர்" என்று பிறன்கோளாகக்காட்டிய நான்கும் மணிமேகலையுள்ளும் வழங்கப்பட்டன; அனுமானவிளக்கத்தில் விளக்கப்பட்டன. இவற்றுள் அப்பிரசித்தசம்பந்தம் என்ற பெயரே மணிமேகலைப்பதிப்பிலும் பழைய ஏட்டுப்பிரதிகளிலுமுள்ளது. அது "எதிர்க்கிசைந்தபொருள்சாதித்தல்" என்னு மிலக்கணத்தோடும் "வேறுசாதிக்கவேண்டாதாகும்" என்றவிளக்கவுரையோடும் பொருந்தும்படி அப்பிரசித்தாசம்பந்தமென்று அனுமானவிளக்கத்தில் திருத்தியுரைக்கப்பட்டிருக்கிறது. அது இன்னும் ஆராயத்தக்கது.

இனி, சிவாக்கிரயோகிகளுரையில் இந் நான்கனையும் முறையே

1. "ஓரிடத்திற் பக்ஷமில்லாமையினாலே"
2. "ஓரிடத்திற் பக்ஷத்தன்மையில்லாமையினாலே"
3. "ஓரிடத்திற் பக்ஷப் பக்ஷத்தன்மை யிரண்டுமில்லாமையினாலே"



4. "ஓரிடத்தி லிரண்டுமிருந்தும் வியாத்தியில்லாமையினாலே" என இலக்கணங்கூறி, இவற்றுட் பக்ஷமில்லாமைக்கு;—"ஆகாயத்தாமரைவாசனையுள்ளது; தாமரைத்தன்மையால்; குளத்திலுண்டான தாமரைபோலவென்பது" என்று உதாரணங் காட்டப்பட்டது. இதனுள் "ஆகாயத்தாமரைவாசனையுள்ளது" எனப் பக்கவுறுப்புப் பிழைபடக்கூறும் அத்துணையே உதாரணமாம். ஏஞ்சியவை வேண்டாதனவாம்.

இங்குப் பக்கப்பொருளாகக்கூறிய "ஆகாயத்தாமரை"என்னும் சொல்லுக்குப் பொருளில்லாமையா லிது பக்ஷமில்லாமை—என்னும் ஏதுப்போலியாயிற்று. இதுவே அப்பிரசித்தவிசேடியமென்றுவழங்கப்படுவதாம்.

இனி (இரண்டாவதாகிய) பக்ஷத்தன்மையில்லாமைக்கு,—"ஆன்மா நித்தியன் அனுரூபமாகலின் என்பது" என்று உதாரணங்காட்டப்பட்டிருக்கிறது. இங்கும் அனுரூபமாகலின்" என்ற ஏதுவாசகம் வேண்டாகூறுதலாம். எஞ்சிய "ஆன்மாநித்தியன்" என்ற பக்ஷவசனமே யிலக்கியமாம். அது எல்லாம் அநித்தியம் என்னும் புத்தனை நோக்கிக்கூறுமிடத்து அவனுக்கு இங்குப் பக்ஷத்தன்மையாகக் காட்டப்பட்ட நித்தியத்துவமாகியவிசேடணம் ஒரு பொருளிலும் காணப்படாமையால் அப்பிரசித்தவிசேடணமென்னும் பக்கப்போலியாகலாம். புத்தமதத்தினனல்லாத வைதிகனைநோக்கிக் கூறுங்கால் இது பக்கப்போலியாகாது.

இனி (மூன்றாவதாகிய)"பக்ஷம் பக்கத்தன்மை யிரண்டுமில்லாமை" என்னும் ஏதுப்போலிக்கு,—"முயற்கோடு கந்தமுள்ளது; பிருதிவிவிகாரமாகலான்" என் றுதாரணங் காட்டப்பட்டிருக்கிறது. இதன்கண்ணும் "பிருதிவிவிகாரமாகலின்" என்னும் ஏதுவாசகம்வேண்டாது கூறுதலாம். எஞ்சிய"முயற்கோடுகந்தமுள்ளது" என்பதே உதாரணமாக வைத்துக்கொள்ளவேண்டும். அப்படி வைத்துக்கொண்டாலும், முயற்கோடென்பது யாண்டும் பிரஸித்தமில்லாமையால் அது பக்ஷமில்லாமையாகும். கந்தமுள்ளது என்பதிலுள்ள கந்தமுண்மையாகிய பக்கத்தன்மை நாற்றப்பொருள்களிற் பிரஸித்தமாகையால் அது பக்கத்தன்மையில்லதாகமாட்டாது. ஆகவே இது, "ஆகாயத்தாமரை

"நாற்றமுடையது" என்றதுபோலப் "பக்கமில்லாமை" என்னும் பக்கப்போலிக்குக்காட்டியவுதாரணமாய் ஈண்டைக்கேலாதாமெனவறிக. இதற்குதாரணம் அப்பிரசித்தோபயமென்னும்பக்கப்போலிக்கு மணிமேகலையுள்ளும் அநுமானவிளக்கத்துள்ளுங் காட்டியிருப்பது பொருந்தும்.

இனி நான்காவதாகிய பக்கப்போலிக்குக்காட்டியுள்ள பக்கம் பக்கத்தன்மை யிரண்டுமிருந்தும் வியாத்தியில்லாமை" என்ற பெயரும், இலக்கணமும், உதாரணமும் ஒருவாற்றானும் பொருந்துவனவல்ல. மற்றவுரைகாரர் கூறியனவும் நன்குவிளங்கவில்லை: இவையெல்லாம் அளவை நூல்வல்லாரானாராயத்தக்கன.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

---

௨

# தனிநிலைச்செய்யுட்கோவை.

(௨௮௭-ம் பக்கத்தொடர்ச்சி.)

18. புலனெறி போகிய புலவோர் மாக்கடம்
முலக வாழ்க்கைக் கிருவகை யுளவே
அவைதாம்,
பொருள்பல போற்றலும் போற்றிய வாக்கலும்
பொருள்போற் றொருவற் காக்கல் பொருந்தாது
ஆக்கு மொருவற் கப்பொருள் செய்தலும்
பொருந்தா தாற்றல் பொருந்திசி னோரே
பொருள்செயல் வல்லோ ரல்லா தோரே
யாக்கல் வல்லோ ராற்றல ராடவ
ரேனையர் மடவோ ரென்பது கொண்டு
பொருள்செய லாடவர் புறத்தினூஉ மாக்கன்



மடவோர் புறத்தினூஉம் வைத்தனர் மாதோ
இவ்வகை யானே முன்னோர் தம்முள்
ஆடவ ரெல்லா மரும்பொருட் பயிற்சியை
நாடினர் நூல்வழி நங்கைய ரெல்லாம்
வீட்டோ டடலம் விளக்குந் தூய்மையும்
பணிமொழி துளித்தலும் பன்னுங் கிழவோ
னணிமொழி யுளத்தமைத் தத்தக நிற்றலும்
பிணிநின் றடாது மருந்துபல பேணலும்
விருந்துபுறந் தருதலும் வேட்டக வாழ்க்கை
வளத்தக நிற்றலு மனைமாண் பூணலு
மென்றிவை யெல்லா மிணைத்தியைந் தனரே
யிவ்வழிப் போந்த வேந்திழை யாருட்
பாமன் றேற்றினர் பலரே மன்ற

இனியே,

அவ்வெலாங் கல்வியென் றறியா தோரே
பின்னோர் தம்மை யிழித்துரைத் தம்மா
தம்முறு மகளிர்க் கந்நிலை தபுத்த
நம்முறு செயலி னலனளிக் குநரே

இவரே,

கருளி தாரீஇக் காரிய மிழக்குநர்
நான்மறை பரீஇ வழக்குமுறை நூங்குநர்
மடையர் கைக்குட் டம்முயிர் வழங்குநர்

ஆதலின்,

ஆடவர் மடவோ ரவ்விரு வோருந்
தத்தந் நெறியிற் றவாஅ ராகி
நிறத்தொடு நிலைதழீஇ நிற்ற
லறத்திறத் துயருமா றதுவா கும்மே.

19. மணமகன் வாழ வாழவே வாழ்தன்
மணமகன் றாழத் தாழவே தாழ்த
லுரியவினை விளக்கினை யொளியினன் பினட்கே

பொருளெழின் முதலாப் பொலிவுறீஇ யன்பு
புரிதலு மவையே போகுழிக் குறுக்கலு
முரிய பிறவேட் டன்புசெய் குநட்கே
இவட்கே,
பிணியிடைப் பட்டுப் பேணெழில் கெட்ட
கணவனைக் காதல் செய்தன் முதல
வியைத்தல் கருதி யியைத்தன ரான்றோர்
கணவற் றணந்த காரிகை யோளே
யவனோ டெரியிடைப் போதன்மற் றம்மா
கைம்மை காத்தலென் றிவ்விரு பாலே
யாதலிற் கைம்மை யகற்றி மற்றோர்
காதலர்ப் பேணல் கடன்மட வோர்க்கென
நீறுறு மென்பது திண்ண
மோதுகடல் சூழ்ந்த மூதுல கோர்க்கே.

20. வளர்பொரு ளுடையுநர் வாழ்க்கை
கண்பொத் தன்ன காரிருள் கடப் போற்குச்
சேயிடைக் கண்ட தீவிளக் கற்றே
தேய்பொரு ளுடையோர் செய்கைத் தீவிளக்
கொரீஇ வெளிப் புகுநர்தம் முண்மை
மரீஇயற் றென்று வகுத்துரைத் தனரே.

21. வான்பயிர் முதலா வளர்வழிப் புன்னிக்
கழுத்திடைப் பிணித்த கயிற்றினது கடையைப்
பலாவடிப் பிணீஇப் பைம்புல் லார
விடுத்த வெருமை யாயிடை வெம்முட்
செடியொடு சுற்றுபு சிக்கித் திகைதிற
னீக்கிக் காக்குமா றெய்தி நிகழ்த்துவோ
னுடல்படு துயரே யுறுவர்



22. மலர்ந்து வளனுற வளர்வன வளர்தல்
வாய்மட வோர்தம் மனன்பூத் தோரை
யாய்ந்து வதுவை யயர்ந்தன ராயி
னட்பிடை யறுகிலர் நாளிடைக் கொழுநர்த்
தட்டுநவி வினையிடைச் சார்தலுற் றனர்கில
ரறிவுடைக் குழவி யாற்றலொடு பெறுகுவ
ரென்குநர் வதுவை யில்லுழி மலர்ந்த
மாதரார் தங்கண் மனன்பிறர் தம்மைக்
காதல் கூர்ந்து கருதா தேயோ
காதல் கூர்ந்த கணவரை யேயோ
மணப்பர் பிறர்தமை வதுவைபுரி யாரோ
முன்னுள்ளி னோரைப் பின்னே யெள்ளலு
முன்னெள்ளி னோரைப் பின்னே யுள்ளலு
நன்னெறி கொல்லோ நாள்சில பழகிக்
கலத்த லன்பொடு பலநாட் கழிப்புக்
கினியது கொல்லோ வின்றுணைத் தணவுழிந்
தினைவுறு நங்கைய ரிற்றைஞான் றிலர்கொ
லினைய வதுவையொடு கைம்மை நோற்கில்லாப்
பெண்டிர் வதுவையும் பேணுநர் மாண்ட
பெரும்பொருள் பெறீஇயர் பேரியாண்டு படைத்த
வருந்துணை யிழந்த வாயிழை யவரை
வரைந்த வறனில் வன்னெஞ் சோரே
புயனேர் கூந்தற் பிறைநேர் நறுநுதற்
கயனேர் பிறழ்கட் கனிநேர் செவ்வாய்க்
குறுமக ளோரைக் கொதிக்கவைக் குநரே
இனிமற் றம்மா வெழிலிரு மகளிரை
யனையர்தங் நலனே தங்நல னுக்குஞ்
சான்றோ ரறிவுறீஇத் தக்கார்க் கினிதளித்
தான்றவன் பிருவரு மளாஅய்நல னெய்த
நன்றோடு நயந்தழைத் தளப்பில்
வண்மையொ டொருவர்மற் றொருவர்க் குயிருட
னண்ணின ராக நட்பமர் காதலைத்

தொட்டிற் பழக்கத் துறைப்பாற் படுத்தி
வாய்வெறுப்பு முதல மாய்த்து வாழ்ந்தனரே
யாதலிற் சீரிள வாய்தொடி யவரை
யேதமில் காளையர்க் கீகென்
றோதினர் மூதுரை யொண்டவத் தோரே.

23. ஒருதுறைப் பணிமாட் டுற்றோர் தம்முள்
அழுக்கா று முதலதஞ் சினையென வடைஇப்
பழிப்பாஞ் செந்நீர்ப் பதர்பல ரம்மா
கரப்போர் வில்லாக் காண்பி னுளத்து
நன்னிலை நண்ணிய நல்லோர் சிலரே
பின்னவ ரேற்றக் காற்று ராய
முன்னவர் முதல்வர்தம் முறையிருப் புணர்கிலாப்
பின்னவர் தமைக்கூஉய்ப் பேணுதல் காட்டி
யன்பமர் காத லையநின் னாற்ற
லென்னு மறிகிலா தன்னோன் வெய்துறீஇ
நொய்தி னெய்யசொற் கயக்கவாய் நுவன்று
வைதன னெனச்செவி வழிநெருப் பேற்ற
வாய்மடித்து வெகுண்டு துடித்துக் கைபுடைத்
துரப்பியவ ருரைத்தெலாந் தம்மே லேற்றினர்
செங்கட் டையினர் சிந்துறு மூக்கின
ருலகுநனி வினையின ருச்சிக் கூப்பிய
நிலையுடைக் கையினர் நெறிபிறழ் மெய்யினர்
நாநடுங் குரையினர் நவிறற் கேசாய்
செவிபடைத் துழற்றுஞ் செயிருறு தலைவர்
பிறர்மனங் காண்கிலாப் பேதைய ரிவரே
பொருள் பெற்றமையாற் புடைகது வெள்ளிஞரை
யருளற் றெறுக்கி யறத்துவேர் களைகுநர்
இனியே,
விண்கா னெருப்பு நீர்மண் ணென்றாங்
கைம்பெரும் பூதத் தாட்சியு மாற்றலும்
பெற்றில ரதனாற் பிறங்கி
யுற்றன ரம்மா வுலகத்துப் பலரே.



24. தொடுதோன் முதல துன்னிழி சினர்வாழ்
குடில்வாய் நின்று கூறிய வாற்றிப்
படுசோ றுண்டுவளர் பார்ப்பனச் சிறுவன்
முகந்தரு குறிகொடு முந்தைநிலை தெளிந்தாங்
ககங்குழை தந்தை யந்தணன் கடுப்ப
விற்றைஞான் றியலுமித் தமிழர்முன் னிலைதெரி
பெற்றிதரு பண்டைப் பெருநூல்
கற்றறிந் தோர்மனங் கலங்கியழி குநரே.

25. இற்றைஞான் றம்மா வினிதியல் வாழ்க்கை
நற்றமிழ்க் கற்பா னண்ணு தாதலின்
வேற்றுமொழிப் பயிற்சி வேட்டன மென்குநர்
நந்தமிழ் நாட்டு நற்புலத் துழவோர்
நெய்த்தோ ரொத்த நென்முதற் கூலமும்
பிறர்தமைப் பிரிந்த பிறவுந் தம்மிடைக்
குறுகிய நோக்கங் கூர்த்துக் குறிக்கொளா
துண்டுந் துய்த்து முவந்துங்
கண்டுயில் வேட்டுக் கடமையிழந் தோரே.

26. முடிகவித் தென்ன முகமலர்ச்சி செய்குந
வடிவேற் குத்தின் வருத்துந பாலொடு
தேனுண் டாங்குச் செவியிடைப் பொழியுந்
தீஞ்சுவை சான்ற வேம்புதின் றாங்குக்
கயத்தல் சான்ற வாற்றறவழ் சொல்லின
மூப்புத்தளர் வோட்டி வீர முழக்குந
காமப் போக்கைக் கடிந்தரு ளூட்டுந
விருப்புடை நெஞ்சை யிளக்கிக் குழைக்குந
விவற்றெதி ரின்னவும் பிறவு மேற்புழிப்
பாட்டிடை நாட்டிப் பார்க்குவியப் புறுத்தும்
புத்தமு தொத்த முத்தமிழ்ப் புலவோர்
பொருளுடை யவரேற் புடைசூழ் செல்வ
ரருடரு கல்வியி னாட்சியான் றவரே
யில்லா தவரே லிவைபவர்
கல்லா மடவரெனக் கருதாநிலை யவரே.

27. தாய்மொழி வெறுத்துப் புறமொழி தழுவுந
ரவர்மற் றம்மா வயலவர் மனத்த
மறைவுழிக் கரந்திகழ் மாண்பில் செயல
முன்னறி கிலராய்ப் பின்முழு தறிந்தன
ருன்னிய வுடன்பெற் றுயர்ந்திசி னோரே
யாதலி னன்றே யங்ஙன மாற்றின
ரிஃதிற் றுகமற் றிவருட் சிலரே
மரபுவரு தெய்வ மாய்த்துப் புல்லிய
புறக்கோட் காளாய்ப் புகுந்தழி குநர்சிலர்
மீக்குயர்த்து வினையே மயிருடை மேற்றென
முகத்தன தலையின மழிக்குநர் நீட்டுந
ரறுவைமுத லுடையொரீஇ யங்கி கொள்குநரிவர்
மூக்குமுத லுறுப்பெலா முரண்டு களைகில்லா
வாக்கம் புரிதிற னதுநன்று மன்ற
இனியே,
மேனாட்டுரை பயில் சிறுதொழில் வெளிற்றுப்
புலையனைப் பாரான் மன்றுபுகுத் துநர்கொல்
கலைவில் கருத்து மாற்றலுங் கவின்பெறு
முண்மை தெளி கிலரா யுலைவுற்
றொண்மையிழந் தொழிகுந ருலகத்துப் பலரே.

28. எண்ணிய வெண்ணுவ வெல்லாஞ் சிலவொலி
நண்ணுறச் செய்குநர் நாழிகை யிடத்திற்
சேயோர் கருத்துஞ் செயிரற்றுத் தெளிதற்
காயவ் வொலிக்குச் சிலவரி யமைக்குநர்
நெஞ்சே யவற்றை விழிவழி நேடிக்
கொண்டபொரு டீஇக் கூடுமொலி குறித்தமை
யெண்வகை யுறுப்பினு ளேற்குமா முயன்று
புறத்தவர் செவிவழிப் புகுத்திநொடி யுணர்த்துந்
திறத்துயர்வு வழக்காற் றெளிகில ரினியே
வேற்றுமைப் பட்டு விளங்கொலி பிறவான்
அவ்வெலா மளந்தறி யாற்றலுஞ் சான்றனர்
இவற்றுற்,



சிலவொலி குறிப்புமுதற் செய்பறவை முதல
நம்ம னோரி னவின்றுணர் வனவா
வலமர லற்றுங் கறிதல்
புலனெறி போகிய புலவர்க்குக் கடனே.

(தொடரும்.)

S. வயிரமுத்து.

---

௨

## திருக்கச்சிநெறிக்காரைக்காட்டுச்
# சோழசிலாசாசனங்கள்.

(௧௩௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

(திருக்கச்சிநெறிக்காரைக்காட்டில் திருக்கையாலீச்வரர் எனும் ஸ்ரீ சத்தியநாதீசுவரசுவாமிகோவிலின் கர்ப்பக்கிரகத்தின் தெற்கு கருவில், நடுவுப்படை தென்மேற்கில் விநாயகக்கடவுளின்கீழ் ஆரம்பம்.)

கோப்பரகேசரிவன்மரான உடையார்

ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் மெய்க்கீர்த்தி.

1-வது வரி.

திருமன்னிவளர இருநிலமடந்தையும்
போர்ச்சயப்பாவையும் சீர்தனிச்செல்வியுந்
தன்பெருந்தேவியாராக்கி இன்புற
நெடுதியலூழியுள் இடைதுறைநாடுந்
துடர்வனவேலிப் படர்வனவாசியும்
சுள்ளிசூழ்மதிட் கொள்ளிப்பாக்கையும்
நண்ணற்கருமுரண் மண்ணைக்கடக்கமும்
பொருகடலீழத் தரையர்தம்முடியும்
ஆங்கவர்தேவியர் ஓங்கெழியில்முடியும்

முன்னவர்பக்கல் தென்னவர் வைத்த
சுந்தரமுடியும் இந்திரனாரமும்
தெண்டிரையீழ மண்டலமுழுவதும்
எறிபடைக்கேரளன் முறைமையிற்சூடும்
குலதனமாகிய பலர்புகழ்முடியும்
செங்கதிர்மாலையும் சங்கதிர்வேலைத்
தொல்பெருங்காவற் பல்பழந்தீவும்
செருவில்சினவி லிருபத்தொருகால்
அரசுகளைகட்ட பரசுராமன்
மேவருஞ்சாந்திமத் தீவரண்கருதி
இருத்தியசெம்பொற் றிருத்தகுமுடியும்
பயங்கொடுபழிமிக முயங்கியில்முதுகிட்
டொளித்தசயசிங் களாட்பெரும்புகழொடும்
பீடியல்இரட்ட பாடிஏழரை
இலக்கமும்நவநிதிக் குலப்பெருமலைகளும்
விக்கிரமவீரச் சக்கரக்கோட்டமும்
முதிர்வடவல்லை மதுரமண்டலமும்
காமிடைவளைய நாமணைக்கோணையும்
வெஞ்சிலைவீரர் பஞ்சபள்ளியும்
பாரடைப்பழன மாசுணிதேசமும்
அயர்வில்வண்கீர்த்தி ஆதிநகர் அவையிற்
சந்திரன்தொல்குலத் திந்திரதனை
விளையமர்க்களத்து கிளையொடும்பிடித்துப்
பலதனத்தொ(டு)நிறை குலதனக்குவையும்
கிட்டருஞ்(செறி)மிளை ஒட்டவிஷையமும்
பூசுரர்சேர்நற் கோசலைநாடும்
தன்மபாலனைப்பழித்து
வண்டுறைசோலைத் தண்டபுத்தியும்
இரணசூரனை வைகத்தாக்கித்
தக்கணகீர்த்தித் தக்கணஇலாடமும்
கோவிந்தசந்தன மாவிழிந்தோட
தங்காதசாரல் வங்காளதேசமும்



தொடுகடற்சங்கு வொட்டலமஹிபாலனை
வெஞ்சமர்விளாகத் தஞ்சுவித்தருளி
ஒண்டிறல்யானையும் பெண்டிர்பண்டாரமும்
நித்திலநெடுங்கடல் உத்தரலாடமும்
வெறிமலர்த்தீரத் தெறிபுனற்கங்கையும்
அலைகடல்நடுவுட் பலகலஞ்செலுத்திச்
சங்கிராமவிசை யோத்துங்கவர்ம
னாகியகடாரத் தரசனைவாகையம்
பொருகடல்கும்பக் கரியொடுமகப்படுத்தித்
துரிமையிற்பிறக்கிய பெருநெதிப்பிறக்கமும்
ஆர்த்தினகாநாப் போர்த்தொழில்(வாசலில்)
விச்சாதிரத்தோரணமும் மொய்த்தொளிர்
பன்மணிப்புதவமும் கன்மணிக்காதவமும்
நிறைதிருவிசையமும் துறைநீர்ப்பன்னையும்
மன்மலையூரெயிற் றொன்மலையூரும்
ஆழ்கடலகழ்சூழ் மாயிருடிங்கமும்
கலங்காவலவனை இலங்காசோகமும்
காப்புறுநிறைபுனல் மாப்பபழமும்
காவலம்புரிசை மேவிலிபங்கமும்
விளப்பைந்துறுடை வளப்பைந்தூறும்
கலைத்தக்கோர்புகழ் தலத்தக்கோலமும்
திதமாவலவீரனை மாதமலிங்கமும்
கலாமுதிக்கடுந்திறல் இலாடமுத்தேசமும்
தேனக்காவாபொழில் மானக்காவாரமும்
தொடுகடற்காவல் கடுமுறட்கடாரமும்
மாப்பெருந்தண்டாற்கொண்ட
கோப்பரகேசரிவன்மரான

உடையார் ஸ்ரீராஜேந்திரசோழதேவற்கு யாண்டு ௰௩ (13th year of his reign) வது ஜயங்கொண்டசோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துச் சியபுரமான ஸ்ரீ பராந்தகச் சதுர்வேதிமங்கலத்தில் சபையோம் கையெழுத்து:—

(i) எயில்நாட்டுநகரம் காஞ்சிபுரத்து திருக்காரைக்காடு மடமுடைய திருக்காரைக்காட்டு பிச்சன் கைப்பாலித்தேவர்பண்டாரத்து யாங்கள்கொண்டு கடவபொன் தன்மகட்டளைக்கல்லால் துளை நிறை பொன் நூற்றுக்கழஞ்சு இப்பொன் நூற்றுக்கழஞ்சும் (100-கழஞ்சு) கழஞ்சின்வரவரயாண்டுவரை பொலிசைநெல் அருமொழித்தேவன் மரக்காலால் இருகலமாக (2-கலம்) நெற்செய்துவந்த பொலிசைநெல் இருநூற்றுக்கலம்; இந்நெல் இருநூற்றுக்கலமும், காழும், பதரும், வாலும், உலகும், பாற்கூலியும், நாங்களேபட்டு திருக்காரைக்காடுடையார் திருமுற்றத்தேகொடுவந்து இந்த ஸ்தானமுடையார்வசம் ஆட்டாண்டுவரை இத்தேவர் பண்டாரத்து அளந்து, தாவுகொள்வோமாகவும்; இம்முதற்பொன்கொள்கவென்று சொல்லப்பெறுதோமாகவும்; இந்நெற் றண்டவந்தான் மெய்கண்டு சோறுகொடுப்பதாகவும், இதிற்றிறம்பில் தன்மாஸனமுதலாகத் தான் வேண்டுகோவுக்கு நிசதம் கழஞ்சுபொன். (1-கழஞ்சு) பொன் நான் எடுத்துக்கொள்கவென்று இம்மன்றுபாடிறுத்து, இந்நெல் இருநூற்றுக்கலம் ஆட்டாண்டுதோறும் சந்திராதித்தவரை அளப்பதாகவும்; இந்நெல்லுக்கு விரோதநின்றும் கங்கையிடை குமரியிடைசெய்தார் செய்தபாவத்திற் படுவதாகவும்; இப்பாவப்பட்டு இந்நெல் சந்திராதித்தவரை ஆண்டுதோறும் கொடுசென்று அளப்பதாகச் சிலாலேகைசெய்துகொடுத்தோம். முற்சொல்லப்பட்ட ஊற்றுக்காட்டுக்கோட்டத்து, சியபுரநாட்டு, சியபுரமான ஸ்ரீ பராந்தகச்சதுர்வேதிமங்கலத்து ஸபையோம்.

இவர்கள்பணிக்கா எழுதினேன்; இவ்வூர்காணத்தான்,

நூற்றுப்பதினறுவன், விநாயகனேன்.

இவை யென்னெழுத்து ஒன்றும்.

(2) யாண்டு ௰௩ (13th year) வது ஜெயங்கொண்டசோழமண்டலத்து, மணையிற்கோட்டத்து, புரிசைநாட்டு, திருஊறல்புரத்து, அமராபிதச்சருப்பேதிமங்கலத்து ஸபையோங் கையெழுத்து. எயில் கோட்டத்து, எயில்நாட்டு, நகரம் காஞ்சிபுரத்து, திருக்காரைக்காடு மடமுடைய, திருக்காரைக்காட்டுப் பிச்சன், கைய்யால் இத்தேவர் ஸ்ரீ பண்டாரத்தில் யாங்கள் கொண்டுகடவிய பொன் தன்ம கட்டளைக்கல்லால் (அக்காலத்து மாற்று அறியுங்கல்) துளை நிறை (ஓர் எடை)



பொன் ஐம்பதின்கழஞ்சு (50, gold coins) இப் பொன் ஐம்பதின் கழஞ்சினுக்கும், பொன் கழஞ்சினுக்கு ஆண்டுவரை அருமொழித்தேவன் மரக்காலால் நெல் இருகலமாக நெற்செய்துவந்தநெல் நூற்றுக்கலம்; இந்நெல் நூற்றுக்கலமும் (100 kalams of Paddy) காழும், பதரும், பூழ்தியும், உலகும், பாற்கூலியும் நாங்களேபட்டு திருக்காரைக்காடுடையார்வசம் பண்டாரத்தளந்து தரவுகொள்வதாகவும்; இம்முதற்பொன் கொள்கவென்று சொல்லப்பெறுதோமாகவும்....... (4-வது) இந்நெல்லு தண்டவந்தாற்கு மெய்கண்டு சோறுகொடுப்பதாகவும், இதற்றிறம்பில், தன்மாஸனமுதலாகத் தான்வேண்டுகோவுக்கு நிசதம் கழஞ்சுபொன் எடுத்து மன்றுபாடு பெறுவதாகவும் மன்றுபாடுசென்று நின்று மறுக்கவும் புள்ளிகுத்திவிக்கவும், பெறுத தாகவும், இம்மன்றுபாடிறுத்து இந்நெல் சந்திராதித்தவரை ஆண்டுதோறும் அளப்பதாகவும்; இந் நெல் ளப்பதற்கு விரோதநின்றும் கங்கைஇடை குமரியிடை செய்தார் செய்த பாவதிற் படுவதாகவும், இப்பாவப்பட்டு மிந்நெல் சந்திராதித்தவரை ஆட்டாண்டுதோறும் கொடுசென் றளந்துகுடுப்பதாகவும் சிலாலேகைசெய்துகொடுத்தோம்; முற்சொல்லப்பட்ட, மணையில்கோட்டத்து, புரிசைநாட்டு, திருஊறல் புரத்து, அமராபிதச்சருப்பேதிமங்கலத்து ஸபையோம் இவர்கள் பணிக்காவெழுதினேன், இவ்வூர் காணத்தான்,

தனிப்பள்ளி காலகாலநேன்,

இவை யென்னெழுத்து ஒன்றும்

(3) ...ஸ்ரீ...... யாண்டு ௰௩ (13th year) வது ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயில்கோட்டத்து எயில்நாட்டு (...பிரமதேயப்) சிறுகச்சிப்பேட்டு ஸபையோங் கையெழுத்து.

எயில்கோட்டத்து, எயில்நாட்டு நகரம் காஞ்சிபுரத்து திருக்காரைக்காட்டு மடமுடையமாதேவன் உத்தமத்தனை திருக்காரைக்காட்டுப் பிச்சன் கைப்பாலித்தேவர் ஸ்ரீபண்டாரத்து கொண்டுகடவபொன் தன்மகட்டளைக்கல்லால் துளைநிறைபொன் நூற்றுக்கழஞ்சும் இப் பொன் நூற்றுக்கழஞ்சினுக்கு (ஒரு) பொன் கழஞ்சினுக்கு ஆண்டு வரை அருமொழித்தேவன் மரக்காலால் இருகலமாக (2 kalams per Gold Coin) நெற்செய்துவந்த நெல் இருநூற்றுக்கலமும், காழும்,

பதரும், வாலும், பூழ்தியும், நீக்கி, உலகும், பாற்கூலியும் நாங்களே பட்டு திருக்காரைக்காடுடையார் திருமுற்றத்துக்கொடுவந்து தான முடையார்வசம் பண்டாரத்தளந்து தரவுகொள்வதாகவும்; இம் முதற் பொன் கொள்ளவென்று சொல்லப்பெறுவோமாகவும், இந்நெல் தண்டவந்தார்க்கு மெய்கண்டு சோறுங்கொடுப்பதாகவும் இதற்றிறம் பில் தன்மாஸன முதலாகத் தான் வேண்டுகோவுக்கு நிசதம் கழஞ்சு, பொன்கொள்கவென்று (...மன்றுபாடு சென்று..) இந் (5-வதுவரி) நெல் இருநூற்றுக்கலமும் சந்திராதித்தவரை ஆண்டுதோறு மறப்பதா கவு மளப்பதாகவும், இந்நெல்லுக்கு விரோதஞ்செய்தார் கங்கையிடை குமரியிடை செய்தார் செய்த பாவத்துப் படுவதாகவும், இப் பாவப் பட்டு இந்நெல் சந்திராதித்தவரை ஆட்டாண்டுதோறும் கொடுசென் றளந்துகுடுப்பதாகச் சிலாலேகைசெய்துகொடுத்தோம் முற்சொல்லப் பட்ட எயிற்கோட்டத்து, பிரம்மதேயம், சிறுகச்சிப்பேட்டு சபை யோம். இவர்கள் பணிக்கவெழுதினேன் இவ்வூர் காணத்தான்,

புரிவிபலியேன்,
இவை என்னெழுத்து.

(4) யாண்டு ௰௬-வது (16th year. ௬-போலத் தோன்றுகிறது) ஜெயங்கொண்ட சோழமண்டலத்து, ஊற்றுக்காட்டுக்கோட்டத்து, ஊற்றுக்காட்டுநாட்டு உத்தமசோழச் சருப்பேதிமங்கலத்து சபை யோங் கையெழுத்து.

எயில்கோட்டத்து, எயில்நாட்டு, நகரம், காஞ்சிபுரத்து, திருக் காரைக்காட்டு மடமுடைய, மாதேவன் உத்தமகிதன், திருக்காரைக் காட்டுப் பெரியபிச்சன் கையாலி இத்தேவர் ஸ்ரீபண்டாரத்து யாங் கள் கொண்டு கடவபொன் தன்மகட்டளைக்கல்லால் துளைநிறைபொன் நூற்றுக்கழஞ்சும் (100 Gold Coins) கொண்ட பரிசாவது; பொன் கழஞ்சினுக்கு ஆண்டுவரை பொலிசைநெல்லு (பொலிசை=இலாபம், வட்டி) அருமொழித்தேவன்மரக்காலால் நெல் இருகலமாக நெற் செய்துவந்தநெல் இருநூற்றுக்கலமும் (200 kalams of paddy) இந் நெல் இருநூற்றுக்கலமும், காழும், பதரும், வாலும், பூழ்தியுமநீக்கி, உலகும், பாற்கூலியும நாங்களேபட்டு திருக்காரைக்காடுடையார் திரு முற்றத்தே கொடுவந்து அளந்து தானமுடையார்வசம் இத்தேவர்



பண்டாரத்தளந்து தரவுகொள்வதாகவும், இம்முதற்பொன்கொள்க வென்று சொல்லப்பெறுதிருக்கவும்; இந்நெல் தண்டவந்தார்க்கு மெய் கண்டுசோறுகொடுப்பதாகவும்; இதற்றிறம்பில் தன்மாஸனமுதலாகத் தான் ..........................................................................................................

.......(6-வது வரி...) மாகவும் இம் மன்றுபாடு இறுத்து இந்நெல் லிருநூற்றுக்கலமும் சந்திராதித்தவரை ஆட்டாண்டுதோறும் அளப்ப தாகவும் இந்நெல்லுக்கு விரோதஞ்செய்தார் கங்கையிடை குமரியிடை செய்தார்செய்த பாவத்திற்படுவதாகவும் இப்பாவப்பட்டு இந்நெல் சந்திராதித்தவரை ஆட்டாண்டுதோறும் கொடுசென்று அருமொழித் தேவன் மரக்காலால் இருநூற்றுக்கலமுமளந்து குடுப்பதாகவும் சிலா லேகை செய்துகொடுத்தோம். முற்சொல்லப்பட்ட உத்தமச்சோழச் சருப்பேதிமங்கலத்து சபையோம். இவர்கள் பணிக்கவெழுதினேன்.

இவ்வூர் காணத்தான்,
குமரசத்திதநாடையான் நாலாயிரவனேன்,
இவை என்னெழுத்து.

(5) யாண்டு ௰௬ (16th year) வது ஜயங்கொண்டசோழமண் டலத்து, மலையில்கோட்டத்து, கான்றூர்நாட்டு, மழலைமங்கலத்து ஸபையோம் கைபெழுத்து.

எயில்கோட்டத்து, எயில்நாட்டு, நகரம் காஞ்சிபுரத்து திருக் காரைக்காட்டு மடமுடைய மாதேவன் உத்தமகிதனை திருக்காரைக் காட்டுப் பெரியபிச்சன் கையாலி திருக்காரைக்காடுடையார் ஸ்ரீ பண் டாரத்து யாங்கள் கொண்டு கடவ பொன் தன்மகட்டளைக்கல்லால் துளைநிறைபொன் நூற்றுக்கழஞ்சு, இப்பொன் நூற்றுக்கழஞ்சும் (100 gold coins) கொண்டபரிசாவது:— பொன்கழஞ்சினுக்கு ஆண்டு வரை பொலிசை அருமொழித்தேவன்மரக்காலால் நெல் இருகலமாக நெற்செய்து இப்பொன் நூற்றுக்கழஞ்சினுக்குவந்தநெல் இருநூற்றுக்

கலமும். இந்நெல் இருநூற்றுக்கலமும், (ஒ நகழஞ்சுபொன்னிற்கு வட்டிநெல் 2-கலமாக, 100-கழஞ்சினுக்கு 200-கலம் நெல்). காழும், பதரும் வாலும், பூழ்தியும், நீக்கி, உலகும், பாற்கூலியும் ஞங்களேபட்டு திருக்காரைக்காடுடையார் திருமுற்றத்தேகொடுவந்து தானமுடை யார்வசம் இத்தேவர்பண்டாரத்து அளந்து தரவுகொள்வதாகவும் இம் முதற்பொன் கொள்கவென்றுசொல்லப்பெறுதோமாகவும். ......... 7-வது வரி இதற்றிறம்பில் தன்மாஸனமுதலாகத்தான் (வேண்டுகோ வுக்கு) கழஞ்சுபொன் நாளெடுத்து மன்றுபாடுபெறுவதாகவும் இம் மன்றுபாடு சென்றுநின்று மறுக்கவும் புள்ளிகுத்துவிக்கவும் பெறுதோ மாகவும், மன்றுபாடிறுத்தும் இந்நெல் இருநூற்றுக்கலமும் சந்திராதித் தவரை ஆட்டாண்டுதோறும் அளப்பதாகவும், இந்நெல்லுக்குவிரோத நின்றோம் கங்கையிடை குமரியிடை செய்தார் செய்த பாவத்திற்படுவ தாகவும் இப் பாவப்பட்டு இந்நெல் இருநூற்றுக்கலமும் சந்திராதித்த வரை ஆட்டாண்டுதொறும் கொடுவந்து அருமொழித்தேவன்மரக் காலால் அளந்துகொடுப்பதாக சிலாலேகைசெய்துகொடுத்தோம் முற் சொல்லப்பட்ட மணியில்கோண்டத்து, கான்றார்நாட்டு, மழலைமங் கலத்து ஸபையோம்.........

இவ்வூர் காணத்தான்,

வேங்கடவன், தனியன்மலையேன்,

இவை எந்நெழுத்து.

(இன்னும் வரும்.)

காஞ்சிபுரம், அ. நடேசசெட்டி,

85, செட்டித்தெரு,

சின்னக்காஞ்சிபுரம்.



காமமேயூருடனுங்குடியு
மிறையுங்காமமுமிசைக்குநாற்பெயரே ௫0

காளமென்பதுநஞ்சுங்கருமையு
முதிடுங்கொம்புங்கழுவுநாற்பெயரே ௫௧

கானலேயாதித்தகிரணமு
மலைச்சாரலிற்கடற்கரையிற்சோலையும்
பேய்த்தேருடனுப்பளமுநாற்பெயரே ௫௨

காரிகைதானேகட்டழகலித்துறை
அழகும்பெண்ணுமோர்நாலுநாற்பெயர் ௫௩

காவலென்பதுவேயரணுஞ்சிறையு
நீருந்தம்பட்டமென்னுநாற்பெயரே ௫௪

காமுதனாற்பேர்முற்றும்.

காமுதலைம்பெயர்

கானமென்பதுவேயிசையும்வனமும்
பாடியும்பேதையுந்தேருமென்றைம்பேர் ௫௫

காப்பேகாவலுங்கதவும்மூங்கிலுந்
தூசும்நீறுஞ்சொல்லுமைம்பேரே ௫௬

காமுதலைம்பேர்முற்றும்,

காமுதலறுபெயர்

காயமேவெண்காயமுங்கறியும்
பெருங்காயமுமாகாயமுங்கரிப்பும்
உடலுமெனவேஓதுமறுபெயர் ௫௭

காவென்பதுவேதலையுஞ்சோலையும்
வருத்தமுந்தோட்சுமையுடன்கற்பகமும்
வலியுமெனவேமருவுமறுபெயர் ௫௮

காமுதலறுபேர்முற்றும்,

காமுதலெழுபெயர்

காத்திரந்தானேயுரகமுந்திரையும்
உடலுஞ்சிற்றமுங்கிரியுங்கூற்றும்
ஆனைமுற்காலெனவுமேழ்பெயர் ௫௯

காழேயொளியுமாலையுங்கோலு
சேகுமணியுங்கோவையும்பரலும்
வித்துமெனவேவிளங்குமெழுபெயர்

காஞ்சியேயெதிருன்றலும்பெருமையும்
மணிமேகலையுமறிவுமோர்மரமும்
நிலையின்மையுமோருருமென்றெழுபெயர்

காமுதலேழ்பேர்முற்றும்.

காமுதலெண்பெயர்

காரேபருவமுமிருளுங்கருமையும்
நீரும்முகிலும்மாரிக்காலமும்
கருங்குரங்குடனோர்நெல்லுமெண்பேரே

காமுதலெண்பேர்முற்றும்.

காமுதற்பன்னிருபெயர்

காரியேயோர்வள்ளலுங்கருமையும்
சனியும்விடமுங்காக்கையும்வடுகனும்
களருஞ்சாத்தனுங்கருமஞ்செய்யிடனும்
முதுநிலமுங்கீழ்மக்களுங்கரிக்
குருவியுமெனப்பன்னிருபெயர்கூறும்

காமுதற்பன்னிருபேர்முற்றும்.

காமுதற்பதின்முப்பெயர்

காலேகாற்றும்முளையும்பிள்ளையும்
காடும்பாதமுங்காம்புமிடமும்
ஊற்றமுங்கூற்றுந்தேருருளும்வாய்க்காலும்
மரக்காலுங்குறுந்தறியும்பதின்மூன்றே

காமுதற்பதின்மூன்றுபேர்முற்றும்.

காமுதற்பதினாற்பெயர்

காண்டமேயிடுதிரையும்முடிவும்
காடுந்தீர்த்தமுங்காண்டமுநீரும்



புத்தியுந்தூசுந்திரளுங்கோலும்
அன்பும்படைக்கலமும்பணிச்செப்பும்
கமண்டலமெனவும்பேர்பதினான்கே ௧௫

காமுதற்பதினாற்பேர்முற்றும்.

காமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௨௫௫.

கிம்முதற் பலபெயர்ச்சூத்திரம்.

கிம்முதலொருபெயர்

கிரீடமென்பதுமுடியெனலாகும் ௧
கிரீவமேகழுத்தாமெனமொழிவர் ௨
கிஞ்சுகமென்பதுமுருக்கெனலாகும் ௩
கிருமியேபுழுவாமெனவிசைப்பர் ௪
கிசலயந்தானேதளிரெனப்படுமே ௫
கிச்சென்பதுவேநெருப்பெனலாகும் ௬
*கிச்சுடருமேசககரவளளம் ? ௭
கிஞ்சுகமென்பதுகேகயப்புள்ளாம் ௮
?கிஞ்சுதானே§முதலையாகும் ௯
கிடுமுடியென்பதுவாச்சியமாகும் ௧௦
கிலேசமென்பதுவேதுக்கமாகும் ௧௧

கிம்முதலொருபேர்முற்றும்.

கிம்முதலிருபெயர்

கின்னரமேயாழ்நீர்ப்புள்ளிருபெயர் ௧௨
கிங்கரரேயோர்சாதியுந்தூதரும் ௧௩
கிழக்கேகீழும்கிழக்குமிருபெயர் ௧௪
கிடக்கையேபூதலமும்‡பாயலும் ௧௫

* கிச்சுடருமெசககாலாளாம / கிச்சுடரும்மேசககாலாளம } என்பது பிரதிபேதம்.
§ முல்லையாகும் என்பது பிரதிபேதம்.
‡ பாயும் என்பது பிரதிபேதம்.

கிறியேவழியும்பொய்யுமிருபெயர் ௧௬
கிள்ளையேகிளிகுதிரையிருபெயர் ௧௭

கிம்முதலிருபேர்முற்றும்.

கிம்முதன்முப்பெயர்

கிருட்டியென்பதுபிரண்டையும்பன்றியு
மோரீற்றுவுமுரைக்குமுப்பெயரே ௧௮

கிட்டிதானேதலையீற்றுவுந்
தாளமுங்கிட்டியுஞ்சாற்றிடுமுப்பெயர் ௧௯

கிழியேகீற்றுமெழுதிடுபடமு
நிதிப்பொதியெனவுநிகழ்த்துமுப்பேரே ௨௦

கிடையேயுவமையுஞ்சடையுங்கிடையும் ௨௧

கிளத்தலென்பதுநெருங்கலுநிறைதலு
மனுபவித்தலுமெனவாகுமுப்பெயரே ௨௨

கிம்முதன்முப்பேர்முற்றும்

கிம்முதனாற்பெயர்

கிருத்திமமென்பதுபொய்யும்பூதமும்
பண்ணலுந்தோலும்பகருநாற்பேரே ௨௩

கிழமைதானேயாட்சியுமுப்பு
முரிமையும்பண்புமுரைக்குநாற்பெயரே ௨௪

கிளையேமூங்கிலுங்கேளுங்கிளைத்தலு
*மோர்பண்ணெனவுமுரைக்குநாற்பெயரே ௨௫

கிம்புரியேதோளணியுமங்கமுந்
தந்தப்பூணுமுடியுநாற்பேரே ௨௬

கிம்முதனாற்பேர்முற்றும்.

கிம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௨௮௧.

* இசையுமெனவேயியம்புநாற்பெயரே என்பது பிரதிபேதம்.



கீமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

கீமுதலொருபெயர்

கீடமென்பதுபுழுவெனலாகும்
கீணந்தானேகுறைவாகும்மே

கீமுதலொருபேர்முற்றும்.

கீமுதலிருபெயர்

கீலமேபிசினாணியிருபெயர்
கீசகமென்பதுகுரங்குமூங்கிலும்

கீமுதலிருபேர்முற்றும்.

கீமுதன்முப்பெயர்

கீழேயிடங்கீழ்கயமைமுப்பெயரே

கீதமென்பதுவேயிசையுமூங்கிலும்
வண்டுமெனவேவகுக்குமுப்பெயரே

கீலாலந்தானுதிரமுநீருங்
காடியுமெனவேகருதுமுப்பெயரே

கீமுதன்முப்பேர்முற்றும்.

கீமுதனாற்பெயர்

கீரமென்பதுபாலுங்கிளியுங்
காரிப்புள்ளுந்தீபமுநாற்பெயர்

கீமுதனாற்பேர்முற்றும்.

கீமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௨௮௬.

குமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

குமுதலொருபெயர்

குளகமென்பதுபலவகைப்பாடல்

குடிலென்பதுவேவளைப்பெனலாகும்

குண்டகனென்பதுசோரபுத்திரனும்

*குடசமென்பதுவெட்பாலையெனப்படும் ௪
குடுவென்பதுவேகள்ளெனலாகும் ௫
குட்டனென்பதுபிள்ளையாகும் ௬
குணபமேபிணமாமெனவிசைப்பர் ௭
குணுவென்பதுவேபுழுவெனலாகும் ௮
குந்தளமேமயிர்க்குழற்சியாகும் ௯
குசும்பைதானேசெந்திருக்கம்பூ ௧௦
குப்புறலென்பதுபாய்தலாகும் ௧௧
குமலென்பதுவேயரிவாளாகும் ௧௨
குரண்டமேகொக்காமெனக்கூறுவர் ௧௩
குருளைதானேபிள்ளையென்றாகும் ௧௪
குரங்கனேசந்திரனெனவிசைப்பர் ௧௫
குயிலென்பதுவேவாசவன்பெயராம் ௧௬
குருக்கனென்பதுமுலையெனப்படுமே ௧௭
குக்கருனேநாயெனலாகும் ௧௮
குலாலரென்பதுகுயவராகும் ௧௯
குழவேயிளமையாமெனவுரைப்பர் ௨௦
குக்கிலேசெம்போத்தெனப்படுமே ௨௧
குகுரமேயொருதேசமெனப்படும் ௨௨
குறிஞர்தானேவறியராகும் ௨௩
குறும்பூழென்பதுகாடையாகும் ௨௪
குக்குடந்தானேகோழியெனப்படும ௨௫
குன்றவரென்பதுகுறவராகும் ௨௬
குமரமென்பதுகொம்பிலாவிலங்காம் ௨௭
குண்டிகைதானேகமண்டலமெனப்படும் ௨௮

கும்முதலொருபேர்முற்றும்.

---

* குடசமென்பதுவேபாலையாகும் என்பது பிரதிபேதம்.



கும்முதலிருபெயர்

குழிசமென்பதுபாராவளையமுந்
திரண்டவடிவுஞ்செப்புமிருபெயர் ௨௯
குளியமென்பதுவேங்கையுமுண்டையும் ௩௦
குமரனென்பதுகட்டிளமையனுஞ்
செவ்வேளெனவுஞ்செப்புமிருபெயர் ௩௧
குடந்தமென்பதுதிரட்சியுங்கும்பிடும் ௩௨
குடஞ்சுட்டென்பதுபசுவுமெருமையும் ௩௩
குறுந்தடியேகுணில்போதிகையிருபெயர் ௩௪
குவட்டேமலையும்மலையினுச்சியும் ௩௫
குதையேவிற்கோப்புடன்பாசியிருபெயர் ௩௬
குயவேவரைபடுகுவந்தமும்?புகையும் ௩௭
குருடனென்பதுசுக்கிரன்குருடன் ௩௮
குரும்பைதானேபுற்றுஞ்சோறும்
குரும்பையுமென்றேகூறுமிருபெயர் ௩௯
குலிங்கமேயூர்க்குருவியுங்குதிரையும் ௪௦
குவளைதானேவிழியுங்குவளையும் ௪௧
குழலேயுட்டுளைமயிரோடிருபெயர் ௪௨
குழியேவயிறுங்குழியுமிருபெயர் ௪௩
குழிசியென்பதுபானையுமிடாவும் ௪௪
குருகேபுள்ளுமுலகாளிருபெயர் ௪௫
குளவியேபச்சிலையுங்குளவியும் ௪௬
குஞ்சரமேகருங்குவளையும்யானையும் ௪௭
குறுகலென்பதுபறித்தலுங்குறுகலும் ௪௮
குறுமைதானேயழகுங்குறுமையும் ௪௯
குண்டமென்பதுபன்றியுங்கண்டமும் ? ௫
குரவையேகடலோர்கூத்திருபெயர் ௫

குடங்கர்தானேகுடிசையுங்கும்பமும் ௫௨
குத்தியேமண்ணடக்கமிருபெயர் ௫௩
குறடேபலகையுந்திண்ணையுமிருபெயர் ௫௪
குற்றமென்பதுகுற்றலும்பறித்தலும் ௫௫
குரையேயோசையுமிடைச்சொல்லுமிருபெயர்' ௫௬
குத்தலென்பது?கொடுத்தலுங்குத்தலும் ௫௭
குபேரனென்பதுநிலவுங்குபேரனும் ௫௮
குண்டலமேகுழைவிசும்பொடிருபெயர் ௫௯

கும்முதலிருபேர்முற்றும்.

கும்முதன்முப்பெயர்

குடம்பையென்பதுமுட்டையுமேரியுங்
கூடுமெனவேகூறுமுப்பெயரே ௬௦
குடுமிதானேயுச்சியும்வெற்றியும்
வில்லுமெனவேவிதிக்குமுப்பெயரே ௬௧
குயமென்பதுவேயிளமையுமுலையு
மரிவாளெனவுமாகுமுப்பெயரே ௬௨
குயிலேகோகிலமுகில்துளைமுப்பேர் ௬௩
குடையென்பதுதான்குடையுங்கொடையும்
கல்லையுமென்றேகருதுமுப்பெயரே ௬௪
குணிலென்பதுவேகணக்கிடுகயிறுங்
குறுந்தடியுடனேகடிப்புமுப்பெயரே ௬௫
குரம்பையேசிறுகுடிலொடிசையும்
உடலுமெனவேயோதுமுப்பெயரே ௬௬
குளமேநுதலும்வெல்லமுங்குளமும் ௬௭
குறும்பொறைதானேமலையுங்காடுங்
குறிஞ்சிநிலத்தூரெனவுமுப்பேரே ௬௮
குட்டமேதொழுநோயுமாழமுங்
குளமுமென்றேகுறித்திடுமுப்பெயர் ௬௯



கும்பந்தானேயானைமத்தகமுங்
குடமுமொருராசியுங்கூறுமுப்பெயரே ௭௦
குவவேதிரட்சியுங்குவிதலும்பெருமையும் ௭௧
குன்றென்பதுவேகுறைவுமலையுஞ்
சதயநாளுஞ்சாற்றுமுப்பெயரே ௭௨
குருதிதானேயுதிரமுஞ்சிவப்புஞ்
செவ்வாயுடனுஞ்சேருமுப்பெயரே ௭௩
குணுங்கரேதோற்கருவியரிழிஞர்
குயிலுவரெனவுங்கூறுமுப்பெயரே ௭௪
கும்பியென்பதுவேவயிறுமுநிரயமுஞ்
சேறுமெனவேசெப்புமுப்பேரே ௭௫
குடியேயூருங்குலமும்புருவமும் ௭௬
குழையென்பதுவேதளிருஞ்சேறுங்
குண்டலமெனவுங்கூறுமுப்பேரே ௭௭
குவலயந்தானேநெய்தலுங்குவளையும்
பூமியுமெனவேபோற்றிடுமுப்பெயர் ௭௮

கும்முதன்முப்பேர்முற்றும்.

கும்முதனாற்பெயர்

குமுதமென்பதுநெய்தலுமொலியுந்
திக்கயத்தொன்றுங்குமுதமுநாற்பேர் ௭௯
குல்லையென்பதுதுளவும்வெட்சியுங்
குல்லையுங்கஞ்சாவுடனுநாற்பெயர் ௮௦
குடிஞைதானேநதியும்பதியும்
புள்ளின்பொதுவுங்கூகையுநாற்பெயர் ௮௧
குறிஞ்சியேயோரிசையுமோர்பண்ணும்
மலைச்சாரனிலமுஞ்செம்முள்ளியுமாம் ௮௨
குமரியேகற்றாழையுங்காளியுங்
கன்னியுங்கொற்றவையுடனுநாற்பெயரே ௮௩

குபிறலென்பதுகுடைதலுஞ்செறிதலுஞ்
செய்தலுங்கூவலுஞ்செப்புநாற்பேரே

குந்தமேசைவேலுங்குந்தமும்
வியாதியுங்குதிரையும்விதிக்குநாற்பேரே

கும்முதனாற்பேர்முற்றும்.

கும்முதலைம்பெயர்

குடமேகரும்பசுவுமோர்கூத்துங்
கருப்புக்கட்டியுங்கும்பமுமைம்பேர்
குலமேயில்லமுஞ்சாதியுங்கூட்டமுங்
கடைநாளுடனேகுடியுமைம்பெயரே

கும்முதலைம்பேர்முற்றும்.

கும்முதலறுபெயர்

குஞ்சமென்பதுநாழியுங்கவரியுங்
கூனுங்குறளுங்குறளைச்சொல்லுங்
குன்றியுமெனவேகூறுமறுபெயர்

குணமென்பதுவேபண்புங்கும்பமுஞ்
சீர்மையுநாலும்விற்புணைநாணியும்
முக்குணமெனவுமொழியுமறுபெயர்

கும்முதலறுபேர்முற்றும்.

கும்முதலெழுபெயர்

குருவேபெருமையும்வியாதியுநிறமு
மிருமாத்திரையும்வியாழமும்பாரமு
மாசானெனவுமாகுமெழுபெயர்

கும்முதலெழுபேர்முற்றும்.

கும்முதலெண்பெயர்

குளிரேமழுவுநண்டுங்குளிர்ச்சியுங்
குடமுழாவுங்கிளிகடிகருவியு
மிலைமூக்கரிதருகருவியுமிருத்தலு
மீனின்சினைமுட்குமெனவுமெண்பெயரே



குரலேமிடறுமெழுத்துங்கதிருஞ்
சிறகாற்றலும்பெண்மயிருந்தினையும்
யாழ்நரம்பும்பாதிரியுமெண்பேரே கூஉ

கும்முதலெண்பேர்முற்றும்.

கும்முதலொன்பான்பெயர்

குருகேநாரையுங்கோழியும்புள்ளும்
மூலநாளும்வெண்மையுமிளமையுங்
கொல்லனுலைமுக்கொடுகுருக்கத்தியுங்
கைவளையெனவுங்கருதுமொன்பான்பெயர் கூங

கும்முதலொன்பான்பேர்முற்றும்.

கும்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-ஙூஅஉ.

கூமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

கூமுதலொருபெயர்

கூகையென்பதுகோட்டானாகும்
கூழ்ப்பதந்தானேயுரகமாகும்
கூட்டைதானேயொருகூத்தாகும்
கூதளமென்பதுகூதாளிப்பெயர்
கூவிளந்தானேவில்வமாகும்
கூவிரென்பதுமடையராகும்
கூவிதிதானேதேரெனப்படுமே
கூவிரியேதேர்மொட்டெனலாகும்
கூளியரென்பதுபோர்செயும்வீரர்
கூளிக்குயமேயரிவாளாகும்
கூர்மமென்பதுவேயானையின்பெயரே
கூச்சமேபயமாமெனவிசைப்பர்
கூறென்பதுவேதுண்டித்தலாகும்
கூம்புதானேமொட்டெனலாகும்

கூமுதலொருபேர்முற்றும்.

கூமுதலிருபெயர்

கூரலென்பதுமாதர்மயிரையும்
புள்ளினிறகையும்போற்றுமிருபெயர்
கூனல்தானேசங்குங்கூனலும்
கூத்தனென்பதுநடனுமுயிரும்
கூர்மிகுதியுங்கூர்மையுமாகும்
கூற்றேகாலனுங்கிளவியுமிருபெயர்
கூவுதல்கரைதலுமொழிதலுமிருபெயர்

கூமுதலிருபேர்முற்றும்.

கூமுதன்முப்பெயர்

கூந்தலேமயிற்பீலியுங்கமுகும்
மாதர்மயிருமருவுமுப்பெயரே
கூட்டமேபிண்ணாக்குங்கூட்டமும்
பருகுவனவுமபகருமுப்பெயரே
கூழென்பதுவேபொன்னும்பயிருங்
கூழுமெனவேகூறுமுப்பெயரே
கூவிரமென்பதுதேருங்குவளையுந்
தேரிற்கொடிஞ்சியுஞ்செப்புமுப்பெயரே

கூமுதன்முப்பேர்முற்றும்.

கூமுதனாற்பெயர்

கூடமேவஞ்சனையுமறைவுங்
கொல்லனடித்திடுஞ்சம்மட்டியுமயர்
மலையினுச்சியுமருவுநாற்பெயரே

கூமுதனாற்பேர்முற்றும்.

கூமுதலறுபெயர்

கூளியேபேய்சுற்றமிடபந்
தொகுதிகுற்றங்குறளெனவறுபெயர்

கூமுதலறுபேர்முற்றும்.



கூமுதலெண்பெயர்

கூழையென்பதுசிறகும்பீலியும்
மாதர்மயிருமுரகமும்பொன்னு
நடுவுஞ்சேறும்படையுறுப்புமெண்பேர்
கூலமேகடற்கரையும்வரம்பும்
வீதியும்பாகலும்பண்ணிகாரமும்
வானரத்துடனும்விலங்கின்வாலும்
பசுவுமென்றேபகருமெண்பெயரே

கூமுதலெண்பேர்முற்றும்.

கூமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௪௧0.

கெம்முதலொருபெயர்

கெச்சமென்பதுமுல்லையெனப்படும்
கெழுமுதல்தானேமுளைத்தலாகும்
கெடலணங்கென்பதுமூதேவியாகும்
கெண்டுதருனேகீர்த்தலாகும்
கெழுவென்பதுவேநிறமெனப்படுமே

கெம்முதலொருபேர்முற்றும்.

ஆகச்சூத்திரம்-௪௧௫.

கேமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

கேமுதலொருபெயர்

கேகயமென்பதுமயிலெனப்படுமே
கேசரரேவித்தியாதரராகும்
கேதகைதானேதாழையெனப்படும்
?கேதனென்பதுகாமன்பெயரே
கேதநமேதுகிற்கொடியெனலாகும்
கேயூரந்தான்றோளணியாகும்
கேரளனென்பதுசேரனாகும்

கேளியேமங்கையர்விளையாட்டாம் ௮
கேரண்டந்தான்காக்கையெனுமே ௯

கேமுதலொருபேர்முற்றும்.

கேமுதலிருபெயர்

கேசரமேமகிழ்பூந்தாதிருபெயர் ௧௦
?கேடமேகிளியாறெனவிருபேர் ௧௧
கேதாரமென்பதொருபட்டினமு
மயிலுமென்றேமதிக்குமிருபெயர் ௧௨
கேவலமென்பதுமுத்தியுந்தனிமையும் ௧௩
கேழலேயிபம்பன்றியென்றிருபெயர் ௧௪

கேமுதலிருபேர்முற்றும்.

கேமுதன்முப்பெயர்

கேட்டையென்பதோர்நாளுங்கிழத்தியு
மூதேவியுமெனமொழியுமுப்பெயரே ௧௫
கேள்வியேசெவிகல்வியாழ்மூன்றே ௧௬
கேகயமென்பதுபாட்டுமோர்புள்ளும்
வில்லுமெனவேவிளம்புமுப்பெயரே ௧௭
கேடகமென்பதுபரிசையும்பலகையு
மூருமெனவேயுரைக்குமுப்பெயரே ௧௮
கேழென்பதுவேயொளியுமொப்பு
நிறமுமென்றேநிகழ்த்துமுப்பெயரே ௧௯

கேமுதன்முப்பேர்முற்றும்.

கேமுதனாற்பெயர்

கேதுவென்பதுதுவசமுஞ்சிகியுங்
கேதுவுமோர்நாளுடனாற்பெயரே ௨௦

கேமுதனாற்பேர்முற்றும்.

கேமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௬௩௫.



கைம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

கைம்முதலொருபெயர்

கைசகர்தாமேவன்னியராகும் ௧
கைக்களிறென்பதுகுஞ்சரத்தின்பெயர் ௨
கைதவனென்பதுபாண்டியனாகும் ௩
கைதொடலென்பதுபோசித்தலாகும் ௪
கைப்புலிதானேயானையின்பெயராம் ௫
கைம்மலையென்பதுகுஞ்சரமாகும் ௬
கையர்தானேகள்ளரெனப்படும் ௭
கையடையெனலேயடைக்கலமாகும் ௮
கையரியென்பதுதேடலாகும் ௯
?கையுறைதானேகாட்சியாகும் ௧௦
கைவலமென்பதுபணித்தலாகும் ௧௧
கைவாரந்தான்வாழ்த்துதலாகும் ௧௨
கையாறெனலேயொழுகலாற்றின்பெயர் ௧௩
கைதைதானேதாழையாகும் ௧௪
கைரவமென்பதுகுமுதமாகும் ௧௫
கைத்தென்பதுவேகையகத்துப்பொருள் ௧௬
கைதயனென்பதோர்மன்னனாகும் ௧௭

கைம்முதலொருபேர்முற்றும்.

கைம்முதலிருபெயர்

கைதவமேபொய்துக்கமிருபெயர் ௧௮
கைதூவாமையேபடையின்விகற்பமுங்
கையொழியாமையுங்காட்டுமிருபெயர் ௧௯
?கையமேநீர்கடலுடனிருபெயர் ௨௦
கைக்கிளைதானேயாழினரம்பு
மொருதலைக்காமமுமோதுமிருபெயர் ௨௧

கைம்முதலிருபேர்முற்றும்.

---

* கைசிகர் என்பது பிரதிபேதம்.

### கைம்முதனாற்பெயர்

கைபுனையென்பதுகெடுக்கையுஞ்செய்பமும்
பூவும்விழியும்போற்றுநாற்பெயரே ? ௨௨

கைம்முதனாற்பேர்முற்றும்.

### கைம்முதலெண்பெயர்

கையேயொழுக்கமுபிடமுங்குற்றமுஞ்
சிறுமையுஞ்சார்பும்படையின்வகுப்புங்
கையுமொப்பனையுங்காட்டுமெண்பெயரே ௨௩

கைம்முதலெண்பேர்முற்றும்.

கைம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௪௫௮.

## கொம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

### கொம்முதலொருபெயர்

கொங்கனென்பதுசேரனாகும் ௧
கொசிகந்தானேபுடவையாகும் ௨
கொடிஞ்சியேதேர்மொட்டெனலாகும் ௩
கொடுமரமென்பதுவில்லெனப்படுமே ௪
கொள்ளந்தானேகுழைசேறாகும் ௫
கொடைமடமேவரையாதுகொடுத்தல் ௬
கொறியென்பதுவேஆடெனலாகும் ௭
கொற்றவைதானேதுர்க்கையாகும் ௮
கொடுமையென்பதுவேண்டாவார்த்தை ௯
கொப்பூழ்தானேயுந்தியாகும் ௧௦
கொடுமுடியென்பதுமலையினுச்சியாம் ௧௧
கொலுவேசேவையெனலாகும்மே ௧௨

கொம்முதலொருபேர்முற்றும்.



### கொம்முதலிருபெயர்

கொட்பேதிரிதலுஞ்சுழற்சியுமிருபெயர் ௧௩
கொச்சையேவெள்ளாடுங்கொச்சையும் ௧௪
கொல்லையென்பதுசோலையுங்கொல்லையும் ௧௫
கொளையேயிசையும்பாட்டுமிருபெயர்- ௧௬
கொப்பரமேமல்லடைவுமுன்கையும் ௧௭
கொச்சியென்பதுதீயுங்கொச்சியும் ௧௮
கொடிறேகதுப்பும்பூசமுமிருபெயர் ௧௯
கொண்டையென்பதுவேயிலந்தையின்கனியு
மயிர்முடியெனவும்வைக்குமிருபெயர் ௨௦
கொண்மூவேவிண்மேகமிருபெயர் ௨௧
கொண்டலேகீழ்காற்றுமேகமும் ௨௨
கொற்றமென்பதுவேயரசினியலும்
வெற்றியுமெனவேவிதிக்குமிருபெயர் ௨௩

கொம்முதலிருபேர்முற்றும்.

### கொம்முதன்மூப்பெயர்

கொந்தளமேபெண்மயிருங்குருளையு
மயிர்க்கொத்தெனவுமதிக்குமுப்பேரே ௨௪
கொற்றியென்பதுவேயாசாளுந்துர்க்கையு
மிளங்கன்றெனவுமிசைக்குமுப்பெயரே ௨௫
கொல்லியேயோர்மலையுங்கொல்லியு
மிசையுமென்றேயிசைக்குமுப்பெயரே ௨௬
கொங்கென்பதுவேதேனும்மணமுந்
தாதுமென்றேசாற்றுமுப்பெயரே ௨௭

கொம்முதன்மூப்பேர்முற்றும்.

### கொம்முதனாற்பெயர்

கொல்லென்பதுவேயையமும்வருத்தமுங்
கொலையேவலுமசைச்சொல்லுநாற்பெயரே ௨௮

கொடும்பையென்பது* குன்றமுமருவியுந்
தாம்பையும்பச்சிலையுட னாற்பெயரே
கொன்னையச்சமும்பெருமையும்பொழுதும்
பயனிலாமையும்பகருநாற்பெயர்
கொக்கரையென்பதுவலையுஞ்சங்கும்
வில்லும்பாணியுமேவுநாற்பெயரே

கொம்முதனாற்பேர்முற்றும்.

கொம்முதலைம்பெயர்

கொட்டியென்பதுபாத்திடுகுறியும்
வாயிலுங்கூட்டத்துடனுங்கொட்டியுங்
கூத்துமெனவேகூறுமைம்பெயரே
கொக்கேகுதிரையுமுலநாளு
மாமரமுடனேவருஞ்செந்நாயு
மோர்புள்ளெனவுமோதுமைம்பெயரே

கொம்முதலைம்பேர்முற்றும்.

கொம்முதலறுபெயர்

கொம்மையேகைகுவித்துக்கொட்டலு
மிளமையும்வட்டமுமுலையுந்திரட்சியு
மழகுமெனவேயறுபெயராகும்

கொம்முதலறுபேர்முற்றும்.

கொம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்

ஆகச்சூத்திரம்-௪௯௨.

கோமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

கோமுதலொருபெயர்

கோகநகமென்பதுதாமரையாகும்
கோகமேசக்கரவாகப்புள்
கோசமேபண்டாரமாகும்

* குளமுமருவியும் என்பது பிரதிபேதம்.



கோடியரென்பதுகூத்தராகும் ௪
கோதண்டந்தான்வில்லெனப்படுமே ௫
கோணையென்பதொலியெனலாகும் ௬
கொணைதானேகொடுமையெனப்படும் ௭
கோமாயுவென்பதுநரியெனலாகும் ௮
கோரண்டந்தான்குறிஞ்சியெனப்படும் ௯
கோரகமென்பதுவட்டிலாகும் ௧௦
கோரிலைதானேயகப்பையெனலாம் ௧௧
கோலாகலமேயோசையாகும் ௧௨
கோலியென்பதுமயிரெனப்படுமே ௧௩
கோவாவாரமேசந்தனமாகும் ௧௪
கோழம்பரென்பதுகழாயராகும் ௧௫
கோபாலரென்பதிடையராகும் ௧௬

கோமுதலொருபேர்முற்றும்.

கோமுதலிருபெயர்

கோசனகமென்பதுகையாந்தகரையு
நிலக்கடம்பெனவுநிகழ்த்துமிருபெயர் ௧௭
கோசிகமென்பதுசாமவேதமும்
பட்டாடையுமெனப்பகருமிருபெயர் ௧௮
கோமானேமூத்தோனும்பன்றியும் ௧௯
கோழியேயுறையூருங்கோழியும் ௨௦
கோவலனென்பதுவசிட்டனுமீசனும் ௨௧
கோளியேயால்கொழிஞ்சியிருபெயர் ௨௨

கோமுதலிருபேர்முற்றும்.

கோமுதன்முப்பெயர்

கோத்திரமென்பதுபூமியுமலையுங்
குலமுமென்றேகூறுமுப்பெயரே ௨௩

கோடியேயோசெண்ணும்புதுமையுந்
தூசமென்றேசொல்லுமுப்பெயரே
கோணமென்பதுகுதிரையும்வாளு
மூக்குமெனவேமொழியுமுப்பெயரே
கோடிகமேபூந்தட்டுந்துகிலுங்
கெண்டிகையெனவுங்கிளக்குமுப்பேரே
கோடலென்பதுவளைதலுங்கொள்ளலுங்
காந்தளெனவுங்காட்டுமுப்பெயரே

கோமுதன்முப்பேர்முற்றும்.

கோமுதனாற்பெயர்

கோகிலமென்பதுகுயிலும்பல்லியுந்
துளையுமந்தியுஞ்சொல்லுநாற்பெயரே
கோணலேகூன்வளைவுஞ்சிந்தும்
மாறுபாடெனவும்வைக்குநாற்பெயரே
கோரமென்பதுவட்டிலுங்கொடுமையுங்
குதிரையும்பூமொட்டுடனுநாற்பெயரே
கோடையேமேல்காற்றுங்குதிரையுங்
கோடையும்வெண்காந்தளுநாற்பெயரே

கோமுதனாற்பேர்முற்றும்.

கோமுதலறுபெயர்

கோதையேமுன்கைத்தோற்கட்டு
மாலையுமொழுங்குஞ்சேரனுமயிரு
மகளிரெனவும்வருமப்பேராறே

கோமுதலறுபேர்முற்றும்.

கோமுதலெழுபெயர்

கோடரமேமரக்கொம்புஞ்சோலையுங்
குதிரையுங்குரங்குமயிருஞ்சாந்து
மரச்செறிவுடனும்வைக்குமேழ்பெயரே



கோசமேமதிலுறுப்புமாண்குறியும்
முட்டையும்பண்டாரமுங்கருகூலமு
முறையும்வீதியுமொழியுமேழுபெயர் ௬௪

கோமுதலெழுபேர்முற்றும்.

கோமுதலெண்பெயர்

கோலமேநீர்க்கொழுந்தும்பல்கோலமும்
பாக்கும்பீர்க்குமிலந்தையின்கனியு
மழகுமொப்பனையும்பன்றியுமெண்பெயர் ௬௫

கோடேவரம்புமூதிடுகொம்பு
மரத்தின்கோடும்விலங்கின்மருப்பும்
வெற்பின்முகடுஞ்சங்குநீர்க்கரையும்
பக்கமுமென்றேபகருமெண்பெயரே ௬௬

கோமுதலெண்பேர்முற்றும்.

கோமுதற்பத்துப்பெயர்

கோளேவலியுநாளுங்கோடலுங்
கோளுங்குணமும்பொய்யுங்கொலையுங்
கோட்பாடெனவக்கிரகங்களு
மிடையூறெனவுமிசைக்குமீரைம்பெயர் ௬௭

கோமுதற்பத்துப்பேர்முற்றும்.

கோமுதற்பதினொருபெயர்

கோலேயம்புமியாழினரம்புந்
துலாமுமிலந்தையுந்தூகிலிகையுடனே
யஞ்சனக்கோலுமளந்திடுங்கோலுங்
கோலுஞ்சமட்டியும்வாட்கோலுஞ்
செங்கோலுடனும்பதினொருபெயரே ௬௮

கோமுதற்பதினொருபேர்முற்றும்.

கோமுதற்பதின்மூப்பெயர்

கோவேயேவலும் விழியும்பசுவுங்
கணையும்மன்னனுந்திசையுங்ககனமுங்
குலிசமும்பாருங்கிரணமுநீரு
முரையுஞ்சுவர்க்கமுமொருபதின்மூப்பெயர்

கோமுதற்பதின்மூப்பேர்முற்றும்.

கோமுதற்பதினாற்பெயர்

கோட்டமென்பதுகோணும்படப்பையு
நாடுங்கோவிலுமவாசமுங்குரங்கு
நீர்நிலையுடனுஞ்செங்கோட்டியாழும்
பசுவின்கூட்டமுந்தருமமுமுங்குளமும்
வயலுமிபமுமெளவியமுமெனப்
பதினாற்பேரும்பகருமிதற்கே

கோமுதற்பதினாற்பேர்முற்றும்.

கோமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௩௱௨.

கௌமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

கௌமுதலொருபெயர்.

கௌசிகனென்பதுவிசுவாமித்திரன்

கௌமுதலொருபேர்முற்றும்.

கௌமுதலிருபெயர்.

கௌடந்தானேயொருகொடியுட
மொருதேசமுமெனவோதுமிருபெயர்

கௌமுதலிருபேர்முற்றும்.

கௌமுதனாற்பெயர்

கௌசிகமேயொருராகங்கோட்டான்
விளக்கின்றண்டுபட்டாடைநாற்பெயர்



கௌவையென்பதுதுன்பமுங்கள்ளு
மெள்ளிளங்காயும்பழிச்சொல்லுநாற்பெயர்

கௌமுதனாற்பேர்முற்றும்.

கௌமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௩௱௬.

திருப்பட்டீச்சுரச்செழுந்தமிழ்ப்புராணந்
தெரித்தநற்சிதம்பரரேவணசித்த
னோதியதமிழகராதிநிகண்டினிற்
ககராதிப்பேரிரண்டாந்தொகுதி
பகர்ந்தவைஞ்ஞூற்றுமுப்பத்தேழே.

இரண்டாவது

ககராதிப்பெயர்த்தொகுதிமுற்றும்.

மூன்றாவது

சகராதிப்பெயர்த்தொகுதி.

ஞானதீர்த்தநலம்பெறப்படைத்த
தேனுநாயகன்றிருவடிவழுத்திச்
சகராதிப்பெயர்த்தொகுதிசாற்றுவாம்.

சம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

சம்முதலொருபெயர்

சண்முகனேமயிலூர்தியாகும்
சகுடமென்பதுசேம்பெனலாகும்
சகுல்லிதானேயப்பமாகும்
சகடென்பதுவேபண்டியாகும்
சங்கிராமமென்பதுபோரெனலாகும்
சகடமேயூர்க்குருவியாகும்
சண்டன்றானேசமனெனச்சாற்றுவர்
சண்டியேமாகாளியெனப்படும்
சமியேவன்னிமரமெனப்படுமே

சட்டித்தருனேயழித்தலாகும் கO
சமங்கையேவறட்சுண்டிலாகும் கக
சதுக்கமேநாற்சந்தியாகும் கஉ
சல்லியந்தானேமுட்பன்றியாகும் கங
சந்திரமென்பதுபொன்னின்பெயரே கச
சந்திரதிலகமேசந்தனமாகும் கரு
சம்பரமென்பதுநீரெனலாகும் கசு
சயந்தன்றனே இந்திரன்மகனும் கஎ
சம்போரென்பதுபூகமாகும் கஅ
சலிலமென்பதுநீரெனலாகும் ககூ
சலபம்விட்டிற்பறவையாகும் உO
சரோருகமென்பதுதாமரையின்பேர் உக
சலநிதிதானேகடலெனப்படுமே உஉ
சல்லியனென்பதுசுக்கிரன்பெயரே உங
சவரர்தானேவேடரெனப்படும் உச
சழக்கென்பதுவேகுற்றமாகும் உரு
சரியரேகாழியரெனப்படுமே உசு
சச்சரியென்பதுவாத்தியத்தின்பெயர் உஎ
சலஞ்சலந்தானேசங்கெனலாகும் உஅ

சம்முதலொருபேர்முற்றும்.

சம்முதலிருபெயர்

சடிலமேமயிர்ச்சடையுர்துன்றலும் உகூ
சங்கேகோழியுஞ்சங்குமிருபெயர் ௩O
சகடையென்பதுபண்டியும்பேரியும் ௩க
சண்டமென்பதுசினமும்பெருமையும் ௩உ
சராவமென்பதுசலாகையுமகலும் ௩௩
சந்தானந்தான்கற்பகத்துடனே
சந்தானமெனவுஞ்சாற்றுமிருபெயர் ௩ச



மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1920 ஞு ஜூலைமீ த்திய வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1920 July | | | 1919 July | | | விவரம் | செலவு 1920 July | | | 1919 July | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION: (1) Donations & Grants வகையில் வரவு ... | 1261 | ... | ... | ... | ... | ... | I GENERAL SECTION: (1) ESTABLISHMENT:— (a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் | 92 | 2 | 8 | | | |
| (2) மதுரை Co-operative storesல் டெபாஸிட் செய்துள்ள தொகையின்பேரில் வட்டி வரவு | 5 | 15 | 2 | ... | ... | ... | (b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ... | 95 | ... | ... | | | |
| (3) சங்கபதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 32 | 10 | ... | ... | ... | ... | (c) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 45 | ... | ... | | | |
| (4) அவசரச்செலவுக்காகக் கடன்வாங்கிய வகையில் வரவு ... | 150 | ... | ... | ... | ... | ... | (2) Stationery, contingencies வாங்கியவகையில் செல் ... | 22 | 13 | 6 | | | |
| (5) Miscellaneous வரவு... | 34 | ... | ... | ... | ... | ... | (3) Furniture வாங்கிய வகையிற் செல் ... | 30 | 13 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 1483 | 9 | 2 | 321 | 3 | ... | | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| II EDITORIAL SECTION: | | | | | | |
| (2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ... | 42 | 11 | ... | ... | ... | ... |
| (3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ... | 27 | 5 | ... | ... | ... | ... |
| மொத்தம் ரூ ... | 70 | ... | ... | 3 | 13 | 1 |
| III PRESS SECTION: (a) Printing | | | | | | |
| (1) சங்கம்பவர்ப்பிரஸ்ஸில் நடந்தவேலைகளுக்கு அச்சுக்கூலி வகையரா வரவு ... | 4 | ... | ... | ... | ... | ... |
| (2) Miscellaneous வரவு | 12 | ... | ... | ... | ... | ... |
| (B) Binding | | | | | | |
| (1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்கு, பைண்டிங் சார்ஜ் வரவு ... | 8 | 4 | .. | ... | ... | ... |
| (2) Miscellaneous வரவு ... | 1 | ... | ... | ... | ... | ... |
| மொத்தம் ரூ ... | 25 | 4 | ... | 412 | 3 | 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (4) சங்கக்கட்டட வகையரா ரிப்பேர் சம்பந்தமாகச் செலவு ... | 843 | 11 | 4 | | | |
| (5) தபால், தந்திவகையில் செல ... | 9 | 7 | ... | | | |
| (6) அவசரச் செலவுக்காகக் கடன்வாங்கியதை வாபஸ்செய்த வகையில் ... | 150 | ... | ... | | | |
| (7) Miscellaneous செலவு | 6 | 12 | 6 | | | |
| மொத்தம் ரூ ... | 1295 | 12 | ... | 333 | 11 | 7 |
| II EDITORIAL SECTION: | | | | | | |
| (1) செந்தமிழ்ப்பத்திரிகைக்குக் காகிதம் வாங்கிய வகையில் செலவு ... | 51 | 2 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 51 | 2 | ... | 24 | 10 | 6 |
| III PRESS SECTION: | | | | | | |
| (a) Printing | | | | | | |
| (1) அச்சாபீஸ் உபயோகத்திற்கு Leads வார்த்தவகையில் கூலி செல்லாக்கியது ... | 40 | 8 | ... | | | |
| (2) Furniture வாங்கிய வகையில் செலவு ... | 5 | 14 | ... | | | |
| (3) ஷெ ரிப்பேர் வகையில் செலவு ... | 4 | ... | ... | | | |
| (4) Contingencies வாங்கிய வகையில் செலவு ... | 17 | 14 | 6 | | | |
| (5 Special staffக்கு சம்பளம் செல்லாக்கிய வகையில் ... | 41 | 3 | ... | | | |
| (6) சங்கம்பிரஸ் குத்தகைதார் Securityக்காக டெபாஸிட் செய்திருந்த தொகை ரூ 750ல், வாபஸ் செய்தது ... | 251 | 14 | 2 | | | |
| (7) தேவகோட்டையினின்றும் அச்சாபீஸ் சாமான்களேற்றி வந்த வண்டிவாடகை வகையரா Miscellaneous செலவு ... | 21 | 4 | ... | | | |
| மொத்தம் ரூ | 382 | 9 | 8 | | | |
| (b) Binding | | | | | | |
| (1) Furniture வாங்கியவகையில் செலவு ... | ... | 8 | ... | | | |
| (2) Contingencies வாங்கிய வகையில் செலவு ... | 13 | 4 | 3 | | | |
| மொத்தம் ரூ | 396 | 5 | 11 | 348 | ... | 3 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 1578 | 13 | 2 | 737 | 3 | 1 | ஆக மொத்தம் செலவு ரூ. | 1743 | 3 | 11 | 706 | 6 | 4 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையி ருப்புத் தொகை ரூ. ... | 341 | 1 | 8 | 1137 | 1 | 3 | மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ... | *176 | 10 | 11 | 1167 | 14 | ... |
| ஆகமொத்தம் ரூ. ... | 1919 | 14 | 10 | 1874 | 4 | 4 | ஆகமொத்தம் ரூ. ... | 1919 | 14 | 10 | 1874 | 4 | 4 |
| | | | | | | | *By C. Pass Book 15— 0— 0<br>Cash on hand 161—10—11<br>176—10—11 | | | | | | |

*Audited and found correct.*

*V. S. Ramaswami,*

AUDITOR.

*J. Sudarsanachari,*

*Joint Secretary,*

MADURA TAMIL SANGAM.

22—8—20.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி கஅ] ரௌத்திரி-ஸு ஆடிமீ [பகுதி கூ.

Vol. XVIII. July—August. 1920. No. 9.

## ஏதுப்போலிவிளக்கம்.

ஏதுப்போலிவிஷயமாகச் சென்ற பங்குனிமாதச் செந்தமிழ்ப் பகுதியில், சுன்னாகம் வித்வான் ஸ்ரீமத்—அ. குமாரசுவாமிப்பிள்ளை யவர்கள் காட்டியன பலவும் பொருத்தமுள்ளனவேயாயினும், அவற் றுள், பெயர்மாத்திரங் கூறி விடப்பட்டவற்றை யுதாரணங்காட்டி விளக்கியும், தாம் விளக்கியவற்றிற் செய்யவேண்டிய திருத்தங்களைக் காட்டியும், ஒரு தெளிவுரையெழுதி இச்செந்தமிழ்ப் பகுதியில் வெளி யிடவேண்டுமென்று அவர்கள் விரும்பியதற் கிணங்கி இஃதெழுதப் பட்டிருக்கிறது.

விருத்தவகை இரண்டற்கும் பெயர்கூறியவிடத்து முதலதற்கு, "பக்கவிபக்கவியாபகவிருத்தம்" எனவும், இரண்டாவதற்கு, "பக்க விபக்கைகதேசவிருத்தம்" எனவும் எழுதப்பட்டன. அவற்றை முறையே (க) "பக்கவிபக்கவியாபகம்" எனவும், (உ) "பக்கவிபக்கைக தேசவிருத்தி" எனவும் திருத்திவழங்குதல் சாலும்.

1. முதலாவதன் இலக்கணவாக்கியத்தில், "சபக்கத்தில் வியா பகமாகாத ஏது" என்றெழுதியிருக்கும் பாகத்தை "சபக்கத்தில் இல்லாத ஏது" என்று திருத்திக்கொள்ளவேண்டும். அல்லாக்கால் "வியாபகமாகாத ஏது" என்பதற்கு வியாப்பியமாயிருக்கும் ஏது என்ற பொருளுமுடையதாய் அநைகாந்திக விசேடத்தில் அதி வியாத்தியுடையதாகும். சபக்ஷத்தில் இல்லாத ஏதுவென்றால்,

*

சபக்ஷத்தில் ஒருசிறிது மில்லாதிருப்பது என்ற பொருளுடையதாய்ப் பக்ஷவிபக்ஷங்களில் மாத்திரம் இருத்தலாகிய விருத்தவிலக்கணம் பொருத்தமுள்ளதாகும்.

(2) "பக்கவிபக்கைகதேசவிருத்தி" யாவது:—பக்ஷத்திலும், விபக்ஷத்துள் ஏகதேசத்திலும் மாத்திரம் உள்ள ஏதுவாம்

உதாரணம்:—நீர் குருத்துவமுடையதன்று, மதுரமுடையதாதலால் என்பதாம். இதில் மதுரமுடைமையாகிய ஏது, நீராகிய பக்கப்பொருளில் உள்ளதாய்க் குருத்துவமுடையதல்லாமையாகிய துணிபொருளுக்கு விபக்கமாகிய (குருத்துவமுடையதாகிய) பிருதிவிமுழுதும் வியாபியாமல், அதன் ஏகதேசமாகிய தேன், பாகுமுதலியவற்றில் வியாபித்துத் துணிபொருளின் மறுதலைப்பொருள் துணிந்து, துணிபொருளை விரோதித்தலால் விருத்தமாதல் காண்க.

இது துணிபொருளின் மறுதலைப்பொருள் துணியுமாறு:—

நீர் குருத்துவமுடையது; மதுரமுடைமையால்; யாதுயாது மதுரமுடையது அது அது குருத்துவமுடையது; கருப்புக்கட்டிபோல என அந்நுவயத்தாலும், யாதுயாது குருத்துவமுடையதன்று அது அது மதுரமுடையதன்று ஆகாயம்போலும் என வெதிரேகத்தாலும், மறுதலை துணிதல் காண்க. இது நியாயநூல்வல்லார்வழக்கு. ஆங்கிலப் பௌதிகநூல்வல்லார்க்கு நீரில் மதுரம் அப்பிரசித்தமாகையால், அவர்க்கு இவ்வேது சொரூபாசித்தமாம்.

இனி அசித்த விவரணம் வருமாறு:-அசித்தமென்பதற்கு, சித்தமல்லாதது என்பது பொருளாம். சித்தம்:—ஈண்டுப் பரனுக்குப் பிரமாணங்களால் முன்னமே சித்தித்திருப்பது. (அதாவது சாத்தியம் போலச் சித்திக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படாது முன்னமேயுண்டென்று கண்டு தெளியப்பட்டதாயிருப்பதென்றபடி) இதன் இன்மையே அசித்தமென்னும் சொற்குப் பொருளாமென்றறியத்தக்கது. இங்ஙனம் பரனால் அறியப்படாததொருபொருளை யேதுவாகக்கூறின் அது அசித்தமென்னும் ஏதுப்போலியாம்.

சொரூபாசித்தமென்பது ஏதுவின்சொரூபம் பரனுக்கு யாண்டும் அறியப்படாதிருப்பினும், பிறிதோரிடத்தி லறியப்பட்டுப் பக்ஷத்தி



லறியப்படாதிருப்பினும் அவ்வேது சொரூபாசித்தமெனப்படும். சொரூபம் வடிவம். இங்கு "ஏதுவின்சொரூப" மென்பது (ராகுவின்தலை ராகுவின்வேறாகாது ராகுவேயாவதுபோல) ஏதுவின் வேறாகாது ஏதுவேயாயிற்று.

க. சொரூபாசித்தமாவது:—பக்கத்திற் பரனுக்கு ஏதுவின் சொரூப மறியப்படாதிருப்பது. சொரூபம் - தன்வடிவு. உதாரணம். "சத்தம் அநித்தியம், காணப்படுகையால்;" என்றெழுதியிருப்பதேயமையும்.

உ. வியாத்தியதிகரணாசித்தமாவது:—ஏதுவின் சொரூபம் பக்ஷத்திற்சித்தித்திருப்பினும் அதன் அந்நுவய வெதிரேக வியாத்தியறிதற்கு நிலைக்களமாகிய சபக்க விபக்கங்கள் சித்தியாதிருப்பது. (அதிகரணம்-நிலைக்களம்) இதற்கு உதாரணம் எல்லாம் அநித்தியம்; அறியப்படுதலால் என்பதாம். இங்குத் துணிபொருள், "அநித்தமாயிருத்தல்." இவ்வுதாரணத்துள், "எல்லாம்"என்பது ஐயுற்றுத் துணியும்பொருளுக் கிடமாகிய பக்கமாய்விட்டமையால் அவ்வெல்லாவற்றிலும் வேறாய்த் துணிந்தபொருளுக்கிடமாகிய அநித்தப்பொருள் பிறிதொன்றும் சித்திக்காமையால் அவ்வேதுவின் அந்நுவய வியாத்தியறிதற் கோரிடமில்லாமையாலும், அவ்வாறே அவ்வெல்லாவற்றினும் வேறாதற்கு விபக்கமாகிய நித்தப்பொருள் பிறிதொன்றும் சித்திக்காமையால் வெதிரேகவியாத்தியுணர்தற்கு இடமில்லாமையாலும் இது வியாத்தியதிகரணாசித்தமெனப்படும். இது தருக்கநூலுள் முடிவுபெறாமையென்னும் அநைகாந்திகவகையாக வழங்கப்படும். (இதனால், நல்லேதுவில் வியாத்தியுணரும் நிலைக்களமாகிய சபக்ஷ விபக்ஷங்கள் பரனுக்குப் பிரசித்தியுடையதாயிருக்கவேண்டுமென்பது குறிக்கப்பட்டது).

ந. விசேடியாசித்தமாவது விசேடண விசிட்டமாகச் சொல்லப்படும் ஏதுவசனத்தின் விசேடணப்பொருண்மட்டும் உள்ளதாக விசேடியப்பொருள் இல்லதா (அசித்தமா) யிருப்பது. இதற்குதாரணம்—வாயு காட்சிப்பொருள்; பரிசமுடைய உருவமுடைமையால் என்பதேயமையும்.

௪. விசேடணாசித்தமாவது விசேடணவிசிட்டமாகச்சொல்லப் படும் ஏதுவசனத்தின் விசேடியப்பொருண்மட்டும் உள்ளதாயிருக்க விசேடணப்பொருள் உள்ளதெனச் சித்திக்காது (அசித்தமாய்) இருப் பது. இதற்குதாரணம் "சத்தம் அநித்தியம்; காணப்படும்பொதுமை யுடைமையால்" என்றதே யமையும்.

௫. பாகாசித்தமாவது சமுதாயப்படக்கூறும் ஏதுப்பொருளின் ஒருபகுதி அசித்தமாயிருப்பது. இதற்குதாரணம், காற்று ஆகாயத் தின்கூறு, உருவமின்மையும் சத்தமு முடைமையால் என்பதாம். இங்கு உருவமின்மையும் சத்தமுடைமையுமாகிய குணசமுதாயம் ஏதுவாம். இதனுள் ஒருபாகமாகிய சத்தமுடைமை ஆகாயத்திலல்லது வாயுவின்கட் சித்திக்காமையா லிது பாகாசித்தமாமெனக் கொள்க. இங்குப் பாகமென்றது "ஏதன்பாகம்" என்றவாவிதின்றவழி, கீழே சொரூபாசித்தமுதலியவற்றுள் ஏதுவின்சொரூபம், ஏதுவின்விசேட ணம் என அதிகாரப்பட்டுவருவது ஏதுவேயாதலால் ஏதுவின்பாக மெனக்கொள்ளுதலே முறைமையுடையதாகும். (பக்கத்தின் ஒரு பாகத்தில் ஏது வியாப்பியமாயிருப்பது குற்றமாகாது.)

௬. ஆசிரயாசித்தமாவது:—ஏதுவின் ஆசிரயமாகிய பக்கப்பொ ருள் சித்தித்திராதது. உதாரணம்—"நிறம் திரவியமன்று; குணமாக லால்" எனப் பிறவிக்குருடனைநோக்கிக் கூறுவதாம். இங்குக் குண மாதலாகிய ஏதுவுக்கு ஆசிரயமாகக்கூறப்பட்ட பக்கப்பொருளாகிய "நிறம்" பிறவிக்குருடனுக்கு அசித்தமாயிருத்தல் காண்க.

௭. ஆசிரயைகதேசாசித்தமாவது ஏதுவின் ஆசிரயமாகிய பக்கப் பொருளின் ஒருபகுதி பிறனுக்கு அசித்தமாயிருப்பது. உதாரணம்- "ஐம்பெரும்பூதமும் திரவியங்களாம்; குணமுடைமையால்" எனப் புத்த சாருவாகரை நோக்கிக் கூறுவதாம். இங்கு, குணமுடைமைக்கு ஆசிரயமாகிய பக்கப்பொருள் ஐம்பெரும்பூதங்கள். அவற்றுள் ஏக தேசமாகிய ஆகாயம் புத்த சாருவாகருக்கு அசித்தமாகையால் அவர்க்கிது ஆசிரயைகதேசாசித்தமாயிற்று. பிறவெல்லாம் முன்பு வெளியிடப்பட்டவா றமையும்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

# தொல்காப்பியரது சமயம்.

தமிழ்மொழிக்குரிய பேரிலக்கணம்வகுத்த தொல்காப்பியர் இன்ன மயத்தைச்சார்ந்தவரென்று அறிதற்கு முயன்றுள்ளார் ஒருசிலரே ரவர். சற்றேறக்குறைய 30 வருடங்கட்கு முன்னர், டாக்டர் பர்ணல் ன்பவர் தாம் எழுதிய 'ஐந்திரம் என்ற வடமொழி வியாகரணம்' ன்னும் ஆராய்ச்சிநூலின்கண்ணே தொல்காப்பியர் பௌத்தராகவே பம் ஜைனராகவேனும் இருத்தல்வேண்டுமெனக் கூறிச்சென்றார். றைல் அவ்வாறு துணிதற்குத் தாம் கைக்கொண்ட நியாயங்கள் ன்னவெவன அவர் சுட்டுதல்தானும் செய்யாதொழிந்தார். 1914-ம் ருடத்தில் வெளிவந்த 'தொல்காப்பியர்சரிதவாராய்ச்சி' என்ற வாரு சிறுநூலில் 'இவர் சமயம் சித்தாந்தசைவமேயாகும்' என்னு டிபு காணப்படுகின்றது. இதற்குத் தரப்பட்டுள்ள நியாயங்களை ங்கே நான் விசாரிக்கப்புகவில்லை. சில நூல்களை நோக்கிவரும்போது னக்குத்தோன்றின வொருவிஷயத்தைமட்டும் தமிழ்நூற்சரிதம்வல் ர் முன்பு சமர்ப்பிக்க எண்ணுகின்றேன்.

தொல்காப்பியரோ டொருசாலைமாணாக்கராகிய பனம்பாரனார் ரஞ்செய்த பாயிரத்துள் அத் தமிழ்ப் பெருஞ்செல்வரைப் 'பல்புகழ் றுத்த படிமையோன்' என்று சிறப்பித்துக் கூறுகிறார். 'படிமை யான்' என்னுஞ் சொல்வழக்கு யாண்டுரியது? இச்சொல்லுக்குத் தவவொழுக்கத்தினையுடையான்' என்று இளம்பூரணவடிகள் பொ ள்கொண்டனர். இப்பொருள் எங்கே பெறப்பட்டது.

'படிமை' என்றசொல் எப்பாஷைக் குரியதென வரைந்துணர்ந்து காண்டாலன்றி மேலே தரப்பட்ட வினாக்களுக்கு முற்றிய விடை ருதல் கூடாது. தமிழ்ச்சொல்லாக அது தோன்றவில்லை. தமிழி ல்போடொத்த சொல்லமைதியும் அதன்கட் காணுமாறில்லை.

தமிழ்ச்சொல்லன்றாயின் வேறு எம்மொழிக்குரியதாயிருத்தல் டும்? பண்டைக்காலத்தில் தமிழ்மொழியில்வந்து விரவப்பெற்ற றசொற்களுள்ளே பெரும்பாலன வடமொழிச்சொற்களாயுள்ளன.

ஆதலால் இச்சொல்லும் வடமொழிக்குரியதாதல்வேண்டுமென ஊகித்தல் தகும். ஆனால், பிறிதொருவிஷயம் இங்கே சிந்தனைசெய்யற்பாலது. வடமொழியினின்றும் பழந்தமிழ்நூல்களிலெடுத்து வழங்கப்பட்டசொற்கள், பெரும்பான்மையும் பிராகிருதவழி வந்துள்ளனவாகக் காணப்படுகின்றன. உதாரணமாகப் 'பாசி' 'ஊசி' (புறம்-229) முதலிய சொற்களை நோக்குக. இவை முறையே 'கிழக்கு' 'வடக்கு' என்று பொருள்படும் வடமொழிச்சொற்களின் பாகதச்சிதைவாம். வடமொழியினின்று சொற்களை நேரே யெடுத்தாளாது இவ்வாறு பாகதச்சிதைவுகளை யெடுத்துப் பிரயோகித்தற்குத் தக்க காரணமுமுண்டு. அந்நியபாஷைக்குரியசொல் லென்னுமுணர்ச்சி சிறிதும் உண்டாகாவண்ணம் தமிழ்மொழியின் ஒலியியல்போடு முற்றும்பொருந்துமாறு சொற்களைத் திரித்துக்கோடல் பண்டையோர் வழக்காயிருந்தது. இதற்குப் பிராகிருதம் அநுகூலமாய்நின்றது. வரவர இந்நியதியைத் தமிழ்மக்கள் நெகிழ்ந்துசெல்லவிட்டமையால் வடமொழியினின்று நேரேபெறப்பட்ட சொற்களின்றொகை நாளடைவிற் பெருகிவருவதாயிற்று. இக்காலத்தே வடமொழிச் சொற்களை யெடுத்தாளுதற்கண் நியதியொன்று வேண்டுமென நினைப்பாரும் அரியராயினர்.

ஆகவே, 'படிமை' என்றசொல்லைப் பிராகிருதத்திற் காணுவோமாயின் அது வியப்பிற்கிடமாகமாட்டாது. ஆனால் இச்சொல்லினது ரூபம் ஈற்றிற் சிறிது மாறுபடுதல் வேண்டுமென எளிதின் உணரலாம். பாலையென்பது 'பாலா' என்பதன் தமிழ்ரூபம்; மாலையென்பது 'மாலா' என்பதன் தமிழ்ரூபம். இவைபோன்றே படிமை என்பது 'படிமா' என்பதன் தமிழ்ரூபமாதல்வேண்டும்.

பிராகிருதத்தில், 'படிமா' என்றசொல் உளதா? 'தவவொழுக்கம்' என்றபொருளைக் குறிக்கவல்லதா?

இக்கேள்விகளுக்கு வடமொழியுணர்ச்சியும் சமயநூலுணர்ச்சியும் நிரம்பியவர்களே விடையிறுக்க அருகராவர். 'படிமா' என்ற சொல் உளதாக அறிந்தேன். அதற்குத் தவவொழுக்கமென்றபொருளிருப்பதாகத் தெரியவில்லை. என்னாலியன்றவரை பலநூல்களினுந் தேடினேன்; வடமொழிவல்லார் பலரிடத்தும் வைதிக சமயநூலுணர்ச்சியின்மிக்க பண்டிதர்பலரிடத்தும் கேட்டேன். எனக்கு விடை கிடைக்கவில்லை. கடையிற் குறிப்பிட்ட பண்டிதர்களுங்கூட எனக்கு விளக்கமாட்டாமையினாலே நமது வைதிகசமயநூல்களில் 'படிமா' என்ற பிராகிருதமேனும் அல்லது அதற்குச் சமமான வடமொழியேனும் 'தவவொழுக்கம்' என்றதனை யுணர்த்துவதாய்ப் பயின்றுவரவில்லை யென்பது தெளிந்துகொண்டேன்.



இவ்வாறிருக்க, சிலமாசங்களுக்குமுன் ஜைனசமய நூலொன்றை (The Heart of Jainiom by Mrs. Sinclair stevenson) யான் படிக்கநேர்ந்தது. அதன்கண் 'படிமா' என்ற ப்ராகிருதச்சொல் மேற்குறித்த பொருளையுணர்த்துவதாகக் காணப்பட்டது.

மோக்ஷமெய்துதற்குரிய மார்க்கத்தில், பதினொன்கு நிலைகள் உள்ளனவாக ஜைனசமயத்தவர்கள் கருதுகின்றார்கள். இந்நிலைகளைக் குணஸ்தானகங்களென்று கூறுவர். இவற்றுள் முதலைந்து நிலைகளும் இல்லறத்தோர் துறவறத்தோ ரென்ற இருதிறத்தார்க்கும் உரியன. ஆறுமுதல் ஏனைநிலைகள் துறவறத்தோர்க்குமட்டு முரியன. இல்லறத்தில் நிற்பார், முதலைந்துநிலைகளும் கைவரப்பெற்றபின்னர், உண்மைத்தீர்த்தங்கரர்மாட்டும் உண்மையாசாரியர்மாட்டும் உண்மைநூலின்மாட்டும் துளங்காத பக்திவைத்து, பஞ்சஅதிசாரங்களையும் நீத்துப் பன்னிரண்டு விரதங்களையும் அநுஷ்டித்தல்வேண்டும். இங்ஙனநின்றோரினும் மிக்குச் சிறப்பெய்த விரும்பும் இல்லறத்தோர் பதினொரு தவவொழுக்கங்களை மேற்கொள்வர். இவ்வொழுக்கங்கள் 'படிமா' என்று பிராகிருதத்திற் பெயர் பெறும். 'தவம்' என்றசொல் இல்லறத்தார்க்கும் உரியதாதல் 'நற்றவஞ்செய்வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கும் அஃதிடம்' என்ற (சீவகசிந்-77) மேற்கோள்நோக்கி யுணரலாகும்.

இதனால், 'படிமை' யென்பது ஜைனசமயவழக்குச்சொல்லென்பதும், அச்சொல் 'தவவொழுக்கம்' என்றதனை யுணர்த்துதல் அவ்வொரு சமயநூலின்கண்ணன்றிப் பிறசமயநூல்களில் இல்லையென்பதும் தெளியக்கிடக்கின்றன.

ஆகவே 'பல்புகழ்நிறுத்த படிமையோன்' என்று சிறப்பிக்கப்பெற்ற தொல்காப்பியனார் ஜைனசமயத்தவராவ ரென்பதும், அதன்

கண் இல்லறநெறிநின்று சிறந்ததவவொழுக்கங்களை யனுஷ்டித்தவராவரென்பதும் உணரலாகும்.

அகத்தியனாரது மாணாக்கருளொருவராகிய 'அவிநயர்' ஜைனரென்பது மகாமகோபாத்தியாய ஸ்ரீ சாமிநாத ஐயரவர்களால் அவர்களது மயிலைநாதருரைப்பதிப்பிற் காட்டப்பட்டுளது. ஆதலால் தொல்காப்பியரையும் ஜைனரெனக் கொள்வதில் யாதொருதடைமாற்றமும் உண்டாதற்கில்லை.

இம்முடிபினை வலியுறுத்துதற்குத் தொல்காப்பிய நூலின்கண்ணேயே பிறசான்றுகளும் உள. அவற்றைக்குறித்து வேறொருமுறை எழுதுவேன்.

S. வையாபுரிப்பிள்ளை,
திருவனந்தபுரம்.

---

## திருக்கச்சிநெறிக்காரைக்காட்டுச்
# சோழசிலாசாசனங்கள்.

(௩௩௨-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

(6) ...முன்பு.........தேவர்பூயாண்டு யசு-வது (யாண்டைக் குறிக்கும் எண்கள் யா, யங, ௦ா, ய௩-இவ்வாறு இருந்தவினால் இவை 13 (யங) றையே குறிப்பிடுகின்றனவா அல்லது ௦ங, யசு, ய௮ (13, 16, 18) இவைகளைக் குறிக்கின்றனவாவென்று நன்குவிளங்கவில்லை.) ஜயங்கொண்டசோழமண்டலத்துக் காலியூர் கோட்டத்துக் காலியூர் நாட்டு ஓரிருக்கை ஊரோம் கையெழுத்து.

ஊயில்கோட்டத்து, நகரம் காஞ்சிபுரத்துத் திருக்காரைக்காடுடையார் மஹாதேவர்க்கு, அர்த்தயாமத்துக்குவேண்டும் நிவந்தத்துக்கு இந்ததானமடமுடைய மாதேவ னுத்தமசிதனை திருக்காரைக்காட்டுப் பெரியபிச்சன்தேவர் பண்டாரத்தில்வைத்தபொன் தன்மகட்டளைக்கல்லால் துளைநிறைபொன் பதினைங்கழஞ்சும் (15 gold coins) காலியூர்கோட்டத்து, தனியூர், மதுராந்தகச்சருப்பேதிமங்



கலத்து மதுராந்தகச்சேரி வேற்புறத்துக் கண்ணக்கிரமன் வைத்த தன்மகட்டளைக்கல்லால் துளைநிறைபொன் பதினைங்கழஞ்சும் (15 gold coins) ஆகப் பொன் முப்பதின்கழஞ்சும் திருக்காரைக்காட்டு ஆதிதாஸ............(8-வது வரி)...........தூணிபதக்கும் பொலிசையாகவந்த நெல்லு.........இத்தேவர்க்குயாண்டு ௦சு (16th year)வது மேல்படி ஊரோம் திருக்காரைக்காடுடையார் ஸ்ரீபண்டாரத்தில் இத்தாஸ சண்டேசுரர்பக்கல் இத்தேவற்கு (அர்த்தயாமத்திற்கு) வேண்டும் நிவந்தத்துக்கு துளை நிறை தன்மகட்டளைக்கல்லால் கொண்ட பொன் முப்பதின்கழஞ்சும் இப்பொன் முப்பதின்கழஞ்சுக்கும், பொன் கழஞ்சுக்கு அருமொழித்தேவன் மரக்காலால் நெல் இருகலனேமுக்குறுணி (2-கலம், 3-குறுணி) ஆக நெற்செய்துவந்த நெல் அறுபத்தேழுகலனே தூணிபதக்கமு இந்நெல் நூற்றிருபத்திருகலனே தூணிபதக்கு இந்நெல் நூற்றிருபத்திருகலனே தூணிபதக்கும், (112-கலம் 1-தூணி, 1-பதக்கு) காழும், பதரும், வாலும், பூழ்தியும் நீக்கிய உலகும், பாற்கூலியும், நாங்களேபட்டு திருக்காரைக்காட்டு மடமுடையார் திருமுற்றத்தேகொடுவந்து இந்ததான மடமுடையார்வசம் இத்தேவர் ஸ்ரீபண்டாரத்து அளந்து தரவுகொள்வோமாகவும், முதற்பொன் கொள்கவென்று சொல்லப்பெறுதோமாகவும் இந்நெல் தண்டவந்தார்க்கு மெய்கண்டு சோறுகொடுப்பதாகவும், இதற்றிறம்பில் தன்மாஸனம்முதலாகத் தான் வேண்டுகோவுக்கு நிசதம் இருகழஞ்சு பொன் நாளெடுத்து மன்றுபாடுபெறுவதாகவும் இம் மன்றுபாடு சென்றுநின்று மறுக்கவும் புள்ளிகுத்துவிக்கவும் பெறுதோமாகவும், மன்றுபாடிறுத்து இந்நெல் நூற்றிருபத்திருகலனே தூணிபதக்கும் சந்திராதித்தவரை அளப்பதாகவும் இந்நெல்லுக்கு விரோதஞ்சின்றோம் கங்கையிடை குமரியிடைசெய்தார்செய்த பாவத்திற் படுவதாகவும் இப் பாவப்பட்டும் இந்நெல் சந்திராதித்தவரை ஆட்டாண்டுதோறும் கொடுவந்து அளப்பதாகவும் சிலாலேகை செய்துகொடுத்தோம் முற்சொல்லப்பட்ட காலியூர்கோட்டத்து காலியூர்நாட்டு ஓரிருக்கை ஊரோம்.

ஊரார் சொல்ல வெழுதினேன் இவ்வூர் காணத்தான்.

9-வது வரி யாண்டு யசு (16th year) ஜயங்கொண்டசோழமண்டலத்து நீவேளூர்நாட்டுத் திங்காடுபாகமாக சோழதிவாகரநல்லூர் ஊரோம் கையெழுத்து,—

எயில்கோட்டத்து எயில்நாட்டுநகரம் காஞ்சிபுரத்து திருக்காரைக் காடுடையமஹாதேவதானமுடையார் மாதேவனுத்தமகிதனுகிய திருக் காரைக்காட்டுப் பெரியபிச்சன்கையால் இத்தேவர் ஸ்ரீபண்டாரத்து துலைநிறை தன்மகட்டளைக்கல்லால் கொண்டபொன் ஐம்பத்துமுக் கழஞ்சே ஆறுமஞ்சாடியும் ஐம்பாவ...இப்பொன் ஐம்பத்துமுக்கழஞ் சே ஆறுமஞ்சாடியும் ஐம்பாவம் (53-கழஞ்சு 6-மஞ்சாடி ஐம்பாவம்). (கழஞ்சு=12-பண எடைகொண்ட ஓர்நிறை, மஞ்சாடி=2-குன்றி மணிகொண்ட நிறை அல்லது வைரநிறை.)............................ ...........கொண்பரிசாவது:—பொன்கழஞ்சினுக்கு ஆண்டுவரை பொலிசை அருமொழித்தேவன்மரக்காலால் நெல் இருகலனே ருமுக் குறுணியாக (2-கலம், 1-முக்குறுணி) நெற்செய்துவந்த நெல் நூற் றிருபதின்கலம் (120-கலம் நெல்) இந்நெல் நூற்றிருபதின்கலமும் திருக்காரைக்காட்டுமடமுடைய கையால் இத்தேவர்க்கு திருமெய்க் காவல் காப்பதாகக் கடவோமாகவும், திருமெய்க்காவல்சுட்டவந்த எவ கத்தேவேயெனப் பொற்பட்டத்து நாங்கள் வருவதாகவும் இம்முதற் பொன் கொள்கவென்று சொல்லப்பெறுதோமாகவும் இதற்றிறம்பில் தன்மாசனமுதலாகத் தான்வேண்டுகோவுக்கு நிசதம் கழஞ்சுபொன் னளெடுத்து மன்றுபாடறுப்பதாகவும் இம்மன்றுப்பாடறுத்து இந் நெல் நூற்றிருபதின்கலமும் அருமொழித்தேவன்மரக்காலால் சந்தி ராதித்தவரை அளப்பதாகவும் ஆட்டாண்டுதோறும் திருக்காரைக் காட்டு மஹாதேவதானமுடையார் திருமுற்றத்தே அளந்து தரவு கொள்வோமாகவும். இத்தேவர்க்கு திருமெய்க்காவல் (Bodyguord or அங்காக்ஷகன் மல்ஜி என்றும் வழங்குவதுண்டு) காக்கக்கடவோ மாகவும் இத்தன்மத்து விரோதநின்றோம் கங்கையிடை குமரியிடை செய்தார்செய்த பாவத்திற் படுவதாகவும், இப்பாவப்பட்டும் திரு மெய்க்காவல் இரவும்..................

(இன்னும் வரும்.)

காஞ்சிபுரம், அ. நடேசசெட்டி,
85, செட்டித்தெரு,
சின்னக்காஞ்சிபுரம்.



# பரீக்ஷை.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் வருடமொருமுறை நடத்துவிக் கப்பட்டுவரும் தனித்தமிழ்ப்பரீக்ஷைக்குச் சென்ற இருமுறைகளிற் பிரவேசித்தமாணவர்தம்முள் இரண்டொருவர் சிறிது மனக்குறை யுடையராகத் தெரியவரலின், பின்வருவனவற்றைப் பொதுநலன்கருதி எழுதலுற்றேன்.

மாணவர் இருவர் பரீக்ஷகர் ஒருவரின் வினாக்கள் மிகக் கடின மானவையென்றும், விடையெழுதுவதற்குக் கொடுக்கப்பட்ட நேரம் போதுமானதல்லவென்றும், ஏற்படுத்திய பாடபுத்தகங்களிற்கூறப் படாவிஷயங்கள் சில வினாக்களில் வந்தனவென்றும், நியமிக்கப்பட்ட புத்தகங்களிற் சில விலைகொடுத்தும் பிறவழியானும் பெற்றுக்கொள் ளக் கிடைக்கவில்லையென்றும், பிறவுமன்ன குறைகள்கூறி ஒருகடிதம் எனக் கனுப்பியிருந்தனர். மற்றொருமாணவர் தாம்பெற்ற அம்சம் எவ்வளவென்று வினவினர். இத்தகைக் கடிதங்களை எந்தப்பரீக்ஷ கருக்காவது அனுப்புவதால் மாணவர் பெறக்கூடியபலன் யாதொன்று மில்லை. பரீக்ஷகராவோர் சங்கத்தவரின் கணிப்பையும் முழுமனவிசு வாசத்தையும் உறுதியுறக்கொண்டு அவர்களால் இடப்பட்ட கட்டளை யை நடுவுநிலைகோடாமல் நியாயநிலைநின்று பிறர் அறியாவண்ணம் அந்தரங்கத்திற் செய்துமுடிக்கவேண்டிய கடப்பாடுடையவராவர். பரீக்ஷை சம்பந்தமான தம்செயல் எதனையும் பிறர்அறிய வெளியிடு வதற்கு அவர்கள்பாற் சிறிதும் அதிகாரமேயில்லை. ஆதலின் மாண வர்கள் தமக்குள்ள முறையீடுகளையும், அறிய விரும்பிய விவரங்களைப் பற்றிய விண்ணப்பங்களெல்லாவற்றையும் சங்கக் காரியதரிசிமூல மாய்ச் சங்கத்தவர்க்கே யனுப்பவேண்டுமென்றிப் பரீக்ஷகர்க்கெழுது வது தகாதெனவுணர்ந்து அப்பழக்கத்தை ஒழித்துவிடக்கடவர்.

பரீக்ஷை ஏற்படுத்தப்பட்ட நோக்கம் மாணவர்களின் விவேக சாதுரியங்களின் நிலைமையையும், அவர்கள் பயின்றுள்ள கல்வியின் திறமை முதலியனவற்றையும் ஒருவாறு ஆராய்ந்து மட்டிட்டறிதற் பொருட்டேயாம். பரீக்ஷையை நடத்துவிக்கும் சங்கத்தவர் மெய்த்

தீர்ப்புப்பெறக்கருதி நியாயஸ்தல மேறிய வாதியையும், பரீக்ஷிக்கப்படுமாணவர் பிரதிவாதியையும், பரீக்ஷகர் நியாயாதிபதியையும் ஒருவாறு ஒப்பர்.

மாணவருட் சிலர் வயதேறினவராயும், மற்றுஞ் சிலர் இளைஞராயும், வேறுசிலர் தீவிரபுத்தி, சொல்வன்மை, எழுத்துநலன் முதலிய சிறப்பினராயும், பிறசிலர் அவ்வகைய இயற்சிறப்பிலராயினுங் கல்விப்பயிற்சியிற் குறைவிலாத் தேர்ச்சியுடையராகவும், இன்னணம் பல திறப்பட்டிருப்பர். ஆகவே அவ்வெல்லாரும் ஒருமணிநேரத்துள் வினாக்கள் சிலவற்றிற் கிறுக்கும் விடைகளைக்கொண்டு அவர்களின் முழுத்திறமைகளையும் ஒருங்குணர்ந்து சீர்தூக்கி நிறுத்தளந்து கட்டுதல் வல்லையின் மிக்க தொல்லையாம். ஆதலின், பரீக்ஷகர்மேற் பொறுத்துள்ளகடமை மிகப் பாரித்து வருத்துமியல்பினதென்க.

சங்கமும், பரீக்ஷகரும், மாணவரும் நடந்துகொள்ளவேண்டிய வழிவகைகளைக் கற்பித்துக்கொடுக்கும் ஆற்றல் என்பால் இல்லை. அஃதோர்சமயம் உளவாயேற்படினும் அங்ஙனஞ் செய்தற்கு என்போலியர் துணிந்து முன்வரலும் முறைமையாகாது. ஆயினும், அம்முத்திறத்தாருங் கவனித்தற்குரியனவென்று என்மனத்தில் எழுந்த சில அபிப்பிராயங்களை இதன்கீழ்க் குறிக்கின்றேன். அவற்றுள் தகாதனவற்றை விலக்கித் தக்கனவிருப்பின் அநுசரித்தல் நலமாகும்.

சங்கம்.

1. பரீக்ஷைவகுப்புகளுக்கு நியமிக்கும் பாடங்கள் ஒருபடிப்பட்ட பிரசுரமாய் எளிதில் பெற்றுக்கொள்ளக்கூடியபுத்தகங்களில் அடங்கியுள்ளனவாயிருத்தல்வேண்டும். அப்புத்தகங்கள் யாவர்பதிப்பு, எக்காலத்தின, எவ்விடத்து எந்த அச்சுக்கூடத்தில் எவ்விலைக்குப் பெறக்கூடியனவென்று முழுவிவரங்களும் பிரதம விஞ்ஞாபனத்தில் வெளிவிடப்படவேண்டும். வியாசம் போன்ற பொதுவிஷயங்களைநீக்கி விசேட பாடங்களாக நியமிக்கப்படும் புத்தகங்களின் ஒவ்வோர் பிரதி இரவலாய்ப் பரீக்ஷகர்க்கு அனுப்பப்படவேண்டும்.

2. மூவகை வகுப்புப்பரீக்ஷைக்கும் செல்லற் குரியாரின் வயது எல்லைப்படுத்தப்படவேண்டும். பிரவேசவகுப்புக்கும் பாலபண்டித வகுப்புக்கும் வயதெல்லை வேண்டாதுவிடினும் பண்டிதபரீக்ஷைக்குச் செல்வோர்வயது இருபத்தைந்திற் குறையாமல் நியமிக்கப்படவேண்டும்.

இளம்பருவத்திற்கற்கும் பாடம் சிலகாலவரையில், கற்ற அளவிலே தம்பித்துநின்று பின்னர் வயதின்வளர்ச்சியோடு வளர்ந்தேறி அபிவிர்த்தியாகும். தருமத்தைக்குறித்து ஒருவியாசம் இயன்றஅளவில் எழுதுகென்பத்துவயதுச் சிறுமி ஒருத்தியைக் கேட்குங்கால் அவள் பருவமடனுக்கஞ்சி அவ்வியாசத்தை ஐந்துவரியுள் முடிக்கலாம்; அவளினுங் கல்வியிற்குறைந்த எட்டுவயதுச் சிறுவன் ஆண்டகைச் செருக்காற் பத்துவரியில் எழுதலாம்; இவ்விருவரும் இருபது முப்பதுவயதுடையராயபின்னர் அவ்வியாசத்தை மீட்டுமெழுதச் சொன்னால் அறிவுப் பெருக்கமும் அனுபவமும்போந்தவாறு பலதுறைதோன்ற விரித்து ஐந்நூறுவரியில் எழுதவுங் கூடும். ஆதலின், பருவத்தாற் பலகலைப்பயிற்சியும் பழுத்துப் பதனுகாமுன்னர்ப் பண்டிதப்பட்டந் தாங்குதல் அமையாது.

3. மாணவர்கொள்கைகளும் அபிப்பிராயங்களும் ஆசாரபழக்க வழக்கங்களும் பலபேதப் பட்டிருத்தலின் அவர்கள் ஆணோ பெண்ணோ வென்றும், அவர்களின் சாதி, சமயம், வயதுமுதலியன இன்னவென்றும் பரீக்ஷகருக்கு அறியக் கொடுத்தல்வேண்டும். அங்ஙனஞ் செய்வதால் அம்சங்கொடுத்தல் இலகுவாகும்.

4. வினாக்கள்தயாரிப்பதற்கும், விடைகளைப் பரிசோதித்து மீட்டனுப்புவதற்கும் பரீக்ஷகருக்குக் கொடுபட்டுவரும்காலம் சிறிது கூட்டப்படவேண்டும்.

5. பிழைசெய்தல் யார்க்கு மியல்பு. ஒருவர் செய்யும் பிழையினிமித்தம் மற்றவர் பெறவேண்டிய பதவியைப் பெறாமல் இழத்தல் பரிதாபம். பரீக்ஷகர் ஒருவர் தற்செயலாய் மறந்தேனும் அயர்ந்தேனும் ஒருவிடைக்குக் கொடுக்கவேண்டிய அம்சத்தைக் குறைத்துப் பிழைத்திருக்கலாம். ஆதலின், பரீக்ஷகர் கொடுக்கும் அம்சங்களை ஒப்புக்கொண்டு தீர்மானஞ்செய்யுமுன் சங்கத்தவருள் தக்கார் மூவரை நியமித்து வினாவிடைகளோடு அம்சங்களை ஒப்பிட்டுப் பரிசோதனை செய்வித்து வேண்டிய திருத்தங்களைப் பண்ணிக்கொள்ளின் மாணவருரிமை பங்கப்படமாட்டாது.

## பரீக்ஷகர்.

1. பரீக்ஷகர் தமதுகடமையைப் பொறுமையுடன் செவ்வனே செய்துமுடித்தற்கேற்ற அவகாசம் வாய்க்கப்பெற்றிலராயின் ஆதியிலே உண்மையைக்கூறி இக்கருமத்திற் றலையிடாமல் விலகிநின்றுவிடல் மிகநன்று.

2. பரீக்ஷைகொடுக்கும் மாணவர்கள் யார்மக்களாயிருப்பினும் தமிழபிமானம் மேலிட்டுக் கல்வியில் உழைப்பவராதல்பற்றித் தம்மக்கள்போற் கருதியும், சிறுவரென்றெள்ளாமல் தம்மின் முதிர்வுறீஇப் பின்வருஞ் சந்ததியைப்புரக்க முன்னிலை கொள்ளுஞ் சத்திவித்துடைச் செல்வக்களஞ்சியங்களென நன்குமதித்தும் பாரபக்ஷமின்றி அன்புயர்மனத்தோடு அவர்களைஉற்சாகப்படுத்தல் பரீக்ஷகர்கடனாகும்

3. பரீக்ஷகர் தமது இளம்பருவத்திலே யாதேனும் பரீக்ஷை கொடுத்தற்குத் தாம் சென்றிருந்ததருணங்களில் தமக்குண்டாகியிருந்த அச்சமும் பதைப்பும் கலக்கமும் சித்திகோரிய ஆவலிப்பும் எத்துணையவென்பதை முற்றும் நினைந்து தம்மெதிர்வந்தமாணவச்சிறார்மாட்டுக் கிருபையும் இரக்கமுமுடையராயிருத்தல்வேண்டும்.

பரீக்ஷையில் தோல்வியடையும் மாணவருட் பெரும்பாலார் மனமுருகி வருந்திவருந்திச் சோர்வடைவர்; சகபாடிகளுடன்கூடிவிளையாட நாணுவர்; தந்தைதாயர் என்னினைப்பரோவென்று தயங்குவர்; பொருளுங் காலமும் வாளாகழிந்தனவேயென்று மயங்குவர்; நம்பியிருந்த சித்தி கைவரவில்லையேயென்று பிரிதவிப்பர்; குயவனுடைய பலநாள்வேலையைத் தடியடிகாரன் கணப்பொழுதில் நாசமாக்கிவிடுதல்போல், பரீக்ஷகர் தம் பன்னிருமாசவுழைப்பையும் பாழாக்கினரேயென்று வருந்துவர். அன்னவர்பழி தம்மைச் சூழாவண்ணம் பரீக்ஷகர் காத்து நடந்துகொள்ளவேண்டியது. மாணவரொருவர்மேற் பரிவு எத்துணைப் பெரிதாயிருப்பினும் நடுவுநிலை தவறப்படாது.

4. வினாக்களைத் தயாரிக்கும்பொழுது அவற்றைக் கண்ணுறுஞ் சங்கத்தினரும் பிறரும் தமது புலமைத்திறமையைக் குறிக்கொண்டு பிரமிப்புற்று வியந்து மெச்சிக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்



தொடு அரியகடிய வினாக்களை வரையாமல், மாணவர்பால் மறைந்துகிடக்கும் அறிவின்னிலையை வெளிப்படுத்தக்கூடிய சிறிய தெள்ளிய வினாக்களை எழுதவேண்டும்.

5 அவ்வினாக்கள் யாவும் நியமிக்கப்பட்ட பாடபுத்தகங்களுள் அடங்கியவைகளாகவும் பரீக்ஷகர் கூறற்கு விரும்பிய கருத்தை முட்டின்றி மயக்கற மாணவர்க்குத் தெரிக்குந் தெளிவுடையவைகளாகவும் இருத்தல்வேண்டும்.

நன்னூல்செய்தவர் பவணந்திமுனிவரென மாணவர்கற்றுளரோவென்று அறியவிரும்பிய பரீக்ஷகர் நன்னூல்செய்தவர்யாவரென்று வினவுவராயின் அவ்வினாவில் மயங்கற்கிடமுண்டு. நன்னூல் இயற்றினோர் நல்லிசைப்புலவராகிய சான்றோரென்று விடையிறுக்கப்படவுங்கூடும். நன்னூல் எனப் பெயரிய இலக்கணஞ் செய்தவர் யாவரென வினவப்படின் மயக்கத்திற் கிடனில்லை. அன்றியும், நன்னூற் சூத்திரங்களை ஆராயும்பொழுது இவ்விதியைப்பற்றித் தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ள சூத்திரமென்ன? தண்டியாசிரியர்கூற்றென்ன? என்று பலவாறு வரம்புகடந்து கடாவுதல் நியாயமாகாது. மாணவர் கற்றுள்ளன எவையென்று ஆராய்தலே மரபென்றுங் கல்லாதன எவையென்று தேடிக்காணமுயல்வது முறையன்றென்றுஞ் சிலர் கூறுப. கற்ற நூல்களினுந் தலையாயவிசேடப் பொருள்களை ஆராய்தலன்றி மூலைமுடுக்குகளிற் கரந்துகிடக்கும் காத்திரமற்ற குறிப்புகளைக் கணித்துக்கேட்டல் தகுதியன்று.

6. விடை இறுத்தற்குக் கொடுக்கப்படும் நேரத்தை விசேடமாகக் கவனித்து வினாத்தொகையைத் தக்கபடி சுருக்கிக்கொள்ளவேண்டும். வினாக்கள் யாவும் அவற்றை எழுதுகின்ற பரீக்ஷகருக்கு மிகவும் எளியனவாய்ச் சாதனப்பட்டவைகளாய் விரைவில் விடையிறுபடத்தக்கனவாயிருக்கலாம். மாணவர்க்கு அவைகள் கடினமாக மயங்கித்தோன்றவுங் கூடும். அவர்கள் வினாக்களைப் பன்முறை படித்து அவற்றின் மெய்ப்பொருள்கண்டு தக்கவிடைகளைத் தீர்க்காலோசனைசெய்து பிழையற வரிசைப்படுத்தி எழுதவேண்டியவர்களாகலின் அவர்களுக்கு மிக்கநேரஞ் செலவாகும். ஆதலின், பரீக்ஷகர் ஒரு மணிநேரத்துள் விடை எழுதக்கூடிய வினாக்களுக்கு மாணவர்க்குக், குறைந்தது நான்குமணி நேரமாவது கொடுபடவேண்டும்,

மட்டுக்குமிஞ்சித் தேவைக்கும்மீறி வினாக்களை வன்மைகொளச் செய்தல் அனாவசியகமாகும். வெண்பா இயற்றுமுறை ஒருவன் கற்றானோவென்று அறியவேண்டின் யாதேனும் ஒருவிஷயத்தின்பேரில் ஒரு வெண்பாவை இயற்றும்படி கேட்கலாம். மேலும் அவனது திறமையை ஊன்றி ஆராயவேண்டுமாயின், அரியவிஷயமொன்றைத் தாமாக நியமித்து அதன்பேரில் இன்னபொருள் அமைவர ஒருவெண்பாச் சொல்லென்று கேட்பின், போதுமாயிருக்கும். அங்ஙனஞ் செய்யாமல் "திருப்பாற்கடலையுஞ் சேடனையுஞ்சிறப்பித்து ஒரு நேரிசை வெண்பா வெண்டிரை எனத் தொடங்கி விழைந்து என முடிய, ஆடு மாடு என்னுஞ் சொற்கள் மிருகங்களைக்குறியாமல் வேறு பொருளில் விரவிவர, ஐந்துசீர் ஈரசைச்சீராகவும் பத்துச்சீர் மூவசைச்சீராகவும் அமைய, ஒற்றுவிரவாமற் பாடுக" எனப் பணிப்பின், ஐயகோ! இளம்மாணவர்கள் என்னதான் செய்குவர்!

7. மாணவர்களின் விடைப்பத்திரங்களைப் பரிசோதனை செய்யும்பொழுது,

"காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கட்
குற்றமுந் தோன்றா கெடும்"

என்னும் ஆன்றோர் வாக்கை மறந்துவிடப்படாது. விடைகளைப் பொதுநோக்கிற் பார்வைசெய்துசெல்லாமல் இருமுறை மும்முறை செவ்விதின் ஆராய்ந்து உரிய அம்சங்களைக் கிரமமாய்க்கொடுக்க வேண்டும். கொடுத்தபின் அவ்வம்சங்களைத் திரட்டி மொத்தமிடுங்கால், சித்திக்கேற்ற அம்சத்தொகையில் ஒன்றிரண்டு தாழுமாயின் மீட்டுமொருமுறை விடைகளை ஆராய்ந்து, அம்சத்தை ஏற்றக்கூடிய விடைகளில் ஏற்றித் தொகையை நிறைத்துக்கொள்ளல் நன்று. பாரபக்ஷங்காட்டாமல் மாணவர்களை எவ்வாற்றானும் ஊக்கப்படுத்தலே நலமாகுமன்றித் தாக்கி ஒறுத்தல் தகைமையாகாது.

மாணவர்.

1. மாணவர், பரீக்ஷகரைத் தங்கள் திறமைகளை ஆராய்ந்து அரங்கேற்றிப் பரிசுதருவிக்கும் உபகாரிகளென்று அன்பிற்கருதாமல் தம்மைக் கொல்லவரும் கூற்றுவனில் அஞ்சி வெறுத்தல் அநார்யமாகும்.



2. பரீக்ஷைத்தலத்தைச் சென்றடையும்பொழுது உள்ளங் கலங்கி உடல்பதறிப் பேதுறாமல் இயன்றவளவுசெய்குவல், வெற்றியுந் தோல்வியும் இறைவனருட்படி ஆகுக என்று சித்தசமாதானஞ் செய்து பொறுமையுற்றிருக்கவேண்டும்.

3. விடையெழுதும்படி தரப்படும் வினாப்பத்திரத்தை எழுதத் தொடங்குமுன் செவ்வையாக அதனைப் படித்து இயன்றவளவு விளங்கிக்கொண்டு எளிதில் வரையக்கூடிய விடைகளை முன்னர் எழுதவேண்டும். எழுத்துக்களைக் கூட்டெழுத்தாகத் தொடுத்தெழுதாமற் பிரித்து இயன்றவளவு தெளிவாகவும் சிறப்பாகவும் எழுதவேண்டும்.

4. ஒரு வினாவைப் பரீக்ஷகர் கடினப்படுத்தியிருந்தால், அப்படிச் செய்ததற்கும் போதிய நியாயமிருக்கலாமென்று நம்பி இயன்ற விடை எழுதுவதன்றிப் பரீக்ஷகரைத் தாக்கிக் குறிப்புகள் ஒன்றும் எழுதப்படாது.

5. மைவிழுத்தல், கீறுதல், தேய்த்துரைத்தழித்தல் ஆதிய குற்றங்களைத் தவிர்த்துவிடவேண்டும். ஒரு வாக்கியம் பிழைபடுமாயின் நடுவழி அழுந்தியோடும் ஒரு தடித்தவரைய அவ்வாக்கியத்தின்மேலுறக்கீறித் திருத்தத்தைத் தொடுத்தெழுத இடமில்லாவிடின் மேலே எழுதவேண்டும்.

6. நேரஞ்செல்வதை அடிக்கடி கவனித்துப் பத்துநிமிடமிருக்குமளவில் எழுதுதலை நிறுத்திக்கொண்டு, எழுதிமுடிந்த விடைகளை முதல் தொடங்கிக் கவனமாய் வாசித்து வேண்டிய திருத்தங்களைச்செய்து பூர்த்தியாக்கவேண்டும். இலக்கம், பெயர், தலம், முதலிய விவரங்கள்யாவையும் வேண்டிய முறைப்படி தெளிவாகவும் திருத்தமாகவும் எழுதிக்கொள்ளவேண்டும். அவசரங்கொண்டு அலங்கோலமாய் ஐந்துவிடை எழுதுவதினும், அமைதியுடன் பிழையின்றிச் சிறப்பாக இரண்டுவிடை எழுதல் நலமாம்.

7. விளங்கா வினாக்களை விளங்கியவர்போல் நடித்துப் போலிவிடைகளைக்கொடுத்துப் பேதைமைப்பிழம்பைப் பிளந்து காட்டப்படாது.

ச. பூபாலபிள்ளை.

# ஐயவினாத்தொடர்.

தண்டமிழ்த் தாய்க்குத் தொண்டனும் பழைய
அடியனேன் முடிக்கோர் அணியா யிலகத்
திருவடி தந்தருள் செந்தமிழ்ப் புலவீர்!

(க) பதின்மூன்றாம்புறப்பாட்டிலே அதன் உரையாசிரியராலே ஈற்றிலே எழுதப்பெற்றுள்ள 'பெருநற்கிள்ளிகளிறு கைமிகந்து பகையகத்துப்புகுந்தமையின் அவற்குத் தீங்குறுமென்று அஞ்சி வாழ்த்தினமையால், இது வாழ்த்தியலாயிற்று, இவற்குத் தீங்குறின் நமக்குத் தீங்குறுமென்னுங் கருத்தால் நோயிலனாகிப்பெயர்க வென்றாராயின், வாழ்த்தியலாகாது; துறையுடையானது பாட்டெனவுணர்க." என்ற பகுதியிலே தடித்த எழுத்திலுள்ள அவற்கு, இவற்கு என்றவற்றால் முறையே சுட்டப்படுபவர் எவர்?

(உ) இருநூற்றொன்றாம் புறப்பாட்டிற்கு அதன் உரையாசிரியர் முடிபுகாட்டியிருக்கும் முறைமைக்கும் பதின்மூன்றாம்பாட்டில் முடிபுகாட்டியிருக்கும் முறைமைக்கும் வேறுபாடுகள் உண்டா?

(ங) இறையனாரகப்பொருள் (கரு) உரையிலே தமிழ்கெழு மூவேந்தர்க்குரிய விழாக்களைத் தெரிப்பதுபோல 'மதுரை ஆவணியவிட்டமே, உறையூர்ப் பங்குனியுத்திரமே, கருவூர் உள்ளிவிழாவே' என்றபகுதி காணப்படுகின்றது. அகநானூற்றிலோ "கொங்கர் மணியரையாத்துமறுகினாடு, முள்ளிவிழவினன்ன" (ஙசுஅ) என்று வருகின்றது. இதனால் 'உள்ளிவிழா' கொங்கரது என்பது பெறப்படுகின்றது. அங்ஙனமாயின் முற்கூறிய மூன்றுவிழாக்களையும் மூவேந்தர்களை ஒட்டிவந்தனவாகக் கருதாது தமிழ்நாட்டுச் சிறந்துவிளங்கிய அவ்விழாக்களை அவை நடந்த ஊர்களோடுசேர்த்து வழங்கிவந்தனர் என்றுகொள்வது நேராகலாமா?

(ச) பெரியபுராணத்திலே 'ஏழாய்வேகம்' (அப்பூதி. உஎ) என்ற பகுதி பயின்றுவருகின்றது. இப்பகுதிக்கு எங்ஙனம் பொருள் கொள்வது?

ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தொண்டன்.



# தனிநிலைச்செய்யுட்கோவை.

(ருஉரு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

29. நூலமை யியற்கை நுவல்சால் சிறப்பிற்
பால்வகை யறிந்த பல்லோர் பழிச்சு
நுண்மாண் வினைபூ ணுக்குடை மனைநன்
கியற்றினோ னதனிடை யிரீஇ யொருவனைப்
போற்றா தொறுக்கும் புலைமகன் போல
யாக்கைக் கினிய யாவையும் போற்றி
யின்னுயிர்க் குறுதி யென்றும் போற்றார்
காக்கை முதல தம்மினக் கவினுக்
குவத்தலி னுங்குவந் தயற்குறு மெழிற்கு
முவர்த்தாங் குவர்த்து முலகினைக்
கலக்கித் தந்நிலை களைந்தொழி குநரே.

30. தம்பொரு ளுதவித் தண்கடல் சூழ்ந்த
விம்பர்வாழ் மன்பதைக் கியல்வினை முற்றுறத்
தம்முட லறிவெலாந் தரீஇப்பெறு சிறுபொருள்
கொடைமுறை யன்றிப் பெறுமுறை யன்றென
மன்னவர் கொடைஞர் மாண்டொழி லாள
ரென்றிவர் தமக்கெலா மீதலவ் வவர்செயல்
பொன்ற வறுக்கு மாதலிற் புரையென
நின்றநெஞ் சந்தணர் நீடுகுலக் காப்பிற்
செயனுல கெல்லாஞ் செயிருறச் செய்யு
மாதலி னவர்க்கெலா மளித்தன் முறையென
வுலகந் தாங்கிய வுயர்குலத் தவர்தம்
மரபுவரு குநரெலா மாணா ரேனுஞ்
செய்ந்நன்றி யறிதல் சிறந்த தொன்றாதலின்
மெய்யொடவ் வந்தணர் வியன்மர பளித்தல்
பழியொழி யொண்ணலச் செம்பயன் றருமெனச்
சிறுபொரு ளேனுந் தமக்கெனச் சேமியார்
மறைநெறி வழுவா மாண்பினர் மறந்து
சிறுதொழி லொரோவழிச் செயிற்செயி ரன்றெனப்
பிறர்தமக் கங்ஙனம் பேணல்சா லாதென
நலஞ்செய் சான்றோர் நவினெறி நூன்முறைச்
செம்பொரு டெளியாச் சிலரே
வெம்பியழிந் தொள்ளிய வினைதபுக் குநரே.

31. இரும்புகொடுத் தங்நிறைப் பொன்பெறு நிலை
விரும்புமணி நீறு முதலமேற் பொருளெனக்
கொண்டுமிகு பொன்னைக் கொடுக்குநரு மில்லை
இன்னண மியல்குவ ரேனைக் கொள்கையர்
தமருந் தாமுந் தகையில் பழிபுரி
வினையியல் புணர்ந்தும் வெளிப் பட்டாங்கு
நாணின்றி யொருவினை நலிஇனு நலிகுவர்
பிறர்வினை யிகழ்தலிற் பேணுந்தம செயல்
பிறரிகழ்வு பெறுதலும் பேணாது பிதற்றுவர்
ஒருதொடர்ப் பலபொரு ளற்றற் றோயா
வுரைபல வுரைத்தாங் குணரா நிலைமையர்
காரண மின்றிப் பற்பல கடாவுவர்
பிறர்நிலை பேணார் பற்பல பிதற்றி
யுறுதுயின் முதல வுழக்கிக் கலக்குவர்
பிறரெடை தமக்குப் பெருந்துன் பெனினு
மரிசாதி வேட்டு மலர்த்துவர் முகத்தைத்
தாய்மொழி பயிலார் தாய்மொழிப் புலமை
யாய்தவர்க் கன்புசெய் தாவன புரியார்
மாய்தகை வினைசெய் மாக்கட் குதவுவர்
தம்மரசு வேட்டுத் தாஅய்ப்பல கூறவர்
குறிப்புணர் வில்லார் கூடியர் வுரைத்து
வெறுப்புறீஇ நலனற்று வீகுநர் கலித்து
நொடியிருப் புணரா நோதக் குடல்வாழ்வு
கல்வினு நிலையாக் கருதிவீண் முயல்குவர்
மண்ணிடை யியல்வை மதித்தீண்
டெண்ணுற் றேகா திறந்தவர் பலரே.

32. எழுதி யாவரு மெண்ணியாங்கு முறையே
பயிலற் குரிய பான்மைய வாகின்
மனத்திடை வளர்வொரீஇ பேட்டிடை வளர்ந்து
புறநாட் டவர்தம் மொரிபுகுந்து பொன்றி
யறவே யழியு நான்மறை யாதலி
னந்தணர் தமக்கே யாக்கினர் சிறப்பென
அதனு னன்றே யிற்றைஞான் றவருங்
காதிடைக் கேட்கவுங் கண்ணிற் காணவும்
வாயிடை வழங்கவும் வாய்ப்புடைத் தாயின
வெனக் கொடு நட்புற் றிணைந்து
மனக்கச டற்றுநாம் வாழ்வது முறையே.



33. தட்ப வெப்பந் தகுதியொடு நாடு
வயது தொழினிலை வாய்ந்த விவற்றிற்
கேன்ற வல்சியு மினிதாக்கு மாறு
மான்ற வளவும் பிறவு மளித்தனர்
தோன்று பிணிக்கு மருந்துந் துணைமை
சான்ற வுடுக்கைக் குரியன பட்டும்
பருத்தியுந் தந்துநம் வருத்தம் பாற்றின
ரிருக்கையும் வாழ்க்கைக் கின்றியமை யில்லாத்
திருத்தம் பயின்ற சீர்சா லன்றியு
முன்னம் புரக்கு மியவுள தண்மையு
மின்னவும் பிறவு மினிதீந் தியன்றன
ரிவ்வாறுகவு மிற்றைஞான் றவருட்

சிலரே,

அவரினு தட்ப மார்ந்தன ரெனக்கொடு
முத்தை தொட்டு முறைவரூஉ மவ்வெலாந்
தத்தம் விருப்பிற் றபுத்துறழ் குநரே

இவரே,

ஒல்காப் பெருமைத் தொல்காப்பியமும்
வள்ளுவர் வழங்கிய தெள்ளுதமிழப் புலமுஞ்
சுவைகசிந் தூற்று நவையில் பண்டைத்
தண்டமிழ்ப் பனுவலுந் தருஞ்சார் பினர்சொல்
ஆறுகடை யிட்ட பத்துவகைக் கூல
முதல வுணவும் பிறவு முறையே
மாற்றிப் பிறவழங்கு மாற்றல ரேயோ
வாதலி னின்னோ ராட்சியுட் படாம
லூடற்கருவி யமைப்பு முயர்வரும் வியப்பு
முயர்போ மயக்கு மொன்றிய வைம்பெரும்
பூதத் தியற்கையும் புந்திகொடு தெரீஇப்
பழக்க வழக்கம் பாற்பட வணிர்துகல்
லின்பமுற் றோங்கி யிலகுத
லன்புற் றமர்வழக் காறு கும்மே.

34. மடவோர் தன்னினும் வார்கடி லுலகி
ளுடவர் தம்மை மேம்படக் கோடல்
பண்டைநா டொட்டுப் பார்க்கெலா மியற்கை
யில்வே மான நான்மறை யியம்பு

மிம்பர்வாழ் பற்பல வியவுட் கொள்கை
நாட்டவர் திசினோர் நங்கைய ரலரே
யாடவர் தமரையு மடவோர் தமரையு
முறையே கருவுறீஇ முற்றுநரு மிலரே
யறைபணி யாற்று மடிச்சிய ரேய்ப்ப
மடவோ ரன்றே மற்றிரு வோரையுந்
தம்மகடு வருந்தித் தருகுந ரம்மா
வாஉ மேனு மகஉ கீழு
நாடுதல் விழைதல் ஞாலத் துயிர்க்கெலாங்
கூடுமுறை யாதலைக் குறித்தில ரேயோ

இவற்றால்,

மங்கையர் முதலா மாநிலந்
தங்குவ மைந்தர் தமக்கா கியவே.

35. பெறலரு மணியைப் பெற்றோன் பேழையு
ணிறைகாப் பிட்டு நேர்மைபுரி கிலனாய்ச்
செல்லுழி யெல்லாஞ் செல்லுவன் கொல்லோ

அஃதேய்ப்பப்,

பெண்டிரை நம்மனோர் பேணிவரு குநரே
யொண்டொடி யவரை யொரீஇயொன் றுஞற்றல்
கண்டவ ருளரோ நம்வயி னிம்மையொடு
மறுமைபெறு வினைக்கெலா மாநீர் வார்த்தே
யறமுத லாற்ற லறியா ரேயோ
வுறுமுயிர் வாழ்வுக் குரியவுட லோம்பற்
கன்னவர் துணையே யுணாமுத லவற்றி
னின்றியமை கிலரா யிருத்தலன் பன்றோ
வேட்கை கருதிப் பிறர்வேட் பதுபோல்
வேட்கில ருயிர்மேம் பாடொன்று கருதி
வேட்குநர் சான்றோர் வினைநலன் பலவே
யிவ்வா றாகவு மேலைநாட் டவர்த
மொவ்வா நெருந லொழுக்குக் குருகி
யொழுகவைத் தந்தோ வொழிகுந
ரழுகலறி வார்ந்த வறங்கடை யோரே.

36. மனநிலை மிருத்தலும் வளம்பல பெருக்கலுந்
தானின் றமையா தலகெனக் கொளீஇ



மயிற்குர லெழீஇ நெய்யெரி மரீஇப்
பொறிவழி யீர்க்கும் புனையினை நிரைகால்
வண்டியி னமர்ந்து தெருவிரு மருங்கிற்
கீழ்ச்சாய் சாரற் கிளர்பைம் புல்லெலாந்
தொடர்நெய் நூலின் றோற்றம் போன்றும்
புடைநிலை மரனெலாம் போதல் போன்றும்
பல்லாறு போக்கிப் பலப்பல பகர்தலும்
வென்றன மென்று வீறுதலு மந்தோ
தோற்றன மென்று துன்புற் றொழிதலு
மறிந்தன மென்று மறிந்தில மென்று
மின்ப துன்பத் திடைப்பட் டுழல்வதா
னென்னும் பயக்கா தியைவ பொன்றாது
பொன்னிகர் சான்றோர் புகல்பலர் போயுங்
கருப்பே பிணியே கடும்பெறுஞ் செருவே
யென்றிவை யளப்பில விம்பர்முற் றொழித்து
மென்னா கியதே யென்னா கியதே

ஆதலி,

னின்னோ ரன்ன வியற்கையறி கில்லா
வின்னா மனனே பலசுமந் தினைகுதி
கின்னா னுலகி னிலைப்பு மழிப்புந்
தின்னா துண்மை பொய்யுரை யன்றே
நீயழிந் தக்கா னிலவுநர்
போயழிந் தொழிகுவர் புதுமைமிக வுடைத்தே.

37. உற்றுழி முறீஇ யுதவிய தானே
களிம்பூறு கட்டை காணா மேனூறூஉம்
பொற்றகடு விட்டுப் போகா தியாத்த
நூலிலகு கடகக் கையின னுவல்சால்
னகவர்த துன்னற் கவின்பெறு வினைஞன்
பன்னாண் முயற்சியைப் பாழ்செய் புரையதூஉ
மெத்திறத் தியாப்பினு மிடர்கொளப் புரிவதூஉஞ்
செவ்வா னத்திடை வெள்ளுடுச் செறிவெனப்
புள்ளியிடை யிட்டு நான்மருங்கு கருத்த
கூடற்செங் கூறைய ளரிதிற் கோளுறு
வருநிலை கருதி வாய்க்கொளாத் துயரினள்
சுண்ணந் தீட்டிய மட்சுவ ராண்டுபல

நண்ணியடி யுப்புண்டு நடந்தா ளென்னக்
கந்தையடிப் புனைமறை கதுவுபழம் புற்பாய்
யாத்த தட்டியுடை யில்லோன் முகப்புவரு
நிழலொடு நிலவளாய் நிலாவுறு மண்ணை
மழைப்பெயல் வாய்ந்தென்று மகிழ்வுறீஇ யெடுத்து
நாண்கொண்டு வீசு நல்லோ ளென்னுயிர்
வைப்போன் வகைகண் டாற்றுது பொள்ளெனப்
புலந்தரு காமனெறி மகிழ்கொடு போக்கி
நலந்தரு பாண்டித் துரையினை நயந்தன
னிலந்தரு திருமுத னிறைந்த
குலந்தரு கொள்கை கொண்டனை யெனவே.

(தொடரும்.)

## தனிநிலைச்செய்யுட்கோவைப் பிழைதிருத்தம்.

(செந்தமிழ் 18-ஆம் தொகுதி 95-ஆம் பக்கம் முதல்)

| பக்கம். | பா. எண். | பா. வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 95 | 9 | 9 | தாற்றய் | தாற்றப் |
| ,, | ,, | 15 | பண்ணிடைத் | மண்ணிடைத் |
| 142 | ,, | ,, | படுத்தித | படுத்தித் |
| 143 | 13 | 3 | யாழந்து | யாழ்ந்து |
| 144 | 14 | 8 | லழிவறு | லழிவுறு |
| ,, | ,, | 28 | பழுவுங் | படூஉங் |
| 288 | 17 | 13 | ஞேன்பிலர் | ஞேன்பினர் |
| ,, | ,, | 42 | அஃதேய்பப | அஃதேய்ப்ப |
| 318 | 18 | 2 | வாழ்க்கைக | வாழ்க்கைக் |
| 320 | 20 | 1 | வளர்பொரு | வாஃபொரு |
| | | | ளடையுநர் | ளடையுநர்வாழ்க்கை |
| | | | வாழ்க்கை | மழையிடைக் |
| 320 | 20 | 4 | செய்கைத் | செய்கையத் |
| 321 | 22 | 26 | வெழிவிறு | வெழிவிள |
| 324 | 27 | 17 | பாரான் | பாரகண் |

எஸ். வயிரமுத்து.



சரிதையென்பதுபிச்சையுஞ்சரிதையும் ௩௫
சச்சையேசெறிகுழம்புஞ்சட்டையும் ௩௬
சருவமேசட்டுவமும்பானையும் ௩௭
சருவேதெய்வவுணவுஞ்சோறும் ௩௮
சனியேதுக்கமோர்வாரமிருபெயர் ௩௯
சத்தியமென்பதுசபதமெய்யிரண்டாம் ௪0
சரபமேவரையாடுஞ்சிம்புளும் ௪௧
சரணமேதாளமறைபுகலிருபேர் ௪௨
சமழ்த்தலென்பதுவருத்தமுநாணமும் ௪௩
சகுந்தமேபறவையின்பொதுப்பேரும்
பூகமுமென்றேபோற்றுமிருபெயர் ௪௪
சகுநியேநிமித்தம்பார்ப்பவனும்
பறவையெனவும்பகருமிருபெயர் ௪௫
சம்பமேயெலுமிச்சமும்வயிரமும் ௪௬
சடையேவேருஞ்சடையுமிருபெயர் ௪௭
சமமேயொப்புஞ்சங்கிராமமுமாம் ௪௮
சலதரமேபுயல்வாவியிருபெயர் ௪௯

சம்முதலிருபேர்முற்றும். —

சம்முதன்முப்பெயர்

சகமென்பதுவேசட்டையும்பூமியுஞ்
சகமுமென்றேசாற்றமுப்பெயரே ௫0
சடமேநதியுமுடலும்பொய்யும் ௫௧
சமனேயணித்துநடுநமன்மூன்றே ௫௨
சதியென்பதுவேகற்புடைமகளிரு
முரோகணியுடனேவட்டமுமுப்பெயர் ௫௩
சரியேயொப்புங்கையிடுவளையும்
வழியுமெனவேவைத்திடுமுப்பேர் ௫௪

சயிந்தவமென்பதுகுதிரையுந்தலையு
மிந்துப்பெனவுமிசைக்குமுப்பேரே ௫௫

சலாகையேசன்மணியுஞ்சவளமு
நாராசமுமெனாட்டுமுப்பேரே ௫௬

சகுனமென்பதுநிமித்தமுங்கிழங்கும்
புள்ளுமெனவேபோற்றுமுப்பேரே ௫௭

சம்முதன்முப்பேர்முற்றும்.

சம்முதனாற்பெயர்

சந்தமென்பதுகவிதையுஞ்சாந்தமு
நிறமும்வனப்புநிகழ்த்துநாற்பேரே ௫௮

சந்திரானேயந்தியுஞ்சதுக்கமும்
வேயுமோரிசையும்விதிக்குநாற்பேரே ௫௯

சரமேகணையுநாணற்புல்லுந்
தனிமணிவடமும்போருநாற்பெயரே ௬௦

சகோரமேபேராந்தைசெம்போத்துச்
சக்கரவாகம்புட்பொதுநாற்பெயர் ௬௧

சதமேயிலையுநூறுமிலக்கமும்
புள்ளினிறகுமறுதியுநாற்பேர் ௬௨

சத்திரமேகைவேலும்வேள்வியு
மன்னசாலையுங்குடையுநாற்பெயரே ௬௩

சலமேமடுக்கமும்வயிரமுநீரும்
பொய்யுமெனவேபோற்றுநாற்பேரே ௬௪

சவியேசெவ்வையும்வனப்புங்காந்தியு
மணியின்கோவையும்வைக்குநாற்பெயரே ௬௫

சம்முதனாற்பேர்முற்றும்.

சம்முதலைம்பெயர்

சக்கிரிதானேசெக்கானரசன்
மாயனுரகன்குயவனென்னைம்பெயர் ௬௬



சயமேபல்லிசெருக்கரையிரவி
மாலைவெற்றியென்றைம்பெயர்மருவும்

சசியேநிலவுங்கடலு*மழையுங்
கற்பூரமுமயிராணியுமைம்பெயர்

சம்முதலைம்பேர்முற்றும்.

சம்முதலறுபெயர்

சங்கமென்பதுகையிடுவளையுஞ்
சவையும்புலவரும்புணர்ச்சியுஞ்சங்குங்
கணைக்காலெனவுங்கருதுமறுபெயர்

சத்தியேயிசைச்செய்யுள்வலியுமை
வேல்குடைகான்றல்விரிக்குமறுபேர்

சம்முதலறுபேர்முற்றும்.

சம்முதலெண்பெயர்

சக்கரந்தானேமலையுமாழியும்
பூமியும்வட்டமும்பிறப்புமோர்புள்ளுந்
தேரினுருளும்பெருமையுமெண்பெயர்

சம்முதலெண்பேர்முற்றும்.

சம்முதலொன்பான்பெயர்

சம்புமாலுமயனுஞ்சிவனு
நரியுநாவலுமிரவியுஞ்சம்பு
மெலுமிச்சமும்வச்சிரமுமென்றொன்பான்

சம்முதலொன்பான்பேர்முற்றும்.

சம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௬௨.

* மலையுமென்பது பிரதிபேதம்.

## சாமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

### சாமுதலொருபெயர்

சானகியென்பதுதிருமகள்பெயராம் க
சாவென்பதுவேபேயெனலாகும் உ
சாகாடென்பதுபண்டியெனப்படும் ௩
சாடுகந்தானேபண்டியாகும் ௪
சாகதுண்டமேயகிலெனப்படுமே ௫
சாதவாகனனேயரிகரபுத்திரன் ௬
சானகமென்பதுவில்லெனப்படுமே ௭
சாலினிதானேகள்வாணிச்சியாம் ௮
சாரியேசூதாடுகருவியாம் ௯
சாதாரியென்பதிராகமாகும் க0

சாமுதலொருபேர்முற்றும்.

### சாமுதலிருபெயர்

சானனமென்பதுபொன்னின்சாதியுந்
தமிழுமென்றேசாற்றுமிருபெயர் கக
சாகசமென்பதுமெய்ம்மையுமிபமும் கஉ
சாந்தமேசந்தனமுங்கமையும் க௩
சாந்தாற்றியென்பதாலவட்டமும்
பீலியுமெனவேபேசுமிருபெயர் க௪
சாமியென்பதுகுரத்தியுமுருகனும் க௫
சாம்புவேபறைபொன்னெனவிருபெயர் க௬
சாம்புதலென்பதுகூம்புதல்சாய்தல் க௭
சாழலேவிளையாட்டுங்கரடியும் க௮
சாகினியென்பதுசேம்புங்கீரையும் க௯
சால்பென்பதுவேமாட்சிமையுடனே
சான்றாண்மையுமெனச்சாற்றுமிருபெயர் உ0



சாலுவென்பதுவரையின்சாரலு
முழந்தாளெனவுமொழியுமிருபெயர் உக
சாடியேதுகிலுழியிருபெயர் உஉ
சாரலென்பதுமலையின்பக்கமு
மருதயாழின்றிறனைசையுமிருபெயர் உ௩
சாகரமென்பதுதுயிலொழிந்திடலுங்
கடலுமெனவேகாட்டுமிருபெயர் உ௪

சாமுதலிருபேர்முற்றும்.

### சாமுதன்முப்பெயர்

சாரசமேமுழந்தாள்பெருநாரையும்
பொய்யுமெனவேபோற்றுமுப்பெயரே உ௫
சாதகமென்பதுவானம்பாடியும்
பூதமுஞ்செனனமும்புகலுமுப்பெயரே உ௬
சாபமேவரையாடுஞ்சாபமும்
வில்லுமெனவேவிரித்திடுமுப்பெயர் உ௭
சாலகமேசாளரம்பூமொட்டுடன்
கயிற்றுவலையெனக்கருதுமுப்பெயரே உ௮
சாலையேயறப்புறமுஞ்சாலையுங்
குதிரைப்பந்தியுங்கூறுமுப்பெயரே உ௯
சாறேவிழவுமரத்தின்குலையுங்
கள்ளுமெனவேகருதிடுமுப்பெயர் ௩0
சாம்பலென்பதுகூம்புதல்பழம்பூ
சாம்பலெனவுஞ்சாற்றுமுப்பேரே ௩க
சாரேயிடமும்பற்றுஞ்சாரும் ௩உ
சாரிகையேசுழல்காற்றும்பூவையுஞ்
சுங்கமுமென்றேசொல்லுமுப்பேரே ௩௩
சாத்தனென்பதுவேயருகனும்புத்தனு
மரிகரபுத்திரனுடனுமுப்பெயரே ௩௪

சாமுதன்முப்பேர்முற்றும்.

சாமுதனாற்பெயர்

சாயலேமேம்பாடுமழகு
மென்மையுமொப்பும்விளம்புநாற்பேரே

சாரங்கமென்பதுமானும்வண்டுஞ்
சாதகப்புள்ளுமில்லுநாற்பெயரே

சாமமேயோர்வேதமும்பச்சையுங்
கருமையும்யாமமுங்காட்டுநாற்பேரே

சாலியேசெந்நெல்லுங்கவசமு
மருந்ததியுடனேகள்ளுநாற்பெயரே

சாமுதனாற்பேர்முற்றும்.

சாமுதலைம்பெயர்

சாகமேவெள்ளாடுந்தேக்குங்
கீரையுந் * தழையுந்தேனீயுமைம்பேர்

சாமுதலைம்பேர்முற்றும்.

சாமுதலேழ்பெயர்

சாதியென்பதுசிறுசண்பகமும்
பிரம்புங்கள்ளுங்குலமுந்தேக்குஞ்
சிந்திலுமூங்கிலுஞ்செப்புமேழ்பெயரே

சாலமென்பதுவலையுஞ்சவையும்
விசாலமுங்கூட்டமுமதிலுமாச்சாவுஞ்
சாலேகமுமெனச்சாற்றுமெழுபெயர்

சாமுதலேழ்பேர்முற்றும்.

சாமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்

ஆகச்சூத்திரம்-௧௧௩.

* தாழையுமென்பது பிரதிபேதம்.



சிம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.
சிம்முதலொருபெயர்

சிற்றிவண்டென்பதுதிவலையாகும் ௧
சிதடென்பதுவேபேதையாகும் ௨
சித்தகமேதலைக்கருவியெனப்படும் ௩
சித்திலிகையென்பதுநல்லாடைப்பெயர் ௪
சித்திரப்படமென்பதுபுத்தகம் ௫
சிதையென்பதுவேகீழ்மக்களாகும் ௬
சிந்தமேபுளியாமெனவிசைப்பர் ௭
சிதகமேதூக்கணங்குருவிப்பெயர் ௮
சிம்புளியென்பதுசெம்படாமாகும் ௯
சிலம்பிதானேசிலந்தியென்றிசைப்பர் ௧0
சிலதியர்தானேயேவல்செய்வோரே ௧௧
சிலகமென்பதுசட்டுவப்பேராம் ௧௨
சிலாமுகமேவண்டாமெனவிசைப்பர் ௧௩
சிலிர்த்தலென்பதுதளிர்த்தலாகும் ௧௪
சிலேபிகர்தானேவாணிகராகும் ௧௫
சிதடியேசிள்வீடெனலாகும் ௧௬
சில்லிகையேநல்லாடையாகும் ௧௭
சிலவரென்பதுவேடராகும் ௧௮
சிவளிகைதானேபெருஞ்சூட்டாகும் ௧௯
சிவணலென்பதுகூடுதலின்பெயர் ௨0
சிவிறியென்பதுதுருத்தியாகும் ௨௧
சிறாரென்பதுவேபிள்ளைகளாகும் ௨௨
சிறுபுறமேபிடர்த்தலையெனப்படுமே ௨௩
சிறுசொல்லென்பதுபழிச்சொல்லாகும் ௨௪
சினகரந்தானேசிறுகோவிற்பெயர் ௨௫

சிம்முதலொருபேர்முற்றும்.

## சிம்முதலிருபெயர்

சிகண்டியேமயிலலியெனவிருபெயர் ௨௬

சிகழிகையென்பதுவாசிகையுடனே
மயிர்முடியென்றேமருவுமிருபெயர் ௨௭

சிந்துவாரமேகடலுநொச்சியும் ௨௮

சிமயமேமலையுச்சியிருபெயர் ௨௯

சிரையேநரம்புங்குரங்குமிருபெயர் ௩0

சிலதரென்பதுவேயேவல்செய்வோரு
மாரியரெனவுமாகுமிருபெயர் ௩௧

சித்திரனேயோவியனுந்தச்சனும் ௩௨

சிதடனேயந்தகனுமூடனும் ௩௩

சித்திரபானுவேதீயுமிரவியும் ௩௪

சிரமேசென்னியுநெடுங்காலமுமாம் ௩௫

சிங்கலென்பதுவேகுன்றலுங்கெடலும் ௩௬

சிம்முதலிருபேர்முற்றும்.

## சிம்முதன்முப்பெயர்

சிவமேநன்மையுங்குறுணியுமுத்தியும் ௩௭

சிதலையென்பதுநோயுந்துணியுங்
கறையானெனவுங்காட்டுமுப்பெயரே ௩௮

சிறுமூலகமேகாமனும்பூடுந்
திப்பிலியெனவுஞ்செப்புமுப்பெயரே ௩௯

சின்னமேசிறுசின்னமுஞ்சிறுமையுஞ்
சிலவானமுமெனத்தெரிக்குமுப்பெயரே ௪0

சிந்துரமென்பதுபுளியுஞ்சிவப்பு
மிபமுமென்றேயிசைக்குமுப்பெயரே ௪௧

சிவப்பென்பதுசினத்திற்குறிப்புஞ்
செம்மையுங்கறுப்புந்தெரிக்குமுப்பேரே ௪௨



சிலையேமலையும்வில்லுங்கல்லும் ௪௩

சிலம்பென்பதுவேமலையுமோசையும்
பரிபுரமெனவும்பகருமுப்பெயரே ௪௪

சிலீமுகமென்பதுமுலைக்கண்ணும்வண்டு
மம்புமென்றேயாகுமுப்பெயரே ௪௫

சிறையேகாவலும்புள்ளினிறகும்
வேறிடமுடனும்விதிக்குமுப்பெயரே ௪௬

சில்லையென்பதுதூர்த்தையும்பிரண்டையுஞ்
சிள்வீடெனவுந்தெரிக்குமுப்பெயரே ௪௭

சிரகமென்பதுசென்னியிற்சோடுங்
கரகமுந்திவலையுங்காட்டுமுப்பெயரே ௪௮

சிமிலிதானேயுறியுங்குடுமியுஞ்
சிள்வீடெனவுஞ்செப்பிடுமுப்பெயர் ௪௯

சிம்முதன்முப்பேர்முற்றும்.

## சிம்முதனாற்பெயர்.

சிகரியேகோபுரமுமெலியு
நாரையும்வெற்புநவிற்றுநாற்பெயரே ௫0

சிகியேமயிலுந்தீயுங்கேதுவும்
பரிபுரமெனவும்பகருநாற்பெயரே ௫௧

சில்லிதானேவட்டமுங்கீரையுந்
தேருருளுஞ்சிள்வீடுநாற்பெயரே ௫௨

*சிந்துரமென்பதுபுளியுஞ்செம்மையுஞ்
செங்குடையுடனுந்திலகமுநாற்பெயர் ௫௩

சிவையேகொல்லனுலையுமோரியு
முமையுமரவேருமோதுநாற்பெயரே ௫௪

சினையேமுட்டையும்பீளுமுறுப்பு
மரக்கோடெனவும்வைக்குநாற்பெயரே ௫௫

சிம்முதனாற்பேர்முற்றும்.

---

* சிந்தூரமென்பது பிரதிபேதம்.

சிம்முதலைம்பெயர்

சிமிலியென்பதுபுணையுமிதவையுந்
தோணியுமுறியுங்குடுமியுமைம்பேர் ௫௬

சிதமேவெண்மையுஞ்செயமுறப்பட்டதும்
ஞானமுமீனும்விண்ணுமைம்பேரே ௫௭

சிம்முதலைம்பேர்முற்றும்.

சிம்முதலறுபெயர்

சிக்கமேயுறியுஞ்சிறையுமெலிவுங்
குடுமியுஞ்சீப்புடனுச்சியுமறுபெயர் ௫௮

சிந்தோதகியுங்குறளுங்கடலு
நீருமுச்சிறுமோர்பாட்டுமறுபெயர் ௫௯

சிம்முதலறுபேர்முற்றும்.

சிம்முதலெழுபெயர்

சிகரமென்பதுமலையுந்திவலையுந்
திரையுஞ்சென்னியுமலையினுச்சியுங்
கவரிமாவுங்காக்கையுமெழுபேர் ௬௰

சித்திரமென்பதோர்கவியுமாமணக்கு
மெய்போற்பொய்யையுரைத்தலுமழகு
மதிசயமுடனுங்கோலவடிவுங்
காடுமென்றேகருதுமேழ்பெயரே ௬௧

சிம்முதலெழுபேர்முற்றும்.

சிம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௩௭௪.

சீமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

சீமுதலொருபெயர்

சீதரனென்பதுதிருமாலாகும் ௧

சீதகனென்பதுசுக்கிரனெனப்படும் ௨



சீரமென்பதுமரவுரியாகும் ௩

சீவையரென்பதுசூத்திரர்பெயரே ௪

சீருளியந்தான்றும்பிரமெனப்படும் ௫

சீவையென்பதுநாடகமாகும் ௬

சீமுதலொருபேர்முற்றும்.

சீமுதலிருபெயர்

சீவனேயுயிர்வியாழமிருபெயர் ௭

சீதையென்பதுழுபடைச்சாலு
மிராமன்றேவியுமிசைக்குமிருபெயர் ௮

சீப்பேதாழ்ப்பாள்சீப்பெனவிருபெயர் ௯

சீவனியேசெவ்வழியாழோசையு
மோர்மருந்தெனவுமுரைக்குமிருபெயா ௧௰

சீமுதலிருபேர்முற்றும்.

சீமுதன்முப்பெயர்

சீத்தையென்பதசடருங்கிழுங்
கொத்துமெனவேகூறுமுப்பெயரே ௧௧

சீதமென்பதுமேகமுங்குளிரு
நீருமெனவேநிகழ்த்திடுமுப்பெயர் ௧௨

சீலமேசரித்திரமுங்குணமுந்
தண்டித்தலுமெனச்சாற்றுமுப்பெயரே ௧௩

சீகரமென்பதுதிவலையுங்காகமுங்
கவரியுமெனவேகாட்டுமுப்பெயரே ௧௪

சீமுதன்முப்பேர்முற்றும்.

சீமுதற்பதினொருபெயர்

சீரென்பதுவேபலவகையியங்கலுஞ்
செம்பொருளுடன்காத்தண்டுஞ்செல்வமுந்

தாளவொத்துடன்சேர்த்தியுமொல்கலும்
பாரமும்புகழுமழகுமோசையு
மோதியபேரிவையாம்பதினொன்றே

சீமுதற்பதினொருபேர்முற்றும்.

சீமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௧௮௬.

## சும்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

### சும்முதலொருபெயர்

சுடுவனென்பதுவேயுதிரமாகும்
சுணங்கைதானே அடுதலாகும்
சுண்டியென்பதுசுக்கெனப்படுமே
சுணங்கனென்பதுநாயெனலாகும்
சுரதந்தானேகலவியாகும்
சுரதநூலேகாமநூலாம்
சுதரிசனந்தான்சக்கரமெனப்படும்
சுமடையேசும்மாடெனப்படுமே
சுமையடையென்பதுசும்மாடாகும்
சுச்சென்பதுவேசுண்டியாகும்
சுமாலிதானேகள்ளெனவிசைப்பர்
சும்பென்பதுவேகடம்பெனலாகும்
சுரேசனென்பதுமுருகனாகும்
சுரநதிதானேகங்கையெனப்படும்
சுரிமுகமென்பதுசங்கெனலாகும்
சுருக்கலென்பதுகட்டலாகும்
சுலவுதலேசுழற்சியாகும்
சுலோகியென்பதுநள்ளெனலாகும்



161399

சுலுவென்பதுவேசெம்பெனலாகும் ௧௯
சுறவென்பதுவேயேற்றுக்கெளிறும் ௨0
சுரியலேமாதர்மயிராம் ௨௧
சுறவேமகரமீனெனப்படுமே ௨௨

சும்முதலொருபேர்முற்றும்.

### சும்முதலிருபெயர்

சுடர்க்கடையேமின்மினிமயிலிருபேர் ௨௩
சுடுமணென்பதுவேயிட்டிகைகுயக்கலம் ௨௪
சுண்டனென்பதுவேசதயநாளு
மூஞ்சூறெனவுமொழியுமிருபெயர் ௨௫
சுள்ளியென்பதுமராமரங்குங்குமம் ௨௬
சுரர்குருவேயிந்திரனும்வியாழமும் ௨௭
சுருங்கையென்பதுகரந்தகற்படையு
நுழைவாயிலுமென நுவலுமிருபெயர் ௨௮
சுருதியேயொலிவேதமிருபெயர் ௨௯
சுந்தரிதானேயிந்திராணியு
மூஞ்சூறெனவுமொழியுமிருபெயர் ௩0
சுட்டலென்பதுவேகாட்டலுஞ்சுட்டலும் ௩௧
சுருவமேநெய்த்துடுப்புஞ்சுருவமும் ௩௨
சுண்டையேமதுவுஞ்சுண்டையுமிருபெயர் ௩௩
சுவேதமென்பதுவெண்மையும்வேர்வும் ௩௪
சுரிகைதானேகவசமுஞ்சுரிகையும் ௩௫
சுரியேநரியுஞ்சுரியுமிருபெயர் ௩௬

சும்முதலிருபேர்முற்றும்.

### சும்முதன்முப்பெயர்

சுடிகையேமயிர்முடியுஞ்சுட்டியு
மகுடமுமெனவேவைக்குமுப்பெயரே ௩௭

சுவாமியென்பதுமுருகனும்பொன்னு
மாசானெனவுமாகுமுப்பெயரே ௩௮

சுவமேபுள்ளின்மூக்குஞ்சுவர்க்கமுஞ்
சுண்டனுமெனவேசொல்லுமுப்பெயரே ௩௯

சுசியென்பதுவேகொடையுஞ்சுத்தமுந்
தீயுமெனவேசெப்புமுப்பெயரே ௪௰

சும்முதன்மூப்பேர்முற்றும்

சும்முதனாற்பெயர்

சுகமேகிளியுமின்பமுநன்மையுஞ்
சுங்கனுமெனவேசொல்லுநாற்பெயரே ௪௧

சுடரேயொளியுந்தளிருமிளக்கு
முச்சுடரெனவுமொழியுநாற்பெயரே ௪௨

சும்மையேநெற்போருநகரமு
மொலியுநாடுமோதுநாற்பெயரே ௪௩

சுரமேவழியுங்காடுஞ்சுரமு
மருநெறியுடனுமாகுநாற்பேரே ௪௪

சுட்டியென்பதுபட்டமுஞ்சுட்டியு
நாக்குமயிர்முடியெனவுநாற்பேரே ௪௫

சும்முதனாற்பேர்முற்றும்.

சும்முதலைம்பெயர்

சுவலேமேடும்புயத்தின்மேலு
முதுகும்பிடருந்தொல்லையுமைம்பேர் ௪௬

சுதையென்பதுவேயுதைகாற்பசுவுஞ்
சுண்ணம்புடனேயுடுவுமமுதமும்
வெண்மையுமெனவேவிளம்புமைம்பேரே ௪௭

சும்முதலைம்பேர்முற்றும்.



சும்முதலறுபெயர்

சுரையென்பதுவேபசுவின்முலையு
மம்புத்தலையும்பசுவுங்கள்ளுந்
துளையுஞ்சுரையுஞ்சொல்லுமறுபெயர் ௪௮

சும்முதலறுபேர்முற்றும்.

சும்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௨௩௭.

சூமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

சூமுதலொருபெயர்

சூழ்ச்சியென்பதுவேயாப்புறவெண்ணல் ௧

சூழிகைதானேகள்ளெனவிசைப்பர் ௨

சூரலென்பதுவேபிரம்பெனலாகும் ௩

சூரமேபயமாமெனப்படுமே ௪

சூர்மகளென்பதுவஞ்சப்பெண்ணும் ௫

சூர்த்தநோக்கேகொடுமையெனப்படும் ௬

சூழாமையென்பதுவிசாரியாமையாகும் ௭

சூர்ப்பந்தானேசுளகெனலாகும் ௮

சூளிதானேயுச்சியாகும் ௯

சூறனேமூஞ்சூறெனலாகும் ௧௰

சூன்றலென்பதுதோண்டலாகும் ௧௧

சூகரந்தானேபன்றியாகும் ௧௨

சூனரேயூன்விலைஞராகும் ௧௩

சூசரென்பதுமடையராகும் ௧௪

சூட்டென்பதுவேமாலையாகும் ௧௫

சூமுதலொருபேர்முற்றும்.

சூமுதலிருபெயர்

சூதேதாமரைசூதெனவிருபெயர் கசு

சூகைதானேயானையுஞ்சூகையும் கஎ

சூரியேமூதணங்குஞாயிறும் கஅ

சூத்திரனேதச்சனுமோர்சாதியும் ககூ

சூழ்வோரென்பதுமந்திரிமாமழுஞ்
சூழ்வோரெனவுஞ்சொல்லுமிருபெயர் உ0

சூளையேபொதுப்பெண்ணுஞ்சூளையும் உக

சூதகமேயாகுசமுமங்கையர்
தோயாப்பூப்புமென்றிருபேர்சொல்லும் உஉ

சூழலேயிடம்விராசமிருபெயர் உங

சூலேசூழ்தலுஞ்சினையுமிருபெயர் உச

சூமுதலிருபேர்முற்றும்.

சூமுதன்முப்பெயர்

சூலியென்பதுசிவனுங்காளியுஞ்
சூலியுமெனவேசொல்லுமுப்பெயரே உரு

சூதனேதேர்ப்பாகனுஞ்சூதனும்
புகழ்வோனெனவும்போற்றுமுப்பேரே உசு

சூமுதன்முப்பேர்முற்றும்.

சூமுதனாற்பெயர்

சூதமேமாமரமும்பிறப்பும்
பாதரசமும்வண்டுநாற்பெயரே உஎ

சூழியென்பதுநீர்நிலைவட்டமு
மானைமுகபடாமுடனுங்கடலுஞ்
சுனையுமென்றேசொல்லுநாற்பெயரே உஅ

சூமுதனாற்பேர்முற்றும்.



சூமுதலைம்பெயர்

சூரனென்பதுவேயிரவியுந்தீயு
நாயுமசுரனுஞ்சூரனுமைம்பெயர் உகூ

சூமுதலைம்பேர்முற்றும்.

சூமுதலறுபெயர்

சூரேயச்சமுமணங்குமஞ்சாமையுந்
தெய்வமுநோயும்வஞ்சமுமறுபெயர் ங0

சூமுதலறுபேர்முற்றும்.

சூமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-உகூஎ.

செம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

செம்முதலொருபெயர்

செங்கமலையென்பதுசெந்திருவின்பெயர் க

செங்கோடென்பதுசெருந்தியெனப்படும் உ

செண்ணந்தானேவ வென்றிசைப்பர் ங

செம்பொறிதானேயில்லாஞ்சனையாகும் ச

செயற்கரியதுதான்தவசெனலாகும் ரு

செயிரியரென்பதுபாணராகும் சு

செறிவென்பதுவேயடக்கமெனச்சொலும் எ

செறுவேவயலெனச்செப்பினர்புலவர் அ

செற்றலென்பதுகேடெனலாகும் கூ

செந்நீர்தானேயுதிரமெனப்படும் க0

செதும்பென்பதுவேசேறெனலாகும் கக

செம்முதலொருபேர்முற்றும்.

செம்முதலிருபெயர்

செண்டேகூர்மையுஞ்செண்டுமிருபெயர் கஉ

செம்புலமென்பதுபாலைநிலமும்
யுத்தகளமுமென்றோதுமிருபெயர் கங

சென்னியரென்பதுபாணருங்கூத்தரும் ௧௪

செவியேகாதுங்கேள்வியுமிருபெயர் ௧௫

செழுமையென்பதுவளமுங்கொழுப்பும் ௧௬

செட்டியென்பதுவணிகனுமுருகனும் ௧௭

செப்பேகரண்டகஞ்சொல்லுடனிருபெயர் ௧௮

செயிரேசினவலுங்குற்றமுமிருபெயர் ௧௯

செம்முதலிருபேர்முற்றும்.

செம்முதன்முப்பெயர்

சென்னியென்பதுசிரமும்பாணனுஞ்
சோழனுமெனவேசொல்லுமுப்பெயரே ௨0

செதுக்கென்பதுவேபந்தியும்பூதமுஞ்
சேறுமெனவேசெப்புமுப்பெயரே ௨௧

செம்புதானேநாவலுஞ்செம்பும்
பொன்னுமெனவேபோற்றிடுமுப்பெயர் ௨௨

செல்வமென்பதுகல்வியுஞ்சுவர்க்கமுஞ்
செல்வமுமென்றேசெப்பிடுமுப்பெயர் ௨௩

செம்முதன்முப்பேர்முற்றும்.

செம்முதனாற்பெயர்

செப்பமேநடுநிலையும்விதியு
நெஞ்சுஞ்செப்பமுநிகழ்த்துநாற்பெயரே ௨௪

செம்மையென்பதுசெவ்வையுஞ்சிவப்பும்
பெருமையுஞ்செப்பமும்பேசுநாற்பெயரே ௨௫

செந்தென்பதுவேயனுவுதிரயமு
மோரியுஞ்சிவனுமோதுநாற்பெயரே ௨௬

செய்யறானேசேறுமொழுக்கமுந்
தாவலுந்தொழிலுங்காட்டுநாற்பெயரே ௨௭

செம்முதனாற்பேர்முற்றும்.



செம்முதலறுபெயர்

செச்சையென்பதுவேயாடும்வெட்சியுஞ்
சந்தனக்குழம்புநீறுஞ்சோடுங்
காடுமெனவேகருதுமறுபெயர் ௨௮

செல்லேயிடியேறுடனேயேவலு
மேகமுமாகாயமுங்கறையானும்
வேலுமெனவேவிதிக்குமறுபெயர் ௨௯

செம்முதலறுபேர்முற்றும்.

செம்முதலொருபான்பெயர்

செம்மறானேயருகனுமீசனும்
வாடாப்பூவும்வாரியும்பெருமையும்
பழம்பூவுடனுந்தலைமையும்வீரரும்
புதல்வனுஞ்சிறந்தோனுடனொருபான்பெயர் ௩0

செம்முதலொருபான்பெயர்முற்றும்.

செம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௨௯௭.

சேமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

சேமுதலொருபெயர்

சேடகமென்பதுகேடகமாகும் ௧

சேட்சியென்பதுதூரமெனப்படும் ௨

சேணியேவிஞ்சையர்சேரிடமாம் ௩

சேதனந்தானேயறிவின்பெயராம் ௪

சேதியமென்பதுகோவிலெனப்படும் ௫

சேந்தன்றானேசெவ்வேளாகும் ௬

சேந்தென்பதுவேயசோகெனலாகும் ௭

சேமரந்தானேயழிஞ்சிலாகும் ௮

சேவலனென்பதுமாயவனாகும் ௯

சேனந்தானேபருந்தெனலாகும் ௧0

சேவேயெருதின்பெயராகும்மே கக

சேரலனென்பதுசேரன்பெயராம் கஉ

சேவற்கொடியோனென்பதுகந்தன் கங

சேமுதலொருபேர்முற்றும்.

சேமுதலிருபெயர்

சேடியென்பதுவிஞ்சையரிடமும்
பாங்கியுமெனவேபகருமிருபெயர் கச

சேதகமேசென்னிறஞ்சேறிருபெயர் கரு

சேதுவேசெய்கரையுஞ்சிவப்பும் கசா

சேலேகயேசிந்தூரஞ்சந்தனம் கஎ

சேலைதானேயசோகுஞ்சேலையும் கஅ

சேவகந்தானேயானைதுயிலிடமும்
வீரமுமெனவேவிளம்புமிருபெயர் ககூ

சேக்கையென்பதுமுலையும்பாயலும் உ0

சேனையேபடையாயுதமிருபெயர் உக

சேமுதலிருபேர்முற்றும்.

சேமுதன்முப்பெயர்

சேகரமேமாமரமுடியு
மழகுமெனவேயாகுமுப்பெயரே உஉ

சேவலென்பதுகாவலுஞ்சேறுஞ்
சாவலுமெனவேசாற்றிடுமுப்பெயர் உங

சேட்டையென்பதுமுறமுஞ்சேட்டையு
மூதேவியுமெனமொழியுமுப்பேரே உச

சேமுதன்முப்பேர்முற்றும்.

சேமுதனாற்பெயர்

சேடனேயிளையோனுமனந்தனும்
பாங்கனுமேவல்செய்வோனுநாற்பெயர் உரு



சேடே பெருமையுநன்மையுந்திரட்சியு
மழகுமெனவேயறையுநாற்பெயரே உசா

சேமுதனாற்பேர்முற்றும்.

சேமுதலைம்பெயர்

சேணேயகலமுநீளமுந்தூரமு
முயரமும்விண்ணுமோதுமைம்பெயரே உஎ

சேறேகும்பியும்விழவுங்கள்ளுஞ்
சாரமுந்தித்திப்புடனுமைம்பெயரே உஅ

சேத்தேபழமுவமையுமசைச்சொலு
முறுப்புங்கருத்துமென்றோதுமைம்பெயரே உகூ

சேமுதலைம்பேர்முற்றும்.

சேமுதலேழ்பெயர்

சேயென்பதுவேயிளமையுமுருகனு
நீளமுந்தூரமுமகனுஞ்சிவப்புஞ்
செவ்வாயெனவுஞ்செப்புமேழ்பெயர் ங0

சேமுதலேழ்பேர்முற்றும்.

சேமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-ஙஉஎ.

சைம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

சைம்முதலொருபெயர்

சையானமென்பதுசயனமாகும்

சைச்சைதானேசிலம்பகமாகும்

சைச்சயமென்பதுகொம்பெனலாகும்

சையந்தானேமலையெனப்படுமே

சைவலமென்பதுபாசியாகும்

சையென்பதுவேயிகழ்ச்சியாகும்

சைம்முதலொருபேர்முற்றும்.

சைம்முதன்முப்பெயர்

சைவமேயோர்சமயமுமிளமையு
மாகமமெனவுமாகுமுப்பெயரே

சைம்முதன்முப்பேர்முற்றும்.

சைம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௧௱௪.

சொம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

சொம்முதலொருபெயர்

சொன்னியென்பதுபணமெனலாகும்
சொருவாதானே *கஞ்சியெனப்படும்
சொல்லேருழவரேமந்திரியாகும்
சொன்றியென்பதுசோறெனலாகும்

சொம்முதலொருபேர்முற்றும்.

சொம்முதலிருபெயர்

சொற்கமேமுல்லைசொற்கமிருபெயர்

சொம்முதலிருபேர்முற்றும்.

சொம்முதலைம்பெயர்

சொல்லேமதுவும்புகழும்வார்த்தையுங்
கள்ளுநெல்லுங்கருதுமைம்பெயரே

சொம்முதலைம்பேர்முற்றும்.

சொம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௧௪௦.

சோமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

சோமுதலொருபெயர்

சோடலென்பதுபுடவையாகும்
சோபாலிகையேயடம்பெனலாகும்

* கழஞ்சி என்பது பி-ம்.



சோரிதானேயுதிரமாகும் ௩
சோணமென்பதுசிவப்பெனலாகும் ௪
*சோரன்றானேகள்ளனெனப்படும் ௫

சோமுதலொருபேர்முற்றும்.

சோமுதலிருபெயர்

சோங்கேமரக்கலங்குருகோடிருபெயர் ௬
சோனையென்பதுவேவிடாதமழையுந்
திருவோணமுமெனச்செப்புமிருபெயர் ௭

சோமுதலிருபேர்முற்றும்.

சோமுதனாற்பெயர்

சோதிதானே †யருகனுஞ்சுடரு
மோர்நாளுடன்சங்கரனுநாற்பெயர் ௮

சோமுதனாற்பேர்முற்றும்.

சோமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௧௪௮.

சௌமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

சௌமுதலொருபெயர்

சௌந்தரியந்தானழகெனப்படுமே ௯

சௌமுதலொருபேர்முற்றும்.

சௌமுதனாற்பெயர்

சௌரியேதிருமாலுங்கன்னனு
நமனுஞ்சனியுநாட்டுநாற்பெயரே ௰

சௌமுதனாற்பேர்முற்றும்.

சௌமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௧௫௦.

* சோரந்தானே கள்ளனப்படுமே என்பது பி-ம்.
† அருக்கனுமென்பது பி-ம்.

தொண்டைநன் னாடுதலங்கியபுலியூ
ரெண்டருஞ்சிதம்பரரேவணனுரைத்த
மூன்றாஞ்சகராதிப்பேர்த்தொகுதி
யேன்றசூத்திரமைம்பதிற்றேழஞ்சே.

மூன்றாவது சகராதிப்பெயர்த்தொகுதி முற்றும்.

நான்காவது:

## ஞகராதிப்பெயர்த்தொகுதி.

மார்க்கண்டயராருச்சனைமகிழ்ந்தருடரு
நாற்புயத்தேனுநாயகற்பணிந்து
ஞகராதிப்பெயர்த்தொகுதியைநவில்வாம்.

ஞம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

ஞம்முதலொருபெயர்

ஞவலென்பதுவேநுளம்பெனலாகும்

ஞம்முதலொருபேர்முற்றும்.

ஞம்முதலிருபெயர்

ஞமலியேநாய்மயிலெனவிருபெயர்

ஞம்முதலிருபேர்முற்றும்.

ஞம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௨.

ஞாமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

ஞாமுதலொருபெயர்

ஞாபகந்தானேயரும்பொருளாகும்
ஞாலமென்பதுபூமியாகும்
ஞாயிறுதானேயருக்கனாகும்

ஞாமுதலொருபேர்முற்றும்.

ஞாமுதலிருபெயர்

ஞாஞ்சில்தானேமதிலினுறுப்புங்
கலப்பையுமெனவேகருதுமிருபெயர்



## 1920-ஆம் ஆகஸ்டுமீ 1௳ காலை 8-30-மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகசபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

1. மகா-ள-ள-ஸ்ரீ S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள், M. R. A. S., ஆண்டிபட்டி ஜமீந்தார்,
—உப-அக்கிராசனாதிபதி.

2. ,, K. ராமையங்காரவர்கள் B. A. B. L.
3. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள், B. A. B.L.
4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B. A., B. L.
5. ,, T. சுதர்சனாசாரியர் அவர்கள்

இவர்கள் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்.

I. 1920-ஆம் ஏப்பிரல், மே மாதங்களின் வரவுசெலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. (a) தமிழ்ச்சங்கத்திற்குத் தீ விபத்து நேர்ந்த விஷயமாக ஜாயிண்டு செக்ரிட்டெரி எழுதிய ரிப்போர்ட்டும், அவசரமாகக் கவனிக்கவேண்டிய ரிப்பேர் முதலியவைகட்காக நிர்வாகசபையார் சாங்க்ஷனை எதிர்பார்த்து ரூ. 2000 செலவுசெய்ய அனுமதிதரவேணுமென்று உள்ளூரிலிருக்கும் நிர்வாகசபை அங்கத்தினர்கட்குக் காரியதரிசி எழுதிய 25—6—20௳ கடிதமும் படிக்கப்பட்டன. அவசர ரிப்பேருக்காக ரூ. 2000 செலவுசெய்ய அனுமதிசெய்திருப்பதை அங்கீகரிக்கலாயிற்று. இனிமேல் நடக்கவேண்டிய அவசர ரிப்பேர் செலவுக்காகவும் ரூ. 1500 செலவுசெய்யும்படி சாங்க்ஷன்செய்யப்பட்டிருக்கிறது.

II. (b) அவசர ரிப்பேர் சம்பந்தப்பட்ட கணக்குகள் ஆடிட்டரால் பரிசோதிக்கப்பட்டு அடுத்த மீட்டிங்கில் நிர்வாகசபையார் பார்வைக்குக் கொண்டுவரவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

II. (c) & V. சங்கம் பவர்ப்பிரஸ் வகையரா சிப்பந்திகள் நியமனவிஷயமாயும், சங்கசிப்பந்திகட்குப் பிரமோஷன், அலவுன்ஸ்கொடுக்கவேணுமென்றும் எழுதியபடி சாங்கிஷன் செய்யலாயிற்று. 'செந்தமிழ்'ப் பத்திராதிபர் உதவியாளர்க்கு ஏற்படுத்தியுள்ள சம்பளத்துக்கு மேல் 15 ரூபாய் அதிகப்படுத்தவேணுமென்று எழுதியபடி ஷையார் புத்தகசாலை (Library) வகையரா இதர லிட்டரரி டிபார்ட்டுமெண்டுகளில் செய்யவேண்டிய சீர்திருத்தம் முதலிய Extra வேலையை உத்தேசித்து Special case ஆக சாங்கிஷன் செய்யலாயிற்று.

III. சங்கத்தை முன்னைய ஸ்திதிக்குக்கொண்டுவருவதற்காக அடியிற்கண்ட கனவான்கள் அன்புடன் பொருளுதவி செய்துள்ளார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | His Holiness ஸ்ரீ வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி அவர்கள் | ரூ ... | 500 |
| 2. | மகா-ள-ள-ஸ்ரீ S. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., சென்னை | ரூ ... | 500 |
| 3. | ,, சி. கரு. சி. கரு. சிந்தாமணிசெட்டியாரவர்கள், ஓக்கூர் | ரூ ... | 301 |
| 4. | ,, சி. கரு. சி. சித. சிதம்பரம்செட்டியார் அவர்கள், ஓக்கூர் | ரூ ... | 301 |
| 5. | ,, சி. கரு. சி. ராம. ராமஞ்செட்டியாரவர்கள், ஓக்கூர் | ரூ. ... | 150 |
| 6. | ,, சி. கரு. சி. லெ. லெட்சுமணஞ்செட்டியாரவர்கள் ஓக்கூர் | ரூ. ... | 251 |
| 7. | ,, சி. கரு. ஆ. கண. அவர்கள் ஓக்கூர் | ரூ. ... | 151 |
| 8. | ,, சி. கரு. அரு. சித. அவர்கள் ஓக்கூர் | ரூ. ... | 61 |
| 9. | ,, சி. கரு. ஆ. அரு. அவர்கள் ஓக்கூர் | ரூ. ... | 151 |



| | | | |
|---|---|---|---|
| 10. | ,, சி. கரு. ஆ. கரு. அவர்கள் ஓக்கூர் | ரூ. ... | 151 |
| 11. | ,, கூ. க. அ. காக. பொதுவுக்கு கூ. அரு. க. சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள், கீழப்பூங்குடி | ரூ. ... | 750 |
| 12. | ,, வீந. ஆ. சுப. கீழப்பூங்குடி | ரூ. ... | 151 |
| 13. | ,, சா. நா. சா. பொதுவுக்கு தேவராயன் செட்டியாரவர்கள், காரைக்குடி | ரூ. ... | 750 |
| 14. | ,, அ. மு. க. கருப்பஞ்செட்டியாரவர்கள், காரைக்குடி | ரூ. ... | 350 |
| 15. | ,, முத்து. அரு. மு. சாமிநாதஞ்செட்டியாரவர்கள், காரைக்குடி | ... | 501 |
| 16. | ,, ராம. ஆத. மெ. ஆத. லெ. ஆத. அவர்கள், காரைக்குடி | ரூ. ... | 250 |
| 17. | ,, முத்த. வெ. அள. கரு. அவர்கள், காரைக்குடி | ரூ. ... | 350 |
| 18. | ,, அ. உ. மெய்யப்பசெட்டியாரவர்கள், காரைக்குடி | ரூ. ... | 200 |
| 19. | ,, லெ. வீர. வீரப்பசெட்டியார் அவர்கள், காரைக்குடி | ரூ. ... | 200 |
| 20. | ,, ராம. வீர. மு. வீரப்பசெட்டியாரவர்கள், காரைக்குடி | ரூ. ... | 300 |
| 21. | ,, ராம. மு.வீர. அவர்கள், காரைக்குடி. | ரூ. ... | 150 |
| 22. | ,, அ. மெ. அ. சின்னய்யாசெட்டியாரவர்கள், காரைக்குடி | ரூ ... | 150 |
| 23. | ,, முத்து. அரு. சித. அருணாசலஞ்செட்டியாரவர்கள், காரைக்குடி | ... | 350 |

| | | | |
|---|---|---|---|
| 24. | ,, | பழனி. மெ. மெ. அவர்கள், காரைக்குடி ரூ ... | 150 |
| 25. | ,, | பள. அ. அவர்கள், காரைக்குடி ... | 250 |
| 26. | ,, | ராம. வீர. அவர்கள், காரைக்குடி | 200 |
| 27. | ,, | அரு. அ. நா. அவர்கள், காரைக்குடி ரூ. ... | 250 |
| 28. | ,, | அரு. ராம. சித. அவர்கள், காரைக்குடி ரூ. ... | 150 |
| | | மொத்தம் ரூ. ... | 7,969 |

29. ,, ராம. மெ. சித. வைரவன்செட்டியாரவர்கள், தேவகோட்டை—சுமார் ரூபா 1500 பெறுமான அச்சாபீஸ் சாமான்கள்

இவர்கள் இத்தருந்த சமயத்தில் சங்கத்திற்குப் பொருளுதவி செய்ததற்காக இவர்கட்குச் சங்கத்தார் நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றார்கள்.

IV. சங்கக்கட்டிட மராமத்து அச்சாபீஸைச் சரியான ஸ்திதிக்குக் கொண்டுவருதல் சம்பந்தமாகக் கவனிக்கவேண்டியதற்காக Sub committee ஏற்படுத்தவேண்டியதாகக் காரியதரிசி எழுதியபடி அடியிற்கண்ட கனவான்களை நியமிக்கலாயிற்று.

1. மகா-ள-ள-ஸ்ரீ K. ராமையங்காரவர்கள், B. A., B. L.,
2. V. S. ராமசாமிசாஸ்திரியவர்கள், B A., B.L.,
3. T. N. சுந்தரராஜையங்காரவர்கள், B. A., B. L.
4. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B. A., B.L. } காரியதரிசிகள்
5. T. சுதர்சனாசாரியரவர்கள்,

VI. சங்கக் கட்டிட ரிப்பேர் முதலியவற்றை முடித்து சங்கத்தை முன்னைய ஸ்திதிக்குக் கொண்டுவரும்வரை, கௌரவகாரியதரிசியிருந்து கவனிக்கவேண்டிய சங்க சம்பந்தமான வேலைகளை ஷையார் மதுரையில் இல்லாத சமயங்களிலும், மற்றும் அவசியமான சமயங்களிலும் மகா-ள-ள-ஸ்ரீ V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் கவனித்துவரவேணுமென்று ஷையாரைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.



VII. சங்கம் பவர்ப்பிரஸ்ஸை அபிவிருத்திசெய்து முன்னைய ஸ்திதிக்குக் கொண்டுவர ரூ. 2500 சாங்கிஷன் செய்யலாயிற்று.

லைப்ரேரிக்குப் புத்தகங்களை வாங்கிவைத்து அபிவிருத்திசெய்வதற்காக ரூ. 3500 சாங்கிஷன் செய்யலாயிற்று.

மத்திஹால் (Central Hall) ரிப்பேர் விஷயமாக நேரிடக்கூடிய செலவு விவரத்திற்கு எஸ்டிமேட் தயாரித்து அனுப்பவேணுமென்று சப்கமிட்டியாரைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

தர்மசிந்தனையுள்ள ஸாது ஜனங்களை சங்கவிஷயமாக உதவிபுரியும்படிக் கேட்கவேணுமென்பதாகத் தீர்மானிக்கலாயிற்று.

VIII. மாக்ஷிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களின் ராஜீனாமாவிஷயத்தை அடுத்த மீட்டிங்குக்குத்தள்ளிவைக்கலாயிற்று.

IX. சங்கத்தின் நிர்வாகசபை அங்கத்தினருள் ஒருவராகிய ராவ்பகதூர் சுந்தரசாஸ்திரிகள் காலஞ்சென்றதைக் குறித்து அனுதாபமொழிகூறி அதனை ரிக்கார்டில்பதிவு செய்யலாயிற்று. இந்தத் தீர்மானத்தை ஷையார் குமாரருக்குத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

ஷையார் ஸ்தானத்தில் மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ T. N. சுந்தரராஜையங்காரவர்களை டெம்பரரியாக நியமிக்கலாயிற்று.

X. சங்கம்பிரஸ் குத்தகையை ரத்துசெய்து டெபாஸிட்டு செய்துள்ள தொகையை வாபஸ் செய்யவேணுமென்று குத்தகைதார் கேட்டுக்கொண்டபடி குத்தகை ரத்துச்செய்யலாயிற்று. டெபாஸிட் தொகையினின்றும் குத்தகைதாருக்குச் செல்லாக்கியிருப்பதையும், சங்கத்திற்காகச் சாமான்கள் விலைக்குவாங்கியிருப்பதையும் அங்கீகரிக்கலாயிற்று. கணக்குப்பிரகாரம் குத்தகைதாருக்குச் சங்கத்தினின்றும் இன்னும் செல்லாகவேண்டியிருக்கும் தொகையை ஷையாருக்கு வாபஸ் செய்யும்படிக்கும் தீர்மானிக்கலாயிற்று.

XI. மதுரை டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ ரெங்கசாமி ஐயங்காரவர்கள், போலீஸ் ஸார்ஜெண்ட் Mr. ஸாயேர்ஸ், பிரஸ் குத்தகைதாரின் மானேஜர் Mr. ஸ்ரீநிவாஸையங்கார், மதுரை

மில்ல் அஸிஸ்டெண்டு காஷியர் மகா-ள-ள-ஸ்ரீ வெங்கடகிருஷ்ண ராஜு அவர்கள் ஆகிய இவர்கள் சங்கக்கட்டிடத்தில் நெருப்புப்பற்றியெரிகிற சமயம், சங்கத்தின் விலையுயர்ந்த சொத்துக்களை அப்புறப்படுத்திக் காப்பாற்றிய பேருபகாரத்திற்காக, ஷையார்கட்குச் சங்கத்தின் நிர்வாகஸபையார் மனமுவந்து வந்தனமளிக்கின்றார்கள். இந்தத் தீர்மானத்திற்கு நகல் தயாரித்து ஷையார்கட்கும், போலீஸ் சூப்பரின்டெண்டெண்டு அவர்கட்கும் அனுப்பும்படி தீர்மானிக்கலாயிற்று. சங்கம் பிரஸ்ஸைக் கூடஇருந்து ஒழுங்குபடுத்திவைத்த உபகாரத்திற்காக Mr. ஸ்ரீநிவாஸையங்காருக்கு ரூ. 25 கொடுக்கலாமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

XII. Westerdale Esq., மகா-ள-ள-ஸ்ரீ ராமமூர்த்திபந்துலுகாரு, மகா-ள-ள-ஸ்ரீ அண்ணாத்துரை ஐயங்காரவர்கள் இவர்கள் சங்கக்கட்டிடத்தை அன்போடு வந்து பார்வையிட்டு யோசனைகள் சொல்லிய உபகாரத்திற்காக ஷையார்கட்குச் சங்கத்தின் நிர்வாகசபையார் மனமுவந்து வந்தனமளிக்கின்றார்கள்.

S. Rm. M. Ct. PETHACHI,
உப-அக்கிராசனாதிபதி.
1—8—20.

(True translation)

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி கஅ] ரௌத்திரி-ஷு ஆவணிமீ [பகுதி கo.
Vol. XVIII. August—September-1920. No. 10.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 18, 19-ஆம் வருஷக் கூட்டம்.

### முதல்நாள் நடவடிக்கை.

கடந்த செப்டம்பர்மீ 4, 5உகளில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்
8, 19-ஆம் வருஷக்கூட்டம் நடைபெற்றது. அதற்கு, தமிழ்ச்சங்கத்
ின் சாசுவத அக்கிராசனாதிபதியும், இராமநாதபுரம் ஸம்ஸ்தானாதிபதி
ும், பெருவள்ளலுமான மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வர
ஸேது பதி மன்னரவர்கள், மகா-ா-ா-ஸ்ரீ B. ராஜாராமபாண்டியன் அவர்
ள், மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள், திருநெல்வேலி
ஸ்ரீமான் N. A. V. சோமசுந்தரம்பிள்ளையவர்கள், ஸேது ஸம்ஸ்தான
வித்வான் ஸ்ரீமத்—ரா. இராகவையங்காரவர்கள், ஸ்ரீமத்—T. C. ஸ்ரீநிவ
ாஸையங்காரவர்கள் B.A., B.L., ஸ்ரீமத், S. பால்வண்ணமுதலியாரவர்கள்,
ஸ்ரீமத்,—V. S. இராமஸ்வாமிசாஸ்திரிகள் B.A., B.L., ஸ்ரீமத்—A. R.
கிருஷ்ணமாசாரியரவர்கள் M.A., ஸ்ரீமத்-T. இராமாநுஜ ஐயங்காரவர்கள்,
ஸ்ரீமத்-V. முத்துஸாமிஐயரவர்கள் M.A., L.T., ஸ்ரீமத்—சே. ரா. சுப்பிர
மணியக்கவிராயரவர்கள், ஸ்ரீமத்—திருநாராயணையங்கார் அவர்கள், தஞ்
சை ஸ்ரீமத்—இராஜகோபாலையங்காரவர்கள், ஸ்ரீமத்—R. S. நாராயண
ஸாமி ஐயரவர்கள் B.A., B.L., ஸ்ரீமத்-ஆர். கணபதிஐயரவர்கள் B.A. B.L.
ஸ்ரீமத்—N R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், ஸ்ரீமத்-ஆ. கார்மேகக்
கோனாரவர்கள், ஸ்ரீமத்-அரங்கநாத சாஸ்திரியவர்கள், ஸ்ரீமத்-T. சுதர்ச
னாசாரியரவர்கள், ஸ்ரீமத்-M. N. சேஷையரவர்கள், ஸ்ரீமத்-P. C. புன்னை
வனநாதமுதலியாரவர்கள், ஸ்ரீமத்—M. கோபாலகிருஷ்ணையரவர்கள்,

ஸ்ரீமத்—N. R. சுப்பிரமணியசர்மா அவர்கள், முதலிய பலர் விஜயம் செய்திருந்தனர். அப்போது சங்கத்தின் அங்கத்தினரில் ஒருவரும், திருநெல்வேலி ஹைகோர்ட்டுவக்கீலும் தமிழபிமானியுமாகிய ஸ்ரீமான்—N. A. V. சோமசுந்தரம்பிள்ளையவர்கள் B.A., B.L., சங்கத்தார் வேண்டுகோட்கு இணங்கி அக்கிராசனம் வகித்தார்கள். முதலிற் கடவுள்வாழ்த்து நடைபெற்றது. பின்னர் மதுரைத்தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் ஸ்ரீமத்— சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களும், தமிழ்ச்சங்கக் கலாசாலையுதவியுபாத்தியாயர் ஸ்ரீமத்-சு. நல்லசிவன்பிள்ளையவர்களும், இயற்றிய மங்களவாழ்த்துச் செய்யுட்கள் படிக்கப்பட்டன. பின்னர், காரியதரிசியவர்கள், வருஷக்கூட்டத்துக்கு வரமுடியாத அங்கத்தினரிடமிருந்தும், அபிமானிகளிடமிருந்தும்வந்த தந்திகளையும், கடிதங்களையும், அறிக்கைப்பத்திரத்தையும், அதனுடுசேர வேண்டிய அனுபந்தத்தையும் படித்தார்கள். அதன்பின் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ-உ. வே. சாமிநாதையரவர்களும், மதுரையிலுள்ள இராமேஸ்வரம் தேவஸ்தானபாடசாலைத்தலைவர் ஸ்ரீமத்—A. R. கிருஷ்ணமாசாரியர் M.A., அவர்களும், மதுரை வக்கீல் ஸ்ரீமத்—சுப்பராய ஐயரவர்களும், மதுரை அமெரிக்கன்காலேஜ் புரொபஸர் பீடர் ஐஸாக் அவர்களும், தஞ்சை ஸ்ரீமத்—ராஜகோபாலையங்கார் அவர்களும், திருநெல்வேலி ஸ்ரீமத்—S. பால்வண்ணமுதலியாரவர்களும், ஸேதுஸமஸ்தான வித்வான் ஸ்ரீமத்—ரா. இராகவையங்காரவர்களும், சுந்தரபாண்டிய ஓதுவாரவர்களும், இவ்வருஷத்திற் சங்கம் செய்துள்ள வேலைகளைப்புகழ்ந்தும், இதற்கேற்பட்ட தீவிபத்தை யுத்தேசித்திரங்கியும், சங்கத்தை நன்னிலைக்குக்கொண்டுவர வழிகூறியும், தத்தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். அதன்பின் ஸ்ரீமத்: ஜெ. என். இராமநாதன் அவர்கள் தமிழ்மக்களுள் ஆரியரைப் புறக்கணித்துச் சிலர்க்கு வெறுப்புண்டாகப் பேசியதுகண்டு, ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்: ரா. இராகவையங்காரவர்கள் தக்க மேற்கோள்களுடன், ஆரியர் தமிழராற் புறக்கணிக்கத்தக்கவரல்லரென்று நிரூபித்துச் சபையோர் புகழ்ந்துகளிக்கும்படி மறுத்துரைத்தார்கள். பின்னர் அக்கிராசனரவர்கள் சங்கப் பரீக்ஷையிற்றேறிய மாணவர்க்குப் பரிசுமுதலிய அளித்துச் சுருக்கமாகவும், உருக்கமாகவும் விளக்கமாகவும், தமது பிரசங்கத்தை முடித்தார்கள். அதன்மேல் மங்களவாழ்த்தும் கடவுள்வாழ்த்தும் பாடப்பெற்றன.



பின்னர், சங்கத்தார் சபாநாயகர் முதலியோர்க்கு வந்தனமளிக்க அன்று சபை இனிது நிறைவேறியது.

இவ்வருடம், தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியவர்களாகிய இராமநாதபுரம்ராஜா மாட்சிமைதங்கிய B. இராஜராஜேச்வர ஸேதுபதியவர்கள் சங்கத்துக்கு மாளிகைவாங்கும்பொருட்டு முன்னமே வாக்களித்திருந்த ரூபா பதினாயிரமும் ஒருசேரக் கொடுத்துதவியிருப்பதுடன் சங்கம் நடைபெற்றுவந்த வாடகைக்கட்டடத்தை அதற்கே சொந்தமாக வாங்கியதற்கு வேண்டியிருந்த பெருந்தொகையானபொருள் கடன்கொடுத்துதவியதற்கும், தமிழுலகம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

அநுபந்தத்திற் கண்டபடி இவ்வருடம் சங்கத்துக்கு எதிர்பாராது நேர்ந்த தீவிபத்தினாலுண்டாகிய நஷ்டங்களைத் தீர்த்துச் சங்கத்தை முன்னினும் நன்னிலைக்குக்கொண்டுவரவேண்டிச் சங்கத்தின் கௌரவ காரியதரிசியவர்கள் செய்துவரும் அரும்பெருமுயற்சிகண்டு அது பயனடையும்படி பொருளுதவிசெய்துவருபவர்களது தமிழபிமானம் பாராட்டற்பாலது.

## இரண்டாநாள் நடவடிக்கை.

5—9—20 காலை 9-மணிக்குச் சபைகூடியது. முதலில் ஸ்ரீமத்: சீதாராமசாஸ்திரிகள் கடவுள்வாழ்த்துப் பாடினார்கள். பின் காரியதரிசியவர்கள் கொண்டாட்டத்துக்கு வரமுடியாதவர்களிடமிருந்து வந்த கடிதத்தையும், தந்தியையும், படித்தார்கள். அதன்மேல் பூண்டி அரங்கநாதசாஸ்திரிகளால் கந்தபுராணத்திலிருந்து வள்ளியம்மை திருமணம் என்னும் விஷயம் பிரசங்கிக்கப்பட்டது.

அதன்பின் சங்கக்கலாசாலையிற் கல்விபயின்றவரும், இப்பொழுது மதுரை அமெரிக்கன்காலேஜில் தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருப்பவருமான ஸ்ரீமத்—ஆ. கார்மேகக்கோனாரவர்கள் தாமெழுதியுள்ள மலைபடுகடாம் ஆராய்ச்சியிலிருந்து இடையிடையே மலைபடுகடாத்தின்சிறப்பும், ஆசிரியரது சிறப்பும், அவரது ஊரும் பிறவும் இன்னவென்றும், "வாதிகையன்னகவைக்கதிர்" என்புதனால் ஆசிரியர் கிருஷித்தொழில் பயின்

றவரென்று தெரிகின்றதென்றும், இந்நூல் 60 உவமையணியுடையதென்றும், பிற அணிகள் இதிற் காணக்கிடையாவென்றும், இதில் வடமொழிகள் அதிகமாகக் கலக்கப்படவில்லையென்றும், நன்கு விளக்கிக் காட்டினார்கள்.

பின்னர், ஸேது ஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்: ரா. இராகவையங்காரவர்கள் ஷை ஆராய்ச்சியை ஒட்டிப்பேசுகையில் தமிழர் பூமிசாஸ்திரப்பயிற்சியுடையவரென்றும், இயற்கைவனப்பை வியக்கக்கூறும் திறமுடையவரென்றும், "தீயினன்னவொண்செங்காந்த" ளென்பது ஆநந்தக்குற்றமென்பதில் "நன்னன் என்ற சொல்லையடுத்து எப்படியாயினும் தீயென்றசொல் வருதல் கூடாது; வந்தால் அது ஆநந்தக்குற்றம்" என்பது ஆளவந்தபிள்ளையாசிரியர்கருத்தென்றும், ஆசிரியர் பெருங்குன்றூர்கிழார் அந்தணராதலால் தீ என்ற சொல்லை மங்களவாசகமென்று கொண்டாராதலால் அவர்கருத்துப்படி அது குற்றமன்றென்றும் நன்கு விளக்கிக்காட்டினார்கள். இவை எல்லாராலும் போற்றிக்கொள்ளத்தக்கன. பின் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் கோனாரவர்களது ஆராய்ச்சியை யுவந்து கூறினார்கள்.

அதன்பின் மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனரும், திருச்சி நேஷனல் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமத். M. கோபாலகிருஷ்ணையரவர்கள் ஒரு வாழ்த்துச்செய்யுளைச் சொல்லிப் பொருளுரைத்தார்கள்.

அதன்பின் ஸ்ரீமத்—V. முத்துஸாமிஐயரவர்கள் M. A. L. T. தமிழ்மொழியும் ஒற்றுமையும் என்ற விஷயத்தை எடுத்துப் பல மத நூல்களிலிருந்து ஆதாரங்காட்டி விளக்கியுரைத்தார்கள்.

பின் அக்கிராசனரவர்கள் உபந்யாசங்களைப்பற்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தக்கவாறு தமதபிப்பிராயத்தைச் சொல்லக் கடவுள் வாழ்த்துடன் காலைநடவடிக்கை நிறைவெய்தியது.

அன்று மாலை 4-மணிக்கு ஸ்ரீமத்:—சீதாராமசாஸ்திரிகள் கடவுள் வாழ்த்துக்கூற மறுபடியும் சபைகூடியது.

முதலில் மதுரை சௌராஷ்டிர உயர்தரகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்—சிதம்பர புன்னைவனநாதமுதலியாரவர்கள்



"தமிழ்மொழிபேணல்" என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு, சங்கத்தார் ஏற்படுத்தியுள்ள ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷை தனித்தமிழ்ப்பரீக்ஷை முறைகளையும் சங்கக்கலாசாலையையும் திருத்தியமைத்தல், அப்பரீக்ஷைகளுக்குரிய பாடபுத்தகங்களை மாற்றியமைத்தல், சங்கத்துக்கு நிதிசேகரித்தல், சங்கத்தார் தினசரிநடைபெறும் தமிழ்ப்பத்திரிகையொன்றை ஏற்படுத்தி நடத்தவேண்டிய அவசியம், தக்க வித்வான்களைக்கொண்டு அயலிடங்களில் உபந்யசிக்கச்செய்து தமிழ்ப்பயிற்சியையும் தமிழபிமானத்தையும் வளர்க்கவேண்டிய அவசியம், சங்கவித்வான்களும் பிறரும், ஏட்டுப்பிரதிகளைப் பரிசோதித்து அச்சிடவேண்டிய அவசியம், அங்கத்தினர் செந்தமிழ் முதலிய சங்கப்பிரசுரங்களை ஆதரிக்கவேண்டிய அவசியம் என்று பலவிஷயங்களை வற்புறுத்திப் பேசினார்கள்.

பின்னர், சங்கத்தின் கௌரவகாரியதரிசியவர்கள் ஷை உபந்யாசத்தைப்பற்றி, சங்கத்தார் ஏற்படுத்தியுள்ள தனித்தமிழ்ப்பரீக்ஷை ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைமுறைகளையும் சங்கக்கலாசாலையையும் தக்க வித்வான்களைக்கொண்டு திருத்தியாயிற்றென்றும், அப்பரீக்ஷைப் பாடபுத்தகங்களும் மாற்றியமைக்கப்பட்டுவிட்டனவென்றும், சங்கத்தார் தமிழிற் றினசரி நடைபெறும் சமாசாரப்பத்திரிகையொன்றை ஏற்படுத்தி நடத்துதல் பல காரணங்களால் இப்பொழுது இயலாதென்றும், நிதிசேகரித்தல் ஏடுகளைப் பரிசோதித்து அச்சிடுதல் இரண்டிலும் யார் யார் எவ்வளவு உதவிசெய்தபோதிலும் சங்கத்தார் ஏற்றுக்கொள்வார்கள் என்றும், அங்கத்தினர் செந்தமிழ்முதலிய சங்கப்பிரசுரங்களை யாதரிக்கவேண்டிய விஷயத்தைப்பற்றி அவர்கள் கூறியதே தமக்குங்கருத்தென்றும் விடையளித்தார்கள்.

பின்னர், மதுரை வக்கீல் ஸ்ரீமத்-ஆர். எஸ். நாராயணஸாமி ஐயரவர்கள் B.A., B.L., பாஷாபிமானம் என்பதைப்பற்றித் தாம் எழுதிய வியாசத்தைப் படித்தார்கள்.

அதன்பின், மதுரைவக்கீலும், வருணாச்சிரமதர்மசபைக் காரியதரிசியுமான ஸ்ரீமத்-ஆர். கணபதி ஐயரவர்கள் B.A., B.L., பாஷாதத்துவமும் சொல்வரலாறும் என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு இதில் ஆங்கிலேயர்க்கு அதிகப்பழக்கமில்லையென்றும், நமக்கு அதிகப்பழக்கமுண்டென்றும், நாம் அப்பழக்கத்தைக் கைசோரவிடாது அபிவிருத்தி

செய்யவேண்டு மென்றும், தக்க ஆதாரங்காட்டி விளக்கியதோடு ஸ்ரீமான்-P. மாணிக்கநாயக்கரவர்களது பாஷாதத்துவ ஆராய்ச்சியை மறுத்தும் பேசினார்கள்;

அதன்பின், தமிழ்ச்சங்கக்கலாசாலை யாசிரியர் ஸ்ரீமத்-சு. ஹரிஹரையரவர்கள் தேவாரப்பாக்கள்பாட மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் சபையோர் வேண்டுகோட்கிணங்கி, *பெருங்கதையைப்பற்றி யுபந்யசித்தார்கள். அதில், பெருங்கதையென்பது பிரஹத்கதையின் மொழிபெயர்ப்பென்றும், அது, வத்ஸராஜன் அல்லது உதயணன் என்பவனது சரிதத்தைச் சொல்வதென்றும், இது முதலில், குணாட்டியர் என்பவரால் பைசாசபாஷையில் ஏழுலக்ஷம் கிரந்தமுடையதாக எழுதப்பட்டதென்றும், அதில் ஒருலக்ஷம்கிரந்தம் வடநாட்டில் வழங்கிவந்தது என்றும் வடமொழியிலும் பெருங்கதையென்ப தொன்றுண்டென்றும், அதைப் பின்பற்றி, பிரகத்கதாமஞ்சரி, பிரகத்கதாசாகரம் என்பவை எழுந்தனவென்றும், தமிழ்ப்பெருங்கதை ஜைனநூலென்றும், அது, கொங்குவேண்மாக்கதை, கதை, உதயணன்கதை எனவும் வழங்கப்பட்டதென்றும், அதை இயற்றியவர்பெயர் புலப்படவில்லையென்றும், †சிலப்பதிகாரத்தும், ‡இலக்கணக்கொத்திலும் இந் நூலைப்பற்றிய குறிப்புகள் உண்டென்றும், திருநெல்வேலி மேற்குரதவீதி ஈசுரமூர்த்திக் கவிராயரவர்கள் வீட்டிலும், திருப்பாற்கடனாதகவிராயரவர்கள்வீட்டிலும் இந்நூலின் ஏட்டுச்சுவடிகள் தமக்குக் கிடைத்தனவென்றும், சிந்தாமணியுரை முதலியவற்றிற் சில மாறுனவை என்பதை இந்நூல்மூலமும் குறிப்பும் விளக்குமென்றும், இந் நூலில் வாத்தியம், அரசு, அமைச்சு முதலியவற்றின் இலக்கணங்களும், ஐந்திணைவளம் முதலியனவும் நன்கு விரித்துக் கூறப்பட்டிருக்கின்றனவென்றும், இந் நூல் 60-அடிமுதல் 300-அடிவரையுள்ள அகவற்பாக்களால் அந்தாதித்தொடையாக இயற்றப்பட்டதென்றும், எல்லாச்செய்யுள்களும் என் என்றே முடிகின்றனவென்றும், இந் நூலின் நாயகனான உதயணன் வீணைவாசிப்பதிலும், யுத்தத்திலும், மந்திரசாஸ்திரப்பயிற்சியிலும் சிறந்தவனென்றும், இவன், இயந்திரவாவி, செய்குன்று, நாழிகையறிகருவி, முதலிய ஏற்படுத்தியிருந்தான் என்றும், இவன், தன் மனைவியின்விருப்பத்தை நிறைவேற்ற ஆகாயக்கப்பல் இயற்றியதாய்த் தெரிகிறதென்றும், அக்காலத்து மோட்டாரும், கடிகாரமும் இருந்தனவென்றும், அக்காலத்தவர் சிறந்த அலங்காரமறிந்தவர்களாயிருந்தார்கள் என்றும் கூறி இந் நூலில் ஒருபாகத்தே வந்துள்ள நதிவருணனையைப் படித்துக்காட்டி, பலநாள் வருந்தித்தேடி ஆராய்ந்து பெரியோர்களிடம் கேட்டறியவேண்டிய விஷயங்களை எளிதில் யாருமறிந்து வியப்புறும்படி வெளியிட்டார்கள்.

* இந் நூல் ஐயரவர்களால் அச்சிடப்பெற்றுவருகிறது. கூடிய விரைவில் வெளிவரும்.

† உரைப்பாயிரம். பக்கம்-2,3.

‡ பாயிரவுரை.



அதன்பின், ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. இராகவையங்காரவர்கள் ஸபையோர்களின் வேண்டுகோட்கிணங்கி, "தமிழாராய்ச்சி" என்ற விஷயமேற்கொண்டு, முதலிற் கம்பராமாயண நாட்டுப்படலத்து இருபத்தொன்றாம்செய்யுளில் இரண்டாமடி "குறிகளும் போற்றிக்கொள்வார் கோன்றநெற்குவைகள்செய்வார்" என்றிருப்பது பொருட்பொருத்தமின்றியும் சிறப்பின்றியுமிருத்தலால் அதனை, "குறிகொளும்போத்திற் கொல்வார்கொன்றநெற்குவைகள்செய்வார்" என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்றும் ஏடுகளிலும் அப்படியே யிருக்கிறதென்றும், அவ்வாறு பாடங்கொள்ளுமிடத்து, குறி - அடையாளம், போத்து - கடா, கொல்லல் - மிதிக்கச்செய்தல், குவைசெய்தல் - பொலியிடுதல் என்று பொருள் படுமென்றும், அவற்றுள், இங்கு, குறி - கடாவுடையான் அது விரைந்து செல்லுதற்கும் மந்தமாகச்செல்லுதற்கும், நிற்றற்குங் கூறுங் குறிப்பு மொழி என்றும், பல தமிழ்நூற்பிரயோகங்களால் நன்குவிளக்கியும், ஆற்றுப்படலத்து இறுதியிலுள்ள "தாதுகுசோலை" என்னும் முதற்குறிப்புள்ள செய்யுளுக்குப் பொருளிதுவென்று நிரூபித்தும்,பின்னர்ப் பழந்தமிழ்மக்களின் நாகரிகமுதிர்ச்சியைவிளக்கத்தொடங்கி, தற்காலத்து மக்கள் ஆபரணமிகத்தரித்தலை நாகரிகமென்று மதிப்பதுபோலமுன்காலத்தவர் மதியாது ஆபரணதிகளால் ஆடம்பரவேடங்கொள்ளாதிருத்தலே நாகரிகமென்று கருதினரென்பதை, "சில்கலனணிந்தமெல்லெனயாக்கையர்" "அணிபறித்தழகுசெய்யுமணங்கு" என்ற நூற்பிரயோகங்கள் கொண்டும், "அழகினுக்கிட்டசட்டை அணைக்கைக்குவிரோதமாகும்" என்ற பூர்வாசார்யர்களின் வாய்மொழிகொண்டும் இனிது நிரூபித்தும், பின், ஊசிமுறி என்பதை விளக்கத்தொடங்கி, ஊசியென்பது எழுத்தாணியையும், ஊசியையும் உணர்த்துமென்றும், அது இங்கு எழுத்தாணியை உணர்த்திற்றென்றும், திருநீலகண்டயாழ்ப்பாணரால் யாழிலிட்

வாசிக்கமுடியாதபடி திருஞானசம்பந்தாருளிச்செய்த தேவாரப்பதிகமொன்றுக்கு, யாழ்முரி என்று பெயரானதுபோலத் தம்மோடு வாதுக்கு வந்த புலவர் எழுத்தாணிகொண்டு எழுதமுடியாதபடி இடைக்காடர் செய்த நூலுக்கு ஊசிமுரி என்று பெயராயிற்றென்றும், அந்நூல் நாற்பத்தொன்பது செய்யுளுடையது என்றும், இடைக்காடரும் மற்றொருபுலவரும் தம்முள் மாறுபட்டு இடைக்காடர் செய்யுள்செய்தபொழுது அதனை அவரோடுமாறுபட்டபுலவர் ஓலையில்எழுதிவருமிடத்து யாரேனுமொருவர் தம் செயலைச் செய்யமுடியாது பின்னிடுவராயின் அவரே தோற்றவராவரென்று சூளுறவுசெய்து, இடைக்காடர்,

"ஆற்றங் கரையி னருகிருந்த மாமரத்திற்
காக்கையிருந்து ... கெனக்—காக்கைதனை
எய்யக்கோ வில்லாமல் ... என்றனே
வையக்கோ னன்றன் மகன்"

என்பதுபோன்ற செய்யுள்களைச் செய்துவர இச்செய்யுளின் இரண்டு மூன்றாமடியிலுள்ள ஒலிக்குறிப்பையும், அதுபோலும் பிறவற்றையும், இடைக்காடரோடு மாறுபட்ட புலவர் எழுதமாட்டாது பின்னிட்டமையால் இடைக்காடரே வெற்றிகொண்டனரென்றும், கூறிப் பின்பு, யானைநூல், கைந்நிலை என இரண்டுநூல்களுளவென்றும், அவற்றுள், யானைநூல் அதிவீரராமபாண்டியனால் இயற்றப்பட்டதென்றும், அது யானைகளின் இலக்கணங்களையும், அவற்றுக்குவரும் நோய்களையும், அவற்றை நீக்குமுறைகளையும் பிறவற்றையும் விளக்கிக்கூறுவதென்றும், கைந்நிலையென்பது பதினெண்கீழ்க்கணக்கினுட் சேர்ந்ததென்றும், அதற்கு ஒழுக்கநிலையென்பது பொருளென்றும், முற்காலத்தில் செல்வரொடு வறியரொடு வாசியற எல்லாரும் தமிழ்ப்புலவர்களை யாதரித்து வந்தனரென்று கூறித் திரிபுவனையென்னும் ஊரார் "குலோத்துங்க சரிதை" என்ற நூல்செய்தமைக்காக, கவிகுமுதசந்திரன் என்ற பட்டனுக்கு இரண்டுவேலிநிலம் தானம்செய்த சாசனத்தை யாதாரங்காட்டி விளக்கியும், அதுபோல் இப்பொழுதும் தமிழ்ப்புலவர்களை எல்லாரும் ஆதரித்துவரவேண்டுமென்று வற்புறுத்தியும், பல அரிய விஷயங்களை எல்லாரு மெளிதினுணருமாறு உபந்யசித்தார்கள்,



அதன்பின் காலமதிகரித்துவிட்டமையால் அக்கிராசனரவர்கள் தமது முடிவுரையைச்சுருக்கி நடந்த உபந்யாசங்களிலுள்ள நயத்தையும், தமிழின் பெருமையையும், தமிழ்ப்புலவர் பெருமையையும், தமிழை அபிவிருத்திசெய்யவேண்டிய விஷயத்தில் புலவரும் பிறரும் கைக்கொள்ள வேண்டிய முறைகளையும், சுருக்கமாகவும், அழகாகவும், தெளிவாகவும் கூறிமுடித்தார்கள்.

அதன்பின் சங்கமகாஜனசபை நடைபெற்றது. அதிற் செய்யப்பட்ட தீர்மானங்களும் பிறவும் இதன் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன. பின்னர், புலவர்கள் மங்களவாழ்த்துக்கூறினர். அக்கிராசனாதிபதியவர்களுக்கும் சபையோர்க்கும் சங்கத்தார் வந்தனோபசாரங்கூறி ஹாரசந்தன தாம்பூலாதிகள்வழங்க இரவு 10½-மணிக்குச் சபை இனிது நிறைவெய்தியது. சுபம்!

"சங்கநிதிசங்கநிதியாய்த்தழைக்கவுல
கெங்குந்தமிழினிசைபரவச்—சங்கமொளிர்
சேதுபதிராஜராஜேசன்சிறக்கவரு
மாதிபகவனருள்,

உதவிப்பத்திராதிபர்.

---

உ

# மங்களவாழ்த்து.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 18, 19-ம் வருடக்கொண்டாட்டத்தில்,
நூற்பரிசோதகரும், திருவாவடுதுறையாதீனவித்துவானுமான
சேஃ. ராஃ. சுப்பிரமணியக்கவிராயரவர்க ளியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்,

உலகமெலாங்காக்கின் றமாதேவனருளாலவ்வுலகினுக்கு
நலமிலங்குகண்போன்முன் னுதவியசெந்தமிழ்மொழிபன் னாட்டிலென்று
குலவுறத்தென்முகவைநகர்வந்தபாண்டித்துரையெங்கோமான்வைத்த
நிலவுபுகழ்மதுரைநான்காஞ்சங்கநீடூழிநிகழுந்தானே. (

இன்னதமிழ்ச்சங்கம்வளர்ந்தோங்கிவரநல்லுதவியென் றுஞ்செய்யு
நன்னர்மடபதிகள்புலவோர்மன்னர்வணிகர்செல்வர்நன் னூலாய்ந்து
சொன்னபடிநீதிவழக்குரையதிகாரிகளின் னுஞ்சொலநின் றோர்கண்
முன்னுலகிற்பெரும்புகழும்புண்ணியமுமெய்திநன்குவாழிவாழி. (

# செந்தமிழ்

தமிழ்ச்சங்கக் கலாசாலை உதவியுபாத்தியாயர்

சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் பாடியது.

### நேரிசைவெண்பா.

மன்னர்பலர் போற்று மதுரைத் தமிழ்ச்சங்கம்
என்னலமு மல்க வினிதருளுந்—தன்னந்
தனியாகி யண்ட சராசரங்க டோறு
முனியாது வாழு முதல்,

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விண்ணிலவு முடிபெதியைப் பகீரதியைச் சடைக்கணிந்த
விமலற் போற்றிப்
புண்ணியவைந் தெழுத்தோதிச் சைவநெறி முறையொழுகிப்
புலவோர்க் கெல்லாந்
தண்ணியவைந் தருமானத் தருபாண்டித் துரைமதுரை
தனிற்று பித்த
புண்ணியனுந் தமிழ்ச்சங்கம் பத்தொன்ப தாம்வயது
படைத்த தன்றே.

இவ்வருடத் திருநாட்குத் தலைவனென வினிதமர்ந்தா
னெழினெல் வேலித்
திவ்வியபொற் பதியுறைவோன் செந்தமிழு மாங்கிலமுந்
தெளிந்த மேலோன்
செவ்வியநீ தித்தலத்திற் றிகழ்நீதி வாதியெனச்
சிறந்த நல்லோன்
பவ்வநெடுந் துகிலுடுத்த பாருலகு புகழுமுயர்
பான்மை மிக்கோன்.

மன்னவர்தங் குடிவளமு மற்றவர்தம் பொருள்வளமு
மாண்புற் றோங்கத்
தன்னுரிமைக் கொழுவளத்தாற் றருமேழிக் கொடியுடையோ
றரும சீலன்



பன்னுதமிழ்ப் புலவோர்க்கும் பைந்தமிழ்க்கும் வழங்குகொடைப்
பாரி போல்வான்
சொன்னயமும் பொருணயமு முணர்சோம சுந்தரப்பேர்த்
தூயோ னம்மா. (௪)

இப்பெரியோன் றன்வரவு நல்வரவா குகவின்பே
ரென்றும் வாழ்க
வொப்பறுமிச் சபைவாழ்க தமிழ்ச்சங்கத் தலைவருட
னுவந்து வாழ்க
செப்பருநற் புகழ்படைத்த தென்மொழியும் வடமொழியுஞ்
சிறந்து வாழ்க
எப்பொருட்கு மிறைவனருட் பதம்வாழ்க வாழ்கபுவி
யென்று மாதோ. (௫)

செந்தமிழ்க்கோ ராகரமா மிச்சங்கம் புரந்தருள்வோன்
சேது வேந்தன்
விந்தையுறை மணிமார்பன் ராஜரா ஜேசுவரன்
வேந்தர் வேந்தர்
முந்துசபைக் கணியாகி முதன்மையுற்று வீற்றிருப்போன்
முகிலை நேரச்
சந்ததம்பா வலர்ப்புரப்போன் றனதுபுகழ் நீடூழி
தழைக மாதோ. (௬)

பார்புகழு மாதிபுரப் பசுபதிதான் மறவாதான்
பாடல் சான்ற
சீர்திகழு மிச்சங்கந் தனைக்காக்குஞ் சிறப்புமிகு
செல்வச் சீமான்
ஏர்திகழும் வணிகர்குல மணியனையான் பாவலருக்
கெழிலி போல்வான்
பேர்திகழும் பெத்தாச்சி வள்ளல்புகழ் தழைத்திடுக
பெரிது மாதோ. (௭)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தென்னவர் மதுரை திகழ்தமிழ்ச் சங்கஞ்
சிறந்திடச் சிந்தையால் வாக்காற்

பன்னரு முடலாற் பலநல நிறையப்
பலபல முயற்சிசெய் திடுவோர்

பொன்னிதி தருவோர் புத்தக மீவோர்
பொருள்பலர் கொடுத்திடப் புரிவோர்
இன்னவர் மரபு தழைத்தினி தோங்க
விறைஞ்சுது மெம்பிரான் பதமே. (௮)

## சக்கரவர்த்தி வாழ்த்து.

வையகத்தை யாளு மகாமண்ட லேச்சுரன்மெய்ச்
செய்யமுறை கோடாத செங்கோலான்—றுய்யனெழில்
ஐந்தாம்ஜார்ஜ் என்னு மரசர்பிரா னெஞ்ஞான்றும்
மைந்தார்ந்து வாழ்க மகிழ்ந்து. (௯)

---

மதுரை: ஸௌராஷ்டிர உயர்தரகலாசாலைத் தலைமைத்தமிழ்ப்பண்டிதர்
**P. C. புன்னைவனநாதமுதலியாரவர்கள் இயற்றியது.**

1. சேதுபதி யார்நலஞ்சேர் செந்தமிழ்ச் சங்கமிது
கோதுபதி யாப்புலவோர் கூட்டுறவால்—மாதுபதி
தந்ததமிழ் காத்துச் சருவகலா சாலையாய்ச்
சந்ததமும் வாழ்க தழைத்து.

2. பெருங்கதைப்பே ராசிரியன் முதற்புலவர் பெருமக்கள்
பிறங்குஞ் சீரால்
வரும்புலவர் மகிழ்வுறச்செய் மாண்புறுமிச் சங்கவிழா
மதுரை தன்னில்
பெருங்குணம் நல்லொழுக்கமணி சோமசுந்தரப் பெரியோன்
பெட்புற் றேற்ற
அருந்தலைமை யதன்கீழ்நன் கார்ந்ததிறை யருள்பெருகி
அவனி வாழி.

---

மதுரைத்தமிழ்ப்பண்டிதர்
**N. கனகராஜையரவர்களியற்றியது.**

புனற்சடையார் பரம்பரன்மெய்த் திருவருளாற் பொதியின்முனி
புரந்த செங்கட்
கனற்சுவைசேர் தமிழணங்கு கனற்சுவையும் புனற்சுவையுங்
கண்டே மண்ணிற்



கனச்சுவையுங் காணவரு மிக்கால நற்காலங்
காத லோங்கித்
தனச்சுவைதேர் பொருள்வணிகர் மனச்சுவையாற் றுங்கவருந்
தன்மை கண்டீர். (௧)

வளமதுரை நகரில்வளர் தமிழ்ச்சங்கம் பத்தொன்பான்
வயதும் பெற்றுத்
தெளிஞர்பலர் நிறையவையிற் சாறுகொள வீறுகொளுஞ்
சிறப்பு மோங்கி
உளமகிழ்வின் மிகுபுலவர் வாழ்த்தெடுக்கும் எத்திசைகொண்
டுயர்ந்த வாற்றால்
அளவின்மறை யறியாத விறையவனு ரருள்பெறுதற்
கைய மின்றே. (௨)

அவைத்தலைமை யேற்றமைதி நிறைகோலி னடுநிலைமை
யருஞ்சொல் வன்மை
சிவைக்குரிய தலைவனிட முதிரன்பு பிறர்குறையைத்
தேராத் தூய்மை
நவைக்குரிய கயவர்சொலுஞ் செவியேற்று நன்மதியை
நல்குஞ் சீர்மை
இவைக்குரிய புகழ்ச்சோம சுந்தரவேள் எஞ்ஞான்றும்
இனிது வாழி. (௩)

வாழிமறை வேள்விமறை யவர்முதலா நாற்குலத்தில்
வாழு மாந்தர்
வாழிமறைமு முகில்சைவம் வைணவமே முதலாய
மதங்கள் வாழி
வாழிநிறை மொழிமாந்தர் மன்னவன்செங்கோல்வாழி
மதுரை வாழி
வாழிதமிழ்ச் சங்கமருந் தமிழ்ப்பயிரும் ஊழியுற
வாழி வாழி. (௪)

---

உ

# மதிப்புரை:—

I. குமுதவல்லி, திருமங்கை மன்னன்:—இது, திருமங்கையாழ்வார்வைபவத்தை, அழகிய தமிழ்நடையில் பெண்டிரும், பெரியோரும், சிறுவரும் படித்தானந்திக்கும்படி பல மேற்கோள்களுடன் தெளிவாக விளக்குவது. நாகைவித்வான் ஸ்ரீமத். ஜே. இராஜகோபாலபிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது. நல்லகடிதத்தில், அச்சிடப்பட்டிருக்கிறது. கலாசாலை மாணவர்களுக்கு இப்புத்தகம் பாடமாக வைக்கப்பெறின், நல்லறிவும், தெய்வநம்பிக்கையும் விர்த்தியடையும். இதன்விலை அணா-8. வேண்டுவோர், "அமிர்தகவி-ஜெ. ராஜகோபாலபிள்ளையவர்கள், 86 பெருமாள்கோவில் தெற்குவீதி, நாகபட்டினம்" என்ற விலாசதார்க் கெழுதிப் பெறலாம்.

---

II. மனிததருமமும், துளசிமகத்துவமும்:—இதுவும் ஷை ஜெ. இராஜகோபாலபிள்ளையவர்களால் தமிழ்நடையில் எழுதப்பட்டது. இதில், பலகண்டங்களின் இயல்பும், அவற்றிற்பிறக்கும் மாந்தர், நடையுடை பாவனைகளாலும் நிறத்தாலும், ஒழுக்கமுதலியவைகளாலும் வேறுபட்டிருக்கக் காரணமும், ஒவ்வொரு மனிதனும் அவசியம் தெரிந்து நடந்துகொள்ளவேண்டிய முக்கியமான விதிவிலக்குகளும் கூறப்பட்டிருப்பதோடு, துளசிமகத்துவமும், வடநாட்டில் காட்டிலாகாஉத்தியோகம் வகித்திருந்தவரான ஷீல் என்ற ஆங்கிலகனவானுடைய அனுபவத்திற்கண்டறிந்தபடி வெளியிடப்புட்டிருக்கிறது. சட்டைப் பையில் வைத்துக் கொள்ளும்படி சிறுபுத்தகமாக நன்கு அச்சிடப்பெற்றிருக்கிறது. இதன் விலை விவரமுதலியன ஆக்கியோர்க் கெழுதித்தெரியலாம்.

---

III. யாக்ஞவல்கியம்:—இது மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவரும், மதுரை, சௌராஷ்டிர உயர்தரகலாசாலைத் தலைமைத்தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமத். P. C புன்னைவனநாதமுதலியாரவர்களால், தமிழ்நடையில் ஆன்மபோதத்தை விளக்கி நன்கு எழுதப்பட்டுள்ளது; இது வடமொழியிலிருந்து வடநாட்டுத்தத்துவசாஸ்



திரி ஒருவர் ஆங்கிலத்தில் எழுதிய "மைத்திரேயி" என்ற சிறுவேதாந்த கதையைத் தழுவியது. மாணவர்க்கும் பிறர்க்கும் தத்துவரகசியங்களை எளிதிற் புகட்டவல்லது. இதன் விலை அணா-9.

---

IV. 'செய்யுட்பாடக் கோவை:— (முதற்பாகம்) இது, ஸ்ரீமத்: P. C. புன்னைவனநாதமுதலியாரவர்களால் தொகுக்கப்பெற்றது; கலாசாலை மாணவர்களுக்குபயோகமாகும்பொருட்டு மூதுரை முதலிய இருபது நூல்களிலிருந்து பொறுக்கியெடுத்த 507 செய்யுட்களையுடையது; I, II, III-ஆவது பாரமாணவர்களுக்குப் பாடமாகவைக்கத்தக்கது. கலாசாலையதிகாரிகள் இப்புத்தகத்தைப் பாடபுத்தகமாக ஏற்று முதலியாரவர்களுக்கு ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறோம். இதன் விலை அணா-8.

---

V. நீதிசாரத்திரட்டு:—(முதற்பாகம்) இது, ஸ்ரீமத். P. C. புன்னைவனநாத முதலியாரவர்களால் செவ்விய தமிழ்நடையில் இயற்றப்பெற்றது; மாணவர்களின் அறிவை வளர்த்து ஒழுக்க வழக்கங்களைச் சீர்திருத்த வல்லது; ஆரம்பப்பள்ளிக்கூடங்களிற் பயிலும் மாணவர்க்கு நீதிபோதனைக்குரிய பாடமாகவைக்கத்தக்கது. இதன் விலை அணா-4. இதுவும், மேலேக்காட்டிய யாக்ஞவற்கியமும், செய்யுட்பாடக்கோவையும் மதுரை, புத்தகவியாபாரம், பி. நா. சிதம்பரமுதலியார் கம்பெனியில் விலைக்குப்பெறலாம்.

---

VI. ரோமியோஜூலியத்:—இது ஆங்கிலத்திற் கவிசிரேஷ்டராகிய ஷேக்ஸ்பியரால் செய்யப்பட்ட கதையைத்தழுவி, தமிழ்ச்செய்யுட்களால் ஆனைமலை ஸ்ரீமத் A. R. ஸ்ரீநிவாஸமுதலியாரவர்கள் இயற்றியது. செஞ்சொற்களால் எல்லார்க்கும் பொருள் எளிதில் விளங்கும்படி பாடப்பட்டது. மதுரை மாணவர்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனர் ஸ்ரீமத். M. கோபாலகிருஷ்ணையரவர்களுக்கு உரிமை செய்யப்பட்டது. கதை ஆங்கிலப்போக்காயினும் இடையிடையே கற்பனைகளும், நீதிகளும், அலங்காரங்களும் தமிழ்முறையாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா-8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப்பெறலாம்.

---

VII. அநுபவசோதிடரத்னம்:—இது அம்பாசமுத்திரம் தாலூகா பாப்பான்குளம் கிராமத்திலிருக்கும் சோதிடசாஸ்திரி ஸ்ரீமத். வி. ஆறுமுகமுதலியாரவர்களா லியற்றப்பட்டது. இதிற் சோதிடம் கற்க விரும்புவோரும் பிறரும் அவசியமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை வருஷாதிநூல் முதலிய சோதிட நூல்களினின்றும் பொறுக்கியெடுத்துச் சுருக்கமாகவும் தெளிவாகவும் காட்டியிருத்தலால் இது சோதிடவுணர்ச்சியை யெளிதிலுண்டாக்கத்தக்கது. இதன் விலை ரு-1. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப் பெறலாம்.

---

VIII. காதம்பரி சங்கிரகம்:—இது, கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல், தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையரவர்களால், பலமேற்கோள்களுடன் இனிய தமிழ் நடையில், சுருக்கி யெழுதப்பட்டது. கும்பகோணத்தை அடுத்த கல்லூர்க் கலைமகள்கல்விக்கழகத்தாரால் வெளியிடப்பட்டது. மாணவர்களுக்குத் தமிழ் நடை யெழுதுந் திறத்தை உண்டாக்கவல்லது. இதன் விலை அணா-5. வேண்டுவோர் கும்பகோணத்தையடுத்த கல்லூர்க் கலைமகள்கல்விக்கழகத்தார்க் கெழுதிப்பெறலாம்.

---

IX. முயற்சி திருவினையாக்கும்:—இது ஷை ஸ்ரீமத். ஊ. சா வேங்கடராமையரவர்களால் "முயற்சி திருவினையாக்கும்" என்ற குறட் பகுதியை, கௌசிகர் சரிதமுகத்தான் விளக்கி யெழுதப்பட்ட ஒரு சிறு வசன புத்தகமாம். இது வியாசமெழுதும் கலாசாலை மாணவர்களுக்கு உபயோகப்படத்தக்கது. ஷை கலைமகள் கல்விக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது. இதன் விலை அணா ஒன்றரை. வேண்டுவோர் கும்பகோணத்தை அடுத்த கல்லூர்க் கலைமகள்கல்விக்கழகத்தார்க் கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

---

# தனிநிலைச்செய்யுட்கோவை.

(௩௫௬-ஆம் பக்கத்தொடர்ச்சி)

38. ஆங்கிலப் பனுவற் கழகத் தவரே
பாங்கின ரம்மொழிப் பயிற்சிதெளி பண்பிற்
கதா அன்று,
செந்தமிழ்ப் பயிற்சி தெளிதற் கவரை
முந்துபு போற்றினர் முத்தமிழ் நாட்டினர்
கூடற் கூடிய கொழுஞ்சுவைச் செழுந்தமிழ்ப்
பாடல்சால் கூட்டமும் பார்வாழ் புலவரைத்
தாட்கீழ்ப் படுத்துந் தகைமை சான்றவர்
வெரிநொடு வயிற்றிடை வேற்றுமை பெறப்படார்
புரைவெண் ணறுவையர் புயல்பனி வெயிலாற்
றிரிவுறு மேனியர் பேணுநர்ச் சிறிதிலர்
பன்னூ லாயும் பான்மையர் பரந்த
நன்னூற் கேள்வியர் நாவலர் பாவலர்
பொன்னேர் தங்கோள் புவிகாட்டு மாற்றலர்
திருந்தெழில் குலந்திகழ் சேயிழை
யருந்துணை யிழந்தாங் காற்றிடப் படுத்தே.
39. வயிற்றுப்பசி மாற்றி மெய்ந்நலன் வளர்த்த
லயிலுணுத் தன்மை யாதன் மான
வுயிர்ப்பசி யொரீஇ யுயிரை யோம்புதல்
கடவுள் வாழ்த்திற் கண்டமுறை யாகு
மரபுவழி வந்த வுணவே யவ்வவ
ருடல வளர்ச்சிக் குரியன வாகுங்
கடவுள் வணக்கமக் காட்சியி னமையு
மொருபா லார்மற் றொருபா லார்தம்
முணவு முதல வுவர்த்தலிற் கடவுள்
வாழ்த்தையும் வரைகுநர் மற்றிறை யுண்மை
யுடம்பாட் டவரோ டெழ்தலொன் றின்று
முடம்படா ரன்றே யொன்று ராவர்

அதா அன்று,
பலகோள் படைத்த பற்பலர் தம்மையுஞ்
செய்ந்நன்றி கொன்ற வில்லையென் போரையு
மறந்தரு சால்பி னான்றோர் தம்மையு
மறந்தரு பழிவளர் வன்கண் ணோரையுங்
காத்தல் புரிதல் கடவுட் கியற்கைநா
மீத்தரு செயல்செய வேட்டன்மட னன்றே
யாதலி னவன்றாட் கடியோந்
தீதறு மவன்செயல் சிதைத்தனல னன்றே.

40. பஃறலை யுடையை பலகை யுடையை
நீயென் றொருவனை நிகழ்த்தன்மட னென்றுதம்
புதுமை கொண்டுநம் பழமைநனி யெள்ளுநர்
நாற்கை மெய்ப்பை நலனென மிக்கோர்
மேற்கொண்டு மினுக்குநர் நாமே விழைவுடன்
கல்லினும் பல்வகைப் பொன்னினுங் கடவுளை
நல்வடி வமைத்து நன்றிகொடு பரவுதல்
பொல்லாங் கென்னப் புறம்பழித் தரற்றுநர்
தம்முறு வேந்தன் றன்றிரு நாளி
னவன்வடி வமைந்த வழகோ வியத்தைப்
பட்டுடை யுடுத்திப் பைந்தார் சூட்டி
யூர்தியி னேற்றி யூர்வலம் வருகுநர்
இறையுண் டென்ற வறிவு கொளுத்திய
முறையா சானையு மங்ஙன முயல்குநர்
தன்னுறு வெரிநுந் தன்மனை
துன்னுபழி முதலவுந் தோன்றாமை நெறியே.

41. எருமை முழுப்பொரு ளியையு மெனினே
யுரிமையொடு சென்றாங் குவந்து தலை வணங்கி
யருமைப் பனுவலை யதன்கைப் படுத்திச்
சிறிதுபொருள் கொண்டு திரும்புந ரன்றி
நல்லறி வுடையோ னற்றமிழ்ப் பாவலன்
வறிஞ னுரைகோ ளாளன் வாய்மையன்
வழிபடு தகைய னிவனே யென்றவற்



கொன்றுத வாற்றல் புலவோர்க் கில்லெனி
னாற்றுந ரச்சிற் போற்றிய பனுவலைப்
பொருள்கொடுத் தேற்றுப் புரைகொளா தவற்றை
யருள்வழி யளித்தற் காஞ்செல் வோரெலா
மிருள்வழி மருளுற் றிறந்தன ரேயோ
செந்தமிழ்க் கழகந் திருத்தற் கொருப்படார்
நிறைபொருள் பிறமொழி நிலவுற நீட்டுவர்
இவரே தமிழர் இவரே செல்வர்
இவரே யறிஞர் இவரே பெரியர்
இவரே யறவோர் இவரே குலத்தினர்

இனியே,
தொட்டுழி யெல்லா மினிமை சுரப்பன
நோக்குழி யெல்லா நுண்மை சான்றன
துளக்க கில்லாத் துணிபொருண் முற்றின
வளக்க வொண்ணா வளவு நிறைந்தன
பண்டைச் சான்றோர் பாலித்த மும்மைத்
தண்டமிழ்ப் பனுவலைத் தம்பொரு ளென்னப்
போற்றா தழித்தோர்க்குப் பொருளுந் நிலையுமே
அவற்றை யெல்லா மவாவி யாயாத
தமிழர்க் காக்கக் கேடுபிறி துண்டே
யுண்மை கூறி னுலகமு வர்க்கு
நன்றுநன் றம்மா நன்றே
யொன்றிய நமிழ்நாட் டுடைமை மிகநன்றே.

42. ஐம்புலன் வேட்பன வவாவி யீட்டியும்
வெம்மனப் பேய்க்கு விருப்புநிறை கிலாராய்த்
தம்மறிவு கலங்கித் தாமாய்ந் தோரைக்
கண்ட காட்சியர் புலக்கத வடைத்து
மெய்ப்பற்று விட்டுச் சாந்துயர்க் குளதா
மெய்ப்பற் றின்பத் திடைமூழ் கினரே
மேய கடவுளை விளக்குநெறி முற்று
மீயுமுயர் நூலு ளியைந்தன வற்றைத்
தோயு முறுப்பின் றேற்ற நாட்டிக்

கோயில் படைத்துக் குலவுமந் நாலினு
மேற்றங் காட்டி யிறவா து போற்றினர்
தமிழர் தம்முள் வறுமையழுக் காறு
துன்னும் பிறவுந் தோன்றல ராதற்
காங்கக் கோவிற் களவின் னிலம்பொருள்
செவ்விதி னமைத்துச் சிறப்புற் றமர்ந்தன
ரிவ்வகை யறியா வேழையர் தம்மு
ளொருசா ராரே கோயினிலை யுணர்கிலர்
மற்றொரு சாரார் கோயிற் பொருள் கொடு
முத்தமிழ் வளர்க்கிலர் மூதறி வுடைய
வித்தகப் பாவலர் விழுப்பத்து நாவலர்
தங்கட்குச் சிறிதுந் தருகில ராகிப்
பல்லிய மியம்பும் பாலோர் தமக்குங்
கூத்தர் தமக்குங் கூத்தியர் தமக்குங்
கொடுத்துக் கோயிலொடு நங்குலங் கெடுக்குநர்
வெளிற்றுக் கோயிலொடு விராவுதங் கொள்கையு
மளப்பில் கழகமு மமைத்துச் செழிக்குந்
தன்மைய ராகு மேனாட்டுச் சார்பினர்த்
துன்னுவ வெல்லாந் தூய்தாக் கொள்ளுந
ரின்னவை களைகலா தென்னோ விருக்குநர்
கோயிறொறுங் கோயிறொறுங் கூடற் கெழீஇய
தாயமர் தமிழைத் தலைமைகொடு நம்மனோர்
பற்பல வாகப் பயின்று
பொற்பமை நல்வழிப் போகுநிலை யொழித்தே.

43. முந்தை ஞான்று மூதறி வுடைய
நுவல்வோ ரெல்லாஞ் சிறுபொழுது நுவலக்
கேட்போ ரெல்லாங் கேண்மைகொ டந்நாண்
முழுதும் பயின்றனர் முறைமையுற் றனரே
தன்னடி யாற்குத் தக்கபணி நாலேழ்
நாழிகை வரையி னவின்றுநவின் றேவ.
வன்னோ னவற்றை யரைநொடிப் பொழுதின்
முற்றுவித் தாங்கு நுவல்வோர் பலரே



சுற்றிச் சுற்றி நுவன்றன வெல்லா
மிற்றைஞான் றம்மா கேட்குநர் நொடியிற்
கற்றுத் தேர்குநர் காட்சிநன் றம்மா
அதான்று,
கழகத்தை நாடி வருதற்கு மாங்கு
வீட்டை நாடி விரைதற்கும் வினாவிடை
கூட்டி யுரைத்துக் கொள்கை முற்றுற
நாட்டுதற்கு நண்ணறிவு மகாஅர்க்குப்
பூனை யென்பதைப் புனைகிழிக் காட்டிச்
சொல்லறி வித்துச் சொல்லைப் பிரித்தாங்
கெழுத்தறி வித்த லெவனோ பயக்கு
முயிரீரா று மெய்ம் மூவா றும்
பன்னிரு பதினெட் டென்னுமுயிர் மெய்யுஞ்
சின்னாட் பயின்று தெளிந்த சிறார்க்கே
யென்னானு மொன்றை யியம்புவீ ராயி
னன்னவை தம்மை நீவிர்நன் குணர்ந்த
வெழுத்துட் காட்டுது மென்ற வினாவிற்
கிறுத்த சொல்லைப் படிப்படி யாக
விரைவு குறைத்து விளக்கிற் செவ்வே
யெழுத்துப் புலனாகி யியங்குவ ரம்மா
யானை யெருத்தம் பொலிய வென்றதை
யாவை யெருது பொலியவென் றுணர்ந்த
அத்தகை யவரே யன்னர்
முத்தை மரபுவரு முறைதபுக் குநரே.

44. பொல்லா மண்ணசைஇப் பொருகுநர் தம்முட்
பல்லோர் செத்தும் பல்லோர் பெரும்புண்
கொண்டு நலிந்தும் குன்றுநர் குற்றங்
கண்டுபுரி திறலிலர் கருது சிறை கொலை
யண்டினர் தமக்காங் கஞ்சில ரளிக்குந
ரியம்புவ நெறியோ டின்றியமை யாத
வயின வெனினு மன்முறைக் கயலெனிற்
றலையுங் களைகுவர் சாற்றுமித் தலையெலா

நிலையுநல் லன்பு நிகழ்த்தற் கயர்ந்தனர்
இனியே,
குழவி யென்றுங் கிழவோ னென்று
மழிவிழவு முதல வளித்தில னிறைவ
முழுதுநல னீந்தே முழங்குந னம்மா
விவற்று னுலகோ ரொறுப்பிற் கஞ்சித்
தவற்றிடை யொரீஇத் தாமுய் குவரே
இனியே,
கற்போன் கற்பினிற் காண்டகு செயலிற்
குற்றம் காணுழீக் குறிக்கொண் டொறுக்கிலா
தற்புக் காட்டி ஞெசுற் றழிவுறாஉ
மாதலி னுவல்வோ னன்பார் தண்மையுந்
தீதறு வெம்மையுந் திறப்படத் தெளிந்து
போற்றுத னலனுப் புகன்றன
ராற்றறவ ழறிவுடை யான்றோர் பலரே.

45. கற்போர் தம்மைக் காதணி முதல
பொற்பா வணிகிலிர் புனைமி னெனவு
நற்சுவை யுணவை நன்கருந் திலிரே
யற்புட னருந்துமி னருந்துமி னெனவும்
ஒள்ளிய வாடை யுடுத்திலி ரெனவும்
வற்புறுத் திடித்து வைதற்கு மகிழ்வ
ரிவ்வே மான வுயிர்வளர்ப் பியற்றிச்
செவ்வே யணிதருஞ் சீர்த்த கற்பினை
யாற்றுமை பெரிதே யாசாகு மென்ற
கூற்றுச்செவிக் கொள்ளிற் கொடுமைகொடு குன்றுவர்
கூலிபெறு வினைஞன் றன்னொடு கூடிச்
சாலவினை தவிர்க்குந் தலைவனை நோக்கி



யிவ்வகை நீயே யியற்றுதி மடனென
வடியோ னுரையு மகங்கொளாத் தலைவற்குப்
படிநேர் பமைந்தனிர் பனுவற் கேட்பீர்
உம்பொரு ளெமக்கீண் டுவகையுற் றுதவினிர்
ஙம்பயிற் றிறையு மேலா தாடுதல்
பெரிதுந் தவறெனப் பேசினு மம்மா
திரிபுறு கின்றனர் செய்வ தெவன்சொல்
இவரே,
ஆசான் பொருளொன்று மடைதல் பழியெனத்
தேசார் கல்வியுங் கொள்கிலர் செவிபிடைப்
பிரம்பினை யெடுக்கிற் பிறரே
வரம்பின்றி யேதம் வாய்க்குமென் குநரே.

46. ஏழ்வகை யிசையினக் கேற்பத் தனித்தனி
வாழ்தளை தம்மு ளொன்றின்மற் றொன்றிற்
சூழிசை துவைத்துச் சுவைதொலைச் சிடும்புன்
யாழிற் கேட்போர் தம்மு ளொருவரை
வினவுழிப் பிறரே விரைந்துவிடை யிறுக்குநர்
முவ்வகைப் பண்பின் மூடமூக் கறிவினர்
எவ்வகை யொன்றினைச் சுருக்கிமனத் தியைக்கவு
மியைத்த வற்றை யினிதுவிரித் தியம்பவுங்
கூடு மிவற்றைக் குறிக்கொடு சான்றோர்
நாடும் பாவுரை நயந்தாய்ந்து நல்கின
ரிவ்வறி யாரே யியைந்தாங்குச் சுருக்கி
யொவ்வுவுளத் தூன்றவு மூறின்றி விரிக்கவுந்
தலைப்பட்டு வீணே தம்பயன் கெடுக்குநர்
நிலைப்பட்ட நெஞ்சி னிறைதமி ழியற்கைப்
புலவர் பாடல் பொருந்திசி னோரே

நிலவுநர் மற்றெவர் நிலைபெற் றனரே
தத்தமை மதித்துத் தருக்கொடு செருக்கிய
வெத்துணைச் செல்வ ரிருந்து மறைந் தனரே
யந்தண ஞெடிகை யதற்குமா றாகப்
புலையன் கையை மருத்துவன் பொருத்த
வக்கை கொடுதனக் காவன செய்குநன்
இழிவுள் ளனவு மேற்றமுள் ளனவு
மாயபல் வுறுப்பு நமக்கமை வனபோற்
றாய முழுமுதற் றொல்லோன் றனக்கு
மேயின வுறுப்பென வியன்பார் முதல
வவ்வப் பொறிவழி யேற்றன வளித்தற்குச்
செவ்வை சேர்தலுந் திறஞ்சிதைத் தவித்தற்குத்
தெவ்வமை வெறுப்புச் சேர்தலு மனன்பெறு
மொருவற் சார்தற் குளவழிச் செல்கைக்
குவப்பும் பிறவழிக் குவர்ப்பு மொன்றுவர்
ஈண்டிய வினைபோ லெண்ணில் செய்கை
யீண்டீண் டின்பமென் றிணைந்திணைந்
தாண்டாண் டலைந்தய ரவனிக் கியற்கையே.

தொடரும்.

S. வைரமுத்து.

---



ஞாழலென்பதுவேயாண்மரமுடனுங்
குங்குமமெனவுங்கூறுமிருபெயர் ரு
ஞானர்தானேயறிவுங்கல்வியும் சா
ஞாளியேமதுநாயெனவிருபெயர் எ

ஞாமுதலிருபேர்முற்றும்.

ஞாமுதன்முப்பெயர்

ஞாட்பென்பதுவேபூசலுங்கூட்டமும்
பாரமுமென்றேபகருமுப்பெயரே அ

ஞாமுதன்முப்பேர்முற்றும்.

ஞாமுதலைம்பெயர்

ஞாங்கர்தானேமேலுமிடமும்
வேலும்பக்கமுமுன்புமென்றைந்தே சு

ஞாமுதலைம்பேர்முற்றும்.

ஞாமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-கக.

ஞிம்முதலொருபெயர்

ஞிமிறென்பதுவேவண்டெனலாகும் க

ஞிம்முதலொருபேர்முற்றும்.

ஆகச்சூத்திரம்-கஉ.

ஞெம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

ஞெம்முதலொருபெயர்

ஞெரேலென்பதுவேதண்மையாகும் க
ஞெலிதல்தானேகுடைதலாகும் உ
ஞெலிகோலென்பதுதீக்கடைகோலே ங
ஞெகிழமென்பதுபொற்சிலம்பெனுமே ச
ஞெளிரென்பதுவேயோசையாகும் ரு
ஞெண்டுதானேநண்டெனலாகும் சா

ஞெம்முதலொருபேர்முற்றும்.

ஞெம்முதலிருபெயர்

ஞெரலேயொலியும்விரைவுமிருபெயர்

ஞெமிர்தலென்பதுமுற்றலுடனு
முறிதலெனவுமொழியுமிருபெயர்

ஞெம்முதலிருபேர்முற்றும்.

ஞெம்முதன்முப்பெயர்

ஞெகிழிதானேசிலம்புந்தீயுங்
கொள்ளிவிறகுமெனுமுப்பெயரே

ஞெம்முதன்முப்பேர்முற்றும்.

ஞெம்முதலெண்பெயர்

ஞெள்ளலென்பதுபள்ளமுமேன்மையும்
வீதியுஞ்சோர்வுமிகுதியும்பூசலு
முடன்படலுடனுமொலியுமெண்பெயரே

ஞெம்முதலெண்பேர்முற்றும்.

ஞெம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-உஉ.

ஞேமுதலொருபெயர்

ஞேயமென்பதுசினேகமாகும்

ஞேமுதலொருபேர்முற்றும்.

ஆகச்சூத்திரம்-உங.

ஞொம்முதன்முப்பெயர்

ஞொள்கலென்பதுவேயச்சக்குறிப்பு
மிளைத்தலுஞ்சோம்புமெனுமுப்பெயரே

ஞொம்முதன்முப்பேர்முற்றும்.

ஆகச்சூத்திரம்-உச.

இதன்தருபுலியூர்ச்சிதம்பரரேவண
னிதந்தரப்புகலகராதிநிகண்டினிற்
பகருஞகராதிப்பேர்நாலாந்
தொகுதியிற்சூத்திரமிருபத்தாறே

நான்காவது:

ஞகராதிப்பெயர்த்தொகுதிமுற்றும்.

ஐந்தாவது:

# தகராதிப்பெயர்த்தொகுதி.

தன்மசன்மனைச்சார்குணக்குருவினை
யிம்மையிற்சித்துப்பட்டசரையிறைஞ்சித்
தகராதிப்பெயர்த்தொகுதியைத்தருவாம்.

தம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

தம்முதலொருபெயர்

தமநகமென்பதுமருக்கொழுந்தின்பெயர் க
தருவர்தாமேயரக்கராகும் உ
தகைத்தலென்பதுசெறிதலாகும் ங
தக்கைதானேபலவகைப்பறையாம் ச
தட்பமென்பதுகுளிர்ச்சியாகும் ரு
தடாவென்பதுவேமிடாவெனலாகும் சு
தந்தியேகுஞ்சரமெனப்படுமே எ
தணத்தலென்பதுபிரிதலாகும் அ
தணியருனேகள்ளெனப்படுமே கூ
தண்டாமைதானேநீங்காமையாகும் க0
தண்டலைதானேசோலையாகும் கக
*தத்தருனேசெல்கதியாகும் கஉ
ததியென்பதுவேதயிரெனலாகும் கங
ததைதருனேமிடைதலாகும் கச
தந்தென்பதுவேநூலெனப்படுமே கரு
தபதியரென்பதுதச்சராகும் கசு
தமமென்பதுவேயிருளெனப்படுமே கஎ

* ததலையென்பது செல்கதியாகும் என்பது பி - ம்.

தட்டிதானேகோட்டமாகும் ௧௮
தமநியமென்பதுபொன்னெனலாகும் ௧௯
†தமாலமேபச்சிலையெனப்படுமே ௨0
தமனிதானேவன்னிமரமாம் ௨௧
தமிசேவேங்கைமரமெனலாகும் ௨௨
தம்மனையென்பது தாயெனப்படுமே ௨௩
தம்மிலந்தானேமயிர்முடியாகும் ௨௪
தரங்கமென்பதுநீர்த்திரையாகும் ௨௫
தயித்தியர்தானேயசுரராகும் ௨௬
தராபதியென்பதுமன்னவனாகும் ௨௭
தரிஞ்சந்தானேயன்றிலாகும் ௨௮
தருமனென்பதுநமனெனப்படுமே ௨௯
தரையென்பதுவேபூமியாகும் ௩0
தல்லிதானே தாயெனலாகும் ௩௧
தமலியென்பதுசட்டுவமாகும் ௩௨
தளவந்தானேமுல்லையாகும் ௩௩
தனையனென்பதுமகனெனப்படுமே ௩௪
தருகைதானேயளியெனலாகும் ௩௫
தறிகையென்பதுவேயொருகருவிப்பெயர் ௩௬
தற்பாடிதானேவானம்பாடியாம் ௩௭
தர்ப்பணமென்பதுகண்ணாடிப்பெயர் ௩௮
*தற்கெலந்தான்வறுமையாகும் ௩௯
தவரென்பதுவேவில்லெனலாகும் ௪0

தம்முதலொருபேர்முற்றும்.

தம்முதலிருபெயர்

தணியேதண்மைமலையெனவிருபெயர் ௪௧
தகுதியேயாசாரமும்பொறையும் ௪௨
தருமையென்பதுமிகுதியுமெய்ம்மையும் ௪௩

† தமாலமென்பது பச்சையெனப்படும் என்பது பி - ம்.
* தற்செலந்தானேவலுமையாகும் என்பது பி - ம்.



தடாரிதானேபலவகைப்பறையு
மத்தளமெனவுமருவுமிருபெயர் ௪௪
தமரமேயரக்கோசையிருபெயர் ௪௫
தமரியனேயிரணியனும்பிரமனும் ௪௬
தரளந்தானேமுத்துந்திரட்சியும் ௪௭
தவாவினையென்பதுமலையுமுத்தியும் ௪௮
தளிமந்தானேமெத்தையுமழகும் ௪௯
தண்ணமென்பதுவேயோர்கட்பறையு
மழுவுமெனவேவைக்குமிருபெயர் ௫0
தத்தையேகிளிமூத்தாளிருபெயர் ௫௧
தலையலேமழைபெய்துவிடுதலும்
புதுப்புனல்வரவும்போற்றுமிருபெயர் ௫௨
தழலேகிளிகடிகோலுந்தீயும் ௫௩
தபுதலென்பதுகேடுஞ்சாவும் ௫௪
தன்னமேமான்கன்றுமற்பமும் ௫௫
தவலேமிகுதியுங்குன்றலுமிருபெயர் ௫௬
தனியேதமியொப்பின்மையிருபெயர் ௫௭
தபனனேதீயிரவியிருபெயர் ௫௮
தகடேயைம்மையுமிலையுமிருபெயர் ௫௯
தலமேயிலையுநிலமுமிருபெயர் ௬0
தம்பமென்பதுகவசமுங்கம்பமும் ௬௧
தன்மையென்பதுதமையுடைப்பொருளு
மியல்புமெனவேயிசைக்குமிருபெயர் ௬௨
தளியேதூறலுங்கோவிலுமிருபெயர் ௬௩
தழையென்பதுவேபீலிக்குடையுந்
தழையுமெனவேசாற்றுமிருபெயர் ௬௪

தம்முதலிருபேர்முற்றும்.

தம்முதன்முப்பெயர்

தவிசேயாசனமேற்றவிசுமெத்தையுந்
தடுக்குமெனவேசாற்றுமுப்பெயரே ௬௫

தரணியென்பதுமலையும்பூமியு
மிரவியுமெனவேயிசைக்குமுப்பெயரே ௬௬

தமிழென்பதுவேயினிமையுநீர்மையுந்
தமிழுமெனவேசாற்றுமுப்பெயரே ௬௭

தனஞ்சயனென்பதுகாற்றுந்தீயு
மருச்சுனனெனவுமாகுமுப்பெயரே ௬௮

தருமராசனேயருகனுந்தருமனும்
புத்தனுமெனவேபுகலுமுப்பெயரே ௬௯

தசும்பென்பதுவேகுடமுமிடாவும்
பொன்னுமெனவேபோற்றுமுப்பெயரே ௭௦

தடையென்பதுவேகவசமுந்தடுத்தலு
மணையாளெனவுமருவுமுப்பெயரே ௭௧

தடறென்பதுவேதொண்டகப்பறையும்
பத்தலும்படையுறையுடனுமுப்பெயரே ௭௨

தம்முதன்முப்பேர்முற்றும்.

தம்முதனாற்பெயர்

தகரந்தானேயியமுர்தகரமு
நறுநாற்றமுமயிர்ச்சாந்துநாற்பெயரே ௭௩

தகரேயாடுமேடமுந்தகரும்
பூமியுமெனவேபோற்றுநாற்பெயரே ௭௪

தஞ்சந்தானேயெளிமையும்பெருமையும்
பற்றுக்கோடுந்துணையுநாற்பெயரே ௭௫

தடவேமலையுங்குளமும்பெருமையு
மிந்தளமெனவுமிசைக்குநாற்பெயரே ௭௬

தளையேவிலங்குஞ்சிலம்புமிணைத்தலு
மாண்மயிரெனவுமாகுநாற்பெயரே ௭௭



தனுவேவில்லுமுடலுமோசையு
நட்பமுமெனவேநவலுநாற்பெயரே ௭௮

தம்முதனாற்பேர்முற்றும்.

தம்முதலைம்பெயர்

தட்டேபரிசையுங்குற்றமுமுட்டுந்
தட்டுந்தேர்நடுவுஞ்சாற்றுமைம்பெயரே ௭௯

தண்ணடைதானேயுடுக்கையுநாடு
மருதநிலத்தூருடனேகாடும்
பச்சிலையெனவும்பகருமைம்பெயரே ௮௦

தளமேதாழியுஞ்சாந்துமுப்பரிகையும்
பொருபடையுடன்பூவிதழுமைம்பேரே ௮௧

தனமேயாவின்கன்றும்வருத்தமு
முலையும்பொன்னுமுத்திரமுமைம்பெயரே ௮௨

தகையேயழகுமன்பும்பண்பும்
பெருமையுமிளைப்பும்பேசிடுமைம்பெயர் ௮௩

தட்டையேதினைத்தாளுமுண்டமுங்
கிளிகடிகோலுந்தீயுங்கழையுமாம் ௮௪

தலையேயாதியுமிடமுஞ்சிரமு
மேலுந்தலைமையும்விரிக்குமைம்பேரே ௮௫

தம்முதலைம்பேர்முற்றும்.

தம்முதலறுபெயர்

தடியேயுலக்கையுமுடும்புந்தசையும்
வில்லுந்தண்டுமின்னுமறுபெயர் ௮௬

தண்டமேதெண்டித்தலும்படையுந்
திரளும்யானைசென்றவழியு
மூன்றுகோலுங்குடைக்காலுமறுபெயர். ௮௭

தம்முதலறுபேர் முற்றும்.

தம்முதலொன்பதுபெயர்.

தண்டேவீணையுந்தடியும்படையுங்
குழாயும்வரப்புமிதுனராசியுஞ்
சிவிகையுந்தண்டமுமோந்தியுமொன்பான் ௮௮

தடமேமலையும்யானைத்தண்டமும்
பெருமையும்பொய்கையும்விளைவும்வளைவும்
குளக்கரையுகமும்வழியுமொன்பான்பெயர். ௮௯

தம்முதலொன்பதுபேர்முற்றும்.

தம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௮௯.

## தாமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

### தாமுதலொருபெயர்

தாண்டவமென்பதுகூத்தெனலாகும் ௧
தாடிதானேகீழ்வாயாகும் ௨
தாபரனென்பதுபிரமனாகும் ௩
தாபதரேசடைமுடியராகும் ௪
தாம்பிரமென்பதுசெம்பெனலாகும் ௫
தாரிதானேவழியெனப்படுமே ௬
தாலுவென்பதுநாக்கெனலாகும் ௭
தாலவட்டமேயானையின்செவியாம் ௮
தாதிமமென்பதுதாதுமாதுளையாம் ௯
தானவர்தானேயசுரராகும் ௧0
தாடிமமென்பதுதாதுமாதுளையாம் ௧௧
தாதகிதானேயாத்தியாகும் ௧௨

தாமுதலொருபேர்முற்றும்.

### தாமுதலிருபெயர்

தாமரையேபுலியம்புயமிருபெயர் ௧௩
தாயமென்பதுதங்குடித்தமரு
மூரிமையுமெனவேயோதுமிருபெயர் ௧௪
தாழைதானேநாளிகேரமுங்
கேதகையெனவுங்கிளத்துமிருபெயர் ௧௫



தாழியேகடாழியிருபெயர் ௧௬
தாளாண்மையேயுச்சாகமுமுயற்சியும் ௧௭
தாசியென்பதுபரணிநாளுடனே
யடிமையுமெனவேயறையுமிருபெயர் ௧௮
தாம்பேகயிறுதாமணியிருபெயர் ௧௯
தாடென்பதுவேதலைமையும்வலியும் ௨0
தாளியேபனையுந்தாளியுமிருபெயர் ௨௧

தாமுதலிருபேர்முற்றும்.

### தாமுதன்முப்பெயர்

தானையேபொருபடையுந்தூசு
மாயுதமெனவுமமையுமுப்பெயரே ௨௨
தாழ்தறானேயிறைஞ்சலுங்குறைதலுந்
தங்கலெனவுஞ்சாற்றுமுப்பெயரே ௨௩

தாமுதன்முப்பேர்முற்றும்.

### தாமுதனாற்பெயர்

தாலமேயுண்கலமும்பூமியு
நாவும்பனையுநாட்டுநாற்பெயரே ௨௪
தாரேமரக்குலைவிற்குதைமுட்கோ
லெல்லையெனவேயிசைக்குநாற்பெயரே ௨௫

தாமுதனாற்பேர்முற்றும்.

### தாமுதலைம்பெயர்

தாவேவலியும்வருத்தமும்பகையுங்
கேடுந்தாண்டுதலுடனைம்பெயரே ௨௬
தானமென்பதுகொடுத்தலுஞ்சுவர்க்கமு
மதஞ்சார்பிடமுநீராடலுமாம் ௨௭
தாணுவேமலையுந்தூணுஞ்சங்கரனுஞ்
முத்தியுநிலைபேறுமைம்பெயரே ௨௮

தாமுதலைம்பேர்முற்றும்.

தாமுதலறுபெயர்

தாவரமென்பதுமலையும்பூமியுங்
கோயிலுந்தேகமுநிற்பனவுடனே
மாமுமெனவேவைக்குமறுபெயர் ௨

தாரையே*நீரோட்டமுமழையும்
விழியுங்காளமுங்கூர்மையுடனு
முடிவுமெனவுமோதுமறுபெயர் [illegible]

தாமுதலறுபேர் முற்றும்.

தாமுதலெழுபெயர்

தாரமேயாழ்நரம்பினிலொன்று
மரும்பண்டமும்வெண்கலமுந்தலைவியும்
வெள்ளியுநாவும்வல்லியுமேழ்பெயர் [illegible]

தாரேகிண்கிணிக்கோவையுமொழுங்கு
மாவினணியும்பூவுமாலையுங்
கொடிப்படையுடனேகொடையுமேழ்பேர் [illegible]

தாதேயடிமையுந்†துகளுமெருமையு
மணமுதலைந்தும்பொன்முதலேழு
மிரதமாதியேழினுடனே
காவிக்கல்லுங்கருதுமேழ்பெயர் [illegible]

தாமுதலேழ்பேர் முற்றும்.

தாமுதற் பத்துப்பெயர்

தாமமென்பதுமணியின்கோவையும்
பூவுமாலையுமிபமுமொளியுங்
கயிறுமொழுங்குங்கொன்றையுமலையும்
பொருகளமெனவுமொருபதுபெயராம்

தாமுதற்பத்துப்பேர்முற்றும்.
தாமுதற்பலபெயர்ச்சூத்திர முற்றும்.
ஆகச்சூத்திரம்—௧௨௩.

---

* நேரோட்டம் என்பது பி - ம்.
† துகளும் பெருமையும் என்பது பி - ம்.



திம்முதற்பலபெயர்ச்சூத்திரம்

திம்முதலொருபெயர்

திசைமுகனென்பதுபிரமனாகும் ௧
திண்மையென்பதுவலியெனலாகும் ௨
திண்டிமந்தானேபடகமாகும் ௩
திதலையென்பதுசுணங்கெனலாகும் ௪
திமிலர்தானேநெய்தனிலமக்கள் ௫
திரையலென்பதுவெற்றிலையாகும் ௬
திமிங்கிலந்தானேயானையைவிழுங்குமீன் ௭
திரையனென்பதுவேதொண்டைமானும் ௮
திவற?ருனேயுலோகமாகும் ௯
திவளலென்பதுதுவளலாகும் ௧0
திவிளியேபசுங்காயெனப்படுமே ௧௧
திவாவென்பதுவேபகலெனப்படுமே ௧௨
திண்டிதானேயானையின்பெயராம் ௧௩
திருமலரென்பது தாமரையெனலாம் ௧௪
திரணபதியேவாழையெனப்படும் ௧௫
தினகரனென்பதுசூரியனாகும் ௧௬

திம்முதலொருபேர்முற்றும்.

திம்முதலிருபெயர்

திணியேபூமியுந்திணியுமிருபெயர் ௧௭
திண்ணமேபொய்மெய்யெனவிருபெயர் ௧௮
திமிரமேயிருள்நிரயமுமிருபெயர் ௧௯
திலமேயெள்ளுமஞ்சாடியிருபெயர் ௨0
திலகமேமஞ்சாடிமாமுந்
திலகமுமெனவேசெப்புமிருபெயர் ௨௧

திட்டியென்பது நுதற்பூணுங் குறியுந்
திட்டியுமெனவேசெப்புமிருபெயர் ௨௨
*திருக்குகமென்பது முற்றமும்புடவையும் ௨௩
திவாகரன்றனே †யந்தனுமிரவியும் ௨௪
திணையேசிறுமையுந்திணையுமிருபெயர் ௨௫
திங்களேமதிமாதமிருபெயர் ௨௬
திசையேசுணங்குந்திசையுமிருபெயர் ௨௭
திரிதலேகேடுலாவலிருபெயர் ௨௮

திம்முதலிருபேர்முற்றும்.

திம்முதன்முப்பெயர்

திட்டையென்பதுவேயுரலுமேடுந்
திண்ணையுமெனவேசெப்புமுப்பெயரே ௨௯

திதியென்பதுவேநிலைபேறும்பக்கமும்
வளர்த்தலுமெனவேமருவுமுப்பெயரே ௩0

திம்முதன்முப்பேர்முற்றும்.

திம்முதனாற்பெயர்

திரையேயலையும்பூமியுங்கடலுந்
திரையுமெனவேசெப்புநாற்பெயரே ௩௧

தித்தியென்பதுகுரங்குமின்பமுந்
தித்திப்புடனேபையுநாற்பெயரே ௩௨

திம்முதனாற்பேர்முற்றும்.

திம்முதலறுபெயர்

திகிரியேமலையுருளையாழி
வட்டமூங்கில்தேரெனவாறே ௩௩

திணையேகுலமுநிலமுமொழுக்கமும்
புறத்திணையேழுமகத்திணையேழு
மிருதிணையெனவுமெய்துமறுபெயர் ௩௪

திம்முதலறுபேர்முற்றும்.

திம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௧௫௭.

* திச்சுகமென்பது பி - ம்.

† அந்தகனுமென்பது பி - ம்.



தீமுதற்பலபெயர்ச் சூத்திரம்.

தீமுதலொருபெயர்

தீம்பரேகீழ்மக்களாகும் ௧
தீக்கரையென்பதுமுருக்கெனலாகும் ௨
தீரந்தானேபுறங்கரையெனுமே ௩
தீவென்பதுவேயிடைக்குறையாகும் ௪

தீமுதலொருபேர்முற்றும்.

தீமுதலிருபெயர்

தீர்த்தமேவிழாநீரெனவிருபெயர் ௫
தீபரேபானியருநீரும் ௬
தீர்த்தனேயருகனுமாசானும் ௭
தீபமேசுடர்பலதீவிருபெயர் ௮

தீமுதலிருபேர் முற்றும்.

தீமுதன்முப்பெயர்

தீயென்பதுவேநிரயமுந்தீங்குந்
தீயுமெனவேசெப்புமுப்பெயரே ௯

தீமுதன்முப்பேர்முற்றும்.

தீமுதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்-௧௬௬.

தும்முதற் பலபெயர்ச்சூத்திரம்

தும்முதலொருபெயர்

துருமோற்பலமேகோங்கெனலாகும் ௧
துகிரென்பதுவேபவளமாகும் ௨
துங்கந்தானே*யுயரமெனப்படும் ௩
துடியடிதானேயானைக்கன்றும் ௪
துணரென்பதுவேகொத்துப்பூவாம் ௫

* உயர்வெனப்படும் என்பது பி - ம்.

துகிரிகைதானேயெழுதுங்கோலாம்

துதைதலென்பதுநிபிடமாகும்

துந்துமியென்பதுபேரிகையாகும்

துப்புரவென்பதுவேண்டற்பாடாம்

துப்பகந்தானேநெய்யெனலாகும்

துரகமென்பதுகுதிரையின்பெயராம்

துணிதருனேதெளிதலாகும்

துருவையென்பதுவேயாடெனலாகும்

துவருதல்தானேயாடுதலாகும்

துவசரென்பதுவேயீழுவராகும்

துவரிதழ்தானேயானையாகும்

துவசமென்பதுதுகிற்கொடியாகும்

துவலையாவதுமழையெனலாகும்

துவ்வாமையென்பதுவேண்டாமையாகும்

துன்னாரென்பதுசேராதாரெனும்

துன்னுவென்பதுமுதுகெனலாகும்

துருக்கரேயொருசாதியாகும்

தும்முதலொருபேர்முற்றும்.

## தும்முதலிருபெயர்

துடரேசொற்றுடர்விலங்கெனவிருபெயர்

துடர்வைதானேயுழவுமஞ்ஞையும்

துச்சிலேயொதுக்கிடமுஞ்சூட்டுமாம்

துணங்கறலேயிருள்விழாவிருபெயரே

துணியறைதானேதூக்கமுஞ்செதுவும்

துணைவனேமந்திரியுந்தோழனும்

துண்டிலேவேய்சூழலிருபெயர்

தும்பையேபோர்வெற்றிலையிருபெயர்



தும்பியேயிபம்வண்டெனவிருபெயர்

துரங்கமேமரக்கலமுங்குதிரையும்

துருத்தியென்பதுவேயாற்றிடைக்குறையுந்

தோலுமெனவேசொல்லுமிருபெயர்

துவ்வறேனேயுண்டலுந்தின்றலும்

துவ்வுதலேயாற்பதமுமுண்டலும்

துழாயேதுளவம்புல்லெனவிருபெயர்

துணையேயளவுமொப்புமிருபெயர்

துணியேசோதிநாள்துண்டமிருபெயர்

தும்பேதோடுஞ்சிம்புமிருபெயர்

துளும்பலலைதலுந்திமிறலுமிருபெயர்

தும்முதலிருபேர்முற்றும்.

## தும்முதன்முப்பெயர்

துள்ளலேகலிப்பாவினோசையுங்

கூத்துந்துள்ளலுங்கூறுமுப்பெயரே

துடிப்பென்பதுவேகாமுந்துடிப்புந்

தடமுளையெனவுஞ்சாற்றுமுப்பெயரே

துணங்கையேயொருநாளும்விழவும்

பேய்க்கூத்தெனவும்பேசுமுப்பெயரே

துதியேகிலுந்துதியுநுதியும்

துலையென்பதுவேயேற்றமுந்தோட்டமுந்

துலையுமெனவேசொல்லுமுப்பெயரே

துருவையேயருகுவனமுமிறைச்சியும்

பிண்ணாக்கெனவும்பேசுமுப்பெயரே

துழாயென்பதுவேதுழாயும்பூதியுந்

தோமரமெனவுமுப்பெயர்சொல்லும்

துளியேயடைத்தலுமழையின்றுளியும்

பெண்ணாமையுமெனமுப்பேர்பேசும்

துன்னருனேசெறிதலுஞ்சேர்தலுங்
குறுகுதலெனவுங்கூறுமுப்பெயரே சகூ

துணங்கென்பதுவேயறலும்விழவும்
நன்றுளெனவுநாட்டுமுப்பெயரே ருo

தும்முதன்முப்பேர் முற்றும்.

தும்முதனாற்பெயர்

துஞ்சலேநிலைபேறுந்துயிலுஞ்
சாவுஞ்சோம்புஞ்சாற்றுநாற்பெயரே ருக

துவக்கேயுடம்புந்தோலும்பிணக்கும்
பற்றுதலெனவும்பகருநாற்பெயரே ருஉ

துனியேதுன்பமும்புலவிநீட்டமுங்
கோபமுநோயுங்கூறுநாற்பெயர் ருங

தும்முதனாற்பேர்முற்றும்.

தும்முதலைம்பெயர்

துண்டமென்பதுமுகமுஞ்சாரையுந்
துண்டமுமூக்குங்கண்டித்தலுமைம்பெயர் ருச

துரோணமென்பது தும்பையும்வில்லுங்
காக்கையும்பதக்குஞ்சிம்புளுமைம்பெயர் ருரு

துருக்கமேகுங்குமமுமாறனுங்
கலக்கமுங்காடுங்கத்தூரியுமைம்பெயர் ருசு

தும்முதலைம்பேர்முற்றும்.

தும்முதலறுபெயர்

துடியேயோர்காலமுமோர்பறையுஞ்
சத்தமாதராடலுங்கூதாளியு
முதடுமேலமுமோதுமறுபெயர் ருஎ

துத்தமேகண்மருந்தும்வயிறும்
பாலுநாயும்யாழிசையுடனே
யிசையுமெனவேயறுபேரிசைக்கும் ருஅ

துவரேயிகலுமாக்கமும்பவளமுஞ்
சிவப்புந்துவர்ப்புங்காட்டமுமறுபெயர் ருகூ

தும்முதலறுபேர்முற்றும்,



தும்முதலெழுபெயர்

துத்தியென்பதுதுணங்கையாடலு
நாளும்விழவுஞ்சுணங்குநெய்யு
மொருசெடியும்படப்பொறியுமெழுபெயர் சுo

தும்முதலெழுபேர்முற்றும்.

தும்முதற்பதினொருபெயர்

துப்பேசுத்தமுமரக்குமூற்றமுஞ்
சோறும்வண்ணமுந்திரும்பகையும்
வலியுநெய்யுமாயுதத்துடனு
மனுபவங்களுமெனவாம்பதினொருபெயர்

தும்முதற்பதினொருபேர்முற்றும்.

தும்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—உஉஎ.

தூமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

தூமுதலொருபெயர்

தூட்டியென்பதுபுடவையாகும்

தூண்டிதானேசொல்லுதலாகும்

தூமுதலொருபேர்முற்றும்.

தூமுதலிருபெயர்

தூணியென்பதுவேயப்புபெய்கூடுந்
தூணியுமெனவேசொல்லுமிருபெயர்

தூணேயாற்பதந்தூணெனவிருபெயர்

தூதணமென்பது தூக்கணங்குருவியும்
புறவுமெனவேபோற்றுமிருபெயர்

தூவிதானேயன்னத்திறகுந்
தூவியுமெனவேசொல்லுமிருபெயர்

தூவலென்பது தூவலுந்துவலையும்

தூய்மைதானேசுத்தமுமெய்ம்மையும்

தூணமேபகைதூணெனவிருபெயர்

தூமுதலிருபேர்முற்றும்.

தூமுதன்முப்பெயர்

தூளியென்பது குதிரையும்புழுதியு
மார்ப்புமெனவேயாகுமுப்பெயரே

தூசேபகட்டினிற்புரசையுந்தூசும்
படைவகுப்பெனவும்பகருமுப்பெயரே

தூமுதன்முப்பேர்முற்றும்.

தூமுதனாற்பெயர்

தூம்பேவேயுமதகினுட்டுளையு
மரக்காலுடனேபூழையுநாற்பெயர்

தூமுதனாற்பேர்முற்றும்.

தூமுதலறுபெயர்

தூவேதூய்மையும்பற்றுக்கோடும்
பகையும்வெளுப்பும்புள்ளினிறகுந்
தசையுமெனவேசாற்றுமறுபெயர்

தூங்கலென்பதுயானையுங்கூத்து
மொரோசையுமுடனேதுயிலுந்தாழ்வுஞ்
சோம்புமெனவேசொல்லுமறுபெயர்

தூமுதலறுபேர்முற்றும்.

தூமுதலெண்பெயர்

தூரியமேநல்லாடையுமீயமு
மெழுதிடுங்கோலுமுரசும்விடமு
மெருதும்வாச்சியமுமெறிபடையுமெண்பேர்

தூமுதலெண்பேர்முற்றும்.



தூமுதலொன்பதுபெயர்

தூக்கென்பதுவேதூக்கணங்குருவியு
நிறுத்தலுமாசாரியனுங்கனமுந்
தொங்கலுங்கவியுங்கூத்துந்துலாமு
மாராய்தலுமெனவாகுமொன்பான்பெயர் கசா

தூமுதலொன்பதுபேர்முற்றும்.

தூமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—உசா.

தெம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

தெம்முதலொருபெயர்

தெய்வவுத்தியேசீதேவிப்பெயர்

தெவ்வியலென்பதுபூவின்மாலையாம்

தெரிமாவென்பதுசிங்கமெனப்படும்

தெருமாருனேசுழற்சியாகும்

தெருட்டலேவற்புறுத்தலாகும்

தெருளானேயறிவில்லான்பெயரே

தெவுளல்தானேநிறைதலாகும்

தெவ்வரென்பதுசத்துருக்களாகும்

தெய்வைதானேகுழம்பெனலாகும்

தெரிசொல்லென்பதுசத்தியமாகும்

தெள்ளிதானேயானையாகும்

தெரிசிழியென்பதுகுதிரையாகும்

தெறுக்காலுனேதேளெனலாகும்

தென்புலத்தாரேபிதிர்க்களாகும்

தெம்முதலொருபேர்முற்றும்.

தெம்முதலிருபெயர்

தெட்டியேயிபஞ்செட்டியிருபெயர்

தெவ்வே*கொளலகத்தீட்டலிருபெயர்

தெம்முதலிருபேர்முற்றும்.

தெம்முதன்முப்பெயர்

தெண்டிகைதானே †அளமுமாரபாவமும்
தெல்லமுமென்றேசெப்புமுப்பெயரே

தெம்முதன்முப்பேர்முற்றும்.

தெம்முதனாற்பெயர்

தென்னென்பதுவேயிசையும்வனப்புங்
கற்புந்தெற்குங்கருதிடுநாற்பெயர்
தெவிட்டலேயொலிதரலுங்கான்றலு
மடைத்திடலுடனேநிறைதலுநாற்பெயர்

தெம்முதனாற்பேர்முற்றும்.

தெம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௨௬௨.

தேமுதற்பலபெயர்ச்சூத்திரம்,

தேமுதலொருபெயர்

தேயுவென்பது தீயெனலாகும்
தேம்பிதானேயானையெனலாம்
தேய்வைதானேசெறிகுழம்பாகும்
தேசென்பதுவேயொளியெனலாகும்
தேங்கல்தானேநிலையாகும்மே
தேமல்தானேசுணங்கெனலாகும்

தேமுதலொருபேர்முற்றும்.

---

* கொளலகத்தீடிருபெயர்.
கொளலகத்தீட்டிருபெயர். } பி—ம்,

† உள்ளமுமாற்பாயமும்
,.....ளமுமாற்மபாவமும் } பி—ம்,



தேமுதலிருபெயர்

?தடலேபொன்றேடலிருபெயர் ௭

?தசியேநாய்தேசியிருபெயர் ௮

?தனேவண்டுகள்ளொடிருபெயர் ௯

?தசிகனென்பதுதேசாந்தரியுங்
குருவுமெனவேகூறுமிருபெயர் க0

தேமுதலிருபேர்முற்றும்.

தேமுதன்முப்பெயர்

தேனுவென்பதெருமையும்பசுவுங்
குதிரையுமெனவேகூறுமுப்பெயரே கக

தேக்கென்பதுவேவெறுப்புமோர்மரமுங்
கமுகுமெனவேகருதுமுப்பெயரே க௨

தேயமென்பதுவேயுடலும்விண்ணு
நாடுமெனவேநாட்டுமுப்பெயரே க௩

தேமுதன்முப்பேர்முற்றும்.

தேமுதனாற்பெயர்

தேமேதேனுநாற்றமுந்தேசமுந்
தித்திப்பெனவுஞ்செப்புநாற்பெயரே க௪

தேமுதனாற்பேர்முற்றும்.

தேமுதலைம்பெயர்

தேசிகந்தானேயழகுங்காந்தியும்
பொன்னுமோர்கூத்துந்திசைச்சொல்லுமைம்பெயர் க௫

தேமுதலைம்பேர்முற்றும்.

தேமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௨௭௭.

## தைம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

### தைம்முதலொருபெயர்

தைப்பையென்பது சட்டையாகும் ௧
தைவரலேபடிவருடலாகும் ௨
தையமென்பது நூலெனப்படுமே ௩
தைத்தியர்தானேயசுரராகும் ௪

தைம்முதலொருபேர்முற்றும்

### தைம்முதலிருபெயர்

தையலேநூல்பெண்ணெனவிருபெயர் ௫
தைத்தல்துன்னமுந்தைத்தலுமிருபெயர் ௬

தைம்முதலிருபேர்முற்றும்

### தைம்முதலைம்பெயர்

தையேயலங்கலுங்குதித்தலும்புலியுங்
கள்ளுமோர்மாதமுங்காட்டுமைம்பெயரே ௭

தைம்முதலைம்பேர்முற்றும்.

தைம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௨௮௪.

## தொம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

### தொம்முதலொருபெயர்

*தொடவலென்பது மாலையாகும் ௧
தொடரலென்பது கடலெனப்படுமே ௨
தொடரர்தானேமேவினர்பெயரே ௩
தொடுதோலென்பது செருப்பெனலாகும் ௪
தொடுவாயாவது புறங்கூற்றாகும் ௫
தொட்பமென்பது சாமர்த்தியமாம் ௬
தொள்ளிதானேசேறெனலாகும் ௭

---

* தொடலென்பதுவே என்பது பி • ம்,



தொறுவரென்பதுவேயிடையராகும் ௮
தொன்றுதானேபழமையாகும் ௯

தொம்முதலொருபேர்முற்றும்.

### தொம்முதலிருபெயர்

தொடுப்பேயுழவுவளையிருபெயரே ௧௦
தொடையலேவாசிகையுமாலையும் ௧௧
தொறுவென்பதுவேயாவினிற்குழாமு
மடிமையுமெனவேயாமிருபெயரே ௧௨
தொழுவேயுழலையிரேவதியிருபெயர் ௧௩
தொட்டலேகைதீண்டலுமுண்டலும் ௧௪
தொத்தேதொண்டுபூங்கொத்திருபெயர் ௧௫

தொம்முதலிருபேர்முற்றும்.

### தொம்முதன்முப்பெயர்

தொடியென்பது கங்கணமும்வளையு
மொருபலமெனவுமுரைக்குமுப்பெயரே ௧௬
தொட்டியென்பது வாய்தலுந்தொட்டியுங்
கள்ளுமெனவேகருதுமுப்பெயரே ௧௭

தொம்முதன்முப்பேர்முற்றும்.

### தொம்முதனாற்பெயர்

தொழிலேதொல்லையுமாரவாரமுங்
களவும்பெருமையுங்காட்டுநாற்பெயரே ௧௮
தொண்டையேயாதொண்டையுங்கோவையுங்
கழுத்தும்யானைத்துதிக்கையுநாற்பெயர் ௧௯
தொடுத்தலென்பது வளைத்தலும்பிணித்தலும்
பற்றலுஞ்சொற்கூட்டலுநாற்பெயரே ௨௦

தொம்முதனாற்பேர்முற்றும்.

தொம்முதலைம்பெயர்

தொங்கலேமயிறாக்கந்தூக்கு
மாலைபீலிக்குஞ்சமென்றைம்பெயர்
தொண்டேயடிமையுமொன்பதும்பழமையு
முருவுசுருக்கும்வழிபாடுமைம்பெயர்
தொடையேதொடுத்தலுந்தொங்கலுங்கணையும்
பாவுறுப்புஞ்சொற்றொடருமைம்பேரே

தொம்முதலைம்பேர்முற்றும்.

தொம்முதலெண்பெயர்

தொய்யிலேயொருவுதலுந்தொய்யலு
மழுகுங்குழையுங்கிளர்ச்சியுந்துயரமுஞ்
சேறுமுடனேயுழவுமெண்பெயரே

தொம்முதலெண்பேர்முற்றும்.

தொம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௯௦அ.

தோமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

தோமுதலொருபெயர்

தோடகமென்பது தாமரையாகும்
தோக்கைதானேபுடவையாகும்
தோட்டிமைதானேகட்டழகாகும்
தோடமாவது குற்றமாகும்
தோணென்பதுவேவில்லெனலாகும்
தோயந்தானேநீரெனப்படுமே
தோரியென்பதுசோறெனலாகும்
தோமமென்பது குவாலாகும்மே
தோரந்தானேகுற்றமாகும்
தோளியென்பதுசோறெனலாகும்
தோன்றிகர்தானேவாணிகராகும்

தோமுதலொருபேர்முற்றும்.

---

# 1920ஹு ஆகஸ்டுமீ 24உ (ரௌத்திரிஹு ஆவணிமீ 9உ) மாலை 5 மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரிய நிர்வாகசபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் R. இராஜராஜேசுவர சேதுபதி மன்னரவர்கள்—அக்கிராசனாதிபதி
2. மகா-ா-ா-ஸ்ரீ, S. RM. M. C. T. பெத்தாச்சிசெட்டியாரவர்கள் M. R. A. S., ஆண்டிபட்டிஜமீந்தார் உப அக்கிராசனாதிபதி.
3. ,, மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள்,
4. ,, K. ராமையங்காரவர்கள் B.A., B.L.,
5. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A., B.L.,
6. ,, T. N. சுந்தரராஜையங்காரவர்கள் B.A., B.L.,
7. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L.,

இவர்கள் வந்திருந்தார்கள்.

## தீர்மானங்கள்.

1. 1920ஹு ஜூன், ஜூலை மாதங்களின் வரவுசெலவுகணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

2. அவசரரிப்பேர்சம்பந்தமான செலவு விவரக்கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

3. சங்கத்தின் கட்டடத்தை முன்னையஸ்திதிக்குக் கொண்டுவருதற்காக அடியிற்கண்ட கனவான்கள் அன்புடன் பொருளுதவிசெய்துள்ளார்கள்.

1. ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பண்டார சன்னிதிகள் ஆதீனம், மதுரை. ரொக்கம் ரூபாய் 100ம், ரூபாய் 100 பெறுமான புத்தகங்களும்.

2. மகா-ள-ள-ஸ்ரீ ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்கள், பலவான்குடி ரூ 225

3. ,, ராம. கும. பெரி. இலக்ஷ்மணன்செட்டியாரவர்கள், பலவான்குடி ரூ 150

4. ,, ராம. கும. சு. குமரப்பசெட்டியாரவர்கள், பலவான்குடி ரூ 250

5. ,, வெ. சு. முத்து வள்ளியப்ப செட்டியாரவர்கள் பலவான்குடி ரூ 150

6. ,, கு. வெ. சாமிநாதன்செட்டியாரவர்கள், பலவான்குடி ரூ 150

7. ,, ம்ம. வெ. வெங்கடாசலம்செட்டியாரவர்கள், பலவான்குடி ரூ 125

8. ,, வீ. அ. அண்ணாமலைசெட்டியாரவர்கள், வீ. சித. நா. சிதம்பரம்செட்டியாரவர்கள், காரைக்குடி ரூ 501

9. ,, சு. ப. சு. நாராயணன்செட்டியாரவர்கள், காரைக்குடி ரூ 125

10. ,, ஆத. அ. சிவ. சிவராமன்செட்டியாரவர்கள், காரைக்குடி ரூ 125

11. ,, ராம. சா. ராம. ராமஸாமி செட்டியாரவர்கள் காரைக்குடி ரூ 125

12. ,, பெரி. வீர. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் காரைக்குடி ரூ 150

மொத்தம் ரூ 2176ம் ரூ 100 பெறுமான புத்தகங்களும்.

இவர்கள் தகுந்த சமயத்தில் சங்கத்திற்குப் பொருளுதவிசெய்ததற்காக இவர்கட்குச் சங்கத்தார் நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றார்கள்.

4. மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்கள் ராஜிநாமாவை ரத்து (withdraw) செய்துகொண்டதாக எழுதிய 13—8—20உயுள்ள கடிததை ரிக்கார்டு செய்யலாயிற்று.

பெத்தாச்சி,
உப-அக்கிராசனாதிபதி.

5. சங்கம் பவர்ப்பிரஸ் சீர்திருத்த விஷயமாக எழுதிய ஜாயிண்டு செக்ரிடெரியின் ரிப்போர்ட்டு ரிக்கார்டு செய்யலாயிற்று.



6. சங்கக்கட்டட ரிப்பேர்சம்பந்தமாக நேரிடக்கூடிய செலவிற்கு எஸ்டிமேட்டும், பிளானும் தயாராகாமையால் ரிப்பேர்விஷயமான ஆலோசனையைத் தள்ளிவைக்கலாயிற்று.

7. சுன்னாகம் ஸ்ரீ ராமநாத வித்யாலய மேல்வகுப்புப் பெண்மாணவர்கட்குச் சென்றவருடம்போல் இவ்வருடமும் சங்கத்தாரால் தமிழ்ப்பரீக்ஷை நடத்தப்பெறவேண்டுமென்று மேற்படி கலாசாலை ஸ்தாபகர் மகா-ள-ள-ஸ்ரீ Hon'ble P. இராமநாதன் அவர்கள் கேட்டுக்கொண்டபடி பரீக்ஷை நடத்தத் தீர்மானிக்கலாயிற்று.

8. சங்கத்தின்வருஷோத்ஸவம், மதுரையில் நிகழும் 1920ஆம் வருடம் செப்டம்பர்மீ 4ம் தேதியிலும் அதைத்தொடர்ந்ததினங்களிலும் நடத்தவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

9. மதுரையிலிருக்கும் சிறுபாலை ஜமீந்தார் மகா-ள-ள-ஸ்ரீ ப. சி. முத்துச்செட்டியாரவர்களைச் சங்கத்தின் அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

10. மகா-ள-ள-ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள் சங்கத்துவித்வான்களுடன் ஆலோசித்துத் தயாரித்த, 1922ம் (துன்மதி)ஆம் வருடம் முதல் நடைபெறும் தனித்தமிழ்ப்பரீக்ஷைக்குரிய பாடபுத்தகங்கள் அங்கீகரிக்கலாயின.

11. சங்கக்கலாசாலை மாணவர்கட்கு மாதமொன்றுக்கு ரூ 8 வீதம் அளிக்கப்பெற்றுவரும் போஷணைத்தொகையை ரூ 10 ஆக உயர்த்தவேண்டுமென்று மகா-ள-ள-ஸ்ரீ V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் எழுதியபடி சாங்க்ஷன் செய்யலாயிற்று.

12. வேதத்தின்மொழிபெயர்ப்பைச் சங்கத்தில் அச்சிட்டுவெளிப்படுத்த வேணுமென்று சிவத்தியாகாநந்த மஹரிஷி கேட்டுக்கொண்டபடி இணங்க இயலாதிருப்பதைப்பற்றி நிர்வாகசபையார் விசனிக்கிறார்கள்.

B. இராஜராஜேசுவர சேதுபதி.
அக்கிராசனாதிபதி.
24—8—1920.

(ஆங்கிலத்துக்குச் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு)

# 1920ஹு செப்டம்பர்மீ 5௳ (ரௌத்திரிஹு ஆவணிமீ 21௳) ஞாயிற்றுக்கிழமை மாலை மதுரைச் சேதுபதி ஹைஸ்கூலில் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்க மகாசபையோரால் ஆலோசித்துத் தீர்மானிக்கப்பெற்ற விஷய விவரக் குறிப்பு.

---

அடியிற்கண்ட அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள்.

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேசுவர சேதுபதி மன்னரவர்கள்—சங்கத்தின் சாசுவத அக்கிராஸனாதிபதி.
2. மகா-ா-ா-ஸ்ரீ B. ராஜாராமபாண்டியன் அவர்கள்.
3. ,, N. A. V. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B.A. B.L. வருஷோத்ஸவ அக்கிராசனாதிபதி.
4. ,, மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள்.
5. ,, ரா. இராகவையங்காரவர்கள், சேது சமஸ்தான வித்துவான்.
6. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A. B.L.
7. ,, S. பால்வண்ணமுதலியாரவர்கள்.
8. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A. B.L.
9. ,, A. R. கிருஷ்ணமாசாரியரவர்கள் M.A.
10. ,, T. இராமாநுஜையங்காரவர்கள்.
11. ,, V. முத்துசாமிஐயரவர்கள் M.A. L.T.
12. ,, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்.
13. ,, திரு. நாராயணையங்காரவர்கள்.
14. ,, R. S. நாராயணசுவாமி ஐயரவர்கள் B.A. B.L.
15. ,, R. கணபதி ஐயரவர்கள் B.A. B.L.
16. ,, N. R. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் B.A. B.L.
17. ,, ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்.
18. ,, அரங்கசுவாமி சாஸ்திரியாரவர்கள்.
19. ,, T. சுதர்சனாசாரியரவர்கள்.
20. ,, M. N. சேஷையர் அவர்கள்.
21. ,, P. சிதம்பரப் புன்னைவனநாதமுதலியாரவர்கள்.
22. ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.
23. ,, N. R. சுப்பிரமணிய சர்மா அவர்கள்.

## தீர்மானங்கள்.

1. சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதி சாசுவத உப அக்கிராசனாதிபதி இவ்விருவருடன் இதுவரை இருந்து வந்த நிர்வாக சபை அங்கத்தினர் பதின்மரில் மகா-ா-ா ஸ்ரீ கான்பகதூர் H. அப்துல் சுபான் சாஹிப் அவர்கட்



குப்பதிலாக மகா-ா-ா-ஸ்ரீ மாணிக்கவாசகம்பிள்ளையவர்களும், காலஞ்சென்ற ராவ் பகதூர் சுந்தரசாஸ்திரிகள் ஸ்தானத்தில் மகா-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்களும் நியமிக்கப்படவேண்டுமென்றும், இப்பொழுதுள்ள காரியதரிசிகளிருவரும் பிறரும் நிர்வாக சபை அங்கத்தினராக மறுபடியும் நியமிக்கப்படவேண்டுமென்றும் அக்கிராசனரவர்கள் பிரேரேபிக்க, மகா-ா-ா-ஸ்ரீ சேஷையரவர்கள் ஆமோதிக்க, பிரேரேபணை மகா சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

2. இதுகாறும், அன்புடன் சங்கக்காரியங்களைக்கவனித்து நிர்வாகம் செய்துவந்து, காலவரையறையில் விலகிக்கொள்கிற நிர்வாகசபையாருக்கு மதுரைத்தமிழ்ச்சங்க மகா சபையார் நன்றி பாராட்டுகிறார்கள் என்று அக்கிராசனரவர்கள் பிரேரேபிக்க, மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாசையங்காரவர்கள் ஆமோதிக்க, பிரேரேபணை மகாசபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

3. வித்தியாவிஷய ஆலோசனைச்சபை அங்கத்தினர் எண்மருள் காலஞ்சென்ற மகா-ா-ா-ஸ்ரீ T. A. கோபிநாதராவ் அவர்கள் ஸ்தானத்தில் மகா-ா-ா-ஸ்ரீ Hon'ble K. G. சேஷையரவர்கள் நியமிக்கப்படவேண்டுமென்றும், இதுவரை இருந்துவந்த ஏனைய எழுவரும் வித்தியா விஷய ஆலோசனைச்சபை அங்கத்தினராக மறுபடியும் நியமிக்கப்படவேண்டுமென்றும் அக்கிராசனரவர்கள் பிரேரேபிக்க மகா-ா-ா-ஸ்ரீ T. இராமாநுஜையங்காரவர்கள் ஆமோதிக்க, பிரேரேபணை மகா சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

4. மகா-ா-ா-ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்களால் தயாரிக்கப்பட்டு நிர்வாகசபையோரால் அங்கீகரிக்கப்பெற்ற தனித் தமிழ்ப்பரீக்ஷைப்பாடபுத்தகங்கள் மகாசபையோரால் அங்கீகரிக்கப்படவேண்டுமென்றும், இவற்றுள் இன்னும் ஏதேனும் மாறுதல் செய்யவேண்டிவரின், வித்தியா விஷய ஆலோசனைச்சபையாரின் அபிப்பிராயத்தைத்தழுவிச் சங்க நிர்வாகசபையோரால் மாறுதல் செய்யப்படவேண்டுமென்றும் மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பிரேரேபிக்க, மகா-ா-ா-ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் ஆமோதிக்க, பிரேரேபணை மகாசபையோரால் அங்கீகரிக்கப்பட்டது

5. மதுரை மகா-ா-ா-ஸ்ரீ E. M. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களைச் சங்கத்தின் அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

6. சங்கத்தின் காரியதரிசிகளிருவரும் கௌரவகாரியதரிசிகளாக இருக்கவேண்டுமென்றும், இப்பொழுதுள்ள துணைக்காரியதரிசி, இப்பொழுது ஏற்பட்டுள்ள சம்பளத்தில் மானேஜராக இருந்துவரவேண்டுமென்றும் அக்கிராசனரவர்கள் பிரேரேபிக்க, மகா-ா-ா-ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய வே சாமிநாதையரவர்கள் ஆமோதிக்க, பிரேரேபணை மகா சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

சங்க நிர்வாகசபையாரின் அபிப்பிராயத்தைத்தழுவி, மற்றொரு கௌரவகாரியதரிசியைத் தெரிந்தெடுக்க, கனம் அக்கிராசனாதிபதியவர்கட்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

N. A. V. சோமசுந்தரம்பிள்ளை,

5—9—20. வருஷோத்ஸவ அக்கிராசனாதிபதி.

(ஆங்கிலத்துக்குச்சரியான தமிழ் மொழிபெயர்ப்பு)

உ

# மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை.

## பாலர்வகுப்புப் பாடவிவரக் குறிப்பு.

### வருஷம் மூன்று

### பாலர் கீழ்வகுப்பு—வருஷம் ஒன்றரை.

1. சகலகலாவல்லிமாலை.
2. சரசுவதியந்தாதி.
3. கருவைவெண்பாவந்தாதி.
4. மணவாளநாராயணசதகம்.
5. இரத்தினசபாபதிமாலை.
6. நாவலர் இரண்டாம் பாலபாடம்.
7. ஷை நான்காம் பாலபாடம்.
8. சூடாமணிநிகண்டு 11, 12 ஆம் தொகுதிகள்.
9. நாவலர் இலக்கணவினாவிடை.
10. கணக்கு, கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்.
11. எண்சுவடி.

---

### பாலர் மேல்வகுப்பு வருஷம் ஒன்றரை.

1. நான்மணிக்கடிகை.
2. ஆசாரக்கோவை.
3. மறைசையந்தாதி.
4. திருவேங்கடத்தந்தாதி.
5. திருவருணைக்கலம்பகம்.
6. அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்.
7. வருஷாதிநூலில் முக்கியமானவை.
8. நன்னூல்மூலம்.
9. காரிகைமூலம்.
10. நாவலர் இலக்கணச்சுருக்கம்.

---

உ

## துன்மதி (1922)ளு பங்குனிமீ முதல் நடைபெறும் மதுரைத்தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப்பரீக்ஷைப் பாடபுத்தக விவரக்குறிப்பு.

### பிரவேசவகுப்பு வருஷம் இரண்டு.

### 1. இலக்கியம் I.

1. தண்டலையார் சதகம்.
2. மதுரைத்திருப்பணிமாலை.
3. திருவாரூருலா.
4. திருவாரூர் நான்மணிமாலை.
5. கலைசைச்சிலேடைவெண்பா.
6. திருவரங்கத்தந்தாதி.
7. மதுரைக்கலம்பகம்.
8. பழமொழிமுதல் நூறுசெய்யுள்.
9. நாலடியார்.

---

### 2. இலக்கியம் II.

1. மணிமேகலைமுதற் பதினைந்துகாதைகள்.
2. வில்லிபாரதம் ஆதிபருவம், சபாபருவம்.
3. பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடல் முதல் ஐந்நூறு செய்யுள்.
4. நைடதம். (ஆரம்பமுதல் மணம்புரி படலம் முடிய)
5. காஞ்சிப்புராணம் முதற்காண்டம் முதல் ஐந்நூறு செய்யுள்.

---

### 3. இலக்கணம் I.

1. நாவலர் நன்னூற்காண்டிகையுரை.

---

### 4. இலக்கணம் II.

1. விசாகப்பெருமாளையர் யாப்பணியிலக்கணம் (சங்கப்பதிப்பு)
2. யாப்பருங்கலக்காரிகை பழையவுரை.

---

### 5. வசனம்.

1. பெரியபுராணவசனம் (நாவலர் பதிப்பு)
2. சேதுநாடுந்தமிழும். (சேதுசமஸ்தான வித்வான் ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்கள் எழுதியது)

---

### 6. செய்யுளியற்றல்.

வெண்பா-ஆசிரியப்பா.

### 7. வியாசம்.

விஷயம் படித்த பாடத்துள் இருத்தல் வேண்டும்.

---

## பாலபண்டித வகுப்பு—வருஷம் இரண்டு.

### 1. இலக்கியம் I.

1. தஞ்சைவாணன் கோவையுரை.
2. கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியாகாண்டம்.
3. கந்தபுராணம் முதல் எழுபடலம்.

---

### 2. இலக்கியம் II.

1. மணிமேகலை பதினாறும் காதைமுதல் முழுதும்.
2. பத்துப்பாட்டில் முதல் நான்கு ஆற்றுப்படைகள் நச்சினார்க்கினியருரையுடன்.
3. திருக்குறள்: பொருட்பால்; பரிமேலழகருரையுடன்.

---

### 3. இலக்கணம் I.

1. நன்னூல் விருத்தியுரை
2. நன்னூல் மயிலைநாதருரை.
3. தொல்காப்பியம்; எழுத்ததிகாரம்: நச்சினார்க்கினியருரையுடன்.
4. இலக்கணக்கொத்து.

---

### 4. இலக்கணம் II.

1 நம்பியகப்பொருளுரை (சங்கப்பதிப்பு)
2. புறப்பொருள் வெண்பாமாலையுரை.
3. தண்டியலங்காரம் (பழையவுரை)

---

### 5 வசனமும் தர்க்கமும்.

1. தருக்க சங்கிரகம்.
2. திருவிளையாடற்புராண வசனம். (நாவலர் பதிப்பு)
3. பட்டர்வைபவம் (வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் பதிப்பு)

---

### 6. செய்யுளியற்றல்.

நான்கு பாக்களும்.

---

### 7. வியாசம்.

---



## பண்டிதவகுப்பு வருஷம் இரண்டு.

### 1. இலக்கியம் I.

1. சீவகசிந்தாமணிமுதல் ஆறுஇலம்பகம் நச்சினார்க்கினியருரையுடன்
2. சிலப்பதிகாரம்: மதுரைக்காண்டம் (உரைகளுடன்)
3. கம்பராமாயணம்: சுந்தரகாண்டம்.
4. பெரியபுராணம் முதல் ஐந்நூறு செய்யுள்.
5. திருக்கோவையாருரை.

---

### 2. இலக்கியம் II.

1. புறநானூறு முதல்நூறு செய்யுள்.
2. பரிபாடல் முதற்பத்துப்பாட்டு.
3. கலித்தொகை: பாலைக்கலி, மருதக்கலி (நச்சினார்க்கினியருரையுடன்)
4. திருக்குறள் முழுதும் பரிமேலழகருரையுடன்.
5. ஐங்குறுநூற்றில் முதல் இரண்டு நூறு.

---

### 3. இலக்கணம் I.

1 யாப்பருங்கலவிருத்தி முழுதும்.
2. மாறனலங்காரம்.
3. நேமிநாதம்: உரையுடன்.
4. இலக்கணவிளக்கச்சூறாவளி.

---

### 4. இலக்கணம் II

1. தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: சேனாவரையம்.
2. ஷை பொருளதிகாரத்து முதலைந்தியல்கள்: நச்சினார்க்கினியருரையுடன்.
3. இறையனாரகப்பொருளுரை.
4. தொல்காப்பியச்சூத்திரவிருத்தி.

---

### 5. வசனமும் தர்க்கமும்.

1. தருக்கசங்கிரக தீபிகை.
2. சோழவம்ச சரித்திரம்.
3. கடையெழுவள்ளல் காலம்.

---

### 6. செய்யுளியற்றல்.

பாவும் பாவினமும்.

### 7. வியாசம்.

OFFICE OF THE ... 24 JAN 1921

உ
கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி கஅ] ரௌத்திரி-ஹு புரட்டாசி-மீ [பகுதி கக.

Vol. XVIII. September—October-1920. No. 11.


## தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி.

---

தொல்காப்பியத்தின் பெருமை.

இந்நிலவுலகின்கண்ணே, மக்கட்சாதியாரால் வழங்கப்பெற்றுவரும் பாஷைகள் எண்ணிறந்தனவேனும், அவற்றுள்ளே பழமையும்பெருமையுமுடையவாய்ச் சீர்திருத்தம் பெற்றுவிளங்கும் மொழிகள் சிலவேயாம். அங்ஙனம் சீர்திருத்தம்பெற்ற பாதகண்டத்துப் பழம்பாஷைகளிலே வடமொழியாகிய ஆரியமும், தென்மொழியாகிய தமிழும் சிறந்தவையென்பது நல்லறிஞர் பல்லோரால் முன்னரே ஆராய்ந்து துணியப்பட்டது; ஆதலால் அதனை ஈண்டாராயப்புகுவது மிகையாகும். இனி அவ்விருமொழிகளுள் வடமொழியின் பழம்பெருமையை நிலைநாட்டுதற்கு அதன்பாலுள்ள வேதசாத்திரங்கள் எவ்வாறு சிறந்துவிளங்குவனவோ அவ்வாறே தென்மொழியின் பழம்பெருமையைக் குறித்தற்குரிய நூலொன்று பல்லாயிரவாண்டுகளாகத் தமிழ்மக்களாற் சேமிக்கப்பெற்றுவந்துள்ளது. அவ்வரிய பெரிய நூலாவது தொல்காப்பியமே. இப்போது வழங்கும் நூல்களிலே இதனினும் முற்பட்டதொன்று தமிழ்மொழியில் இல்லையென்றே சொல்லலாம். இதன் ஆசிரியர் "ஆறைப் பெருமை யகத்திய னென்னும்—அருந்தவ முனிவ னாக்கிய முதனூல்-பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோ" ருட் சிறந்தவரும், பார்க்கவகுலத்தவரான சமதக்கினியின் புதல்வரும், திரணதூமாக்கினியென்னும் இயற்பெயரினருமாகிய தொல்காப்பியமுனிவர்.* இம்முனிவர்பெருமான், இடைச்சங்கமிருந்த நிலந்தருதிருவிற்

---

* 'தொல்காப்பியன்-பழமையான காப்பியக்குடியில் உள்ளோன்' என்பது உரை; காப்பியம் என்பது பார்ப்பாரது பழைய குடிவகையுளொன்று என்பது "காப்பியத் தொல்குடி கவின்பெற வளர்ந்து" என்னுஞ் சிலப்பதிகார வடியாலும் (30—83) விளங்கும். காப்பியம்=காவியம்; கவியாகிய சுக்கிரனதுவமிசம் என்பது பொருள். இவ்வமிசத்தோர் பிருகு மஹருஷியின் மரபினராதலால், பார்க்கவர் எனவும் படுவர். பல்காப்பியனார், வெள்ளூர்க் காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார், முதலாய புலவர்களும், பார்க்கவ அல்லது காவிய குலத்தவராதல் வேண்டும், இனிக் கபிலர் என்ற புலவரின்

பாண்டியன்காலத்தவரென்பதும், தமிழ்நாட்டில்வழங்கிய உலகவழக்குச் செய்யுள்வழக்குகளையும், தம்மாசிரியர் அகத்தியனாரியற்றிய முதனூலையும் ஆராய்ந்து இலக்கணநூலொன்று இயற்றினரென்பதும், இயற்றிய தனை முற்கூறிய பாண்டியனது அவைக்களத்தே அதங்கோட்டாசான் என்ற நல்லிசைப்புலவர்கேட்ப அரங்கேற்றினர் என்பதும், பிறவும், இம் முனிவர்க்கு ஒரு சாலைமாணாக்கரான பனம்பாரனார்கூறிய பாயிரச்செய்யுளால் அறியப்படுகின்றன. இடைச்சங்கநாள்தொடங்கி நல்லறிஞர்க்கெல்லாம் பெரும்பிரமாணமாக விளங்கும் இலக்கணநூல் இத்தொல்காப்பியம் ஒன்றுமேயாம். இதன் முதனூலாகிய அகத்தியம், இடைச்சங்க காலம்வரை வழங்கியதாகத் தெரியவரினும், கடைச்சங்கநாளிலே அதன் வழக்கு வீழ்வதாயிற்று. இப்போதோ, அந்நூலிற் சிலசூத்திரங்கள் ஆங்காங்கு உரைகாரர்களால் ஆளப்படுதல் தவிர வேறு காணப்படவில்லை. இவ்வாறு "வீங்குகடலுடுத்த வியன்கண் ஞாலத்துத்,—தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென" அருந்தவமுனிவரான அகத்தியனாரால் ஆக்கப்பட்ட முதனூலானது முற்றும் வழக்கொழிந்ததற்கு நச்சினார்க்கினியர் வேறு கதைக்காரணங் கூறுவரேனும், அதன் வழிநூலாகத் தோன்றிய தொல்காப்பியத்தின் அருமை பெருமைகளே அம்முதனூலின்வீழ்ச்சிக்கு முக்கியகாரணமென்று சொல்லலாம். இத்தொல்காப்பியந் தோன்றியகாலந்தொட்டு அது விதிக்கின்ற ஆணைப்படி நடப்பதையே முன்னோரும் பின்னோருமாகிய தமிழ்மக்களெல்லாம் தமக்குரிய கௌரவமாகக் கொண்டொழுகினர். "கூறிய குன்றினு முதனூல் கூட்டித்-தோமின் றுணர்தல் தொல்காப் பியன்றன்—ஆணையின் தமிழறிந் தோர்க்குக் கடனே" எனப் பல்காப்பியனார் என்னும் பழம்புலவர் கூறுதலுங் காண்க (தொல். பக்-௮௦௬). இடைச்சங்கத்தில் இதனுடன் உதித்த நூல்களெல்லாம் ஏறக்குறைய இறந்தொழியவும் இந்நூன்மட்டும் இன்றுவரை நின்றுநிலவுவது தமிழ்நாட்டார்செய்த தவப்பயனேயாம்.

**தொல்காப்பியப் பகுப்பு.**

இத்தகைய பெருமைவாய்ந்த தொல்காப்பியமானது, எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என முப்பெரும்பகுதியுடையதாய், அவ் வெழுத்துச் சொற்

வேறுபாடறியத் தொல்கபிலர் (குறுந்-14) என்ற புலவர் சங்கநூலிற் சிறப்பிக்கப்படுதல்போலக் காப்பியர்பலரின் வேறுபாடறிதற்குத் தொல்காப்பியர் என அடையுடன்வழங்கப்பட்டார் எனினும் பொருந்தும்; பராசரரென்ற முனிவரினின்று வேறுபாடறிதற்கு "விருத்தபராசரர்" என வேறொருவர் வடநூலுட் கேட்கப்படுதலுங் கண்டுகொள்க.



பொருள்களின் இலக்கணங்களை விரித்துச்செல்வதாம். எழுத்துஞ் சொல்லும் ஆராய்ந்து, அச் சொற்றொடர் கருவியாகப் பொருளுணர்ச்சிபெற வேண்டுதலால், அம்முறையில்வைத்துத் தொல்காப்பியம் அவற்றைக் கூறுவதாயிற்று. எழுத்துஞ் சொல்லும் ஆராய்ந்த மாணாக்கன் பொருளதிகாரங்கற்பது இன்றியமையாததாக முன்னோர் கருதிவந்தனரென்பது, "எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறேமேல் இவை பெற்றும் பெற்றிலேம்" என்று களவியலுரை* நுதலிப்புகுதலால் விளங்கும். தொல்காப்பியத்தின் பகுப்பாகிய மூன்றதிகாரங்களும் தனித்தனி ஒன்பதியல்கள் உடையனவாக ஆசிரியரால் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள், பொருளதிகாரத்து அமைந்துள்ள இயல்களையும் சூத்திரத்தொகையையும் பற்றிய இரண்டு பழைய வெண்பாக்கள்† அடியில் வருமாறு:—

"ஈட்டு மகத்திணையு மேய்ந்த புறத்திணையுங்
காட்டு களவியலுங் கற்பியலு—மீட்டும்
பொருளியல்மெய்ப் பாடுவமம் போற்றிய செய்யுள்
மரபியலு மாம்பொருளின் வைப்பு"

"பூமலர்மென் கூந்தால்! பொருளியலின் சூத்திரங்க
ளாவவறு நூற்றிருபத் தைந்தாகும்—மூவகையால்
ஆயிரத்தின் மேலு மறுநூற் றறுபதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார்"

இவற்றாற் பொருளதிகாரவியல்கள் ஒன்பதென்பதும், சூத்திரங்கள் ௬௬௫-என்பதும், தொல்காப்பியமுழுமைக்குமுரிய சூத்திரத்தொகை ௧௬௬௦-என்பதும் விளங்குவனவாம். இப்போது பொருளதிகாரச் சூத்திரத்தொகை ௬௬௬ ஆக உள்ளது. இஃது ஒரு சூத்திரத்தை இரண்டாகக்கொண்டு உரைகாரர் பொருள்கூறியதனாற் போந்ததாம். இவ்வொன்பதியல்களில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கும் அகப்பொருளையும், புறத்திணையியல் புறப்பொருளையும், ஏனையியல்கள், முறையே மெய்ப்பாடு, உவமம், யாப்பு, மரபுகளையும் விளக்குவன.

* களவியல் - இறையனாரகப்பொருள். (தொல். பக்-௭௪௮)

† செந்தமிழ். தொகுதி-2; பக்-௧௧௭.

உரைகளும் வழிநூல்களும்

இத்தொல்காப்பியம் பழைய உலகவழக்கையும், செய்யுள் வழக்கையும் இலக்கணமுறையால் விளக்குவதாதலால், அவற்றைத் தெரிதற்கு முன்னோர் இயற்றிய உரைகள் பேருதவியாவன. இவ்வுரைகளின் உதவி இல்லையேல், பெரும்பாகமும் இருண்டுகிடக்கும் தொல்காப்பியக்கடலிலுள்ள அரும்பெறன் மணிகளின் தன்மைகள் நம்மால் அளந்தறிய முடியாவாம். அதனால் அவ்வுரைகாரர் கூற்றுக்கள் மூலத்தோடொத்த பெருமையுடையனவாக மதிக்கற்பாலன. தொல்காப்பியத்துக்கு உரையெழுதியவருள், இளம்பூரணவடிகள், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்ற நால்வருஞ் சிறந்தோராவர். இவருள், நச்சினார்க்கினியரியற்றிய உரையே பொருளதிகாரத்துக்கு இப்போது கிடைத்திருப்பது.* ஆயின் அச்சேறிய பொருளதிகாரப்பதிப்பிலே செய்யுளியலுக்குள்ள பகுதி, நச்சினார்க்கினியரதன்றிப் பேராசிரியரியற்றியதென்பது, "செந்தமிழ் வாயிலாக முன்னரே பிரசித்தமானது.† இதுபோலவே அவ் வச்சுப்பிரதியிற்கண்ட மெய்ப்பாடு, உவமம், மரபியல்களின் உரைப்பகுதிகளும், நச்சினார்க்கினியரெழுதியன வல்லவென்பதற்குப் பல காரணங்கள் கூறுவர்.‡ ஆராய்ச்சியில் எவருரையாகமுடியினும், அவ்வுரைகள் பழமையும் பெருமையும் உடையனவாகவே காணப்படுதலால், அவற்றினுதவிகொண்டு தொல்காப்பியத்திற் கண்ட அரும்பொருள்களைத் தெரிந்துகொள்ளத் தடையில்லையாம். அன்றியும், இப் பொருளதிகாரத்துக் கூறப்பட்ட அகம், புறம், மெய்ப்பாடு, உவமம், யாப்பு, மரபு என்பவற்றின் கருத்துக்களைத் தெளிதற்குத் தொல்காப்பியத்துக்குப் பின்னரெழுந்த இறையனார்களவியல், நாற்கவிராசநம்பியகப்பொருள், புறப்பொருள்வெண்பாமாலை, தண்டியலங்காரம், வீரசோழியம், முதலிய உரையுடன்கூடிய இலக்கணநூல்களும், சங்கச்

* பொருளதிகாரத்துக்கு, உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் எழுதிய உரையுள் அகத்திணையியல், புறத்திணையியற்பகுதிகள் இப்போது அச்சாகி வெளியேறியுள்ளன. அவ்வுரையுட்கண்ட விசேடங்களை ஆண்டாண்டுக் கீழ்க்குறிப்பிற் காட்டியுள்ளோம்.

† இவ்விஷயம், சேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. இராகவையங்காரவர்களால் முதன்முதல் ஆராய்ந்தறியப்பட்டு, அவர்களால், செந்தமிழ்ப் பத்திரிகையின் 2ம தொகுதி 11ம் பகுதியில் வெளியிடப்பட்டது. இப்போது நச்சினார்க்கினியரது செய்யுளியலுரை முழுதும தனிபபுத்தகமாக அவர்களால் மதுரைத்தமிழ்ச்சங்கததினவாயிலாக வெளியிடப்பட்டுமுள்ளது.

‡ செந்தமிழ். தொகுதி-2. பகுதி-௧௧.



செய்யுள்களும் பிறவும் தக்க கருவிகளாக உள்ளன. ஆதலால் இவ்வாராய்ச்சிக்கு இந்நூல்களும் ஏற்றபெற்றி கொள்ளப்படுமென்க. இனி நூலுட் கூறப்படும் விஷயங்களுட் புகுவோம்.

பொருளதிகாரம்.

பொருளதிகாரமென்பது பொருளினது இலக்கணத்தை உணர்த்தும் அதிகாரம் என விரியும். [அதிகாரம்-முறைமை] பொருளாவன-அகப்பொருளும் புறப்பொருளுமாம். அன்றி, அகத்திணையில் இன்பத்தையும், புறத்திணையில் அறம் பொருள் வீடுகளையும் ஆசிரியர் கூறுதலால் உறுதிப்பொருள் நான்கையும் இவ்வதிகாரம் உணர்த்துவதென்று கொள்ளவும் படும். (பக்-௧.)

இனி, மேற்கூறிய பொருள்களையே கூறவந்த ஆசிரியர் மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபு என்பவற்றையும் சேர்த்துப் பொருளதிகாரத்துக் கூறியதென்னை? என்ற கேள்வி நிகழ்வதுண்டு. இதற்கு விடை:— தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்துஞ் சொல்லதிகாரத்துஞ் செய்யுள் வழக்கிற்கும், உலகவழக்கிற்கும் உரியவற்றைக் கலந்து கூறிப் பொருளதிகாரத்திற் பெரும்பான்மை உலகவழக்குக்கு வேண்டுவனவே கூறத் தொடங்கினார்: தொடங்கினவர் அவ்வுலகவழக்கை உணர்த்துவதற்குப் பெரிதும் உபகாரப்படுதலுடைய மெய்ப்பாடு உவமங்களையும், அவ்வழக்குப்பற்றிப் பாடுதற்குரிய செய்யுளிலக்கணங்களையும், உலகவழக்குச் செய்யுள்வழக் கிரண்டற்கும் பொதுவாகிய மரபுகளையும் பொருளியல்களோடு சேர்த்துக் கூறுவாராயினர் என்க. (செய்யுண் மரபியல்களின் அவதாரிகை பார்க்க.)

அகமும் புறமும்.

இனி, ஆசிரியர் தாம் கூறப்புகுந்த பொருட்டொகுதியைத் தமிழ்மக்கள் முறைப்படி* அகத்திணை புறத்திணை என இரண்டுபகுதியாகக்கொண்டு, அவற்றுக்கேற்ப இயல்கள் வகுத்துக்கூறுவர். அவற்றுள், அகத்திணை என்பது, அகவொழுக்கம், அஃதாவது ஒத்த அன்பொடு ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்தவின்பம், அக்கூட்டத்தின்பின் இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்ப

* "தமிழின் றுறைவாய் நுழைந்தனையோ" என்னும் திருக்கோவையடியின் (20) விசேடவுரையிற் பேராசிரியர் "தமிழின் றுறைகளாவன, ஈண்டகமும் புறமுமாகிய பொருட்கூறு." என்றெழுதுதல் காண்க. வடநூன் முறையாயின் அறம், பொருள், இன்பம் எனப் பாகுபாடுபெறுமென்பர் பரிமேலழகர். (குறள்-காமத்துப்பால். அவதா.)

முறுவதாம்; புறத்திணை என்பது புறவொழுக்கம்; அஃது ஒத்த அன்புடைய தலைவன், தலைவி இவரானன்றி, எல்லாராலுந் துய்த்துணரப்படுவதும், இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுவதுமாம். இவற்றுள், இன்பப்பகுதியான அகத்திணையானது களவு கற்பு என இரண்டாகப் பகுக்கப்பட்டு இப்பொருளதிகாரத்தே பல இயல்களால் விரிக்கப்படுகின்றது.

**அகப்பொருளின் சுருக்கவரலாறு**

இவற்றுட் களவென்பது ஒருவனும் ஒருத்தியும் அந்தரங்கத்திற் கூடுங் கூட்டம். இக்கூட்டம்பற்றித் தமிழ்நூல்கள் கூறும் வரலாற்றை முதலிற் சுருக்கமாகத் தெரிந்துகொள்ளுதல் பின்வருஞ் செய்திகளையறிவதற்குப் பெரிதும் உபகாரமாகும். அவ்வரலாறுவது:—உருவுந் திருவும் அறிவுங் குலமுமுதலியவற்றால் ஒப்புயர்வற்றுவிளங்குந் தலைவனொருவன் வேட்டையாடிக்கொண்டு மலைச்சாரலொன்றன்பக்கத்தே தனியனாய் வந்தானாக—ஆங்குத் தினைப்புனங்காத்துத் தன் தோழியரோடு விளையாடுபவளும், உரு, திரு முதலியவற்றால் ஒப்புயர்வற்றவளுமாகிய மலைவாணர்மகளொருத்தி விளையாட்டுவிருப்பாற் றோழியர் தனித்தனி பிரிந்தநிலையில், தானுந் தனியளாய் அத்தலைவன்முன்பு எதிர்ப்பட்டனள். எதிர்ப்பட, இருவரும் ஊழ்வயத்தால் உள்ளங்கலந்து அவ்விடத்தே கூடிமகிழ்ந்து, பின்னர் ஒருவர்க்கொருவர் பிரிவாற்றாது ஒருவாறு ஆற்றுவித்துக்கொண்டு தத்தமிடநோக்கிச் சென்றனர். இவ்வாறு விதியாற் கூட்டப்பட்டுப் பிரிந்த தலைமகன் தான் காதலுற்ற தலைவியைத் திரும்பக்காணுமவாவினாற் றூண்டப்பட்டு, முன்னாட்கூடிய இடத்தை நாடிச்செல்ல, அங்ஙனமே அன்புதூண்ட ஆங்குவந்தெதிர்ந்த தலைவியைத் தலைவன் எதிர்ப்பட்டுக் கண்டு மகிழ்ந்து காதலால் முன்போற் கலந்தான். இவ்விதம் மூன்றுமுறை கூடும்போது தன் பாங்கனால், தலைவியிருப்பிடமறிந்துசென்று அவளைச்சேர்வன். இனித் தோழியால் எப்பொழுதுஞ் சூழப்பட்டுள்ள தலைவியை இங்ஙனமே பலகாலுந் தனியிடத்தெதிர்ப்பட்டுக் கூடுதல் அருமையாயிருத்தல்பற்றித் தலைவியைத் தடையின்றி அநுபவிக்கக் கருதியவனாய், அதற்குத்தக்க துணையாவாள் அவள் காதற்றோழியே என்பதை அறிந்துகொண்டு அவள்பாற்சென்று, குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தன் குறைகூறிவேண்ட, அவள் பலபடியாக ஆராய்ந்து இருவர்க்குங் கூட்டமுண்மை உணர்ந்து, பின் 'இனி நாமும் இதற்கு



உடம்படலே நலம்' என்று அவ்விருவரையும் கூட்டுதற்கு முயல்வள். இங்ஙனம் தோழியாற் பலமுறை தலைவன் கூடிவருமிடையில், தலைவியாற் காக்கப்பட்டுவருந் தினைப்புனமுற்றிக் கதிர்கொய்தலேனும் பிறகாரணமேனும்நிகழத் தலைவிக்கு அக்காவல் நீங்கி மனையகத்தே தங்கும்படிநேர்தலும், அக்காலத்து இரவில், தோழி அவ்விருவரையுங் கூட்டமுயலுவள். இங்ஙனம் நிகழும் களவொழுக்கம் முதலிற் சிறுகச் சிலர்பலர்க்குத் தெரியவந்து நாளடைவில் ஊரிற் பேரலராய் எழும்ப, அதுகாரணத்தாற் பெற்றோர் தலைவியை இற்செறித்துத் தக்கபடி காவற்படுத்துவர். அதனால் தலைமகனைக் காணப்பெறாத ஆற்றாமை தலைவிமாட்டுப் பெருகுதல்கண்டு, தோழி, இனிக் கற்புநெறிப்பட்ட இவள் இறந்துபடவுங்கூடுமென்று கருதி இதற்கு வேறு உபாயமொன்றுங் காணாதநிலையில், அவள் தலைவனையடைந்து 'இனி நீர் இவளை உடன்கொண்டுசென்று மணந்துகொள்வதேகாரியம்' என்றுகூறி, ஒருவரும் அறியாவகை தலைவியை வெளியேற்றித் தலைமகன்பாற் சேர்ப்பிக்க, அவன் அவளை உடனழைத்துக்கொண்டு, தன்னூர்நோக்கிச் செல்வன்; செல்லுமிடையில், தலைவியின்சுற்றத்தார் அக் களவறிந்துவந்து தலைவனை மேற்செல்லாவாறு தடுத்தும், அவள் தன்காதல்முழுதும் தலைவன்பாற்சார்த்திநிற்பது கண்டு 'இவள் கற்புநெறிப்பட்டாள்' என்று அறிந்துகொண்டு அவ்விருவர்க்குந் தீங்குசெய்யாது திரும்பிப்போவர்; போகத் தலைவனுடன் மகிழ்ந்துசென்று தலைவி அவனூரடைந்து வாழ்வளென உணர்க..

கற்பாவது இங்ஙனம் உடன்கொண்டுபோய தலைவன் தன்னூரிலேனும், தலைவியின் சுற்றத்தார் சம்மதித்துவேண்ட அவளூரிலேனும் விதிமுறைப்படி அவளை மணம்புரிந்து இல்லறநடாத்தலும், பின் உலகின் நிலையின்மையை யுணர்ந்து வீடுபேறு முயறலுமாம்.

**அகப்பொருள்பற்றிய இருவகைவழக்குகள்**

இவற்றால், வேறுசில வேறுபாடுகளு முண்டேனும், மேற்குறித்தவரலாறே களவுகற்புக்களின்சுருக்கம் என்பது தெரியலாம். ஆகவே, இவ்விரண்டுபகுதிகளும் தமிழ்நாட்டாரது அநாதியானவாழ்க்கைமுறையில், விவாகத்துக்கு முன்னும் பின்னும் நிகழும் இரண்டு முக்கியநிலைகளைப்பற்றியன என்பது அறியப்படும். இவ்விருநிலைகளும் தமிழ்மக்கள் தொன்றுதொட்டுவழங்கிய உலகியல்களாய்ப், பின்னரே புலவர்களாற் சிறப்பித்துப் பாடப்பெற்றும்,

இலக்கணங் கற்பிக்கப்பட்டும் செய்யுள்வழக்கடைந்தன என உணர்க. இதனை, "உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்—வழக்கு வழிப்படுத்தல் செய்யுட்குக் கடனே" "நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்—பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என ஆசிரியரே குறிப்பித்தலால் அறியத்தக்கது. நச்சினார்க்கினியரும், "இஃது இல்லதெனப்படாது உலகியலேயாம்; உலகியலின்றேல், 'ஆகாயப்பூ நாறிற்று' என்றுழி அது சூடக்கருதுவாருமின்றி மயங்கிக்கூறினான் என்று உலகம் இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படும்" (பக்-ரு, சு,) என்றெழுதினார். இவ்வாறு, இக் களவு கற்புக்கள் ஒருசார மக்களின் வழக்கத்தோடு சம்பந்தப்படாத வெறுங் கற்பனைகளேயாயின், அவற்றின் பல்வேறு விகற்பங்களைச் செய்யுள்வழக்கோடும் உலகியல்களோடும் பொருந்தவைத்து இத்துணையளவாகப் பழையநூல்கள் எடுத்தோதா என்பது திண்ணமென்க. எனவே, பொருளதிகாரத்துக்கண்ட அகப்பொருள்பற்றிய செய்யுள்வழக்கெல்லாம் பண்டைத் தமிழ்மக்கள் கொண்டொழுகிய ஒருவகை உலகவழக்கினின்றே உற்பத்தியாகிவிரிந்ததென்பது போதரும்.

உலகவழக்கம் இனி அவ்வுலகவழக்கம் ஆதியில் எவ்வாறு அமைந்திருந்ததென்பதை முதலில் நோக்குவோம். மேற்கூறிய அகப்பொருட் சுருக்கத்தை யாராயுமிடத்து—இல்வாழ்க்கையடைவதற்கு முன் ஒருவன் ஒருத்தியை மறைவிற்கண்டு, தன்பாலுள்ள அன்பை அவட்கு வெளியிட்டுக் கூடி ஒழுகுதலும், அக்கூட்டம் வெளிப்பட்டபின் பெண்ணின் பெற்றோர் அதற்கிணங்குதலும் இணங்காராயின் அவரறியாமல் அப்பெண்ணைக் கரந்தழைத்துச் சென்று தனக்குரிய மனையாளாகக்கொண்டு வாழ்தலும் போன்றமுறை இந்நாட்டில் வழங்கிவந்தமை அறியப்படுகின்றது. எனவே, தமிழ்மக்களது பண்டையொழுக்கமானது ஒருவர்க்கொருவர் மனமொத்துக்கூடும் வேதத்துக்கண்ட காந்தருவமணம் போன்றதென்று சொல்லலாம். ஆனால், களவுக்கூட்டத்தின்பின்னர், ஒருவன் ஒருத்தியை அவள் சுற்றமறியாவகை உடன்கொண்டுபோதலும் பழையவழக்கில் நிகழ்ந்ததாகத் தெரியவருகின்றது. எனினும் தலைவியின் சம்மதம்பெற்றே அவ்வுடன்போக்கு நிகழ்வதாகச் செய்யுள் வழக்கம் மிகுந்துகாணப்படுதலால், இவ்வொழுக்கத்தை ஒருதலைக் காமமாகிய இராக்கதமுறைப்படுத்தாது ஒத்த அன்புபற்றிய கந்தருவ



முறையாகவே கொண்டனர் முன்னையோர். இங்ஙனம், செய்யுள்வழக்கிலே பழைய தமிழ் மணமுறையை எவ்வளவு சுத்தமுடையதாக முன்னோர் கூறியிருப்பினும், உலகவழக்கானது அச்செய்யுள்வழக்கினும் சிறிது வேறுபட வழங்கியிருத்தல் கூடியதேயாம்; அஃதாவது தலைவியின் உடம்பாடுபெற்றன்றிப் பெருமலும் அவள் சுற்றமறியாமல் ஒருவன் ஒருத்தியைக் கொண்டுசெல்வது முதலியனவாம். தலைவியின் உடம்பாடின்றி அவளை வலிந்துகொள்வதும் முன்பு நிகழ்ந்துவந்ததென்பதைத் தொல்காப்பியனார், "மகட்பாற்காஞ்சி" என்ற புறத்துறையால் வெளிப்படக்கூறியதோடு, "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்-ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்ற கற்பியற்சூத்திரத்தாலுங் குறிப்பிட்டனர். பிற்கூறிய சூத்திரத்தின்கருத்தாவது:— உலகியலாகிய பழைய களவுமணத்தில்* "பொய்யும் வழுவும் மிகுந்து தோன்றியதனால் அக் குற்றங்கள் நீங்கக் கற்புமுறையை ரிஷிகள் தமிழ்மக்கட்கு விதிக்கலாயினர்" என்பதாம். பழைய உலகியன்மணத்துத்தோன்றிய குற்றங்கள் என்றது-ஒருத்தியின் சம்மதம்பெற்று அவளை அன்பாற் கூடியொழுகாது நினைத்தவன் நினைத்தபடி ஒருத்தியை வலிந்துகொள்வது முதலியனவாதல் வேண்டும். ஆகவே தமிழ்நாட்டில், காந்தருவம்போன்ற ஒழுங்கான களவுமுறையன்றி, ஒழுங்கற்ற களவுமுறையாகிய இராக்கதம் போன்றனவும் முற்காலத்து வழங்கலாயின என்பது உய்த்துணரத்தக்கதாம். "மையின் மதியின் விளங்கு முகத்தாளை - வௌவிக் கொளலு மறனெனக் காண்டன்று" என்னுங் குறிஞ்சிக்கலியடிகளும் இக்கருத்தே வலியுறுத்தல் காணலாம் (சுஉ). இவ்வாறு ஒழுங்கற்ற மணமுறைகளை விலக்கி ஒத்த அன்புபற்றிய காந்தருவத்தையும், அதன்பின்னர்க் கற்பியலையும் ஆரியமேலோர் தமிழ்நாட்டார்க்கு நன்கு விதித்துப்போந்தனரெனவும், இங்ஙனம் விதிக்கப்பட்ட களவுங் கற்புமே இத்தொல்காப்பியத்துங் கூறப்பட்டன எனவும் உணர்ந்துகொள்க. †

---

* இம்மணம் "தமிழ்கூறு நல்லுலகத்து" வழக்காகிய ஒழுக்கத்தையே பெரும்பான்மை குறிக்குமென உணர்க.

† இராக்கதமணமானது தமிழ்நாட்டார்க்குள்மட்டுமன்றி ஆரிய மக்களாலும் ஒரு காலத்தே பிரபலமாக அனுஷ்டிக்கப்பட்டதேயாகும். இதனை, வியாசபாரதத்தில் "எட்டாவதான ராக்ஷஸமே அறிஞர்களால் விரும்பப்பட்டதென் றறியுங்கள்.........தருமசாஸ்திர மறிந்தோர் வலிந்துகொண்டு போகப்பட்டவளே சிறந்தவளென்று கூறுகின்றனர்" எனவரும் பீஷ்மர் வாக்கியங்களால் அறியலாம். (ஆதிபர்வம், பக். 404; ஸ்ரீ. ம. வி. ராமானுஜாசாரியரவர்கள் பதிப்பு) முற்காலத்தே க்ஷத்திரியர்க்குள் இம்மணம் மிகுந்திருந்ததினால், ராக்ஷஸ விவாகத்துக்கு "க்ஷாத்ரம்" என்று ஒரு பெயர் வடநூல்களில் வழங்கியதென்பர். "சாந்தர்வ ராக்ஷஸ மிரண்டும் க்ஷத்திரியர்க்குச் சிறந்தனவாதலால் இவற்றுள் இரண்டேனும் ஒன்றேனும், அரசர் செய்துகொள்ளலாம்" என மனுவுங் கூறுதல் அறியத்தக்கது, (அத். 3; சு. 26)

மேற்குறித்த கொள்கையை அடியிற்காணும் செய்திகளும் நன்குவலியுறுத்துவன. இக்களவொழுக்கமானது எல்லா நிலத்துக்கும் பொதுவாக உரியதேனும் (பக்-25. சூத்-105) குறிஞ்சியொழுக்கமாகவே பழைய நூல்கள் இதனைச் சிறப்பித்தலால் மலைநாட்டில் இவ்வழக்கு மிகுந்து வழங்கியமை உய்த்துணரப்படுகின்றது. இதற்கேற்ப, மலைவாணராகிய மக்களிடத்தே, அதன் மாதிரிகைகள் இன்றும் நன்குகக் காணப்படுகின்றன. இம்மக்கள் நிகழ்த்தும் விவாகச் சடங்குகளை நோக்குமிடத்து, அவை, அவரது புராதன சரித்திரத்தைப் புலப்படுத்துவனவென்றும், அம்மணமுறையினின்று இராக்கதமணம்போன்றதே அவர் கொண்டொழுகிய ஆதிவிவாகமென்பது நன்கறியப்படுமென்றும், அதுவே பிற்காலத்தில் நட்புமுறையாக மாறி நடக்கலாயிற்றென்றுங் கூறுவர்.* இம்மலைவாணராவார்—கஞ்சம் ஜில்லாவிலே கொண்டர் சவரர்களும், கோதாவரியிற் கோயிகளும், கோயம்புத்தூரில் ஊராளிகளும், திருவாங்கூர் ராஜ்யத்து முதுவர்களும், வேறுசிலருமாவர். இவரெல்லாம் விவாக நிகழ்ச்சிக்குமுன் மெய்யாகவோ பொய்யாகவோ, தாம் விரும்பியபெண்ணை ஒருவருமறியாவகை களவிற் கொண்டுசெல்வதும், கொண்டுபோமிடையிற் பெண்ணின்சுற்றத்தார்வந்து தடுக்கச் சம்புந்திகளைச்சார்ந்த இருபாலார்க்கும் போலியுத்தம் நிகழ்வதும், பின்னரே சுற்றத்தாரால் மணமுடித்துக்கொள்வதும் வழக்கங்களாக உடையர். இவருள் ஊராளிகளும் முதுவர்களும், தமிழ் முதுகுடியைச் சார்ந்தவர்களே. பிற்கூறிய முதுவரது மணநிகழ்ச்சியில், மணமகன் தான் விரும்பிய கன்னிகை தண்ணீரெடுக்கவேனும் விறகு பொறுக்கவேனும் வெளியேறும் சமயம் பார்த்திருந்து, அவளை ஒருவரும் அறியாவகை களவிற்கொண்டு செல்வதும், சென்று மலையின் ஏகாந்தமான பிரதேசமொன்றில், சிலவாரம் வரை கூடி வசிப்பதும், இதற்கிடையிற் சுற்றத்தார் அவளைத் தேடியுங் காணாதுபோவராயின், அவ்விருவரும் திரும்பிவந்து பெண்ணின் பெற்றோரால் மணமுடித்துக்கொள்வதும் இன்னும் நிகழ்ந்துவரும் வழக்கங்கள் என்பர்.† இம் முதுவர் குறிஞ்சிநிலத்துப் பழைய தமிழ் மக்களே

* E. Thurston's Ethnographic Notes in Southern India p. 8.

† E. Thurston's Ethnographic Notes in Southern India pp. 13.

"வேடர் மறக்குலம் போலே வேண்டிற்றுச் செய்தென் மகளைக்-கூடிய கூட்டமே யாகக் கொண்டு குடிவாழுங் கொலோ" எனப் பெரியாழ்வாரும், களவிற்கொண்டு மகளிரை மணம்புரியும் வேடர் மறவர்வழக்கத்தைக் குறிப்பிடுதல் அறியத்தக்கது. (திவ். பெரியாழ். 3. 8. 5)



என்பதை, அவர் பெயரே குறிப்பிக்கும். இம்மலைநாட்டுப் புராதன மக்களிடம் பெண்கோடலை முற்காலத்தரசரும் விரும்பிவந்தனரெனவும், பெண்கொடுக்க அவர் மறுத்தனராயின், அவ்வரசர் தம்வலி காட்டி வலிந்து கொண்டுசெல்ல முயன்றுவந்தனரெனவும், தொல்காப்பியனாரே கூறுதல் நோக்கற்பாலது. இதனை "நிகர்த்தும் மேல்வந்த வேந்தனொடு முதுகுடி-மகட்பா டஞ்சிய மகட்காஞ்சி யானும்" (பக். ௧௮௩) என்னும் புறத்திணைப் பகுதியால் உணர்க. இதன்பொருள் - "பெண்கொள்ளுதற்கு ஒத்தவனாயிருந்தும், மறுத்தலால் வலிந்துகொள்ளவந்த அரசனோடு, அப்பெண்ணுக்குரிய முதுகுடித்தலைவர் தம் மகளைச் சேர்த்தற்கஞ்சிய மகட்பாற் காஞ்சியானும்" என்பது. இதனுட்கண்ட "முதுகுடி" என்பதற்கு, நச்சினார்க்கினியர், வணிகர் வேளாளரும் பிற கலப்புச்சாதியாருமே என்று பொருள்கூறினராயினும், மலைவாணராகிய பழைய மக்களையே அது பெரிதும் குறிப்பதாம்; என்னை? "முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை - மதிமுடிக் களித்த மகட்பாற் காஞ்சி" என இளங்கோவடிகள், இக்காஞ்சித்துறையை மலைவாணரொழுக்கமாகவே கருதுதலால் என்க. இவ்வடிகளிலே பர்வதராஜனாகிய இமவான் தன் மகள் பார்வதீதேவியைச் சிவபிரானுக் களித்த முறையை இக்காஞ்சித் துறைப்பாற்படுத்துக் கூறியிருத்தல் கண்டுகொள்க. இத்துறைபற்றிப் புறநானூற்றில் வரும் ௩௩௬-முதல் ௩௫௪-வரையுள்ள 19-பாட்டுக்களை நோக்குமிடத்து, தமிழர்க்குள் ஒருகாலத்து இராக்கதமணமும் அசாதாரணமாயிருந்திருக்கவேண்டுமென்பது புலப்படத் தடையில்லையாம்; என்னெனில், ஒரு பெண்ணை வலிந்துகொண்டு செல்ல அரசர் பலர் முயன்ற செய்தி இப்புறப்பாட்டுக்களால் வெளியாகின்றது.* இஃது இராக்கதப்பாற்படுமேயன்றிக் காந்தருவமுறைக்கு ஒவ்வாததென உணர்க.† இம் மகட்பாற் காஞ்சிக்கு உரியாராக ஆசிரியர் கூறிய 'முதுகுடி' என்பதும் தமிழ் மலைவாணருள் "முதுவர்" என்ற பகுதியார் பழைய ஒழுக்கத்தோடு இன்றுங் காணப்படுவதும்—ஈண்டுச் சிந்திக்கத்தக்கன.

* பறம்புமலைக்கரசனாகிய வேள்பாரியின் மகளிரைத் தமிழ்வேந்தர் மணம்புரியவிரும்பிக்கேட்டும், அவன் இணங்காது மறுத்தமைபற்றியே, அப்பாரியின்மலையை மூவேந்தரும் முற்றுகையிட்டு அவனையும் வஞ்சத்தாற் கொன்றனர்; இச்செய்தி கபிலர் பாடிய 109, 110, 111-ஆம் புறநானூற்றுப் பாடல்களாலும், 'மகண்மறுத்தல்' என்னுந் துறைக்குறிப்பாலும் விளக்கமாகும்.

† கலம்பகங்களில் வரும் "மறம்" என்ற பகுதி இம் மகட்பாற் காஞ்சித்துறைபற்றியது போலும்.

இனிக் களவுக்கூட்டத்தின்பின் நிகழ்வது கற்புமுறையாகும். ஆனால், களவொழுக்கமின்றியே தனிக்கற்புமுறை முன்பு வழங்கியதில்லையென்பது, "முற்படப் புணராத சொல்லின் மையிற்-கற்பெனப் படுவது களவின் வழித்தே" (இறை. களவி) என முன்னோர் மொழிதலாற் றெரிய வருகின்றது.* இக்கற்பிலே தலைவியின்பெற்றோர் கொடுப்பக் கொள்வதேயன்றி, ஒருவரு மறியாமல் தலைவன் அவளை உடன் கொண்டுபோனவிடத்துக் கொடுப்போரின்றியும் சடங்கின்வழியால் அவளை அவன் மணப்பது உண்டென்பர் தொல்காப்பியனார். இக்கற்புமுறை ஆரிய வருணத்தார் மூவர்க்குமே இருடிகளால் ஆதியில் நியமிக்கப்பட்டதென்றும், அவ்விதிகளைத் தங்கள் புராதனமுறையொன்றில் நின்றொழுகி வந்த தமிழர் முதலியோர்க்கும், பிற்காலத்தே அவர்கள் விதித்துப் போந்தனரென்றும், ஆசிரியரே கூறுகின்றார். இதனை "மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம் - கீழோர்க் காகிய காலமும் உண்டே" † என்ற கற்பியற் சூத்திரத்தால் (௫) அறிக. இதனால் ஆரியரது கற்பியல் விதிகளைத் தமிழர் அறிந்திராத காலமும் ஒன்றிருந்ததென்பது வெளியாம். பிற்காலத்தே ரிஷிகள் கற்புமுறையைத் தமிழர்க்கு விதித்ததன் காரணம் அவரது களவியன்முறையில் "பொய்யும் வழுவும் தோன்றிச் சீர்கெட்டதேயாம்" என்பது முன்பும் விளக்கப்பட்டது.

செய்யுள்வழக்கம் — அல்லது புலனெறிவழக்கம்

இவ்வாறு நடைபெற்ற உலகவழக்கமே காலாந்தரத்திற் புலவர்களாற் சிறப்பித்துப்பாடப்பெறும் நிலைமையை அடைந்தது. அவ்வாறு பாடப்பட்டகாலத்தே அன்புமுறைக்காகாத இராக்கதமுதலிய அசுத்தபாகங்களெல்லாம் அடியோடு ஒதுக்கப்பட்டுக் காதலொத்து விளங்கும் கந்தருவமார்க்கமே தழுவப்பட்டது. அன்றியும், கூத்தர், விறலியர் முதலியோரால் இவ்வொழுக்கம் அபிநயித்து நடித்துக் காட்டப்பட்டும் வந்தது:—"நாடகவழக்கினு முலகியல் வழக்கினும்—பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்றும் பிறவாறும் ஆசிரியர் கூறுதலால் உணர்தற்பாலதாம். நாடகம் வேத்தியல் பொதுவியல் என இருதிறப்படுமென்றும், இவற்றுள் "வேத்தியலென்பது—இவ்வகப்

* "உலகியல்வழக்காய்ப் பின்பு இல்லறநிகழுங் களவொழுக்கம்" என நச்சினார்க்கினியர் எழுதுதலுங் காண்க. (கலித் 136 உரை)

† இச் சூத்திரத்துக்கு நேர்பொருள் இதுவேயாயினும், நச்சினார்க்கினியர்கருத்து வேறுதல் அவருரைநோக்கி யுணர்க.



பொருள்பற்றிய கூத்தென்றும் கூறுதலுங் காண்க (சிலப். பக்—௮௮), ளவொழுக்கம்பற்றிய செய்திகள் நாடகத்துக்கும் ஏற்றனவே என்பது இத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படும்; களவி ஒழுங்குபடக் கோத்துக் கைபோல்வந்து நாடகத்துக் கேற்றலின்" எனத் தஞ்சைவாணன் காவையுரைகாரர் கூறுவதாலும் விளங்குவதாம். இங்கேகூறிய நாடகமென்பது, வடமொழியிற் பாத்திரங்களும் பிறவும் வகுத்துவழங்கும் சாகுந்தளமுதலிய நாடகம்போன்றதன்றிக் கதை தழுவிக் கூத்தர் கூத்தியரால் அபிநயித்து நடிக்கப்படும் கூத்தென உணர்க. நாடகம் கதை தழுவிவரும் கூத்தென்பர் அடியார்க்குநல்லார் (சிலப்-பக்-௯௪). இங்ஙனம் களவொழுக்கம் பற்றிப் புலவர்பாடுவதும், அபிநயித்து நடிப்பதும் பல்கி எல்லைகடந்த காலத்தே அவற்றுக்கு வரம்பாக முன்னோர் இலக்கணம் வகுக்கலாயினர். இத்தொல்காப்பியமும் அவற்றுள் ஒன்றும். இதன் பொருளதிகாரப் பகுதியிலுள்ள ௯ இயல்களிலே இரண்டொன்று நீங்க ஒழிந்தனவெல்லாம் அகப்பொருள்பற்றிய வழக்குகளை வரையறுப்பதையே பெருநோக்கமாகக் கொண்டன. அறமும் பொருளும் பயக்கும் அரசியல் முதலியவற்றை உணர்த்தற்குப் புறத்திணையியல் என ஒன்றே கூறி, ஒருவனும் ஒருத்தியும் கூடும் கூட்டம்பற்றிய விதிகளைப் பலவியல்களால் ஆசிரியர்கூறுவதை நோக்குமிடத்து, அவர்காலத்தே இவ்வின்ப ஒழுக்கத்துக்கிருந்த வழக்குமிகுதி தெரியவருகிறது. ஒருகால், இவ்வொழுக்கத்தைச் சிறப்பிக்கவேண்டித் தொல்காப்பியனாரே புதியவாக இலக்கணங்கள் கட்டிக்கொண்டாரோ எனின்—பாயிரத்தில் "முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப்—புலந்தொகுத்தோன்" என்று இவர் செய்தி கூறப்படுதலால் அது முற்றும் பொருந்தாதாம். நச்சினார்க்கினியரும் "இப்புலனெறிவழக்கினை இல்லதினியது புலவரால் நாட்டப்பட்டதென்னுமோ எனின்—இல்லதென்று கேட்டோர்க்கு பெய்ப்பாடு பிறந்து இன்பஞ்செய்யாதாகலானும், உடன் கூறிய உலகியல்வழக்கினை ஒழித்தல்வேண்டுமாகலானும் அது பொருந்தாது" (பக்-௯௮) என மறுத்துக் கூறுதல் அறியத்தக்கது. எனவே களவு கற்பென்று வகுக்கப்பட்ட அகப்பொருள் விகற்பங்கள், புனைந்துரைவகையாற் புலவர்கள் பாடிவந்த உலகியல்களே என்பது வெளிப்படையாம். இங்ஙனம் புனைந்துரையும் உலகியலுங் கலந்து புலவர்பாடிய செய்யுள்வழக்கை-ஆசிரியர் "புலனெறி வழக்கம்" என்று ஆளுவர் (சூத்-௫௧); புலன் நெறிவழக்கம்—நூல்நெறி வழக்கம்; "புலத்துறைமுற்றிய" என்புழிப் போல.

இனி, இப்புலனெறிவழக்கைக் கூறுதற்கமைந்த பொருளதிகாரத்திற் பெரும்பாகம் அகப்பொருளே பற்றியதாயினும், சிறப்பாக அப்பொருளை உணர்த்தவந்த இயல்கள் நான்காம்; அவை-அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்பன. இவற்றுள், அகத்திணையியலில், புலனெறிவழக்கின் பொதுவிதிகளும், பொருளியலிற், களவியல், கற்பியல்களிற்கண்ட வழுக்களை அமைத்துக்கொள்ளுமாறுங் கூறப்படுகின்றன. முதலிற் பொதுவிலக்கணங்களை அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதாதலின், அவற்றின் முக்கியச்செய்திகளை ஈண்டு ஆராய்ந்துகொள்வோம். பொருளியலிற்கண்ட பதினான்கு வழுவமைதிகளும்—களவு கற்பு வரலாறுகள் கூறுமிடத்துப் பெரும்பாலும் விளக்கப்படும். ஆக நாம் இவ்வாராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பகுதிகள்—பொதுவிதிகள், களவியல், கற்பியல்-என மூன்றும் என உணர்ந்துகொள்க.

## I. பொதுவிதிகள்.

அகப்பொருள்பற்றிய இன்ப வொழுக்கங்கள் ஆசிரியரால் மூன்று வகையாக வகுக்கப்படுகின்றன. அவை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பன.

**கைக்கிளை:**—தலைவன் தலைவி யிருவர்க்குள் ஒருவரிடமே தோன்றி விளங்குங் காதல். [கைக்கிளை—சிறுமை உறவு அல்லது ஒரு மருங்கு பற்றிய கேண்மை.] இஃது ஒருதலைக்காமம் எனப்படும்.*

**ஐந்திணை:**—அவ்விருவர்க்குள்ளும் ஒத்துவிளங்குங் காதல்; [ஐந்திணை ஐந்துபகுதிப்பட்ட ஒழுக்கம். இது பின்னர் விரிக்கப்படும்.] இஃது ஒத்தகாமமாம்.

**பெருந்திணை:**—தலைவன் தலைவியர்க்குள் அளவுகடந்து, இழிவான செய்கைகளுக்கு ஏதுவாகிய காதல். [பெருந்திணை—பெரிய ஒழுக்கம்.] இஃது ஒவ்வாக்காமம் எனப்படும்.

## I. கைக்கிளை.

இனி, முதலிற்குறித்த ஒருதலைக்காமமாகிய கைக்கிளைநிகழுமிடம் தொல்காப்பியத்தில் மூன்றுவகையாகக் கூறப்படுகிறது. [1] காமஞ்

* "பெருமையில்லாத தலைமக்கள் உறவு" என்பர் இளம்பூரணர் (பக்-4).



சாலா இளமையாளிடம் நிகழ்வது (சூத்-ருo). அஃதாவது-காமக்குறிப்பிற்குப் பொருந்தாத* பேதைப்பருவத்துப் பெண் ஒருத்தியிடம் ஒரு தலைவன் தன்காதற்குறிப்புத்தோன்றக் கூறுவது. [2] ஒத்த அன்பினராய ஒருவனும் ஒருத்தியும், ஊழ்வசத்தால், தம்முள் எதிர்ப்பட்டுக் கூடும் இயற்கைப்புணர்ச்சிக்கு முன் தலைவனிடம் பெரும்பான்மை நிகழும் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்ற நான்கு செய்திகளும் (62) [3] வேதத்தே கூறப்பட்ட எண்வகைமணங்களுள், கொல்லேறுகோடல்† வில்லேற்றுதல் முதலியன செய்துகொள்ளும் ஆசுரமும், தலைமகளாலும் அவள் தமராலும் பெறாது வலிதிற்கொள்ளும் இராக்கதமும், மூத்தோர் களித்தோர் முதலியவருடன் கூடுதலாகிய பைசாசமும் ஆகும். [சூத்-கoரு.]

இவ்வாறு கூறப்பட்ட கைக்கிளைப்பகுதிகள் முற்கூறியபடி தலைவன் தலைவி யிருவருள் ஒருவர்மாட்டே அன்பு நிகழ்ந்து ஒருதலைக்காமமாதல் கண்டுகொள்க. இதன் வகையில் காமக்குறிப்பில்லாப் பேதையரிடம் நிகழும் கைக்கிளையொன்றும் ஆசிரியர் முதற்கண் எடுத்தோதுதலால், தமிழ்நாட்டிற் சிறுமிகளைவிரும்பிவந்தவழக்கும் முன்பு இருந்ததுபோலும். இக்கைக்கிளையைச் சிறப்புடையதொன்றாக உரைகாரர் கூறுதலும் நோக்குக. கலித்தொகை ருகூ, ருஎ, ருஅ-ம் பாட்டுக்கள், இவ் வொருதலைக்காமவகையைச் சிறப்பித்துக்கூறுவன. நாற்கவிராசநம்பியார், தம் மகப்பொருளில் இக் கைக்கிளைப்பகுதியை அகப்புறமென்றும், காமஞ்சான்றவளிடம் நிகழ்வதே அகத்திற்குரித்தாம் என்றும் கூறுவர் (ஒழி-௩உ). இனி, ஆசுர இராக்கத பைசாச மணங்களையும் ஆசிரியர் இப்பகுதியிற் சேர்த்தலால், இவை அவர்காலத்தே பொருந்தாக்காமமாகக் கொள்ளப்படாது ஒருவாறு தழுவப்பட்டமை புலப்படுகிறது. இவை இருவரிடத்துமன்றி ஒருவர்பாலே நிகழுங் காமமாதல் காண்க. இனிச்செய்யுள்வழக்கிற்குப்பெரிதுஞ்சிறப்புடையது இயற்கைப்புணர்ச்சிக்குமுன்னிகழுங் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்னுங் கைக்

* வேட்கை பிறவாப் பருவத்தாளைப் 'பேதை' என்றும், பிறக்கின்ற பருவத்தாளைப் 'பெதும்பை' என்றுங் கூறுவது வழக்கு. "பேதையல்லை மேதையங் குறுமகள்-பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென்" (அகம்-எ) என்னும் இடங் காண்க. (சிந்தா-இலக்க. கருஉ).

† கொல்லேறுகோடல்-கொடிய விடை தழுவி மணத்தல்.

கிளேயே யென்பது கோவை முதலிய நூல்களால் நன்கறிந்தது. இராம பிரானும் சீதாபிராட்டியும் - வின் முறிக்கப்படுவதன்முன் ஒருவரை யொருவர் கண்டு விழைவுமிகுத்தனர் என்று வான்மீகிமுனிவர் கூறு திருப்பவும், கம்பநாடர், தாம் பாடும் தமிழ்முறைக்கேற்ப, அவ்விருவர்க்கும் உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்ததாக, சந்தர்ப்பங்கொண்டு இக்கைக்கிளை வகையைச் சிறப்பித்தல் காணலாம் (மிதிலைக்காட்சிப்படலம்). இனி முல்லைநிலத்தாயர்க்குள் வழங்கிய 'ஏறுகோடற்கைக்கிளை' என்பதொன்று நூல்களிற் கூறப்படுகின்றது. ஏறுகோடல் என்பது - ஆய்க்குலத்தலைவர் தம்மகளிர்க்குக் கன்னியாசுல்கமாகக் கொல்லேறு (விடை) ஒன்றை வெளியேற்றி இதனைத் தழுவுவானுக்கே இவளுரியள் என்று நியமிப்பதாம். "ஆசுரமாகிய இவ் வேறுகோடற்கைக்கிளை, காமப்பொருளாகிய புலனெறிவழக்கில்வருங்கால் முல்லைநிலத்து ஆயரும் ஆய்ச்சியரும் கந்தருவமாகிய களவொழுக்கம் ஒழுகி வரையுங்காலத்து அந்நிலத்தியல்பு பற்றி வரைந்துகொள்வர்" என்பர் நச்சினார்க்கினியர். இதன் விவரம் முல்லைக்கலியின் முதலிரண்டுபாட்டுக்களால் உணரலாம். இக்கைக்கிளை அவ்வாயர்குலமுதல்வனாகிய கண்ணபிரானாலும் அக் குல்மகளாகிய நப்பின்னை பொருட்டு நிகழ்த்தப்பட்டதென்பர். "ஈட்டியவெண்ணெய் தொடுவுண்ணப் போந்திமி லேற்றுவன்கூன் - கோட்டிடையாடினை கூத்தடலாயர்தங் கொம்பினுக்கே" என்றார் பெரியாரும். இனி ஈண்டுக் காட்டிய கைக்கிளை மூவகையுமின்றிக் கடவுளரிடத்து நிகழும் ஒருதலைக்காமமும், முற்காலத்து ஒத்த அன்பினராயிருந்து பிற்காலத்தே ஒருவன் ஒருத்தியைத் துறக்க - அதனால் நிகழும் பெண்பாற் கைக்கிளையும், பிறவும் உளவாயினும் அவையெல்லாம் அகப்பொருட் குரியனவன்றிப் புறப்பொருட் பகுதிகளாமென்பர். (பக். ௨௦௯)

---

குறிப்பு:—இது, வித்வான் ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்களால் எழுதப்பட்டதிலிருந்து சிறிது பிரசுரிக்கப்பட்டது. முழுதும் புத்தக ரூபமாக விரைவில் வெளிவரும்.

---



# "தொல்காப்பியர் சைனராம்."

செந்தமிழிலே (தொகுதி-18, பகுதி-9, பக்கம்-337) ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் "தொல்காப்பியரது சமயம்" என்ற பொதுமொழியிட்டெழுதிய விஷயத்தைக் கண்ணுற்றுச் சிலவற்றை எழுதுகின்றேன்.

பனம்பாரனார் இயற்றியருளிய தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்திலே படிமை என்று வந்திருக்கின்றது எனவும், அச்சொல் ஜைனமதத்தினர்க்குரியது எனவும், அதுகொண்டு தொல்காப்பியரும் ஜைநமதத்தினராவர் எனவும் பிள்ளையவர்கள் கூறுகின்றனர்.

படிமை என்ற சொல் ப்ராகிருதத்திற் படிமா எனவும் வடமொழியிற் ப்ரதிமா எனவும் வழங்கிவரும் உண்மையை வல்லார்வாய்க் கேட்டுணர்வது பிள்ளையவர்களுக்குக் கடமையாகும். உரையாசிரியரும் "படிமை என்பது ப்ரதிமா என்னும் வடமொழித்திரிபு. அது தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்தமைத்த தேவர்மேல் வந்தது" எனக் கூறிப் போந்தமையும் பிறவும் மேற்காட்டியவற்றை வலியுறுத்தும்.

"ஏனோர்படிமைய" என்று பொதுப்படப் பிரயோகித்திருத்தலைக் கொண்டாவது பிள்ளையவர்கள் தங்கள்கூற்றுப் பொருந்தாதிருத்தலை அறிவார்களாக.

வேதத்தினையும் வேள்வியையும் மிகப்போற்றிவந்த இரும்பொறை என்பானையும், "கூறினை பெருமநின் படிமையானே" எனச் சான்றோர் சிறப்பித்தது கொண்டு சைனனாகப் பிள்ளையவர்கள் கோடல்வேண்டும். பரிமேலழகர், நச்சினார்க்கினியரையும் அங்ஙனமேகோடல் பிள்ளையவர்களுக்கு இனி ஆவசியகமாகும். பிறவுமன்ன.

(தொடரும்)

நவநீதகிருஷ்ணபாரதி.

---

ஸ்ரீ:

# "தொல்காப்பியரது சமயம்"

"தொல்காப்பியரது சமயம்" என்ற ஆராய்ச்சியொன்று சென்ற ஆடிமாதச் செந்தமிழில் திருவனந்தபுரம் ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமத். வையாபுரிப் பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டது. அதில் "பல்புகழ் நிறுத்த படிமையோன்" என்ற தொல்காப்பியப் பாயிரத்துள். படிமை யோன்" எனத் தொல்காப்பியர் வழங்கப்பட்டமையால், படிமை யென்ற சொல்லுக்கு ஜைனர்க்குரிய தவவொழுக்கமே பொருளாகுமென்று கொண்டும், டாக்டர் பர்ணல் என்பவர், ஐந்திரவியாகரண ஆராய்ச்சியில் "தொல்காப்பியர் பௌத்தராகவேனும் ஜைனராகவேனும் இருத்தல் வேண்டும்" எனக் கூறியிருப்பது கொண்டும் தொல்காப்பியர் ஜைனரா யிருக்கவேண்டுமென்று தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

படிமையென்பது ஜைனசமயத் தவவொழுக்கத்துக்குமட்டும் சிறப்புப்பெயராகாது வைதிகசமயத் தவவொழுக்கத்துக்கு முரியபெயரா மென்று, பதிற்றுப்பத்தின் (74) "கேள்விகேட்டுப் படிவமொடியாது, வேள்வி வேட்டனை யுயர்ந்தோருவப்ப.....கூறினை பெருமநின் படிமை யானே" என்ற பாடலில் படிமையென்றது வைதிகசமயத் தவவொழுக் கத்தை யுணர்த்தியிருப்பதைக் குறிப்பாய் எடுத்துக்காட்டி ஸ்ரீமத். நவநீதகிருஷ்ணபாரதியார் மறுத்துரைத்திருப்பது பொருத்த முடையதே.

இப்பாட்டினுள்ளே முதலடியுள், படிவம் என்ற சொல்லும் வைதிக விரதத்தை யுணர்த்தியிருக்கிறது. இரண்டற்கும் பிரகாரம் என்னும் பண்பை யுணர்த்துமிடைச் சொல்லாகிய 'படி' என்பதே பகுதியாயிருக் கிறது. இப்பகுதியே (விகுதி புணர்ந்துகெட்டு) பெயராய்நின்று நிறுக் கும் எடைக்கல்லையும் அளக்கும் நாழியையும் உணர்த்துதலால் அப் பகுதிக்கு ஒரு பொருளை வரையறுத்துக்காட்டும் பிரகாரமாகிய பண் புடைமையே செம்பொருளாமென் றறியத்தக்கது. "படியெடுத்துரைத் துக்காட்டும்படித்தன்றுபடிவம்" என்றார் கம்பரும். (உருக்காட்டுபடலம் 38.) குடியாம்தன்மையைக் குடிமை என்பதுபோலப் படியாம்தன்மையும் படிமை எனப்படும்.



இது தொல்காப்பியத்துள் அகத்திணையியலின் 28ம் சூத்திரத்தில் "மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய" என வழங்கப்பட்டிருக்கிறது. இதனுரையில், "ஏனோர் படிமைய" என்பதற்கு "முற்கூறிய அந்தணர் அரசரை யொழிந்த வணிகர் தமக்கு விரதங்களுடையவாக" என்று பொருளெழுதி, விரதமாவன கொள்வதூஉம் மிகைகொள்ளாது, கொடுப்ப தூஉம் குறைகொடாது பலபண்டம் பகர்ந்து ஈதல் முதலியன" என விளக்கப்பட்டிருக்கிறது. இதனால் "ஏனோர்" என்றது இங்கு வணிகர் என்றும், "படிமை" என்றது அவர் (வணிகர்) எப்படியிருக்கவேண்டு மோ அப்படியிருத்தலாகிய அவரது சொரூபமென்றும் வெளியாய்விட்ட மையால், படிமை என்பதற்கு, சைனர் தவவொழுக்கமே செம்பொருளாகா தென்றும், பொதுவாக யார் எப்படியிருக்கவேண்டுமோ அப்படியிருக்கு மியல்பே செம்பொருளாமென்றும் வெளியாகின்றது:

இவ்வியல்பினையே சிறப்பியல்பெனவும், சொரூபமெனவும், இலக் கணமெனவும் வழங்குவர். இதனால் "படிமையோன்" என்பதற்குச் சொரூபமுடையோன் என்பதே செம்பொருளாயினும் பாயிரத்துட் கூறப்பட்ட ஆசிரியனுக்குச் சொரூபம் (நியமம்) தவவொழுக்கமாதலால் அது இங்குக் குறிப்பாற் கொள்ளப்பட்ட பொருளாயிற்று. ஆகவே படி மையோன் என்ற பிரயோகங்கொண்டு தொல்காப்பியர் சைனரெனத் துணி தல் கூடாதாயிற்று.

தொல்காப்பியனார் இன்ன சமயத்தினரெனப் பிறிதோராற்றாலும் துணியப்படாமலும், உரைகாரர் முதலிய பெரும்புலவர்களா லெழுதப் படாமலுமிருந்தால், பிள்ளையவர்கள் இவ் வாராய்ச்சியிற் புகுந்தது ஒரு வாறு பொருந்துவதாகும். அங்ஙன மில்லையென்பதைப் பின்வரும் விஷயங்களாலு மறியலாம்.

ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள் அரிதிற் பரிசோதித் தச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியலுரையின் முகவுரையில் அவர்க ளாராய்ந்தெழுதியிருப்பது வருமாறு.—

"தொல்காப்பியமென்பது தொல்காப்பியனாற் செய்யப்பட்டதென் னும் பொருட்டு; இத் தொல்காப்பியனார் சமதக்கினி புதல்வரென்றும் திரணதூமாக்கினி என்னும் இயற்பெயரையுடையரென்றும், அகத்திய

வடக்கணின்று தென்றிசைப்போதுகின்றபோது இவரை உடன்கொடு போந்தாரென்றும், நச்சினார்க்கினியர் பாயிரவுரைக்கண் உரைத்தார். அவர் தொல்காப்பியன் என்பதற்குப் பழைய காப்பியக்குடியினுள்ளோன் என்று ஆண்டுக்கூறினார். இவற்றாற் றொல்காப்பியனென்பது இவர் குடிபற்றி வழங்கியபெயரென்றும் திரணதூமாக்கினியென்பது இவரியற் பெயரென்றுந் தெளியலாகும். அந்தணரருமறை முதலாகிய வடமொழியிலுள்ள தொன்னூல்கள் பலவற்றினும் "காவியகுலம்" என்பதோர் பழைய குடிப்பெயர் வழங்கப்படுகின்றமை அம்மொழிவல்லார் நன்கறிப. காவியர் கவியின்வழியினரென்ப; கவி சுக்கிரனுக்கு ஒரு பெயர். இவர் பிருகு மஹாருஷியின்மரபினராதலால், பார்க்கவர் எனவும் வழங்கப்படுவர். சமதக்கினியும் அவர் புதல்வரும், பிருகுவம்மிசியராதலாற் பார்க்கவரென்றும், அவரே கவிவம்மிசியராதலாற் காவியர் என்றும் பெயர்பெறுப. வான்மீகிபகவானும் பாலகாண்டத்துப் பிருகு மஹாருஷியின்பத்தினியைக் "காவியமாதா" என்று வழங்கினார். காவியமாதா என்பது காவியர்க்குத் தாய் என்றவாறு. இதனாற் சமதக்கினிபுதல்வரான திரணதூமாக்கினியின்குலம் காவியகுலமாதல் நன்குணரலாம். இது பழமைபற்றி விருத்தகாவியகுலமென்று வழக்குப்படுமென்று கருதலாகும். இது தமிழிற் றொல்காப்பியக்குடி என்று வழங்கப்படும். இக்குடியிற்பிறந்து சிறந்ததனாற் குடிப்பெயரே பெயராக வழங்கப்பட்டதென்க. பனம்பாரனார்கூறியபாயிரத்தும் "தொல்காப்பியனெனத் தன்பெயர்தோற்றி" எனக் கூறுதலால் தன் பெயர் குலப்பெயரேயாக விளக்கஞ்செய்தார் என்பதே கருத்தாதல் காண்க. இது முப்பாலாசிரியர் வள்ளுவர் எனப் பெயர்சிறந்ததுபோல்வ தொன்று" என்பதாம்.

இதனால், தொல்காப்பியர் வேதத்தில் வழங்கிய பழமைவாய்ந்த பிருகுகுலத்திற் பிறந்த ஜமதக்னிமுனிபுத்திரரான வைதிகமுனிவரென நன்கறியலாகும்.

இன்னும், அவர்கள் காட்டிய "டாக்டர் பார்ணல்" என்பவரெழுதிய ஐந்திர வியாகரண ஆராய்ச்சிக்குறிப்பானது அவ் வைந்திரவியாகரணவாராய்ச்சியாலேயே பாதிக்கப்படுவதாம். எங்ஙனமெனில்? "ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்" என்ற தொடர்மொழிக்கு, "இந்திரனாற்



செய்யப்பட்ட ஐந்திரவியாகரணத்தினை நிறையவறிந்தவர்" எனப் பொருளெழுதப்பட்டிருக்கிறது. ஐந்திர வியாகரணம் வேதாங்கமாய் வைதிகசமயத்தாருக்குமட்டும் உடம்பாடாய் ஓதியுணரப்பட்டுவந்ததென்பதும், அவைதிகசமயத்தாராகிய சைனர்முதலாயினோரால் ஓதியுணராது அநாதரிக்கப்பட்டதென்பதும் பின் வருவனவற்றா லறியலாம்.

திருநாவுக்கரசுநாயனார்தேவாரத்துள், திருவாரூர்த்திருத்தாண்டகத்தில் "இந்திரத்தையினிதாக ஈந்தார் போலும்" என ஒரு பூருவவிருத்தாந்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அது காலகதியாற் கற்கமுடியாது கடுமையடைந்திருந்த ஐந்திரமென்னும் வடமொழிவியாகரணத்தைச் சிவபிரான் பாணினிமுனிவர்க்கு இனிதிற்கற்கும்படி யெளிதாக்கி வகுத்துரைத்த வரலாறுமென் றறியக்கிடக்கிறது. அப் பாணினீயம் இக்காலத்தில் வேதாங்கமாக வைதிகரால் ஓதப்பட்டுவருதலால் இப்பாணினீயத்துக்கு முதனூலான ஐந்திரவியாகரணமே பாணினீயம் தோன்றாத முற்காலத்தில் வேதாங்கமாக வைதிகராற் பயிலப்பெற்றுவந்ததென்பது பெறப்பட்டது.

இனி, அவைதிகராகிய சைனரால் ஐந்திரவியாகரணம் விரும்பிக் கற்கப்படாது அநாதரிக்கப்பட்டிருந்ததென்பதும் பின் வருமாற்றாலறியலாம்.

சிலப்பதிகாரத்துள், காடுகாண்காதையில், மாங்காட்டு மறையோன் கூற்றினுள் (98, 99) "புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின், விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்" என்பதனால், "புண்ணிய சரவணமென்னும் பொய்கையிற் படிவீராயின் இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணமென்னு மிலக்கணத்தை உணர்வீர்" எனத் திருமாலிருஞ் சோலைமலையிலுள்ள தீர்த்தவிசேடச்சிறப்பைக் கோவலனுக்குச் சொல்லா நிற்க அவைதிகநெறியொழுக்கால் அது கேட்கப்பொறாத கவுந்தியடிகள் மறுமொழியாக மறையோனை யேளனஞ்செய்துகூறிய கூற்றினுள், "கப்பத் திந்திரன் காட்டிய நூலின், மெய்ப்பாட் டியற்கை விளங்கக் காணாய்" என ஐந்திரவியாகரணம் அநாதரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அடியார்க்குநல்லார் "தேவர்களினும்வைத்து ஆயுக்கற்பத்தினை மிகவுடைய இந்திரன் றோற்றுவித்த வியாகரணத்தினை எம்முடைய அருககுமரன் அருளிச்செய்த பரமாகமங்களிற் காண்கின்றிலையோ; அஃதுளதாக நின் புண்ணியசரவணம் பொருந்துதல்வேண்டா" என உரை

யெழுதியிருத்தலால் வேதாங்கமாயுள்ள ஐந்திரவியாகரணப்பயிற்சி அவைதிகரால் அநாதரிக்கப்பட்டிருந்ததென நன்கறியலாம்.

இவ்வாறாக ஐந்திரவியாகரணப்பயிற்சி அவைதிகரால் அநாதரிக்கப்படுவதற்குக் காரணம், அவர்களுக்குப் பயன்படாத வைதிகப்பிரயோகத்துக்குரிய வேதலக்ஷணங்களையும் மந்திராக்ஷரஸ்வர விதிகளையும் விரித்துரைத்திருத்தலேயாம். ஆதலால் அவைதிகர்கள் வேதவழக்கு விதிவிரவாத பிறவியாகரணங்களையும் அவருள்ளும் ஜைநர் விசேடமாக "ஜைநேந்திரம்" என்னும் வியாகரணத்தையும் பயில்பவராயிருந்திருக்கிறார்கள். இப்படியிருந்தமையால் "ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்" என்று; அவைதிகனைக் கூறுவது தகுதியுடைத்தாகாது. வைதிகனைக் கூறுவதே தகுதியுடையதாகும்.

இன்னும், நான்மறை முற்றிய, வதங்கோட் டாசாற் கறிறபத் தெரிந்து" என்றதில், தெரிவோனாகிய அதங்கோட்டாசான் சதுர்வேதபாரங்கதனென்று சொல்லப்பட்டமையால் அவற்குத் தெரிவிக்கும் தொல்காப்பியனாரும் வேதவேதாங்கபாரங்கதரென்பது பெறப்படும்.

இன்னும் தொல்காப்பிய நூலுள்ளும் உரைகளுள்ளும் புகுந்தாராய்வார்க்குத் தொல்காப்பியர் வைதிகோத்தமரெனத் துணிதற்கு "உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான" என்றற் றொடக்கத்துச் சூத்திரங்களும் அவற்றினுரைகளு மாகிய பிரமாணங்கள் பலவுள்ளன. அவையெல்லாமீண்டுரைப்பிற் பெருகுமென விடப்பட்டன.

திரு. நாராயணையங்கார்.
பத்திராதிபர்.

உ

# உரைகாரர்களும் அண்மைவிளியும்.

சென்ற ஆனிமாதச் செந்தமிழ்ப்பத்திரிகையில், 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்ற தொல்காப்பிய விளிமரபுச்சூத்திரம் நான்கு உயிரீற்றுச்சொற்களுக்குமட்டு முரிய விதியாமென்றும் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்னு மூன்றுரைகாரர்களும் அவ்வாறே பொருள்வரைந்துள்ளார்களென்றும் எழுதி



னேன். இதனைப் பத்திராசிரியரவர்கள் மறுத்து மேற்கூறிய மூன்றுரையாசிரியர்களும் அங்ஙனங்கொள்ளவில்லையென்ற தம்முடிபை நிலைநிறுத்துதற்குப் பலபல விசாரணைசெய்தார்கள். மூன்றுரைகளையும் வாசித்தமாத்திரையில் உண்மை யெதுவென்றறிதல் எளிதாயிருத்தலின், இவ்விஷயம்பற்றி யின்னுஞ் சில வெழுதுதல் அனாவசியகமாகும். உரைகாரர்களது கருத்து தமது கக்ஷிக்கு விரோதமாயுள்ளதென்றதனை நன்குணர்ந்தே இவனியார் என்னும் புறப்பாட்டாராய்ச்சியெழுதிய மாணவரவர்களும் தொல்காப்பியச்சூத்திரத்தினையெடுத்துக்காட்டியவிடத்து அதனுரைகளைப்பற்றி யாதுங் கூறாது விடுத்தார்கள்.

மேலேசுட்டிய மூவரன்றியும் வேறிருவர் சொல்லதிகாரத்திற்கு உரையிட்டுள்ளார்கள். இவ்விருவருள், பேராசிரியரது உரையைப் பத்திராசிரியரவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். அவ்வுரையையும் அதுபற்றி அவர்கள் கூறியிருப்பனவற்றையும் பின்னர் ஆராய்கின்றேன். ஐந்தாவது உரைகாரராகிய *கல்லாடரது கருத்தை முதலில் தருகின்றேன். அவருரை வருமாறு:—

'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' "என்னுதலிற்றோவெனின், எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல் நுதலிற்று: மேற்கூறியவாறன்றி இன்னுழி யியல்பா மென்கின்றமையின் மேற்கூறிய வுயிரீறுநான்கினையுமுடைய அணியாரைக் கூவுஞ்சொற்கள் இயல்பாய் விளியேற்குமென்றவாறு. உ-ம் நம்பிவாழி, நங்கைவாழி, வேந்துவாழி, கோவாழி எனவரும்."

இவ்வுரையினின்றும் கல்லாடரது கருத்து மிகத் தெளிவாய் விளங்குகின்றது. இளம்பூரணராதிய வுரைகாரர்களோடொப்ப, இவரும் இச்சூத்திரம் நான்கு உயிரீற்றுப்பெயர்களுக்குமட்டும் ஏற்புடையதொரு விதியாமென்றே கொண்டனர். மெய்யீற்றுப்பெயர்களை இதனுட்கொண்டிலரென்றுகூறுதல் பிழை. இங்ஙனமாக, ஆராய்ச்சியிற்சிறந்த நான்கு உரைகாரர்கள் வேறுபாடின்றி யொரேமுகமாகக் கிழவோன் அண்மைவிளியொன்றற்கு இச்சூத்திரம் ஆதாரமாகாதென்னுங் கருத்தினராயுள்ளார்கள்.

இனி, பேராசிரியருரையினையும் அதுபற்றிப் பத்திராசிரியரவர்கள் கூறியிருப்பனவற்றையுஞ் சிறிது ஊன்றிநோக்குதல்வேண்டும்.

---

* கல்லாடரது உரையையும், பேராசிரியரது உரையையும், இளம்பூரணரது உரையையும், எனது அன்பார்ந்த சகோதரர் ஸ்ரீ வ-உ-சிதம்பரம்பிள்ளையவர்கள்மூலமாய்ப் பெற்றேன்.

எனக்குக்கிடைத்த பேராசிரியருரைப்பிரதி தஞ்சை ஸரஸ்வதி மஹாலிலுள்ள பிரதியினின்றும் எடுத்தெழுதி யனுப்பப்பட்டது. அதன் கண்ணுள்ளதைக் கீழேதருகின்றேன்.

'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' 'இத்திணைக்கண்வருமெல்லாவீற்றுப்பெயரு மண்மைக்கண் விளியேற்குமாறுணர்-ற்று. இச்சூத்திர முன்னும் பின்னு நோக்கிநிற்றலிற் சிங்கநோக்காகிக் கிடந்ததென்று கொள்க. மேற்சொல்லப்பட்ட வுயிரீற்றுப்பெயருமினிபோதுகின்ற புள்ளியீற்றுப்பெயரு..............ப்பெயரு மண்மைக்க ணியல்பாகி விளியேற்கும்; னகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிந்த வேனையகொள்ளப்படும்.'

'நம்பிவாழி, நங்கைவாழி, வேந்துவாழி, கோவாழி, மாதர்கூறு, அண்ணல்கூறு,...............தம்பிகூறு, அன்னங்கூறு, கானல்கூறு எனவரும். பிறவுமன்ன. 'ஆவுமானியற்பார்ப்பனமாக்களு' மென்பது மண்மைவிளி.'

இப்பாடத்திற்கும் பத்திராசிரியரவர்கள் பதிப்பித்த பாடத்திற்கும் சிறிது வேற்றுமையுண்டு. உரையில் 'புள்ளியீற்றுப்பெயரு' மென்பதனையடுத்துச் சிலவெழுத்துக்கள் மறைந்துபோயினமை தெரித்தற்குச் சிறிது இடம் விடப்பட்டிருக்கிறது உதாகரணங்களில் 'அண்ணல்கூறு' என்பதற்கும் 'தம்பிகூறு' என்பதற்கும் இடையே ஒருதாரணம் விடுபட்டுபோயினமை காட்டுதற்கு இடந் தரப்பட்டிருக்கிறது.

பிறவுரையாளர்களோடு மாறுபட்டுப் பேராசிரியர் சூத்திரவுரை வகுத்துள்ளாரென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. இச்சூத்திரத்தினைச் சிங்கநோக்காகக்கொண்டமையும் உரையால் வெளியாகின்றது. ஆனால் வியவகார காரணமாயுள்ளது எவ்வீற்றுச்சொல்லோ அவ்வீற்றுச்சொற்கள் சம்பந்தமானவரையில் இப்பேராசிரியருரைக்கும் பிறவுரைகளுக்கும் சிறிதும் வேறுபாடில்லை. ஐயப்பாட்டிற்குச் சிறிதும் இடமின்றி, நுணுக்கவாராய்ச்சியால் திரித்துக்கொள்ள முடியாதபடி, 'னகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிந்த வேனைய கொள்ளப்படும்' என்று மிகத் தெளிவாக உரை காணப்படுகின்றது. ஆகவே 'கிழவோன்' என்ற னகரவிற்றுச்சொல் இயற்கை யண்மை



விளியாமெனற்கு 'அண்மைச் சொல்லே இயற்கை யாகும்' என்னும் சூத்திரம் ஆதாரமாகாதென்பதே பேராசிரியர்க்குங் கருத்தாதல் நன்கு அறியப்படும்.

இங்ஙனமாகப் பேராசிரியருரையினாலேயும் தமதுகக்ஷி அநுகூலமடையவில்லையென்பது கண்ட பத்திராசிரியரவர்கள் அவ்வுரைப் பகுதியில் தமக்குப் பிரதிகூலமாயுள்ளன இடைச்செருகலென்று கூறத் துணிந்தார்கள்.

பேராசிரியருரையை ஆதாரமாகக் காட்டினவர்கள் பத்திராசிரியரவர்களாம். அவ்வாறு காட்டினமாத்திரையானே இப்போதுள்ள உரைரூபமுற்றிலும் நம்பி யங்கீகரிக்கத்தக்கதாயிருக்கவேண்டுமென்பது போதருகின்றது. இதற்கு மாறாகத் தமக்கு உறுதுணையெனக்கொண்ட ஆதாரத்தின்கண்ணே இடைச்செருகலுளதெனக் கூறுவதாயின், அவ் ஆதாரந்தான் எத்துணை வலியுடையதென்று எடுத்துச்சொல்லவும் வேண்டுமோ? உரைரூபத்திற் சிறிதேனுஞ் சந்தேகமேற்படுமாயின், அதனை யாதாரமாகக்காட்டுதலிற் பயனுமில்லை; அஃது அங்கீகாரயோக்யமு மாகாது. அன்றியும், இடைச்செருகலிருப்பதாயேற்படுமாயின், எவையெல்லாம் அவ்வாறுள்ளனவென்று துணிந்தறிதல்வேண்டும். உண்மையுரையென்றுகொள்ளுமவ்வொருபகுதியும் பரிசோதனையால் இடைச்செருகலன்றென்பது தெளிவிக்கப்படுதல்வேண்டும். 'சிங்கநோக்கு' என்ற கருத்தும் அதற்கு அநுகூலமாயிருக்கும் ஒருசில்வும் இடைச்செருகலல்லவென்பது ஸ்ரீநுதலையாகத் தெளிவிக்கவேண்டும் பொறுப்பு அவர்கள்பாலதாம். இப்பொறுப்பைப் பத்திராசிரியரவர்கள் நிறைவேற்றவில்லை.

இலக்கண வுரைபோன்ற விசேஷநூல்களில் (Technical works) இடைச்செருகலுளதாதல் மிகவும் அரிதாம். இவ்வகை நூல்களிற் சிலபிரதிகளையும், இராமாவதாரப் பிரதிகளிற் சிலவற்றையும் ஒப்புநோக்கினார்க்கு இக்கூற்றின் உண்மை யெளிதிற் புலப்படும். இலக்கண வுரைகளிலேயும் இடைச்செருகலுளதென்பதற்கு உரையாசிரியருரையிற் சிலபகுதிகளைப் போலியுரையெனச் சேனாவரையர் நிறுவுதலை ஆதாரமாகத் தருகின்றார்கள். ஆனால் 'போலியுரை' எனப்படுவதன்கருத்து இடைச்செருகலன்றென்பது யாவரு

நன்கறிந்ததேயாம். ஆசிரியர்கருத்தினைப் பிழைபடவுணர்ந்து தவறாகக்கொண்டபொருளே போலியுரையென்று கூறப்படுவது. இங்ஙனமிருப்பவும் 'போலியுரை' யென்று சேனாவரையர் முதலியோர் கூறியதனை இடைச்செருகலுண்மைக்கு ஆதாரமாகக்காட்டியது தமிழுலகத்திற்கு என்றும் வியப்பாகவே இருக்கும். இதுநிற்க; விசேஷ நூல்களுள்ளும் எழுதுவாரும் படிப்பாருமின்மையால் இங்ஙன மோருரையுண்டென்பதுதானும் தமிழ்மக்கள் வெகுகாலமாக் அறியாதிருந்த வோருரையின்கண்ணே இடைச்செருகல் காணப்படுதல் அரிதினுமரிதாம்.

இங்கே கூறியவற்றால், பேராசிரியருரையில் இடைச்செருகலுளதென்னும் பத்திராசிரியரவர்கள் கூற்று மிகுதியும் ஐயப்பாட்டிற்கு ஹேதுவாய்நிற்பதெனல் அறியலாகும் அதிலேயும் உரையில் எப்பகுதி தம்கக்ஷியைப் பொய்படுத்துவதோ அப்பகுதியே இடைச்செருகல் என்று அவர்கள் கூறும்போது ஏற்கனவே நிகழ்ந்த ஐயம் வலியுற்று அவர்கள் கூற்றின் நொய்ம்மையை வெளியாக்குகின்றது. எனினும் இடைச்செருகல்தானென்பதற்குப் பத்திராசிரியரவர்கள் தரும் நியாயங்களை ஆராயவேண்டுங் கடமையென்பாலுளது. 'னகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிந்தவேனைய கொள்ளப்படும்' என்று பேராசிரியருரையிற் காணப்படுகின்றது. னகரவீற்றுச் சொற்களுக்குரிய அண்மைவிளிச் சிறப்புவிதி விளிமரபின்கண் இல்லையாதலின் பேராசிரியர் அங்ஙனம் கூறார் என்பதும், 'அண்மைச் சொல்லிற் ககர மாகும்'என்ற சூத்திரம் சிறப்புவிதியாதலில்லை யென்பதும் பத்திராசிரியரவர்கள் கூறும் நியாயம். இச்சூத்திரம் சிறப்புவிதியாகுமென்று பேராசிரியர் கருதியுள்ளாராவென்னும் விஷயமே முதலில் ஈண்டாராய்தற்குரியது; பிறிதன்று.

இதனை நிச்சயித்தற்குப் பத்திராசிரியரவர்கள் இடைச்செருகலெனத் தள்ளாது பேராசிரியரது உரைதானென ஒப்புக்கொண்டவுரைப்பகுதியே தக்க கருவியாகக் கொள்ளற்பாலது. பிறிதொன்றனைக்கொண்டால் அதனையும் இடைச்செருகலெனல் அவர்கட்கு மிக எளிது. அவர்கள் ஒப்புக்கொண்டவற்றில் அண்மைச் சொல்லிற் ககர மாகும்' என்றதன்கீழ்க் காணப்படும் எய்தியது விலக்கி மேலதற்கோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று' என்றவாக்கியமு



மொன்று. இவ்வாக்கியத்தின் உண்மைப்பொருளை விசாரிப்பதனால் மட்டுமே, பேராசிரியரது கருத்து வெளியாகக்கூடும். எவ்விதியினாலெய்தியதனை விலக்கிற்றென்றும் மேலதற்கு என்றது எச்சூத்திரத்தினையென்றும் நோக்குதல்வேண்டும்.

முதலாவதாக 'மேலதற்கோர் புறநடை' யென்பதை யெடுத்துக்கொள்க. உரைகளில் இவ்வாறு வருமிடங்களையெல்லாம் நோக்குவோமாயின், அது எச்சூத்திரம்பற்றி யெழுந்ததோ அதற்கு நேரேயடுத்து முன்புள்ள சூத்திரத்தினையே உணர்த்துவதாக இருக்கிறது. இவ்வித முணர்த்தவில்லையெனின், 'மேலதற்கு' எனக் குறிப்பிட்டு ஒன்றனைக் கூறுவதனாற் பயன் யாதுமின்றாம். நச்சினார்க்கினியர் இத்தொடரைச் சொல்லதிகாரத்தில் 10 முறை யெடுத்தாண்டுள்ளார் (சூ-21, 36, 96, 114, 273 277, 408, 428, 443, 454). ஈண்டெல்லாம் அவ்வச்சூத்திரங்களுக்கு அடுத்து முன்புள்ள சூத்திரங்களையே அது குறிப்பதாகும். இங்ஙனமன்றி முன்புவந்துள்ள பிறிதொரு சூத்திரத்தினை இச்சொல் சுட்டுவதாதல் பண்டையுரைகளில் யாண்டுமில்லையாம். ஆகவே 'எய்தியது விலக்கி மேலதற்கோர் புறநடையுணர்த்துதல் நுதலிற்று' என்ற வாக்கியத்தில் மேலதற்கு என்ற சொல்லாற் குறிப்பிடப்பட்டது சந்தேகத்துக்கிடனின்றி நிச்சயமெய்துகின்றது. தமிழ்ப்பாஷையிலுள்ள சொற்களுக்குப் பொருள் நியதி யுண்டாயின், பேராசிரியர் பொருள்நியதியறிந்து சொற்களைப் பிரயோகித்திருப்பாராயின் 'மேலதற்கு' என்றசொல் இவ்விடத்தில் 'அன்னென்னிறுதியாவாகும்மே'என்றதனையே குறிக்கவல்லது; பிறிதொன்றனையும் குறிக்கமாட்டாது.

இனி, புறநடையென்பதன் கருத்து யாதென அறிதல்வேண்டும். உரைகாரர்களது பிரயோகங்களை யுற்றுநோக்கினால் அஃது இரண்டுவகையானுணரப்படுவது காணலாம். (i) ஒரு சூத்திரத்தின் ஆணைசெல்கின்றவிடத்துப் புறநடைச்சூத்திரத்தின் ஆணையும் உடனிகழ்ந்து விதியை முற்றுவிக்கும்; உதாரணமாக, 'அவையல்கிளவி மறைத்தனர்கிளத்தல்' என்ற சூத்திரத்தினையும் அதற்குப் புறநடையாகவந்த 'மறைக்குங்காலை மரீஇயதொராஅல்' என்ற சூத்திரத்தினையும் நோக்கி இதனுண்மை தெளியலாம். (ii) சூத்திரத்தினானே

செல்லாதொழிந்துநின்றவிடத்துப் புறநடைச்சூத்திரத்தின் ஆணை நிகழ்ந்து இலக்கணத்தைமுற்றுவிக்கும். உதாரணமாக 'இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி-பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே' என்ற சூத்திரத்தினையும் இதற்குப் புறநடையாகவந்த 'அசைநிலைக். கிளவி யாகுவழி யறிதல்' என்ற சூத்திரத்தினையும் நோக்கி யுணர்க. 'அதிகாரப்புறநடை' என்றவிடத்தெல்லாம் இவ் இரண்டாவது பொருளினையே நெறிப்பட விரித்துணர்கின்றோம்.

'மேலதற்கு' என்றதன் பொருளொடுபொருந்தப் 'புறநடை' யென்பதற்குப்பொருள்கொள்ளப்படுதல்வேண்டும். இங்ஙனம் கொள்ளுங்கால் இரண்டாவதுபொருளே ஏற்புடையதாயமையும். 'அன்னென்னிறுதி' யென்பது அண்மைச்சொல்லிற்குச் செல்லாது. அங்ஙனம் செல்லாத அண்மையிடத்து 'அண்மைச் சொல்லிற்கு அகரமாகும்' என்றதன் ஆணை நிகழ்ந்து, அன்னீறுபற்றிய இலக்கணத்தை முற்றுவிக்கிறது. ஆதலால், 'புறநடையெனின் அன்னீறெல்லாம் அண்மைக்கண் ஆகாரத்திரிவும் உடன்பெறவேண்டும்' என்று கூறுவது பொருந்தாது. மேலைச்சூத்திரத்திற்குப் புறநடையாகக் கொண்டு 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்றதனாலெய்தியதனை விலக்குவதாகக்கூறின், சிங்கநோக்கு "இடையிட்டு மறைக்கப்பட்ட் பிறவீற்றிலும் செல்லாதொழியும்"என்று பத்திராசிரியரவர்கள்கூறுவதும் பொருந்தமாட்டாது. ஏனெனில், சிங்கநோக்குச்சூத்திரத்தினையடுத்து உயர்திணை மெய்யீறுகளனைத்தும் ஒருங்கு கூறப்படுதலின், இடையிட்டு மறைப்பதற்கு யாது மில்லையாம்.

இனி 'எய்தியது விலக்கி' என்றதனை 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்றதன்கீழ்க் காணப்பட்டபோது எவ்வாறு வியாக்கியானித்தார்களோ (செந்தமிழ்-XVII-8- பக். 376 முதல்) அவ்வாறு செய்யாது, அதன் உண்மைப்பொருளை (பொதுவாக முன்வந்த சூத்திரமொன்றினாற் பெறப்பட்டதை விலக்குதல் என்பதனை)த்தந்ததற்குத் தம்மூலகம் கடப்பாடுடையதாகின்றது. 'அளபெடைமிகூஉமிகரவிறுபெயர்- இயற்கையவாகுஞ்செயற்கையவென்ப' வென்பது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுப்பது (நச்). இது மூன்றுசூத்திரங்களுக்குமுன்புள்ள 'இ ஈயாகும்; ஐ ஆயாகும்'



என்ற சூத்திரத்தா லெய்தியதனை விலக்கியது. ஆதலாற் பொதுவாக முன்புவந்த சூத்திரமொன்றனை இத்தொடர் குறிக்கவல்லதென்பது அறியலாகும். 'மேலதற்கோர்புறநடை'யென்பது'அன்னென்னிறுதி யாவாகும்மே' என்ற சூத்திரத்தினையல்லது பிறிதொருசூத்திரத்தினையுங் குறிக்கமாட்டாதாதல் மேலே நன்குபெறப்பட்டமையின், 'எய்தியதுவிலக்கி' என்பது 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்னுஞ்சூத்திரம்பற்றியே யெழுந்ததாகும். இச்சூத்திரம் சிங்கநோக்காக நிற்பதென்பது பேராசிரியர்கருத்தாதலால் அது மெய்யீற்றிற்கும் சேருவதாய்முடிய, ணகரவீறு சம்பந்தமானவரையில் அவ்வாறெய்தியது விலக்கப்பட்டது. இங்ஙனம் பொதுவிதியைவிலக்கிப் பிறிதொருவிதிவகுத்தலினாலே'அண்மைச்சொல்லிற்ககரமாகும்' என்பது சிறப்புவிதியாமென்றலே பேராசிரியரதுகருத்தாய்முடிந்தது.

ஈண்டெழுதியவற்றால் 'ணகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிந்த ஏனையகொள்ளப்படும்' என்று பேராசிரியருரையிற்காணப்படுவது அறியாதாரது இடைச்செருகலன்றென்பதும் முன்பின்வாக்கியங்களாற் றெளியப்பட்ட அவரதுகருத்தோடு முற்றும் பொருந்துவதாமென்பதும் நன்குணரலாகும். 'அண்மைச் சொல்லிற் ககரமாகும்' என்பது அன்னீற்றுச் சிறப்புவிதியாமேயன்றி ணகரவீற்றுச் சிறப்புவிதியெனல் பொருந்தாதாகலின், பேராசிரியர் அங்ஙனமெழுதார் என்கின்றார்கள். விளிமரபில் ணகரவீற்றில் அன்னிறுதிச்சொற்களும் ஆனிறுதிச்சொற்களுமே கொடுக்கப்பட்டுள்ளன. 'ணகரவீறு சிறப்புவிதிபெறுதலின்' எனப் பேராசிரியருரையிற்காணப்படுவதால் இவையிரண்டும் சிறப்புவிதிபெறுதல்வேண்டும். இவற்றுள் அன்னிறுதி சிறப்புவிதிபெற்றமை மேலெழுதியவற்றால் தெளியப்பட்டது. ஆனிறுதியும் சிறப்புவிதிபெற்றுளதாவென்பது ஆனிறுதிபற்றிய சூத்திரங்களுக்குப் பேராசிரியர்கூறிய வுரைநோக்கியே துணியப்படுதல்வேண்டும். அங்ஙனம் நோக்காது ணகரவீறு சிறப்புவிதி பெறவில்லையெனப் பத்திராசிரியரவர்கள் கூறுவது பொருந்தாது. மேலும் அன்னீறொன்றே அண்மைவிளியேற்றற்குரியதென்பது பேராசிரியர்கருத்தாயினு மாகலாம். இவையெல்லாம் விளிமரபுச்சூத்திரங்களனைத்திற்கும் பேராசிரியருரை வெளிவந்தபின்னரே நிச்சயிக்கற்பாலது. இவ்வுரையை வெளிப்படுத்து நிச்சயஞ்செய்தலை

யொழிந்து பேராசிரியர்கருத்தை யொருவாக்கியங்கொண்டே அறிய முயலுதல் நியாயமுறையன்றாம்.

உரை கிடைத்த அளவில் 'னகரவீறு சிறப்புவிதிபெறுதலின்' என்பது பேராசிரியர்கருத்தேயாகுமெனற்கு வேறு சான்றும் உளது.

'அண்மைச் சொல்லே இயற்கை யாகும்' என்ற சூத்திரத்தின்கீழ் னவ்வீற்றுதாரணம் கொடுக்கப்படவில்லை. உயர்திணை உயிரீறும் மெய்யீறும் சம்பந்தமானவரையில் உதாரணங்களைப் பூர்த்தியாகத்தருதலே பேராசிரியர் கருத்து. முதலாவதாக உயிரீற்றுதாரணங்கள் நான்கும் தருகின்றார். பின் 'னரலள' என்னும் நான்கு மெய்யீற்றுதாரணங்கள் தரப்படுதல்வேண்டும். 'கோவாழி' யென்பதனையடுத்து 'மாதர்கூறு' என ரகரவீறு காணப்படுகின்றதேயன்றி னகரவீற்றுதாரணமில்லை. இதன்பின் லகரவீறுவரல்வேண்டும்; அவ்வாறே 'அண்ணல்கூறு' என்ற உதாரணமுளது. இதனையடுத்து ளகரவீற்றுதாரணம் வேண்டும்; இதற்குரிய இடம் விடுபட்டிருக்கிறது. இம்முறையை நோக்குமிடத்து னகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிக்கப்பட்டது என்ற கருத்து, பேராசிரியரதேயாதல்வேண்டுமென்பது உறுதியடையவில்லையா? ளகரவீற்றுதாரணம் காணப்படாமைபற்றி அவ்வீற்றினைவிலக்கல் பேராசிரியரதுகருத்தெனல் பொருந்தாதவாறுபோல், னகரவீற்றுதாரணம் காணாததுபற்றி அதனை விலக்கினாரென்றல் சரியன்றெனின், அங்ஙனமன்று. ளகரவீற்றுக்குரியவிடம் தஞ்சைப்பிரதியில் விடுபட்டிருப்பதே பேராசிரியருரையில் ளகரவீறு உதாரணங்காட்டப்பட்டிருந்தமைக்குச் சான்றாம். னகரவீற்றுதாரணம் கொடுக்கவேண்டும் நிலையில் இடம் விடப்படவில்லையென்பது அறியத்தக்கது. உயிரீற்றுதாரணங்களொழிய ஏனையுதாரணங்களெல்லாம் இடைச்செருகலாமென்று கூறி, அறியாதார்கை ஈண்டுத் தெளியக்கிடத்தலாலே இடைச்செருகல்மிகுதியும் உளதென்பதைக் குறிப்பிற் பெறவைக்கிறார்கள். ஆனால் தஞ்சைப்பிரதியை நோக்குமிடத்து உண்மை யொருவாறு அனுமானிக்கக்கூடியதாயிருக்கிறது. அதில் "மேற்சொல்லப்பட்டவுயிரீற்றுப் பெயருமினியோதுகின்ற புள்ளியீற்றுப்பெயரு..............ப்பெயருமண்மைக்கணியல்பாகிவிளியேற்கும்" என்று காணப்படுகிறது. இத்தொடரில் எழுத்துக்கள் மறைந்திருப்பதையும் உதாரணங்கள் காட்டப்பட்டிருப்பதையும் உத்தேசித்தால் 'மஃறிணை' யென்பது விடுபட்டுப்போயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. வேறு பிரதிகள் நோக்கியே இதன் உண்மையறியவேண்டியதாயிருப்பினும் "அவற்றை (i.e. அவ்வுதாரணங்களை) ஈண்டமைத்தற்கேற்ற குறிப்பு ஒன்றுமில்லை" யென்று பத்திராசிரியரவர்கள்கூறுவது பொருந்தாமையறியலாம்.



இவ்வாறாகத் தஞ்சைப்பிரதி சிலவுண்மைகளைத் தெரிவிப்பதாயிற்று. பேராசிரியருங்கூட 'அண்மைச் சொல்லே இயற்கை யாகும்' என்ற சூத்திரம் னகரவீற்றுப்பெயர்கட்கு உரியதன்றெனக்கொண்டமை தெளிவாகின்றது. ஆகவே தொல்காப்பியச்சொல்லதிகாரத்திற்கு உரைகண்டவர்களுள் ஒருவரேனும் 'கிழவோன்' என்பது இயற்கையண்மைவிளியெனற்கு 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரத்தினை ஆதாரமாகக்கொள்ளுங்கருத்துடையாரல்லர். தெளிவானவாக்கியங்களை நுணுகிநுணுகிச் சென்று வேண்டும்பொருள் பெறவைத்தும், அவ்வாறும் வியாக்கியானஞ்செய்தொழிக்கக்கூடாததனை இடைச்செருகலெனவொதுக்கிவைத்தும், உரைகாரர்கள் கூறாததனை யவர்கள் கூறினார்களெனக் காட்டமுயல்வது பெரிதும் விசனிக்கத்தக்கதாம். இவ்வாறு செல்லாது உரைகாரர்கள் அனைவரும் பிழைபோயினார்களென்று பத்திராசிரியரவர்கள் கூறியிருப்பின், அக்கூற்று எல்லாராலும் போற்றற்குரியதாய் நன்கு மதிப்புப் பெறும். ஆனால், தொல்காப்பிய முழுமையு நன்கு கற்று அதன் பொருள் செல்நெறியையும் (method of exposition) ஊன்றிநோக்குவார்க்குப் பேராசிரியரொழிந்த ஏனையுரைகாரர்கள் இவ்விடத்தில் உண்மையுரையினையே கூறியுள்ளார்களென்பது வெளியாகுமென நினைக்கிறேன். 'தொல்காப்பியமும் அதன் உரைநெறியும்' என்ற விஷயம் தமிழ்மக்கள் எல்லாராலும் நன்கு ஆராய்ந்தறிதற்குரியது.

S. வையாபுரிப்பிள்ளை,

திருவனந்தபுரம்.

உ

# மதிப்புரை.

அகலிகைவெண்பா:—இது, சென்னை ஸிவில்வெற்றிநெரி இலாகா பென்ஷன் டிப்டி ஸூப்பரின்றென்றென்றும், மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்யாவிஷய ஆலோசனைச் சபையங்கத்தினருமாகிய ஸ்ரீமான். வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்களால் இயற்றப்பட்டது. சொல்வளமும் பொருள்வளமும் மிக்குள்ளது. மூன்று காண்டத்தில் 246 செய்யுளுடையதாகப் பாடி முடிக்கப்பட்டிருக்கிறது. இப்பதிப்பில் அகலிகை வெண்பாவசனமும் குறிப்புரையும் படிப்பவர்க்கு இனிது விளங்கும்படி நன்குய் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள் இந்நூலுக்கு அளித்துள்ள முகவுரையாலும், இதனுடன் சேர்த்திருக்கும் துண்டுப்பத்திரத்தாலும் மற்றும் பல புலவர்கள் கொடுத்துள்ள அபிப்பிராயங்களாலும் தனிப்பாடல்களாலும் இந்நூலின் பெருமை இனிதுவிளங்கும். செய்யுளியற்றுவதிலும், உரைநடை யெழுதுவதிலும் இந்நூலாசிரியர்க்குள்ள திறமை அவர்கள் இயற்றிய சுவர்க்கநீக்கமுதற்காண்டம், கோம்பி விருத்தம், நெல்லைச்சிலேடைவெண்பா; (கல்விவிளக்கம் முதற்பாகம்,) ஜான்மில்ட்டனர் சரித்திரம் முதலியவற்றுலும் விளங்கும். இந்நூல், தமிழ்ப்பெருவள்ளலும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனதிபதியும், ஆன மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் ராஜா இராஜராஜேஸ்வரமுத்துராமலிங்கஸேதுபதியவர்களுக்கு உரிமைசெய்யப்பட்டிருக்கிறது. நல்லகடிதத்திற் றிருத்தமாய் அச்சிடப்பெற்றது. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

உ

# அன்பின் நிலை.

சகல ஜீவராசிகளிடத்தும் ஊடுருவி விளங்கும் மானஸீகதர்மங்களில் தலையாய் நிற்பது அன்பு என்னும் சிறந்த குணமே. எம்மதத்தாரும் அன்பையே விசேஷமாகக் கொண்டாடிவருவதால், அன்பே சமரச சன்மார்க்க மூலமெனக் கருதப்படுகின்றது.

உலக வாழ்க்கைக்கு அவசியமாகிய மண், பொன், பெண் இம்மூன்றையும் அநுபவித்தற்குத் தக்க சாதனம் அல்லது சந்தர்ப்பம் ஏற்படாததினாலோ, போதுமானவரையில் அவற்றை யநுபவித்துச் சாந்தியடைந்ததினாலோ, அவ்விஷயேந்திரியங்களை வெறுத்துத் தத்துவங்களை யுணர்ந்து ஆன்மஞானத்தில் ஈடுபடும் அன்பையே பக்தியென்று சொல்லுவர். இது சூன்யவாதிகளிடத்திலும் உலகாயதரிடத்திலும் தவிர ஏனைய சமயிகளிடத்திற் சிறிதாகவோ பெரிதாகவோ காணப்படுகின்றது.

உலக விஷயங்களில் தோன்றும் அன்பானது ஆன்மாக்களின் பரிபக்குவத்துக்கு ஏற்றவாறு உலகத்தனை வியாபகத்தினின்றும் தன்னளவிற் குறுகிநிற்கும். அன்பு இவ்வாறு குறுகக் குறுக அதன் அடர்த்தி அல்லது உறுதியும் (density) ஸ்திரத்தன்மையும் (Impressiveness) பலப்படும். எவ்வாறெனில், பஞ்சுப்பொதியை இயந்திர உதவியால் அழுத்திக் குறுக்குந்தோறும், பொதியிலுள்ள பஞ்சு சிறிதும் குறையாம லிருந்துகொண்டே, அதன் வியாபகம் குறையக் குறைய அடர்த்தி யதிகரிக்கின்றதன்றோ?

இதனால் அன்பு என்பது சர்வப்பிராணிகளிடத்தும் எக்காலத்தும் ஒரேதன்மையாக ஏற்பட்டிருந்தபோதிலும், அவரவர் பரிபக்குவத்துக்குத் தகுந்தபடியே அது வெளித்தோன்றுகிறதென்பதும், ஜடப்பொருள்களுக்கு எக்காலத்தும் எக்காரணத்தைக்கொண்டும் அழிவில்லை என்று நவீனசாஸ்திரிகளாற் சிந்தாந்தப்படுத்தப்பெற்றிருக்கும் விதியே இவ் வன்பிற்கும் பொருத்தமானதென்பதும், தெற்றென

விளங்கும். அன்பே (எக்காலத்தும் அழிவில்லாததும் எங்கும் வியாபகமானதுமாகிய) சிவமென்பர் சைவசித்தாந்திகளும்.

சகல உயிர்களிடத்தும், சேய்மை அண்மையென்னும் வேற்றுமையின்றி வியாபித்துக் காரணமின்றியும், தன்னயம் கருதாமலும், மனப் பூர்வமாயும், சுயமாயும் உதிக்கும் பற்றுதலுக்கு, அருள், கருணை, கிருபை, தயை, இரக்கம் என்னும் பெயர்கள் கூறப்படுவனவாகும். இதுவே அன்பின் விரிந்ததும், அடர்த்தியற்றதும், நிலையற்றதும், தோன்றிமறையக்கூடியதுமாகிய நிலையாம். இந்தநிலையில் அன்பு முதிர்ந்தால் ஜீவகாருண்யத்தில் விளங்கும். இதனைக் கைக்கொண்டவர் சாந்தம் அல்லது பொறைமை யுடைய பெரியோராவர்.

நற்குண நற்செய்கையுடையோர் யாவரிடத்தும் அருள் அல்லது கருணை அல்லது கிருபை உதிக்கும். தயை என்பது முன் பின்னறியாதவரிடத்துச் செல்லும். நற்குணமும் நன்னடத்தையு மில்லாத தாழ்ந்தோரிடத்துக் காட்டுவதே இரக்கமாகும்.

மித்திரரிடத்தும் சேய்மையாகிய உறவினரிடத்தும் ஏற்படும் உள்ளப்பற்றே சிநேகம், நட்பு அல்லது நேயம் என்று கூறப்பெறும். இதன் வியாபகம் முன்னையதைவிடச் சற்றே குறைந்திருப்பதற்கேற்ப, இது சிறிது அதிகமாகிய அடர்த்தியும் ஸ்திரத் தன்மையும் உடையது.

அன்பை இன்னும் சற்றே குறுக்கி நோக்குமிடத்து, அது பெற்றோர் சகோதரர் பிள்ளைகள் முதலான நெருங்கிய பந்துக்களிடத்தில் இன்னும் அதிகமாகிய அடர்த்தியுடையதும் நிலை நிற்கக்கூடியதுமான பட்சம் அல்லது பிரியம் அல்லது தாட்சண்யமாகத் தோன்றும்.

ஈஷணைத்திரயங்களில் ஆணுக்குப் பெண்ணினிடம் அல்லது பெண்ணுக்கு ஆணினிடம் தோன்றும் இச்சையானது காமம், மோகம், காதல், மையல், விரகம், ஆர்வம் என்னும் பற்பலநாமங்களால் வழங்கப்பெற்றபோதிலும், இவற்றின்பொருள்களில் ஒன்றுக்கொன்று வேற்றுமையில்லாதிருக்கவில்லை.

யாதொருவித வரையறைக்குமுட்படாமல் ஒருதலையாய்த் தோன்றும் மாம்ச இச்சையே காமம் எனப்படும். யௌவனம்,



ரப்பு, குணம், கல்வி, இவற்றுள் ஒன்று அல்லது மேற்பட்ட குணங் ளால் வரையறுக்கப்பட்ட, (ஆனால் நிலையில்லாது தோன்றி மறையக் டிய) இச்சையே மோகம் என்பதாம்.

யௌவனம் முதலியவற்றில் சமமானவரென்று பரஸ்பரம் அங்கீ க்கப்பெற்ற ஆண் பெண்கள் ஒருவரையொருவர், பிறிதொருவரை ற்றித், தம்மைத் தாமே, எதிர்பாராவண்ணம், மனப்பூர்வமாக நேசிப் துதான் காதல்கொள்ளுதலென்று மேதாவிகளாற் சிறப்பித்துக் றப் பெற்றிருக்கின்றது. இதனால், கற்பனைக்கதைகள் புனைவோர் வர் காதலுக்கு "உண்மை" என்னும் அடைமொழி கொடுத்தலானது தற்கு இயற்கையாயுள்ளபொருளை விளக்குவதன்றி, வேறு விசே ப்பொருளைத் தரற்பாலதன்று. பொய்க்காதலொன்று உல ந்தி லில்லையன்றோ?

ஆன்மஞானத்தில் பக்தி எவ்வாறு சிறந்ததோ அவ்வாறே இவ் லகவாழ்க்கையிற் காதலும் சிறந்ததாகும். இவ்விருவகையான அன் லும் உன்னதபதவியை யடைந்தோரது லக்ஷணங்கள் ஒரு சிறிதும் த்தியாசப்படுவதில்லை. இருவரும் ஒரேவிதமாகவே மெய்ம்மறந்து, சயலற்று, ஆநந்த பரவசமெய்தி, இரண்டறக் கலக்கின்றனர். வ்விதம் இரண்டறக் கலப்பதையே இன்பம் என்று பொதுவாய்ச் சால்லுவாராலும், பக்தியால்வருவது பேரின்பமெனவும், காத ாற் பெறுவது சிற்றின்பமெனவும் வகுத்திருக்கின்றனர். ஆனதால் க்தியும் காதலும் பூகோளத்தின் வடதுருவமும் தென்றுருவமும் பான்றனவென்றுகூறுவது பொருத்தமாகும்.

காதலர்கள் மணந்து இல்லறம் நடாத்திவருங்கால், ஒவ்வோ ரம த்துத் தோன்றும் மாம்ச இச்சையே மையல் எனப் பெயர் பெறும். இம் மையல் அதிகரிக்கின், விரகமாகும். இந்த மாம்ச இச் சையைப் பூர்த்திசெய்யும் சமயத்தில் உதிக்கும் உணர்ச்சியை ஆர்வ மெனக் கூறலாம்.

ஒருதலையாய்த்தோற்றும் அன்பு பிரகாச மடைவதில்லை. அன் புக்குச் சமமான எதிரன்பு தோன்றுவிடின், அது நாளாவட்டத்தில், தேய்ந்து இறுதியில் மறைந்தேபோகின்றது. இந்நிலையில் மனம்

சற்றேறக்குறைய வெறுமையாகவிருப்பதால், அதில் தன்னையன்றிப் பிறிதொருவரிடத்துப் பற்றுதல் தோன்ற இடமின்று. இம்மார்க்கத்தில் அன்புக்குறுக்கமடைந்தோர் ஏனைய ஜீவர்களின் சுக துக்கங்களிற் கலப்பதுமில்லை, கவலை கொள்வதுமில்லை; அவற்றால் இவர்கள் சலனமடைவதுமில்லை. ஆதலால் உலகத்திற்குரிய சுகமும் துக்கமும் இவர்களைப் பாதிப்பதில்லை எனச் சொல்லலாம்.

பரஸ்பரமாகிய அன்பை அதன் விரிந்தநிலையினின்றும் குறுக்க எத்தனிக்குந்தோறும் அச்சமும் கவலையும் துக்கமும் உண்டாகின்றன. ஆனால் இவ்வாறு குறுகிய அன்பும், எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியாகக்காணப்படுகின்றதோ—எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகப் பிரதிபலிக்கின்றதோ, (அதாவது இருதலையுமொத்ததாகத் தோன்றுகிறதோ) அவ்வளவுக்கவ்வளவு மிகுதியான ஆழமும் உறுதியும், சிறப்பும் உடையதாகும். இவ்வன்பு இலாபத்தையொழித்த ஏனைய வழிகளிற் குறுகுவதனால் உண்டாகும் பயமும் விசாரமும் சஞ்சலமும் எதிரன்பின்வன்மையினாலேயே ஒருவாறு தகையப்படுகின்றன.

தன்னளவிற் குறுகும் அன்பு இலாபம் ஒன்றையே பற்றிச் செல்லும். இந்நிலையில் அன்பு என்னும் சிறந்த பெயர் போய், அதற்குப் பிரதியாக அது தன்னயம் அல்லது சுயநலம் என்று வழங்கப்படுகின்றது. இவ்வன்பு பிரதிபலிப்பதற்கு இடமின்மையால், இக்குறுகிய அன்பினின்றும் உற்பவிக்கும் பற்பல குண தோஷங்களும் உற்பாதங்களும் எதிரன்பினால் தடைசெய்யப்படாததால், இப்போது தான் மெதுவாகத் தலையெடுக்கின்றன.

அன்பானது சுயநலம் என்னும் பிரத்தியேக இடத்தைச் சாருங்காலையில், மண், பொன் இவற்றில் அவா உதிக்கின்றது. இதனையே மண்ணாசை பொன்னாசை யென்பர். இவை தரித்திரர், மத்தியதரத்தர், தனவந்தர் என்னும் பேதமின்றி யாவரிடத்தும் சாதாரணமாய்க் காணப்படும். ஏனெனில் அஷ்டபோகங்களில் பெண் ஒன்று நீங்க ஏனைய எழுவகைப்போகங்களும் இம் மண் பொன்களினாலேயே அநுபவிக்கக்கூடியனவாயிருக்கின்றன. ஆனால் இவற்றைப் பெறுவதி



னிமித்தம் மனிதன் பலவித கஷ்டங்களை யநுபவிக்கிறானென்பதும் அநுபவ சித்தமே.

மண், பொன் ஆகிய ஜடப்பொருள்களின்மீதுள்ள அவா வெளித்தோன்றாது கரந்துறையும் ஆரம்பமாகியநிலையில் அது அநுராகம் அல்லது விருப்பம் எனப் பெயர்பெறும். வெளிப்பட்டாலோ, அதனை ஆவல் அல்லது வேண்டல் என்று சொல்வர்.

ஒரு பொருளிடத்து அதிகமாகிய அவா ஏற்படின், அது பேரவா அல்லது பேராசையாகும். இப்பேராசையானது, முன்னமே பொருள்களை ஏராளமாய் உடையராய் அவற்றையநுபவித்துக் கொண்டிருப்பவரிடத்தே மிகுதியும் காணப்படுகின்றது. வறியோரும் நடுநிலைமையோரும் பேராசையைக் கைக்கொள்வதினால் தாம் பயனடையப் போவதில்லையென நன்குணர்வாதலின் இவர்களிடம் இக்குணம் அரிதாய்க் காணப்படுகின்றது.

பேரவாவினின்றும் உலோபம் ஜனிக்கின்றது. உலோபகுணத்தைமட்டுமுடையோர் தமக்காவது பிறருக்காவது பயன்படுபவரல்லர். அன்றியும், அன்னவர்களால், பிறர்க்குத் தீங்கும் ஏற்படுவதற்கேதுவில்லை. ஆனதால் உலோபியானவன் மனிதவர்க்கத்தில் ஒருவனாகக் கருதப்படுவதில்லை.

உலோபத்தினின்றும் ஒருபடி கீழிறங்கினால் அழுக்காறு, ஔவியம் அல்லது பொறாமையிற் கொண்டுவிடும். இதன்பயன் மூதாட்டியாகிய ஔவையாரால் நான்குபதங்களில் நன்குவிளக்கிக் கூறப்பட்டுள்ளது. தீயகுணங்களென்றுசொல்லப்படும் யாவற்றிற்கும் பிறப்பிடம் இதுவே யாகும்.

பொறாமையினின்றும் வெறுப்பு உண்டாகும். வெறுப்பு முதிர்ந்தால் கபடம், சூது, சூழ்ச்சி, தந்திரம், மாயம் அல்லது வஞ்சனையாக மாறும். இக்குணத்தையுடையோரைப் பொய், களவு, குறளை, (அல்லது கோள் அல்லது கௌவை) இவையும் பற்றிக்கொள்ளும். இவை யாவும் வெளித்தோன்றாது மறைந்திருக்கும் கொடிய குணங்களாம்.

அடுத்த கீழ்ப்படியில் ஏமாற்றம் அல்லது மோசம் நிற்கின்றது. இதற் குறவான தூர்க்குணமாவது அபவாதம், இழிசொல், ஏசல்,

பழிமொழி என்னும் பிரதிபதங்களைக்கொண்ட பஹிரங்கமாகிய அவதூறாகும். ஏமாற்றமானது கபடத்தைவிடத் தாழ்ந்தபடியினின்ற போதிலும், முன்னையதைவிடப் பின்னையதே ஜனசமூகத்துக்கு மிகுந்த தீங்குவிளைவிப்பதாகும்.

இனித் தாழ்ந்தபடிகளை நோக்குமிடத்துப், பிரதமத்தில் அகங்காரம் அல்லது மமதை புலப்படும். இதனிடத்தினின்றும் வெகுளியுதிக்கின்றது. இவ் வெகுளி வெகுசீக்கிரத்தில் தோன்றி மறையும் தன்மையுடைத்து. இது முதிர்ந்து ஸ்திரத்தன்மையடையுங்கால், கறுவு, குரோதம், சினம், அல்லது முனிவு என்னும் பெயர்களால் விளங்கும். சினத்தை யாதரிப்போர் கயவர், கீழ்மக்கள், தீயோர் என்று இகழப்படுவர்.

சினத்தை யேற்றோரிடத்து அடிக்கடி தோன்றும் அக்குணத்தின் உச்சநிலையே கோபம் அல்லது சீற்றம் எனப்படும். பக்தியையும் காதலையும் கைக்கொண்டவரைப்போலவே, கோபத்தினால் பிடிக்கப்பட்டோரும் மெய்ம்மறந்து செயலற்றுப் பரவசமெய்துகின்றனராலும், பக்தர்களையும் காதலர்களையும்போல், கொடிய கோபிகளுக்கு எய்தும் பரவசம் ஆநந்தத்தாலுறுவதுமில்லை; இவர்கள் இரண்டறக் கலப்பதற் கிடமுமில்லை.

சினமும் கோபமும் மனுஷவர்க்கத்தைவிட இழிந்த ஜீவப்பிராணிகளுக்கும், மனுஷவர்க்கத்திலேயே தாழ்ந்தபடியிலுள்ள வனவாசிகளான முரடர்களுக்கும் (Savages) உரியவை. இவற்றால்வருவது பகை அல்லது விரோதமும் சதாகால துன்பமுமே. அறிவு முதிர முதிர இந்நிலையினின்றும் மானிடர் அன்பு என்னும் பற்றுக்கோலின் உதவிகொண்டு மேனோக்கிச் சென்று, இறுதியில் அழிவிலா இன்பத்தைப் பெறுகின்றனர்.

அறிவாளராயுள்ளோர் தன்னயம் பாராட்டியவிடத்தும், பேரவா முதல் சீற்றம் ஈறாகக் கூறப்பட்ட துர்க்குணங்கட்கு இடம் கொடாது, தமது ஞானதீபத்தினா லுதவப்பெற்ற கிரணங்களாகிய உபாயத்தினாலும், சாதுர்யத்தினாலும் உலகத்தோடொத்துவாழ்வ



தையே சிலாக்யமெனக்கொண்டு, உயர்ந்தோர்நடையைப் பின்பற்றிப் பெரும்பாலார்க்கு இணங்கி, இசைந்து, உடன்பட்டு அவர் சம்மதம்போல் நடப்பர்.

> “ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
> செத்தாருள் வைக்கப் படும்.”

V. V. இராஜரத்தினம்.

---

௨

## கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் செய்த முடிவுகள்.

---

இரௌத்திரி யாண்டு ஆவணித்திங்கள் ௩௰ம் நாள், தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டுத் திருவிழாத் திருநாளில், தூத்துக்குடி, திருவாளர் எஸ். சோமசுந்தரபாரதியார் அவர்கள், எம்.ஏ., பி.எல், தலைவராகக் கூடியிருந்த தமிழர்கள் ஒருமித்துச்செய்த முடிவுகள்:

௧. கோல்கோணாது தங்களைப் புரந்துவரும் மிகுமாட்சி தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் மன்னருக்கு இப்பெருங்கூட்டத்தார் தங்கள் கோப்பற்றுணர்வைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

௨. செந்தமிழ், ஆரியம், ஆங்கிலம் முதலிய மொழிகளைக் கற்றுணர்ந்தடங்கியவரும், தமிழ்மொழிவளர்த்தலே தம் கடனாக்கொண்டவரும், நன்னெறியொழுகிய இன்னிசைச்செல்வரும், இச்சங்கந் தோன்றியநாள்தொட்டு இதனைப் பேணிப் புரந்தாருமாகிய அரித்துவாரமங்கலம், திருவாளர் வாசுதேவ கோபாலசாமி இரகுநாத இராசாளியார் அவர்கள் உடலொழித்து இறைவனடி சேர்ந்தமை பொதுவில் இத் தமிழ்நாட்டிற்கும், சிறப்பில் இச்சங்கத்திற்கும் பெருந்

குறையே யாகும். அவர்கள் இப்பொழுது புறக்கண்களுக்குப் புலனாகாது போயினராயினும், அவர்களது அன்பு உள்நின்று தமிழர்களையெல்லாம் ஆட்டிவைக்குமென்றே இப்பெருங்கூட்டத்தார் நம்புகிறார்கள். அவர்களது திருவுருவை எஞ்ஞான்றுங்கண்டு மனவெழுச்சிபெறும்பொருட்டு அன்னோர் திருவுருவப்படம் பெரியதொன்று சங்கத்தில் அமைத்துக்கோடல்வேண்டுமென்று யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

௩. தமிழ்த்தாயின் உண்மைத் திருமகாருள் ஒருவராய்த் தோன்றி, உண்மைத்தொண்டுகள் பலவாற்றி, மேனாட்டாரும் தமிழருமை உணரச்செய்த மதுரைத் திருவாளர் ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்., இறைவன் திருவடி எய்தியமை குறித்து இப்பெருங்கூட்டத்தார் பெருந்துயரடைகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

௪. எவ்வளவும் இனிது வாய்ந்துள்ள தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழிவரிசையிற் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று பலமுறையும் சென்னைப் பல்கலைக்கழகத்தாரை வற்புறுத்தியும், அவர்கள் இன்னும் அவ்வாறு செய்யாமலும், கட்டாய பாடமாக ஏற்படுத்தாமலும் இருப்பது பிசகென்று அறிவிப்பதோடு, இனியாவது அவர்கள் தமிழை உயர்தனிச் செம்மொழியாகக்கொள்வதுடன், கட்டாய முறையாகவும், கூடியவரை கல்லூரிகளிற் கலைபயில் கருவிமொழியாகவும் கொண்டு தங்கள் முதற்கடமையைச் செலுத்தும்படி அவர்களை இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

வி. ஏ. சகராயப்பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்.

வழிமொழிந்தார்—திருவாளர்

ஐ. குமரசாமிபிள்ளை அவர்கள், பி.ஏ.

௫. சென்னைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்மொழியின் நலத்தையும், உரிமையையும் பேணுவதற்காகத் திருவாளர் பா. வே. மாணிக்கநாயக்கர் அவர்களை பி.இ., எம்.சி.இ., மேற்கழகத்தின் உறுப்பின



ராக்கவேண்டுமென்று பலமுறையும் தமிழர்கள் பலராலும் கேட்டுக்கொள்ளப்பட்டும், இக்கரந்தைத் தமிழ்ச்சங்கத்தாராலும் சென்ற ஆண்டுத் திருவிழாக்காலத்தும் பின்னரும், இன்னும் மற்றச் சங்கங்களாலும் வற்புறுத்தப்பட்டும், இன்னும் கவனியாதிருத்தல் சரியல்லவென்று காட்டி, இனியேனுங் காலந்தாழ்க்காது, உண்மைத் தமிழ்த் தொண்டுபுரியும் திருவாளர் நாயக்கர் அவர்களைப் பல்கலைக் கழக உறுப்பினராக்கவேண்டுமென்று அக்கழகத்தலைவர் அவர்களையும், சென்னை ஆட்சியாளரையும் மீண்டும் இப்பெருங்கூட்டத்தார் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்,

பண்டிதர், எல். உலகநாதபிள்ளை அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர், சாமிராவ் அவர்கள், பி.ஏ.

௬. பொதுப்பெயர்களையும், சிறப்புப்பெயர்களையும், பிறசொற்களையும், அரசாட்சியாரும், இருப்புப்பாதைக்காரரும், பிறரும் தம் மனம்போனவாறெல்லாம் எழுதிவரல் தமிழியல்புக்கு முற்றிலும் மாறுபடுவதுடன், மொழியின் சிறப்புநிலைக்கு இடுக்கண்விளைப்பதும், அவ்வச்சொற்களது வரலாறு மறைந்தொழியப்பொருட்டாவதுமாயிருத்தலால், இனிமேல் ஒழுங்காக எழுதும்படிக்கும், தாமே ஒழுங்காக எழுதமுடியாவிட்டால் தமிழ்ப்புலவர்களையாவது, தமிழ்ச்சங்கங்களையாவது கேட்டறிந் தெழுதும்படிக்கும் இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

எம். எஸ். கல்யாணசுந்தரமையர் அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர்

என். சீதாராமபிள்ளை அவர்கள்.

௭. இலக்கணமுறை பிறழ்ந்தும், பிறமொழிப்பெயர்களைத் தமிழியைபுக்கேற்பத் திருத்தாமலும் உரைநூல்கள் எழுதுவதும், அந்நூல்களைப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், பாடமாக வைப்பதும், தமிழ்மொழிக்கும், அதனைக் கற்போருக்கும் பேரிடர்விளைக்குமாதலால், பணம் ஒன்றையே கருதி அவ்வாறு எழுதாவண்ணம் புல

வர்களையும், அத்தகைய நூல்களை ஒப்புக்கொள்ளாதபடிக்கும், ஒட்புக்கொண்டுள்ளவற்றிலுள்ள குறைகளை உடனே மாற்றும்படிக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தாரையும், பொதுக் கல்வித்தலைவர் அவர்களையும் இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

அ. சாமிநாதபிள்ளை அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர்

அ. பாலகிருட்டினபிள்ளை அவர்கள், பி. ஏ.

௮. கல்லூரிகளிலும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் தமிழ்க் கணக்காயர்களாயுள்ளவர்களுக்குக் கிடைக்கும ஊதியம் பிறகணக்காயர்களது ஊதியத்தோடு ஒப்ப நோக்குமிடத்து மிகவும் குறைந்ததாயிருக்கின்றது. உழைப்பினாலும் அறிவினாலும் மற்றைய கணக்காயர்களுக்குத் தமிழ்க்கணக்காயர்கள் ஒருவகையிலும் தாழ்ந்தவர்களாயில்லாதிருந்தும் அவர் ஊதியம்மட்டும் குறைவாயிருப்பது தமிழ்மொழியையும், அதனைக் கற்போரையும் மதியாமையும், தளரப்பண்ணுவதுமாமாகையால், இனிமேல் மற்றைய கணக்காயர்களுக்கொப்பத் தமிழ்க் கணக்காயர்களுக்கும் தக்கபடி ஊதியமுறை ஏற்படுத்தவேண்டுமென்று இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்.

வழிமொழிந்தார்—திருவாளர்

வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள்.

௯. உண்மையான தமிழ்த்தொண்டுகள் பல செய்துவரும் மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குத் தீயினால் விளைந்த இடையூற்றுக்காகப் பெரிதும் உளங்கவல்வதோடு, அச்சங்கத்தை நன்னிலையிலுய்ப்பதற்காகத் தப்பாவியன்ற உதவி செய்யும்படி தமிழர், தமிழன்பர் எல்லாரையும் இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.



௰. தமிழகத்திலுள்ள பெருமடங்களின் தலைவர்கள் தங்கள் பொருட்பெருக்கின் ஒரு சிறுபகுதியையேனும் தங்கள் கடமையாகிய தமிழ்மொழி வளர்ச்சியிற் செலவிடுவார்களாயின் பெரும்பயன் விளையுமென்று அன்னோர்களைப் பன்முறை கேட்டும் அவர்கள் வாளாவிருத்தல் மிகவும் கவலைத்தக்கதாயிருக்கிறது. இனியாவது அவர்கள் தங்கள் கடமையையோர்ந்து தமிழ்மொழிமேம்பாட்டுக்கு ஆவன செய்யும்படி அவர்களை இப்பெருங்கூட்டத்தார் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

௰௧. பிறமொழி நூல்களையும், கலைகளையும் தமிழ்மொழியிலாக்கிக்கொள்ளுவதற்காக வேண்டிய சொற்களைப் பெருக்கவும், ஆக்கவும் தக்க புலமைவாய்ந்த தமிழறிஞர்கள் கூடிய ஒரு கழகம் கூட்டும்படிக்குத் தமிழ்ச்சங்கங்களையும், தமிழறிஞர்களையும் இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

கருந்திட்டைக்குடி,
இரௌத்திரி, ஆவணி, ௨௨

பா. கல்யாணசுந்தரம்,
அமைச்சர்.

---

## தனிநிலைச்செய்யுட்கோவை.

(௩௭௦-ஆம் பக்கத்தொடர்ச்சி)

---

47. வன்மைபெற விழைஇ வாய்விடக் கருந்திப்
போர்வேட் டொருவன் போதல் போலும்
குழவிவேட் டொருவள் குழகுபு போகி
நிழல்வலம் வந்தாங்கு நின்றடி யகட்டை
வருடி நோக்கிய மடவால் போலும்
ஈரெழுத் துப்பயின்ற வேளாழுயர் நான்மறைப்
பார்ப்பா ராகப் பதைக்குந ரம்மா
இவரே, மாபுமா பாக அகத்தன புறத்தன
ஏற்ற பெற்றியவா இன்பந்து வந் தார்க்கே

ஆற்றல்சா லன்னவை யாதலறி கிலரே
புறத்தன சூழ்ந்த அந்தணர் தம்முளும்
இழிந்தன ருளரே யிழிந்தோர் தம்முளு
மஃதே மான வந்தணர் மறைகுந
ராதலிற் றிணைக்காப் பறஞ்சிறந் தன்றே
என்குநர் புலாலை மேலோ ரெண்ணினும்
இழிந்தோ ரியைத்த வின்சுவைப் பண்டங்
காண்டருந் தற்குங் கயப்புக் கோடல்
காண்டிலர் கொல்லோ வீண்டிய புதிமையர்
நீறு பூசலும் நீரிடை மூழ்கலும்
பேறுதரு கடவுளை வடிவிடைப் பேணலும்
கூறை தூய்தாக் கோடலும் பிறவும்
ஆகு நிலையே அகத்தொழுக் கிற்கே
இதனான், அகத்துப் பயில்விற் கணமுத லாகிப்
புறத்துப் பயில்வும் பொன்னைப் பாகும்
இனியே, ஒருகுடிப் பிறந்தோர் தம்முள் ளொருவர்
மேம்படிற் றமக்கது மேம்பா டன்றே
அண்ணன் றம்பி அரும்பெறற் சேஎய்
நண்ணிய பெற்றோர் நலஞ்சிறந் தக்கா
லவரொடு பொருத லழகா குங்கொல்
மேம்பட் டோரை மேனிலைச் செயலுள்
ஆம்படி வைத்தற் கறியா ராகித்
தாம்பொறுக் காமற் றபுக்குந ரவர்நிலை
யென்றுகொ னம்மனோ ரிணைந்து
நன்றிபல வுறீஇ நயந்துவளர் நாளே-

48. உலகிடை விளைந்த வுணவின் றொகுதியை
யவமே யழித்தற் கியாருந் துணிகில
ரிருவயிறு படைத்தோ ரீண்டெவரு மிலரே
யாதலி னமக்கமை வனவிரைந் தணையு
மெனக்குறித் திருக்கு மினிமையறி கிலரே
தொழிலறவு படாமற் றோன்றுதற் கன்றே
பொருள்கொண் டாடை பொருவில்பல் பண்டம்



விற்குந மென்ற விலைஞரு முண்டுகொல்
பலப்பல பண்டம் பார்கொள் கருவியாம்
பணத்தினைக் கவர்ந்துமறை பதர்கணிலை யெவன்கொல்
பல்லோர் கூடியொரு மல்லனைப் பாற்றுவர்
எல்லோரு மிணைந்து கூடலிருந் தின்றமிழ்
வல்லாங் காய்ந்த வடிபுலப் புலவருள்
ஒருவர்க் கிணையா வுயர்குவர் கொல்லோ
விவ்விவ் வகையா விவ்விவை யிவர்க்கிவர்க்
கீந்தனங் கடனு வெனவேட் டெழுதித்
தாஅந் தருக்கித் தழைசெல் வோரெனச்
சாந்துணை வரையிற் சார்தற் கறிவிலர்
நரையே திரையே மூப்பே பிணியே
கருதுசாக் காடே யின்னன கதுவுறாஉ
நாற்றவுடற் காளா நயந்துதருக் குறுவோ
நறுமண வுடல நாள்பல நண்ணல்
பெறுதிரு பிறவும் பெற்றன மெனினே
யெத்துணை வீறுற் றேமாப் புறுவோம்
பார்நடை முற்றும் பயின்று
மார்கொ லின்னவை யறிந்துநடக் குநரே.

49. பாடல்சால் பனுவல் சிறுவிலைக் களிக்குழிப்
பீடறி வொருவன் பெரும்பொருட் கேற்றிடின்
அன்னோ னுலகி னெவ்வா றமைகுவன்
அஃதே மானத் தமிழறி செல்வரும்
கல்வியை வயிற்றுக் காப்பிற் கமைத்துப்
பல்வினை தவிர்ந்து பதைபதைப் புறீஇய
தமிழ்ப்புல வோர்க்குத் தக்கவொன் றுற்றிலர்
இவருந் தம்மவாச் சுருக்கி யினிதமைந்
தமர்மனைக் கடைவா யணையா திருக்கிலர்
உழவுமுத லாய பற்பல வினைஞரும்
வாணிப வாணரும் மன்னும் பிறரும்
ஏற்ற பெற்றி யின்றமி ழாய்ந்த
பின்ன ரத்துறை பேணுபு பயின்று
நன்னர்பெற் றுய்ய முத்தமிழ் நாட்டின்
வேளாண் வாழ்க்கையர் தாளாண்மை செய்திலர்
அற்பி லாய்தொடிப் பரத்தையர்க் காளாய்க்
கற்புக் கடன்பூண்ட பொற்புடைக் கடவுளைக்
கண்வழிச் செந்நீர் கரைந்துகக் கடுகுந்
திண்மைகொ ளிருப்பு நெஞ்சத் திருடனி
னுவ லோரையும் நற்றமிழ் நாடிய

பாவ லோரையும் படுத்தழிக் குநரே
இவ்வா றியற்றுநின் சேய்களியல் பறியாய்
துஞ்சுதி யின்னந் துஞ்சுதி
செஞ்சுவைப் பனுவலணி செந்தமிழ்த் தாயே.

50. மக்க டாமே வேண்டுவ வகைபுரீஇத்
தொக்கு மகிழ் தூங்கித் துலங்குநரிவரே
தமக்கின்றி யமையாத் தன்மைய வற்றைப்
போற்றுநர் பகைதமைப் பொருதழிக் குநரே
யேனைய வற்றை யெவன்கொல் செய்குவர்
புன்முத லாய நிலையுயிர்ப் பொருளு
மெறும்பு முதலாய வியங்குயிர்ப் பொருளு
மெவன்கொல் புரியும் யாவர்தாம் புரக்குநர்
சோறுபொதி தேங்காய் துணைக்கோ லிவற்றைக்
கண்டன குரக்குக் குழுஉவுட் சிலவே
தேங்கா யகத்தொரு கையிடுபு சிகையைப்
பிடித்துவிடா திருந்தன சிலவே யங்ஙன
மிரட்டைக் கையினு மேற்றுவிழித் தனவே
சிலவே கோலிரு கைக்கொடு சிறந்தன
சோற்றைப் பெறுதன பெற்றன நோக்கிப்
பொறு வாகிப் பொருதுகொட் டாங்குமன்
னொருசார் வேந்துங் குடியு முறழ்குநர்
கழுத்திடைப் பிடித்துக் கண்டுகண் டஞ்சிப்
பின்னுற மறைஇப் பாம்பழி காறும்
பிடிப்புவிடா தலைக்கும் பேதைக் குரங்கி
னொருசார் வேந்தர் குடிகளை யொறுக்குநர்
யாண்டுப் புகையோ வாண்டுத் தீயென
வீண்டிய வளவைபு மெண்ணெழுத் தியற்கை
நண்ணி யோரே கண்ணுடை யவரே
நண்ணி லோரே புண்ணுடை யவரே
கண்ணிய கற்பி னேற்றக் கவினையுந்
தன்னெறிச் சேயைத் தமிழ்வளர் பெரியோன்
போன்னே யென்னத் துன்னுபு பயிற்றல்
கண்டனன் செல்வன் கருத்துட் பிடித்தாங்
கொருபகற் கண்ணே யுறீஇவரு மாசாற்
கண்டுகளி விஞ்சுபு வாடிக் கண்ணு
மொண்டொடி மாட்டுங் கண்ணிலை யுணர்ந்தனன்
றண்டமி ழாசான் றன்னைக் கூஉய்
நீயே தமிழ்நிலை யென்னு மறிகிலையே
புண்ணமை கண்ணை யாத லானே
யானே தமிழறி வுடையேன் கேண்மதி



புண்ணில் கண்ணின ளாத லானே
என்றன னேய்ப்போர் புலவரை யிகழுந
ரொருசா ராரே சீட்டாட் டுழீஇ
யெச்சீட் டினுமீண் டினிநல னின்றென
வுச்சிநோக்கி மயங்கி யுலைந்து வாடியோன்
பக்கவிடை யுறைவோன் பன்னிப் பன்னி
பலபடி யுன்னுதி பண்பறி கிலையோ
வொருசீட் டிறக்கக் கொருசீட் டிடுதலு
மறிகிலை யென்னே யவ்வச் சீட்டுப்
பெறுகிலை யென்னப் பீடழித் துறழே
லீண்டுக் கிடப்பவை யெண்ணில்பல் வகைய
வென்றறி வுறுத்தியோற் கினியவரொரு சாரார்
இத்தகைப் பலர்தம் மிருப்பான்
முத்தமிழ் நாட்டின் முறைசிறந் ததுவே

---

## தனிநிலைச்செய்யுட்கோவைக் காப்பு.

---

மரபுவரு தற்கு மன்னுமற முதல
திருவரு தற்குந் தேர்ந்துபடைத் திட்ட
வாடூஉ விழையு மகடூவு வடிவு
மகடூஉ விழையு மாடூஉ வடிவு
நரைதிரை மூப்பே மலிவுறு பிணியே
யென்றற் றொடக்கத் திவைகூடி யொருவர்
ஒருவரை யுவர்த்திடு மாறீண் டுஞற்றியு
மினியவ் விருவோரு மினிதுவிழை யுறுப்பினைத்
துனிதரு நாற்றந் துதைவுறப் புரிந்து
மனைய வெனினு மவற்றைவெறுக் கிலாய்க்
கனிவுகொடு வேட்பக் காத லுறுத்தியும்
வருதிற னவ்விரு வகையோரு ளொருவர்மற்
றொருவரை மதித்தாங் குவந்துவந் தேத்தி
மண்வா வறியார் வாணாள் கழிப்பிப்
புண்வரு துயரைப் பொருந்தாது நடுநிலை

பொருந்திப் பிரிதுயர் போக்கி யிருமைநலந்
திருந்திச் செம்மை சேர்தற் கெனூஅ
வொருத்தன் பிறனுக் கூறுசெய் வழியுந்
திருத்தகு நல்லோன் றீமையடை வழியும்
வருத்திடும் புலையோ னன்மைபடை வழியு
மொன்றைமற் றென்று பொரூஅ வாகிக்
கொன்றுந் தின்றுங் கொடுமைபுரி வழியும்
மன்பதை யுள்ளான் மாற்றா னகி
னன்னவன் றன்னை யவனியெவன் மதிக்கு
மஃதே மானக் கடவுளமை குநரெனும்
புல்லே முளத்திற் போக்கறாஉம் வண்ண
நல்லுயி ரழியா நண்ணுமெய்ம் முதல
வொல்லுவ வெல்லா முடிக்கைக் கொப்ப
நல்கியுங் களைந்து நயந்துவரு தும்மெனூஅச்
சொல்லியாங் குணர்த்தியுந் துறைப்படுத் தாண்ட
செல்வனைக் கல்விச் செழுங்குணக் குன்றினை
யேத்தி னோர்க்கு மிகழ்ந்துவை தோர்க்கும்
பாத்திட் டளிக்கும் பண்பமை கொடையனை
நாத்தழும் பேற்றி நலனுறப் பணிகுதூஉ
மாத்துணர் கில்லா மதியிலே மனமாஞ்
செய்யுட் டிகழ்தமிழ்த் தனிநிலைச்
செய்யுட் கோவை செழுமைபெறற் பொருட்டே.

---

## தனிநிலைச்செய்யுட்கோவைப் பிழைதிருத்தம்.

| பக்கம். | பா. எண். | பா. வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| ா ருக | 30 | 8 | காப்பிற் | காப்பில் |
| ஷை | ஷை | 18 | றன்றெனு | ரன்றெனுப் |
| ருருசு | 37 | 19 | வைப்போன் | வைப்போள் |

S. வைரமுத்து.



### தோமுதலிருபெயர்

தோரணமேதோரணங்குரங்கிருபெயர் கஉ
தோமரந்தானேயோராயுதமும்
வாச்சியமெனவுமருவுமிருபெயர் கங
தோரியரேயாரியர்சோனகராம் கச
தோடியியந்தான்கூத்தும்வாச்சியமும் கரு
தோல்வியேதுகிலழிவெனவிருபெயர் கசு
தோழிதானேயரக்கும்பாங்கியும் கஎ

தோமுதலிருபேர்முற்றும்.

### தோமுதன்முப்பெயர்

தோட்டியேயங்குசமுங்கதவுந்
தோட்டியுமெனவேசொல்லுமுப்பெயரே கஅ
தோன்றியேசெங்காந்தளுநெல்லியு
முதரமுமென்றேயோதுமுப்பெயரே ககூ
தோளென்பதுவேபுயமுந்துணையுங்
கையுமெனவேகாட்டுமுப்பெயரே உ0
தோரையேகைவரையுநெல்விகற்பமு
மூங்கிலரிசியுமுப்பெயர்மொழியும் உக

தோமுதன்முப்பேர்முற்றும்.

### தோமுதனாற்பெயர்

தோற்றலென்பதுபிறப்புந்தோன்றலும்
வலியுந்தோற்றலுமருவுநாற்பெயரே உஉ
தோன்றலேபுத்திரனுநாதனு
முல்லைத்தலைவனுமுல்லையுநாற்பெயர் உங
தோகையென்பதுமயிலுந்தொங்கலும்
வாலுஞ்சுற்றாலுநாற்பெயரே உச

தோமுதனாற்பேர் முற்றும்.

### தோமுதலைம்பெயர்

தோற்றமென்பதுமிகுதியும்விளக்கமும்
வலியுங்காணலும்புகழுமைம்பெயரே உரு

தோடேயணையுமிலேயுந்தொகுதியும்
பணையிதழ்போல்பவும்பூவினிதழு
மைம்பேரென்னவறைந்தனர்புலவர்

தோமுதலைம்பேர்முற்றும்.

தோமுதலெழுபெயர்

தோணிதானேயம்புந்தெப்பமு
மதிலினுறுப்புநீருஞ்சேறு
மரக்கலமுமிரேவதியுமேழ்பெயரே
தோலேபிலவுமியானையுந்துருத்தியுந்
தோற்பலகையுந்தோலுடனேவார்த்தையும்
வனப்புமெனவேமருவுமேழ்பெயரே

தோமுதலேழ்பேர்முற்றும்.

தோமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௩௩௬.

தௌமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

தௌமுதலொருபெயர்

தௌவலென்பதுகேடெனலாகும்

தௌமுதலொருபேர்முற்றும்.

தௌமுதலிருபெயர்

தௌவையென்பதுவேமுன்பிறந்தாளுந்
தாயுமெனவேசாற்றுமிருபெயர்

தௌமுதலிருபேர்முற்றும்.

தௌமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௩௩௮.

வரமிகுவலஞ்சுழிவாணர்தம்பூராண
முரைதருஞ்சிதம்பரரேவணனியம்பிய
வாய்த்ததகராதித்தொகுதியைந்தாவதிற்
சூத்திரமுந்நூற்றெண்ணைந்தொன்றே.

ஐந்தாவது:

தகராதிப்பெயர்த்தொகுதி முற்றும்,

ஆறுவது:

# நகராதிப்பெயர்த் தொகுதி.

மிடியகற்றிமிக்கசீர்நல்குபட்டீசரைத்
தொழுது நகராதிப்பெயர்த்தொகுதியைப்புகல்வாம்.

நம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

நம்முதலொருபெயர்

நம்பனென்பதுசிவனெனப்படுமே ௧
நகரென்பதுவேயூரெனலாகும் ௨
நரபதிதானேயரசனாகும் ௩
நரலையேகடலாமெனப்படுமே. ௪
நளினமென்பது தாமரையின்பெயர் ௫
நனியென்பதுவேமிகுதியாகும் ௬
நகிலந்தானேமுலையெனலாகும் ௭
நரையென்பதுவேநறுநாற்றப்பெயர் ௮
நன்பகலுனேயுச்சியாகும் ௯
நடவையென்பது வழியின்பெயராம் ௧௦
நன்கலனேயாபரணமாகும் ௧௧
நன்கென்பதுவேமிகுதியாகும் ௧௨
நன்னே தானேயுபகாரப்பெயர் ௧௩
நந்தரென்பதுவேயிடையராகும் ௧௪

நம்முதலொருபேர்முற்றும்.

நம்முதலிருபெயர்

நதியேயாறுமாலையுமிருபெயர் ௧௫
நகுதலென்பதுசிரித்தலு*மொழிதலும் ௧௬

* மொளித்தலும் என்பது பி-ம்.

நடுவேமருங்குநடுவுமிருபெயர் ௧௭

நந்தல்தானேயாக்கமுங்கேடுமாம் ௧௮

நவமணியேபொன்னிரத்தினமிருபெயர் ௧௯

நந்தியேசிவனிடபமிருபெயர் ௨0

நனமேயகலுஞ்சிங்கமுமிருபெயர் ௨௧

நவிலலென்பதுசொல்லுதல்பண்ணுதல் ௨௨

நவியமேகோடாலியுமழுவும் ௨௩

நக்கலேநகை*யுண்டலிருபெயர் ௨௪

நன்னிலையேதவஞ்சுக்கிலமிருபெயர் ௨௫

நட்டமேநடங்கேடெனவிருபெயர் ௨௬

நளினியேபண்வாவியிருபெயர் ௨௭

நள்ளியேயோர்வள்ளலுநண்டும் ௨௮

நனந்தலையேநடுவுச்சியிருபெயர் ௨௯

நம்முதலிருபேர்முற்றும்.

நம்முதன்மூப்பெயர்

நகமேமலையுகிரோர்மரமுப்பெயர் ௩0

நக்கனென்பதுவேயருகனுஞ்சிவனு
நிருவாணியுமெனநிகழ்த்துமுப்பெயரே ௩௧

நடலையென்பது †துக்கமும்பொய்யும்
வஞ்சனையுடனும்வைக்குமுப்பெயரே ௩௨

நயமென்பதுவேயின்பமுநியாயமு
நன்றியுமெனவேநாட்டுமுப்பெயரே ௩௩

நனையென்பதுவேமதமுங்கள்ளும்
பூமொட்டெனவும்புகலுமுப்பெயரே ௩௪

நவிரென்பதுவேபண்ணும்வாளு
மாண்மயிரெனவுமாமுப்பெயரே ௩௫

---

* நீண்டல் என்பது பி-ம்.

† நடுக்கமும் என்பது பி-ம்.



?நறவமென்பது* தழியுமோர்சொல்லுங்
குங்குமமெனவுங்கூறுமுப்பெயரே ௩௬

நரையென்பதுவேயேறுங்கவரியும்
வெள்ளையுமெனவேவிரிக்குமுப்பெயரே ௩௭

நளியென்பதுவேசீதமும்பெருமையுஞ்
செறிவுமென்றேசெப்புமுப்பெயரே ௩௮

நம்முதன்மூப்பேர்முற்றும்.

நம்முதனாற்பெயர்

நளிரேகுளிரும்வெறுப்புஞ்செறிவும்
பெருமையுமெனவேபேசுநாற்பெயரே ௩௯

நனவேயகலமுங்களனுஞ்செப்புலுந்
தெளிவுமெனவேசெப்புநாற்பெயரே ௪0

நரந்தமேநறுநாற்றமுங்காக்கையு
நாரத்தையுங்கத்தூரியுநாற்பெயர் ௪௧

நம்முதனாற்பேர்முற்றும்.

நம்முதலைம்பெயர்

நவிரமேயுச்சியும்புன்மையுமஞ்ஞையும்
வெற்புமருதயாழ்த்திறமுமைம்பெயரே ௪௨

நடையேவழியுமொழுக்கமுஞ்செல்வமுங்
கூத்துநடையுங்கூறுமைம்பெயரே ௪௩

நம்முதலைம்பேர்முற்றும்.

நம்முதலறுபெயர்

நகையேமகிழ்வுமொளியுஞ்சிரிப்பு
மிகழ்ச்சியுமலர்ச்சியும்பல்லுமென்றறே ௪௪

நத்தமேயூமையுமிருளுமாக்கமுஞ்
சங்குமிரவுமூருமறுபெயர் ௪௫

நம்முதலறுபேர்முற்றும்.

---

* தனியுமொருசொலும் }
தளியுமொருசொலும் } பி-ம்.

நம்முதலொன்பான்பெயர்

நவமேகூத்தும்புதுமையும்பூமியும்
பாம்புங்கேண்மையுமொன்பதுந்தொண்டும்
பழமையுங்கார்காலமுமொன்பான்பெயர்

நம்முதலொன்பான்பேர்முற்றும்.

நம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—சசா.

நாமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

நாமுதலொருபெயர்

நாகரிகந்தான்கண்ணோட்டப்பெயர்
நாட்டென்பதுவேவலியெனலாகும்
நாரந்தானேநாரத்தைப்பெயர்
நாடலென்பதுதேடலாகும்
நாட்டியந்தானேகூத்தெனலாகும்
நாணகமென்பதுகுதிரையாகும்
நாயிலாவதுமதிலுறுப்பெனுமே
நானமாவேநாவியாகும்
நாராயணியேதுர்க்கையாகும்
நாலியென்பதுமுத்தெனலாகும்
நாவலந்தானேபொன்னெனலாகும்
நாளியென்பதுநாயெனப்படுமே
நாளிகமென்பதுவள்ளையெனப்படும்
நாரியென்பதுபெண்பேரெனுமே
நாளிகேரமேதென்னைமரமாம்
நாணந்தானேயொடுக்கமாகும்
நாவலரென்பதுகற்றவர்பெயரே
நாபியென்பதுகொப்பூழாகும்



நாந்தகந்தானேவாளெனப்படுமே கக
நால்வாயானையாமெனநவிலுவர் உ0

நாமுதலொருபேர்முற்றும்.

நாமுதலிருபெயர்

நாதனேசிவன்மூத்தோனிருபெயர் உக
நாஞ்சிறுனேமதிலினுறுப்புங்
கலப்பையுமெனவேகாட்டுமிருபெயர் உஉ
நாமமென்பதுபெருமையும்பேரும் உங
நாயகந்தானேநடுவுநாயகமும் உச
நாவேநாக்குநடுவுமிருபெயர் உரு
நால்வாயனென்பதுகணபதியிந்திரன் உசா
நாறேநெல்லுநாறுமிருபெயர் உஎ
நாற்றமேதோன்றுதலுநாறலும் உஅ
நான்முகனேயயனருகனிருபெயர் உகூ

நாமுதலிருபேர்முற்றும்.

நாமுதன்முப்பெயர்

நாடியேநாசிகையுநரம்பு
மாதர்மயிருமருவுமுப்பெயரே ங0
நாரமென்பதுநீருமீரமும்
பாசியுமென்றுபகருமுப்பெயரே ஙக
நாணேமடவார்மங்கலவணியு
மிலச்சையுங்கயிறுமெய்திடுமுப்பெயர் ஙஉ
நாழியென்பதுபூரட்டாதியு
மளக்குநாழியுநாழிகையுஞ்சொலும் ஙங
நாரேயன்புங்கயிறுநாரும் ஙச
நாப்பணென்பதுயாழினுறுப்பு
நடுவுந்தேர்த்தட்டுடனுமுப்பெயரே ஙரு

நாவிதனேகார்த்திகைநாளுவிதன்
பூரநாளெனப்போற்றுமுப்பெயரே. ௩௬

நாமுதன்மூப்பேர்முற்றும்.

நாமுதனாற்பெயர்

நாரியேபன்னாடையுமகளிரு
நறவும்வில்லிடுநாணியுநாற்பெயர் ௩௭

நாட்டந்தானேயாடலும்வாளுங்
கண்ணுமோர்பண்ணுங்காட்டுநாற்பெயரே ௩௮

நாமுதனாற்பேர்முற்றும்.

நாமுதலைம்பெயர்

நானமென்பது மணமுங்கவரியும்
பூசியபூச்சுங்குளித்திடுநீரு
நானமுமெனவேநாட்டுமைம்பெயரே ௩௯

நாளேயுடுவுநாளுங்காலையுஞ்
செவ்வியும்பூவுந்தெரிக்குமைம்பெயரே ௪0

நாமுதலைம்பேர்முற்றும்.

நாமுதலெண்பெயர்

நாகென்பது வேகத்தையும்பசுவு
மெருமையுமரையுநீர்வாழ்சாதியும்
பெண்பாலுடனேயீனுவிளமையு
மிளமரமெனவுமிசைக்குமெண்பெயரே ௪௧

நாமுதலெண்பேர்முற்றும்.

நாமுதற்பதினொருபெயர்

நாகமேகாரீயமுளாழலும்
விண்ணாடருநற்றாசுமோசையும்
வெற்புமுராகமுங்குரங்கும்புன்னையும்
விண்ணுமிபமுமெனப்பதினொருபெயர் ௪௨

நாமுதற்பதினொருபேர்முற்றும்.

நாமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௮௮.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி ௧௮.] ரௌத்திரி-௵ ஐப்பசி-௴ [பகுதி ௧௨.
Vol. XVIII. October—November-1920. No. 12.

## சிவஞானசித்தியார்.

சிவஞானசித்தியார் என்பது சைவசித்தாந்தம் பதினான்கனுள்ளே இரண்டாவதாய் மதிக்கப்பட்ட ஒரு ஞானநூல். சகலாகமபண்டிதர் என்னுஞ் சிறப்புப்பெயருடைய அருணந்திசிவாசாரியர் செய்தது. சைவசித்தாந்தம் படிப்பவர் யாவரும் விரும்பிப் படிப்பது. சிவஞானபோதச் சூத்திரங்களின்பொருளைப் பாடியம்போல விரித்துரைப்பது. பரபக்கம் சுபக்கம் என இருவகையுடையது. பரபக்கம் உலோகாயதன், பௌத்தன் முதலிய பிறர்மதங்களை எடுத்துக்கூறி மறுத்துரையாடும். பரபக்கம்—பிறன்பக்கம். பரன்—பிறன். சுபக்கம் உலோகாயதன்முதலிய பிறர்கூறும் ஆக்கேபங்களுக்கு விடைகூறிச் சுவபக்கமாகிய சைவத்தைச் சித்தாந்தமாகக்கூறும். சுவபக்கம்—தன்பக்கம். சுவபக்கமென்பது சுபக்கமென விகாரமாயிற்று. சுவ—தன். பக்கம்—சார்பு.

பிறர்கூறும் பக்கம் தருக்கசாத்திரத்துக்குப் பொருத்தமாகாது வழுவுதலையும், தாம் கூறும் பக்கம் பொருத்தமாய்த் தழுவுதலையும் படிப்பவர் உணரும்பொருட்டுக் காண்டன் முதலிய தருக்கநூற்பிரமாணங்களை முதற்கண்ணே யுரைத்தனர். உமாபதிசிவாசாரியர், தாயுமானசுவாமிகள் முதலிய பெரியோரெல்லாம் இதன் பெருமையை எடுத்துக்கூறுவர்.

உமாபதிசிவாசாரியர்.

வள்ளுவ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகைச்சித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்,

தாயுமானசுவாமி.

பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ.

இந்நூலுணர்ச்சிக்குத் தருக்கநூலுணர்ச்சி முக்கியகாரணம். இலக்கியலக்கணவுணர்ச்சியும் வேண்டும். உபதேசமும் வேண்டும். இவைகளையுடையார் இலகுவி லுணரும்பொருட்டுப் பலகலைகளையுங் கற்றுணர்ந்த பண்டிதர்கள் பலர் எழுதிய உரைகளும் இருக்கின்றன. அவ்வுரைகளுள்ளே ஆறுரைகள் ஒருங்கு சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன. அவ்வுரைகாரர் நாமங்களாவன: மறைஞானசம்பந்ததேசிகர், சிவாக்கிரயோகிகள், ஞானப்பிரகாசர், சிவஞானயோகிகள், நிரம்பவழகிய தேசிகர், சுப்பிரமணியதேசிகர் என்பன. சிவாக்கிரயோகிகளுரையும் ஞானப்பிரகாசருரையும் கார்க்கசியமான வடசொற்களையுந் தொடரையுமுடையது. யாவரும் இலகுவிற் பெறும்படி பிரகடனஞ் செய்தது நன்றேயாயினும் வழுக்கள் வந்து படிப்பவரைத் தடுக்கின்றன.

பாயிரத்திலே உலோகாயதன் என்பது “உலோகாயிதன்” எனவும், ஸ்வமதம் என்பது “ஸ்வம்மதம்” எனவும், ஐசுவரியம் என்பது “ஐஸ்வரியம்” எனவும், தம்மை வழிபட்டு என்பது “தம்மனம் வழிபட்டு” எனவும், தூரக்கும் என்பது “தூர்க்கும்” எனவும், விசுவம் என்பது “விஸ்வம்” எனவும், தக்ஷிணம் என்பது “தக்ஷணம்” எனவும், அஜபாஸ்வரூபம் என்பது அஜபாஸ்வர இபமாம் எனவும், ஆரிணி என்பது “ஆரணி” எனவும், தாரகாசுரன் என்பது “தாரகாசூரன்” எனவும், ஷடத்துவசோதனை (ஆறத்துவா) என்பது “ஜடத்துவசோதனை” எனவும், உள்ளபடி எனப் பொருள்படும் யதாவத்து (யதாவது) என்பது “அதர்வத்து” எனவும், ஸகாரி என்பது “ஜககாரி” எனவும், யசு என்பது “எசுசு” எனவும் பிரகடனஞ் செய்யப்பட்டிருக்கின்றன.

அளவையிலே கிரகிக்கை என்பது “கிரிகிக்கை” எனவும், ஒழிபு என்பது “மொழிபு” எனவும், வேறு எனப் பொருள்படும். பிருதக்கு (ப்ருதக்) என்பது “பிரதக்கு” எனவும், காட்டுப்பசு எனப் பொருள்படும் கவயம் என்பது “கவ்யம்” எனவும், கட+அபாவம் என்பது “கட அபாவம்” எனவும்



“அர்த்தப்பிரிதீதி” எனவும், மந்தத்துவம் என்பது “மந்தாத்துவம்” எனவும், திக்குக் காலம் மனது என்பது “திக்குக்காலமானது” எனவும், வியாத்தியநபிதானம் என்பது “வியாவிருத்தியபிதானம்” எனவும், பிரதிஞ்ஞாந்தரம் (வேறுமேற்கோள்) என்பது “பிரதிஞ்ஞாந்தம்” எனவும், அநநுபாடணம் (அந்+அநுபாடணம்—அநுபாடணமின்மை) என்பது “அந்நுபாடணம்” எனவும், பாடாபேதம் (ஊஷாெஷஷ) என்பது பாடபேதம் எனவும், வேதவாகியம் (வெஷவாஹியஷ) என்பது “வேதவாக்யம் எனவும், நிராவரணம் (நிர்+ஆவரணம்—மறைப்பின்மை) என்பது “நிராவர்ணம்” எனவும், அப்பிரதிமை (அறியாமை) என்பது “அப்பிரதியை” எனவும், பராக்கியை (ஓராகமம்) என்பது, “பார்க்கியை” எனவும் பிரகடனஞ்செய்யப்பட்டிருக்கின்றன.

அளவையிலே சொல்லப்படும் பக்கப்போலி ஏதுப்போலி முதலியவைகளிலே சந்தேகமுற்றுச் சில சந்தேகங்களை நீக்கும்படி இந்தச் செந்தமிழில் அறிஞரை வினவினேம். அந்தச் சந்தேகவினாக்களுக்கு நமது கேள்விப்படி தர்க்கநூலுணர்ச்சிமிக்குடைய பத்திராதிபர் ஸ்ரீமாந். திரு. நாராயணையங்காரவர்கள் விரிவாக இப் பத்திரிகையிலே விடைகள் எழுதினார்கள். விடைகள் பெரும்பயனுடையன. அப்பொழுது உரையிலே பல வழுவிற்றென்றுசொல்லி “ஆச்ரயம்” என்பதை ஆகாயம் எனவும், “நித்தியம் என்பதை அநித்தியம் எனவும், “வியாவிருத்தி” என்பதை வியாத்தி எனவும் இப்படியே சிலவற்றைத் திருத்திவிட்டனர். ஏடுகளிலுள்ள சிலபாகம் வழுவிற்று என்றும் எழுதினார்கள். பலரும் விரும்பிப் படிக்கும் இவ்வுரை இவ்வாறே வழுவுமாயின் சித்தியார்ப் பாட்டுக்களின்பொருளுணர்ச்சி எப்படிச் சித்திக்கும்?

தர்க்கம் முதலிய கருவிநூல்களோடு சித்தாந்தங்களையுங் கற்றுணர்ந்த பண்டிதர்கள் இவ்வாறுய வழுக்களைக் களைந்துவிடுதல் நன்று. அது சித்தாந்தப் பிரசங்கம் சாமாசிகம் முதலியவற்றினும் மிக்க பயன் கொடுப்பதாகும்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்.

கணபதிதுணை.

# கொலைமறுத்தலும், புலான்மறுத்தலும்.

அவை யுயிர்களைக் கொல்லுதலை நீக்குதலும், அவ்வுயிர்களின் மாமிசத்தைப் புசித்தலை நீக்குதலு மாம்.

ஒருவர் பிறவுயிர்களுக்குத் துன்பங்களைச் செய்யின் அவை பிழையாது தம்மிடத்துவருதலாற் றம்மிடத் தன்பும், பிறவுயிர்களிடத் தருளும், அத்துன்பஞ்செய்தலான் மேன்மேல்வளரும் பிறப்பிறப்பின் வேதனையுண்டாமென்னும் வருங்காலவுணர்ச்சியு மில்லாரென்பது பெறப்படும். "பிறர்க் கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா—பிற்பகற் றாமே வரும்" "தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ—மன்னுயிர்க் கின்னா செயல்" எனக் கூறிய திருக்குறளுரையிற் காண்க.

தனக்குவருந் துன்பத்தை யனுபவித்தறிந்தவர் பிறவுயிர்கட்குத் துன்பஞ்செய்தலால், அவ ரவ்வுயிர்களிடத்தி லன்பிலாராவர்; அன்றி அவ ரீசனிடத்து மன்பிலாராவர்; எங்ஙனமெனில் சர்வவியாபகமாயிருக்கிற கடவுள் எவ்வுயிர்களிடத்துங் கலந்திருக்கின்றார். "அவையே தானே யாயிரு வினையிற்-போக்கு வரவு புரிய வாணையி-னீக்க மின்றி நிற்கு மன்றே" எனச் சிவபோதச்சூத்திரத்திற் கூறியவாறு காண்க. அதனாலே உயிர்களைக் கொன்றாற் கடவுளுக்குந் துன்பஞ்செய்தோராவர். அக்கடவுளிடத்து மன்பில்லாதவராவர்.

இன்னும், "தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி-தின்னுயிர் நீக்கும் வினை" எனக் கூறியவாறே அறிவுடையோர் தம்முயிர்நீங்கினும் பிறவுயிர்களைநீக்குந்தொழிலைச் செய்யார்; ஒருபுறாவைக் கொலைசெய்யும் பொருட் டொருவேடன் அதனைத் துரத்திச்செல்ல, அப்புறாவானது மிகவுமஞ்சிச் சிபிச்சக்கரவர்த்தியினிடத் தடைக்கலம்புக, அச்சக்கரவர்த்தி அவ்வேடனைநோக்கி, உனக்குவேண்டுவதுகூறினாற் றருகின்றேமென்றுகூற, அவன் அப்புறாவினெடை மாமிசங் கொடுக்கவேண்டுமென்றான்; உடனே சக்கரவர்த்தி வேறெவ்வகைமாமிசங் கொடுக்கினும் பிற



வுயிர்க்குத் துன்பமே விளைதல்கருதி அப்புறாவை யோர்தட்டில்வைத்துத் தன்சதையைக் கொய்துகொய் தோர்தட்டில்வைத்து நிறுக்கநிறுக்கச் சரியெடைகாணாமையாற் றானு மத்தட்டிலேறினார். இவரன்றோ சீவகாருணியமுள்ளார். இச்சரித்திரத்தைச் சுருக்கிக் கம்பர், "புறவொன்றி னுயிர்ப்பொருட்டாற் றுலைபுக்க பெரியோன்றன் புகழிற் பூத்தவறனென்று திருமனத்தான்" எனக் கூறியிருக்கின்றார்; இவ்வுண்மைச் சரித்திரம் நீண்டகாலத்திற்குமுன் னடந்ததாயினுஞ் சமீபகாலத்திலே நடந்த ஒரு சரிதையைக் கேளுங்கள். திருவாவடுதுறையாதீனத்திலெழுந்தருளியிருந்த மகாசந்நிதானமாகிய வொருகுருமூர்த்தி தலயாத்திரையாகித் திருவெண்காட்டுமடத்தி லெழுந்தருளியிருக்கும்போது அம்மடத்தின் கொல்லைத்தோட்டத்திற் சிலநரிகள்வந்து வளைந்துகொள்ளக்கண்ட பரிசனங்கள் அவைகளை யிம்சைபண்ணித் துரத்த, அத்தேசிகசுவாமிகள் அப்பரிசனங்களை யிம்சைபண்ணாமற் றடுத்துத் தமது திருமேனியை அந்நரிகள்புசிக்கக் கொடுத்துக்கொண்டிருந்து, ஞானசமாதியி லிருந்தருளினர். இப்பொழுதும் அத்தேசிகசுவாமிகட்குச் சிறப்பொடு பூசனைநடந்துவருகின்றன. இவ்வுண்மைச்சரித்திரத்தைச் சைவசமயிகள்பலரு முணர்வார். இங்ஙனமாகத் "தன்னுயிர்நீப்பினு" மென்றகுறளுக் கிலக்கியமாகவுள்ளா ரநேகர். அவர்களையெல்லாம் விரிவஞ்சி யீண்டுக் கூறவில்லை.

சீவகாருணியத்தைநோக்கியன்றோ! "அன்புடையா-ரென்பு முரியர் பிறர்க்கு" என்றபடி இந்திரனுக்குத் ததீசிமுனிவருந் தம்மென்பினைக் கொடுத்தார், இதுபோன்ற கதைகள் பலவுங்கேட்டிருந்தும் ஐயோ! அநேகர்கள் வீடுகளிலே காற்றுட்டாயினும் விலைபெறாத கற்கண்டு பழமுதலியவற்றி லாயிரக்கணக்காக எறும்புமுதலிய வுயிர்கள்வந்து மொய்த்துக்கொண்டா லுடனே யவைகளை வெயிலில்விட்டுக் கொல்வதுந் தீயிலிட்டுக்கொல்வதுங் காலாலே தேய்த்துக்கொல்வதுஞ் செய்கின்றார்கள்; இவர்கள் யமதண்டனைநீங்கி யெக்காலத்துய்வார்களோ தெரிந்திலேம்.

இனிச் சிலர் "மிருகங்கள் பட்சிகண்முதலாயின வெல்லாம் மனிதரைப்போல வுணர்ச்சியில்லாதவைகளாதலால் அவைகளைக் கொல்வதனாற் பாவமில்லை" யென்கிறார்கள்; அவைகளும் பெரும்பாலாக மனிதரைப் போலவே ஆறறிவுயிர்களேயென்பதனை, "மக்க டாமே யாறறி வுயிரே—பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" எனக் கூறியிருத்தலாற் கிளி குரங்கு

முதலாயினவெல்லா மனவுணர்ச்சியுடையனவாகி ஆறறிவுடையன வென்
பது பிரத்தியக்ஷத்தினுங் காணலாமே. யானை குரங்கு நாய் முதலாயின
வெல்லாம் நாங்கூறியவாறுணர்ந்து நமக் கேவல்செய்கின்றன; கிளிமுத
லாயின நாஞ்சொல்லியவாறுகேட்டுத் தாமுஞ் சொல்கின்றன; எறும்பு
கள் ஆகாரத்தைக்கண்டா லுடனே சென்று தம்மினங்களையெல்லா
மழைத்துக்கொண்டுவந்து அவ்வாகாரத்தைக் கவர்ந்துபோகின்றன;
அவைகள் மழையில்லாதகாலத்தில் வேண்டியவுணவுகளைச் சேர்த்து
வைத்துக்கொண்டு புசிக்கின்றன; மழைவருங்கால மறிந்து பள்ளத்திற்
குழியிலடைந்திருந்தவையெல்லாந் தம்முட்டையை யெடுத்துக்கொண்டு
திட்டையேறுகின்றன; இதனை "எறும்பு முட்டைகொண்டு திட்டை
யேறின் மழைபெய்தது" என எதிர்கால மிறந்தகாலமாகக்கூறப்படு
மென்பதற் குதாரணமாக இலக்கணநூலுரையி லெடுத்துக்காட்டினர்.
பறவைகளிற் காக்கையைநோக்கும்போது "காலை துயிலெழுதல் காணும
லின்புறுதன்—மாலை குளித்து மனைபுகுதல்—சாலவே, யுற்றாரோ டுண்ட
லுலகோம்ப லிவ்வைந்துங்—கற்றாய காக்கைக் குணம்" என்றபடி யிவ்
வைந்து குணங்களு மவைகளிற் காணப்படுகின்றன; இங்ஙனமன்றி,
"வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்—தேன்சிலம்பி
யாவர்க்குஞ் செய்யரிதால்" என்றபடி தூக்கணங்குருவிக் கூடுமுதலாயின
வெல்லா மனிதர்க ளுத்தியாலறிந்துஞ் செய்யமுடியாமலிருக்கின்றன.
இவைகளெல்லா நேரிலேகாணப்படுதலால், மனவுணர்ச்சியுடையனவா
யிருக்கின்றன வென்பது சுருதி யுத்தி யனுபவத்தாற் றெளிவாக
விளங்கியதென்க. இன்னும் விரிப்பிற் பெருகுமாதலி னிங்ஙனஞ்
சுருங்கவுரைத்தாம்; ஆதலா லிவைகளைக் கொல்வது பெரும்பாவமே
யென்க.

இனி யிங்ஙனங்கூறியசெயல்களெல்லாம் அவைகட்குப் பழகியபழக்
கத்தால்வந்தன வென்றால், தாலீபுலாகநியாயமாக வொன்றெடுத்துக்கூறு
கின்றோம்; கும்பகோணத்தி லொரு யானை தண்ணீர்குடிக்கப்போகும்
போது, ஒருதெருவில் வீட்டுத்திண்ணையருகாகப் போயிற்று; அங்கே
யொருபாணன் சன்னற்குள்ளே புடைவை தைத்துக்கொண்டிருப்பதை
யறிந்து அவ்வியானை யியல்பாக அச்சன்னலிற் கைநீட்டியது; அப் பா
ணன் யோசியாமல் ஊசியாற் றுதிக்கையிற் குத்தினான்; யானை யொன்றுஞ்
செய்யாமல் யோசித்துக்கொண்டுசென்று தண்ணீர்குடித்து மீளும்போது



நீரின்கீழ்க்கிடந்த சேற்றையெல்லாங் கலக்கித் துதிக்கைக்குள்ளே
வாங்கிவைத்துக்கொண்டுவந்து அச்சன்னலினுள்ளே சிதறிவிட்டுப்போ
யிற்று; அதனாற் பட்டுப்புடவை முதலிய விலையுயர்ந்தபொருள்களெல்
லாஞ் சேதமாயின; பாணனுஞ் சிறுதுன்பஞ்செய்த நமக் குடனே பெருந்
துன்பம்விளைந்ததேயென்று வருத்தமுற்றான்; இதனைக் கண்கூடாக
நாமறிந்திருக்கின்றோம்; அப்பொது பலருந் தெரிந்திருக்கின்றார்கள்;
இப்படிக்குச்செய்ய அந்தயானை முன் பழகியிருந்ததா? ஆதலால், பழக்
கத்தால்வந்தனவெனக் கூறுவது பயனில்கூற்றாமென்க.

இக்கொல்லாமை மிக்கபுண்ணியமாயிருத்தலால், அட்டாங்கயோக
நெறியி லொன்றாகக் கூறியிருக்கின்றார்—இவ்வாறன்றி, அரசர் போர்க்
களத்திற் கொல்வதும், வேட்டைக்குச்சென்று மிருகங்களைக் கொல்வ
தும் பாவமன்றோவெனில் பாவமன்று; இராசதருமமேயாம்.

"மாநிலங்காவலனாவான்மன் னுயிர்காக்குங்காலைத்
தானதனுக்கிடையூறுதன்னாற்றன்பரிசனத்தா
லூனமுறுபகைத்திறத்தாற்கள்வரா லுயிர்தம்மா
லானபயமைந்துந்தீர்த்தறங்காப்பானல்லனோ"

எனக் கூறியிருத்தலாற் காண்க; அன்றியும், போர்க்களத்திற் பகைவரைக்
கொன்று வெற்றியடைந்தோர்க்கும் வீரசொர்க்கமுதலிய பயன்கிட்டுதலா
லும், வேட்டையி லுயிர்களைவதைத்தல் தந்நாட்டிற்கு அவ்வுயிர்கள்
தீங்குசெய்தபொழுதாதலாலும், பாவமன்றென்க; இக்கருத்தைக் 'கொலை
யிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்—களைகட் டதனொடு நேர்'
என்ற திருக்குறளினுங் காண்க.

நம்மையெல்லாங் காக்குமரசர் நா மொருவரை வதைசெய்தபொழுது
நம்மைத் தண்டிக்கின்றார்; அதுபோலவே யெல்லாவுயிர்களையும் படைத்
துக் காக்குஞ் சர்வசீவதயாபரக்கடவுள் நா மோருயிரைவதைத்தால் நம்
மைத் தண்டிப்பாரென்ப துணர்ந்துகொள்க. இக்கொல்லாமை பெரும்
புண்ணிய மென்பது விளங்கத் திருக்குறளில், "ஒன்றாக நல்லது கொல்
லாமை மற்றதன்—பின்சாரப் பொய்யாமை நன்று" என்றுரைத்தார்.
சைவசித்தாந்தசாத்திரங்களிற் கூறிய அந்தரியாகஞானபூசையிற் சாத்
தும் அட்டபுட்பங்களிற் கொல்லாமையை யோர்புட்பமாக வெடுத்
துரைத்தலுங் காண்க.

## புலான்மறுத்தல்.

இங்ஙனங் கூறியவாறே யுயிர்களைக்கொல்வது பாவமென்பதொக்கு மாயினும், பிறர் கொன்று அவற்றின்மாமிசத்தை விற்க நாம் வாங்கிப்புசிப்பதனாற் பாவமில்லையெனில், "தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்-விலைப்பொருட்டா லூன்றருவா ரில்" எனக் கூறியவாறு வாங்கித் தின்பதனா லுயிரைக் கொன்று அவற்றின்மாமிசத்தை விற்கின்றார்களாதலால் அக்கொலைப்பாவமுந் தின்பவரைச் சார்ந்ததேயென் றறிக.

அற்பமான மாமிசத்திற்காக ஆடு கோழி முதலாய பிறவுயிர்களைத் துடிதுடித்துக் கதறி வருந்தக் கொல்வதைக்கண்டு நடுங்காது பார்ப்பவரு மிரக்கமில்லாதவ ராவர்.

சாத்துவிககுணவிருத்திக்கேதுவாகிய உயர்ந்தவாசனையும் ருசியுமுள்ள பலகாரமுங் கனிவர்க்கங்கண்முதலாயினவு மிருக்க அவைகளையருந்தாது நீக்கித் தெருவிற்கொண்டுபோயினு நாசியைப்பிடித்துக்கொள்ளும்படியான துர்வாசனையுள்ள மாமிசத்தைப் புசித்தல் நீரிற் குளிக்கப் புகுந்தவன் அந்நீரைவிடுத்துச் சேற்றைப்பூசிக்கொண்டாற்போலாமென்க.

அன்றியும், நா முண்ணுமுணவுகளெல்லாம் நூல்களிற்கூறியபடி சாத்துவிகம், இராசதம், தாமதமென்னு மூன்றுகுணங்களின்விருத்திக்கேதுவாயிருக்கின்றன; உயிர்களின்மாமிசம் அதிகதாமதகுணவிருத்திக்கேதுவாயிருக்கின்றது; ஆதலா லிதனை யறிவினர்கொள்ளுமுணவெனவிடுத்துச் சரியை கிரியை யோக ஞானமார்க்கங்களினின்று பிறவிவேரறுத்துப் பேரின்பத்தை விரும்பிய பெரியோர்களெல்லாம் அன்னம் காய் கனி யிலை சருகு நீர் வாயு முதலான வுணவுகளைக் கைக்கொண்டிருக்கின்றார்களென் றறிக.

தாவரசங்கமங்களுள் அறிவின் பேதவகையாற் றாவரங்களினுஞ் சங்கமங்க ளுயர்ந்தன; அவைகளுள்ளும் நரரே யுயர்ந்தவராவர். ஆதலால், அவர்செய்யுந் தருமம் யாதெனில் "அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்—பிறவினை யெல்லாந் தரும்" எனக் கூறலாற் கொல்லாமையே சிறந்ததரும மென்க.

உம்மையிற் கொன்றுதின்றவ ரிம்மையிலே குட்டமுதலியவியாதியால் வருந்துவர்,



"அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—யக்கா
லலைவினைக் காதலித்துக் கான்றுறித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்" எனவும்,

"உயிருடம்பி னீக்கியா ரென்பர் செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்"

எனவுங் கூறியிருத்தல் காண்க.

இனிக் கடவுள் அறிவில்லா வெல்லாவுயிர்களு மொன்றுக்கொன்றிரையாகவும், பின்னவைகளெல்லா மனிதருக்கிரையாகவும் படைத்திருக்கின்றாரெனில், சிங்கம், புலி, கரடி, பாம்பு, தேள், குரங்குமுதலியவைகள் மனிதருக் கேனோ இரையாகவில்லை; அவை மனிதரைக் கொல்லுதல்கூடுமோ? ஆதலாற் கடவு ளப்படிக்குப் படைத்திலர். வினைப்படி படைத்தனரென் றறிக.

தாவரமாகிய மரம் செடி முதலியவற்றின் காய் கனி முதலாயினவற்றைப் பறித்துத் தின்பது பாவமன்றோவெனில், இவைசெய்தலாற் சிறிதுபாவமுண்டென்பர்; கொலையில்லை; எவ்வாறெனில், வனமிருகாதிகளின் மாமிசம் புசிப்பவரைப்பார்க்கினும், சகலதேவர்களுந் தன்னுடைய அவயவங்களிடத்தே தங்கப்பெற்றுவிளங்கி யீசுரப்ரீதியாகப் பஞ்சகௌவியமுமுதவுகின்ற *பசுவின்மாமிசம்புசிப்பவரை மகாபாதகர்கப் புலையரென் றெதுக்கியிருக்கின்றோமன்றோ? அங்ஙனமாகவே வனமிருகங்களின்மாமிசம்புசிக்கும் பாவத்தினும் அசரங்களின் காய் கனிமுதலியவற்றைப் பறித்துப் புசித்தலாற் சிறிதுபாவ முண்டென்க; அங்ஙனமாகக் காய்முதலியவற்றைப் பறித்தலால் அவ்வசரங்களுக் குயிர் போகாது; பின்னு மதிகமாகவே தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுக்கின்றன; இச்சிறிதாகியபாவமும், பலவகையால் வரவரக் குறைந்துவிடுமென்றறிக.

எங்ஙனங் குறையுமெனில், அவ் வசரபதார்த்தங்களை யுணவாக்கித் "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்-கைம் புலத்தா றோம்ப றலை"எனக் கூறிய இல்லறதருமப்படி இல்லறம்புரிவோர் நாடோ

---

* பசுவின் மகத்துவத்தைப் பெரியபுராணம், சிவதருமோத்திரம் முதலிய நூல்களுட் காண்க. செந்தமிழ்ப்பத்திரிகையினுங் காண்க.

2

றுந் தென்புலத்தார் முதலானவர்க்கூட்டித் தாமும், "கங்கைவார் சடிலக் கடவுளை நினைந்து கறிதயிர் நெய்யுடனுவி – யங்கியை யெழுப்பி யாகுதி செய்கை யாகமுப் பதிற்றிரு கவளம் – பங்கமில் விதியா லுண்டுகை பூசி" எனக் கூறியவாறே யீசுரப்பிரீதியாகச்செய்து புசித்தலாற் பாவங் குறைந்துவிடுமென்க.

இங்ஙனங்கூறியவாறே மாமிசத்தையும் ஈசுரப்பிரீதியாக்கிப்புசித் தாற் பாவமில்லையே யெனில், தூயவுடம்பு, வரம்பிலின்பம், பேரரு ளுடைமை முதலியகுணங்களையுடைய கடவுள் மிகவசுத்தமு மற்ப வின்பமுமுள்ள மாமிசத்தைப் புசிப்பாரோ? புசிப்பிற் பேரருளுடைமை யாகியகுணமு மில்லையாகிவிடும். ஆதலா லவர்விரும்பாதபதார்த்தமாகிய மாமிசத்தை அவர்க்குப் பிரீதியாகவைத்து நிவேதித்தல் பெரும்பாவமா மென்றறிக.

கண்ணப்பர் ஈசுரப்பிரீதியாக மாமிசத்தை நிவேதித்தனரேயெனில், அவர் தம்முடைய சாதிப்பழக்கத்தைப் பத்தியின்மிகுதியாற் செய்தனர்; அதுவு மீசுரசோதனையால் நடந்ததேயாம்; அவர்போலக் கண்ணினைத் தோண்டி யீசுரனுக்குச்சாத்தும்படியான பேரன்புவரிலன்றோ அங்ஙனங் கூடும்; ஆதலா லீண்டெடுத்துக்கொண்ட விவகாரத்தினுக்குக் கண்ணப் பரையெடுத்துக்கூறுதல் பொருத்தமின்றெனவறிக.

இனிச் சத்திபூசைசெய்வார் மாமிசநிவேதித்தல்கூடுமோவெனில், சத்தியினமிசத்தைக்கொண்ட சிறுதெய்வங்கட்கும் அத்தெய்வங்களின் பரிவாரங்கட்குமே நிவேதிப்பார்கள்; சிவசத்திக் கொருபோது நிவேதித் தல்செய்யாரென்க.

யாகத்திலே மாமிசம் புசிக்கலாமோவெனில், அந்தயாகத்திலே மந் திரத்தினலெரிவாய்ப்பட்டுச் சுத்தியாகியமாமிசத்தைப்புசித்தவருங் கொலையுண்டவுயிருங் கதியடைகுதலாற் பாவமாகாதெனக் கொள்வர்; "கள்ளூ மூனு நீ விரும்பினுன் மகங்கள்செய்" என்றூர்; பெருமிதமாக அவற்றை விரும்பியுண்டு கேடுறுவானைநோக்கிச் சிரமத்தால் வரவரக் குறைத்தொழிக்கும்பொருட்டேயென்றறிக; இனி அந்தயாகமுஞ் சுவர்க்கமுதலானபதவியைவிரும்பினோர் செய்வாரேயன்றிச் சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய மார்க்கங்களினின்று சாலோகாதிபதமுத்தி களையுஞ் சாயுச்சியமாகிய பரமுத்தியையும் பெறுவோ ரொருபோதுஞ்



செய்யாரென்க. இக்கருத்தை, "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற-னுயிர்செகுத் துண்ணாமை நன்று" எனக் கூறியிருத்தலுங் காண்க.

யாகஞ்செய்தலு முந்தியயுகத்திலன்றி யிக்கலியுகத்திற் கூடாதென் பர்; இங்ஙனங்கூறுவது பொருந்துமோவெனில், முந்திய யுகத்திலே புத்திரனில்லாவிடில் அந்நியரைச்சேர்ந்து புத்திரனைப்பெறலாமென்று விதித்திருக்கின்றது. அவ்வாறுசெய்தல் இக்கலியுகத்திற்கேலாதாத லாற் பொருந்துமென்க. விதியுங் காலத்தையநுசரித்திருக்கவேண்டு மென்றறிக.

ஞானிய ரெதுகிடைத்தாலும் நன்று தீதுநோக்காமற் புசித்து ஞானக்கினியாற்றகனஞ்செய்து விடுவாராதலா லவர்க்கு மாமிசம்புசித்தல் கூடுமெனில், அது பொருந்தாது; ஏனெனில்? ஒருவர் மலத்தினைக் கொடுத்தாலும் புசிப்பாரா? பைத்தியமுள்ளவரும் புசிக்கமாட்டாராதலா லவர் புசித்தல் கூடாதென்க. அவ ரெதனைப்புசிப்பாரெனில்,

"உரைப்பரு மானத தீர்த்த மோதிடிற்
சுருக்கமின் ஞானநீர் தோய்தன் மற்றது
விருப்பொடு வெறுப்பென விளம்பப் பட்டதோர்
கருப்புகுத் திடுமலங் கழுவு மென்பவே"

என்றபடி மானததீர்த்தமாடிப் பேரின்பமாகிய வமுதினைப் புசிப்பா ரென்க.

இனித் தானுகவேயிறந்தவுயிரின்மாமிசத்தை யுண்ணலாமே யெனில், "படைகொண்டார் நெஞ்சம்போ லன்றூக்கா தொன்ற-னுடல் சுவை யுண்டார் மனம்" என்றபடி ஒருயிர்க்கு மரணம் வந்தவிடத்திலே, இரக்கமுறுமற் சீக்கிரமிறந்தா லிதன்மாமிசத்தை யுண்ணலாமென்று கருதி மகிழ்ச்சியடைதலா லதுவு முண்ணலாகாதென்க.

அன்றியும், புலையன்மலத்தையும் பாம்பையும், தேளையும், கிருமி முதலியவற்றையுந் தின்னுங் கோழிமுதலியவற்றின்மாமிசத்தை யருவருப்படையாமற் புசிக்கின்றவர், நாய் கழுதை முதலியவற்றின் மாமிசத்தை யேன்புசிக்கவில்லை; அன்னத்தில் ஈ எறும்பு முதலியவை கிடந்தா லருவருத்து வெறுத்துவிடுவதுபோல, மாமிசத்தையும் அரு வருத்துவெறுத்துவிடுவதே புனிதமாமென்க.

நம்முடலே மாமிசமாயிருப்பதனல் "ஊனுக்கூனிடவேண்டு" மென்றபடி மாமிசத்துக்கு மாமிசமே யிடவேண்டுமெனில், புசிப்ப தெல்லாம் மலமாகி வயிற்றிற் கிடப்பதனல், மலத்துக்கு மலமேயிட வேண்டுமென்று புசிவந்தபோது வனதனையிடவில்லை. ஆதலா லவ்வுரை யும் பொருந்தாதென்க.

மாமிசத்தைத் தின்னுஞ்சாதி தின்னவேவேண்டும்; தின்னாதசாதி தின்னக்கூடாதெனில், புண்ணியமிது, பாவமிது, சுத்தமிது, அசுத்தமிது என்பன முதலியவற்றை அறியாமலிருக்கிற நாய், நரி, கழுகுமுதலியவைகளெல்லாந் தின்னுஞ்சாதியே யாம்; புண்ணியபாவ முதலிய நெறியறிந்தொழுகிப்

"புழுப்பொதிந் தசும்பு பாயும் புன்புலை யுடலை யோம்பிக்
கழித்தனன் கால மெல்லாங் கடையனேன் பொறிகள் யாண்டு
மிழுத்திழுத் தலைப்ப நொந்தே னினித்தினைப் பொழுது மாற்றேன்
சழக்கறுத் தருள்வா யுன்றன் சரணமே சரண மையா"

என்றபடி யுடம்பினையும்வெறுத்து ஈசுரத்தியானஞ்செய்து நற்கதியடைதற்குரிய அறிவினையுடையமனிதரே தின்னாதசாதியென் றறிந்துகொள்க. அன்றியுந் தின்னுஞ்சாதியாகிய அஃறிணையிலே நாரைமுதலியனவும் புண்ணியவசத்தா லறிவெய்தி மாமிசந்தின்னாது கதியடைந்தனவென் றறிக.

இங்ஙனங் கூறியனவெல்லாங் கொலைமறுத்தலென்னுநூலில் விரிவாகக்கூறியிருத்தல் காண்க.

இனி நா மொன்றுங்கருதவெண்டுவதில்லை; நம்முடையபிதாமுதலானவர்கள்புசித்தபடி நாமு மாமிசம்புசிக்கலாமெனில், பிதாமுதலோர்கள் களவுசெய்து கள்ளருந்திப் பிச்சையெடுத்துக் காலங்கழித்திருந்தால் நாமுமவ்வாறேசெய்து காலங்கழியாமல் உயர்ந்ததொழிலைச் செய்து நல்லுணவுகளையுண்டு காலங்கழிப்பது கூடாது; ஆதலா லிவ்வுரையும் வெற்றுரையாயின தென்க.

உயிரினிச்சையை யடக்கக்கூடாததலால், மாமிசத்தைப்புசிக்கு மிச்சையுண்டாயின் அதனைப் புசிப்பது முறையாமெனில், காமவிச்சையுண்டானபோது தங்கைமுதலோரைச்சேர்வது பாவமென்றும், மணஞ்செய்துரியமாதரைச் சேர்வது பாவமில்லையென்றுந் தெரிந்துகொள்ளாமலெவரையுஞ்சேரலாமே; அங்ஙனஞ் சேராமையால் உயிரினிச்சைப்படி செய்வது முறையன்றென்க.

நாம் உழவுமுதலிய தொழில்கள்செய்யும்போதும், நடக்கும்போதுந் தெரியாம லுயிர்க்கொலைநேரிடுகின்றதே; அது பாவமன்றோவெனில், நாஞ்செய்கின்ற புண்ணியபிராயச்சித்தங்களாலுங் குருவினருளாலும் அப்பாவ மொழிந்துவிடு மென்க.

அறிவுடையோர், இதுகாறுங்கூறியவாற்றாற் கொல்லாமையும், புலான்மறுத்தலுமாகிய புண்ணியத்தைக் கைக்கொண்டொழுகி நற்கதியடைவாராகுக.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்சைவநூற்பரிசோதகருமாகிய

சே-ரா-சுப்பிரமணியக்கவிராயர்.

---

## பாரதம் (சங்கப்பதிப்பு) பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 95 | 4 | லறைத்தின | லரைத்திறை |
| 170 | 45 | ஒகு குல | ஒரு குல |
| 183 | 3 | விரல் | விறல் |
| 197 | 122 | நீன்ன | நின்ன |
| 231 | 30 | தோழ | தொழ |
| 253 | 64 | விழ்ந்த | வீழ்ந்த |
| 263 | 14 | யாமும | யாமும் |
| 287 | 119 | வன்பிணேடு | வன்பிணொடு |
| 296 | 199 | மலைந்த | மலைத்த |
| 325 | 31 | சிவந்த | சிவத்த |
| 327 | 14 | மலைந்திட | மலைத்திட |
| 347 | 17 | போற் | போர் |
| 350 | 4 | மன்னும | மன்னும் |
| 359 | 25 | தெடங்கிய | தொடங்கிய |
| 360 | 36 | படட | பட்ட |
| 367 | 45 | லமும | லமுதம |
| 377 | 42 | வேயர் | வெயர் |
| 382 | 104 | தன்றெ | தன்றே |
| 399 | 245 | கொனிடை | கோனிடை |
| 402 | 13 | மெலும் | மேலும் |
| 413 | 110 | வந்தேதிர்த்த | வந்தெதிர்த்த |
| 415 | 122 | சமர்செய்திட | சமரஞ்செய* |
| 421 | 177 | பொக்கி | போக்கி |
| 428 | 22 | மெண்னிய | மெண்ணிய |
| 443 | 3 | வணணல | வண்ணல். |
| 448 | 51 | கொளாமற | கொளாமற் |
| 453 | 93 | ற்றியென | நிற்றியென |
| 459 | 144 | விழ்த்த | வீழ்த்த |
| 474 | 3 | கண்டுச | கண்டுஞ்ச |
| 483 | 77 | னேடிய | னெடிய |
| 485 | 95 | வாராதே | வாராதே |

சே. ரா. சு.

உ

# பாரததேச பூர்வ ராஜாங்கம்.

## (Kingship in Ancient India.)

---

“கிருதயுகம் என்று பேர்விளங்கும் ஆதிகாலத்தில் ராஜ்யம் என்பதுமில்லை, ராஜனும் இல்லை, குற்றவாளிகளும் இல்லை; தண்டனையுமில்லை. ஜனங்களனைவரும் தம் தம் தர்மங்களை யனுசரித்துப் பரஸ்பர அன்பு ஆதரவுடன் அந்யோந்யமாய் வாழ்ந்துவந்தார்கள். இது தான் ஆதிகால நிலைமையைப்பற்றிய ஹிந்து இதிஹாஸ பௌராணிகர் கொள்கை. (சாந்திபர்வம் 58.)

குறிப்பு:—தாரணாத் தர்மம் இத்யாஹு: = உலகமுழுமையும் ஒழுங்குற நடக்கத்தக்கவிதிகளே தர்மம். (2) விராட்வா இதம் அக்ர ஆஸீத்=ஆதியில் அரசன் என்பதே உலகிலில்லை.

(அதர்வவேதம் 8-10.)

காரணமென்ன? அரசனிருக்கவேண்டிய அவசியமேயில்லை. நவீன நாகரிகம்போன்ற உள்நாட்டுக் குடிக்கலக்கமாவது, அன்னிய தேசத்தார் படையெடுத்துவருவதென்பதாவது அக்காலத்திற்கிடையாது. ‘போதுமென்றமனமே பொன்செய்யும் மருந்து’ என்றபடி தம்தம் தேசத்தில் ஈசனுலளிக்கப்பட்ட வஸ்துக்களைக்கொண்டு ஜனங்கள் நித்யதிருப்தர்களாய் வாழ்ந்துவந்தார்கள்.

காலம் மாறிற்று. வரவரத் தர்மம் குறைந்தது. அதர்மம் மிகுந்தது. வரவர ஜனங்களுக்கும் நவநாகரிக மதிகரித்து ‘அரசன்’ ஆளவேண்டிய தவசியமாயிற்று. தேவர்களும் மனிதரும் ப்ரம்மனிடம் முறையிட, ப்ரம்மதேவர் 1000 அத்தியாயமடங்கிய ‘தர்மஸூத்திரத்தை’ இயற்றி, ‘இந்தத் தர்மசூத்ர வறுதிக்குட்பட்டு நடப்பவனை அரசனாக நியமித்துக்கொள்ளுங்கள்’ என்று ஜனங்களுக்கனுமதிகொடுத்தனுப்பினர்.

பிறகு ஜனங்கள் தங்களுக்குள் மகாஜனசபையும், மந்திரிசபையும் அமைத்துக்கொண்டார்கள். (அதர்வவேதம் 8-10.)



ஜனங்கள் வீனபுத்ரனான ப்ரிதுவைநோக்கி ‘மனோ வாக் காயம் என்ற திரிகரணசுத்தியாய்த் தாம் நடந்துகொள்வீரா’ என்று வினவ, பிரிதுவும் சம்மதித்தார். ஜனங்கள் ப்ரிதுவைத் தமது ‘முதல் அரச’னாக்கினார்கள். (சாந்திபர்வம் 58.)

ப்ரிதுசெய்த ராஜ சாஸனம். (அதர்வவேதம் 6-64-2. ரிக்வேதம் 10-94)

ஸமானோ மந்தர: ஸமிதி: ஸமானீ: ஸமானம் மந: ஸஹசித்தம் ஏஷாம் (ரிக்வேதம் 10-94)—இச்சபையோர் அனைவரும், ஒரேவித நோக்கமுடையவர்களாயும், ஸமமாயும், ஒற்றுமையாயும் பொதுநன்மையே தமது முக்கியவிரதமாய்க்கொண்டவர்களாயுமிருந்துவரவேண்டும்.

இச்சபையையும் இச்சபையோரையும் ஈசன் காத்தருளவேண்டும். இச்சபையோர் என்னைக் காக்கவேண்டும். இச்சபையோர்க்கு யான் சொல்லுவனயாவும் இன்சொல்லாகவே அமையவேண்டும். எனக்கும் இச்சபையோர் இனிதுகூறுவாராக. இச்சபையோர் எனக்குத் தர்மமுறையை உபதேசிப்பாராக. (அதர். 12-1)

இச்சபையோர்க்கும், இச்சபாநாயகருக்கும் வந்தனம். எனது அமுதும், அதிகாரமும், அறிவும் இச்சபையோரிடமிருந்தே யான் அடைந்தவன். இந்த்ர! இச்சபையில் யானும் ஓர் அங்கமாய் இருக்க அருள்வீர். (அதர். 7-12)

### ஜனங்கள் உபசாரம்.

உம்மை நாங்கள் எங்கள் அரசனாய்வரிக்கின்றோம். எங்களுக்குத் தாம் தலைவனாய் இருக்கவேண்டும். எங்கள் ராஜ்ய அதிபதியாயிருக்கவேண்டும்! எங்களுக்குச் சமானமாய்த் தாங்களும் வாழவேண்டும். அன்புடன் தம்மை இப்பதவிக் கழைக்கின்றோம். உறுதியாய்த் தாம் இருக்கவேண்டும். ஜனங்களனைவரும் தம்மை அபிமானிப்பார்களாக. இவ்வரசு தம்மைவிட் டகலாதிருக்கவேண்டும்!

(அதர். 3-4-2; 6-88-3.)

### அரசன் விடை.

எனக்குச் சமானமான என் ப்ரஜைகள் யாவருக்கும் யான் தலைவனாய் இருக்க ஈசன் அருள்புரிவாராக. ஜனங்களளித்த பெரு

மையைக்கொண்டே இச்சபையில் யான் வந்திருக்கின்றேன்! இச்சபையோர் எனக் களிக்கும் யுக்தி புத்தி தீர்மானங்களை யனுசரித்தே யான் நடப்பேனாக! (ரிக். 10-166)

இவ்வாறு அரசனும், ப்ரஜைகளும் பரஸ்பர அன்பு ஆதரவுடன் அன்யோன்யமாய் வாழ்ந்துவந்தார்கள்.

ஜனங்கள் "தர்மரக்ஷகரான நமது அரசர் நீடூழிகாலம் வாழ்வாராக! ஜே!" (ரிக். 8-43.)

மங்களம்.

இந்த்ர! நமது அரசர் பலபராக்ரமங்களுடன் நீடூழிகாலம் வாழ்வாராக. இப்புவிக்கே அவர் அரசர் ஆவாராக.

## II. அரசன் ஈசுவராம்சம். "நாவிஷ்ணு ப்ரிதிவீபதி:"

அதாவது ஈசுவராம்சம் (தர்மமுறைப்படி நடக்கும் தன்மை) இல்லாதவன் அரசனாயிருக்கத் தக்கவனல்ல. இதுதான் உண்மையான கருத்து. ராஜபதவியடைந்தவ னெல்லாம் ஈஸ்வராம்சன் என்பது இவ்வாக்யத்தின் கருத்தல்ல. தர்மம், ஸத்யம், பராக்ரமம் இவை உள்ளவரை அவன் அரசனாயிருக்கலாம். தர்மநெறி தவறினவன் ராஜ்யப்ரஷ்டனாவான்.

கேவலம் தனது பலத்தால்மாத்திரம் ராஜ்யத்தையாள உத்தேசிப்பவனே கொடுங்கோன்மன்னன். தர்மத்தால் ஆளுபவன் செங்கோன்மன்னன். ஆகையால், அரசன் ஈசுவராம்சன் என்ற நவீன சித்தாந்தமானது முற்காலத்தில் இவ்வறுதிகளுக் குட்பட்டிருந்தது. (சுக்ரநீதி 1—70.)

### அரசன்செய்வதெல்லாம் சரியா?

'அரசன் இட்டதெல்லாம் சட்டம். அரசன் சட்டத்திற் குட்பட்டவனல்ல அக்ரமம்செய்தாலும் அது க்ரமமே' என்ற இப் புது நாகரிகசித்தாந்தம் நமது பூர்வீகர்கொள்கைக்கு விரோதமானது. அரசனுக்கும் சில வறுதிகள் உண்டு. தர்மசாஸ்திரத்தில் அரசனுக்கு ஒரு சட்டம், ப்ரஜைகளுக்கு ஒருசட்டம் என்று சொல்லவேயில்லை. ஏதோ தனது அரசுமுறையில் தவறுசெய்வானாகில், அரசன் ப்ரஜைகளுக்கு அதை அறிவித்து, மன்னிப்புக் கேட்கவேண்டும். மற்றப்படி அவன் தர்மவானயிருப்பானாகில், ஜனங்களும் மன்னிப்பதுண்டு.



### அரசனைச் சிட்சித்தல்.

அரசன் வேண்டுமென்று அக்ரமம்செய்வானாகில், உடனே அவன் தன் ராஜபதவியை இழந்துவிடுவான்.

"குராஜாந: தூரத: பரிவர்ஜயேத்"—துஷ்ட: அரசரைத் தூரத்தில் தள்ளுக. தான்செய்தது தவறென்று மன்னிப்புக் கேட்பானாகில் அவன் அந்தரங்கசுத்தியுள்ளவனென்ற நம்பிக்கையிருந்தால் ஜனங்களும் அவனை மன்னிப்பார்கள். ஏதாவதொருகுற்றத்தைச் சாதாரண மனிதன் செய்தால் ஒருபணம் தண்டனையானால், அரசன்செய்தால் 1000 பணம் தண்டனை. ஏனென்றால் அக்ரமம் செய்யத்தக்க பலம், ஜனங்களைப்பார்க்கிலும் அரசனுக்கு அதிகமாயிருக்கின்றதல்லவா? (மனு.)

### உத்தியோகஸ்தர்.

'உத்தியோகஸ்தர் என்னசெய்தாலும் குற்றமில்லை' என்ற சட்டம் அக்காலத்திற் கிடையாது. அரசனுக்கே அவ்வுரிமை யில்லாதபோது அவனது அதிகாரிகளுக்கு எப்படி யிருக்கமுடியும்? அரசனிடமிருந்துண்டான அதிகாரந்தானே அதிகாரிகளுக்கும்!

மூலபுருஷனுக்கில்லாத அதிகாரம் அவருடைய ஸேவகருக்கு வருமா? தனது அதிகார தோரணையால் அதிகாரிகள் ஜனங்களை வருத்த இடமிராது. இவ்விஷயந் தெரிந்தவுடன் மேலதிகாரி உடனே கண்டித்துவிடுவான். ஸ்வகௌரவம் என்ற பெயரை வைத்து அதிகாரிகள் ஜனங்களை நிந்திக்கத் தர்மசாஸ்திரங்கள் இடங்கொடுக்கமாட்டா.

### மந்திரிகள்.

மந்திரி நியமனத்தில் அரசன் வெகு ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். அரசனுக்கு உதவியாய் (1) மந்திரிசபையும் (நிர்வாஹாதிகாரிகள்) (2) மஹாஜனசபையும் ஜனங்களின் அபிப்பிராயங்களையும் புத்திமதிகளையும் கலந்துகொள்ள ஏற்பட்டது; இச்சபையோர் அபிப்பிராயத்திற்குட்பட்டே ராஜாங்கம் நடக்கவேண்டும்.

### மந்திரிநியமனம்.

(1) மந்திரிகள், தர்மசாஸ்திர நிபுணர்களாயும், தர்மவான்களாயும், ஜனங்களின் விசுவாசத்திற் குரியவர்களாயு மிருக்கவேண்டும்.

(2) யுத்ததர்மம் தெரிந்தவரா யிருக்கவேண்டும்.

(3) ராஜதர்மம் தெரிந்தவரா யிருக்கவேண்டும்.

அதாவது:—ப்ரகிருத நிலைமையை யறியக்கூடிய புத்தியும், அதற்குத் தக்கபடி நடந்துகொள்ளத்தக்க யுக்தியும், அதை நிறைவேற்றக்கூடிய சக்தியும், சொந்த நன்மையைப் பாராட்டாத யோக்யதையும் உள்ளவராய் மந்திரிக ளிருக்கவேண்டும். தற்காலத்தில், பார்லிமெண்டில், பிரபலபக்ஷியாரின் தலைவரைத் தமது மந்திரிகளாய் நியமிக்கின்ற பிரிட்டிஷ்ராஜமுறை இதை ஒருவாறு ஒத்திருக்கிறது. ராஜபட்டங்களுக்கும் ராஜசம்மானங்களுக்கும், உத்தியோகங்களுக்கும் ஆசைப்படுபவர்கள் மந்திரித்துவத்துக்கு அர்ஹரல்லர். அப்படிப்பட்டவர்கள், பேராசையால், ஜனங்களை இம்சித்து, அரசனுக்கும் துர்ப்புத்திகூறிக் கடைசியில் ராஜ்யத்திற்கே ஹானி விளைவித்து விடுவார்கள்.

ராஜலக்ஷணம்.

(1) த்ருவோராஜா விசாமயம் (ரிக். 10)

(2) ப்ரஜாஸுகே சுகம் ராக்ஞ:
ப்ரஜானாம்ச ஹிதே ஹிதம்
நாத்மப்ரியம் ஹிதம் ராக்ஞ:
ப்ரஜானாம்து ப்ரியம் ஹிதம் (சாணக்ய அர்த்தசா 1-19.)

ப்ரஜைகளின்சௌக்யமே தனது சௌக்யமெனவும், ப்ரஜைகளின்க்ஷேமமே தன் க்ஷேமமெனவும், ப்ரஜைகளின் இஷ்டப்படி நடப்பதே தனது கடமையெனவும், அரசன் எண்ணவேண்டும். தன்னிஷ்டப்படியெல்லாம் நடக்கலாகாது.

(3) நயஸ்ய விநயோ மூலம் (சுக்ரநீதி 1-91)

விநயமே ராஜநீதிக்கு மூலம்.

(4) ஆத்மானம் ப்ரதமம் ராஜா விநயேந உபபாதயேத்
(சுக்ர. 1-92)

முதன்முதல் அரசன் விநயமாய்நடந்தால் அவனைப்பார்த்து ப்ரஜைகளும் நடப்பார்கள்.



(5) யதா ராஜா ததா ப்ரஜா:
அரசனைப்போற் குடிகளும்.

(6) ராஜா காலஸ்ய காரணம் (சாந்திபர்வம் 69-78)

அரசனே காலவித்யாசங்களுக்குக் காரணம்.

(Kings are epoch makers.)

தேசக்ஷேமம்.

தேசக்ஷேமம் அரசன்நடத்தையைச் சார்ந்தது. ராஜாங்கமென்ற கப்பலுக்கு அரசனே மாலுமி. மந்தபுத்தியாலாவது, துர்ப்புத்தியாலாவது, பேராசையாலாவது அஜாக்ரதையாய்நடத்துவானாகில், துஷ்டமாலுமிவசமகப்பட்ட கப்பல்போல் ராஜாங்கமானது 'ப்ரக்ருதி சக்தி' (Laws of Nature) என்ற பாறையில்மோதிச் சிதறிப்போம். ப்ரஜைகளும், தன்னைப்போல் மனிதர்தாமென்பதையும், அவர்கள் பொறுமைக்கும் அளவுண்டென்பதையும், அவ்வளவுக்கு மீறினால், அரசுக்கே ஹானிநேரிடு மென்பதையும், அரசன் எப்போதும் மனதில் எண்ணியே தனது ராஜாங்கத்தை நடத்தவேண்டும்.

கொடுங்கோன்மன்னர்.

(1) நாஸ்தி ஸத்யம் குராஜனி (ஹரிவம்சம் 20-120)

'துஷ்டராஜனுக்கு ஸத்யமென்பது கிடையாது'. பொய்வாக்களிப்பான். ஜன்மேபி நிறைவேற்றுமெண்ண மவனுக் கிராது.

(2) குராஜனி பயம் நித்யம் (ஹரிவம்சம் 20-120)
துஷ்ட ராஜனைக்கண்ட ஜனங்கள் எப்போதும் நடுங்குவார்கள்.

(3) 'குராஜாந: தூரத: பரிவர்ஜயேத்'
துஷ்டமன்னரைத் தூரவிலக்கவேண்டும்.

(4) அஸமஞ்ஜ: ஸுத: ஸ்ரேஷ்ட: த்யக்த: பௌரஹிதைஷிணா.
(சாந்திபர்வம் 12-56.)

ஜனங்களின்நன்மையைக்கருதித் தனது ஜேஷ்டகுமாரனை அஸமஞ்சனை அரசன் வெருட்டிவிட்டான்.

## ஜனசபை.

ஆங்கில ஆட்சிக்குமுற்காலத்தில் ராஜாங்கத்தில் ஜனங்களுக்கு ஏதாவது செல்வாக்கிருந்ததா என்பதே நமது முக்கிய ஆராய்ச்சி.

தற்காலத்தில் ஏதாவதிருக்கிறதா என்பதை ப்ரக்ருதத்தில் நாம் விசாரிக்கவேண்டாம். அது எல்லோரும் அறிந்த ரஹஸ்யம்!

ராஜாங்கத்தை 3 அங்கமாகக் கவனிப்போம்.

1. நிர்வாஹ (மந்திரி) சபை
2. சட்ட நிரூபண சபை
3. மகா ஜனசபை (ஆலோசனை சபை)

2. சட்டசபை. தற்காலச் சட்டத்திற்கும் தர்மசாஸ்திரச் சட்டத்திற்கும் வித்யாசமுண்டு.

அவையாவன:—

(a) சட்டத்துக்கும் தர்மத்துக்கும் வித்யாசமில்லை.

(b) சட்டமானது ஈசுவரநிரூபணமேயொழிய மனுஷ்யநிரூபணமல்லவென்பது அக்காலத்தார் கொள்கை.

(c) அப்படிப்பட்ட தர்மசாஸ்திரவிதிகளை ப்ரயோகிப்பதே அரசன், அவன் மந்திரிகளின் கடமையேயொழிய அதை மாற்ற அவர்கள் உரியவரல்லர்.

ஆதலால் நவீன சட்டசபை அக்காலத்தில் அவசியமில்லை.

### 3. மஹாஜனசபை.

வித்வான்கள், அனுபவஸ்தர்கள் நிஷ்பக்ஷபாதிகள் இவர்களைக் கலந்தே அரசன் ஒரு துறையில் இறங்கவேண்டும். பட்டம் சம்மானம் முதலானவைகளில் வேட்டையாடித்திரிவோர்வார்த்தையை அரசன் கேட்கலாகாது. அக்கால மஹாஜனசபை, எலெக்ஷன்மூலமாய் வந்ததல்ல; எலெக்ஷனாவது, எலெக்ஷன்போராவது, நிந்தையாவது, வஞ்சனையாவது, சூழ்ச்சியாவது, மோசமாவது, மோட்டார்காராவது பூர்வநாகரிகத்திற் கிடையாதென்பதை யாவரும் அங்கீகரிக்கவேண்டியதுதான். அது பெருங்குறையென்கிற நவநாகரிகர் சிலர் எண்ணவுங்கூடும்! ஆயினும், ஜனங்களபிப்பிராயம் அரசனுக்கு எப்படியோ எட்டிக்கொண்டுதா னிருந்தது. ஜனசமூகத் தலைவரையே தனது ஆலோசனைஸபைக்கு அரசன் வரவழைப்பது வழக்கம். ராஜ தர்பார் சில வாயாடிகளுக்குத்தான் ஏற்பட்டது என்பது அக்கால வழக்கமல்ல. எல்லோரும் வரலாம். தினந்தோறும் குறிப்பிட்டநேரத்தில் அரசன் தானே ஜனங்களின் குறைகளைக்கேட்டு நிவர்த்திப்பான். தன் மந்திரிகளுடன்சேர்ந்து ஆலோசிப்பான். ரகஸ்யவிசாரணை என்பது அக்காலத்திற் கிடையாது. கவனிக்க அவகாசமில்லை என்று பொட்டிலடிக்கும் (Summary disposal) வழக்கமும் கிடையாது. மஹத்தான ஆபத்து நேர்ந்தால் ஜனங்களின் படபடப்பு ஓயும்வரை விசாரணைசெய்தே காலத்தைப்போக்கும் ராஜவிசாரணை (ராயல் கமிஷன்) சபையும் அக்காலத்திற் கிடையாது.



இவைதான் முற்கால ராஜாங்க முக்ய முறைகளிற் சில. வறுதி ராஜாங்கமே (Limited monarchy) முற்காலத்தில் நமதுதேசத்தில் நடந்துவந்தது. எல்லா அரசரும் இவ்வறுதிக்குட்பட்டுநடந்தார்களா என்பது சரித்திர ஆராய்ச்சியைச் சார்ந்தது. அக்காலத்திலும் கொடுங்கோன்மன்னர் இருந்திருக்கலாம். கொடுங்கோன்மையைத் தவிர வேறு செங்கோன்மை இந்தியாவில் முற்காலத்திலிருந்ததா? ஜனங்களுக்கு ஏதாவது செல்வாக்கிருந்ததா? என்பதே நமது முக்ய வினா.

'ஆம்' என்பதே அதற்குத் தக்கவிடை. நமது வேதம், இதிஹாஸ புராணங்கள், ராஜநீதி, தர்மசாஸ்திரங்கள் இன்னும் இவை போன்ற எண்ணிறந்த ஆதாரங்களால் இதை நிரூபிக்கமுடியும்.

பாரதமஹிமை என்ற பரஞ்சோதி (சூரியன்) பாரதகாலம்வரை பாரதபுவிக்கு நேர் உச்சியிற் பிரகாசித்தான். பிறகு மேற்கே சென்றான். ப்ரிதிவிராஜனோடு தானேஸ்வர யுத்தகளத்தில் அஸ்தமித்தான். ஐரோப்பாவிற் சிறிதுகாலமிருந்து, பிறகு நமது தேசத்தில் அதிசீக்ரம் உதயமாவான்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்,

உ

# நிலத்துமொழிகளும், நடுத்தரப்பள்ளிக்கூடங்களிற் பயிலும் வடமொழிமாணவர்களும்.

## நிலத்துமொழித்தொண்டர்கள் விண்ணப்பம்.

---

இத்தலைப்பின்கீழே நாங்கள் எழுதுபவைகள் எல்லாநிலத்து மக்களாலும், அவ்வந்நிலத்துமொழிகளை வளர்க்கப் பாடுபடும் கழகங்களாலும், பத்திரிகைகளாலும் செவ்வையாகப் பார்க்கப்பட்டுத் தம்மைச் செய்கையிற் கொண்டுவருவதற்காகும். அதற்கான முயற்சிகளை இப்பொழுதே மேற்கொள்ள அம்மக்களையும், கழகங்களையும் பத்திரிகைகளையும் நடத்தும் பெருமக்களையும், மொழியிடத்து அன்புகொண்டவர்களையும், அம்மொழிகளைக் கற்றுணர்ந்த புலவர்களையும் மிகு வணக்கத்துடன் வேண்டுகின்றோம்

பிறந்த நிலத்தினிடத்தும், அங்கே நூல்வழக்கிலும் பேச்சு வழக்கிலும் பழையகாலந்தொடங்கி வழங்குதலுற்றுவரும் மொழியினிடத்தும் பேரன்பு பூண்டுள்ள மக்கட்சுட்டினரே!

“மக்களாகிய நன்குமதிக்கப்படும் பிறவியை அடைந்தார் அனைவரும் அவரவர் பிறந்துவளர்ந்து இருக்கும் நிலத்திலே பழையகால முதலாக ஆடவர், பெண்டிர், சிறுவர் என்னும் மூத்திறத்தாரிடத்தும் ஒத்துவழங்கும் பெருமையையுடைய மொழியை முன்னதாக நன்கு கற்று அதற்குப்பின்னர் நல்லறிவைத்தரக்கூடிய வடமொழி, ஆங்கிலம் முதலியவற்றைக் கற்றுணர்தல்வேண்டும்” என்பது நாகரிகர்களாலே ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையுரை. இந்த உண்மையுரைக்குத் தஞ்செவிகளைச் சாய்க்காது வடமொழிப்புலவரிற் பலரும், அதனிடத்துள்ள அன்பால் உந்தப்பட்ட சிலரும் நிலத்துவழங்கும் மொழிகளின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் போட்டுவருகின்றனர்.

ஆங்கிலப்பள்ளியிலே பயிலும் மாணவர்கள், ‘தங்கள்நிலத்து வழங்கும் மொழியாலாகிய செய்யுட்களிலும் உரைகளிலும் சிறிது கற்றவர்களாதல்வேண்டும்’ என்ற நல்லுணர்வு ஆட்சியாளர்களுக்



குப் பிறந்து சென்ற (1919) ஆண்டிலே ‘எல்லாநிலத்து மாணவர்களும் முதலாவதாகக் கற்றேதீரவேண்டும்’ என ஒரு செய்யுட்டிரட்டையும் உரைநடையையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அம்முறை எட்டுநாள்வரை நிறைவேறிற்று. பின்னர் மாறிற்று. எப்படி மாறிற்று? வடமொழிப்புலவர்களும் அதனிடத்து அன்புகொண்டவர்களும் “வடமொழிபயிலும் மாணவனுக்கு நிலத்துவழங்கும் மொழியின் பயிற்சி வேண்டத்தக்கதன்று; அஃது அவனது கல்விக்கு இடையூறுசெய்வது” என்று கடலொலியெனப் பெருமுழக்கஞ் செய்தனர். அந்த முழக்கத்தாலே ஆட்சியாளர்களுக்குப் பிறந்த உண்மைக்குறிப்புக் கலங்கி அவ்வாண்டிற்கு அந்தமுறை வேண்டாமென்ற அறிக்கையை வெளியிட்டபடியால் மாறிற்று.

பின்னர் ஆட்சியாளர்கள் இவ் (1920) வாண்டில் ‘வடமொழி பயிலும் மாணவர்கள் நிலத்துவழங்கும் மொழிகளிலே பிழையறக் கட்டுரை எழுதும் பழக்கத்தையேனும் கற்றுக்கொள்ளலாகாதா’ என எண்ணி அதைச் செய்கையிற்கொண்டுவருமாறு அறிக்கையிட்டு உரைநூல் ஒன்றனையும் சென்ற ஆகஸ்டிலேயே வெளியிட்டார்கள். அவர்கள் கட்டளைப்படி பள்ளிக்கூடங்களிலே ஆசிரியர்கள், வடமொழி மாணாக்கர்களையும் பழக்கிவந்திருக்கிறார்கள். அந்த மாணவர்களிற் பெரும்பாலார் இப்பழக்கத்தை மிகவும் விரும்பிச் செய்வாராயினர் இங்ஙனமிருக்கையில் நிகழும் (9—11—20) நவம்பரிலே ‘வடமொழி முதலாகிய மொழிகளைப் பயில்வோருக்கு நிலத்து வழங்கும் மொழியினால் இந்த ஆண்டில் இடையூறு வேண்டாம்; அடுத்துவரும் ஆண்டில் ஆகட்டும்’ என்னும் பொருள்படும்படி நமது ஆட்சியாளர்களால் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இஃது என்ன விந்தை! சென்ற ஆண்டிலே வெளியிடப்பட்ட கட்டளையானது காலங்கடந்து செய்யப்பட்டதாதலால்அது செய்கைக்குக் கொண்டுவராமல் தடுக்கப்பட்டது பொருத்தமானதே. அந்த வடமொழிப்பயிலும் மாணவர்களும் விடையுதவத் தகுதியாம்படி கற்பிக்கப்பட்ட இந்த ஆண்டிலே, இந்தத் தடைக்கட்டளை ஆண்டின் இறுதியில் யாரால் எதனாற் பிறந்தது? வடமொழிப்புலவராலா? வேற்றுமொழிப்புலவராலா? அம்மொழிகளிடத்து அன்புகொண்டுள்ளவர்களாலா? ஆட்சியாளர்களாலா?

வடமொழிப்புலவரிற் பலராலும், அவரால் தூண்டப்பட்ட சிலராலும் அவர்கள்கொண்டுள்ள, நிலத்துமொழிகளினிடத்துள்ள ஆராய்ச்சியற்ற, வெறுப்புத்துணையாக இத்தடைக்கட்டளை பிறந்திருக்கின்றதென் றெண்ணவேண்டியிருக்கிறது. வடமொழிபோன்ற பிறமொழிகளைப் பயில்வோர் இந்நாட்டில் ஒருசிலரே; அன்புகொண்டார் தாமே ஒன்று செய்யும் வலியிலர்; ஆட்சியாளர் 'நிலத்துமொழிகள் முதன்மையை அடையவேண்டியது இன்றியமையாதது' என எண்ணுகின்றவர். ஆதலின், பிற்கூறிய முத்திறத்தாரும் தடையுத்தரவுசெய்யவேண்டுவாரல்லர்; முன்னவரே வேண்டியார்; வேண்டுகின்றார்; வேண்டுவார். அவர் ஏன் இங்ஙனம் வேண்டுகின்றனர்? எல்லாநிலத்தும் வாழும் மக்கட்பரப்பினர்பொருட்டா? அன்றித் தம்பொருட்டா? முன்னவர்பொருட்டென்று கூறமுடியாதாதலின், தம்பொருட்டென்றே சொல்லவேண்டும். 'அன்று; அன்று; வடமொழிபயிலும் மாணவர்க்காக' என்றால் அவர்க்கு நிலத்துமொழியறிவு வேண்டாமா? என்க. இதனை வினாவிடையாக எழுதுதல் இப்போதைக்கு ஏற்றதாகும்; அவற்றுள் வினாக்களை வடமொழியாளருடையனவாகவும் விடைகளை நிலத்துமொழியாளருடையனவாகவும் கொள்ளல்வேண்டும். இனி அவை வருமாறு:—

வினா:—வடமொழி பல துறைகளாலும் ஏற்றமுடையதன்றோ?

விடை:—ஆம், ஆம்: அதனை அறிவுடையாரெவரும் மறுத்திலர்.

வினா:—வடமொழிபயில்வார்க்கு நிலத்துமொழி வேண்டுமா?

விடை:—வேண்டும்; அவர்கள் எங்கே பிறந்திருக்கிறார்களோ அங்குற்றவர்களுடன் கூடிவாழ்ந்து அவர்களுக்குத் தாமும் தமக்கு அவர்களும் உதவிசெய்துகொள்வது கண்கூடு; ஆதலின் நிலத்துமொழிப்பயிற்சி அவருக்கும் எல்லாருக்கும் வேண்டியதே.

வினா:—ஆங்கிலப் பள்ளியிலே கற்போருக்கு வடமொழியோடு வேறு மொழியும் பயில்வது மெய்வருத்தந்தாராதா?

விடை:—தூக்கமுடியாத சுமையல்ல; நிலத்துவழங்கும், மொழியிலே பிழையற எழுதும் பழக்கத்தை அடையும்படி ஓர் ஆண்டிற் சில (26) மணிநேரம் செலவிடுவது வருத்தத்தைத் தருவதாகாது; பல மாணவர்கள் அதனை வருத்தமாக உணரவில்லை; அந்தக் குறைந்த நேரத்தையும் விடுமுறைநாட்கள் சில விழுங்கிவிடுகின்றன.



வினா:—பாலர்வகுப்புமுதல் முதலாவதுபாரம் முடிய நிலத்துமொழியிலேயே பழகுகிறவர்களுக்கு அதற்குப்பிறகுமா அப்பழக்கம்வேண்டும்?

விடை:—பழகுகிறவர்கள் அல்லவா? எப்போதும் அப்பழக்கம் வேண்டும். இல்லாவிடில் மறந்துவிடுவார்கள். மிக மேலான வகுப்பிலே கற்பவர்களும் தேறியவர்களும் பிழைகள் பல நிறைய எழுதுகின்றார்கள்; பேசுகின்றார்கள். பிழையற எழுதவும் பேசவும் தங்கள் கருத்துக்களை வெளியிடவும் அவர்கள் விரும்புங் காலம் வந்துவிட்டதனால் எப்போதும் அவர்களுக்கு அந்தப் பழக்கம் வேண்டியதே. முதலாவது பாரம்முடிய என்னுகிறீர்கள். சென்ற அக்டோபரிலே கும்பகோணத்திலே நடைபெற்ற பண்டிதர்களின் மகாநாட்டின் தலைவர் 'மூன்றாவது பாரம்முடிய நிலத்துமொழிப்பயிற்சி ஒவ்வொருமாணவனுக்கும் இன்றியமையாதது; அதன்மேலே தான் பிறவற்றைச் சிறப்பாகக் கற்கத்தொடங்கவேண்டும். இதுவே நாட்டின் நலத்திற்குத் துணைசெய்வது' என்று முன்னுரை கூறியது எவ்வளவு ஆழ்ந்த கருத்தை வெளியிடுகின்றது பாருங்கள்!

வினா:—ஆங்கிலம், நிலத்துமொழி என்னும் இரண்டும் கற்கவேண்டுமென்றால் வடமொழிப் பயிற்சி குன்றி நாளடைவில் அடியோடு அழிந்துவிடுமல்லவா?

விடை:—ஒருநாளும் அப்படி ஏற்படாது. தாங்கள் அஞ்சவேண்டாம். தாங்களும் நாங்களும் ஆங்கில ஆசிரியர்களும் நடத்

தரப்பள்ளிக்கூடங்களிற் பயிலும் மாணவர்களை அந்த மூன்று மொழிகளிலும் பெரும் புலவராகச்செய்யும் நிலைமையில் இல்லை. எல்லாவற்றிலும் சிறிது அறிவு உண்டாகச் செய்கிறோம். அன்றியும், பிறிதொரு மொழியின் பயிற்சி குன்றிவிடும் என்பதற்காக நிலத்து மொழிப்பயிற்சியைக் கைசோரவிடுதல் அடாது; அடாது.

வினா:—இதுவரையில் ஆங்கிலமும் வடமொழியும் படித்துப் பட்டம் பெற்று வாழ்கின்றவர்களும் மற்றவர்களும் நிலத்துமொழிப் பயிற்சியில்லாததனாலே ஊருடன்கூடி வாழவில்லையா? பேசவில்லையா? எழுதவில்லையா? இப்போதுமாத்திரம் நிலத்து மொழிப்பயிற்சி வேண்டுமென்று வற்புறுத்துவதேன்?

விடை:—முன்னேகூறிய விடைகளே இதற்கும் விடைகளாம்; கூறியது கூறலாக முடிந்தாலும் முடியட்டும்; இங்கேயும் சில சொல்லுகிறோம். நிலத்துமொழியாளரோடுகூடி வாழ்கின்றாரென்பது வெறுந்தோற்றமே. எவ்வளவு வேற்றுமை மூண்டுவிட்டது என்பதை நீங்கள் அறியவில்லையோ? கடவுளறிவர்; அவ்வேறுபாடுகளை வேண்டும்போது வெளியிடுவோம். ஆங்கிலமும் வடமொழியும் பயின்றார் 'நிலத்துமொழியில் தமக்குப் பேசவும் எழுதவும் அவ்வளவு வலிமையில்லை' என்று சொல்லுவதை நேற்றுப் பார்த்தோமே; இன்றும் பார்க்கின்றோமே; இனியும் பார்க்கும்படி வைத்துக்கொள்ளலாமா? அப்படி வைத்துக்கொள்வது நமக்கு அழகல்ல. நாங்கள் நிலத்துமொழிப்பயிற்சிவேண்டுமென்று சொல்லாதகாலமில்லை. முன்னோருஞ் சொல்லியுள்ளார். ஆங்கிலப்பள்ளியிற் பயில்வோர் ஊருடன்கூடிவாழ்ந்து பிறமொழிகளிற் பயின்று அறிந்த உயர்ந்தகருத்துக்களை நிலத்துப் பிறந்துள்ள உடன்பிறப்பாளர்களுக்குப் பிழையற அறிவிக்கவே அவர்



கள் நிலத்துமொழியைப் பயில்வது இன்றியமையாதது என்று வற்புறுத்தலானோம்.

வினா:—'ஆங்கிலமொழிந்த பிற எல்லாவற்றையும் நிலத்துமொழியிலேயே கற்பிக்கவேண்டும்' என்னும் உணர்ச்சி ஒன்று முளைத்திருக்கிறதே; அது செய்கையில்வரவிருக்கையில் நீங்கள் இச்சிறு வளர்ச்சிமுறையை ஏன் வற்புறுத்தல்வேண்டும்?

விடை:—அந்த உணர்ச்சி முளைத்திருப்பது நன்றுபயக்கும்; முளைத்திருக்கும் அந்தநாற்றை மாணவர்களின் மனதாகிய வயல்களிலே முறையோடு குற்றமின்றி நடுங்காலம்வரும்போது இச்சிறுமுயற்சிமுறை அவர்களுக்குத் துன்பத்தைத் தராது இன்பத்தை அளிக்கும் என்பது ஒருதலை. அதுபற்றியே நாங்கள் வற்புறுத்துகின்றோம்.

வினா:—வடமொழியைப் பிராமணர்களே கற்கின்றனர்; அவர்களோ சிறு தொகையினர்; அவர்களுக்கும் ஏன் நிலத்துமொழிப் பயிற்சியையும் கொடுத்து இடுக்கண்களை வளர்க்கச்சொல்லுகிறீர்கள்?

விடை:—இடுக்கண்களைப் போக்குவனவாகக்கூறும் எவருடைய சொல்லும் எமக்கு உடன்பாடே; சற்று ஊன்றிப்பார்த்தால் தாங்கள் சொல்வன ஒப்புக்கொள்ளக்கூடியனவல்ல என்பது புலப்படும். பிராமணர்கள் எல்லோரும் வடமொழியைமட்டிலும் கற்றதனாலா உலகத்துத் தொழின்முயற்சிகளைச் செய்கின்றனர்? நிலத்துமொழிகளாலே நிலத்துமக்களுடன் பழகியன்றோ தங்களுடைய உலகவின்பங்களை அடைகின்றனர்? பிறமொழியின் வளர்ச்சிக்காக நிலத்துமொழியின் வளர்ச்சிக்கு இடையூறுசெய்வது நாட்டிற்கும் அதிலுள்ள மக்களுக்கும் நன்மை பயக்குமா? கல்வியை அடைவதிற் பாடுபடுகிற ஒவ்வொருவரும் எந்த நிலத்துப்பிறந்து தொழில்செய்து

வருகின்றனரோ அந்த நிலத்துமக்களுடைய மொழிகளைப் பயில்வதாகிய துன்பத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வதுதான் முறைமையும் கடமையுமாகும். (சென்னைச் சர்வ கலாசாலையின் விழாக்காலத்தே உதவித்தலைவர் ஸ்ரீமான் கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் தமது முகவுரையில் நிலத்து மொழிப்பயிற்சியை வற்புறுத்தியிருப்பது ஊன்றியறிதற்பாலது) ஒரு வகுப்பாருக்கென்று ஒரு விலக்கு ஏற்படுத்த விரும்புவது நாட்டின் நன்மையைப் பெரிதும் கெடுத்துவிடும் என்பது எவர்க்கும் ஒப்பமுடிந்ததே; என்பன.

பெரியோர்களே, வினாவிடையாக ஒன்றைப்பற்றி எழுதுவதிற் பல ஆராய்ச்சிகள் விடப்படும்; பல ஆராய்ச்சிகளுக்கு இடமுண்டாகும். இதைக் கண்ணுறுவோர் மேலே ஒழுங்காக வினாக்கள் நிகழ்த்தவும் அவற்றிற்கு விடையிறுக்கவும் நாங்கள் விரும்புகின்றோம். ஆதலினாலே இதனை இப்பொழுது இம்மட்டோடு நிறுத்தி எங்களது எடுப்பை முடிக்கின்றோம். இதுகாறும் நாங்கள் கூறியவற்றிற் பொருளானசொற்கள் இருந்தால் அவற்றைக் கொள்ளுங்கள்; அருள் நிறைந்த ஆட்சியாளர்களை உங்கள் நிலத்துமொழிகள் வளரவேண்டுவதற்கான முயற்சிகளை உடனே செய்யவும், அதற்குப் போடப்படும் முட்டுக்கட்டைகளை எடுத்துவிடவும் பலவழிகளிலும் வேண்டுங்கள். 'காலம்போகும் வார்த்தைநிற்கும்' என்பது பழமொழி. உரியகாலத்தில் வாளா இருந்துவிட்டுப் பின்னர் வருந்துவது ஆண்டன்மையாகாது. இதுவே நிலத்துமொழிகளின்வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டிய காலம்.

"ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்"—திருக்குறள்.

---



நிம்முதற் பலபெயர்ச்சூத்திரம்.

நிம்முதலொருபெயர்

நிகமென்பதுவேயொளியெனலாகும் க
நிகளந்தானேவிலங்கெனப்படுமே உ
நிகேதனமென்பதேயுறையுளெனப்படும் ங
நிசாசரர்தானேயிராக்கதராகும் ச
நிசிதமாவதுகூர்மையாகும் ரு
நிணத்தலென்பது*கூடலாகும் சா
நிம்பமென்பதுவேம்பெனப்படுமே எ
நியதிதானேசந்தியாகும் அ
நிரலமையென்பதேயலக்கெனலாகும் கூ
நிருதர்தானேயிராக்கதராகும் க0
நிருபரென்பதுமன்னவர்பெயரே கக
நிரயமென்பதுநரகமெனுமே கஉ
நிலமகன்றானேசெவ்வாயெனுமே கங
நிலையகமென்பதுமனையெனப்படுமே கச
நிகும்பலையென்பதுதுர்க்கையாகும் கரு
நிமலன்றானேயீசனாகும் கசா
நிறைமொழிமாந்தர்வித்துவான்களாம் கஎ

நிம்முதலொருபேர்முற்றும்.

நிம்முதலிருபெயர்

நிலவேயொளியுநிலவுமிருபெயர் கஅ
நிமிரருனேயுயர்வுஞ்சோறும் கசு
நிரப்பேமிடிகுறைபாடெனவிருபெயர் உ0
நிலைபேறென்பதுமானமுமுத்தியும் உக
நிவத்தருனேபாத்தலுமோங்கலும் உஉ

* கூட்டல் என்பது பி-ம்.

நிவறலென்பது* நுணுக்கமும்பொய்தலும் ௨௩

நிதம்பமென்பது மலையின்பக்கமு
மல்குலுமெனவேயறையுமிருபெயர் ௨௪

நிவப்பேயோக்கமுமுயர்வுமிருபெயர் ௨௫

நிறமேமருமமுங்காந்தியுமிருபெயர் ௨௬

நிம்முதலிருபேர் முற்றும்.

நிம்முதன்முப்பெயர்

நிசியென்பதுவேயிராவுமஞ்சளும்
பொன்னுமெனவேபுகலுமுப்பெயரே ௨௭

நிலையென்பதுவேமுறைமையும்பொழுதுங்
குணமுமெனவேகூறுமுப்பெயரே ௨௮

நிழற்றலென்பது நுணுக்கமுநிழற்று
நிழல்செயலெனவுநிகழ்த்துமுப்பெயரே ௨௯

நிம்முதன்முப்பேர்முற்றும்.

நிம்முதனாற்பெயர்

நிதியேகதையுஞ்சங்கநிதியும்
பதுமநிதியும்பொன்னுநாற்பெயரே ௩0

நிம்முதனாற்பேர்முற்றும்.

நிம்முதலைம்பெயர்

நிறையேயசையுமழியாநிலையுந்
துலாமுநீர்ச்சாலுமுணர்வுமைம்பெயர் ௩௧

நிம்முதலைம்பேர்முற்றும்.

நிம்முதலறுபெயர்

நிழலென்பதுவேயருளுஞ்சாயையு
நோயுமரக்கோடடனேசெல்வமுங்
குளிர்ச்சியுமெனவேகூறுமறுபெயர் ௩௨

நிம்முதலறுபேர்முற்றும்.

* நுணக்கமுமொய்தலும் என்பது பி-ம்;



நிம்முதலொன்பான்பெயர்

நியமமென்பதுவேயங்காடியுங்
குருவியும்வீதியுநியதியுநகரமுங்
கோயிலுந்தவமுஞ்சுடுகாடடனு
நிச்சயமெனவுநிகழ்த்துமொன்பான்பெயர் ௩௩

நிம்முதலொன்பான்பேர் முற்றும்.

நிம்முதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௧௨௧.

நீமுதற் பலபெயர்ச்சூத்திரம்.

நீமுதலொருபெயர்

நீர்த்தலென்பது நீராதலாகும் ௧

நீடல்தானேதேடலாகும் ௨

நீட்டித்தலென்பதுமுடித்தலாகும் ௩

நீகான்றானேமீகாமனாகும் ௪

நீலந்தனென்பதுபாணனாகும் ௫

நீமுதலொருபேர்முற்றும்.

நீமுதலிருபெயர்

நீத்தமேநீர்வெள்ளமிருபெயர் ௬

நீக்குதலேநீக்குதலுங்கொல்லலும் ௭

நீபமென்பதுகடையயனுளு
நீரிற்கடம்புநிகழ்த்துமிருபெயர் ௮

நீலென்பதுவேநீலநிறமுங்
காற்றுமெனவேகருதுமிருபெயர் ௯

நீமுதலிருபேர்முற்றும்.

நீமுதன்முப்பெயர்

நீலியென்பது துர்க்கையுங்கருமையு
மவுரியுமெனவேபறையுமுப்பெயரே ௧0

நீமுதன்முப்பேர்முற்றும்.

### நீமுதனாற்பெயர்

நீழலென்பதுவேயொளியுநகையு
நிழலுமாற்பதமுநேருநாற்பெயரே

நீரேபூரட்டாதியுநெருப்புங்
குணமுநீருங்கூறுநாற்பெயரே

நீவியென்பதுவேயளித்தலுந்துடைத்தலுங்
கொய்சகமுடனேதூசுநாற்பெயரே

நீவலென்பது தூசுந்துடைத்தலுங்
கொய்சகமுடனளித்தலுநாற்பெயரே

நீமுதனாற்பேர்முற்றும்.

### நீமுதலைம்பெயர்

நீலந்தானேயிருளும்பனையு
நீலமணியுநீலநிறமு
நெய்தலுமெனவேநிகழ்த்துமைம்பேரே

நீமுதலைம்பேர்முற்றும்.

நீமுதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—கஙசு.

## நும்முதற் பலபெயர்ச்சூத்திரம்.

### நும்முதலொருபெயர்

நுங்கலென்பதுவிழுங்கலாகும்
நுணக்கந்தானேகூர்மையெனப்படும்
நுவறலென்பதுவார்த்தையாகும்
* நுணவுதானேகட்டிலெனப்படும்
நுணகமென்பதுபொன்னெனப்படுமே
நுண்ணியானென்பதுமந்திரியாகும்
நுணிதலுனேதேய்தலாகும்

* நுனவு என்பது பி-ம்.



நுள்ளலென்பது நுளம்பெனலாகும் அ
நுதமென்பதுவேதுறையெனலாகும் கூ

நும்முதலொருபேர்முற்றும்.

### நும்முதலிருபெயர்

நுணங்கேநுண்மைதேமலிருபெயர் க0
நுனியேநுண்மையுநுனியுமிருபெயர் கக
நுதம்பேகள்ளுஞ்சோறுமிருபெயர் கஉ
நுதலேநெற்றியும்புருவமுமிருபெயர் கங
நுணவையென்பதுவேநுண்பிண்டியு
மெண்ணெய்யுமெனவிசைக்குமிருபெயர் கச
நுரையேவெண்ணெயுநுரையுமிருபெயர் கரு
நுவணமென்பது தினையின்பிண்டியு
நூலுமெனவேநுவலுமிருபெயர் கசு

நும்முதலிருபேர்முற்றும்.

நும்முதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—கருஉ.

## நூமுதற் பலபெயர்ச்சூத்திரம்.

### நூமுதலொருபெயர்

நூங்கரென்பதுதேவராகும் க
நூங்குதானேபெருமையெனப்படும் உ
நூவென்பதுவேயானையாகும் ங
நூக்கந்தானேயோக்கமாகும் ச
நூபமென்பதுவேயெருதெனப்படுமே ரு
நூபுரமென்பதுபாதகிண்கிணியாம் சு
நூழிலர்தானேவாணிகராகும் எ
நூழைதானேநுழைவாயிலாகும் அ
நூறைதானேமலங்கெனலாகும் கூ

நூமுதலொருபேர்முற்றும்.

நூமுதலிருபெயர்

நூலோர்தானேயந்தணருடனே
மந்திரிகளுமெனமருவுமிருபெயர்

நூமுதலிருபேர்முற்றும்.

நூமுதலைம்பெயர்

நூழிருனேயானையுங்கொடியுஞ்
*செக்குந்திரையுங்கோறலுமைம்பெயர்

நூமுதலைம்பேர்முற்றும்.

நூமுதலறுபெயர்

நூலேயிழையுங்கொடியுமெண்ணலும்
வேதமுநூலுஞ்சாத்திரமுமறுபெயர்

நூமுதலறுபேர்முற்றும்.

நூமுதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—கசுச.

நெம்முதற் பலபெயர்ச் சூத்திரம்.

நெம்முதலொருபெயர்.

நெறியோனென்பதுபெரியோனாகும்
நெற்கடையென்பதுமூலநாளெனுமே
நெகிழியென்பதுநெருப்பெனலாகும்
நெயிரல்தானேசோறெனப்படுமே
நெரிதரலென்பதுபாறலாகும்
நெய்த்தோர்தானேயுதிரமாகும்
நெய்யரியென்பதுபன்னாடைப்பெயர்
நெறுவென்பதுவேயோசையாகும்

நெம்முதலொருபேர்முற்றும்.

நெம்முதலிருபெயர்

நெல்லேவாகையுநெல்லுமிருபெயர்
நெஞ்சேமனமுமார்புமிருபெயர்

* [illegible]



நெட்டியென்பதுவேயெலும்புநெட்டியும் கக
நெடுமையேபெண்மயிரும்வார்தலும் கஉ
நெற்றியேநுதல்படைவகுப்பிருபெயர் கங
நெறியேமுத்தியும்வழியுமிருபெயர்

நெம்முதலிருபேர்முற்றும்.

நெம்முதன்முப்பெயர்

நெய்தலேயோர்நிலமுமோர்பூவுஞ்
சாப்பறையெனவுஞ்சாற்றுமுப்பெயரே

நெம்முதன்முப்பேர்முற்றும்.

நெம்முதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—களசு.

நேமுதற் பலபெயர்ச்சூத்திரம்.

நேமுதலொருபெயர்

நேடலென்பதுதேடலாகும்
நேர்திறமென்பதுபாலையாழாம்
நேயவைதானேதிரையெனலாகும்
நேரமென்பதுபொழுதெனப்படுமே
நேளியென்பதுதாமரையாகும்

நேமுதலொருபேர்முற்றும்.

நேமுதலிருபெயர்

நேர்தலென்பதுவேயுடன்படலுடனே
யணுகலெனவுமாகுமிருபெயர்
நேத்திரமேபட்டாடைகண்ணிருபெயர்

நேமுதலிருபேர்முற்றும்.

நேமுதன்முப்பெயர்

நேயந்தானேயன்புமெண்ணெயு
மெய்யுமெனவேநிகழுமுப்பெயரே

நேமுதன்முப்பேர்முற்றும்.

நேமுதனாற்பெயர்

நேர்தலென்பதுவேயிசைதலுமெதிர்தலு
நேர்படலுடனேவேண்டலுநாற்பெயர்

நேமுதனாற்பேர்முற்றும்.

நேமுதலறுபெயர்

நேமியேயோர்புள்ளும்பூமியுங்
கடலும்வட்டமுமோர்சகுனமுமுடன்
சக்கரமெனவுஞ்சாற்றுமறுபெயர்

நேமுதலறுபேர்முற்றும்.

நேமுதற்பத்துப்பெயர்

நேரென்பதுவேயீதலும்பாதியு
நிகருமஞ்சமுந்தனியுஞ்சமமு
நுட்பமுமனனுமுடன்பாடுடனே
தனிப்பாடெனவுந்தருமொருபான்பெயர்

நேமுதற்பத்துப்பேர்முற்றும்.

நேமுதற் பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௧௯௦.

நைம்முதற் பலபெயர்ச்சூத்திரம்.

நைம்முதலொருபெயர்

நைசிகமென்பது மருந்தெனலாகும்
நைச்சிதானேகாக்கையாகும்
நையமென்பது பாம்பெனலாகும்
நைவளமென்பது குறிஞ்சியாழ்ப்பெயரெ

நைம்முதலொருபேர்முற்றும்.

நைம் முதலிருபெயர்

நைவனமேநடம்வீரரிருபெயர்

நைம்முதலிருபேர்முற்றும்.

நைம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம்—௧௯௫.



நொம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

நொம்முதலொருபெயர்

நொசிவென்பதுவேநுண்மையாகும்
நொதுமலர்தானேயயலோராகும்
*நொய்வென்பதுவேநொய்ம்மையாகும்

நொம்முதலொருபேர்முற்றும்.

நொம்முதலிருபெயர்

நொறிலேவிரைவுநுடக்கமுமிருபெயர்
நொடியேகிளவிநொடியெனவிருபெயர்

நொம்முதலிருபேர்முற்றும்.

நொம்முதன்மூப்பெயர்

நொச்சியென்பதுமதிலுநொச்சியுஞ்
சீறூரெனவுஞ்செப்புமுப்பெயரே

நொம்முதன்மூப்பேர்முற்றும்.

நொம்முதற் பலபெயர்ச்சூத்திர முற்றும்.

ஆகச்சூத்திரம்—௨௦௧.

நோமுதற் பலபெயர்ச்சூத்திரம்.

நோமுதலொருபெயர்

நோவறுனேயப்பமாகும்
நோனென்பதுவேவலியெனலாகும்
நோன்றல்தானேபொறுத்தலாகும்

நோமுதலொருபேர்முற்றும்.

நோமுதலிருபெயர்

நோக்கேவிழியுமழகுமிருபெயர்
நோற்றலேபொறைதவம்பண்ணலிருபெயர்
நோனுமையென்பது தவம்பண்ணுமையும்
பொறுமையுமெனவேபோற்றுமிருபெயர்

* நொவ்வு என்பது பி-ம்.

நோனுரென்பது தவமில்லார்களும்
பகைவரெனவும்பகருமிருபெயர்

நோமுதலிருபேர்முற்றும்.

நோமுதற் பலபெயர்ச்சூத்திர முற்றும்.

ஆகச்சூத்திரம்—௨௦௮.

நௌமுதலிருபெயர்

நௌவியேமான்மரக்கலமிருபெயர்

நௌமுதலிருபேர்முற்றும்.

ஆகச்சூத்திரம்—௨௦௯.

பகர்தரும்புலியூர்க்கங்கைகுலாதிப
னருள்பெறுசிதம்பரரேவணனறைதரு
நகராதிப்பெயர்த்தொகுதியாறுவதிற்
சூத்திரமுப்பதிற்றேழொன்றுமே.

ஆறுவது:

நகராதிப்பெயர்த்தொகுதிமுற்றும்.

ஏழாவது:

# பகராதிப்பெயர்த்தொகுதி.

சித்திரசேனன்றனக்கொருநாளு
புத்திரர்தரும்புனிதனைப்போற்றிப்
பகராதிப்பெயர்த்தொகுதியைப்பகர்வாம்.

பம்முதற்பலபெயர்ச்சூத்திரம்.

பம்முதலொருபெயர்

பகன்றையேகிலுகிலுப்பையாகும்
பகண்டைதானேசிவதையெனப்படும்
பகீரதியென்பது கங்கையெனப்படும்
பகையகந்தானேபோர்க்களமாகும்
பங்கயமென்பது தாமரையாகும்



பசுக்காவலரேவாணிகராகும் ௬
பஞ்சானனமேசிங்கமெனப்படும் ௭
பஞ்சிகந்தானே தாளியாகும் ௮
படித்திரமென்பது சூட்டிறைச்சிப்பெயர் ௯
பஞ்சாய்தானேகோரையெனப்படும் ௧௦
பஞ்சவனென்பது பாண்டியனாகும் ௧௧
பஞ்சூகந்தான்பெருமையாகும் ௧௨
படலையென்பது மாலையாகும் ௧௩
படிதந்தானேகூத்தெனலாகும் ௧௪
படிவரென்பது துறந்தோர்பெயரே ௧௫
படிகந்தானேபளிங்கெனலாகும் ௧௬
படுகாடென்பது சுடுகாடாகும் ௧௭
பண்டரேபாடற்கீழ்மக்கள் ௧௮
பண்டரங்கந்தான்சிவனுடலாகும் ௧௯
பண்ணியமென்பது பண்டமெனப்படும் ௨௦
பதங்கனேசூரியன்பேராகும் ௨௧
பதடியென்பது பதரென்லாகும் ௨௨
பதக்கந்தானேயாரமாகும் ௨௩
பதப்பாடென்பது மதிலுறுப்பாகும் ௨௪
பதாகைதானே துகிற்கொடியாகும் ௨௫
பதியரியென்பது நாற்றெனலாகும் ௨௬
பத்திரந்தானேகுதிரைப்பந்தியாம் ௨௭
படைத்தோனென்பது பிரமன்பெயராம் ௨௮
பதுமராகமேமாமணியாகும் ௨௯
பரியங்கந்தான்கட்டிலெனப்படும் ௩௦
பாசுதானேமழுவெனலாகும் ௩௧
பாரதமென்பது காக்கையாகும் ௩௨

பரியந்தானெல்லையெனப்படும்
பரிசனமென்பதேவல்செய்வோர்பெயர்
பரியாளந்தான்பரிவாரப்பெயர்
பரியாயமென்பது பலமுறையெனுமே
பழங்கணென்பது புன்கண்மையாகும்
பலவிதமேநானாவிதமாகும்
பரிச்சனியமென்பது மழைமேகமாகும்
பருப்பதிதானேயுமையவளாகும்
பரிவயமென்பது தண்டுலமாகும்
பருடிதானேநாடெனலாகும்
பலாலமென்பது வைக்கோலாகும்
பல்லணமென்பது கல்லணையாகும்
பவித்திரந்தானே தூய்மையாகும்
பல்லவமென்பது தளிரெனப்படுமே
பஃறிதானேமரக்கலமாகும்
பழிசியென்பது செம்பெனலாகும்
பழிச்சல்தானேவாழ்த்தலாகும்
பழுவமென்பது காடெனலாகும்
பனித்துத்தானேகற்பூரப்பெயர்
பறந்தலையென்பது பூசற்களமாம்
படீரந்தானேசந்தனமாகும்
பறழென்பது வேகுட்டியாகும்
பரிவிலனென்பதிராவணன்பெயரே
பற்றையேசெங்காந்தளாகும்
பனிப்பென்பது வேநடுக்கமாகும்
பரடென்பது வேகரடெனலாகும்
பனசந்தானேபலாவெனப்படுமே



பன்னகவயிரியேகருடனாகும் ௬௰
பன்னகந்தானேயுரகமாகும் ௬௧
பன்னமென்பது வேயிலையெனப்படுமே ௬௨
பஞ்சதாரையென்பது சருக்கரை ௬௩

பம்முதலொருபேர்முற்றும்.

## பம்முதலிருபெயர்

பகமேயோனியுங்கொக்குமிருபெயர் ௬௪
பசும்பையேமயிர்பசும்பையிருபெயர் ௬௫
படலிகைதானேபெரும்பீர்க்குடனே
பரந்தவட்டக்கைம்மணியிருபெயர் ௬௬
பஞ்சரமென்பது கூடுஞ்செருந்தியும் ௬௭
பட்சியென்பது குதிரையும்பட்சியும் ௬௮
படாமேயிடுதிரையாடையிருபெயர் ௬௯
படிவமென்பது வடிவமுநோன்பும் ௭௰
படிறேகளவும்பொய்யுமிருபெயர் ௭௧
பட்டிமையேவஞ்சனைகளவிருபெயர் ௭௨
பட்டாரகரேயருகருந்தேவரும் ௭௩
பண்ணவரே துறந்தோருந்தேவரும் ௭௪
பண்டிதானேயானையும்பண்டியும் ௭௫
பதவியேவழிபதவியிருபெயர் ௭௬
பறவைதானேபொழுதும்பறவையும் ௭௭
பதனமேயரணனையிருபெயர் ௭௮
பம்பரம்பம்பரமேருவிருபெயர் ௭௯
பயோதரமேமுலைபுயலிருபெயரே ௮௰
பரவலென்பது தொழுதலும்பாத்தலும் ௮௧
பாப்பேகடலும்பரப்புமிருபெயர் ௮௨
பரித்தருனேயறுத்தலுஞ்சுமத்தலும் ௮௩

பரிகாரந்தானகமும்பரிகாரமும் ௮௪

பந்தென்பதுநீர்தூவுந்துருத்தியுங்
கந்துகமெனவுங்காட்டுமிருபெயர் ௮௫

பரிபுரமென்பதுபாதகிண்கிணியு
மணியுமெனவேமருவுமிருபெயர் ௮௬

பருப்பேபருமனும்பருப்புமிருபெயர் ௮௭

பருக்கையேகாழ்பருக்கையிருபெயர் ௮௮

பகழியேகுதையம்பெனவிருபெயர் ௮௯

பறம்பேமலையுங்கொங்கையுமிருபெயர் ௯0

பகுதியென்பதுகூட்டமும்பகுதியும் ௯௧

பரதர்தானேநாய்கருங்கழியரும் ௯௨

படங்கென்பதுபெருங்கொடியுமேற்கட்டியும் ௯௩

பகர்தலேவிற்றலும்பேசலும் ௯௪

பட்டென்பதுசிற்றூரும்பட்டாடையும் ௯௫

பண்டமேபணிகாரமும்பொன்னும் ௯௬

பதங்கமேபுட்பொதுவும்விட்டிலும் ௯௭

பராகமென்பதுவேமலரின்றாது
மிரேணுவுமெனவேயிருபெயராகும் ௯௮

பளிதமென்பதுபல்லமென்கணக்குங்
கற்பூரமுமெனக்காட்டுமிருபெயர் ௯௯

பணிலமேசலஞ்சலஞ்சங்கிருபெயர் ௧00

பனுவலேநூல்கிளவியிருபெயர் ௧0௧

பயம்பேபள்ளமும்யானைவீழ்குழியும் ௧0௨

பண்ணவன்றானேயருகனுமுனிவனும் ௧0௩

படப்பையென்பதுநாட்டிற்புறமுந்
தோட்டமுமெனவேசொல்லுமிருபெயர் ௧0௪

பணித்தலென்பதுவிடாமழையதனொடு
கொடுத்தலுமெனவேகூறுமிருபெயர் ௧0௫



பங்கியேபிறமயிருமாண்மயிரும் ௧0௬

பங்கயனேயயனிரவியிருபெயர் ௧0௭

## பம்முதலிருபேர்முற்றும்.

## பம்முதன்முப்பெயர்

பணமேயுரகமும்பாம்பின்படமும்
பணமுமெனவேபகருமுப்பெயரே ௧0௮

பட்டிதானேகளவும்பட்டியும்
பிள்ளையுமெனவேபேசுமுப்பெயரே ௧0௯

பசுவேயேறுஞ்சீவனும்பெற்றமும் ௧௧0

பகையென்பதுவேயடித்தலுஞ்சார்தலும்
பகையுமெனவேபகருமுப்பெயரே ௧௧௧

பலவமென்பதுகாயும்பழமுங்
குழியுமெனவேகூறுமுப்பெயரே ௧௧௨

பரிவென்பதுவேயின்பமுந்துன்பமு
மன்புமெனவேயாகுமுப்பெயரே ௧௧௩

பருவரலென்பதுபொழுதுந்துக்கமுஞ்
சுடுமாவெனவுஞ்சொல்லுமுப்பெயரே ௧௧௪

பல்லமேயோர்கணக்கும்பாணமுங்
கரடியுமென்றேகருதுமுப்பெயரே ௧௧௫

பழமைதானேவேண்டற்பாடும்
பழமையும்யானையும்பகருமுப்பெயரே ௧௧௬

பழுதென்பதுவேகுற்றமுநிறைவு
மிடமுமெனவேயிசைக்குமுப்பெயரே ௧௧௭

பறவைதானேயிறகும்பறவையும்
பிறவுண்டியுமெனப்பேசுமுப்பெயரே ௧௧௮

பணவைதானேயளவும்பறவையும்
பாணுமெனவேபகருமுப்பெயரே ௧௧௯

பங்கென்பதுவேமுடமும்பாதியுஞ்
சனியுமெனவேமுப்பெயர்சாற்றும் ௧௨0

பாவையென்பது திருமகளாடலும்
பாப்புங்கடலும்பகருமுப்பெயரே ௧௨௧

பரிதலென்பதுவேயறுத்தலுமிரங்கலு
மன்புமெனவேயாகுமுப்பெயரே ௧௨௨

பட்டிகைதானேயிரதமும்பணையுங்
கச்சுமெனவேமுப்பெயர்காட்டும் ௧௨௩

பலாசுதானேபச்சைநிறமும்
பன்னமுமோர்மரமெனவுமுப்பெயரே ௧௨௪

பம்முதன்முப்போர்முற்றும்.

பம்முதனாற்பெயர்

பதலையேதண்ணுமையுந்தாழியும்
வெற்புமோர்கட்பறையுநாற்பெயரே ௧௨௫

பலமென்பதுவேகனியும்பயனுங்
காயும்பலமுங்கருதுநாற்பெயரே ௧௨௬

பச்சையேமரகதமுந்தோலும்
புதனுநிறமும்போற்றுநாற்பெயரே ௧௨௭

பதுக்கையென்பதுபாறையுந்தூறும்
பாலையுஞ்சிறுதிட்டெனுநாற்பெயரே ௧௨௮

பரிகமென்பதுகணையுமதிலுங்
கிடங்குமேடையுங்கிளக்குநாற்பெயரே ௧௨௯

படுதலேயுண்டாதலும்பூத்தலு
மொலியுமில்லாமையுமெனநாலே ௧௩0

பத்தியேவழிபாடுமொழுக்கமு
மடைப்பதுமுறையுமாமெனுநாற்பேர் ௧௩௧

படியேபூமியுங்குணமும்பகையு
மங்கவடியுமாகுநாற்பெயரே ௧௩௨

படகமேயொருவாச்சியம்பணவை
கவரிமாப்பரணெனவொருநாற்பெயர் ௧௩௩

படமேபாம்பின்படமுந்துகிலு
மெழுதுபடாமுங்குஞ்சரமுகத்தின்
படாமுமெனவேபகருநாற்பெயரே ௧௩௪



பக்கமென்பதுபறவையினிறகு
நட்புந்திதியுமருகுநாற்பெயர் ௧௩௫

பன்னல்தானேநெருக்கமுந்தேர்தலும்
பருத்தியுஞ்சொல்லலும்பாவுநாற்பெயரே ௧௩௬

பம்முதனாற்போர்முற்றும்.

பம்முதலைம்பெயர்

பகடேயானையுங்கடாவுமெருது
மோடமும்பெருமையுமோதுமைம்பெயரே ௧௩௭

பல்லியமென்பதுபுரவியின்பந்தியும்
பாணியுந்தொங்கலுமருதநிலமும்
வாச்சியமெனவும்வழங்குமைம்பெயரே ௧௩௮

பண்ணென்பதுவேபாட்டும்பண்ணு
மாதர்கூத்துநீரினிலையுங்
கலணையுமெனவேகாட்டுமைம்பெயரே ௧௩௯

பகவனேசிவன்மாயனான்முக
னருகனும்புத்தனுமாகுமைம்பெயரே ௧௪0

பணையேயானையுமனுடமும்பெருமையு
மிதழுமோர்மரமுமென்னுமைம்பெயரே ௧௪௧

பங்கமென்பதுமுடமும்பின்னமுஞ்
சேறுந்தூசுந்தோல்வியுமைம்பெயர் ௧௪௨

பம்முதலைம்போர்முற்றும்.

பம்முதலறுபெயர்

பதியேயூருஞ்சிவனுங்கேள்வனுங்
குதிரையும்பிறையுமூத்தோருமறுபெயர் ௧௪௩

பரிதியேபரிவேடமுமிரவியும்
வட்டமுமொளியுமுடனேபொன்னு
நேமியுமெனவேநிகழ்த்துமறுபெயர் ௧௪௪

படையேநிரையுங்கலப்பையாயுதமுங்
கலணையும்படுக்கையும்படையுமாறே ௧௪௫

பவனமேமனைநாடுபொழுது
பூமியிராசிகாற்றெனவாறே கசகு

பந்தமேகிளைதளைகட்டுண்டை
பாசங்கைவிளக்கென்னவாறே கசஎ

பத்திரந்தானேயிலைசிறகாயுதம்
வனப்புநன்மைபாணமென்றறுபெயர் கசஅ

பயிரேவிலங்கும்பயிலும்பயிரு
மொருவிதந்துகட்டியவழக்கும்புல்லும்
புள்ளின்குரலும்போற்றுமறுபெயர் கசகூ

பண்ணையேகன்னியர்விளையாட்டு
மாதர்கூட்டமுமருதநிலமு
மிருகந்துயிலிடமுநீரின்றும்வும்
வயலுமெனவேமருவுமறுபெயர் கடு0

படுவென்பதுமரக்குலையுங்கள்ளு
நீரினிலையும்வெள்ளியும்பொய்கையும்
*படுவதெனவும்பகருமறுபெயர் கடுக

பம்பருனேயெழுச்சியுநெருக்கமுந்
தொடர்தலுடனேவலியும்பொலிவும்
பொன்னுமென்றேபோற்றுமறுபெயர் கடு௩

பலியென்பதுவேசோறும்பூசையும்
பிச்சையுநீறுந்தெய்வவுணவு
மொருதாருவுமெனவோதுமறுபெயர் கடு

பம்முதலறுபேர்முற்றும்.

பம்முதலெழுபெயர்

பகலேநாளுநகத்திலாணியும்
பாகுபாடுமிரவியுமொளியு
மொருமுகூர்த்தமுநடுச்செயலுமென்றேழ்பெயர் க

* சம்பத்தெனவுஞ்சாற்றுமறுபெயர் என்பது பி-ம்.



படரென்பதுவேநடையுநினைப்பு
நோவும்வீரரும்பரிவும்பகையுந்
துகிற்கொடியெனவுஞ்சொல்லுமெழுபெயர் கடுரு

பயமென்பதுவேயச்சமுங்குளமும்
பயனும்பாலுஞ்சுவையுநீரும்
பிரமனுமென்றேபேசுமேழ்பெயர் கடுசு

பள்ளியென்பதுகோயிலும்பாயலு
நீத்தோருருமிடமுந்துயிலு
முநிஞ்சிற்றூரெனவுமேழ்பெயர் கடுஎ

பனியென்பதுவேயச்சமுந்துன்பமு
மிமமுநடுக்கமுங்குளிருமிரவியு
மதியுமெனவேமருவுமேழ்பெயரே கடுஅ

பரமென்பதுவேகவசமும்பாரமுஞ்
செயலுந்தேகமும்பழமையுமுன்பு
மத்திமமுமாகுமேழ்பெயரே கடுகூ

பம்முதலேழ்பேர்முற்றும்.

பம்முதலெண்பெயர்

பட்டமேயாயுதமுமோடையும்
பதவியுங்கவரிமாவும்பரிசையுந்
தூசுநுதலணியும்பணவமுமெண்பெயர் கசு0

பருமந்தானேயுயர்ச்சியுங்கலணையு
மொளியுமேகலையுமுடையுங்குதிரையுஞ்
சாணமுமெப்புகுகருவியுமெண்பெயர் கசுக

பம்முதலெண்பேர்முற்றும்.

பம்முதற்பத்துப்பெயர்

பரியென்பதுவேசுமத்தலுங்காழ்த்தலும்
வருத்தமும்பாதுகாத்தலுங்குதிரையு
மிகுதியுஞ்செலவும்பெருமையுங்கறுப்பும்
விரைவுமென்றேயொருபதுபெயரே கசுஉ

பம்முதற்பத்துப்பேர்முற்றும்.

பம்முதற்பதினொருபெயர்

பணையேவயலும்பருத்தலுமுழங்கலும்
பரியின்பந்தியுமரத்தின்கோடும்
பிழைத்தலுமுரசும்பணைத்தலும்பாணும்
பெருமையுமச்சுவத்தமும்பன்னொருபேர்

பம்முதற்பதினொருபேர்முற்றும்.

பம்முதற்பதின்மூப்பெயர்

பதமேவழியும்போதுஞ்செவ்வியும்
வரிசையுஞ்சோறுங்குழைவுஞ்சொல்லுங்
காலுங்காலமுமீரமுஞ்சேமமு
மின்புநற்றாசுமெனப்பதின்மூப்பேர்

பம்முதற்பதின்மூப்பேர்முற்றும்.

பம்முதற் பலபெயர்ச்சூத்திர முற்றும்.

ஆகச்சூத்திரம்—௧௬௪.

பாமுதற்பலபெயர்ச்சூத்திரம்.

பாமுதலொருபெயர்

பாகசாதனன்றானிந்திரனாகும்
பாடினியென்பதுபாணிச்சிபெயர்
பாடரிதானேகள்ளெனலாகும்
பாதகடகமேபாடகமாகும்
பாதுகாத்தலேயோம்பலாகும்
பாந்தள்தானேபெரும்பாம்பாகும்
பார்க்கவனென்பதுசுக்கிரன்பெயரே
பாரணந்தானேயுண்டலாகும்
பாவிரியென்பதுபசளையாகும்
பார்த்திபர்தானேயரசரெனப்படும்
பாலைக்கிழத்தியேதுர்க்கையாகும்
பாறலென்பதுசேவெனப்படுமே



பார்ப்பேபறவைக்குஞ்செனலாகும்
பாற்கரனென்பதுபருதியின்பெயராம்

பாமுதலொருபேர்முற்றும்.

பாமுதலிருபெயர்

பாதாரோபீடமதிலிருபெயரே
பாசியேமழைபாசியிருபெயர்
பாதிதானேதாதும்பாதியும்
பாரிதானேபனுவலாட்டியு
காவாவெனவுகாட்டுமிருபெயர்
பாராவாரமேகடலின்கரையுங்
கடலுமெனவேகருதுமிருபேர்
பாராட்டென்பதுகொண்டாடுதலுட
லுலாவுதலெனவுமோதுமிருபெயர்
பாவியேபால்கள்ளெனவிருபெயர்
பாவகனென்பதுதீயின்கடவுளுந்
தீயுமெனவேசெப்புமிருபெயர்
பாகலென்பதுகாரவல்லியும்
பலாவுமென்னப்பகருமிருபெயர்
பாதிரியேயோர்மரமுமூங்கிலும்
பாத்தியேசிறுசெய்யும்பகுத்தலும்
பாங்கரேயிடம்பக்கமிருபெயர்
பாலமேநுதல்பாலமிருபெயர்

பாமுதலிருபேர்முற்றும்.

பாமுதன்மூப்பெயர்

பாக்கமேயூர்மருதநிலத்தூர்
நெய்தனிலத்தூரெனுமூப்பெயரே
பாடகமென்பதுகிழலுஞ்சிலம்பும்
பாடகமெனவும்பகருமூப்பெயரே

பாக்குத்தானேயிடைச்சொல்லும்பாக்கு
மெதிர்காலமுமெனவிசைக்குமுப்பேரே ௩௦

பாசனமென்பது பாண்டமுஞ்சுற்றமு
முண்கலமெனவுமோது முப்பெயரே ௩௧

பாணமேபூம்பட்டுங்கணையு
மேகவண்ணக்குறிஞ்சியுமுப்பேர் ௩௨

பாத்தென்பதுவேசோறுங்கஞ்சியும்
பகுத்திடலெனவும்பகருமுப்பேரே ௩௩

பாலிகைதானேவட்டமுமுதடும்
பட்டவாளின்முட்டியுமுப்பேர் ௩௪

பார்வையென்பதுமதிப்பும்விழியுந்
தீவகமெனவுஞ்செப்புமுப்பேரே ௩௫

பாளிதமேபாற்சோறும்பட்டுங்
கண்டசர்க்கரையுடனுமுப்பேரே ௩௬

பாங்கென்பதுவேபரிசுமெழிலும்
பக்கமுமெனவேபகருமுப்பேரே ௩௭

பாமுதன்முப்பேர்முற்றும்.

பாமுதனாற்பெயர்

பாடலமென்பது சபதமுங்குதிரையும்
பாதிரியுடனேசிவப்புநாற்பெயரே ௩௮

பாறென்பதுவேபருந்து நித்திலமு
மரக்கலமுடனேகாற்றுநாற்பெயரே ௩௯

பாவென்பதுவேபாவலும்பரப்பு
நூற்பாவுடனேபனுவலுநாற்பெயர் ௪௦

பாமுதனாற்பேர்முற்றும்.

பாமுதலைம்பெயர்

பாசமேநூல்பேய்கயிறன்புட
னூசித்துளையெனவோது மைம்பெயரே ௪௧

பாட்டியேபாணிச்சியும்பன்றியு
நாயுநரியும்பாட்டியுமைம்பெயர் ௪௨



பாரென்பதுவேபுத்தனும்பூமியுந்
தேரினிற்பாப்புங்கல்லின்பரப்பு
மறையோனெனவும்வைக்குமைம்பெயரே

பாமுதலைம்பேர்முற்றும்.

பாமுதலறுபெயர்

பாடேபடுதலும்பெருமையுமோசையும்
பக்கமுமிடமும்பண்புமறுபேர்

பாரியென்பது கட்டிலுமனைவியுங்
கடலுங்களருநல்லபுடவையு
மோர்வள்ளலுமெனவோது மறுபெயர்

பானலேகடல்குதிரைவெற்றிலை
பழனெய்தல்கள்ளென்றறுபேர்

பாகமென்பதுபதமுமோரளவு
மொன்றுபாதியுங்கண்டசர்க்கரையும்
பலகூறும்பட்டாடையுமறுபேர்

பாமுதலறுபேர்முற்று

பாமுதலெழுபெயர்

பாண்டிலென்பதுவிளக்கின்றகழியும்
வட்டமுங்கட்டிலுமேறுமூர்தியுந்
தாளமும்வேயுஞ்சாற்றுமேழ்பெயரே

பாடிபாசறையுமாயருரும்
படையுங்கவசமுநாடுநகரமும்
பேரூரெனவும்பேசுமேழ்பெயரே

பாமுதலேழ்பேர்முற்று

பாமுதலெண்பெயர்

பாகென்பதுவேபாக்குங்குழம்பும்
பாணிநாளும்பகிர்ச்சியுங்கரையும்
பாகனுஞ்சத்தியுங்கட்டியுமெண்பேர்

பாலையேயோர்மரமும்வெம்மையும்
பாடற்சுவையும்பிரியவுரைத்தலும்
பாலைநிலத்தின்பாடலும்பொருண்மேற்
பிரிதலும்புணர்ந்துடன்போதலுமோர்நில
மெனவுமிசைக்குமெண்பேர்தானே ௫௧

பாலேபகுத்தலும்பக்கமுந்திசையு
மியல்பும்பயமுமிடமுங்கீரமும்
வெண்மையுமெனவேவிதிக்குமெண்பெயரே ௫௨

பாமுதலெண்பேர்முற்றும்.

பாமுதலொன்பான்பெயர்

பாரமென்பதுகவசமும்பொறையுங்
கலணையும்புவியுநிறையும்வன்பாரமு
நீரின்கரையும்விளையாட்டுடனே
மரக்கலமெனவுமருவுமொன்பான்பேர்

பாமுதலொன்பான்பேர்முற்றும்.

பாமுதற்பத்துப்பெயர்

பாணியென்பதுசோலையும்பண்டமும்
பாடலுநாடும்பற்றுமோசையு
நீருங்கையுநெடும்போதுடனே
பல்லியமெனவும்பத்துப்பேராம்

பாமுதற்பத்துப்பேர்முற்றும்.

பாமுதற்பதினொருபெயர்

பாழியேமுழையும்விலங்கின்படுக்கையும்
பாயலும்விண்ணும்பாழுங்கடலும்
படலும்வலியோடுரையுமூரும்
பற்றிலாரூரும்பதினொருபெயரே

பாமுதற்பதினொருபேர்முற்றும்.

பாமுதற் பலபெயர்ச்சூத்திர முற்றும்.

ஆகச்சூத்திரம்—உகரு,

161399